முத்தமிழ் வித்தகர்

பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர்

PROFESSOR SWAMI VIPULANANDA



125 ஆவது ஆண்டு பிறந்தநாள் விழா

சிறப்பு மலர் 2017

சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் – கனடா

Swami Vipulananda Arts Society - Canada

Real Estate & Mortgage

உங்களுடைய வீட்டை விற்க,
கனவு இல்லத்தை வாங்க
நல்ல ரேட்டில் மோட்கேஜ்,
லைன் ஒப் கிரடிட், றீபைனான்ஸ் பெற
இரண்டாவது, மூன்றாவது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
வீடு வாடகைக்குவிட, வாடகைக்கு பெற்றுக்கொள்ள
உங்களுக்கென ஒரு நம்பிக்கையான முகவர்

APPROVED
MORTGAGE
APPLICATION





சுதேசன் பத்மநாதன் M.Com
Real Estate Sales Representative / Mortgage Agent
FSCO Lic # M 12001741
psuthesan@gmail.com
Cell : 647-861-8240
1504 Markham Road, Toronto, ON M1B 2V9


MORTGAGE ALLIANCE
Lic #10530

RIGHT AT HOME
#1 Brokerage in the GTA*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto , On M2J 5B4
Toll Free : 1-877-366-3487

Brokerage Office : 112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC
Office Phone : 416-391-3232

சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் – கனடா



முத்தமிழ் வித்தகர்

பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின்

125 ஆவது ஆண்டு பிறந்தநாள் விழா

பெரிய சிவன் கோயில் கலாச்சார மண்டபம்

1148 Bellamy Road, Scarborough, Canada.

23-07-2017

ஈசன் உவக்கும் ஐன்மலர் மூன்று

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ,
வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ,
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீரத் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ,
வாட்டமுறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

பொருளடக்கம்

பகுதி 1

		பக்கம்
01.	வெள்ளைநிற மல்லிகையோ	
02.	*Greetings from Premier - Kathieen Wynne*	i
03.	*Greetings from Mayor of Toronto - John Tory*	ii
04.	ஆசிச்செய்தி – இராமகிருஷ்ணமிசன்	iii
05.	ஆசிச்செய்தி – அதிபர், சிவானந்தவித்தியாலயம், மட்டக்களப்பு	iv
06.	ஆசிச்செய்தி – இ.கி.ச. பெண்கள் வித்தியாலயம், காரைதீவு	v
07.	ஆசிச்செய்தி – திரு/இ.கி.ச. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி	vi
08.	ஆசிச்செய்தி – யாழ்/மானிப்பாய் இந்துக்கல்லூரி	vii
09.	ஆசிச்செய்தி – அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்	ix
10.	ஆசிச்செய்தி – மட்/விவேகானந்த மகளிர் மகாவித்தியாலயம், கல்லடி உப்போடை	x
11.	வாழ்த்துச்செய்தி – அமரர். ஈழத்துப்பூராடனார்	xi
12.	வாழ்த்துச்செய்தி – மட்/புனித மிக்கேல் கல்லூரி, முன்னாள் அதிபர்	xii
13.	பிரதமர் விருந்தினர் வாழ்த்துரை	xiii
14.	தலைவரிடமிருந்து	xxii
15.	செயலாளரிடமிருந்து	xxiii
16.	மலர்க்குழு சார்பாக	xxiv
17.	திருவேட்களம் ஆதித்திராவிடர்களின் சார்பாக அமிர்தாம்பாள் வழங்கிய பிரவுரை வாழ்த்து	xxviii

பகுதி 2

18.	சுவாமி விபுலாநந்தரும் யாழ் இசைக்கருவிகளும்	001
19.	பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின் கிறிஸ்தவத் தொடர்பு	006
20.	யாழ் தந்த முனிவனின் கனவு	009
21.	அடிகளாரின் மெய்ப்படாத கனவுகள்	012
22.	தமிழ் நாடக வரலாற்றில் சுவாமி விபுலாநந்தரின் பங்கு	014
23.	விபுலாநந்த அடிகள் கல்விக்கொள்கை – முதலாதாரம் – தமிழ்மொழி	016
24.	சுவாமி விபுலாநந்தரின் கங்கையில் விடுத்த ஓலை – அமைப்பும் அழகும்	021
25.	சுவாமி விபுலாநந்தர் : உயர்கல்விச் சிந்தனைகளும் தமிழ்ப் பல்கலைக்கழகம் குறித்த தொலை நோக்கும்	025
26.	தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றில் பேராசிரியர் விபுலாநந்த அடிகளாரின் சிந்தனைப் போக்கு	029
27.	பேராசிரியர் விபுலாநந்த அடிகளாரின் கவிதை ஆளுமை	034
28.	நவீன இலக்கிய வளர்ச்சிக்கு சுவாமி விபுலாநந்தரது பங்களிப்பு	037
29.	பேராசிரியர் விபுலாநந்த அடிகளாரின் பன்முக ஆளுமை	040
30.	விபுலாநந்த அடிகளாரும் மெய்ப்பாடும்	046
31.	சுவாமி விபுலாநந்தர் : ஒரு வியத்தகு ஆளுமை	052
32.	நானறிந்த சுவாமி விபுலாநந்தர்	057
33.	சுவாமி விபுலாநந்தரின் திறனாய்வு நோக்கு	061
34.	மட்டக்களப்பின் பண்டைய தமிழ்க் கல்விமுறை	069
35.	பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின் முற்போக்குச் சிந்தனைகள்	076

பொருளடக்கம்

		பக்கம்
36.	முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் இயல், இசை, நாடகம் மற்றும் சமூகப் பணிகள்	082
37.	வையத்தலைமைகொள்	087
38.	பண்டைத் தமிழரின் இசைக்கருவிகள் பற்றிய பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின் கருத்துக்கள்	089
39.	அறிவியற் கல்வியில் பேராசிரியரின் வெளிப்பாடுகள்	093
40.	சுவாமி விபுலாநந்த அடிகளாரின் மொழிபெயர்ப்புத் திறன்	097
41.	பன்முகப் பரிமாணங்களில் விபுலாநந்தர்	102
42.	பல்துறைப் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் அவர்களும், அவரது தமிழ் ஆராய்ச்சியும்	108
43.	சுவாமி விபுலாநந்தரின் சிவாநந்த வித்தியாலயம் கட்டிக்காத்த இன ஐக்கியம்	111
44.	சுவாமி விபுலாநந்த அடிகளாரும் கிழக்கிலங்கையில் பெண்களுக்கான கல்வியும்	118
45.	சுவாமி விபுலாநந்த அடிகளின் கல்விப் பணியும், தமிழ்ப்பணியும்	122
46.	சுவாமி விபுலாநந்தர் யாழ்நூலில் வெளிப்படுத்தும் பண்டைத்தமிழரின் இசை மரபுகள் பற்றிய தரவுகளும் உண்மைகளும் - ஓர் ஆய்வு	126
47.	சுவாமி விபுலாநந்தர் சமூகநோக்கு	130
48.	சுவாமி விபுலாநந்தரின் மெய்யியல் நோக்கு	133
49.	பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின் வாழ்க்கை வரலாறு	141
50.	விபுலாநந்த அடிகளாரின் அரிய கையெழுத்துப் படிகள், மடல்கள் உணர்த்தும் செய்திகள்	147
51.	சிலப்பதிகார மீட்டெடுப்பும் பண்டைத் தமிழர் இசைமரபின் மீட்டுருவாக்கமும்	156
52.	விபுலாநந்த அடிகளார் தடம் தேடிய பொழுது..	161
	பகுதி 3	
53.	கங்கையில் விடுத்த ஓலை	162
54.	தங்க மாமுனியே! தாரகைச் சுடரே!	167
55.	நிறைவுற்றது எம் நெஞ்சம்!	169
56.	வேதாந்த வித்தகர் விபுலாநந்தர்	170
57.	சுவாமி விபுலாநந்தர் புகழ் போற்றிட வாரீர்	171
58.	துறந்தும் துறவுமிலாப் புண்ணியனே நீ நீடு வாழி!	173
59.	மாதவ ஞானி முனிவிபுலாநந்தர்	174
60.	கல்வித் தீபம் வித்தகன் விபுலாநந்தன்	175
61.	முத்தமிழறிஞரை முதலில் போற்றி வணங்குவோம்	177
62.	கல்வித் தீபம் வித்தகன் விபுலாநந்தன்	180
63.	விபுலாநந்தர் பாதையில்	181
64.	பணிபுரிந்தார் புகழ் பாடு	182
65.	சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம் - கனடா : தோற்றமும் செயற்பாடும்	183
66.	மன்றச் செயலாளரின் நன்றி நவிலல்	191
67.	நிழற்படங்கள்	193

Ontario

Premier of Ontario - Première ministre de l'Ontario



July 23, 2017

A Personal Message from the Premier

On behalf of the Government of Ontario, I am delighted to extend warm greetings to everyone celebrating the 125th birth anniversary of Swami Vipulananda. I want to thank the Swami Vipulananda Arts Society of Canada for bringing the community together to reflect on his life, teachings and enduring contributions.

I would also like to take this opportunity to recognize the society's past and present members and directors for their dedication to highlighting and promoting the richness and vibrancy of Tamil culture.

In Ontario, we draw strength from the diversity of our people — from the interweaving of cultures, faiths and identities that has shaped our province into the vibrant place we are all so fortunate to call home.

This year, as we mark the 150th anniversary of Ontario, we have an ideal opportunity to reflect on how much we've achieved by coming together, working together, and learning from one another. I expect we will achieve even greater things in the next 150 years.

I offer my sincere best wishes for a meaningful and memorable celebration, and for much continued success.

Kathleen Wynne

Kathleen Wynne
Premier

CITY OF TORONTO



Message from the Mayor

It is my pleasure to extend greetings and a warm welcome to everyone attending Professor Swami Vipulananda's 125th Birthday Celebration 2017.

In Toronto, arts and culture are integral components of our cultural and economic fabric. They are platforms that enrich and enhance the lives of many.

I am delighted that wonderful events like yours are taking place in Toronto. Arts and culture can be incredible forces for the development of an individual, group or community, and the promotion of intercultural connections that include tolerance, understanding, friendship and social cohesion.

On behalf of Toronto City Council, please accept my best wishes for an enjoyable event and continued success.

Yours truly,

John Tory
Mayor of Toronto

OFFICE OF THE MAYOR
100 QUEEN STREET WEST, TORONTO, ONTARIO M5H 2N2

RAMAKRISHNA MISSION ASHRAMA & CHILDREN HOMES
BATTICALOA, SRI LANKA.
T.P.; 0094 65 2222 752, rkmbat@gmail.com

ஆசிச் செய்தி

சுவாமி விபுலானந்தர் மன்றம், கனடா – வீழாச் சபையினர் உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 125வது ஆண்டு நிறைவையொட்டி எடுக்கவிருக்கும் விழா சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி அளிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். விழாக் குழுவினரையும் பாராட்டுகின்றேன்.

சுவாமி விபுலானந்தர் மன்றம் கனடா என்ற அமைப்பு 2003 மாசி மாதம் ரொறன்ரோவில் ஆரம்பிக்கப்பட்டதென அறிகிறேன்.

"சேவை செய்தாற்போதும் தெய்வத்தைத் தெரிவோம்" என்ற பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் தெய்வவாக்கினை தனது வாழ்வின் இலட்சியமாக கொண்டு வாழ்ந்தவர் சுவாமி விபுலானந்தர் அவர்கள். இவர் முத்தமிழ் வித்தகர் என்றும், யாழ்நூல்தந்த இசைப்பேராசிரியர் என்றும் உலகம் போற்றும் பெருமை பெற்றவர். துறவு நிலையை மேற்கொண்டு இவர் ஆற்றிய சமய, சமூக, தமிழ் பணிகள் சொல்லிலடங்கா. இவர் தன்னலம் கருதா சேவைகள் பாராட்டுக்குரியவை.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையின் இலட்சியம் , எதிர்காலச் சந்ததியினரின் மனங்களில் தாக்கத்தை ஏற்படுத்தி சமுதாய மறுமலர்ச்சியைக் கொண்டு வரவும் அவரது பணிகளைத் தொடரவும் **"சுவாமி விபுலானந்தர் மன்றம் – கனடா"** அமைப்பினரின் பணி வழிகாட்டும். வழிகாட்ட வேண்டும். அதற்கான சகல பலத்தையும் மன்றத்தினருக்கு அளிக்க வேண்டுமென இறைவனை வேண்டி தெய்வத் திரு மூவராம் குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை ஸ்ரீசாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரது நல்லாசிகளையும் வேண்டி எனது நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

என்றும் இறைபணியில்

Swami Prabhupremananda

(சுவாமி பிரபுபிரேமானந்தா)
ஸ்ரீராமகிருஷ்ண மிஷன்,
மட்டக்களப்பு,
இலங்கை.

Please mention your e-mail address for further correspondence

This is a branch of the Ramakrishna Mission ; Colombo - 6
All the official correspondence should be addressed to the General Manager (Swami in-charge)
Bank: Bank of Ceylon, **Address:** Govington Road, Batticaloa. **Account Name :** Ashrama,
Account No.: 2698511, **Branch ID :** 012, **Bank Swift Code :** BCEYLKLX

மட்/சிவானந்த வித்தியாலயம், தேசிய பாடசாலை அதிபரின் வாழ்த்துச்செய்தி

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 125வது நினைவு தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தியினை அனுப்பி வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஈழ மணித்திருநாட்டின் கிழக்கிலங்கையில் காரைதீவு என்னும் மூதூரில் அவதரித்த அடிகளார் உலகெங்கும் தமிழையும் சைவத்தையும் வளர்க்க அரும்பாடு பட்டுழைத்த பெருமகனார் என்று கூறுவதில் பெருமை கொள்கின்றேன். குறிப்பாக சுவாமி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட கல்வி விருட்சமாம் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்று அவ் வித்தியாலயத்தின் அதிபராகவும் பணியாற்றக் கிடைத்தமை இறைவனின் அருளினாலும் சுவாமிஜீயின் ஆசீர்வாதத்தினாலும் நான் பெற்ற பேறாக எண்ணிப் பூரித்து நிற்கின்றேன்.

22.04.1929ஆம் திகதி பதினெட்டு மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையானது இன்று 1650 மாணவர்களுடனும், 94 ஆசிரியர்களுடனும் தேசிய பாடசாலை என்னும் அந்தஸ்துடன் பிரபலமான பாடசாலைகளுள் ஒன்றாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றது என்றால் அதில் மிகையில்லை. எமது பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் சிறந்து விளங்குகின்றார்கள். வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, கணக்காளர்களாக, திணைக்களத் தலைவர்களாக, சட்டத்தரணிகளாக, துறை சார்ந்த நிருவாக உத்தியோகத்தர்களாக, ஆசிரியர்களாக பல துறைகளிலும் பேர் பதித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவற்றுக்கெல்லாம் காரணம் இராமகிருஸ்ண மிஷன் துறவிகளின் ஆசீர்வாதமும் இங்கு பணியாற்றிய அதிபர்கள், பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், கல்வி அணிசாரா உத்தியோகத்தர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பான சேவையும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களின் அயராத முயற்சியும் ஈடுபாடுமேயாகும். இன்று உலகளாவிய ரீதியில் பழைய மாணவர்கள் பல்வேறு நாடுகளிலும் இயங்கிக்கொண்டிருக்கின்றார்கள். பாடசாலையின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவு செய்ய அரும்பாடு பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

எமக்கெல்லாம் கல்விக் கண் திறந்த தாயான சிவானந்த வித்தியாலயம் மென்மேலும் வளர்ச்சியுறவும், சாதனை படைக்கவும் அதன் முலம் நாம் எல்லோரும் பெருமையும் அடைவோமாக!

வாழ்க சுவாமி விபுலாநந்தர் நாமம்!

வளர்க சுவாமி விபுலாநந்தா கலைமன்றம் - கனடா

திரு ச. தயாபரன்,
அதிபர்,
மட்/ சிவானந்த வித்தியாலயம்,
தேசிய பாடசாலை.
மட்டக்களப்பு,
இலங்கை.

23.07.2017

KM/R.K.M GIRLS' VIDYALAYA - KARAITIVU (E.P)
கமு / இ.கி.ச. பெண்கள் வித்தியாலயம் - காரைதீவு (கி.மா)
கමු / ඉ.කි.ස බාලිකා විදුහල - කාර්නීවු (නැ ඵේ)
Regd. No: 15270

வாழ்த்துச் செய்தி

இராமகிருஷ்ண சங்கத் துறவியாக விளங்கிய சுவாமி விபுலாநந்தர் இலங்கையின் கல்வி முன்னேற்றத்திற்காக பாடுபட்ட உத்தம துறவியாவார். அவ்வகையில் அவர் பிறந்த காரைதீவில் மட்டும் மூன்று கல்விச்சாலைகளை நிறுவி கல்விக்கு ஒளியூட்டினார். அவரால் உருவாக்கப்பட்ட காரைதீவு இ.கி.மிஷன் பெண்கள் பாடசாலைச் சமூகத்தினரால், சுவாமிகளது 125 ஜனனவருட நிகழ்ச்சியையொட்டி கனடாவில் வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி கொள்கின்றோம்.

ஆங்கில மொழிப் புலமையாலே தமிழை புதுமுறையில் வளப்படுத்திய கணிதமேதையின் பொக்கிசங்கள் காலத்தால் அழியாதவை, கற்போருக்கு துணையாக நிற்பவை, மென்மேலும் இளைய சமுதாயத்தை நகர்த்தக்கூடியவை. அவர் அறிந்தவை; போதித்தவை; எண்ணிலடங்காதவை. ஒவ்வொரு துறையிலும் உயர்நிலை வகித்தவர். இவர் எம்மண்ணிலே பிறந்து இமயம் வரை கொடிகட்டிப் பறந்த போர் வீரன் வீரத்துறவி குறுகிய காலத்தில் (1892-1947) சாதித்தவையை எண்ணிப் பார்க்கும் போது இன்னும் 20 வருடங்கள் வாழ்ந்திருப்பின் உலகமுள்ளளவும் யாத்துதவிய பொய்யாமொழிப் புலவர் போன்றே இவருடைய படைப்புகளின் கருத்துகளும் அதிகரித்திருக்கும் என்பது வெள்ளிடைமலை.

மேலைநாட்டு செல்வங்களை நம்மவர் அறிந்து கொள்ள வேண்டும் என்ற அவா அவருக்கு இருந்ததால் அதில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். பல்துறைகளிலும் நிபுணத்துவம் அடைந்தார். பிற சமய ஈடுபாடு காரணமாக பல சமய பகைமைகளை அறுத்தெறிந்து சமயப் பொதுமை கண்டதோடு அச்சமயங்களை நுணுகி ஆய்ந்ததன் பயனை ஒன்றே உலகமென்ற கருத்தினை வலியறுத்தினார். அடிகளாரின் பரந்துபட்ட இளமைக்கால உள்ளமே பரந்துபட்ட நோக்கங் கொண்ட சமய சமரசங் கொண்ட இராம கிருஷ்ண மடத்து துறவியாக்கியது. துறவறத்தின் கட்டுப்பாடுகளை கடைப்பிடித்த நிலையிலும் அன்னாரது பேரறிவு பல்துறைகளிலும் பீறிட்டுப் பாய்ந்ததை நோக்கும் போது பேராச்சரியத்தை விளைவிக்கின்றது

இவ்வாறு சாதனைகள் புரிந்த சுவாமியின் 125வது ஜனன வருடத்தினை முன்னிட்டு அவர் பெயரில் தமிழை, கலையை, பண்பாட்டினை கனடாவில் குறிப்பாக 2002ம் ஆண்டிலிருந்து அமைப்பு ரீதியாக ஒன்றிணைந்து வளர்த்துக் கொண்டுவருகின்ற சுவாமி விபுலாநந்தர் கலைமன்றத்திற்கு நன்றியினை, வாழ்த்தினை தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கின்றோம்.

திரு.செ.மணிமாறன்
அதிபர்,
கமு/இ.கி.மி.பெண்கள் பாடசாலை,
காரைதீவு.(இலங்கை)

திரு/இ.கி.ச ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி அதிபரின் வாழ்த்துச்செய்தி

கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு காரைதீவுதனில் உதித்த சுவாமி விபுலாநந்தர் அவர்கள் கிழக்கிலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுவதும் பேசப்படுகின்ற பன்முகத்துறைசார் வல்லுனராக திகழ்ந்தமை போற்றுதற்குரியது. அடிகளாரின் பாடல்களில் "வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ....." எனும் பாடல் அவரது உயர்வான பண்புகளுக்கும், நல் விழுமியங்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. அவர் எமது கல்லூரியில் 1925ம் ஆண்டு காலப்பகுதியில் முகாமையாள ராகப் பொறுப்பேற்று, அதைத் தொடர்ந்து 1928ஆம் ஆண்டு முதல் 1930ஆம் ஆண்டுவரை அதிபராகக் கடமையாற்றினார். இக்காலம் கல்லூரி வரலாற்றில் முக்கியமான காலமாகும்.

இவர் ஆற்றிய கல்விப்பணிகள் "விபுலாநந்தரின் கல்விச்சிந்தனைகள்" என்ற கருத்துடன் ஈழத்துக் கல்வி வரலாற்றில் இன்றும் பெருமைக்குரிய விடயமாகப் பேசப்படுகின்றது. இவர் சமயத்துறவியாக மட்டுமன்றி இயல், இசை, நாடகம், விஞ்ஞானம், தத்துவம் போன்ற துறைகளில் ஆற்றிய பங்களிப்பு சிறப்பானதாகும். இசை தொடர்பாக எழுதப்பட்ட யாழ்நூல் பல்துறை இசை விற்பன்னர்களையும் வழிப்படுத்தும் நூலாக அமைகின்றது.

சுவாமி அவர்கள் பிறந்து 125 ஆண்டுகள் பூர்த்தியான நிலையில், உலகளாவிய ரீதியாக எடுக்கப்படும் விழாவானது அவரது வரலாற்றில் மற்றுமொரு மைல்கல் ஆகும். அந்த வகையில் கனடா வில் உள்ள 'சுவாமி விபுலாநந்தர் கலை மன்றத்தினர்' சுவாமி விபுலாநந்தர் பிறந்ததினத்தையொட்டி விழா எடுப்பதையும், அதற்காக மலர் ஒன்றை வெளியிடுவதையுமிட்டும் கல்லூரிச் சமூகம் சார்பாக பாராட்டுகின்றேன். இவ்வாறான முயற்சிகள் தொடர்ந்தும் இடம்பெற வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.செ. பத்மசீலன்
அதிபர்
திரு / இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
(தேசிய பாடசாலை)
திருகோணமலை

யாழ்/மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபரின் வாழ்த்துச்செய்தி

யாழ்/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பண்டிதர் சாமித்தம்பி மயில்வாகனார் இக்கல்லூரியில் 1920-1922 காலப்பகுதியில் அதிபராக கடமையாற்றியுள்ளார். அவர் தம் பாதங்கள் பதிந்த இக் கல்லூரி அவர் பெயர் கூறி இவ்வுலகில் பெருமையடைகின்றது. இக் கல்லூரியூடான தொடர்பைப் பற்றி முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம் இயற்றிய "முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் நான்மணிமாலை"யில் நிலைமண்டல ஆசிரியப்பாவில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

".....லண்டன்விஞ் ஞானத் தேர்விலுந் தேறி
விண்ணுயர் கல்லூரி கண்ணென வளர்க்குநாள்
மருதடி விநாயகர் திருவடி மறவா
மானிப்பாய் இந்துவைப் பேணிக் காத்திடும்
முகாமை
திருவிளங் கம்மெனுஞ் செம்ம லறிந்து
அடிகளை யடைந்துதா னழைத்திட வந்த
முடிவினைக் கூறலும் முகிழ்ந்தபுன் முறுவலார்
அன்னா ருடனே முன்னாகச் சென்று
மானிப்பா யிந்துவின் மாண்புறு மதிபராய்
பேணியே யமர்ந்ததன் ஆணியாய்த் திகழ்ந்தும்
நிலத்தரு திருவினர் புலந்தரு மறிவினர்
நலந்தரு ஞானியர் நாடித் தொடர்தர
மாலைக் காலம் மருதனார் மடம் போய்
வள்ளலி ராம நாத னமைந்த
புண்ணிய மகளிர்கல் லூரியிற் புலவராம்
நவநீத கிருஸ்ண பாரதி வழங்கிய
உலகியல் விளக்கம் நிலவிடப் பெயர்த்தும்
இந்துவைப் பலதுறைப் பெருக்கி யுயர்த்தி
குலவிட வைத்துக் குறித்தமூ வாண்டில்
தமரெனப் பணிபல தந்தனரதற்கே"

எனக் குறிப்பிட்டுள்ளார்.

இக்கல்லூரியின் வரலாற்றில் தடம்பிடித்த பண்டிதர் சாமித்தம்பி மயில்வாகனர் இக்கல்லூரியின் அதிபராக இருந்த காலத்திலே மருதனார்மடத்தில் அமைந்துள்ள இராமநாதன் மகளிர் கல்லூரியில் இரவு வேளைகளில் நிகழ்த்தப்படும இசை விரிவுரை விளக்கங்களில் கலந்து கொண்டதாகவும் அக்காலத்தில் இரவில் மருதனார்மடத்தில் இருந்து மானிப்பாயிற்கு அவர் வீதியில் தனியாகச் செல்வதை உணர்ந்த சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் அவருக்கு துணையாக ஒருவரை நியமித்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

அவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்த போது இராமநாதன் மகளிர் கல்லூரியில் அக்காலத்திலிருந்த தென்னிந்திய தமிழ், இசை அறிஞர்களுடன் தொடர்புகள் அவருக்கு ஏற்பட்டதனா லேயோ என்னவோ, பின்னாளில் தமிழ் இசையை ஆய்வு செய்ய தூண்டியதாக அமைந்தது. அவர் அக்காலத்திலிருந்த ஆசனம் இன்றும் யாழ்/இராமநாதன் மகளிர் கல்லூரியில் காணப்படுகின்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இலச்சனையை அமரர் வீரசிங்கம், நிறுவனர் சங்கரப் பிள்ளையின் மருமகனாரும், நீதிபதியும், சமயப் பெரியாருமாகிய திருவிளங்கம் ஆகியோருடன் இணைந்து வடிவமைத்ததாக மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வரலாறு கூறுகின்றது.

பிற்காலத்திலே அவர் நோய்வாய்ப்பட்டிருந்தும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு வரும் பொழுது பழைய மாணவர் சங்கக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்ததாகவும், அப்பொழுது பழைய மாணவர்கள் அவரை பாடசாலை வாயிலில் இருந்து கூட்ட மண்டபம் வரை தூக்கிச் சென்று கூட்டத்தில் உரை யாற்றுமாறு வேண்ட, அவர் பாடசாலையில் பழைய மாணவர்கள் கடமைகள் எவையென விளக்கவுரை நிகழ்த்தியதாகவும் 500 பழைய மாணவர்கள் ஒற்றுமையாக இருந்தால் தனியாக ஓர் பாடசாலையை இயக்க முடியும் என உரைநிகழ்தியதாக இக்கல்லூரியின் மூத்த பழைய மாணவனும் நிறுவுனர் சங்கரப்பிள்ளையின் வழித்தோன்றலுமாகிய திரு.விவேகானந்தராஜா அவர்கள் மூலம் அறியக் கிடைத்தது.

சுவாமி விபுலாநந்தர் நினைவாக வருடந்தோறும் முத்தமிழ் விழாவானது இக்கல்லூரியில் நடை-பெற்று வருகின்றது. இதன் போது சுவாமியின் நினைவாக தமிழுக்குத் தொண்டாற்றிய அறிஞர்களுக்கு யாழ்/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தமிழ் சங்கத்தினால் யாழ் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது. கடந்த ஆண்டு யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுக்கு யாழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவ்விழாவின் பொழுது சுவாமியின் திருவுருவப்படமானது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்படுவது எமது கல்லூரியின் ஓர் வரலாற்று ரீதியான கலாசார நிகழ்வாக இன்றும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ம.இந்திரபாலா
அதிபர்
மானிப்பாய் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்
B.Sc., M.Sc. in (Computer Science), M.Sc. in (Mathematics), PGDE, PGDEM,GTP-IT

மட் / விவேகாநந்த மகளிர் மகா வித்தியாலயம்

கல்லடி - உப்போடை, மட்டக்களப்பு.

BT / VIVEKANANDA GIRLS' MAHA VIDYALAYAM.

Kallady - Uppodai, Batticaloa.

T.P : 065 - 2222481 Estd. 1909 Date : 15 / 06 / 2017

வாழ்த்துச் செய்தி

சுவாமி விபுலானந்தர் கலை மன்றத்தினர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 125வது பிறந்த தினத்தை கொண்டாடும் நிகழ்வில் ஒரு மலரினையும் வெளியிடுவதனையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இம் மலருக்கு விவேகானந்தா மகளிர் கல்லூரி சார்பாக ஒரு வாழ்த்துச் செய்தியை வழங்கக்கூடிய பாக்கியம் கிடைத்தமையையிட்டு பெருமையடைகின்றேன்.

சுவாமி விபுலானந்தர் அவர்கள் கிழக்கிலங்கையின் ஒளிவிளக்காக மட்டுமல்லாது ஈழத்தின் ஒளிவிளக்காக கருதுவதே சாலச்சிறந்தது. இன்னும் ஆழ்ந்து நோக்கும் போது சர்வதேசத்தின் முத்தாகக் கூட அவரை ஒப்பிடுவதில் எந்தவொரு ஐயமுமில்லை. ஏனெனில் ஒரு விஞ்ஞானியாக இருப்பவர் விஞ்ஞானத்தில் மட்டும் தான் வல்லவராக மிளிர்வார். ஒரு கணித மேதை கணிதத்திலும், இலக்கியவாதி இலக்கியத்திலும், எழுத்தாளர் ஏதேனும் ஒருசில எழுத்துத்துறையிலும் தான் பிரகாசித்து முத்திரை பதிப்பார்கள். ஆனால் சுவாமி விபுலானந்த அடிகளார் தமிழ்த்துறையில் பட்டதாரியாகவும், பேராசிரியராகவும், ஆங்கிலவிற்பன்னராகவும், வடமொழியில் வல்லவராகவும், கணிதத்தில் தடம் பதித்தவராகவும், விஞ்ஞானத்தில் பட்டதாரியாகவும் சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகியவற்றில் இணையில்லா புலமை பெற்றவராகவும், சிறந்த நாடக ஆசிரியராகவும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் வல்லவராகவும், சிறந்த கவிஞராகவும், சிறந்த ஆராய்ச்சியாளராகவும், நூலாசிரியராகவும், பத்திரிகையாசிரியராகவும், சிறந்த சமூக சேவையாளராகவும், சிறந்த வீரராகவும், சிறந்த ஆன்மீகவாதியாகவும், பல பாடசாலைகளின் தோற்றுவாய்க்கு காரணகர்த்தாவாகவும் இருந்ததோடு மாத்திரம் அல்லாமல் இவையாவற்றிற்கும் மேலாக சந்நியாசியாகவும் விளங்கினார். இத்தகைய சகலகலாவல்லவரான சந்நியாசி உலகிற்கே கிடைத்த பெரும் போக்கிஷமாவார். இத்தகைய பல்துறை ஆற்றல் படைத்த ஒருவர் இவ்வுலகில் இதுவரை பிறக்கவில்லை என்று கூறினால் தவறில்லை.


" **உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது**" என்று அவர் கூறிய உயர்ந்த கருத்தை மனிதர்கள் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவார்களாக இருந்தால் அவர் சிரஞ்சீவியாக நிலைத்திருப்பார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. **"இன்றைய இளைஞர்கள் தான் நாளைய தலைவர்கள்"** எனவே விபுலானந்தர் கூறிய முத்தான கருத்துக்கள் ஏட்டளவிலோ. பேச்சளவிலோ மாத்திரம் கூறாமல் வாழ்க்கையில் எல்லோரும் கடைபிடித்து குறிப்பாக இளைஞர்கள் கடைபிடித்து நல்லவராக வாழ வேண்டும்.

இப்பாரிய கைங்கரியத்தை புலம் பெயர்ந்து சென்றாலும் கூட பற்றோடும் பாசத்தோடும் யாழ்நூலை ஈன்றெடுத்த பாவலரான சுவாமி விபுலானந்தரின் 125 வது பிறந்த தினத்தை கொண்டாட பங்களிப்புச் செய்த கனடாவில் வாழும் சுவாமி விபுலானந்தர் கலை மன்றத்தினர் ஒவ்வொருவரையும் மட்/ விவேகானந்தா மகளிர் கல்லூரி சார்பாக வாழ்த்துகின்றேன்.

Mrs.T. HARITHAS
Principal
BT/BT/ Vivekananda Ladies' College
Kallady - Uppodai,
Batticaloa.

திருமதி.திலகவதி ஹரிதாஸ்
அதிபர்
மட்/ விவேகானந்தா மகளிர் கல்லூரி
கல்லடி உப்போடை
மட்டக்களப்பு

அமரர் அன்று தந்த வாழ்த்துச் செய்தி



சுவாமி விபுலாநந்தர் மன்றம் – கனடா
காப்பாளர்

ஈழத்துப் பூராடனார் கலாநிதி
க.தா. செல்வராஜகோபால்
அவர்கள்

முத்தமிழ் வித்தகர், தமிழ்ப்பேராசான், சுவாமி விபுலாநந்தரின் நீடுபுகழ் 1992 ஆம் ஆண்டில் நூற்றாண்டு கண்டது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட எழுச்சியின் பயனாக அடி களாரின் ஆக்கங்கள் பல சேகரிக்கப்பட்டு நூலுருப்பெற்றன. புதிய தலைமுறையினர் அடிகளாரின் சீரிய பணிகளை நினைவிற்கொண்டு செயற்பட்டுவருதல் பேருவகை தரு கின்றது. இராமகிருஷ்ண சங்கத்தின் சமரச சன்மார்க்கக் கோட்பாட்டின் வழி செயற்பட்ட அடிகளாரின் செயற்பாடுகள் எம் மதத்தவருக்கும் ஏற்புடையதாக அமைந்தமையினால்தான் அவரை எம்மதத்தவரும் ஏற்றிப் போற்றுகின்றனர். அவரது தேசியப் பற்று மகத்தானது. தமிழர் ஒவ்வொருவரும் நினைவிற்கொள்ளவேண்டிய மகான் சுவாமி விபுலாநந்தர். அவர் பன்மொழி வல்லுநராகத் திகழ்ந்த போதிலும் தமிழ் மொழிமீது கொண்டிருந்த ஆறாக்காதலும் ஆழ்ந்த புலமையும் நம்நாட்டவருக்கு முன்வழிகாட்டிகளாக உள்ளன. அவர் மேற்கொண்ட சேவையின் பரிணாமங்களே கிழக்கிலங்கை மக்களைச் சீரிய நிலைக்கு ஆற்றுப்படுத்தின என்பது உண்மை. அவரது போதனைகளும் சாதனைகளும் நம் நாட்டவர்களுக்கு முன்மாதிரி யானவை; நினைவுகொள்ளத்தக்கவை.

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களில் மிகப் பெரும்பான்மையோர் வாழும் கனடா நாட்டில் தமிழர் பண்பாட்டைப் பேணுவதும், தமிழ்ச் சான்றோர்களைப் போற்றி அவர்களது சேவைகளை நினைவுகொள்வதும் சீரிய பண்பாட்டு முயற்சிகளாகும். அவ்வகையில் எனது நீண்டநாட் கனவை நமது இளைய தலைமுறையினர் முன்னின்று *சுவாமி விபுலாநந்தர் மன்றம் - கனடா* என்ற அமைப்பை உருவாக்கி, மிகச் சிறந்த முறையிலே செயற்பட்டு வருவதோடு, மிகப் பெரிய அளவில் கண்காட்சியும் கலை விழாவும் நடத்துவதற்குரிய ஒழுங்குகளில் தீவிரமாக உழைத்து வருதல் அறிந்து இறும்பூதடைகின்றேன். இவை யாவற்றுக்கும் மேலாகச் சுவாமி விபுலாநந்தரின் பன்முகப்பட்ட சேவைகளை எதிர்காலச் சந்ததியினர் நன்கு அறிந்து கொள்ளும் முகமாக *"சிறப்பு மலர்"* ஒன்றையும் வெளியிடு கிறார்கள். இது காலத்தால் நிலைத்திருக்கத்தக்க பணியாகும். இவற்றை முன்னின்று நடத்துபவர்களை நான் நன்கறிவேன். தகுதியும் அனுபவமுமிக்க இச் செயற்குழுவினர் இப்பணியினை ஆண்டுதோறும் நடத்துவதோடு தாயகத்தின் உயர்ச்சிக்கும் தம்மாலான பணிகளைச் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் இம் மன்ற மானது, கிழக்கிலங்கையைச் சார்ந்த இங்குள்ள கலை, கலாசார மன்றங்கள் யாவற்றையுயம் ஒன்றிணைத்துப் பயனுள்ள செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும் என்பதும் எனது விருப்பமாகும்.

இவ்விழா மிகச் சிறப்பாக அமையும் என்பது எனது நம்பிக்கை. இவ்விழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதன் மூலம் சுவாமி விபுலாநந்தருக்கு எனது காணிக்கையைச் செலுத்துகின்றேன்.

1282 Sherwood Mills Blvd Unit 3
Mississauga L5V 1S6
ONT. Canada, 10.06.2003

நன்றி: விபுலம் (2003)



மட்டுநகர் புனிதமிக்கேல் கல்லூரி முன்னாள் அதிபரது வாழ்த்துச் செய்தி

18, புகையிரத நிலைய வீதி
மட்டக்களப்பு
17.07.2017

ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தரின் நூற்றியிருபத்தைந்தாவது ஆண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கனடா சுவாமி விபுலாநந்தர் கலை மன்றத்தினருக்கு, வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

சுவாமியவர்களுடன் பலவகைகளில் தொடர்புடையவளாக அடியேனைக் கருதுகிறேன். சுவாமியவர்கள் காரை-தீவைப் பூர்வீகமாகக் கொண்டவர். எனது பெற்றோர் பெரிய கல்லாறைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். சுவாமி களும் எனது தந்தையாரும் ஒரே காலத்தில் கல்முனையில் கல்வி கற்றவர்கள்.

மேலும், சுவாமியவர்களின் இளமைக்காலத்தில் அதிக தாக்கத்தை செலுத்தியவர், இயேசு சபைக் குருவும், புனித மிக்கேல் கல்லூரியின் ஸ்தாபகருமான பொணல் அடிகளாராவார். 1906 ம் ஆண்டு ஆடி மாதம் 3ம் திகதி, புனித மிக்கேல் கல்லூயில் மாணவனாக, ஜூனியர் கேம்பிறிஜ் வகுப்பிலே சுவாமி விபுலாநந்தர் சேர்ந்தார். அவரது சேர்விலக்கம் 0997. அடுத்த ஆண்டு ஜப்பசி மாதத்தில் நடைபெற்ற பொதுப்பரீட்சையில் மிகச் சிறப்பாக சித்தியடைந்தார். 1907ம் ஆண்டு கார்த்திகை மாதம் முதல், மாணவ ஆசிரியராக (Pupil Teacher) கடமையாற்றினார். 1908 ம் ஆண்டு சீனியர் கேம்பிறிஜ் பரீட்சையையும் சிறப்பாக முடித்துக் கொண்டு, 1910ம் ஆண்டு வரை ஆறாம், ஏழாம், எட்டாம் வகுப்புகளிலேயே கடமையாற்றினார். 1911ம் ஆண்டிலே ஆசிரியப் பயிற்சி பெறச்சென்று, 1913ம் ஆண்டு தை மாதம் மீண்டும் புனித மிக்கேல் கல்லூரியில் இணைந்து கொண்டு, அடுத்த ஆண்டு பங்குனி வரை பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக கடமை புரிந்தார்.

1914ம் ஆண்டு வெளிவந்த St.Michael's Annual என்ற சஞ்சிகையிலே Our Infant Department என்ற கட்டுரை S.மயில்வாகனனாரால் எழுதப்பட்டுள்ளது. இன்று கல்வியாளர்களால், சிறப்பான கருதுகோள்கள் என ஏற்றுக் கொள்ளப்பட்ட சீரிய கருத்துக்கள் பல அக்கட்டுரையிலே இடம்பெற்றுள்ளன. நானறிந்த வகையில் சுவாமி விபுலாநந்தராகப் பிற்காலத்தில் உருவெடுத்த மயில்வாகனனாரால் எழுதிப் பிரசுரமான முதற் கட்டுரையும் இதுவா-கலாம். 1991 ம் ஆண்டு, கார்த்திகை மாதத்திலே, அடியேன் அதிபராக இருந்த போது, முன்னாள் புனித மிக்கேல் கல்லூரியின் அதிபர் திரு.சா.இ.கமலநாதன் அவர்கள், உறுப்பினராக இருந்த மட்/சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா குழுவினர், அடிகளாரின் கட்டுரைகள் அனைத்தையும் தேடி எடுத்து நான்கு நூல்களாக தொகுத்து வெளி யிட்டனர். இந்த நூல்களுக்கு அச்சுப்பிழை திருத்தும் மூன்றாவது ஆளாக அடியேன் பணிசெய்தேன்.

அதே காலத்தில் மட்/புனித மிக்கேல் கல்லூரிச் சமூகம் "விபுலாநந்த தீபம்" என்ற விசேட பாடும் மீன் சஞ்சிகையை வெளியிட்டது. இவ்வாறு புனித மிக்கேல் கல்லூரியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவரும், அதன் தலை சிறந்த மாணவருமான சுவாமி விபுலாநந்தருக்கு, தாங்கள் 125 ஆவது ஆண்டு விழாவெடுப்பதில், தமிழ் கூறும் நல்லுலகம் நிச்சயமாக பெருமை பாராட்டி தங்களையும் வாழ்த்தும்.

தங்கள் கழகம் மேலும் வளர்ச்சி பெற்று, சுவாமியவர்களின் நற்சிந்தனைகளையும், சேவைகளையும் எடுத்துக்காட்டும் பணிகளைச் சிறப்பாக செய்ய, எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

திருமதி. கமலாதேவி கமலநாதன்
(முன்னாள் அதிபர்)
மட்/புனித மிக்கேல் கல்லூரி

பிரதம விருந்தினர் வாழ்த்துரை

வல்லிபுரம் கந்தையா புருஷோத்தமன், CPA, CA, CA.IFA
Chartered Accountant & Forensic Accountant
Toronto, Canada



அகிலம் போற்றும் முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார் பிறந்தது மட்டக்களப்பின் தென்கோடியிலுள்ள காரைதீவு எனும் நெய்தலும் மருதமும் ஒருங்கே அமையப்பெற்ற பழந்தமிழ்க் கிராமத்திலாகும். 1892 இல் பிறந்தவர், 55 வயதில் 25 மைல் கல் தொலைவில் உள்ள கல்லடி என்னும் கிராமத்தில் சமாதி கொண்டார். வாழ்ந்த அந்த குறுகிய வாழ்வாண்டுகளில் அவர் என்ன செய்தார் என்று கேட்போர், அதற்கான நீண்டவிடை கிடைத்த பின், அடிகளார் என்ன செய்யவில்லை என்று மூக்கில் விரலை வைப்பது ஒன்றும் புதுமையல்ல. அதற்கு தெய்வகடாட்சம் என்பதைத் தவிர வேறு எதுவும் பதிலாகமுடியாது. மயில்வாகனன் என கதிர்காமத்தான் திருநாமம் பெற்ற அவர் பிறப்பும் வாழ்க்கையும் மற்றும் ஒவ்வோர் செயலும் இறையருள் கூடியே அமைந்திருந்தது, ஔவை யும் அருணகிரி யும் பெற்ற பேறுகள் போன்றனவே.

அவர் நெடு உறக்கம் கொண்ட மண்ணாம் கல்லடியில் நான் பிறந்ததும் மற்றும் கல்லடி, ஆரையம்பதி இராமக்கிருஷ்ண மிஷன் பாடசாலைகளில் எனது ஆரம்ப கல்விதனைப் பெற்றதும் யான் பெற்ற பெரும் பாக்கியமே. அன்னாரது சமாதியை ஒட்டி ஓங்கி எழுந்திருந்த விபுலாநந்த மணிமண்டபத்திலேயே அமரர் ஓதுவார் மயிலாப்பூர் இராஜசேகரன் அவர்கள் குருவாக அமைய எனது பண் இசை பயிற்சியும் ஆரம்பமானது. எனது பெற்றோர்கள் இருவரும் இராமக்கிருஷ்ண மிஷன் பாடசாலைகளில் தலைமை ஆசிரியராகக் கடைமையாற்றியவர்கள். அவர்கள் தம் சொந்த ஊரைத்துறந்து கல்லடியில் வசித்ததன் ஒரே காரணம், தம் குடும்பத்தை இந்த மாபெரும் ஸ்தாபனத்துடன் இணைத்துக் கொள்ளவேண்டுமென்ற ஆத்மார்த்தமே. எமது வீடு மிஷனை ஒட்டியிருந்ததால், நானும் எனது சகோதரர்களும் மிஷன் மணி ஓசையிலே துகில் எழுந்து, அது ஒலிக்காத போது துகில் கொண்டு எம் மாணவர் கடைமைகளைச்செய்தோம். மிஷனில் இருந்து எழும் சுகந்தம் எம் வீட்டையும், எம் சுவாசத்தையும் என்றுமே நிறைத்தது என்பேன். மிஷனின் மடாதிபதியாக சுவாமி ஜீவனானந்தஜீ அவர்கள் கடமையாற்றிய நாட்களில் நானும் என் சகோதரர்களும், கூடவே எம் பால்ய நண்பர்களும் பங்கேற்காத அன்னதான வைபவங்கள் எதுவும் மிஷனில் இடம்பெறவில்லை என்பேன். இராமக்கிருஷ்ண மிஷன் மற்றும் கல்லடிஉப்போடை சிவானந்த வித்தியாலயம் ஆகியன அமைப்பதற்கு நிலமும் பொற்காசும் கொடுத்த தனவந்தர்களான கதிர்காமத்தம்பி உடையார், சபாபதிப்பிள்ளை உடையார் அவர் சந்ததியினர் ஆகியோர் உண்மையிலேயே “என்பும் உடையர் பிறர்க்கு என்றும் உடையார் எமக்கு”.

பல்துறை சார்ந்த பேரறிஞராக, ஆசிரியராக, பண்டிதராக, விஞ்ஞானப் பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைப் பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக, மொழி-பெயர்ப்பாளராக விளங்கிய விபுலாநந்தர், சமூக சீர்திருத்தவாதியாக, உண்மைவாதியாக, எழுத்தாளராக, கவிஞராக, அனாதை மாணவர்களுக்குத் தந்தையாக, கல்விவாதியாக, மதங்களுக்கிடையே இணப்பாளராக, அன்பு செலுத்துபவராக, சைவம் வளர்த்தவராக, சமூகத்துறவியாக வாழ்ந்து செய்த தொண்டுகளும், தமிழிற்காற்றிய சேவைகளும் மக்கள் மனதில் இன்றும் நிலைத்து நிற்கின்றன. ஐம்பது ஆண்டுகள் கடந்தும் அங்கலாய்க்கின்றனர்.

விபுலாநந்தர் ஒரு சிறந்த போராளியாக திகழ்ந்தார் என்று சிலர் சொன்னால், அவர் பூண்ட வெற்றி வாகை சூடிய ஆயுதங்கள், அவர்தம் கூரிய பேனா, நேரிய பேச்சு, சீரிய நிதானம், நீடிய தொலை நோக்கு, வாடிய மனிதர், நாடிய அன்பு என்பேன். பல்லின மக்கள் வாழ்ந்த இலங்கையில் அவர் இனவாதம் கொள்ளவில்லை, பிரதேசவாதம் சற்றும் பூணவில்லை, மறந்தும் மதவாதம் பேசவில்லை, சாதிபேதம் கிஞ்சித்தும் காட்டவில்லை.

யாம் அறிந்த சில சைவப்பெரியார் சுடலை காக்கும் எம்சிவனை நோன்பிருந்து அதன் பின் மறுகணமே சாதிவெறி கொண்டு சாடும் ஈனச்செயலிலும் விட சுவாமிகளின் "யாவரும் கேளீர்" எனும் கடைப்பிடிப்பு வானவரும் போற்றுதற்குரியது. அடிகளாரது தீர்க்க தரிசனம் மீன்பாடும் தேன்நகரையே மேம்புறச்செய்தது. அவர் செய்த போர் தோற்றதே இல்லை. அவர் தோற்கும் போரை என்றும் புரிந்ததும் இல்லை. எவ்வாறாயினும் அவர் தான் அறியா மலேயே ஈழத்தமிழ் உணர்வுகளுக்குத்தூபம் இட்டாரோ என்ற கருத்து எம்மில் சிலருக்கு எழுவது ஒன்றும் புதுமையுமில்லை. ஏனென்றால், ஈழத்தமிழ் உணர்வில் பிரதான தூணே மகாகவி பாரதி பாடிய உயிரூட்டும் படைப்புக்களும், எழுச்சிப் பாடல்களுமாகும். பாரதியாரின் ஆக்கங்களுக்கெதிராக தமிழகத்தில் பெரும் தடைகள் இருந்து வந்தது. அவர் ஒரு தனி மனிதனாகக் குரல் கொடுத்தார். அவற்றைத் தகர்த்தெறிந்தார், தமிழகத்தின் பல்கலைக்கழக பாடநெறியில், பாரதியார் ஆக்கங்களைப் ஆழப் புகுத்தினார். உடைந்தது வாய்ப்பூட்டு. தமிழன் நாதழுவி தமிழகத்தின் பட்டி தொட்டியெங்கும் மடை திறந்து ஓடியது பாரதி படைத்த தமிழப்பாக்கள். விழுது விட்டுப் பரந்தது அவன் விதைத்த தமிழ் உணர்வு. இது ஈழத்தில், உணர்வு கொண்ட வீரத்தமிழ் இளைஞர்களை விட்டு விட்டதா இல்லவே இல்லை.

அன்னார் சிறுவயதில் பாடசாலை செல்லும் முன்பே கல்வி பயில ஆரம்பித்தார், ஐம்பத்தைந்தின் அமரத்துவத்தை அன்றே அறிந்திருந்த தீர்க்கதரிசன அவசரந்தான் அதுவோ அறியேன். கிறிஸ்தவ பாடசாலைகளில் பயின்ற வேளை கிறிஸ்தவ குருமாரின் நற் போதனைகளையும், மக்கள் சேவைகளையும் கண்டு ஊக்கம் கொண்டார். ஒற்றை மாட்டுவண்டிகள் சிறு ஊர்தியாகவும், இரட்டை மாட்டு வண்டிகள் பேரூந்தாகவும் இருந்த காலத்திலும், அவரது பயணங்களின் மின்னல் வேகம் மட்டும் சற்றுமே குறைந்ததாக தெரியவில்லை. கல்வி பயிலவும், கோரிக்கைகளில் ஜெயிக்கவும், பல்கலைக்கழகத்தில் பணியாற்றவும், துறவு கொள்ளவும் கப்பலில் சென்னை செல்வது அவருக்கு அயல் கிராமம் செல்வது போல அத்தனை சுலபமாயிருந்தது. இது எத்தனை விநோதம் கேளீர். புனித மிக்கேல் கல்லூரியின் புகழ்பூத்த புதல்வனாக இளம் மயில்வாகனனாக வித்தகனைப் போற்றுபவரும் எனக்கும் மற்றும் ஆயிரமாயிரம் மாணவருக்கும் தமிழமுது ஈந்த எம் மதிப்பிற்குரிய ஆசிரியை அதிபர் கமலாதேவி கமலநாதன் வாய்மலரக் கேட்டு ஒரு மெய்சிலிர்ப்பு.

அன்று அவர் செய்த சாதனைகளோ ஆயிரம் ஆயிரம். அதில் இன்றும் மேல் வரும் பல, கீழ்வரும் சில.

- இலங்கையின் முதலாவது மதுரைத் தமிழ் சங்கப் பண்டிதர் என்னும் பெருமையைப் பெற்றார்,
- தமிழகத்தில் தமிழ்ப்பல்கலைக்கழகம் அமைய மனுக்கொடுக்க மட்ராஸ் பல்கலைக்கழகம் சுவாமியை நாடியபோது, அதை ஏற்று அவர் தலைமை வகித்தார். வெற்றியும் கொண்டார். அண்ணாமலைச் செட்டியாரும் இவரையே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராகத் தேர்ந்தெடுத்தார்.
- 1931ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும், 1943ல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் பணி புரிந்தார். மயில்வாகனன் பெற்ற இந்தப்பெருமை யாரும் பெறாத ஔவை சான்ற "அரிதிலும் அரியது வடிவடிவேலா" எனலாம்.
- அறவழியில் வந்தவர், பாதியில் முளைத்தெழுந்த சாதிக் கொடுமைதனைச் சாடித் தகர்த்தெறிந்தார்.
- அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த காலத்தில், ஒடுக்கப்பட்ட ஆதி திராவிடர் வாழ்ந்த திருவேட்களம் என்னும் சேரிக்குச் சென்று பாலர் படிக்கப் பள்ளிகள் அமைத்தார். இதனால் உயர் சாதியினர் குடி நீர் தடுக்க உவர் நீரையே குடித்து தியாக வாழ்க்கை வாழ்ந்தார்.
- அடிகளாரின் பதினான்கு வருட இசை ஆராய்ச்சிப் பணி 1947ல் "யாழ் நூல்" என உருப்பெற்றது.

- தமிழ் நாட்டு மக்களிடையே கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக தன்னிகரற்ற பணிகளை ஆற்றிய சுவாமி அவர்கள் ஈழத்திலும் ஏழைத்தமிழ் மாணவர்களுக்கு எழுத்தறிவித்த இறைவனானார்.
- எவ்வித வேறுபாடுமின்றி எல்லா மக்களுக்கும் கல்வி கிடைப்பதற்காக யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் சுவாமி அவர்கள் ஆற்றிய பணிக்கு நிகராகப் பணிபுரிந்தோர் யாருமே இல்லை.
- சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறைக்கான பாடத்திட்டத்தினைத் தயாரித்து அதன்மூலம் சீரியவழியில் தமிழ் ஆராய்ச்சிக்கல்வி வளர்வதற்கும், தமிழ் ஆராய்ச்சிக் கலை தொடர்வதற்கும், தமிழ்மொழியின் நிலை உயர்வதற்கும் காலாக அமைந்தார்.
- அடிகளாரின் தலைமையிலான அறிஞர் குழுக்களின் அரும்பணியினால் பத்தாயிரம் தமிழ்க்கலைச் சொற்களைக் கொண்ட கலைச்சொல் அகராதி 1938 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.
- சுவாமி தலைமை வகித்த விஞ்ஞானத் தமிழ் சொற்களஞ்சியத் தொகுப்பை நோக்காகக் கொண்ட Tamil Lexicon Committee இல் முன்னாள் தமிழக முதல்வர் ராஜாஜி எனப்படும் மேதை ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் ஒரு சாதாரண அங்கத்தவராக இருந்தார் என்பது சுவாமிகளின் ஈடு இணையற்ற மகிமையை நன்கே மேம்படுத்துகின்றது.

காரைப் பட்டினம் ஈன்ற "வெள்ளைநிற மல்லிகை" புகழ் யாழ்நூல் வள்ளல் இமயம் வரை நாடிச்சென்று கற்றோர் அவயத்தில் என்றுமே முந்தியிருந்தார் எனக்கேட்கும் எம் இரு காதுகள் என்னே பெரும் மாதவம் செய்தனை? இது இலங்கைத்தமிழன் ஒவ்வொருவனும் பெருமை கொள்ளும் செயல். அன்னார் பெயரில் இன்று கல்லடியில் விபுலாநந்த இசைக்கல்லூரி அமைந்தது போற்றுதற்குரியது. அதனிலும் பெரியது இன்று அடிகளாரது கலைமன்றம் கனடா வில் அடிகளாரின் 125 வது பிறந்த விழாவைக் கொண்டாடுவது.

நீவீர் நீடு வாழீர்! ஓங்கி வான் உயர்ந்த உத்தமர் விபுலாநந்தர் புகழ் இமயமும் ஓங்குக!
வித்தகன் அவர் சொற்பதம் தமிழ் பேசும் உலகெல்லாம் நற்பதமாய் மிளிர்க!

தமிழன் கண்ட ஓர் நவீன யாழ்ப்பாணன் விபுலாநந்தன்
அவர் அகழ்ந்ததை நாம் புதைத்தல் தகுமா?

பல்கலைக்கழகக்கால என்னினிய நண்பர், இன்னாள் பேராதனை பீடத்தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் வரைந்த "சிலப்பதிகார மீட்டெடுப்பும் பண்டைத் தமிழர் இசை மரபின் மீட்டுருவாக்கமும்" என்ற தேடல் தெகிட்டாத தேனாக இனித்தது, மேலும் சிந்தையில் ஓர் கருவானது.

யாழ் இசைத்து யாழ்ப்பாணம் பரிசு பெற்ற பாணரைத்தொடர்ந்து தமிழன் கண்ட நவீன யாழ்ப்பாணன் என்ற தகைமை அடிகளார் சுவாமி விபுலாநந்தர் அவர்களையே சாரும். வித்தகர் வியர்வை சிந்தி அகழ்ந்தெடுத்த அந்த தமிழிசை வாத்தியத்தை திருக்கொள்ளம் புத்தூர்த் திருக்கோவிலில், ஆளுடையபிள்ளையார் சன்னிதானத்தில் இன்னிசைத்த திரு சிவானந்தன் அவர்களையும் அந்த வரிசையில் சேர்த்துக்கொண்டால், யாழ்ப்பாணர் என்ற தகுதி இந்த மூவரை மட்டுமே சாரும் அன்றோ.

சுவாமி அவர்கள் எழுதியதை யாம் படித்தோம், அவர் பேசியதைக் கேட்டறிந்தோம், அவர் நாடகங்களையும் உருவாக்கங்களைப் ரசித்தோம். ஆனால் அவர் தன்னிரு செவிகளால் கேட்டதை, தமிழன் ஒவ்வொருவனும் கேட்க வேண்டும் என்று அவர் ஆவல் கொண்ட யாழிசையை யாம் யாருமே கேட்கவுமில்லை, விழையவு மில்லையே. அவர் இரசித்த மகத்துவத்தை யாம் இரசிக்கவில்லையே.

சுவாமி தனது பொறியியல் திறமை கொண்டு மீள்கட்டமைத்த அந்த யாழைப் பார்க்காத கண்கள், இருந்தும் குருடரே. ஆயிரம் இருந்தென்ன, ஒரு யாழ் நரம்பின் ஸ்பரிஸம் கூட எம் சுண்டு விரலுக்கும் கிட்டவில்லையே. "தமிழனின் சிறந்த இசைக்கருவி யாழ்" என்று அவர் உரத்து உரைத்தது எம்சிரசில் சற்றும் உறைக்கவில்லை. அவர் காட்டிய வழியில் யாமும் தொடர்ந்து அந்த யாழ்படைத்ததாக ஒரு சரித்திரமும் கிட்டவில்லை. யாழ்ப்பாணம் எவ்விடம் என்றால் விரைந்து பெருமை பாடும் தமிழன், யாழ்ப்பாணன் என்று ஒருகால்தனும் அழியாப்பெருமைகொள்ள யாழ் இசைக்கருவி மீண்டும் அகழ்ந்தெடுக்கப்படவேண்டும், மேடைகளில் இசைக்கப்பட வேண்டும். பண்ணிசையுடனும் கர்னாடக இசையுடனும் ஈடுசமனாக ஒலிக்கும்படி மறுகட்டமைக்கப்பட வேண்டும்.

சுவாமிகள் மீது சுடர் விடும் பக்தி கொண்ட பேராசிரியர் இளங்கோவன் அவர்களிடம் இது பற்றித் தொலை பேசியில் உரையாடியபோது போது, சுவாமி கட்டமைத்த மூன்று யாழிசைக்கருவிகளில் ஒன்று மட்டக்களப்பில் எண்பதுகளில் ஏற்பட்ட இனஇடம்பெயர்வுகளில் தொலைந்துவிட்டது. மற்றவை இரண்டும் தமிழ்நாட்டில் தவறிவிட்டன என்றார். எஞ்சியதாக அந்த இசைக்கருவிகளில் இருந்து விடுபட்ட ஒரு திருகும் அதன் திருகுதடையும் தன் கைவசம் தெய்வானுக்கிரமமாய்ச் சேர்ந்ததென்றார்.


யாழ் மீட்கவும், யாழ் மீட்டவும் விபுலானந்த கலைமன்றம் – கனடா முன் வந்தால் அதற்கு நிதி உதவி தர அடியேன் கணக்கியல் நிறுவனம் ஆர்வமுடன் முன்வரும் என்று யான் கூறக்கேட்ட வேளை, சற்றும் தயங்காது, மன்றம் பணித்தால், அந்த யாழை மீட்டுமீள்கட்டமைக்கும் இணப்பாளர் சேவைகளை தமிழ்நாட்டில் செய்யத் தான் தயாராக இருப்பதாகக் இளம் துடிப்புடன் கூறினார் இளங்கோவன். இனியென்னே? செயற்குழு, இதுபற்றி விரைந்து செயற்பட்டு, கோள் நிறைந்த தமிழனைக் கோலாகலமாக மகிழ்விக்கும் என்பதையிட்டு யாரெவர் ஐயம் கொள்வர்?

யாழிசை கேட்போம் தமிழரே வாரீர்! - அதைத்
தேனிசை என்றான் வித்தகன் விபுலன்
தமிழிசை மீட்டமொய் திரண் தோள் தமிழா - அது
பார்மிசை ஓங்கும் தினமொன்று காண்பாய்!

வாழிய செந்தமிழ்! வாழிய தமிழர்.!



මුල් දින කවරය
முதல் நாள் உறை
FIRST DAY COVER
1992இல் வெளியிடப்பட்டது



ස්වාමි විපුලානන්දර්
சுவாமி விபுலாநந்தர்
SWAMI VIPULANANDA



Swami Vipulananda Arts Society- Canada

சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம்-கனடா

NPO Registered No: 1575313

www.vipulam.ca

Swami Vipulananda Arts Society - Canada

President:
Mr.K. Erampamoorthy
Vice President :
Mr. K. Kumarakuru
General Secretary:
Mr.Nithi Sivanandarajah
Asst. Secretary:
Mr.Babu Vasanthakumar
Treasurer:
Mr. S. Uthayakumaran
Assistant Treasurer:
Mr. Thanga Kopalasingam
Board of Directors
Mr. G.Ajantha
Mr. M.Rajaratnam
Mr. N. Vijayaretnam
Mr. K. Karunailingam
Mr. V. Sivasegaram
Mr. T. Kamalachandran
Mr. Mano Seevaretnam
Mr. Visu Kanapathipillai
Mr. D. Kopalakrishnan
Auditor:
Mrs. Susila Rajaretnam
Patrons:
Dr. E.Balasundaram
Widwan K. Gnanaretnam
Mr. E. Thangarajah
Contact Info:
General Secretary,
605-45 Huntingdale Blvd,
Scarborough, Ontario,
M1W 2N8 Canada.
416 844 3304

2017/2018 COMMITTEE MEMBERS

President : K.Erambamoorthy
Vice President : K.Kumarakuru
Gen.Secretary : Nithi Sivanandarajah
Asst.Secretary : Babu Vasanthakumar
Treasurer : S.Uthayakumaran
Asst.Treasurer : Thanga Kopalasingam

Board of Directors :

G.Ajantha
M.Rajaratnam
N.Vijayaratnam
K.Karunailingam
V.Sivasegaram
T.Kamalachandran
Mano Seevaratnam
Visu Kanapathipillai
D.Kopalakrishnan

Auditor :
Susila Rajaratnam

Patrons :
Dr.E.Balasundaram
Widwan K.Gnanaretnam
E.Thangarajah

SWAMI VIPULANADA ARTS SOCIETY - CANADA
COMMITTEE MEMBERS - 2017/2018



Left to Right
Standing: K.Thangavadivel, D.Khobalakrishnan, V. Sivasegaram, N.Vijayaretnam, M. Rajaretnam, S.Murugamoorthy, K.Visuvalingam
Seated: S. Uthayakumaran, S. Nithiyanandarajah, E.Balasundaram, K. Erambamoorthy, K.Kumarakuru

SWAMI VIPULANADA ARTS SOCIETY - CANADA
SUBCOMMITTEE MEMBERS - 2017/2018



Left to Right

Standing: S.Sivamogan,Prisha D, Susila R., Komathy K., K.Thangavadivel, V.Sivasegaram, G.Thurairajasingam, D.Khobalakrishnan, , N.Vijayaretnam, M.Rajaretnam, S.Murugamoorthy, P.Dharsan, E.Kunamalar, B.Vimala, B.Nesathurai

Seated: K.Puvi, S.Uthayakumaran, S. Nithiyanandarajah, E.Balasundaram, K.Erampamoorthy, K.Kumarakuru, K.Visuvalingam, M.Nallaretnam

சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம் - கனடா
உப குழுக்கள்

1. போட்டிகள்

1. திரு.மா.நல்லரட்ணம்
2. திரு.கோ.துரைராஜசிங்கம்
3. திரு.க.குமரகுரு
4. திருமதி.குணமலர் ஏரம்பமூர்த்தி
5. திருமதி.சுசிலா ராசரெத்தினம்
6. திருமதி.கோமதி குமரகுரு
7. திரு.தங்கா கோபாலசிங்கம்
8. திரு. புவி கனகலிங்கம்
9. திருமதி. ராஜி சண்முகநாதன்
10. திருமதி. சிவனி வசந்தகுமார்

2. பாடல் போட்டிகள் /கலை நிகழ்ச்சி

1. திருமதி. சுதர்சனி கலிங்கரெட்ணம்
2. திருமதி. றஞ்சி கோபாலசிங்கம்
3. திருமதி. தயாநிதி கருணைலிங்கம்
4. திருமதி. உமா சசீந்திரன்
5. திரு. தங்கா கோபாலசிங்கம்
6. திரு.க.மதிபாஸ்கரன்
7. திரு.பாபு வசந்தகுமார்
8. திரு. கே. எஸ்.பவன்
9. திருமதி. லோகா ரவிச்சந்திரன்

3. நிதி சேகரிப்பு

1. Dr. இ. பாலசுந்தரம்
2. திரு. பாபு வசந்தகுமார்
3. திரு. மா.இராசரெத்தினம்
4. திரு. நோ. விஜயரெத்தினம்
5. திரு.அஜந்தா ஞானமுத்து
6. திரு.க.குமரகுரு
7. திரு.நேசதுரை
8. திரு பாலசுப்பிரமணியம்
9. திரு.வே.சிவசேகரம்

4. விழாமலர்

1. Dr. இ. பாலசுந்தரம்
2. திரு.க.குமரகுரு
3. திரு.பாபு வசந்தகுமார்
4. திரு.சாம் தில்லையா
5. திருமதி.விமலா பாலசுந்தரம்
6. திரு.மா.நல்லரட்ணம்

5. உணவு/பானம்

1. திரு.மனோ சீவரெத்தினம்
2. திரு. விசு.கணபதிப்பிள்ளை
3. திரு. கோபால் தாமோதரம்
4. திரு.வே.சிவசேகரம்
5. திரு.நோ.விஜயரெத்தினம்
6. திரு.த.கமலசந்திரன்
7. திரு.க.கருணைலிங்கம்
8. திரு.மா.இராசரெத்தினம்

6. ஊடகத்தொடர்பு/விளம்பரம்

1. திரு.பாபு வசந்தகுமார்
2. திரு.எஸ்.சிவமோகன்
3. திரு.சசி வீரசிங்கம்

சகல உபகுழுக்களிலும் தலைவர், செயலாளர், பொருளாளர் சேர்ந்திருப்பர்.

தலைவரிடமிருந்து....

"உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"



ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம், சிங்களம், அரபு, வங்காளம் ஆகிய மொழிகளில் புலமைமிக்கவர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர். ஆசிரியராக, அதிபராக, பேராசியராக, துறவியாக, கல்வி நிறுவினங்களின் முகாமையாளராக, கவிஞராக அவர் கால் பதித்த ஒவ்வொரு துறைகளிலும் தமது ஆற்றலை வெளிப்படுத்தியவர்.

தனது பன்முக ஆளுமையால் இலங்கை முதல் இமயம் வரை தொண்டாற்றி தமிழ் மொழியையும் தமிழர் பண்பாட்டையும் வளம்படுத்தியவர். தனது எழுத்தாலும், பேச்சாலும் அச்சம் அடைந்திருந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தட்டியெழுப்பி தமிழ் மக்களை உரமூட்டியவர்.

இலங்கையில் குறிப்பாக கிழக்குமாகாணத்தில் அடிகள் ஆற்றிய கல்விப்பணியால் கல்வியில் புத்தெழுச்சி ஏற்பட்டது. கிராமங்கள் தோறும் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளை அமைப்பதற்காக அரும்பாடுபட்டார். இன, மத, மொழி பேதங்களைக் கடந்து அவர் ஆற்றிய சேவையால் அனைத்து மக்களாலும் போற்றப்படும் அறிஞராக இன்றும் மெச்சப்படுகின்றார்.

விபுலாநந்த அடிகளின் 125ஆவது பிறந்த நாள் விழாவை, எமது சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் இவ்வாண்டு மிக விமரிசையாகக் கொண்டாடுகின்றது. இவ்விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் சிறப்பு மலர் வெளியிடப்படுகின்றது. இதில் கனடா, இலங்கை உட்பட பல இடங்களில் இருந்து பெறப்பட்ட சிறப்புக் கட்டுரைகள், கவிதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சுவாமி பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வோருக்கு இம்மலரில் உள்ள விடையங்கள் பலனுள்ளதாக அமையும் என்று நம்புகின்றேன்.

வழமைபோல இவ்வாண்டிலும் பேச்சு, பொதுஅறிவு, பாடல் போட்டிகளை நடாத்தி திறமையான மாணவர்களுக்குச் சான்றிதழும், கேடயமும், வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இப்போட்டிகளின் மூலம் கனடாவில் வளரும் எமது இளம் சந்ததியினர் எமது மொழியில் ஓரளவேனும் பயிற்சி பெறுவார்கள் என்பது எனது நம்பிக்கை. இதனை நான் கடந்த காலங்களில் கண்கூடாகக் கண்டவன் என்று கூறுவதில் பெருமையடைகின்றேன்.

சுவாமியின் 125வது ஜனன தினத்தை மிகவும் சிறப்பாக கொண்டாடுவதற்கு சுமார் ஆறு மாதங்களாக பல வழிகளிலும் அயராது உழைத்த சங்க உறுப்பினர்கள் அனைவரும் இதனை ஒரு பாக்கியமாக கருதி நிறைவேற்றியுள்ளது மிகவும் போற்றக்கூடிய விடயமாகும். அத்தோடு சுவாமி நினைவு விழாவிற்கு பல வழிகளிலும் உதவி செய்து கொண்டிருக்கும், விளம்பரதாரர்கள், தனவந்தர்கள், நிறுவனத்தோர் அனைவருக்கும் நன்றியுடன் கூடிய பாராட்டுக்களை மன்றம் தெரிவித்துக்கொள்வதோடு, இனிவரும் காலங்களிலும் அவர்களிள் ஒத்துழைப்பை எமது சங்கம் வேண்டி நிற்கின்றது. குறிப்பாக இவ்விழாவின் போது இராப்போசனத்தை ஒழுங்கு செய்த முனைக்காட்டைச் சேர்ந்த இறைபதம் அடைந்த சீனித்தம்பி சோமசுந்தரம் உடையார் குடும்பத்தினருக்கு எமது சங்கம் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றது.

இறுதியாக சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் - கனடா, வருடா வருடம் நடாத்தும் கலை விழாக்களிலும் போட்டி நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு எம்மையும், எமது சமூகத்தையும் பெருமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்ச் சமூகத்தினரை தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதோடு தமிழர்கள் ஆகிய நாம் அனைவரும் சேர்ந்து சுவாமி விட்டுச் சென்ற பணிகளைத் தொடர வேண்டும் என இறுதியாக கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி !

க. ஏரம்பமூர்த்தி

தலைவர் , சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் - கனடா

செயலாளரின் பேனாவிலிருந்து.....



தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்களின் முதற் தமிழ்ப் பேராசிரியர், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்த முதல் இலங்கையர், இராமகிருஷ்ண சங்கத்தின் முதல் இலங்கைத் துறவி, முத்தமிழ் வித்தகர் என்று தமிழ் கூறும் நல்லுலகம் உச்சிமேல் வைத்துப் போற்றும் பெருமைக்குரியவர் சுவாமி விபுலாநந்தர். தமது பன்மொழிப் புலமையாலும், பன்முக ஆளுமையாலும் தமிழ் மொழியையும், தமிழர் பண்பாட்டையும் வளம்படுத்திய பேரறிஞர், பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஆசி பெற்ற, அவரது நேரடிச் சீடரான சுவாமி சிவாநந்தரிடம் ஞான உபதேசம் பெற்று, கிழக்கிலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட பெருமகனார்.

மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் சுவாமி விபுலாநந்தரினால் தாபிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட ஓர் பாடசாலையாகும். அடிகளின் கால் பதிந்து ஆசிர்வதிக்கப்பட்ட அப்பாடசாலையில் கல்வி கற்றதை யான் ஓர் பாக்கியமாகக் கருதும் அதேவேளை, கனடா - சுவாமி விபுலாநந்தர் கலை மன்றத்தின் பொதுச்செயலாளராகக் கடந்த மூன்று ஆண்டுகளாகக் கடமையாற்றுவதையிட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

எமது மன்றம் சுவாமியின் 125 ஆவது பிறந்த தினத்தை இவ்வாண்டு வெகு சிறப்பாக கொண்டாடுகின்றது. கடந்த பதின்மூன்று ஆண்டுகளில் நடாத்தியது போன்று இவ்வாண்டும் ரொறன்ரோ பெரும்பாகத்தில் வாழும் தமிழ் மாணவர்கள் மத்தியில் பேச்சு, பாடல், சொல்வதெழுதுதல் போட்டிகளை நடாத்தி, மாணவர்களின் மொழித்திறனை வளர்ப்பதற்கு எமது மன்றம் பணியாற்றி வருகின்றது.

மேலும் சுவாமியின் பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு மலரொன்றினை வெளியிடுகின்றோம். இம்மலரில், கனடா, இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கவிஞர்கள் என பலதரப்பட்ட அறிஞர்களிடமிருந்து பெறப்பட்ட ஆக்கங்கள் வெளிவருகின்றன. இவையனைத்தும் சுவாமியின் பன்முக ஆளுமையை பல்வேறு கோணங்களில் சித்தரிக்கின்றன. இவ் ஆக்கங்கள் யாவும் தங்களுக்குப் பயன்தரும் என்பதுடன் எதிர்காலச் சந்ததியின் சுவாமி பற்றிய ஆய்வுக்கு பேருதவியாகவும் அமையும் என நம்புகின்றேன்.

கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக, பல்வேறு சிரமங்களுக்கும் சொந்த வேலைப்பளுக்களுக்கும் மத்தியில் நாம் செலுத்திய கடின உழைப்பின் பயனாக இன்றைய விழா சிறப்பாக நடைபெறுகின்றது. மேலும் வர்த்தக பெருமக்கள், நலன்விரும்பிகள், மன்ற உறுப்பினர்கள் வழங்கிய பண மற்றும் சரீர உதவியே இன்றைய விழா சிறப்பாக நடைபெற மூலகாரணம் என்பதை நன்றியோடு நினைவு கூர்ந்து, சுவாமி விபுலாநந்தரின் பிறந்தநாள் விழா சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி !

நித்தி சிவானந்தராஜா
பொதுச்செயலாளர்
சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் - கனடா
23 - 07 - 2017

மலரக்குழு சார்பாக சில வார்த்தைகள்.....

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் வாழ்ந்த முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தருக்கு இவ்வாண்டு அகவை நூற்றி இருபத்தைந்தாகும். தமிழ் மொழிக்கும், சமயத்துக்கும், தமிழர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றிய பேரறிஞர் சுவாமி அவர்களுக்கு, 125 ஆவது பிறந்ததின விழாவை நடத்தக் கிடைத்ததையிட்டு எமது மன்றம் பெருமை கொள்ளுகின்றது.

இயல், இசை, நாடகமென்பதே முத்தமிழ் ஆகும். இயற்றமிழ் எனும் போது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணங்களையும் உடையது. இவற்றுள் சுவாமி பெற்ற பரந்த புலமையை அவர் எழுதிய 127இற்கும் மேற்பட்ட கட்டுரைகள் சான்று பகர்கின்றன. அவரது யாப்பிலக்கிணத்திலுள்ள விற்பன்னத்தை அவர் இயற்றிய பாடல்களான "கங்கையில் விடுத்த ஓலை", மகாலிங்கசிவத்தின் மலர் நிகர் மாட்சி, குருதேவர் வணக்கம், ஈசனுவர்க்கும் இன்மலர் மூன்று போன்ற பல பாடல்கள் பறைசாற்றுகின்றன.

இசைத் தமிழானது சுருதி, சுரம், ராகம் ஆகிய மூன்று இலக்கணங்களையும் உடையது. அடிகளுக்கு இசைத் தமிழில் இருந்த ஞானத்தை யாழ் நூல் எடுத்தியம்புகிறது. நாடகத்தமிழானது தாளம், பாவம், அலங்காரம், நவரசம் ஆகிய நான்கு இலக்கணங்களையும் உடையது. "மதங்கசூளாமணி" யானது நாடகத்தமிழில் சுவாமியினது ஆங்கிலப் புலமையையும், நாடகத்தமிழில் அவரிடமிருந்த பரந்துபட்ட அறிவையும் வெளிக்காட்டுகின்றது. அங்கனம் முத்தமிழின் பன்னிரெண்டு இலக்கணத்திலும், விற்பன்னராகத் திகழ்ந்தமையால், "**முத்தமிழ் வித்தகர்**" என்று பெயர்பெற்றார்.

மேலும் இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள இரண்டு பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைக்கு பேராசிரியராக வருந்தி அழைக்கப்பட்டதைத் தொடர்ந்து பதிவியேற்று "முதற்தமிழ்ப் பேராசிரியர்" என்னும் பெருமை பெற்றார். மற்றும் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் மிக்கவராகக் காணப்பட்டதுடன், பரந்துபட்ட வாசிப்புக்களாலும், தனது பேச்சாலும், எழுத்தாலும் தமிழ்மொழிக்கு உரமூட்டினார், தமிழர்களை தம் மொழி, பண்பாடு மீது ஈடுபடத் தூண்டினார்.

தமிழகத் தமிழர்கள் மட்டுமன்றி, இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் வாழ்பவர்களும் எமது மொழியையும், பண்பாட்டையும் அறிவதற்கு வசதியாக மாயாவதி ஆச்சிரமத்தில் இருந்த வேளை இராமகிருஷ்ண மிசனின் ஆங்கில மாதப் பத்திரிகையான "பிரபுத்துவ பாரதத்தில்" பல கட்டுரைகளை எழுதி இலங்கை முதல் இமயம் வரை தமிழ் வளர்த்தவரென்று பெருமையோடு போற்றப்படுகிறார்.

இவ்வாறான பெருமைகளுக்குரிய சுவாமி அவர்களின் வரலாற்றை இந்நூற்றாண்டில் வாழ்வோரும் அறிவதற்கு வசதியாக "முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர்" எனும் சிறப்பு மலர் வெளிவருகின்றது. சுவாமியின் பன்முக ஆளுமையையும், பரந்துபட்ட பணிகளையும் எடுத்தியம்பும் படியாக கனடா, இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் வசிக்கும் அறிஞர்கள், கல்விமான்கள், பேராசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டுரைகள், கவிதைகள், இம்மலரை அலங்கரிக்கின்றன. தங்களது சுவாமி பற்றிய தேடலுக்கு அவை அமையுமென்று நம்புகின்றேன்.

மேலும் சுவாமி விபுலாநந்தர் கல்வி கற்று ஆசிரியராக, அதிபராக, முகாமையாளராக கடமையாற்றிய மட்/புனித மிக்கேல் கல்லூரி, மட்டுநகர் சிவானந்த வித்தியாலயம், திருகோணமலை இந்துக் கல்லூரி, யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி, கல்முனை காரைதீவு சாரதா வித்தியாலயம், மட்/இ.கி.மி விவேகானந்த மகளிர் மகா வித்தியாலம் ஆகிய பாடசாலைகளின் அதிபர்களின் வாழ்த்துச் செய்திகளும் இம்மலரை அலங்கரிக்கின்றன.


பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி அவர்களின் தலைமையில் அமைக்கப்பெற்ற எமது மலர்க்குழு வானது கிட்டத்தட்ட 75 இற்கும் மேற்பட்ட கல்விமான்கள், கவிஞர்களிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள் பெறுவதற்காக மின்னஞ்சல் அனுப்பியிருந்தது. மீண்டும் மீண்டும் பலமுறை தொடர்புகளை மேற்கொண்டு அவற்றைப் பெறுவதற்காக அயராது உழைத்த எமது மன்றத்தின் செயலாளர் நித்தி சிவானந்தராஜாவின் சிறப்பான பணி பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

மேலும் இம்மலர் உருவாவதற்கு இரவு பகலாக நாம் உழைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய திருமதி. அருணி நித்தியானந்தராஜா அவர்களுக்கும், திருமதி. கோமதி குமரகுரு அவர்களுக்கும், ஆக்கங்களைச் சரவை பார்த்து (ஒப்புநோக்கி) திருத்தங்கள் செய்ய உதவிய திருமதி. விமலா பாலசுந்தரம் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மற்றும் இம்மலரை வெளியிடுவதற்கு தேவையான நிதியுதவியைத் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும், தாமாக முன்வந்து விளம்பரங்களை பெற்றுத் தந்த திரு. கோணேஸ் இராசையா, சாயிபவித்திரன் இராஜ்குமார் ஆகிய இருவருக்கும், மலருக்குத் தேவையான ஆக்கங்களைத் தந்துதவிய அறிஞர்கள், கவிஞர்கள், வாழ்த்துச் செய்திகளை வழங்கிய அனைவருக்கும், மேலும் இம்மலருக்கான முன்னட்டையை வடிவமைத்துத் தந்த திரு. சுதாகர் நிர்மலலோகன் அவர்களுக்கும், இம்மலரை அழகுற அச்சிட்டுத்தந்த Fine Print நிறுவன உரிமையாளர்களான திரு. திருமதி. நிர்மலலோகன் அவர்களுக்கும் மலர்க்குழு சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

குமரகுரு கணபதிப்பிள்ளை
உபதலைவர்
மலர்க்குழு சார்பாக

23.07.2017
ரொறன்ரோ, கனடா





சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் – கனடா

முத்தமிழ் வித்தகர்

பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின்

125 ஆவது பிறந்தநாள் விழா

வருடாந்த பரிசளிப்பு – 2017

காலம் : ஜூலை 23, 2017

(ஞாயிற்றுக்கிழமை) பி.பகல் 5:00 மணி

இடம் : பெரிய சிவன் கோயில் மண்டபம்

(1148 Bellamy Road, Scarborough, On, M1H 1H2)

- கலைநிகழ்ச்சி
- பரிசளிப்பு
- விழா மலர் வெளியீடு
- கருத்தரங்கு
- சுவாமி விபுலாநந்தரின் ஆவணப்பட வெளியீடு
- சுவாமியின் “மதங்கசூளாமணி” நூல் வெளியீடு (மீள்பதிப்பு)
- புத்தக/புகைப்படக் கண்காட்சி

அனுமதி இலவசம்! இராப்போசனம் வழங்கப்படும்!

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம் – கனடா

தொடர்புகளுக்கு : மூர்த்தி:416-791-3396 | நித்தி-416 844 3304 | உதயன்-647 859 5779

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பகுதித் தலைவர்

உயர்திரு. விபுலாநந்தவடிகளுக்குச் சிதம்பரம் தாலுக்கா

திருவேட்களம் ஆதித்திராவிடர்களின் சார்பாக ஜில்லாபோர்டு மெம்மர்

திரு மிகு, அமிர்தாம்பாள் கூறிய

பிரிவுரை வாழ்த்து.

அருளுருத்தாங்கிய அடிகாள்!

உயர்குடிப்பிறந்தோமென் றிருமாப்புற்றுப் பிறரை ஏமாற்றி உண்டு களித்துவரும் ஒரு கூட்டத்தாரா லும், அவர்கள் வாலைப்பிடித்துக்கொண்டு ஏழைகளாகிய எங்களிடம் வீரத்தைக்காட்டும் பிறகுடிப்பிறப்பினாலும் நாங்கள் அடிக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, உடலிலுள்ள இரத்தமெல்லாம் மறைமுகமாக இழுக்கப்பட்டு, மனித உரிமையின்றி நாயினுங் கடையராய் வாழ்கின்றோம். இங்ஙனம் வாழும் எங்களை இவ்வேட்களத்தில் இதுகாறும் எத்தனையோபெரிய பதவிகளிலிருந்தவர்களும் எங்கள் உழைப்பின்பயனை உண்டு வளருகின்றவர் களுமாகப் பலரிருந்தும், அவர்களெல்லாம் சிறிதும் கண்ணெடுத்துப் பார்த்தார்களில்லை-

எந்துயர் தீர்க்க இங்கு வந்துற்றீரே!

இங்ஙனம் நாங்கள் ஒரு பற்றுக்கோடுமின்றி தன்படைத்த காலத்தில் வழுக்கலுடையுழி ஊன்று கோல் பெற்றுப் போன்று தாங்கள் எங்களுக்குதவியாகத் தோன்றிப் பண்டிதர்களும் பார்ப்பனர்களும் ஆங்கிலத்தில் அறைபோய அறிஞர்களும் உயர்ந்த பதவிகளிலுள்ளவர்களும் காட்டின் விடுதலைக்குச் செய்ய வேண்டிய வேலைகள் "இவை" என்று வழிகாட்டியாக நின்று அறிவித்த தங்களை என்றும் மறவோம். மேலும், தாங்கள் இங்கு வந்த இரண்டாண்டிற்குள் பல சேரிகட்கும் சென்று பள்ளிகள் எற்படுத்தியும், பணத்தினா லும், படிப்பினாலும், பட்டத்தினாலும், பிறப்பினாலும், செருக்குற்றுத் திரிகின்றவர்கட்கெல்லாம் "இவைகளி லொன்றுமில்லை ஏழைகட்கு வேலை செய்யுங்கள்" என்று கூறுவதுபோல ஏழைகளாய எங்கட்கு இரங்கி "நகம்மாது வேண்டகைப்பாகி மாரிமாட்டென்னுற்றுங் கொல்லோ உலகு" என்ற எங்கள் வள்ளுவர் வாய்மை யைப்போன்று மாரிபோல் வரையாது வழங்கிய தங்கள் வள்ளன்மைக்கு யாங்கள் செய்யும் கைம்மாறும் உளவாமோ?

அன்பின் கனியே!

தம் நலம் பேணும் பார்ப்பனர்களால் சண்டாளர்களென் றழைக்கப்படும் எங்களை அழைத்துத் தங்கள் வீட்டிலுடனிருத்தி விருந்துண்ட காட்சியும், உவகையும் எங்கள் கண்ணையும் மனதையும் விட்டு அகலுமோ! இங்ஙனம் காட்சியையும் உவகையையும் ஒருங்கின்ற உத்தமராகிய உம்மைப் பிரிய எங்கள் மனம் எங்ஙனம் ஒருப்படும்!

ஏழைகட் கிரங்கும் எந்தாய்!

எங்கள் முன்னேற்றத்திற்கென தங்களால் தொடங்கப்பட்ட இரவுப்பள்ளி என்றும் வளர்ந்தோங்கு தற்குரிய வழியொன்று தாங்கள் தேடுவதோடு, ஈழத்தீவில் தங்களால் நடத்தப்படும் பள்ளிகளில் எங்குல மாணவர்கள் பலரைச் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

பிறப்போக்கும் எவ்வுயிர்க்கும் என்றறிந்த பெரியீர்!

"பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சர்" பெயரால் நடைபெறும் பள்ளிகளுள் உள்ள வைதீகப் பார்ப்பனக் கொடுங்கரவுகளால் ஆதித்தமிழர்களாகிய பயிர்கள் வளர்வதற்கு ஏதுவின்றி மழையில்லாமல் வாடி வீட்டன. அங்ஙனம் வாட்டமுற்றிருப்பது மஹானின் திருஉள்ளத்திற்கு மாறுபடியால் தண்ணளி நிறைந்து நடுநின்றொழுகும் கொண்டலாகிய தாங்கள் பார்ப்பனச் சூழ்ச்சியாகிய சண்டமாருதக் காற்றிற்குக் கலையாது நின்று அருள்மழை பொழிந்து ஆதித்தமிழர்களாகிய பயிர்களைக்காப்பாற்றும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

உலக நலனே விரும்பித் தன்னல மறுத்த உத்தம!

தாங்கள் இதுகாறும் எங்களிடம் காட்டிய அன்பையும், செய்த உதவிகளையும், எழுமையும் உள்ளுவ தோடு, தாயைப்பிரியும் சேயைப்போன்று தங்களைப்பிரியுந்தன்பினைந்து அலறுகின்றோம். தமது பார்வையை ஏழையெம்பால் திருப்பி இரவு பகலாக இன்னருள் சுரந்துவந்த எமது அன்னையேபோலும் "சுவாமி கேதேஸ் வானந்தா" அவர்களை எங்கள் இறுதியினும் மறவோம்.

இருமொழிப் புலமையும் எளிமையாய்ப் பெற்றீரே!

தாங்கள் இறைவன் இன்னருளால் இம்மாநிலத்தில் செயற்கரும் செயல் பலபுரிந்து சீரொடு நின்று நிழிவாழ்க என்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,

தங்களிடம் உழுவலன்பு பூண்ட,

சிதம்பரம் தாலூகா திருவேட்களம் ஆதித்திராவிடர்களின் சார்பாக

திரு மிகு, அமிர்தாம்பாள்,

ஜில்லாபோர்டு மெம்பர்.

சுவாமி விபுலாநந்தரும் யாழ் இசைக்கருவிகளும்

தோற்றம் - பரவல் - உருமாற்றம் பற்றிய சுவாமி விபுலாநந்தரின் கருத்துக்கள் ஒரு நோக்கு



பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி
தலைவர், தமிழ்த் துறை, அண்ணாமலைக் கனடா வளாகம்
ரொறன்ரோ, கனடா

யாழ்: தோற்றம் – வளர்ச்சி:

பண்டைத் தமிழர் இசைக்கலையில் மிகவும் வளர்ச்சி பெற்றிருந்தனர். அக்காலத்திற் பல்வேறுபட்ட யாழ் இசைக்கருவிகள், மற்றும் பறை, துடி முதலான தோற்கருவிகள் முதலியவற்றில் வல்லுநர்களான இசைவாணர் களும் வாழ்ந்திருக்கின்றனர். பாணர், சமூக நிகழ்வுகளிலே யாழ் வாசித்து மக்களை மகிழ்வித்தனர். அவர்கள் எப்போதும் யாழ்க்கருவிகளைத் தம்மோடு வைத்திருந்தனர். அதனாலேயே தொல்காப்பியர் (பொருள். களவு. நூற்பா:16) பாணரை **யாழோர்** எனக் குறிப்பிடுகிறார். சுவாமி விபுலாநந்தர் பண்டைக் காலத்தில் வழங்கிய யாழ்களை **வில்யாழ், பேரியாழ், மகரயாழ், சீறியாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ்** என ஆறுவகையாக அடை யாளங்கண்டு யாழ் நூலில் அவைபற்றி விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார். நாரதயாழ், தும்புருயாழ் என்ற பெயர்களும் இலக்கிய உரைகளிற் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் வில்யாழ், சீறியாழ், பேரியாழ் என்ற மூவகை யாழ்க்கருவிகள் பற்றிய செய்திகள் மட்டுமே கிடைக்கின்றன. ஏனைய சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ் ஆகியன பற்றிச் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பெருங்கதை முதலான இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

ஆபிரகாம் பண்டிதர் என்ற இசைவாணர் 1917இல் **கருணாமிர்தசாகரம்** என்ற இசை நூலை வெளி யிட்டிருந்தார். அந்நூற்சாரமாக 'கர்நாடக இசையே தமிழிசைக்கு அடிப்படையானது' என்ற கருத்தை அவர் வெளிப்படுத்தியிருந்தார். அக்கருத்து அன்று மட்டுமல்ல இன்றுவரையும் உண்மைக்குப் புறம்பானதாகவே உள்ளது. அதே காலகட்டத்தில் தமிழிசை இயக்கம் தமிழகத்தில் வீறுகொண்டெழுந்தது. முத்தமிழ் முனிவரான சுவாமி விபுலாநந்தர் தமிழிசை வரலாற்றின் உண்மை நிலையை அறிய மேற்கொண்ட ஆய்வு முயற்சியின் பயனே யாழ் நூல் என்பதை முதலிற் கருத்திற் கொள்ளவேண்டும். தமிழர் பண்பாட்டுச் சிறப்பு அம்சங்கள் அனைத்தும் வடமொழியாக்கங்களைப் பின்பற்றியனவே என்ற கருத்துநிலையை முற்றிலும் மறுதலித்த சுவாமிகள், யாழ் நூலில் கருணாமிர்தசாகரம் பற்றிக் குறிப்பிடாது விட்டமை புரிதலுக்குரியதாகும். சுவாமிகள் எழுதிய "தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப் பெருக்கு வடநாட்டிற் பரவிய வரன்முறை" என்ற கட்டுரையும் இவ்விடத்திற் சிந்தனைக்குரியதாகிறது.

சுவாமி விபுலாநந்தர் சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, நிகண்டுகள், மற்றும் குடுமியா மலை இசைக் கல்வெட்டு முதலான சான்றுகளைத் துணைகொண்டு யாழ் வகைகள், யாழ் உறுப்புகள், யாழின் சுரநிலைகள், ஏழ்பெரும்பாலைத்திரிபு, 103 பண்கள், தேவாரப் பண்கள், இசைக்கணிதம், இசை இயற்பியல், யாழின் சமூகப்பயன்பாடு என்பன பற்றி யாழ் நூலிலே விளக்கியுள்ளார். இசையறிஞரிடையே சுருதிகளின் எண்ணிக்கையில் இருந்துவந்த ஐயத்தை சுவாமி விபுலாநந்தர் தனது கணிதவியல் புலமையினாற் சுருதிகள் 22 என்பதை நிரூபித்து போக்கியமையும் குறிப்பிடத்தக்கதாகும் (சுவாமி விபுலாநந்தர்:2003). கி.பி. 7ஆம் நூற்றாண்டிற் பொறிக்கப்பட்ட குடுமியாமலை இசைக் கல்வெட்டுப் பற்றி ஆராய்ந்த சுவாமிகள் அதுபற்றிய தீர்க்கமான முடிபுக்கு வந்து, இக்கல்வெட்டு தமிழிசை பற்றியே குறிப்பிடுகிறது என முதன்முதலில் கருத்துத் தெரிவித்தவராவார். தமிழிசைப் பண்கள் வேற்றுமொழியாளரால் இராகங்களாக மொழிமாற்றம் செய்யப்பட்டமை பற்றிக் கூறி அவற்றின் தமிழ்ப் பெயர்களையும் அடையாளம் காட்டியவர் சுவாமிகள் ஆவார். உதாரணமாக சீகாமப்பண் → நாதநாமக் கிரியை ராகம், சதாரிப்பண் → பந்துவராளி ராகம், பஞ்சமப்பண் → ஆஹிரி, பழம்பஞ்சுரப்பண் →சங்காராபரண ராகம் எனப் பெயர் மாற்றம் பெற்றமைக்கு இவை சில சான்றுகளாகும்.

கி.மு. 5,000 ஆண்டுகாலப் பழைமையுடைய சிந்துவெளி நாகரிகத்தளத்தில் கிடைத்த புதைபொருட் சின்னங்களில் யாழ் உருவம் பொறிக்கப்பட்டிருந்தமை அறியப்படுகிறது. மேலும் 3500 ஆண்டுகளுக்கு முந்திய எகிப்திய நாகரிகத்திலும் யாழ்க்கருவிகள் வழங்கியிருக்கின்றன (து.ஆ.தனபாண்டியன், பக். 170). பண்டைத்தமிழ் மக்களின் வாழ்வில் யாழின் பயன்பாடு பல்வேறு நிலைகளிலே பெரிதும் இடம்பெற்றதோடு, யாழ் புனிதமான பொருளாகவும், யாழுக்குரிய தெய்வமாக மாதங்கியைத் துதித்ததாகவும் அறியப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் மாதவி தனது யாழை மிகப் பயபக்தியுடன் பயன்படுத்தியமையை, "இத்திறத்துக் குற்றம் நீங்கிய யாழ் கையில் தொழுது வாங்கி" (சிலம்பு 1-4) என வரும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

யாழ் என்ற தூய தமிழ்ச் சொல், கட்டப்பட்டது என்ற பொருள் கொண்டது. உலகிலேயே தொன்மையான நரம்புக்கருவி யாழ் எனக் கருதப்படுகிறது. சிந்துவெளி, மெசப்பத்தேமியா, எகிப்து, கிரேக்கம் முதலான இடங்களில் கிடைத்த தொல்பொருட் சான்றுகளிலும் யாழிசைக் கருவியின் பழைமை நிரூபிக்கப்பட்டுள்ளது. யாழ் வகைகளிற் பேரியாழ் என்பது மிகவும் நுட்பம் வாய்ந்ததாகும். 'சிலப்பதிகார காலத்துக் கல்லோவியம் ஒன்று எழில் மிக்க நரம்புகளுள்ள யாழின் உருவத்தைக் கொண்டுள்ளது. இவ்வோவியத்தின் நிழற்படத்தைத் துணைக்கொண்டு பேரறிஞர் ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் பழைமையான இக்கருவி சிலப்பதிகார காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் தமிழ் நாட்டில் வழங்கி வந்தது என்பதையும், மிகப் பழைமையான இசைமரபொன்று தமிழகத்திலேயி ருந்து இறந்ததென்பதையும் உலகிலுள்ள பேரறிஞர்க்கு வெளியிட்டார் எனச் சுவாமி விபுலாநந்தர் குறிப்பிடுவர் (2003:.37).

ஆழிப்பேரலைகளாலும், கால ஓட்டத்தாலும் முதற் சங்க காலத்து அகத்தியம், முதுநாரை, முதுகுருகு, இசை நுணுக்கம், இந்திரகாளியம், என்னும் இசை நூல்களும், பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம் முதலிய இசை இலக்கண நூல்களும் அழிந்துபோனமை பற்றி முனைவர் தட்சிணாமூர்த்தி (2011: 268) குறிப்பிடுவர். தொல்காப்பியர் காலத்தில் யாழின் பயன்பாடு பெரிதாக இருந்தமையாலேயே அவர் இசை நுணுக்கம் பற்றி எழுத லானார். யாழ் வாசிக்கும்போது சில எழுத்துக்கள் தம் அளவினின்று நீண்டொலித்தல், மெய்யெழுத்துக்கள் தமக்குரிய ஒலியளவைவிட மேலும் நீண்டொலித்தல் என்பன பற்றித் தனக்கு முற்பட்ட இசைநூலார் குறிப்பிட்டுள்ளமையைத் தொல்காப்பியர் நூல் மரபியலில் (நூற்பா:33) பதிவுசெய்துள்ளமை அவரது காலத்தில் யாழிசை இலக்கணம் வளர்ச்சி பெற்றிருந்தமையைப் புலப்படுத்துகிறது.

பண்டைத் தமிழ் இசை மரபுகள் பற்றி ஆராய்ந்த சுவாமி விபுலாநந்தர் அக்காலத்தில் வழங்கிய பல்வேறுபட்ட யாழ் இசைக்கருவிகள் பற்றி நுட்பமாக ஆராய்ந்ததன் பயனே யாழ் நூல் ஆகும். பண்டைத் தமிழரிடையே வழங்கிய யாழ்க் கருவிகளை அடையாளம் கண்டு, அவற்றுக்கு உருவமும் வரைந்து காட்டியதோடு, அவற்றைத் தாமாகவே முன்னின்று உருவாக்கினார். தான் அரிதின் முயன்று உருவமைத்த யாழ் இசைக்கருவி-களை திருக்கொள்ளம்பூதூரில் இடம்பெற்ற 'யாழ் நூல்' அரங்கேற்றத்தின்போது (05.06.1947) மக்களின் பார்வைக்கும் வைத்தார். சுவாமிகள் பண்டைத் தமிழரது இசைக்கலையின் உயர்நிலை வளர்ச்சியையும், அக்காலத்து யாழ் வகைகளையும், அவற்றின் பயன்பாடுகள் பற்றியும் விரிவாக ஆராய்ந்தார். அத்துடன் தமிழ் இசைமரபிற் பல்லவர் காலப் பக்தி இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ள நட்டபாடை, வியாழக்குறிஞ்சி, இந்தளம், சதாரி முதலிய பண்டைத் தமிழரின் பண்கள் பற்றிய நுணுக்கமான ஆய்வு விளக்கங்களும் யாழ் நூலிலே தரப்பட்டுள்ளன.

யாழின் உறுப்புக்களாக பத்தர் (அகளம்), தோற்போர்வை, ஆணி, வறுவாய், மருப்பு, திவவு, நரம்பு, கவைக்கடை, யாப்பு, உந்தி முதலானவை அமைந்திருந்தமை பற்றிய விளக்கங்களைப் பொருநராற்றுப்படை (வரி:4-22), சிறுபாணாற்றுப்படை (வரி: 221-229), பெரும்பாணாற்றுப்படை (வரி:4-16), மலைபடுகடாம் (வரி:21-37) என்பன விளக்கமாகக் குறிப்பிடுகின்றன. பேரியாழின் உருவ வருணனை பற்றி 'மலைபடுகடாம்' விரிவாகக் கூறுகிறது. சுவாமி விபுலாநந்தர் பேரியாழ் பற்றி யாழ் நூலிலே (பக்.79), "பேரியாழ்க் கருவியிலே, மெலிவு, சமன், வலிவு என்னும் மூன்று தானத்திலுள்ள இருபத்தொரு நரம்புகள் அமைந்திருந்தன" எனக் குறிப்பிடுகிறார். மேலும், "பத்தர் நாலு சாணும், கோடு நாலு சாணும், அதற்கேற்ப நரம்புகளும் பெற்று, உருவமைந்த ஆயிரம் நரம்பு யாழ் சாயல் அமைப்பொன்றினை ஆக்குவித்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு நல்கியுள்ளோம்" எனச் சுவாமி விபுலாநந்தர் (மேலது பக். 335) குறிப்பிட்டிருத்தலும் கருத்திற் கொள்ளத்தக்கது.

ஐவகை நிலங்களுக்கும் தனித்தனியாக யாழ்வகைகளும் பண்வகைகளும் வழங்கின. அவ்வகையில் குறிஞ்சியாழ் - குறிஞ்சிப்பண், முல்லையாழ் - முல்லைப்பண், மருதயாழ் - மருதப்பண், நெய்தல்யாழ் - நெய்தல்பண், பாலையாழ் - பாலைப்பண் என்பன பெருவழக்காக இருந்தன (யாழ்நூல்:375). பண்டைத் தமிழரின் இசைக்கருவிகளில் யாழ் தலையாய கருவியாகவும், யாழ் ஓசை மிகவும் ஆற்றல் வாய்ந்ததாகவும் கருதப்பட்டன. யாழ் இசைகேட்டு மதங்கொண்ட யானை அடங்கி நின்றது என உதயணன் சரித்திரம், சீவகசிந்தாமணி முதலியன குறிப்பிடுகின்றன. தொன்மைத் தமிழரின் வாழ்வியலுடன் இணைந்த யாழ் இசைக்கருவிகள் பண்பாட்டு வளர்ச்சிக்கேற்ப மாற்றம் பெறுதல் இயல்பே. ஆதி மனிதன் வில்லும் அம்பும் கொண்டு வேட்டையாடித் திரிந்த காலத்தில் வில்யாழ் தோற்றம் பெற்று, அதன் பரிணாம வளர்ச்சியாக ஏனைய யாழ் வகைகள் தோன்றின. ஆதி யாழாகிய **வில்யாழ்** பண்பாட்டு வளர்ச்சியின் பயனாக சகோடயாழ், செங்கோட்டியாழ், மகரயாழ் என வளர்ந்து, (ஆயிரம் நரம்புகள் கொண்ட) **பேரியாழ்** என வளர்ச்சி அடைந்துள்ளது. செங்கோட்டியாழ் ஏழு நரம்புகளைக் கொண்டது. அது சீறியாழ் எனவும் பெயர் பெற்றது. பேரியாழின் உறுப்புக்களாகப் பத்தர், வறுவாய், பச்சை, போர்வை, ஆணி, திவவு, மருப்பு, யாப்பு, உந்தி, பண்நரம்பு, கவைக்கடை, கண்கூடு முதலானவை அமைந் திருந்தன எனவும், யாழ் வகைகளிற் **பேரியாழ்** என்பது மிகவும் நுட்பம் வாய்ந்தது எனவும் சுவாமிகள் குறிப்பிடுவர்.

சங்ககால மக்களது வாழ்க்கையில் இடம்பெற்ற பல்வேறு சமூக - சமயச் சடங்குகளிலே ஆடலும் பாடலும், இசைக்கருவிகளின் கூட்டொலியும் சேர்ந்திருந்தன. அவர்களின் வாழ்வில் இடம்பெற்ற 'வெறியாட்டுச்' சடங்கு நடனத்தில் காதல் மயக்கம் கொண்ட மகளிர் அங்கு பாடப்பட்ட இசைக்கமைய நடனத்திற் சேர்ந்து ஆடினர். அப்போது குழல் இசைக்கப்பட்டது; **யாழ்க்கருவிகள்** முரன்றன; முழவுகள் அதிர்ந்தன; முரசுகள் இயம்பின என அந்நடனக் காட்சி ஒன்றைப் பட்டினப்பாலை விரிவாகக் கூறுகிறது. (இ. பாலசுந்தரம்.1992).

சங்ககால மக்கள் தாம் வாழ்ந்த நிலங்களில் மேற்கொண்ட தொழில்களுக்கு ஏற்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்தியதோடு, தத்தம் நிலத்திற்குரிய பண்களை இசைத்துத் தம் கடமைகளை மேற்கொண்டுள்ளனர். இசைப்பாணர் மாலைக் காலத்தில் செவ்வழிப் பண்ணைச் **சீறியாழில்** வாசித்தனர் என்பதை "அருளா யாகலோ கொடிதே இருள்வரச் **சீறியாழ்** செவ்வழி பண்ணி யாழநின் ...." எனப் புறநாநூறு சான்றுபடுத்துகின்றது. குறிஞ்சி நில மக்கள் **வில்யாழில்** குறிஞ்சிப் பண்ணைப் பாடி மகிழ்ந்தமையைப் பெரும்பாணாற்றுப்படை (வரி: 182) சித்திரிக்கின்றது. பொருள் தேடச் சென்றோர் அரிதின் முயன்று திரட்டிய செல்வத்துடன் பாலையூடாகத் திரும்பி வரும்போது, வழிப்பறி செய்யும் எயினர் குழுவினரைக் கண்டதும், அவர்கள் விரும்பும் பாலைப் பண்ணில் அமைந்த பாடலை யாழ் மீட்டிப் பாடுவர். அப்பாடலைக் கேட்ட எயினர், வழிப்பறியையும், கொலைநோக்கையும் கைவிட்டு, மெய்மறந்து இசைகேட்டு நின்றனராம் (பொருந. வரி: 19-22). போர்க்களத்திலே விழுப்புண்பட்ட தன் கணவனின் வேதனையைப் போக்க அவன் **மனைவி யாழில் காஞ்சிப் பண்ணைத்** தோழியருடன் சேர்ந்து இசைத்துள்ளாள் (புறநாநூறு: 281).

பண்டைக் காலத்தில் இசைக்கலையை வளர்த்து வந்த பாணர், பாடினியர், பொருநர், வயிரியர், கூத்தர், கோடியர் என்போரில் யாழ்ப்பாணர் என்ற குடியினரும் இடம்பெற்றிருந்தனர். பாணர் பயன்படுத்திய யாழ் வகைகளின் அடிப்படையில் அவர்கள் சிறுபாணர், பெரும்பாணர் என்றும் வழங்கலாயினர். தமிழ் நாட்டிற் கி.பி. 300 - கி.பி. 600 க்கும் இடைப்பட்ட காலத்திற் பௌத்த மதம் தமிழ் மக்களிடையே பரவியிருந்தது. அக்காலப்பகுதியில் அவர்கள் பொதுமக்கள் வழங்கிய யாழ்க்கருவிகளைத் தமது திருவிழாக் கொண்டாட்டங்களில் சேர்த்துக் கொண்டனர். ஆறாம் நூற்றாண்டிற் புத்தசமயம் தமிழகத்தில் ஒளி குன்றியதோடு, பழைய யாழும் மறைந்து போயிற்று என்கிறார் சுவாமி விபுலாநந்தர் (2003:37).

பல்லவர் காலத்திலே திருஞானசம்பந்தர் பக்திப்பாசுரம் பாடும்போது, திருநீலகண்டயாழ்ப்பாணர் அப்பாடலை யாழில் வாசித்து மெருகூட்டினார் எனப் பெரியபுராணம் கூறும் செய்தி மிக முக்கியமானதாகும். **சோழர் காலம்** வரை தமிழ் நாட்டில் யாழ் இசைக்கருவிகள் வழக்கில் இருந்தமைக்கு இலக்கியச் சான்றுகளுள. யாழ்களின் வரலாறு பற்றிச் சுவாமி விபுலாநந்தர் குறிப்பிடும்போது, ***'முன்னாளிலே பாணன் கையிலும் பாடினி கையிலுமிருந்த யாழ்க் கருவி யானது இளங்கோவடிகள் காலத்தில் இசையாசிரியன் கையிலும், நாடக மகளிர் கையிலும் போய்ச் சேர்ந்துவிட்டது. பின்னர் திருஞானசம்பந்தர் வாழ்ந்த தேவார காலத்திலே தெய்வம் ஈந்த பொற்பலகை மீதேறி அன்பர் உள்ளத்தை உருக்கிய அருட்கவி ஆயிற்று. கொங்குவேளும், திருத்தக்கதேவரும் நூலெழுதிய காலத்திலே அரசிளங்குமரிகள் கையிலேறி, அவர் மனம் விரும்பிய காதலரை அவருக்கு அளிக்குங் கருவியாயிற்று'*** என்பர். மேலும் யாழின் தோற்ற வளர்ச்சியைப் பெண்ணாக உருவகித்து, சரித்திர கால எல்லைக்கெட்டாத காலத்திலே **குழவி**யாக வில்யாழ் உதித்து, அதன் வளர்ச்சியாக 'சீறியாழ்' தோன்றி, பின்னர் "பேரியாழ்' வளர்ச்சியடைவதாயிற்று என்றும் சுவாமிகள் குறிப்பிடுகின்றார். சோழர் காலத்திலும் அரசர்களாலும் புலவர்களாலும் கொடைவள்ளல்களாலும் யாழ்க்கருவிகள் சீரும் சிறப்புடனும் பேணிக்காக்கப்பட்டு வரலாயின. அதன் பின்னர் பழைமை பொருந்திய யாழ் இசைக்கருவிகள் மறைந்ததோடு, அவற்றின்வழி பாடப்பட்டு வந்த பண் மரபுகளும் மறந்து போயின என யாழ் நூல் (பக்.37) கூறும் செய்திகளும் நோக்கத்தக்கவை.

யாழ் பரவல்:

பண்டைத் தமிழர் வாழ்க்கையிற் பொதுமக்கள் பாவனையில் அவர்களுக்கு இசை மகிழ்வூட்டிய இசைக்கருவி காலப்போக்கில் மேல்நிலை மக்களிடம் போய்ச் சேர்ந்தன. இத்தகைய யாழ்க் கருவிகள் மெசப்பத்தேமியா, பாபிலோனியா நாகரிகங்களிலும் வழங்கலாயின. அவற்றுக்குத் தமிழர் பண்பாட்டின் பங்களிப்பும் இருந்தது என்பதும் ஆய்வாளரின் கருத்தாகும். இது தொடர்பாக யாழ் நூலாசிரியர் வருமாறு கூறுவர்:

"பண்டைநாளிலே சீரும் சிறப்பும் எய்தியிருந்த மிசிரம் என்னும் எகிப்து (Egypt) நாட்டிலும், பாரசீகக் கடற்கரையிலிருந்து அழிந்துபோன சுமேரு (Sumeria) நாட்டிலும், சோழர் குடியேறினமையாலே சோழதேயம் என்னும் பெயரினை எய்திப் பிற்காலத்திலே மொழிச் சிதைவினாலே சால்தெயா (Chaldea) என வழங்கப்பட்ட தொல்பதியிலும், சேரர் குலத்தார் கலத்திற் சென்று வெற்றி பெற்றுத் தம்மாணை செலுத்திய கிரேத்த (Crete) தீவிலும், அதற்கணித்தாகிய (Greece) யவனபுரத்திலும், உரோமர் வருவதற்கு முன் பழைய இத்தாலி (Italy) தேசத்திலும், ஐபீரியா எனப்பட்ட பழைய ஸ்பெயின் (Spain) தேசத்திலும், பிறவிடங்களிலும், தமிழ்க் குலத்தார் வாழ்ந்து நாகரீகம் பரப்பினார்களென மேற்றிசை அறிஞர் ஆராய்ச்சியாற் கண்டு வெளியிட்டிருக்கின்றனர். **இந்நாடுகளிலெல்லாம் யாழ்க் கருவியும் போற்றப்பட்டது.** சிந்துநதி தீரத்திலே, மீனாடு முன்னாளிலே பாண்டிய மன்னரது பெயரொடு ஆளுகையிலே மீனாடு என்னும் பெயரோடு திகழ்ந்ததும், பின்னாளிலே 'இறந்தோர் மேடு' என்னும் கருத்துடைய பெயரெய்தியதுமாகிய பழைய நாட்டிலே 'முகிஞ்சதரை" (Mohen - jo – daro) எனப் பெயரெய்தியதுமாகிய பழைய நாட்டிலே **மிதுனராசியானது யாழ்** என்னும் பெயரினால் வழங்கப்பட்டதென அறிஞர் கூறுவர்" (யாழ்நூல் - பக்.26)

யாழ் → வீணை ←← உரு மாற்றம்:

வீணைக் கருவியின் வரலாறு பற்றி இசைவல்லோர் பல்வேறு கருத்துக்களை முன்வைப்பர். மணி மேகலை, சீவகசிந்தாமணி, திருவிளையாடற்புராணம் இவற்றில் யாழும் வீணையும் ஒன்றென மாறி மாறி கருத்துரைக்கும் பகுதிகள் வருகின்றன. ஆனால் யாழும் வீணையும் வேறுபட்டவை என்பதில் சுவாமி விபுலாநந்தர் தெளிவான கருத்துடையவர் (இ. பாலசுந்தரம்:2004:60). ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக The Legacy of India என்ற நூலின் 329ஆம் பக்கத்திலே யாழ்க் கருவிக்கும் வீணைக்கும் இடையிலான வேறுபாடுகள் தரப்பட்டுள்ளதைச் சுவாமிகள் தனது கருத்துக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளார். பல்லவர் காலத்தில் யாழும் வீணையும் தனித் தனி இசைக்கருவிகளாக வழங்கியமைக்கு "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்.." என வரும் திருவாசகம் சான்றாகின்றது. நரம்புக் கருவிகள் பற்றி ஆராய்ந்த முனைவர் செ. சுப்புலெட்சுமி மோகன் (2012) 'செங்கோட்டு யாழினை அடியொற்றி அமைக்கப்பட்ட ஒரு நரம்புக் கருவியே வீணை என்றும், யாழ் என்ற கருவியே வீணை என்று பெயர் மாற்றம் பெற்று அழைக்கப்பட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது எனவும் கூறுகிறார். "தமிழரின் தன்னிகரில்லாத இசைக்கருவியான யாழின் உறுப்புகளை எல்லாம் உள்ளடக்கி, அயல்புலத்திலிருந்து வந்தோர் வீணை என்கின்ற பெயரில் வீணையை உருவாக்கினர் எனவும், யாழின் வளர்ச்சியில் அடுத்த மைல்கல்லே வீணை எனவும் முனைவர் இராச கலைவாணி கூறுவர் (2014:169). தமிழர் பண்பாட்டிற் சோழர் காலம்வரை தனிச்சிறப்பு வாய்ந்த ஓர் இசைக்கருவியாக யாழ் வழக்கிலிருந்த வரலாறு பற்றிச் சுவாமி விபுலாநந்தர் குறிப்பிடுவது ஏற்புடையதாகும்.

துணை நூல்கள்:

1. இராச கலைவாணி, தொல்காப்பியத்தில் இசை: தொன்மையும் தொடர்ச்சியும், ஏழிசைப் பதிப்பகம், மயிலாடுதுறை, 2014
2. சுவாமி விபுலாநந்தர், யாழ் நூல் என்னும் இசைத்தமிழ் நூல், மூன்றாம் பதிப்பு, யாதுமாகி பதிப்பகம், திருநெல்வேலி, 2003
3. து. ஆ. தனபாண்டியன், இசைத்தமிழ் வரலாறு, தொகுதி 1, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர், 1994
4. அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை, 2011
5. தொல்காப்பியம் - பொருளதிகாரம் நச்சினார்க்கினியருரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 2007
6. இ. பாலசுந்தரம், "விபுலாநந்த அடிகளாரின் யாழ் நூலும் இசைத்தமிழ் ஆராய்ச்சியும்", தமிழறிஞர் விபுலாநந்தர் வாழ்வும் பணிகளும், நூற்றாண்டு நினைவுக் கட்டுரைத் தொகுப்பு, இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு (1992),
7. இ. பாலசுந்தரம், விபுலாநந்தம் - தமிழின மேம்பாடு நோக்கிய சிந்தனைகள், இராவ் பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளை ஒன்றிய வெளியீடு, கனடா, 2004.
8. Swami Vipulanada, 'The Harp with a Thousand Srings', Ceylon University Review, 1947, pp.21-38

பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின் கிறிஸ்தவத் தொடர்பு



வித்துவான் க.ஞானரெத்தினம்
ரொறன்ரோ, கனடா

சுவாமி விபுலாநந்தரின் பிறப்பு, வாழ்க்கை, சமயவளர்ச்சி, கோட்பாடு, மக்கள் தொடர்பு, சமயநம்பிக்கை என்ற இன்னோரன்ன தொடர்புகளை உற்றுநோக்கின் இத்தலைப்பின் பொருள் சுவாமியின் வாழக்கை வரலாற்றுடன் எத்தகைய தொடர்பு கொண்டது என்பதனை ஊன்றி நோக்க வேண்டும்.

விபுலாநந்த அடிகளின் பிறப்பிடம் கிழக்குமாகாணத்தின் தென்பகுதியிலுள்ள காரைதீவு என்னும் தனித் தமிழ்க் கிராமமாகும். இக்கிராமத்து மக்களாற் கடைப்பிடிக்கப்பட்டு வந்த மதம் இந்துமதமாகும். விபுலாநந்த அடிகளும் இம்மதத்தையே கடைப்பிடித்து வந்தார். இந்தியாவுக்குச் சென்று பல இந்துமதத் துறவிகளிடம் ஆசிபெற்று ஒரு இந்துமதவாதியாகவே வாழ்ந்தார். இந்துமதத் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் ஏற்று வாழ்ந்தார். அத்துடன் கிறிஸ்தவமதக் கோட்பாடுகளையும் ஏற்றுக்கொண்டும் அதனை உதறித்தள்ளாமலும் தனது வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார்.

அடிகள் கல்விபயிலும் மாணவர் பற்றியும் தனது சிந்தனையை ஓடவிட்டார். இதன்முடிவில் ஆரம்பக்கல்வி மிக முக்கியமானது என்றும், பாடசாலைகள்தான் உண்மையான பயிற்சி நிலையங்கள் என்றும், பிள்ளைகள் நன்கு வளராத சிறுவர்களாக இருக்கும் போதே சிறுவர்களுக்கான பயிற்சிகளை பாடசாலை நிலையில் ஆரம்பிக்கப் படவேண்டும் என்றும் சுவாமி அவர்கள் கூறினார்கள். இந்த தத்துவத்தை அடிப்படையாக வைத்தே 1914ம் வருடம் புனித மைக்கல் கல்லூரி மட்டக்களப்பில் சிறுவர்பகுதி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது என்று Our infant Department என்ற தலைப்பில் வரைந்த கட்டுரையில் அடிகளார் குறிப்பிடுகின்றார்கள். இத்தகைய நோக்கமொன்று அடிகளாரின் சிந்தனைகளிலிருந்து எழுந்த ஒன்றாகும். சிறுவர்களின் நல்லொழுக்கம், கல்வி என்பன மறைக்கல்வி ஆகும். இக்கல்வி மிகச் சிறுவயதிலேயே ஆரம்பிக்கப்படவேண்டும். பிள்ளைகளின் ஆரம்பக்கல்வியிலேயே மறைக்கல்வி அறிவு தீயவாழ்க்கையை அகற்றுவதற்கு ஒருசிறந்த மருந்தாக அமைகின்றது என்று அடிகளார் வற்புறுத்துகின்றார்கள். சிறுவர்களின் மறைக்கல்வி பற்றி கிறிஸ்தவர்களும் வலியுறுத்தியுள்ளார்கள்.

இனி விபுலாநந்தரின் கிறிஸ்தவ தொடர்பினை நோக்குவோம். வணக்கத்திற்குரிய ஆர்.எஸ். லோப்பு அடிகள் எழுதிய உண்மையைக் காண்போம். சுவாமி விபுலாநந்த அடிகள் ஆழ்ந்த சைவ சமயப்பற்றுள்ள குடும்பத்தில் பிறந்தவர். ஆயினும் அவருடைய வாழ்க்கையில் கிறிஸ்தவ விழுமியங்கள் பலவற்றை பின்பற்றிய தோடு மற்றவர்களுக்கும் அவற்றை எடுத்துக் கூறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே விபுலாநந்த அடிகளும் இதன்மூலம் பக்திமார்க்கத்திலே தலைசிறந்து விளங்குகின்றார். இயேசுசபைத் துறவிகளிடம் கிறிஸ்தவப் பண்புகள் காணக்கிடந்தன. இந்த துறவிகள் அடிக்கடி ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடுவதை அறிந்திருந்த விபுலாநந்த அடிகளார் தாமும் சிறுவயதிலிருந்தே ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டார். இவற்றிற்கெல்லாம் சிகரம் போல் தந்தை போணல் அடிகளார் அவர்களுடனான தொடர்பு பிற்காலத்தில் அடிகளாரைத் துறவி ஆக்கியது.

அடிகளார் கல்வித்துறையிலும் சிறப்புற்று விளங்குவதற்கு களம் அமைத்துக்கொடுத்த பெருமை புனித மைக்கல் கல்லூரிக்கே உரித்தானது. அடிகளாரின் கல்விச்சிந்தனைகளுக்கு இக்கல்லூரி உந்துகளமாக அமைந்தது என்றே கொள்ள வேண்டும்.

தம்மைச் சுற்றியுள்ள பொருட்களையும் நடைபெறுகின்ற செயல்களையும் மதிநுட்பத்துடன் ஆராயக் கூடிய பதினைந்து வயதுப் பிராயத்திலே மயில்வாகனன் என்னும் பெயரிலே அடிகளார் புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக இணைந்து கொண்டார். பின்னாளில் புனிதமைக்கல் கல்லூரியின் அதிபராகவிருந்த திருமதி கமலநாதன் அவர்கள் சுவாமி விபுலாநந்தருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் நிலவிய மிகவும் நெருங்கிய தொடர்பினை பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

சுவாமிகளின் ஆசான்களாகவும், இந்த கல்லூரியின் ஆசிரியர்களாகவும் பணியாற்றிய அருட்தந்தை 'போணல்' போன்ற கத்தோலிக்க குருமார்களின் சீரிய ஒழுக்கமும் தியாக வாழ்வும் சுவாமிகளின் இத்துணை பெருவாழ்விற்கு மாணவப் பருவத்திலேயே அடிகோலின என்பதை சுவாமிகளின் வரலாற்றின் மூலம் ஊகிக்க முடிகின்றது என்று கல்லடி இராமகிருஷ்ண மிசன் துறவி சுவாமி ஜீவானந்தா வலியுறுத்துகிறார். வெள்ளத்தினால் ஆண்டவர் அழிந்தபோது நல்வாழ்வு வாழ்ந்த நோவாவும் குடும்பமும் உயிரோடு விடப்பட்டனர். அவர்கள் பல்கிப்பெருகி உலகில் மீண்டும் இதுபோன்ற வெள்ளழிவு ஏற்பட்டால் மக்களினம் தப்பிப் பிழைக்க வேண்டும் என்று மூவுலகிற்கும் அதிபதியான இறைவன் சித்தத்தை எதிர்க்கும் நோக்கமாகவும் பாபேல் கோபுரம் கட்டினர். மூவுலகிற்கும் அதிபதியான இறைவன் சித்தத்திற்கு முரணாக இந்தக் கோபுரம் கட்டியமையை முறியடிக்க ஒருவரை மற்றவர் புரிந்து கொள்ளாதபடி பலமொழிகளைப் பேசும்படி கட்டளையிட்டார். எனவே உலகத்திற்கு ஒரு பொதுமொழி என்பது அர்த்தமில்லாத ஒரு முயற்சி என்று அடிகளார் கூறுகின்றார். இதன் மூலம் அதாவது அந்தந்த மொழியின் மூலம் சர்வதேசத்தை சர்வதேச ஒழுக்கத்தை உருவாக்கமுடியும் என்பது சுவாமிகளின் நம்பிக்கை ஆகும். இதன் மூலம் அடிகளார் பலமொழிக் கொள்கையை ஆதரிக்கின்றவராகக் காணப்படுகின்றார். வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள கருத்தை அடிகளும் வலியுறுத்தி இருந்ததை அவரின் கல்லறையில் பொறிக்கப் பட்டுள்ள வாசகம் எடுத்துரைக்கின்றது.

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளலடி யிணைக்கு வாயத்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

இறைவன் உள்ளக் கமலத்தைத்தான் பக்தர்களிடமிருந்து விரும்புகின்றார் என்று நம்புவது எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கின்றது.

காணிக்கை செலுத்திவரும் போது உன்சகோதரனுக்கு என்மீது மனத்தாங்கல் இருப்பதாக அங்கே நினைவுற்றால் அங்கேயே பீடத்தின் முன் உன்காணிக்கையை வைத்துவிட்டு முதலில்போய் உன் சகோதரனோடு சமாதானம் செய்து கொள். பின்னர் வந்து உன்காணிக்கையைச் செலுத்து என்று பரிசுத்த வேதாகமம் மத்தேயு 5:23:24 ம் வசனங்களிலே வருமாறு தரப்பட்டுள்ளது.

நீ பலிபீடத்தின் முன் உன்காணிக்கையை செலுத்த வந்து உன்பேரில் உன்சகோதரனுக்கு குறையுண்டென்று அங்கே நினைவு கூருவேயாகில் 23ம் வசனம் அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப் போய் முன்பு உன் சகோதரனுடன் ஒப்புறவாகி பின்னர் வந்து உன் காணிக்கையை செலுத்து. 24 வசனம். காணிக்கையோ அன்றி பலியோ இறைவனுக்கு அவசியம் இல்லை. ஆனால் அவர் தூய உள்ளத்தையே விரும்புகின்றார். நல்லன யாவும் உள்ளத்திலிருந்துதான் வெளிவரும் எனும் கிறிஸ்தவ மதக் கொள்கையை அடிகள் போதித்துக் கடைப்பிடித்தார்கள்.

நான் கடவுளுக்கு அன்பு செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டு தன் சகோதரனை ஒருவன் வெறுத்தால் அவன் பொய்யன். ஏனெனில் கண்ணால் கண்ட சகோதரனுக்கு அன்பு செய்யாதவன் தான் நேரே கண்டறியாத கடவுளுக்கு அன்பு செய்ய நினைக்கிறான் என்று கூறினால் அது எப்படி உண்மையான இறை சத்தியமாகும் என்று நினைக்க முடியாது என்று அடிகளார் விளக்கம் கொடுத்தார்.

காரைதீவிலிருந்து கல்முனைக்கு நடந்து செல்லும் வயது வந்த போது கல்முனை உவெஸ்லியன் மிஷன் ஆங்கிலப் பாடசாலையில் சுவாமிகள் பாடம் கற்றார்கள். நானும் இதே பாடசாலையில்தான் கற்று பின்னர் இங்கேயே உப அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றேன். இது என்வாழ்வில் மறக்க முடியாத ஒரு சந்தர்ப்பம் ஆகும்.

ஒருமுறை சைவசமயத்தைப் பரப்ப எண்ணங்கொண்ட அடிகளாரின் நண்பர் ஒருவர் பிற சமயங்களைப் பற்றித் தாக்கிப் பேசினார். இதை அறிந்த அடிகளார் மற்ற மதங்களை இகழாதிருத்தலே சைவசமயத்தின் கொள்கை, சைவசமயத்தின் பெருமையை மற்றவர்கள் தாமாக உணர்ந்து அறிய வேண்டும், சமயத்தை இகழ்ந்து பேசி எதிரி யாக ஆகிவிடாதே என்று அடிகள் கூறினார். இகழ்ந்து பேசுவதை விட்டுவிட வேண்டும் என்று அறிவுறுத்தினார். ஒரு பிரபல்யமான சமயத்தின் காவலனாக அதைவிட மேலான துறவியாக வாழ்ந்த அடிகளின் நோக்கம் பெருமை வாய்ந்தது.


சுவாமி விபுலாநந்தரின் உள்ளக்கிடக்கையிலிருந்து....

தீபம் ஒளியைத் தருகின்றது. மழைக்கால இருட்டில் வழிச் செல்வோரது கையிலே தீபமிருக்கு மானால், அவர்கள் அச்சமின்றி நடப்பார்கள். கையில் விளக்கில்லாதவன் கானக வழியில் நடந்து செல்லும் போது, "சர..சர" என்பதோர் அரவங் கேட்டால், பேயோ, பிசாசோ, புலி, கரடியோ தன்னைப் பிடிக்க வருவதாக நினைத்து அச்சமுறுவான். கையில் விளக்கிருப்பவன் அதன் கிரணங்களை அரவம் எழுந்த திசையை நோக்கி நீட்டி உண்மையை உணர்ந்து கொள்ளுவான். "சர... சர" எனுஞ் சத்தமுண்டானது பேய் பிசாசினாலல்ல, புலி கரடியாலல்ல தன்னைக் கண்டஞ்சியோடுகின்ற ஒரு குள்ள நரியின் காலடி யினாலென்பதை உணர்ந்து தன்னுள்ளே நகைப்பான். நரியைப் புலியென்றெண்ணிய மயக்க வுணர்வினால் அச்சமுண்டாயிற்று. நரியை நரியென்றுணர்ந்த உண்மையுணர்வினால் அச்சம் நீங்கிற்று. உண்மையுணர்வுக்குத் தீபத்தினொளி காரணமாயிற்று.

உலகம் இருளடர்ந்த கானகத்தை நிகர்த்தது. மானிடராகிய யாமெல்லாம் ஆங்கு வழிச் செல்லுகின்ற பிரயாணிகளுக்கு ஒப்பாவோம். மெய்யறிவு தீபத்தை நிகர்த்தது. ஞானமில்லாதவன் விளக்கில்லாது வழிச் செல்லுகின்ற மூடனைப் போல அஞ்சவேண்டாதனவற்றுக்கெல்லாம் அஞ்சுவான். ஞானவான் உண்மையுணர்வாகிய ஒளி விளக்கத்தினால் கரும நிகழ்ச்சிகளின் காரணங்களை உள்ள வாறுணர்ந்து "அஞ்சுவதில் யாதென்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை" என்று திடசித்ததத்தோடு வாழ்க்கையாகிய வழியைத் தொலைப்பான்.

யாழ் நூல் தந்த முனிவனின் கனவு

நாவற்குடா இளையதம்பி தங்கராசா
போசகர், சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம் - கனடா
ரொறன்ரோ, கனடா



"எனக்கொரு கனவுண்டு" (I have a dream) என்றான் மார்ட்டின் லூதர் கிங் கூச்சலிட்டு. சுவாமி விபுலாநந்த அடிகளாரும் ஒரு கனவைக் கண்டார். இதையிட்டு அவர் யாரிடமும் கூற வில்லை. ஆயிரக்கணக்கானோர் அவரின் கனவினை நனவாக்கினர். அந்த ஆயிரக்கணக்கானோருள் நானும் எனது சகோதரர்களும் அடங்குவோம். இந்த மன எழுச்சித் துடிப்புடன் இன்று இக்கட்டுரையினை வரைகின்றேன்.

காலத்துக்குக் காலம் உலகம் சில மனிதர்களைச் சந்திக்கின்றது. சிலரின் வருகையால் உலகம் பெரும் பயனைப் பெறுகின்றது. மாறாக, சிலரின் வருகையால், உலகம் பேரழிவையே சந்திக்கின்றது. இது உலக வரலாறு. கிழக்கிலங்கை மக்கள், குறிப்பாக மட்டக்களப்பு மக்கள், கல்வித்திறனின்றி, எவ்வழி செல்வது என்று தெரியாது என்ற மார்க்கத்தில் வாழ்ந்த காலமது. வந்தவர்கள் வாழ்ந்து கொண்டும், இங்கிருந்தவர்களைத் தட்டிப்பணித்துக் கொண்டும் வாழ்ந்த காலமும் இதுவேதான். இந்தக்காலகட்டத்தில் ஒரு விடிவெள்ளி கிழக்கில் தோன்றியது. அந்த விடிவெள்ளிதான் சுவாமி விபுலாநந்த அடிகள். அவரின் வருகை, அங்கு வாழ்ந்த திக்கற்ற மனிதர்களின் விடிவுக்காக, ஒரு அடிக்கல்லை நாட்டியது. இராமனின் வில்லிலிருந்து புறப்பட்ட பாணம். முதலில் வாலியின் மார்பைத் துளைத்தது. பின் வீணைக்கொடியோன் இராவணனின் மார்பினைத் துளைத்து நின்றது. அதர்மம் அழிந்தது, அடிகளாரின் சிந்தனையிலிருந்து புறப்பட்ட அறிவுக் கணையானது, தன் மக்களின் "அறியாமை" என்னும் இருளைத் துளைத்து அவர்களின் வாழ்வில் ஒரு பேரொளியை ஏற்றி வைத்தது. அடிகளார் ஏற்றி வைத்த பேரொளியானது, இன்று ஒளிர்க்கீற்றுக்களாக, உலகளாவிய ரீதியில், பட்டொளி வீசிப் பரந்து பிரகாசித்துக் கொண்டு நிற்கின்றன. அரச அதிகாரிகளுக்குப் புதுப்பானையில் பசுத்தயிர், சுத்தமான பசுநெய். கொம்புத் தேன், முந்திரியம் பருப்பு (கசுக்கொட்டை) போன்ற எங்கள் மணல் திரவியங்களைச் சுமந்து கொண்டு சென்ற இழிவுக் காலமும் அஸ்தமனமானது. மக்களின் காணிகளில் வளர்க்கப்பட்ட வேம்புகளும் உயிர் தப்பி மறுவாழ்வு பெறலாயின. ஆசை வார்த்தைகளைப் பேசி, மக்களை மதம் மாற்றிய காலமும் ஒரு முடிவுக்கு வந்ததெனலாம். இந்த மறுமலர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தது, மட்டக்களப்பில், கல்லடிஉப்போடை என்னும் கிராமப்புறத்தில், கிராமியப் பிள்ளைகளுக்காக, 1929ஆம் ஆண்டு, சுவாமி அவர்களால், ஆரம்பத்தில் 27 மாணவர்களுடன் நிறுவப்பட்ட சிவாநந்த வித்தியாலயம் என்னும் முதலாவது ஆங்கிலப் பாடசாலையாகும். சுவாமி அவர்களுக்குக் கைகொடுத்த நலன்விரும்பி ஒருவரால் வழங்கப்பெற்ற ஒரு சிறு மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வித் தாபனம், பல பேரறி ஞர்களையும் எண்ணிலடங்காத புத்திஜீவிகளையும் உலகுக்கு ஈந்த புகழுடன் வியாபித்து நிற்பதைக் காணும் பொழுது, சுவாமியவர்களின் கனவு எத்தன்மையுடைய தீர்க்கதரிசனமானது என்பதை நாம் அறிவோம்.

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் அவர்களது அரசியல் அமுலாக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு, அவர்களுக்கு விசுவாசமும், விவேகமும் நிறைந்த உள்நாட்டு மக்கள் தேவைப்பட்டனர். அத்தகையோரைத் தெரிந்தெடுப்பதற்காகவும், சாதுரியமானவர்களை உருவாக்குவதற்காகவும், மாகாணங்கள் தோறும் கிறிஸ்தவ மத சார்பான அரச சலுகைகளைக் கொண்ட பாடசாலைகளை உருவாக்கினர். நெல்லுக்கு இறைத்த நீரானது ஆங்காங்கே புல்லுக்கும் பொசிந்தது. இந்த நீரூற்றில், பயனடைந்தவர்களுள் சுவாமியவர்களும் ஒருவரானார். இந்தக் காலகட்டத்தில் அடிகளார் பெற்றிருந்த கல்வித்தராதரப் பெறுபேறுகள் அரசின் எந்தவிதமான உயர் பதவியை யும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புடையதாய் அமைந்திருந்தும், அது அவருக்கு பெரும் முக்கியம் வாய்ந்ததாகத் தென்படவில்லை. முகாந்திரம், கேற்முதலியார், சமாதான நீதிவான் போன்ற கௌரவப் பட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்காக, வெள்ளையரின் காலடிகளில் மண்டியிட்டுக் கிடந்த வேளையில், சுவாமி அவர்களின் கவன மெல்லாம், தன் மக்களின் விமோசனத்தையே நாடி நின்றது.

எமது நாட்டின் வளங்களை எல்லாம் அந்நியர்கள் சூறையாடிச் சென்றதும், மதகுருமார்கள் வீடுவீடாகச் சென்று அப்பாவி மக்களை மதம் மாற்றியதும், சுவாமியவர்களுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இந்த மனப்பாங்குக்கு உரம் ஊட்டியவர், சுவாமியவர்களுக்கு ஆரம்பக் கல்வியை போதித்த ஆசிரியரான வைத்திலிங்க தேசிகராவார் என்று கூறினால் அது மிகையாகாது.

வித்துவான் வைத்திலிங்க தேசிகர், ஒரு மதுரைத் தமிழ்ச் சங்கப்புலவர். தமிழ் இலக்கிய நூல்களை நன்கு கற்றறிந்தவர். காரைதீவுப் பாலையடிப்பிள்ளையார் ஆலயத்தின் பூசகர், மக்களின் மதிப்பையும் மரியாதையையும் பெற்றிருந்தவர். இத்தகையதொரு தூய இந்துவான தேசிகருக்கு, கிறிஸ்தவ குருமார்கள் அப்பாவி இந்துக்களை மாற்றம் செய்து வந்தது அவரின் மனதில் ஒரு அங்கலாய்ப்பினை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்பது வெள்ளிடை மலை. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு, தேசிகருக்குக் கிடைத்த ஒரே ஒரு ஆயுதம், ஒரு செல்வாக்கு நிறைந்த குடும்பத்தில் பிறந்த தனது மாணவன் மயில்வாகனம் என்பதில் ஐயமில்லை. அவர் அன்று விதைத்த விதை, பிற்காலத்தில் நல்ல அறுவடையையும் பெற்றுக் கொடுத்ததெனலாம்.

பிள்ளைகளைப் பெற்ற எல்லாப் பெற்றோருக்கும் எழுகின்ற ஆசைகள், சுவாமியவர்களின் பெற்றோர்களான தந்தை சாமித்தம்பி அவர்களுக்கும், தாயார் கண்ணம்மையாருக்கும் எழுந்திருக்காதா என்ன? மகன் நன்றாகப் படிக்கின்றான். பட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாகப் பெறுகின்றான். தரமான வருவாயைப் பெற்றுக் கொள்ளக் கூடிய பதவி ஒன்றினை பெற்றுக் கொள்வான். அவனுக்கு பாங்கான ஒரு இடத்தில் திருமணம் செய்து வைக்க வேண்டும். அவன் பிள்ளை குட்டிகளை அள்ளி அணைத்து முத்தமிட்டு இன்பம் காண வேண்டும் என்ற எத்தனை விதமான ஆசைகளையெல்லாம் மனதில் சுமந்து கொண்டிருந்திருப்பார்கள் அவனது பெற்றோர். இத்தனை எதிர்பார்ப்புக்களின் மத்தியில், சுவாமியவர்கள் பூண்ட துறவறம் அவர்களுக்கு ஒரு மாபெரும் ஏமாற்றத்தினை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் எவர் மனதிலும் ஐயமிருக்காது. இருந்தாலும், அவரின் தூய சிந்தனையின் அர்ப்பணத்தினால், அவரது துறவுக்கோலத்தினால், அவரது மக்கள் அடைந்த சுபீட்சமான வாழ்வு, தன்மான உணர்ச்சி, அவரது தெய்வீகப் பணியால் தன் மக்களின் வாழ்வில் உண்டான மறுமலர்ச்சிப் புரட்சி, இவை அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, அதன் பயனை எந்தத் தராசில் வைத்துக் கணித்தாலும், அந்தத் தராசு சுவாமியவர்களின் பக்கமே தாழ்ந்து நிற்கும் என்பதனை உணரும் பொழுது, அவர்களின் பெற்றோர்கள் நிட்சயம் பெருமை கொள்வர். நான் இலங்கை மத்திய வங்கியில் வகுத்த உயர்நிலைக்கு என்னை உருவாக்கிய சிவாநந்த வித்தியாலயம் என்னும் அந்தக் கிராமப்புற ஆங்கிலப் பாடசாலையும், ஒரு கடையில் சிறு மேசையொன்றில் வரவேட்டினை வைத்துக் கொண்டு நிலத்தில் இருந்தவாறே கணக்கப்பிள்ளை போல, சுவாமியின் இல்லமான சிவபுரியின் மண்டப வாசலில், ஒரு சிறு மேசையின் மேல் ஒரு நூலை விரித்துக் கொண்டு நிலத்திலிருந்தவாறே, பக்கங்களை சுவாமியவர்கள் புரட்டும் காட்சியுந்தான் என் கண்முன்னே தோன்றி மறையும். மறையாது என்றென்றும் என் மனதில் நிலைத்து நிற்கும் ஒரு காட்சியானது என்னவென்றால். சுவாமியவர்களை சமாதி வைத்த கல்லறையினுள், எனது இரு கரங்களாலும் அள்ளித் தூவிய உப்புக் கற்கள்தான். சுவாமி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சிவாநந்த வித்தியாலயம் என்னும் பாடசாலையில் கற்ற பெருந்தொகையினர், சீரும், சிறப்புடனும் இங்கு வாழ்வதை நாம் அறிவோம். இதுபோன்றே ஏனைய நாடுகளிலும் வாழுகின்ற இப்பாடசாலையில் பயின்றவர்களும், நல்ல செல்வாக்குடன் வாழுகின்றனர் என்று அறியும் பொழுது எமது மனம் உவகை அடைகின்றது. அதே வேளை, சுவாமி விபுலாந்த அடிகளாரைப் போன்ற ஒரு தியாக புருசர் கிழக்கிலங்கையில் தோன்றியிருக்கா விட்டால், எமது கதி என்னவாக அமைந்திருக்கும்? என்று சிந்திக்கும் பொழுதெல்லாம் ஒரு பயங்கரமான திகிலும் எமது மனதில் எழுவதையும் எம்மால் உணர முடியாமலில்லை. இதுவரையில் சுவாமி அவர்களின் அர்ப்பணத்தினாலும், அவர் மேற்கொண்ட தியாகத்தினாலும், நாமடைந்த பயனைப் பற்றிக் கூறியிருந்தேன். அடுத்தபடியாக, சுவாமியவர்கள் எத்தகைய அறிவுக் கூர்மை படைத்தவர் என்பதனை, ஒரு சம்பவத்தினைக் கூறி, இக்கட்டுரையினை நிறைவு செய்வது பொருத்தமாகும் என்றும் எண்ணுகின்றேன்.


சுவாமியவர்கள், இமயத்திலிருந்து இங்கு மீண்டு வந்த காலத்தில், இலக்கிய மன்றங்களை அமைத்து, அவரது அநுபவத்தையும், கருத்துக்களையும் மக்களுடன் பரிமாறிக் கொண்டிருந்தார். இந்த வரிசையில் மட்டக்களப்பு ஆனைப்பந்தி மகளிர் வித்தியாலயத்தில் ஒரு இலக்கிய மன்றக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்திற்குப் பண்டிதர்கள், பாவலர்கள், நாவல்லுணர்கள், பாமரர்களென பலதரப்பட்டோர் வந்திருந்தனர். பேச்சாளர்களாக இருவர் அழைக்கப்பட்டிருந்தனர். எனது ஆங்கில ஆசிரியரும், எங்களது அதிபர்களுள் ஒருவருமான அமரர் கே. கணபதிப்பிள்ளை B.A. F.R.G.S. அவர்கள் சுவாமியவர்களிடம் கல்வி பயின்றவர். அவர் சுவாமியைப்பற்றி எழுதிய "Vipulalanda The Man and his Achievements" என்றும் நூலின்படி அந்தக் கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டிருந்த இருவருள் ஒருவர் நவநீதகிருஸ்ண பாரதியார். மற்றவரின் பெயரை இத்தகவலைத் தந்த நூல் குறிப்பிடவில்லை. அவரை வடக்கில் இருந்து வந்தவர் என்று மட்டும் அடையாளம் கூறப்பட்டிருந்தது. இதற்கு ஒரு நல்ல காரணமும் இருந்திருக்கிறது. இவரது பேச்சில் நிறைந்த பொருளுடமையும் சொல்லாட்சியும் இருக்கும். இந்த நல்ல குணாதிசியங்களுடன் இவரது பேச்சில் தனக்கு நிகர் யாருமில்லை என்ற ஒரு தற்பெருமையுள்ள நான் என்ற கர்வமும் மற்றவர்களைச் சற்றுக் கொச்சைப்படுத்திக் கூறும் குறைபாடும் காணப்படும். அவர் அன்று பேசிய இராவணனுக்கும் புகழாரம் சூட்டிப்பேசிய பேச்சும் அப்படித்தான் அமைந்திருந்தது. இதனைச் சுவாமியவர்கள் வருத்தத்துடன் தனது கவனத்திற்கு எடுத்துக் கொண்டதுமில்லாமல், இக்குறைபாட்டினை எப்படியாயினும் களைந்து விட்டால், இவர் எல்லோரின் மனத்திலும் ஒரு நல்ல இடத்தினையும் பிடித்து விடுவார் என்றும் எண்ணிக் கொண்டார். இவருக்கு மாறாக, நவநீதகிருஸ்ண பாரதியாரின் பேச்சானது, மிகவும் சுவாரஸ்யமாகவும், ஒரு இளந்தென்றல், சில வேளையில் வேகமாகவும், மற்றும் சிலவேளைகளில் தனது வேகத்தினைக் குறைத்து வீசுவது போலவும், ஒரு அருவியானது ஒரு மலையிலிருந்து ஊற்றெடுத்து, அது செல்லும் பாதையில் சிறிது சிறிதாக தன் பரிமாணத்தை விரிவாக்கிக் கொண்டும், உயர்ந்த பாதையில் தனது வேகத்தைக் குறைத்தும் பதிவான நிலப்பரப்பில் அதன் வேகத்தைக் கூட்டிக் கொண்டும், அந்த அருவியானது மேலும் விரிவாக்கம் பெற்று ஒரு ஆறாகித் தன் வேகத்தினை மேலும் கூட்டி, ஈற்றில் அது கடலுடன் கலந்து சங்கமமாகி, அது அமைதிகொள்வது போல் அவரது "படைப்புகள் பல" என்றும் பேச்சு கவர்ச்சியாகவும் இனிமையுடையதாகவும் அமைந்திருந்தது. அடுத்த நாள் சுவாமியவர்கள் தனது ஆச்சிரமமாகிய சிவபுரியில் ஒரு விருந்துபசாரத்தினை ஏற்பாடு செய்திருந்தார். இந்தக் கூட்டத்திலும் இவ்விரு பேச்சாளர்களுடன், பலதரப்பட்ட அறிஞர்களும், பாமரமக்களும் கலந்து கொண்டனர். இந்த விருந்துபசாரம் நடந்து கொண்டிருக்கையில் சுவாமியவர்கள்.

"சங்கநிதி பதுமநிதி

இரண்டும் தந்து" என்னும் கூற்றைக் கூறி, இதற்கு விரும்பியவர்கள் தங்கள் விளக்கத்தைத் தரலாம்" என்றொரு துணுக்கை விடுத்தார். இந்தத் துணுக்கை சுவாமியவர்கள் விடுத்ததும், சிறிது நேரம் யாரும் பதில் கூற முன்வரவில்லை. இதனை அவதானித்த, நவநீதகிருஸ்ண பாரதியார் அவர்கள், தனதருகிலிருந்த பேர்கூறப்படாத பேச்சாளரைத் தட்டி உசார்படுத்திவிட அவரும், "இது அளவிட முடியாத பல மில்லியன் தொகையைக் கொண்டது" என்றார். இதற்குப் பதில் கூறிய சுவாமியவர்கள், "இப்பதில் கிட்டத்தட்டச் சரிதான். என்றாலும் சரியான பதில் வேண்டும்" என்றார். அடுத்துத் தனது பதிலைக் கூறிய நவநீதகிருஸ்ண பாரதியார், "இது குபேரனின் ஒன்பது விதமான செல்வங்களுள் இரண்டைக் குறிக்கும்" என்றார். பதிலளித்த சுவாமியவர்கள், "இப்பதிலும் கிட்டத்தட்டச் சரிதான். என்றாலும், சரியான பதில் வேண்டும்" என்றவர், "ஒரு சங்குக்கு எத்தனை கோடிகள் (கோடிகள் - முனைகள்) உள்ளன என்றார். சபையிலிருந்து, "இரண்டு கோடிகள்" என்று பதில் வந்தது. "இப்பொழுது சாதாரண பதுமத்திற்கு (பதுமம் - தாமரை மலர்) எத்தனை கோடிகள்? (முனைகள்) என்றார் அருகிலிருந்த எனது பூமிசாஸ்திர ஆசிரியர், அமரர் திரு. கந்தசாமியவர்கள், "ஐந்து கோடிகள்" என்றார். ஆகவே, சங்குக்கு இரண்டு கோடி (20 மில்லியன், பதுமத்திற்கு ஐந்து கோடிகள் (50 மில்லியன்) என்று அங்கிருந்த எல்லோரும் ஒரே குரலில் கூறினார்கள். இதனைக் கேட்ட அந்தப் பண்டிதரின் முகம், சுவாமியைப் பார்க்கவில்லை. தன் கர்வத்தையிழந்த பண்டிதரின் முகம் நிலத்தை நோக்கியது. இத்தகைய அறிவுத்திறனையும் புத்திக்கூர்மையையும் கொண்ட சுவாமியவர்கள், இதுவரை எவராலும், ஒரு சிறிய விளக்கத்தைக் கூடக் கூற முடியாத அரிய படைப்பான யாழ் நூலைப் படைத்து உலகுக்கு ஈந்ததில் ஆச்சரியம் ஏதும் உண்டா?

அடிகளாரின் மெய்ப்படாத கனவுகள்

அமரர் வித்துவான் க. செபரத்தினம்
ரொறன்ரோ, கனடா



"மனதிலுறுதி வேண்டும், வாக்கினிலேயினிமை வேண்டும், நினைவு நல்லது வேண்டும், நெருங்கின பொருள் கைப்படவேண்டும், கனவு மெய்ப்பட வேண்டும், கைவசமாவது விரைவில் வேண்டும், தனமும் இன்பமும் வேண்டும், தரணியிலே பெருமை வேண்டும்" என விபுலாநந்த அடிகளாராற் போற்றப்பட்ட மகாகவி பாரதியார் பாடிச் சென்றுள்ளார். பாரதியார் காட்டிய பாதை யில் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ள அடிகளாரின் மெய்ப்படாத கனவுகள் சில இருக்கத்தான் செய்கின்றன.


யாழ் நூலுக்கு முகவுரை எழுதிய கரந்தைத் தமிழ்ச் சங்க அமைச்சரான அறிஞர் நீ. கந்தசாமி அவர்கள் தாம் எழுதிய முகவுரையின் இறுதியிலே "இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேராசிரியராகத் தமிழ்த் தெண்டு செய்துவருகின்ற அடிகளாரவர்கள், பண்டைத்தமிழர் இசை நலன் உலகமெலாம் பரவும் வண்ணம், இவ் யாழ் நூலினை, ஆங்கில மொழியில், மொழிபெயர்த்து வெளியிடுவதுடன், ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்ப் புலமை உலகமெலாம் பரவ ஆங்கிலத்திலும், தமிழிலும் இது போன்ற ஆராய்ச்சி நூல்களையியற்றித் தமிழகத்தை உய்வித்தருள்வராக என அவர்கள் திருவடிகளைப் பணிந்து வேண்டுகின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

கரந்தைத்தமிழ்ச் சங்கத்துடன் மிக நெருங்கிய தொடர்பினைப் பேணிவந்த அடிகளார் அச்சங்கத்துத் தலை-வராகப் பணியாற்றிய தமிழவேள் திரு.த.வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களிற் பெருமதிப்புக் கொண்டவராக இருந்தார். அத்துடன் தமது அரும்பெரும் நூலாகிய யாழ்நூலினை கரந்தைத்தமிழ்ச் சங்க வெளியீடாகவே வெளியிட்டுமுள்ளார். திரு. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களது அன்புக்குரிய நிலையமாகிய கரந்தைத் தமிழ்ச் சங்கமெனும் தமிழ்ப் பெருமன்றத்திலும், அதனைச் சார்ந்திருக்கும் அகத்தியர் திருமடத்திலும் இருந்து யாழ் நூலினை எழுதி முடித்துள்ளதாக அடிகளார் குறிப்பிட்டிருப்பது, கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பினைக் காட்டுவதாய் அமைந்திருக்கின்றது. இதனால் கரந்தைத் தமழ்ச் சங்க அமைச்சரின் விருப்பம் அடிகளாரின் விரும்பமாகவும் அமைந்திருப்பதாக நம்பலாம். ஆயினும் அவ்விருப்பம் அக்கனவு - மெய்ப்படாத கனவாகி விட்டதாக இருக்கிறதல்லாவா? அடிகளார் தாம் இயற்றிய நாடகத்தமிழ் நூலாகிய மதங்கசூளாமணியின் ஆக்கத்துக்கு, வடமொழி நாடகாசிரியரான தனஞ்செயனாரிக் தசரூபத்தையும் பயன் கொண்டுள்ளார். தமது நூலுக்கு எழுதிய முன்னுரையிலே, "தசரூபத்தைத் தரல் வேண்டுமென்றும், செகசிற்பியி யாரின் நாடகங்களை விரிவுற மொழி பெயர்த்து வெளியிடல் வேண்டுமென்றும், இந்நூல் இள மாணவரும் எளிதிலுணர்ந்து கொள்ளத்தக்க நடையில் முடியவேண்டுமென்றும் நண்பர் பலர் கூறிய ஊக்கவுரைகள் என் உள்ளத்திற் பதிந்து கிடக்கின்றன. காலம் வாய்ப்பின் இயன்றவை புரியப் பின்னில்லேன்" என்று குறிப்பிட்டுள்ளார். இஃதும் அடிகளாரின் மெய்ப்படாத கனவுகளில் ஒன்றாக அமைந்துவிட்டதல்லவா?

யாழ் நூலின் பாயிரவியலிலே நூல் தோன்றிய வரன்முறையினையிட்டுக் கூறப் போந்த அடிகளார், "யாழ்க் கருவியொழிந்த பிற இசைக்கருவிகளைக் குறித்தும், இசையிலக்கணம், இசைப்பாட்டிலக்கணம், இசைக் கலைவளர்ச்சியென்னும் பொருள்களைக் குறித்தும் ஆராய்ந்து கண்ட முடிவுகள் சில கையிலுள்ளன. காணவேண்டியன இன்னும் பலவுள. இறைவன் திருவருள் பாலிப்பானாயின் ஏற்ற காலத்திலே அம்முடிவுகள் மற்றொரு நூலுருவாக வெளிவருதல் கூடும்" என்று குறிப்பிட்டுள்ளார். இஃதும் அடிகளாரின் மெய்ப்படாத கனவுக-ளில் பிறிதொன்றாக அமைந்துள்ளதல்லவா?

யாழ் நூலின் பாயிரவியலுக்கு எழுதப்பட்ட உரையின் இறுதிப் பகுதியிலே, "1936 ஆம் ஆண்டு மாசித்திங்களிலே, பழந்தமிழலின் இசை, சிற்பம், கலையறிவு என்னும் பொருள் பற்றிச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆதரவிலே ஆறு விரிவுரைகள் செய்தேன். அவ்விரிவுரைகள் பல்கலைக்கழகத்துப் பட்டிமண்டபத்திலே ஆங்கில மொழியில் நிகழ்ந்தன. பிறமொழியாளர்களும் பலர் வந்து கேட்டார்கள். எல்லா விரி-வுரைகளும் இந்து என்னும் ஆங்கில பத்திரிகையிலே வெளிவந்தன. அவற்றைக் கண்ட அறிஞர் பலர் ஆங்கிலத்திலே நூலுருவாக்கித் தரும்படி என்னைக் கேட்டார்கள். ஈழநாட்டிலே ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்துடன் பாடசாலைகள் பதினேழினை நடத்தும் பொறுப்பு என் முழுநேரத்தையும் பற்றினமையினாலே இசையாராய்ச்சி ஓரளவிற்குத் தடைப்பட்டு நின்றது" அடிகளாருக்கு விடப்பட்ட மேற்படி கோரிக்கையை அவர் நிறைவேற்ற விழைந்திருந்தாராயினும், அஃதும் அடிகளாருக்கு மெய்ப்படாத கனவாகவே அமைந்து விட்டது. யாழ்நூலின் பாயிர வியலிலே அமைந்துள்ள பத்தாம் பிரிவிலே, "யாழ்க்கருவியின் தெய்வ நலம், இக்கருவி தமிழ் நாட்டிலிருந்து பிறநாடு களுக்குப் பரவிய வரலாறு" கூறும்போது கடல் வாய்ப்பட்டனவும் காலத்தின் மாறுதலினாலே மறைந்து போயி னவு மாகிய நூல்கள் மிகப் பல. அந்நூற் பெயர்களைக் கூறிப் பழைமை பாராட்டுவதோடு அமைந்திருப்போமா? இல்லை. முன்னிருந்த கலைச் செல்வத்தை மீண்டும் பெறுவதற்கு முயல்வோம். அத்தகைய முயற்சி நமது நாட்டிற்கு ஆக்கமளிக்கும் என அடிகளார் கூறியிருப்பது, அடிகளாருக்கு மெய்ப்படாத கனவாக அமைந்துவிட்ட போதிலும், நம் அனைவர்க்கும் மெய்ப்படுத்தவேண்டிய கனவாக அமைவதோடு அடிகளாருக்கும், நம் நாட்டிற்கும், நம் தெய்வத்தமிழ் மொழிக்கும் செயற்தகு கைம்மாறாக அமையும்.

நன்றி: "தமிழ்ஒளி"



விழுப்பத்தைத் தருகின்ற ஒழுக்கத்தை
விருத்தி செய்யுங் கல்வியே கல்வி,
ஏனைய கல்வி,
கல்லியெனப்பட மாட்டாது.

அறிவைப் பெறின் அறியாமையும், அதன்
வழி வந்த துன்பமும் உடனகல்வதாயின்
எப்பொருளிலும் மிக்க அறிவுப் பொருளை
விழைந்து தேடுதல் வேண்டும்.
(விழைந்து - ஆசைப்பட்டு)

சுவாமி விபுலாநந்தர்

தமிழ் நாடக வரலாற்றில் சுவாமி விபுலாநந்தரின் பங்கு

கவிநாயகர் வி.கந்தவனம்
ரொறன்ரோ, கனடா



இலங்கையிலே நாடகக் கலை பற்றி முதன் முதலிலே ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கியவர் சுவாமி விபுலாநந்த அடிகளாராவர். இலங்கைப் பல்கலைக்கழகம் நாடகத்தை ஒரு பாடமாக முதன் முதலாகக் கற்பிக்கத் தொடங்கிய காலத்தில் கற்பதற்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்த போது நானும் ஒருவனாகத் தெரிவு செய்யப் பெற்றேன். இரண்டு ஆண்டுகள் (1976-77) கற்றுச் சிறப்புச் சித்தியோடு கூடிய டிப்புளோமாப் பட்டத்தையும் பெற்றேன்.

அக் கல்விக் காலத்தில் தமிழ் நாடக வளர்ச்சி பற்றி எமக்குப் பாடம் எடுத்தவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள். அவர் இடைக்கிடை சுவாமி விபுலாநந்தர் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அவரது விரிவுரை ஒன்றிலே தான் மதங்கசூளாமணி பற்றி முதன் முறையாக அறிந்து கொள்ள முடிந்தது. அதனைத் தொடர்ந்து நான் மேற் கொண்ட தேடல் காரணமாகக் கிடைத்த 'மதங்கசூளாமணி' விளங்கிக் கொள்ள முடியாத கடுந்தமிழில் இருந்தது.

அடிகளார் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர்; இலண்டன் பல்கலைக் கழகத்துப் பௌதிகசாத்திர விற்பன்னர். அதனால் அந்தக் காலத்து தமிழ் நடையில் பௌதீகசாத்திரமும் கலந்து அவரது எழுத்துக்கள் இருந்தன. தமிழ் நடை காலத்துக்குக் காலம் வசனநடை கைவந்த வல்லாளரால் புடமிடப்பட்டது என்பது தான் உண்மை.

சரி, இந்த முன்னுரையுடன் தமிழ் நாடகவரலாற்றில் சுவாமிகளின் பங்குபற்றிச் சிந்திப்போம். இச் சிந்தனையைத் தூண்டியவர் எனது அன்புக்குரிய மாணவர் திருவாளர் குமரகுரு அவர்கள் என்பதனையும் இவ்விடத்திற் குறிப்பிட்டுக் கொள்வது சாலும்.

மதங்கசூளாமணி

இத்தலைப்புக் கட்டுரைக்குச் சான்ற ஆதாராமாக இருப்பது அடிகளார் எழுதிய **மதங்க சூளாமணி** என்னும் அரிய நூலாகும். மதங்கர் என்பவர் கூத்தர். சூளாமணி என்பது முடிமணி. மதங்கரை முடிமணியாகப் போற்றிய முதல் தமிழ் நாடகக்கலைஞர் விபுலாநந்த சுவாமிகளே எனலாம். எனின் மதங்கருக்குள் சூளாமணியாக விளங்குபவர் சேக்ஸ்பியர் ஆவர். உண்மையில் மதங்க சூளாமணி என்ற பெயரால் சுவாமிகள் சேக்ஸ்பியரையே குறிப்பிடுகின்றார்.

'.... இவ்வாறு உலக வாழ்க்கையை நாடகமாகக் கற்பித்துக் கூறிய இக் கவிவாணர் வனப்பின் மிக்க நாடக நூல்கள் பலவற்றை உலகுக்கு அளித்துள்ளார்.அஃதன்றி, அரங்கினுட் புகுந்து தாமும் கூத்தருள் ஒருவராக நின்று நடித்துள்ளார். நாடகக் கவிகளுள் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் பிறரிலர். ஆதலால் ஷேக்ஸ்பியர் என்னும் இயற்பெயர் பூண்ட இக் கவிவாணரை யாம் மதங்க சூளாமணியெனவழங்குவாம்' என்பது அடிகளாரின் வாக்காம்.

திட்டமிடல்திறன்

ஒரு கட்டுரையை அல்லது நூலை எழுதுவதற்குத் திட்டமிடல் இன்றியமையாதது. அதுபற்றி ஒரு பாடம் நாம் படிக்க வேண்டுமாயின் மதங்க சூளாமணியையே உதாரணமாகக் கொள்ளலாம். அடிகளார் மதங்க சூளாமணியை (1) உறுப்பியல் (2) எடுத்துக்காட்டியில் (3) ஒழிபியல் என மூன்றாக வகுத்து சேக்ஸ்பியரின் நாடக ஆற்றலை அணுகுகின்றார்.

முன்னோடியானமுயற்சி

அடிகளாரின் நாடக முயற்சிகள் முன்னோடியானவை, தனித்துவமானவை. மதங்கசூளாமணியில் சேக்ஸ்பியரின் நான்கு நாடகங்களை விரிவாக அடிகளார் நோக்குகின்றார்.

அவையாவன:

1. காதல்கைம்மிக்க காவலன் சரிதை - LOVE'S LABOUR'S LOST
2. ஆகுலராஜன் சரிதை - KING LEAR
3. கூதிர்க்காதை - THE WINTER'STALE
4. கருதியது எய்திய காதலர் சரிதை - TWELFTH NIGHT OR WHAT YOU WILL

இவற்றின் உள்ளுறு பொருளை மூன்று பிரிவுகளில் விளக்குகின்றார். அவையாவன:

1. உறுப்பியல்
2. எடுத்துக்காட்டியல்
3. ஒழிபியல் என்பன.

இவற்றை இங்கு எடுத்துக் காட்டுவது அடிகளாரின் திட்டமிடல் நுட்பத்தை உணர்த்துவதற்கேயாம். உ றுப்பியலில் நாடகம் கதை தழுவி வரும் கூத்து என்கிறார். அது சாந்திக்கூத்தின் நான்கு வகைக் கூத்துகளில் ஒன்று என்றும் குறிப்பிடுகின்றார். இந்த விளக்கத்தைப் பின்பற்றிப் பிற்காலத்தவர் நவீன நாடகக் கலையை வளர்த்தெடுத்தனர் என்பது கவனிக்கப்பட வேண்டியதொன்று. நாடகம் பல வழிகளிலும் மேலான ஒரு கலை. உள்ளத்து நிகழ்ந்த நிகழ்ச்சியைப் பிறர்க்குப் புலப் படுத்தவதற்கு அவிநயம், இசை, மொழிப்பொருள் என்னும் மூன்றும் பயன்படுவன என்கிறார் அடிகளார். இம் மூன்றையும் தழுவி நிற்பதால் நாடகம் சிறந்தது என்றும் நியாயப் படுத்துகின்றார்.

எடுத்துக்காட்டியலில் மதங்க சூளாமணியாகிய செகசிற்பியார் நாடகங்களில் மேற்காட்டப் பெற்ற நான்கு நாடகங்களின் சிறப்புக்கள் பலவற்றை விளக்குகின்றார். அவ்விளக்கம் நாடகக்கலையை எவ்விதம் அணுக வேண்டும் என்பதற்கு நல்ல உதாரணங்களாக அமைகின்றன.


அடுத்து சுவைகள் பற்றி அடிகளார் விளக்குகின்றார். நாடகச் சுவைகளை நடித்துக் காட்ட உடல் உதவு கின்றது. இது மெய்ப்பாடு எனப்படும். மெய்ப்பாடு பற்றிக் கூற வந்த தொல்காப்பியர்,

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் உவகை வெகுளியொடு

அப்பால் எட்டாம் மெய்ப்பாடென்ப என்கின்றார். இவற்றுடன் பிற்காலத்தவர் சாந்தம் என்பதையும் சேர்த்து நடிப்புச் சுவையை ஒன்பதாக்கினர். இச்சுவைகளை சேக்ஸ்பியரின் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு அடிக- ளார் விளக்குகின்றார். தொடர்ந்து பொருள் சாதி, யோனி, விருத்தி என்னும் நான்கினையும் விளக்குகின்றார். அடுத்து மாதவி ஆடிய பதினோராடல்களையும், நால்வகைப்பட்ட சொல்வகைகளையும் விளக்குகின்றார்.

இவ்விதம் நாடகத்தையும் அதன் இயல்புகளையும் விளக்கியதனால் பிற்காலத்தவர்க்கு நாடகக் கலை பற்றிய அடிப்படையறிவைப் பெற அடிகளார் பலவழிகளில் உதவியிருக்கின்றார். அவ்வகையில் சேக்ஸ்பியரை முதலாகக் கொண்டு தற்கால நாடக வளர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடியாக அடிகளார் விளங்குவது வெள்ளிடை மலை.

விபுலாநந்த அடிகள் கல்விக்கொள்கை முதலாதாரம் - தமிழ்மொழி



பண்டிதர். ம.செ. அலெக்ஸ்சாந்தர்
முன்னாள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்
(பலாலி, மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள்)
ரொறன்ரோ, கனடா

பன்முக அறிவின் சங்கமம் சுவாமி விபுலாநந்த அடிகள். அத்தகைய அடிகளாரைத் தமிழ் மொழிதான் அவர்தம் கல்விக் கொள்கைக்கும் கல்விச் செயற்பாடுகளுக்கும் காரணம் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் ஏற்படும். அவர்தம் வாழ்வியல் அண்மைச் சூழல், அவாவிய சூழல், தகுதிச் சூழல் ஆகியவற்றின் இடைத்தாக்கங்களை, அவரின் புனிதமான அறிவு, உணர்வு, செயற்பாடாய் பரிணமித்தன. அவரைப் பற்றி நான் யாத்த நேரிசை வெண்பாவை எழுதி, அவர்தம் கல்வி உளவியற் கருத்துக்களுக்கு, அண்மைச் சூழலான தாய்மொழி தமிழ்தான் ஊற்றாகியது என்பதைத் தங்கள் வாசிப்புக்குச் சமர்ப்பிக்கிறேன்.

நேரிசை வெண்பா

உவமைகளாய் இன்மலர் மூன்றில் அடிகள்
தவமாய்த் தமிழ் கூறும் சார - நவக்கல்வி
உள்ளக் கமலமொடு கூப்பிய கைக்காந்தள்
தெள்ளுநெய்தல் என்றதுவே தேசு.
தேசு - ஞானம், நிறைவு / ஒளி

எல்லா அணிகளுக்கும் தாயணி உவமையணியே எனத் தமிழ் இலக்கணநூலார் கூறுவர். உவமை என்று கூறினும் சுவாமி எழுதிய இன்மலர்கள் மூன்றுமே உருவக அணிகளாய்ப் பயன்படுத்திப் பல்பக்கச் சிந்தனையை ஏற்படுத்துகிறார். உருவக அணியின் சிறப்பு அவர் கூறிய மலர்கள் எல்லாமே, அவர் கூற எடுத்த பொருளே தாமே எனக் கூறும். அங்கே போல, ஒப்புடைய பொருட்கள் என்பதற்கிடமின்றிக் கூறப்பட்டுள்ளது. “உள்ளக் கமலமும், கூப்பிய கைக்காந்தள் மலரும், நாட்டவிழி நெய்தலும்” கல்வி உளவியற் கருத்துக்களோடு, பல்வேறு அறிவு நிலைகளின் மணிகளாய் அமைந்து, வாசகர்கள் எந்நோக்கில் பார்க்கினும் அப்பொருளை அண்மைநிலைச் சூழலாக்கித் தருகிறது. தமிழின் புனிதப் பொதுமறையான திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டாலும், இன்றும் அறிஞர்களுக்கு பல்வேறு விதவித உரைகளைப் எழுதும் வாய்ப்புகளை அளித்துக் கொண்டேயிருக்கிறது. அதுபோல சுவாமி விபுலாநந்தர் எழுதிய மலர்கள் மூன்றும் கல்வி உளவியற் கருத்துக்கள் மட்டுமன்றி சமயம், தத்துவம், தமிழ் இலக்கணம் போலும் அரிய முடிவுகளைத் தந்து சிந்தனைக்கு ஒளியேற்றும் தீபமாய் அமைகின்றன.

பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் சமுகச் சூழலும், பௌதிகச் சூழலும், இடைத்தாக்கம் பெற்றுக் கல்வியை மேலுறச் செய்கின்றது என்பது கல்வியாளர்களதும் உளவியல் வல்லுநர்களதும் ஒன்றித்த கருத்து. சமுகச் சூழலாக, ஆசிரியர், பாடசாலை, கோயில்கள், பல்வேறு சங்கங்கள் இடைத்தாக்கம் பெற்றுக் கல்வியை வளர்க்கும். பௌதிகச் சூழலாக வகுப்பறை, காற்று போல்வன அமைவதால் பிள்ளை இவைபெற்று வளர வாய்ப்பளிக்கப்படுகிறது. சுவாமி எடுத்துக்கையாண்ட உள்ளமாகிய தாமரை வளர்வதற்குத் தகுந்த சூழலாக இயற்கை அமைவதால் அது நீர் நிலைகளில் தண்ணீர், வெய்யில், காற்று என்பன பெற்று வளர்கிறது.

அது வளர வளர அதன் இதழ்கள் விரிந்து விரிந்து மலராய் தன்மை பெறுகிறது. பிள்ளையின் அறிவின் வாசல்களாக ஐம்பொறிகள் விளங்குகின்றன. இவற்றின் பல்வேறு உபபுலன்களும் தொழிற்படுகின்றன என உளவியலாளர் கூறுகிறார்கள். அவை மூட்டுப்புலன், மட்டிடும் புலன் போல்வன ஆகும். நடைமுறை வாழ்விலே ஆளைப்பார்த்தவுடனே உடுப்புத் தைப்பர், அநுபவக்கமக்காரர் குவியலைப் பார்த்தே அதில் எத்தனை புசல் நெல்லுண்டென்பர். நடத்தைகளை அவதானித்தே, பொறுமை கண்டு உளவியல் வளர்ந்தது, ஆசிரியனும் பிள்ளைகளுக்கு நடத்தையில் மாற்றம் ஏற்படுத்தவே, கல்விச் செயற்பாடுகள் என்ற நற்சூழலை வழங்குகிறான். ஐம்பொறிகள் மூலம் காணுதல், கேட்டல், முகர்ந்தறிதல், சுவைத்தல், தொட்டறிதல் போன்ற செயற்பாடுகளால் அறிவு வளர்கிறது. தாமரை என்ற உருவகம் அறிவை வளர்க்கும் நிலையைக்காட்டுகிறது. மனத்தின் செயற்பாடுகள் அறிதல், உணர்தல், செயற்படல் என்ற மூன்று மண்டலங்களாக உளவியலாளர் கூறுவர். தாமரை அறிவாட்சியை ஏற்படுத்த அதன் வழி உணர்வாட்சி ஏற்படுகிறது.

"கூப்பியகைக்காந்தள் மலர்" என்ற இன்மலரால் சுவாமி கவின் கலைக்கல்வியையும், செயன்முறைக் கல்வியையும் கூறுகிறார். காண்டலும், கேட்டலும் அறிவு வளர்ச்சியில் 95% இற்கு மேல் அறிவை அளிக்கிறது என உளவியலார் கூறுவார். அறிவின் வழி உணர்வு தொழிற்படும். இதற்கு கவின்கலைக் கல்வியாகிய சித்திரம், ஓவியம், சிற்பம், நடனம், இலக்கியம் போல்வன உதவுகின்றன. அவையே மொழிப்பற்று, தேசப்பற்று, சமயப் பற்றுப் போன்ற பல்வேறு பற்றுக்களை ஏற்படுத்தும். இவை குமரப்பருவத்தின் அடைவுகளில் மிகக் கூர்ப்பானவை ஆகும். அறிவுசால் வளர்ச்சியே உணர்வை ஏற்படுத்தும். எண், எழுத்து, வாசிப்பு, பல்வேறு பாடங்கள் மூலம் ஏற்பட எண்ணத்தில் பல்வேறு நயப்புகள் ஏற்படும். இந்த இயல்புகள் மெய்ப்பாடுகளாக மிளிரும். இவற்றைச் சுவைகள் என இலக்கியம் கூறும். இவற்றைக் கவின்கலைக்கல்வியின் வெளிப்பாடுகளாகக் கொள்வர்.

சுவாமி கூறிய 'கூப்பிய கைக்காந்தள்' என்ற உருவகம் உணர்வொடு கூடிய செயற்பாட்டையும் சேர்த்துத் தருகிறது. இதற்கு மாணிக்கவாசகர் பெருமானின் திருவாசகத்திலிருந்து ஒருபாடல், உடலுக்கும் உளத்துக்கும் உள்ள உறவைக்காட்டுகிறது.

"மெய்தான் அரும்பி விதிர்விதித் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்..."

என்ற திருச்சதக 5ம் பாடல் உள்ளத்தில் ஏற்படும் உணர்வாய் மெய்ப்பாடுகளின் வெளிப்பாட்டையும், மனித நடத்தையின் மாறுபாட்டையும் தருகிறது. பலசமயத் தத்துவங்கள் அறிந்த சுவாமிக்கு தனது அண்மை நிலைச் சமயக் கருத்தைக் குறித்து, அதன் தகுதிச் சூழலையும் அது அவாவும் சூழலையும் விரிசிந்தனையாகத் தந்துள்ளார். தகுதிச் சூழலாய் உள்ளமும், உடலும் ஒன்றை ஒன்று சார்ந்தன என்ற உளவியற்கோட்பாட்டையும், அது அவாவும் பொருளாகப் பூரண விருப்பம், அழகு, கையும், கைவிரல்களும் சார்ந்த தொழிற்கல்வியையும், மனமும் செயற்பாடுகளும் சார்ந்த தொழில்நுட்பக் கல்வியையும் கூப்பிய கைக்காந்தள் உருவகித்து நிற்கிறது. சுவாமியின் மெய்மை அகவுணர்வோ, அல்லது அவர் வாழ்ந்த மருத நிலப்பாங்கோ, வயலின் வரம்பில் வளரும் காந்தட்பூவை உருவகித்தது வியப்பே!

1939இல் சுவாமி விபுலாநந்தர், கல்முனையில் இலக்கியம் என்னும் பொருள்பற்றி, ஆசிரியர் விடுமுறைக் கழகத்தில் ஆற்றிய உரை, இலக்கியம் கற்றல், கற்பித்தலில் இன்று எழும் பல ஐயங்களையும் தீர்ப்பதாகவுள்ளது. இலக்கியம் அழகுணர்வைத் தந்து, செம்மை வாழ்வியல் நெறிகளை நயத்து வளர்க்கும் கலை. இலக்கியம் கற்பித்தலின் நோக்கம் இரசித்து இன்புறுவதாகும்.

ஆரம்ப வகுப்புக்களில் பாடல்களின் சந்தங்களை இரசிக்கும் பிள்ளை, பின்பு பொருளறிந்து இரசிக்க வழிநடத்தப்படும். சுவாமி பல்வேறு இலக்கியப் பாடல்களை, எடுத்து உதாரணங்களிலிருந்து பொதுமை காண ஆசிரியர்களுக்கு வழிகாட்டினார். எமது தமிழிலக்கியப் பாடல்கள் சொற்புணர்ச்சி நிரம்பியவை. அவற்றைப் பிரித்தெழுதலாமா? என்ற கேள்வியில் இன்றும் கவிஞர்களிடையேயும், இலக்கணக்காரர் இடையேயும் கருத்து முரண் நிலவுகிறது. தமிழ் இலக்கியத்திலே, பாக்கள், பாவினங்கள் என இரண்டாகப் பிரித்து நோக்கலாம். பாக்களில் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பனவும் அவ் ஒவ்வொன்றிற்கும் உரிய பண்களாக அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் ஓசைகளும் உண்டு. அவற்றிற் குரிய ஓசைகள் சொற்புணர்ச்சியோடு வாசித்தாலே, தெளிவாக ஓசைநயம் தரும். ஆதலினாலே முதலாம் வகுப்பில் இலக்கியம் கற்கும், ஆசிரியன் சொற்புணர்ச்சியோடு பாடலை முழுமையாகப் பாடுதல் அல்லது வாசிக்க வேண்டும். இரண்டாவது வாசிப்பில் சொற்களைப் பிரித்து வேண்டிய முகபாவனையோடு பொருள் விளங்க வாசிக்க வேண்டும். ஆதலினால் போலும் காலங்கடந்து விளங்கும் இலக்கிய நூல்களின் பாடல்கள் புணர்ச்சியோடு முதலெழுதிப் பின்பு பிரித்தெழுதப்படுகிறது. இதனைப் பாரதிபாடலில் நயப்புடைய அடிக-ளார், கற்பித்தல் முறையிலே பொருளறிந்து நயக்க அன்று கூறினும் இன்றும் பொருந்தும் வழியாகிறது.

தமிழ் இலக்கியம் என்பது என்றும் செம்மை வாழ்வும், அறநெறியும், நற்பொருளும் தரும் கவின் சுவைப்பாடங்களில் ஒன்று. சுவாமிகளின் நோக்கில் இலக்கியம் ஓசை, சொல், பொருள் என்ற மூன்று வகைகளில் ஒன்பான் சுவைகளையும் அளித்து என்றும் எம்முள்ளத்தில் நிலைக்க வைப்பதே நல்லிலக்கியம் என்பதை அவர் தகுதி நிலைச் சூழல் காட்டி நிற்கிறது. அவர் கல்வி, ஞானம், கருத்தியல், அறிவியல், ஆற்றல், தமிழ் மொழிப்பற்று, பிறமொழிகளின் பாண்டித்யம் அவரின் வாழ்வின் படிமுறை அநுபவங்கள், இராமகிருஷ்ண மடத்துறவி வாழ்வு, இந்தியநாட்டுப் பயணங்கள், அவர் ஆற்றிய கல்வி நிர்வாக சமூகப்பணிகள், அவரின் தகுதிநிலைச் சூழலில் ஒளி ஏற்றியது. அதனாலே அவருடைய 'இன்மலர்ப்' பாடல்கள் மூன்றும் மலைமேலிட்ட மாங்காத்தீபம் போல் பல்பக்கச் சிந்தனையைத் தூண்டி நிற்கிறது.

"நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது"

"அநுபவமே கல்வி" சுவாமியின் ஆழ்ந்த அநுபவம் அண்மைச் சூழலான தமிழியத்தின் விழுமியம் என்ற மலையேறியது. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற புறநானூற்றின் 189ம் பாடலில் கண்ட கனியன் பூங்குன்றனாரின் பாடல், அவர் நெஞ்சில் உரமேற்றியது. அவர் உள்ளத்துள்ள கவிதையின் அழகு, உண்மையே சத்தியம், அது நின்று என்றும் உள்ளத்தில் உவகை தரும் என்று உறுத்தியது.

தாயுமானவர் எழுதிய பராபரக்கண்ணி -

"அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே!
எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே!

என்ற தமிழிய விழுமியம், மட்டக்களப்பு, சுவாமிக்கு தன்னிலை, சமூகநிலை, தேசிய நிலை, சர்வதேச நிலை என்ற உயரிய சிந்தனை வழிக்கல்விக்கு உதவியது. இதேபோன்றே பாரதி பாடல்கள், சங்க இலக்கிய நோக்குகள், உலகப் பொதுமறையாம் திருக்குறள் - நெய்தல் பூவையும், கடலும் கடல்சார்ந்த திணையான நெய்தலையும் உருவகித்தாரோ என்ற சிந்தனை உவப்பிலா விரிசிந்தனையைத்தருகிறது.

தமிழியத்தில் அகப்பொருளில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற பகுப்பு மிக உயர்ந்தது. குறிஞ்சியில் தேனெடுத்தல், வெறியாடல், பாலையில் வரண்ட நிலமாதலால் பறித்துண்ணல், முல்லையில் ஆநிரை மேய்தல், மருதத்தில் ஆற்றங்கரை நாகரீகம், பயிர் செய்தல் நிலவியது.

நெய்தல் கடலும் கடல் சார்ந்த இடமும். அங்கே மீன்பிடி பிரதான தொழில். இந்நிலப்பகுப்பு உயர்ந்த மலையிலிருந்து கீழே நோக்கி வருகிறது. மழை எங்கு பெய்தாலும் ஓடையாய், சிற்றாறாய், அருவியாய் என்ற பல்வேறு வழிகளில் ஆழியைச் சேரும். நீர் ஓடும் வழிகள் பலவாயினும், ஈற்றில் அடைவது ஆழியாம் இறையையே என்ற தத்துவத்தால், சுவாமி வேதாந்தியாகி, இராமகிருஷ்ணமடத் துறவியானார். சுவாமியின் பிற்காலத் தத்துவம் மனத்தின் ஆன்மீக ஆட்சி எனக் கல்வியாளர் வை.கா. சிவப்பிரகாசம் கூறியுள்ளார். புறநானூற்றுப் பாடலிலும் (189) ஆற்றில் மிதக்கும் மிதவைபோல் ஆருயிர், அங்குமிங்கும் அலைப்புண்டு செல்லும் ஆரூயிர், ஆழியாம் இறையை அடைகிறது. இதனாலே வேதாந்தியான சுவாமியின் கல்விக்கொள்கை நலிந்தவர்க்கும் உதவும் கொள்கையாக மாறித் தேசியக்கல்வி, சர்வதேசக்கல்வி என விரிகிறது.

கல்வியாளர்கள், தாம் நடத்தும் பாடசாலைகளில் ஆய்ந்து பல்வேறு தரவுகளைப் பல்வேறு காலங்களில் பெற்றுக் கல்விக் கொள்கை வெளியிடுவர். சுவாமி விபுலாநந்த அடிகளின் அவதானமும், பணிசெய்யும் ஆர்வமும் அவரது சிபார்சுகள் இன்றைய இலங்கைக் கல்வித் திட்டத்தில் பல நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. தாய்மொழிக் கல்வி எல்லோருக்கும் கல்வியில் சமசந்தர்ப்பம், 1927இல் இந்தியாவில் பல்கலைக்கழகம் அமைக்கும் சிபார்சு, பொதுச்சொல் அகராதிப்பணி போல்வன அவரைக்கல்விச் சேவையில் ஈடுபட வழிகோலியது. இன்றைய இலங்கையிலே அவரது அன்றைய சிபாருசுகள் பல பின்பு ஏற்கப்பட்டு, கல்வி வளர்ச்சியில் இலங்கை மேலும் வளர்கிறது.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்" 994

சுவாமியின் உள்ளம் தூயது. அவர் இந்தியாவில் இருந்த போது தமிழினத்தின் சாபக்கேடான தீண்டாமையை ஒழிக்க முனைந்தார். திருவேட்களத்தில் தாழ்த்தப்பட்ட தமிழ்மக்கள் வாழும் சேரிக்குச் சென்று, இராப்பள்ளிக்கூடம் நடத்தியும், அவர்களுக்குப் பல்வேறு சுகாதாரப் பணிகளுக்குதவியும், தனது சில மாணர்களுடன் தொண்டுப்பணி செய்தார். எந்தச் சர்வகலாசாலை, தமிழ்ப்பேராசிரியர் பதவியை வேண்டிக் கொடுத்ததோ, அந்தக் கலாசாலை அவரைத் தொடர்ந்து குறிப்பிட்ட சமூகப்பணி செய்யவிடாது தடுத்தது. அவரது உண்மை உள்ளம், தம்நிலை தளராது விட்டு விலகியது. உள்ளத்தால் உயர்ந்த உத்தமரை உதவியற்ற தமிழ்மக்கள் நெஞ்சில் ஏற்றி நன்றி கூறினர். அரசியல் மேதையான வின்சன்சேச்சில் இந்தியாவில் சாதியமும் சமயக்காழ்ப்புணர்வும் உள்ள வரையும் ஒன்றிப்பு ஏற்படாது என்றார். இந்தியாவிலும் இலங்கையிலும் கல்விக்காக ஏற்பட்ட மதமாற்றங்கள், சமூகப் பாடசாலைகள், இன மதப்பூசல்கள் என்பன சமூக ஒற்றுமை இன்மைக்குச் சாட்சி பகருகின்றன. விபுலாநந்த அடிகளால் ஏற்படுத்தப்பட்ட வைத்தீஸ்வராக் கல்லூரி போன்ற பாடசாலைகளிலும், கிறீத்தவ மிஷனறிப் பாடசாலைகளிலுமே, பல்வேறு தொழிலாலும், சமயத்தாலும் பிரிக்கப்பட்ட தமிழ்பேசும் தமிழினம் படித்து முன்னேறியது என்பது மறுக்க முடியாத உண்மை. சுவாமி விபுலாநந்தரின் கல்லடி சிவானந்த வித்தியாலயத்தில் ஆரம்பத்தில் மூவின மக்களும் (தமிழ், சிங்கள, தமிழ் பேசும் இஸ்லாமிய மக்கள்) ஒன்றாகப் படித்தனர். அகதியான அநாதைப்பிள்ளைகளுக்கு உணவு விடுதி கொடுத்துப் படிக்க வைத்த மகான் கல்வியைப் பொதுமையாக்கி அதன் மூலம் ஒளிமயமான பேதமற்ற சமுதாயம் காண விழைந்தார்.

பிளாற்ரோ என்ற தத்துவஞானி கூறிய அடிப்படைத் தத்துவத்தோடு, சுவாமி விபுலாநந்தரின் பல்வேறு கல்விக் கோட்பாடுகளை ஆய்தல் கல்வி மறுமலர்ச்சிக்கு வழிகாட்டும்.

"கல்வி ஒரு நீண்ட யாத்திரை - அதற்கு
முடிவில்லை"

மேலே கூறப்பட்ட விவரணம் சிந்தனைக்குரியது.

கல்வியின் நோக்கம் பற்றி ஆய்ந்த கோட்பாடுகள் முடிவைக் காட்டவில்லை. சுவாமி கூறிய இன்மலர்கள் மூன்றோ, அவர் ஏற்படுத்திய கல்விச்சேவைகளோ, கல்விச்சிந்தனையால் தீர்வு வருமா என எண்ணத் தோன்றும். அடிப்படைக் கல்விக்கோட்பாடுகளான, (1) மெய்மையியற் கோட்பாடு - அரிஸ்டோட்டல் (2) கருத்தியற் கோட்பாடு - பிளாற்றோ (3) செயன்முறைக் கோட்பாடு - ஜோண்டியூகி (4) நடைமுறைக்கோட்பாடு - பிரெஞ் மெய்யியலாளர் கல்விக்கோட்பாடுகள் அனைத்தும் மனிதனையும் அவனது சூழலையும் அவன் வாழ்வையும் அடிப்படையாகக் கொண்டவை. கிழக்குக் கல்விச் சிந்தனைகள் அறம் - பொருள் - இன்பம் மூலம் வீடுபேறு அடைதலைக் காட்டி நிற்கும். சுவாமி விபுலாநந்த அடிகள் இராமகிருஸ்ண மடம் சார்ந்த துறவியாதலால், ஒன்றே உலகம், ஒன்றே கல்வி, ஒன்றே மனிதம் எனத் திருமந்திரத்தின் பொதுமையை நாடி இன, மத, ஏற்றத்தாழ்வு பாராத சமூக மேம்பாட்டுக்கல்வியை நாடி நின்றார். பொதுமறையாம் திருக்குறள் கூறும் செம்மை வாழ்வு, மெய்மை அழகுசார் மெய்ப்பொருள் ஈட்டம், தன்னை உணர்ந்து உண்மையாய் உலகுய்யத் தன்பணி வழங்கினார். நெஞ்சத்து நல்லம் யாமெனும் நடுவு நிலமை தரும் கல்வி அழகை, எல்லோருக்கும் கிடைக்க எண்ணினார். தாமின்புறுவது உலகின்புறக் கண்டு, எல்லோருக்கும் கல்வி என்றார். இன்று உலகம் போற்றும் கல்வி நோக்கை (Globalization) புறநானூற்றுப் பாடலின் அமுதாய்க் கொண்டார். கல்வி என்ற சொல் கல்லுதல் என்பதில் இருந்து வந்தது என்றதை விளக்கிக் கல்வியில் தேடலை, அதனால் ஏற்படும் மீட்சியை நேசித்தார். கல்வி, விபுலர் வழியில் இன்றைய பிரச்சினைகளைத் தீர்க்குமா? உள்ளக் கமலத்தின் மலர்வால் வேற்றுமையில் ஒற்றுமை காணும் கல்வி தந்தார். இசை பற்றி ஆய்வினால் இசைந்து வாழ்தலே சமூகக்கல்வியின் மாண்பு என்றார். ஒன்றே இறைவன் ஆறுகள் எங்கு பிறந்து ஓடினும் ஈற்றில் அடையும் இடமே ஆழியாம் நெய்தல். எல்லாச் சமயமும் ஒரே இறையைத் தொழுகிறோம் என்ற தத்துவம் பேசினும் சமயச் சண்டைகள் ஏராளம். சுவாமி கண்ட சமயச் சமரசமும், அன்பு நெறியும் பணி செய்து சமத்துவம் காணும் மகா கல்விக் கொள்கை ஆகும்.

"உள்ளக் கமலமும், கூப்பியகைக் காந்தளும், நாட்டவிழிநெய்தலும்
சுவாமி பொறித்த கருத்தின் புதையல் மணிகள். அதன் ஒளி நவில் தொறும்
ஒளிவீசி மனிதனையும் அவன்வாழ்வையும் மேலும் வளம்படுத்தும்."

வாழ்க ஈழத் துறவி விபுலாநந்தரின்
சிந்தனைகள் ! வளர்க கல்வியுலகம் !

சுவாமி விபுலாநந்தரின் மணி மொழிகளிலிருந்து....

ஒவ்வொரு காரியமும் செய்யப் புகும்போது, 'இது நற்காரியமா? இதைச் செய்வதில் நமது நோக்கம் பரிசுத்தமானதா?' என்னும் இரண்டு விஷயங்களை மட்டுமே கவனிக்க வேண்டும். காரியங்களின் பலன்களில் நமக்கு எவ்வித அதிகாரமுமில்லை. தீய செயலால் நமக்கு வரும் நன்மை உண்மையில் நன்மையேயன்று, நன்மை உருத்தாங்கிய தீமையேயாகும்.

நீதிநெறி நிற்கவும் நன்மை புரியவும் நாம் வெளியிலிருந்து சக்தி பெற முடியாது. அந்தச் சத்தி நமக்குள்ளேயே நமது ஆத்துமாவின் நிலை பெற்றிருக்கிறது.

மனம் எப்பொருளை இடைவிடாது சிந்திக்கிறதோ, அப்பொருளைப் போலாகிறது வாழ்வு.

சுவாமி விபுலாநந்தரின் "கங்கையில் விடுத்த ஓலை": அமைப்பும் அழகும்

முனைவர் இரா.மோகன்
முன்னைத் தகைசால் பேராசிரியர்
தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.



'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (புறநானூறு, 192) என்னும் ஒரே பாடலால் - இன்னமும் கூர்மைப்படுத்திக் கூறுவது என்றால், ஒரே அடியாலேயே - உலகப் புகழ் பெற முடியும் எனக் காட்டியவர் சங்கச் சான்றோர் கணியன் பூங்குன்றனார். அதே போல, 'யாழ் நூல்' என்னும் ஒரே ஆய்வு நூலின் மூலம் ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் உள்ளங்களை எல்லாம் ஈர்த்து ஆட்கொண்டவர் சுவாமி விபுலாநந்தர் (1892-1949) ஆவார். பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் குறிப்பிடுவது போல், "அற்றை நாள் தமிழறிஞர்கட்கு இல்லாத ஒரு பெருஞ்சிறப்பு அடிகளாரிடம் இருந்தது. இயற்பியலில் பட்டம் பெற்ற அவர் ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் பெரும்புலமை படைத்தவராக இருந்தார்" (நான் கண்ட பெரியவர்கள், ப.50).

கங்கையில் விடுத்த ஓலை

சுவாமி விபுலாநந்தர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராக வீற்றிருந்த காலத்தில் அவரது தலைமையின் கீழ் தமிழ்த்துறையில் விரிவுரையாளராகப் பணிபுரிந்து வந்தவர் திரு.கந்தசாமிப்பிள்ளை ஆவார். ஆழ்ந்திருக்கும் திரு.கந்தசாமிப்பிள்ளையின் அரிய பண்புகளையும் தனித்திறமைகளையும் கண்டு கொண்ட அடிகள், அவரை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வது தமது தலையாய கடமை என உணர்ந்து ஒரு முடிவு எடுத்தார்; அவருள் பொதிந்து கிடக்கும் புலமைத் திறம் வெளிப்படுவதற்கான நல்வாய்ப்புக்களை உருவாக்கித் தந்தார்; உயர் வகுப்புக்களுக்கு அவர் விரிவுரைகள் நிகழ்த்துவதற்கான வழிவகையினை ஏற்படுத்தி உதவினார்.

அடிகளின் தூண்டுதலால் குடத்துள் இட்ட விளக்காகத் தாம் உண்டு, தம் கடமை உண்டு என்று இருந்த கந்தசாமிப்பிள்ளை குன்றின் மேல் இட்ட விளக்காக மிளிரலானார். அவர் தமக்குப் பல்லாற்றலிலும் ஏற்றம் தந்த அடிகளைத் தம் குருவாகவே எண்ணலானார்; அடிகளோ கந்தசாமிப் பிள்ளையுடன் உணர்ச்சி ஒத்த நட்புரிமை கொண்டு நெருங்கிப் பழக முற்பட்டார். காலப்போக்கில் ஒரு நாள் கந்தசாமிப்பிள்ளை மாரடைப்பால் மரணம் அடைந்த போது, வேலூர் மடத்தில் தங்கி இருந்த அடிகள் ஆழ்ந்த தம் நட்புத்திறம் விளங்க, 'கங்கையில் விடுத்த ஓலை' என்ற தலைப்பில் ஒரு தூது இலக்கியத்தைப் படைத்து பெருமைப்படுத்தினார். கந்தசாமிப்பிள்ளையிடம் கங்கையைத் தூது அனுப்புவதாக அடிகள் பாடிய கையறுநிலைக் கவிதையே 'கங்கையில் விடுத்த ஓலை'. இக் கவிதை யின் அமைப்பும் அழகும் குறித்து ஈண்டுச் சுருங்கக் காண்போம்.

கந்தசாமிப் பெயரோன் கனிந்த குண நலத்தான்

திருக்குறளில் நூறாவது அதிகாரமாக இடம்பெற்றிருப்பது 'பண்புடைமை'. அதன் ஆறாவது குறட்பாவில் 'பண்புடையார் இருப்பதால் உலகம் இருக்கிறது' என்கிறார் திருவள்ளுவர். 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்' (996) என்பது அவரது மறைமொழி. அரம் போலும் கூரிய அறிவு படைத்தவராயினும், மக்கட் பண்பு இல்லாதவரை மரம் போல்வர் எனச் சாடுவார் திருவள்ளுவர் (997). வள்ளுவர் வாக்கினைப் பொன்னே போல் போற்றி வாழும் அடிகள், தம் கவிதையின் தொடக்கத்தில் கந்தசாமிப் பிள்ளையின் உயர்பண்புகளை நிரந்தினிது கூறுகின்றார்.

'இன்றமிழின் இயனூல் எத்தனையோ அத்தனையும் எண்ணி ஆழாங்கண்டோன்' என்றும், 'பணிந்த மொழிப் பெரும்புலவன், கனிந்த குண நலத்தான்' என்றும், 'சொல் வகையும் சொற்றொகையும் சொல்நடையும் உணர்ந்தோன், சொலல் வல்லான், சொற்சோராத் தூய நெறியாளன்' என்றும், 'அழுக்கறுத்த தூய சிந்தை அந்தண்மை அடக்கம், அணி இவைதாம் எனக் கொண்டோன், அறநெறியில் நின்றோன்' என்றும், 'முன்னோர் விரித்துரைத்த அகம் ஏழும் புறம் ஏழும் பயின்றோன்' என்றும், 'உலகு துறந்து, தவநெறியில் தலைப்பட்டோன், அவாவின்மை என்னும் தனிச்செல்வம் திரட்டி வைத்த தாவில் புகழாளன்' என்றும், 'சோழவந்தான் ஊரைச் சேர்ந்து திகழ் சைவநெறித் திருமடத்தில் உறைந்தோன்' என்றும் ஆறு பாடல்களில் 'கந்தசாமிப் பெயரோனின் விழுமிய பண்பு நலன்களை எல்லாம் எடுத்துரைக்கின்றார் 'என்னைக் கண்ட நாள் அன்பு என்னும் கயிறு கொண்டு பிணித்தான் அந்நாள் முதலாக நட்புரிமை பூண்டோம்' என மனம் மகிழ்ந்தும் நெகிழ்ந்தும் மொழிகின்றார்.

ஆருயிர் நண்பர் மாரடைப்பு நோயால் இறத்தல்

நற்றவத்தோரான அடிகள் வடநாட்டுப் பயணம் மேற்கொண்டதை அறிந்து, அவர் வாழ்கின்ற தவப்பள்ளி யாது, அதன் முகவரி என்ன என வினவித் தெரிந்து கொண்டு அடிகளுக்கு ஓலை ஒன்று விடுக்க வேண்டும் எனத் தமது சிந்தையில் கருதி இருந்தார் கந்தசாமி. ஆயின், எழுதிச் செல்லும் விதியின் கையோ வேறு விதமாக எழுதிச் சென்றது. ஓரிரு நாள் கழிவதற்கு முன்னர் மாரடைப்பு நோயால் தாக்குண்டு ஊனுடல் பாரில் விழ, அடிகளின் ஆருயிர் நண்பரான கந்தசாமி வானுலகு புக நேர்ந்தது. இந்தத் துயரச் செய்தி தமது 'செவியில் அனற்பிழம்பாய்ப் புகுந்து உளத்தை உருக்கியது அப்பொழுதில்' என்கிறார் அடிகள். இந்நிலையில் பொங்கி எழும் துயர்க் கனலைப் போக்குவதற்கும், மாயப் பொய்யுலகின் உண்மையினை உணர்ந்து உள்ளம் தெளியவும் கருதிக் கங்கை எனும் தெய்வ நதியின் கரைப்புறத்தை அடைகின்றார் அடிகள். கங்கை நதியின் நீரலைகளும், ஈமத் தீ போல் சிவந்து காணப்படும் மேற்றிசை வானமும், மெலிந்து மறைந்திடும் கதிரவனும், நலிந்தவர் உள்ளம் போல காற்று உயிர்த்துத் தூற்றும் பனித் திவலைகளும், காரிருள் மறைந்து வானவெளிப் பரப்பில் தோன்றி அன்பு சொரிந்திடும் வெண்மதியமும், அக்கரையில் இருந்து சுடுகாட்டு நரிகள் எழுப்பும் அழுகுரலும், இக்கரையில் ஆற்றில் உதிர்ந்த சருகுகளும் குச்சிகளும் அலையால் எற்றுண்டு எம் மருங்கும் செயல் ஒழிந்து கிடப்பதும் அடிகளுக்கு மானிடர்தம் வாழ்க்கையும் இத்தகையதே என்னும் மெய்யியல் சிந்தனையை உணர்த்தி நிற்கின்றன.

"நீர்த்திரையால் இழுப்புண்ட குச்சி ஒன்று கணமும்
நில்லாது மேல்எழுந்தும் கீழ்விழுந்தும் அலைந்து
சீர்க்கரையில் எற்றுண்டு கிடந்தசெயல் நோக்கி
சிந்திக்கின் மானிடர்தம் வாழ்க்கை இது..."

என உணர்ந்து தெளிகின்றார் அடிகள். 'நீர்வழிப் படூஉம் புணை போல, ஆருயிர் முறைவழிப் படூஉம் என்பது, திறவோர் காட்சியில் தெளிந்தனம்' (புறநானூறு, 192) என்னும் கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடல் அடிகள் ஈண்டு நினைவுகூரத் தக்கனவாகும்.

அடிகளாரின் மெய்யியல் சிந்தனைகள்

இன்ப விளையாட்டின் இடையே மக்கள் மேல் எழுந்து குதிக்கின்றனர் 'எமக்கு நிகர் யார்?' என்கின்றனர். மறுகணமே உள்ளத்தில் துன்பமுற மண்ணில் விழுந்து கண்கள் நீர் சொரியச் சோர்ந்து அழுகின்றனர்; மயக்கம் எனும் சுழல் காற்றில் சிக்கித் தவிக்கின்றனர்; மரணம் எனும் பெருங்கரையில் எற்றுண்டு கிடக்கின்றனர்; தத்தம் வினைப்பயனுக்கு ஏற்ப மறுபிறவி எடுத்து மண்ணுலகில் உழல்கின்றனர்; இடையே காதல் வலையில் வீழ்ந்து எண்ணிறந்த வேதனையையும் அனுபவிக்கின்றனர். 'இவை எல்லாம் எத்திறத்தால் நிகழ்கின்றன?' என நீல விதானத்தில் எழில் முகத்தின் சுடர் எழுப்பி எழும் வான் மதியை நோக்கி வினவுகின்றார் அடிகள்.

"மாய்தல் எனும் பேருண்மை, பிறத்தல்எனும் உண்மை,
வந்துதித்தோர் தொல்லுலகில் வளர்தல்எனும் உண்மை,
தேய்தல்எனும் உண்மை: இவை யாரும்உளங் கொள்ளச்
சென்றுதேய்ந்து இறந்துஉதித்து நின்றுவளர் கின்றேன்"

என அடிகளுக்கு மறுமொழி கூறுகின்றது வான் மதியம்.

"தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்
மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கள் புத்தேள் திரிதரும்" (27)

என்னும் உறையூர் முதுகண்ணன் சாத்தனாரின் புறநானூற்றுப் பாடலடிகள் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கனவாகும்.

"இன்துயில்போல் சாக்காடும் இனிதுதுயின் றதன்பின்
எழுவதுபோல் பிறப்பும்'எனும் இயற்புலவன் உரையை
நன்றுணர்தி"

எனக் கூறும் தண்மதியை நோக்கி,

"நரகமொடு சுவர்க்கமும்தான் நண்ணுவது ஏன்?"

என் வினவுகின்றார் அடிகள்

"நற்கனவு சுவர்க்கம், உளம் நலிய வரும் கனவு
நரகம்இவை நல்வினையின் தீவினையின் விளைவாய்
உற்றஎன அறிதி"

என உரைக்கின்றது வான்மதி.

"வருந்தித் தான் கற்றகல்வி மாய்ந்துமறைந் திடுமோ?
மறுமையிலும் உதவுமோ வான்மதியே?"

என அடிகள் கேட்க,

"திருந்துகல்வி எழுமையும் ஏமாப்புஉடைத்து' என்று உரைத்த
செம்மொழியைத் தேர்தி"

என வெண்மதியம் தக்க விடையினைக் கூறுகின்றது.

பிரமசரியம் பேணி ஒரு மாணவனைப் போல் வாழ்க்கை முழுவதும் இலக்கண நூல் பயின்ற தம் நண்பர் கந்தசாமி, வானகம் சென்றாலும் வாளா இராமல் பயில்வார் எனும் உண்மையை உணர்ந்து தெளிந்து உளம் நெகிழ்கின்றார் அடிகள்.

அன்புப்பொதி வாசகங்கள் எழுதி ஓலை வரைதல்

'உலகில் உயிர்கள் தோன்றுவதும் ஒருநாள் மறைவதுவும் தொன்றுதொட்டு இருந்து வரும் இயல்பே' என்னும் உண்மையை உணர்ந்து தெளிவு பெற்ற நிலையில் அடிகளின் துயரம் ஒருவாறு அகல்கின்றது. எனினும் அன்புத் தொடர்(பு) அகலாமையினால் மாற்றம் ஒன்று உரையாமல் வான் புகுந்த தமது கெழுதகை நண்பர் கந்தசாமிக்கு அன்பு பொதி வாசகங்கள் எழுதி ஓர் ஓலை வரைகின்றார் அடிகள்.

'அறிவு அற்றம் (அழிவு வராமல்) காக்கும்' எனும் அறவுரையை எழுதி, அறநெறியால் வாழ்வில் இன்பம் எய்தும் அமைதியையும் எழுதி, 'உறுநட்பு என்றென்றும் நிலைபெறும்' என்று உறுதிப்பாடு எழுதி, 'ஓது விபுலாநந்தன் உரை இவை' என்று எழுதி, 'செல்வ மலி விண்ணாட்டில், செழுங்கலைத் தெய்வம் வாழ் திருநகரில், தமிழ் வழங்கும் தெருவில், ஒரு மனையில் அல்லல் இன்றி வாழ்கின்ற கந்தசாமிப் பேரறிஞனுக்கு இவ்வோலை' என அடையாளமும் பொறிக்கின்றார் அடிகள்.

வையகத்தோர் அன்னத்தை, கிளியை, வான்மேகத்தினை இதுவரை தூதாக விடுத்துள்ளனர் 'யான் எழுதும் ஓலை கொண்டு விண்புகுந்து நண்பரிடம் சேர்க்கும் உதவியினைப் புரியவல்லார் யாவர்?' என நீள நினைந்து பார்த்த அடிகள், சிவபெருமான் செஞ்சடையை எய்தி நின்ற கங்கை எனும் செல்வ நதியே இவ்வுதவி யைப் புரிய வல்லது, இதனால் உமையம்மையின் துணையையும் பெறலாம் எனத் துணிந்து, தெளிந்து, கங்கை நதியினைத் தொழுது ஏத்த முற்படுகின்றார்.

மும்முறை நினைந்து முறைமையின் தெண்டனிட்டு அடி வணங்கி, 'தேவர் நாட்டிடை தங்கியுள்ள நண்பன் கையில் ஈங்கு இது சேர்க!' என்று பெரிய கங்கை ஆற்றின் நீரில் ஓலையை இடலும், அவ் ஓலையை 'ஏந்திய வானதி வேலையை நோக்கி விரைந்து சென்றதுவே!' எனக் கவிதையை முடிக்கின்றார் அடிகள்.

சுருங்கக் கூறின், பழுத்த தமிழ்ப் புலமையும், முதிர்ந்த மெய்யியல் தெளிவும், கெழுதகை நட்பின் உயர்வும் ஒருங்கே மிளிரும் வண்ணம் 'கங்கையில் விடுத்த ஓலை' எனும் இத்தூது இலக்கியத்தைப் படைத்துள்ளார் சுவாமி விபுலாநந்தர் எனலாம். "சுவாமி விபுலாநந்தர் மட்டக்களப்புத் தோன்றல் இலங்கைச் செல்வம். அவர் தமிழிலுங் கலைஞர் ஆங்கிலத்திலுங் கலைஞர். அவர்தங் கலைமனம் அவரது பேச்சிலும் எழுத்திலுங் கமழ்கிறது... சுவாமிகள் முயற்சியுடையவர். அவரது முயற்சி அவரைக் கயிலைக்குச் செலுத்தி மீட்டது பண்டைத் தமிழர் கண்ட யாழை மீண்டும் உயிர்ப்பிக்க ஊக்கியது" (திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்: பகுதி 1, பக்.173-174) என்னும் தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் புகழாரத்தோடு இக் கட்டுரை நிறைவு பெறுவது சாலவும் நன்று.

சுவாமி விபுலாநந்தரின் உள்ளக்கிடக்கையிலிருந்து....

விழுப்பத்தைத் தருகின்ற ஒழுக்கத்தை விருத்தி செய்யும் கல்வியே கல்வி. ஏனைய கல்வி கல்வியெனப் படமாட்டாது. ஒழுக்கம் நூற்கல்வியால் மாத்திரம் எய்யப்படுவதொன்றல்ல. நல்லாசிரியரும் நன்மாணாக்கரும் ஒன்று சேர்ந்து உடனுறையுங் குருகுலவாசங்களில் நித்திய கர்மாநுஷ்டானம் பிரமச்சரியம் முதலிய ஏற்பாடுகளினால் நல்லொழுக்கம் வளர்ச்சிபெறுகின்றது. அத்தகைய குருகுல வாசங்களே உண்மைக்கல்வி நிலையங்களாகக் கருதப்படத்தக்கன.

நோய், மூப்பு, சாக்காடு என்னும் மூன்றும் அறிஞர் அறிவிலிகள் ஆகிய இருபாலாருக்கும் நேர்கின்றவே. அங்ஙனமாதலின் ஞானிகள் மாத்திரம் மரணத்தைக் கடந்தவரென்று கூறுவது யாங்ஙனம் பொருந்தும் என்று ஒரு சாரார் ஐயுறுதல் கூடும். தேகத்தைப் பொய்யெனவுணர்ந்து ஆன்மஞானத்தில் நிறைபெற்று நின்ற ஞானி தேகத்தை விட்டகலும் போது துன்புறுவதில்லை. தேகமேதானென்றெண்ணிய மூடன் துன்புறாதிருப்பதில்லை. இதுவே இவ்விரு பாலாருக்குமிடையிலுள்ள வேறுபாடு. உடல் மூப்புறினும் உள்ளம் இளமை மாறதிருக்குமியல்பு ஞானிக்கு உண்டு. உடலம் நோய்வாய்ப்படினும் உளங் கலங்காது ஆனந்தத்தில் நிலைபெற்றிருக்கும் ஞானி நோயினால் ஏற்படுந் துன்பத்தையடைவதில்லை. அஞ்ஞானிக்குத் துயரத்தை விளைக்கும் நோய், மூப்பு, சாக்காடு என்னும் மூன்றும் ஞானியைச் சாராவென்பது முடிபாகின்றது.

சுவாமி விபுலாநந்தர் : உயர் கல்விச் சிந்தனைகளும் தமிழ்ப் பல்கலைக்கழகம் குறித்த தொலைநோக்கும்



தகைசார் பேராசிரியர் சி. தில்லைநாதன், பேராதனைப் பல்கலைக்கழகம்
கலிபோர்ணியா, அமெரிக்கா

ஓர் ஆசிரியராகத் தன் வாழ்க்கைப் பணியினைத் தொடங்கிய சுவாமி விபுலாநந்தர் இறுதிவரை கல்விப் பணியினை விடாது தொடர்ந்தார். கல்வி பற்றியும் அதனால் விளையத்தக்க நன்மைகள் குறித்தும் அவருக்குத் தெளிவான விளக்கம் இருந்தது. கல்வி மனிதனை ஆக்குவது, உயர்ந்த குணநலன்களை அவனிடத்து உருவாக்குவது, உலகில் அவன் எதிர்கொள்ளும் குழப்பங்களிலிருந்து விடுபட அவனுக்கு வழிகாட்டுவது என்பது அவரது கோட்பாடு. மேல் நோக்கிய சமூக நகர்வுகளுக்குக் கல்வி உதவும் என்பதை விளங்கிக் கொண்டவரும், 'பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம் விழிபெற்றுப் பதவி கொள்ள' வேண்டுமென்பதில் வேட்கை மீதூரப் பெற்ற வருமான சுவாமி விபுலாநந்தர் வாழ்க்கையின் அர்த்தத்தை அறிந்து கொள்ளுவதற்கு உபயோகமான கல்விப் பணியில் மிகுந்த கரிசனை கொண்டார்.

உயர்கல்வி வளர்ச்சி பற்றியும் அவர் ஆழமாகச் சிந்தித்தார். எவ்விதமான கட்டுப்பாடுகளோ பேதங்களோ அற்ற சூழ்நிலையில், சுதந்திரமாகவும் திறந்த மனதோடும் உண்மையையும் நன்மையையும் அழகினையும் (சத்தியம், சிவம், சுந்தரம்) அவாவும் உள்ளத்துடனும் எமது இளைஞர்கள் உயர்கல்வி தேடவேண்டுமென்பது அவரது விருப்பம். அவரது நோக்கில், நடைமுறைப் பிரச்சினைகளை நுணுக்கமாக ஆராய்ந்து சமாளிக்க உயர்கல்வி உதவ வேண்டும். சுய பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் விளங்கி, வளர்த்து, பிறருக்கும் அறிவிக்கும் திறனை அது தரவேண்டும். ஆனால் எம்மிடம் எல்லாம் இருக்கிறது, பிறரிடமிருந்து எதனையும் பெறலாகாது என்ற ஒடுங்கிய பார்வை அவருக்கு உடன்பாடானதன்று. "தொல்காப்பியனாரையும் அவரனைய பெரியோரையும் ஆசிரியராகக் கொண்ட நாம் ஹக்ஸ்லி, டார்வின், தொம்சன் கெல்வின் முதலியோரை ஆசிரியராகக் கொள்ளுவமோவெனில் அறிவுடையோரைச் சாதி சமய பேதம் பாராது ஏற்றுக் கொள்ளுதல் கடனென் போம்" என்கிறார் அவர்.

சுவாமி விபுலாநந்தர் தேசப்பற்றையும் மொழிப் பற்றையும் வற்புறுத்திய அதேவேளை 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர்' என்றும் வலியுறுத்தினார். பன்மொழிப் பயிற்சியை அவர் தூண்டினார், கரைகடந்த அறிவுத் தேடலுக்கு அது உதவுமென்பதால். அறிவியற் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியபோதும், ஆத்மீக ஞானத்தை அவர் மறந்தாரில்லை. ஒரு பறவை உயரப் பறப்பதற்கு இரு இறக்கைகள் தேவைப்படுவது போல ஒரு சமுதாயம் உயர்வதற்கு விஞ்ஞானமும் மெய்ஞ் ஞானமும் அவசியமாகும் என்றார்.

விஞ்ஞான தொழில்நுட்ப அறிவின் அதீத வளர்ச்சி இன்று பல அசம்பாவிதங்களுக்கும் காரண மாகியுள்ளது. தொழில்நுட்பம் மானிடத்தை மேவி விட்டமை திகைப்பூட்டும் வகையில் துலாம்பரமாகத் தெரிகிறது என்று உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞான மேதையான அல்பேட் ஈன்ஸ்ரீன் கூறினார். இப் பிரச்சினை பற்றிச் சிந்தித்த சுவாமி விபுலாநந்தர், நாட்டுப் புற எளிமைக்கு நாம் மீண்டும் திரும்புவது சாத்திய மில்லையாயினும், மானிட நோக்கம் மாறவேண்டும் என்றார். இயந்திரங்கள் இருக்குமாயினும் எந்த இயந்திரத்தையும் விட எண்ணவியலாத அளவுக்கு உயர்ந்த வளமாக மனிதனை மதிக்க, மனிதன் படிக்க வேண்டும் என்பது அவரது கருத்து. உயர்கல்வியின் பயன் எல்லோருக்கும் எட்ட வேண்டுமென்பதும் உலகளாவிய மானிட நேயத்தை அது வளர்க்க வேண்டும் என்பதும் சுவாமி விபுலாநந்தரின் வேட்கை என்பது சொல்லாமலே போதரும்.

"உயர்தரக்கல்வி பயிலும் மாணவர்கள் கைக்கொள் வதற்குரிய முறைகள் இரண்டுள: அவற்றுள், ஒன்று பலதுறைக் கண்ணுஞ் சிலச்சில பயின்று கல்வி நிரம்புதல், பிறிதொன்று ஒரு துறைக் கண்ணுள்ள நூல் களனைத்தினையும் ஐயந்திரிபற ஆராய்ந்து புலமை நிரம்புதல்" என்று 1926 இல் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம் பற்றிய கட்டுரையில் சுவாமி விபுலா நந்தர் கூறினார். இன்று எமது பல்கலைக்கழகங்களிற் பொதுமானிப்பட்டத்துக்கும் சிறப்புமானிப் பட்டத்துக்கு மென அமைந்துள்ள பாட விதானங்கள் இவ்வாறான வையே.

பல்கலைக்கழகம் குறித்த தெளிவான விளக்கம் சுவாமி விபுலாநந்தருக்கு இருந்தது. உலகத்துப் பயன் பாடுகள், சமய நம்பிக்கைகள் அனைத்தையும் ஒருமுகப் படுத்தி விளக்குவதாகவும், அறிவும் நல்லொழுக்கமும் ஆற்றலும் நயநாகரிகமும் கொண்ட மனிதர்களை உருவாக்குவதாகவும் ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டுமென்று அவர் கருதினார். மனித நாகரிகத்தின் உயர்ந்த விழுமியங்களுக்கேற்பச் சிந்திக்கவும் செய லாற்றவும் கூடிய உண்மையும் உறுதியும் பேணும் குடி மக்களைப் பல்கலைக்கழகம் உருவாக்க வேண்டு மென்பது அவரது அவா. மனிதர்களைக் குழு விசுவாச (Group Loyalties)க் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்து மேம்பட வைப்பதாக உயர்கல்வி அமையவேண்டு மென்ற அவரது சிந்தனை முக்கியமானது. எனது குடும்பம், எனது ஊர், எனது சாதி, எனது கன்னை, எனது கட்சி என்பன போன்ற குறுகிய எல்லைகளுக்குள் ஊன்றிய நலன் பேண விழையாத பரந்த நோக்கு அவரால் வேண்டப்பட்டது. **"யாதும் ஊரே, யாவரும் கேளிர்** என்ற வரையே உண்மையிற் கற்றறிந்த ஒரு மனிதரென் பேன்" என்ற அவரது நிலைப்பாடும் இங்கு நோக்கத் தக்கது.

பல்கலைக்கழக கல்வி உரத்துச் சிந்திக்கக்கூடிய சுமுகமான, சுதந்திரமான சூழ்நிலையில் இடம்பெற வேண்டுமென விரும்பிய சுவாமி விபுலாநந்தர் மாணவர்களும் ஆசிரியர்களும் அன்னியோனியமாக உடனுறைந்து அறிவுத் தேடலில் ஈடுபடுவதை விரும்பிய தாகத் தெரிகிறது. கல்வி மேம்பாட்டில் ஆசிரியர் களுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்ட சுவாமி விபுலாநந்தர் அறிவை வளர்ப்பதில் உள்ளார்ந்த ஈடுபாடு கொண்டவர்களாகவும், குறைகள் காண்பதைத் தவிர்த்துச் சிறந்த முன்னுதாரணங்களாக விளங்குபவர் களாகவும் ஆசிரியர்கள் அமைய வேண்டுமென விரும்பினார்.

பல்கலைக்கழகம், பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் புத்தம்புதிய கலைகளைத் தமிழுக்குக் கொண்டு வர வேண்டுமென்பது குறித்து எதார்த்த மாகவும் ஆழமாகவும் சிந்தித்த சுவாமி விபுலாநந்தர், பன்மொழியறிவு, மொழிபெயர்ப்புத் திறன், கலைச் சொல்லாக்கம் ஆகியவற்றின் இன்றியமையா முக்கியத் துவத்தினைக் கண்டுகொண்டார்.

அவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிற் புலமை பெற்றிருந்ததோடு இலத்தீன், கிரேக்கம், வங்காளம், அரபு ஆகிய மொழிகளையும் அறிந்திருந்தார். இயன்றளவு மொழிகளை நன்கு கற்றல் நல்ல குடிமக்களின் கடமை என்றும், அது சர்வதேச நல் லெண்ணத்தையும் இனங்களுக்கிடையிலான இணக் கப்பாட்டையும் வளர்க்க உதவுமென்றும் ஆங்கிலத் தோடு பிற முக்கிய மேலைத்தேய மொழிகளையும், பிற மாகாணங்களின் முக்கிய மொழிகளையும் பயிற்ற எங்கள் பல்கலைக்கழகங்கள் போதிய முன்னேற்பாடு களைச் செய்யவேண்டுமென்றும் பிரபுத்த பாரத என்ற ஆங்கிலச் சஞ்சிகையின் பொன்விழா மலரில் (1947) அவர் எழுதினார்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்ற கொள்கை யுடன் தானே பல மொழிபெயர்ப்பு முயற்சிகளை மேற் கொண்ட சுவாமி விபுலாநந்தர் மொழிபெயர்ப்பு முறை பற்றிய பயனுள்ள கட்டுரையொன்று யாழ்ப்பாணத்துத் தமிழ் வளர்க்கும் பெருங்கழகத்தார் முன்னிலையில் 1922இல் படிக்கப்பட்டது.

உயர்கல்வி வளர்ச்சிக்கு அவசியமானதும் அவசரமானதுமாக இருந்த கலைச்சொல்லாக்கத் துறையில் சுவாமி விபுலாநந்தர் பங்களிப்புக் காத்திரமானதும் விதந்து பேசப்படுவதுமாகும். நடைமுறைப் பிரச்சினைகள் அனைத்தையும் நன்கு பரிசீலித்து, அறிவு வளர்ச்சி ஒன்றினையே தலையாய குறிக்கோளாகக் கொண்டு, பயனற்ற சர்ச்சைகளைப் புறந்தள்ளிவிட்டுச் செயற்படுத்தக் கூடிய ஒரு கலைச்சொல்லாக்க முறைக்கு அவர் வழிகாட்டினார்.

யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் தலைவராக 1927இல் தெரிவுசெய்யப்பட்ட சுவாமி விபுலாநந்தர் 1928 இல் நடைபெற்ற மகாநாட்டு அமர்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றும்போது இலங்கைப் பல்கலைக் கழகம் அமையவிருப்பது பற்றிக் குறிப்பிட்டார். அவர் இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவும் திட்டத்தை உவந்து வரவேற்ற வேளையிற் குறிப்பிட்ட மூன்று விடயங்கள் முக்கியமானவை:

1. பல்கலைக்கழகம் தேசிய வாழ்க்கையைத் துரிதப்படுத்தும்.

2. குடியியல், அரசியல் பொறுப்புக்களில் இலங்கையின் வருங்காலக் குடிமக்களைப் பயிற்றுவதில் மிக முக்கிய பங்கு வகிக்கும்.

3. அப்பல்கலைக்கழகத்தின் கீழைத்தேயக் கற்கைகள் பீடம் தமிழ்க்கற்கைகளின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க வேண்டும்.

பொதுவாகப் பார்த்தால், உலகளாவிய பார்வை, மனிதாபிமானம், தேசப்பற்று, மொழிப்பற்று, அறிவைத் தேடி வளர்க்கும் வேட்கை என்பன அவரது உயர்கல்விச் சிந்தனைகளில் இழையோடியுள்ளமையைக் காணலாம்.

கல்விப்போதனை தாய்மொழி மூலம் மேற் கொள்ளப்பட வேண்டும் என்பதில் சுவாமி விபுலாநந்தர் என்றும் உறுதியுடையவராக விளங்கினார். தாய்மொழி மூலம் தான் சுதந்திரமாவும் தெளிவாகவும் ஆழமாகவும் சிந்திக்க முடியும் என்பது அவரது நிலைப்பாடு. அத்துடன், ஒரு சமூகத்தின் பெருவாரியான மக்கள் கல்வியறிவு பெறுவதற்கும், தங்களுக்குரிய தனித்துவமான பண்புகளுடன் விளங்குவதற்கும் அதுவே உதவும் என்று அவர் கருதினார். தேசிய மொழிகளே அரச கருமமொழிகளாகவும் போதனை மொழிகளாகவும் இருக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தியமையின் நோக்கம் பெருவாரியான மக்களுக்கு கல்வி வாய்ப்பும் தொழில் வாய்ப்பும் அரச நிர்வாகத்தில் பங்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே. தற்காலக் கைத்தொழில்களைப் பயிற்றும் கல்வியின் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டியமையைக் குறிப்பிடாதொழிதல் சாலாது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதலாவது தமிழ்ப் பேராசியராகச் சுவாமி விபுலாநந்தர் பதவியேற்ற போது, அங்கு தமிழ் மொழிக்கு மதிப்பிருக்கவில்லை. தமிழ்த்துறையையும் தமிழைச் சிறப்புப்பாடமாகப் படித்தவர்களையும் ஏனைய துறையினர் எள்ளி நகையாடினர். இலண்டன் பல்கலைக்கழகத்தைப் பின்பற்றிய தமிழ்ப் பாடத்திட்டத்தில் மொழிபெயர்ப்புக்கே முதன்மை கொடுக்கப்பட்டிருந்தது. அச்சந்தர்ப்பத்தில் சுவாமி விபுலாநந்தர் தமிழ்மொழியினதும் இலக்கியத்தினதும் சிறப்பினையும் வரலாற்றையும் மாணவர் மத்தியில் எடுத்துரைத்து, அவர்கள் உள்ளத்தில் தமிழ் ஆர்வத்தைத் தூண்டிவிட்டார் என்று அவரிடம் கற்ற மகேசுவரி பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

“இக்கால அறிவுச் செல்வத்தையெல்லாம் தமிழ் மொழியில் தருதலும் தமிழின் அருமை பெருமைகளை எல்லாம் உலகிற்கு எடுத்துக்கூறலும் பல்கலைக்கழகத்திற் கற்றுப் பட்டம் பெறும் மாணவர்களுக்கு உரிய கடனாகும்” என்று சுவாமி விபுலாநந்தர் கூறியதையும் மகேசுவரி பாலகிருஷ்ணன் நினைவு கூர்ந்துள்ளார்.

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையிலே தமிழ்க்கற்கைகளின்பால் அக்கறை அதிகரித்த அவர் காலத்தில் நவீன தமிழ் இலக்கியங்களும் தமிழ் மொழி வரலாறு, இலக்கிய வரலாறு, செயல்முறைத் திறனாய்வு ஆகியனவும் பாடவிதானத்திற் சேர்க்கப்பட்டன.

கால உணர்வும் தொலைநோக்கும் கொண்ட வரான சுவாமி விபுலாநந்தர் உலக முன்னேற்றத்துக்கு இசைந்த வகையிலும் விஞ்ஞான அடிப்படையிலும் தமிழ் பேசும் மக்களுக்கு உயர்கல்வி வாய்க்க வேண்டி யமையின் இன்றியமையாமையினை உணர்ந்தார். 'கன்னட பாஷைக்காதாரமாக மைசூர் பல்கலைக் கழகமும் தெலுங்கு மொழிக்காதாரமாக ஆந்திர பல் கலைக்கழகமும் ஏற்பட்டு' இருந்தையும் மலையாள மொழிக்கு ஆதாரமாக திருவிதாங்கூரில் ஒரு பல்கலைக் கழகம் ஏற்பட இருந்ததையும் கண்ட சுவாமி விபுலா நந்தர், 'கலைவளம் நிறைந்த தமிழ் மொழிக்கு ஆதாரமாக ஒரு பல்கலைக்கழகம் தனியாக ஏற்பட வேண்டும்' என விழைந்தார். காலத்துக்கேற்ற வகை யிலே தமிழ்க் கற்கைகள் வளர்ச்சியெய்த ஒரு பல்கலைக் கழகம் அவசியப்பட்டதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

தமிழ் நாட்டின் தலைநகரத்தில் 1857இல் நிறுவப்பட்டிருந்த 'சென்னைச் சருவகலாசாலை சுதேச பாஷைகளைப் புறக்கணித்து வருவது' கண்டு அவர் ஏலவே ஏமாற்றமும் விசனமும் அடைந்திருந்தார். இந் நிலையில், "தமிழ்ப் பல்கலைக்கழகம் தமது சாதிய ருடைய வாழ்க்கை முன்னேற்றத்துக்கு இன்றியமை யாச் சாதனங்களுள் ஒன்று ஆதலின் தமிழ்ப் பெருமக்கள் இவ்விஷயத்தின்மேல் ஊக்கஞ்செலுத்தி ஆவன செய்வார்களாக" என்று 1926இல் விவேகா நந்தர் இதழ் வாயிலாக வலியுறுத்தினார். தமிழ்ப் பல்கலைக்கழகம் எத்தகைய சிறப்பியல்புகளை உடையதாய் இருத்தல் வேண்டும், எவ்வெத் துறை-களை அங்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும். அதனை நிறுவுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முயற்சிகள் யாவை, அவற்றுக்கு வேண்டிய பணத்தைத் திரட்டுவது எப்படி என்பன பற்றியெல்லாம் அவர் கூறியனவற்றைப் பார்க்கும்போது அவ்விடயத்தில் அவர் காட்டிய ஊக்கம் துல்லியமாகத் தெரிகிறது. இந்தியாவை 'நமது தாய்நாடு' என்று குறிப்பிடும் சுவாமி விபுலாநந்தர், தமிழ் நாட்டு ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைவது பற்றிப் பேசும்பொழுது, ஈழத்தை அதற்கு அப்பால் வேறாக நோக்கியதாகத் தெரியில்லை. ஆயினும், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏற்படுத்துதற்கேற்ற இடங் களைப் பேசுங்கால், பல உயர்கல்வி வசதிகளையு முடைய யாழ்ப்பாணத்தைப் பற்றிப் பேசுவதையும், பற்பல இடங்களில் பல கலாசாலைகளைக் கொண்ட தாய்த் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைவதை விரும்பிய மையினையும் பார்க்குமிடத்து, ஈழத்தில் தமிழருக்கான ஒரு பல்கலைக்கழகமோ அல்லது பல்கலைக் கழக வளாகமோ அமையவேண்டுமென்பதைக் கருத்திற் கொண்டிருந்தார் என்பதை உறுதியாக ஊகிக்கலாம்.

சுவாமி விபுலாநந்தரின் மணி மொழிகளிலிருந்து....

ஆசையையுடைய உள்ளம் ஆசைப்பட்ட பொருளை நாடியோடுமாதலால், ஆசைவலையிற் சிக்கிய மானிடம் அன்னையை மறப்பது இயல்பாயிற்று. விளையாட்டுப் பொருள் போன்ற நிலையற்ற கல்வி, செல்வம் என்னும் இவற்றின் மேற்செல்லும் உள்ளமானது, இவற்றை வெறுத்து ஜகன் மாதாவை நோக்குமானால், அம்பிகை உடனே பிரசன்னமாவாள். அழுதபிள்ளை பால் குடிக்கும். இதற்குச் சற்றேனும் ஐயமில்லை.

அன்னத்தைப் பெறாத உடல் அறுபது நாட்களுக்கு நிலைத்திருத்தல் கூடுமென்பர். அன்பினைப் பெறாத உயிர் கணப்பொழுதாயினும் நிலைத்திருக்கமாட்டாது. அன்பே உடல், உயிர் இரண்டிற்கும் ஆதாரமானது.

தமிழர் பண்பாட்டு வரலாற்றில் பேராசிரியர் விபுலாநந்த அடிகளாரின் சிந்தனைப் போக்கு

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.



"மட்டக்களப்பு நான் பிறந்த நாடு ஈழத்தின் கிழக்குப் பாகத்திலுள்ளது.
அந்நாட்டு வழக்குமொழி யாழ்ப்பாணத்து வழக்குமொழியினின்றும் வேறுபட்டது."

என்று தன்னையும் தன் ஊரையும் பேச்சு மொழியையும் அறிமுகப்படுத்துகிறார் சுவாமி விபுலாநந்தர். சுவாமி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்த் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றியவர். நம்முடைய பண்பாட்டின் மீட்டுருவாக்கத்திலே சுவாமி ஈடுபட்டிருந்தார். குறிப்பாகப் பண்டைத்தமிழரிடம் இருந்த இசைக்கருவியாகிய யாழினை மீட்டுருவாக்கஞ் செய்யும் ஆய்வு சுவாமிக்கு அழியாப்புகழினைத் தந்துநிற்கின்றது. ஒரு விஞ்ஞானி தன்னுடைய ஆய்வுகூடத்திலே இரவுபகலாக பரிசோதனை கள் செய்வதுபோல அறிவுப் புலவராகிய பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் யாழ் பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். தமிழ், இசை, ஒலியியல், கணிதவியல், வரலாறு ஆகிய துறைகளை உள்ளடக்கியதாக யாழ் பற்றிய ஆய்வு அமைந்தது. மரபுவழி விடயங்களை ஆய்வு செய்வதா அல்லது நவீன விடயங்களை ஆய்வு செய்வதா என்பது பற்றி ஆய்வாளர்கள் எண்ணுவதுண்டு. உயர்கல்வியை முடித்துக்கொண்டு ஆய்விலே ஈடுபட வேண்டுமெனச் சிலர் எண்ணக்கூடும். ஆனால், விபுலாநந்த அடிகளாரோ உயர் கல்வியில் ஆராய்ச்சியின் இன்றியமையாமையினை வற்புறுத்தியுள்ளார். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்துக்குரிய கலைத்திட்டத்தினைச் சுவாமி அமைத்த பொழுது இலக்கணம், சங்கநூல், காப்பியம், இதிகாசம், புராணம், பிரபந்தம், சைவசித்தாந்தம், வைணவசித்தாந்தம், நியாய வேதாந்தம், நூல்களிற்புலமை என்னும் பத்துத்துறைகளை அமைத்து உயர்கல்வி மேற்கொள்ளப் படவேண்டும் என்றும் நாளடைவில் கணிதம், சோதிடம், வைத்தியம், பௌதீகம், சித்திரம், சிற்பம், இசை, நாடகம் முதலிய துறைகளையும் சேர்த்துக்கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார். நவீன எண்ணங்களையுடையவராக சுவாமி விளங்கியபோதும் தொன்மையை அவர் எப்போதும் மறந்ததில்லை.

எங்களுடைய தொன்மையான பண்பாட்டு மரபுகளை நாகரிகமற்றவையாக காலத்துக்கு ஒவ்வாதவை யாகக் கருதும் மனப்பாங்கினை எங்களின் நவீன அறிவு எங்களுக்கு ஏற்படுத்தித் தந்துள்ளமை துரதிருஷ்ட வசமானது என்னும் கருத்தினை மட்டக்களப்பு விபுலாநந்தர் அழகியல் கல்லூரி இயக்குநர் முனைவர் ஜெய்சங்கர் வருத்தம் தெரிவித்துள்ளமை இங்கு நோக்கத்தக்கது. இந்த வகையிலேதான் நம்முடைய பண்டைய இசைக் கருவிகள் சில புதிய கருவிகள் வந்தவுடன் நாகரிகமற்றவை எனக் கைவிடப்பட்டு மறக்கப்பட்டன. நம்முடைய மிகச் சிறந்த இசைக்கருவியாகிய யாழுக்கும் இதே கதிதான் ஏற்பட்டது. சுவாமி விபுலாநந்தர் இதனை மீட்டெடுக்க முனைந்தமை நம்முடைய பண்பாட்டினை மீட்டெடுக்க எடுத்த முயற்சியின் ஒரு பகுதியெனவே கொள்ளவேண்டும்.

யாழுக்கு ஏற்பட்ட நிலை பற்றி அடிகளாரே மிகுந்த மன உளைச்சலுடன் எழுதுகிறார். சிலப்பதிகாரக் காவி யத்திலே அவருக்கிருந்த ஈடுபாடு யாழ் என்னும் நம்முடைய பண்டைய இசைக்கருவி பற்றி ஆராயத் தூண்டியது. ஆனால் அக்கருவிக்கு ஏற்பட்ட நிலை பற்றி சுவாமி பின்வருமாறு எடுத்துரைக்கிறார்:

"முன்னாளிலே பாணன் கையிலும் பாடினி கையிலும் இருந்த யாழ்க் கருவியானது, இளங்கோவடிகள் காலத்தில் இசையாசிரியன் கையிலும் நாடக மகள் கையிலும் போய்ச் சேர்ந்து விட்டது. அதற்கேற்ப அக் கருவியும், 'சித்திரப் படத்துட் புக்குச் செழுங்கோட்டின், மலர் புனைந்து, மைத்தடங்கண் மணமகளிர் கோலம் போல் வனப்பெய்தி' விளங்கியது. ஆளுடைய பிள்ளையார் காலத்தில் தெய்வம் ஈந்த பொற்பலகை மீதேறி அன்பருள்ளத்தை உருக்கிய அருட் கவியாயிற்று, கொங்குவேளும் திருத்தக்க தேவரும் நூலெழுதிய காலத்தில், அரசிளங் குமரிகள் கையேறி அவர் விரும்பிய காதலரை அவருக்கு அளிக்குங் கருவியாயிற்று. பெருமை பொருந்திய யாழிசைக் கருவி மறைந்ததோடு, அதன் வழி எழுந்த பண் மரபும் மறைந்து போயிற்று. யாழ் வாசித்த பாணனுந் தன் தொழிலை இழந்து விட்டான்." (யாழ் நூல்- ப. 38).

இக்கருவியை மீட்டெடுத்துத் தமிழுலகுக்கு வழங்க வேண்டுமென சுவாமி மனதிலே பதித்துக் கொண்டார். பல ஆண்டுகளாக அவர் மேற்கொண்ட ஆய்வின் விளைவாக சங்க கால யாழ் மீளுருவம் பெற்றது. 'யாழ்நூல்' என்னும் காலத்தை வென்ற ஆய்வு நூலும் நமக்குக் கிடைத்தது. நம்முடைய இசைக்கருவிகளெல்லாம் 'கீபோர்ட்' என்னும் பெட்டிக்குள் மறைந்து போகும் இந்தவேளையிலே, நம்முடைய அணிசெய் கலைஞர்கள் 'சிடி' என்னும் இறுவட்டுக்குள் மறைந்துபோகும் இந்த வேளையிலே "யாழிசைக் கருவி மறைந்ததோடு, அதன் வழி எழுந்த பண் மரபும் மறைந்து போயிற்று. யாழ் வாசித்த பாணனுந் தன் தொழிலை இழந்து விட்டான்" என சுவாமி விபுலாநந்தர் கூறிய கூற்று நினைவுக்கு வருகின்றது. நாட்டிய அளிக்கையின்போது நட்டுவாங்கம் செய்பவர் தொடக்கம் ஏனைய அணிசெய் கலைஞர்களும் இல்லாமல் உள்ள நிலை ஏற்பட்டால் கருவிகளும் அவரவர் தொழிலும் இல்லாமல் போய்விடும் பேரிடர் ஏற்படலாம் என்பதை சுவாமியினுடைய சிந்தனைப் போக்கினை நாம் எண்ணும்போது மனத்திலே கொள்ளவேண்டும்.

சுவாமியினுடைய உலகு தழுவிய சிந்தனைப் போக்கின் விளைவே அவருடைய மொழிபெயர்ப்பு முயற்சிகளாகும். பெருந்தொகையான பிறமொழி ஆசிரியர்களின் ஆக்கங்களைத் தமிழ் மொழியிலே தந்து நம்முடைய இலக்கிய வளத்தினை செழுமைப் படுத்தியுள்ளார். மொழிபெயர்ப்பு வெறுமனே மொழிமாற்றம் என்று கொள்ளாமல் அதனை ஒரு கலையாகக் கொண்டவர் சுவாமி விபுலாநந்தர். மூலமொழியின் மூலக்கரு முற்றாக இலக்கு மொழியிலே வந்தமையக்கூடியதாக மொழிபெயர்ப்பு அமையவேண்டுமென்னும் சிந்தனையுடனே சுவாமி மேலைத்தேய இலக்கியங்களை மொழிபெயர்த்தார். இச்சிந்தனையூடாக சுவாமி இரு விடயங்களை நமக்கு உணர்த்தியுள்ளார்.

முதலாவது, " துஞ்சுவர் என்றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்கும்
துன்மதி மூடரைக் கண்டால் புன்னகை செய்பவன்நான்"

Cowards die many times before their deaths;
The valiant never taste of death but once.
Of all the wonders that I yet have heard.
It seems to me most strange that men should fear;
Seeing that death, a necessary end,
Will come when it will come.
Re-enter Servant
What say the augurers?

Servant
They would not have you to stir forth to-day.
Plucking the entrails of an offering forth,
They could not find a heart within the beast.

CAESAR
The gods do this in shame of cowardice:
Caesar should be a beast without a heart,
If he should stay at home to-day for fear.
No, Caesar shall not: danger knows full well
That Caesar is more dangerous than he:
We are two lions litter'd in one day,
And I the elder *and more terrible:*
And Caesar shall go forth.

ஆங்கில நாடகப் பகுதியிலே மொழிபெயர்க்கப்பட்ட பகுதிகளை தடித்த எழுத்துகளில் குறித்துள்ளேன். அதே போல மொழிபெயர்ப்பில், ஆங்கிலப் பகுதியில் காணப்படாதவை ஆனால் சுவாமி மொழிபெயர்ப்பில் தந்துள்ள வற்றையும் தடித்த எழுத்தில் தந்துள்ளேன். இது எதனை நமக்குப் புலப்படுத்துகிறது? சொல்லுக்குச் சொல் அல்லது வரிக்கு வரி மொழிபெயர்ப்பது என்றால் சுவாமியினுடைய மொழிபெயர்ப்பு நிறைவானது அல்ல என எண்ண வைக்கலாம். ஆனால் ஆங்கில மூலத்தை நன்கு படித்துவிட்டு அதன் முலக் கருத்தினை தமிழ் மக்கள் தெளிவாக விளங்கிக்கொள்ளத் தக்க முறையிலே சுவாமி மொழி பெயர்த்திருக்கிறார்.

இவ்வாறு பிறமொழி இலக்கிய மொழிபெயர்ப்பிலே ஈடுபடும்போது மூல மொழி, இலக்கியங்களையும் இலக்குமொழி இலக்கியங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க முயலுதல் இயல்பான செயற்பாடேயாகும். "யவனபுரத்துக் கலைச் செல்வம்" என்னும் கட்டுரையிலே அடிகளார் கிரேக்க மொழி இலக்கியங்களிலே காணப்படும் சில பண்பு களை வடமொழியுடனும் தமிழ்மொழியுடனும் ஒப்பு நோக்குகிறார். எஸ். வையாபுரிப்பிள்ளை, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோர் கிரேக்க இலக்கியங்களைத் தமிழ் இலக்கியங்களுடன் ஒப்பட்டுப் பார்ப்பதற்கு முன்னரே சுவாமி விபுலாநந்தர் அத்தகைய ஒப்பியலாய்வினை மேற்கொண்டிருந்தமை அவருடைய ஆய்வுத் திறனின் இன்னொரு பரிமாணமாகும். சுவாமி இலக்கிய ஒப்பாய்வுடன் மாத்திரம் நிற்காது கிரேக்க-தமிழ் மொழி வரிவடிவ ஒப்பாய்வினையும் மேற்கொண்டிருந்தார். "யவனபுரத்துக் கலைச் செல்வம்" கட்டுரையிலே, இரு மொழிகளினுடைய ஒலி வரிவடிவ ஒற்றுமைகள் பலவற்றை எடுத்துக்காட்டி, "அங்ஙனமாதலின், யவனபுர நெடுங்கணக்கு, தமிழ் நெடுங்கணக்கோடு பூரண ஒற்றுமையுடையதென்பது நிறுவப்படுகின்றது. இவ்விரு மொழியின் வரிவடிவங்கள் ஒன்றினின்றொன்றெழுந்தனவாமோ, அன்றேல் இவற்றின் வேறாகிய மற்றொரு மொழியின் வரிவடிவத்தினின்று எழுந்தனவாமோ என்பதனை மேலாராய்வாம்." என்று குறிப்பிடுகிறார். ஈழத்திலே ஒப்பியலாய்வுக்கு அடிகளாரே முன்னோடியாக விளங்கினார். ஒப்பியல் ஆய்வுக்குப் பயன்படக்கூடிய தரவுகளை மொழிபெயர்ப்புகளுடாகவும் கட்டுரைகளுடாகவும் வழங்கினார். பழைமையினை ஆராய்ந்து புதியவர்களுக்குக் கொடுக்கவேண்டும், பிற நாகரிகங்களை ஆராய்ந்து அவற்றை அறியாத எம்மவர்க்குக் கொடுக்கவேண்டும், எம்மிடம் உள்ளவற்றைப் பிறரும் அறியும்படி கொடுக்கவேண்டும் என்னும் நோக்குகளை அடிப்படையாகக் கொண்டே சுவாமியினுடைய ஆய்வுகள் நடைபெற்றன.

சுவாமிகளினுடைய நவீன நோக்குக்கு அவர் மேலைத் தேய நாகரிகம் பற்றி மிகுந்த விருப்புடனே ஆராய்ந் தறிந்ததும், அவ்வாறு அறிந்த விடயங்கள் யாவற்றையும் நம்மவரும் அறியும் வண்ணம் எழுதி வைத்ததும் நல்ல எடுத்துக் காட்டாகும். நவீன கலைகளெல்லாம் மேற்கே மெத்த வளருகின்றதாம் என அறிந்து அவற்றைத் தமிழ் நாட்டிற்கும் கொண்டுவர முயன்றவர் சுவாமியவர்கள்.

சுவாமியின் யாழ் நூல் ஆய்வு, தேவாரங்களைப் பகுப்பாய்வு செய்யவும் மீள் பார்வை செய்யவும் வழி வகுத்தது. யாழ்நூலின் தேவாரவியலிலே தேவாரங்களுடைய பண்கள் பற்றி விரிவாக நோக்குகின்றார். அப் பண்களுடைய நுணுக்கமான பண்புகள் பற்றியும் வேறுபாடுகள் பற்றியும் விளக்கமாகக் கூறிச் செல்கிறார். இப் பண்கள் சிலவற்றின் மெட்டுக்களிலே நாட்டார் பாடலிசை சேர்ந்துள்ளது தொடர்பாகவும் இடையிடையே குறித்துச் செல்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் நாட்டுப்பாடல் மெட்டுக்களைத் தமது தேவாரப் பாசுரங்களுக்குப் பயன்படுத்தியுள்ள செய்தியினைச் சுவாமி விபுலாநந்தர் தம்முடைய யாழ் நூலிலே குறிப்பிட்டுள்ளார். 'காலத்தாற் பிந்திய சுந்தரரருளிய தேவாரங்கள், நாட்டுப் பாடல்கள் பலவற்றையெடுத்தாண்ட சிறப்பினை யுடையன.' என்று சுவாமி கூறுவர். இந்தளப் பண்ணில் அமைந்த திருப்பதிகம் மகளிரது கும்மிப்பாடலுக்கு இயைந்த சந்தமாக அமை-வதை அவர் குறிப்பிட்டுள்ளார். சுந்தரரின் 10ஆம் பதிகம் 3ஆம் பாடலை ஆராய்ந்தால் அது இயற்றமிழ் யாப்பிலக்கணத்தின் படி எழுசீர் ஆசிரிய விருத்தமாயமைகின்றது. ஆனால் அப்பாடலின் சந்தத்தினை நோக்கும் போது அது வேறு வகையிலே அமைகின்றது. அப்பாடலுக்கு,

தானதனாதன - தானதனா - தன - தானதனாதன - தானதனா
எனக் கட்டளையடி கொண்டு,
"கொடிகளிடைக்குயில் கூவுமிடம் - மயில் ஆலுமிடம்மழு - வாளுடைய
கடிகொள்புனற்கடை கொண்டநுதற் - கறைக் கண்டனிடம் - பிறைத் - துண்டமுடிச்
செடி கொள்வினைப்பகை - தீருமிடந் - திரு - வாகுமிடந்திரு - மார்பகலத்
தடிகளிடம் மழல் வண்ணனிடங் - கலிக் - கச்சியநேகதங் - காவதமே."

எனக் கும்மிச் சந்தத்துக்கேற்பப் பிரித்துக் காட்டுகிறார் சுவாமி விபுலாநந்தர். கி.பி.14ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழில் மக்கள் நாட்டமுடைய பல இலக்கியங்கள் தோன்றின. குறவஞ்சி, பள்ளு, கும்மி, சித்தர் பாடல்கள் என்பன அத்தகைய இலக்கியங்களாகும். இவற்றில் பொது மக்களிடையே நிலவிய பல நாட்டுப் பாடற் சந்தங்கள் பயன் படுத்தப்பட்டன. இவற்றுள், கும்மி பெருவாரியாகக் கையாளப்பட்டதால், இருபதாம் நூற்றாண்டில் யாப்பதிகாரம் என்னும் பா வடிவ நூலை எழுதிய புலவர் குழந்தை அதனை ஒரு யாப்பு வடிவமாகக் கொண்டு அதற்கு இலக்கணம் வகுக்கின்றார். இவ்வாறு தேவாரப் பண்களோடு தொடர்படைய நாட்டாரிசையினை ஆய்வு செய்த சுவாமிகள் தேவாரங்கள் பற்றியும் நுணுக்கமாக நோக்கியுள்ளார்.

கலைச்சொல்லாக்கத்தின் முதற்படியாக "தமிழ் மொழியிலே ஆட்சியிலிருக்கும் சொற்களை ஆராய்ந்து கண்டறிதல் நாம் செய்தற்குரிய முதற் பணியாகும்." என்று சுவாமி குறிப்பிடுகிறார். இந்த வகையிலே வடமொழியி லிருந்து தமிழ்ச் சான்றோர்களால் தமிழுருவாக்கிக்கொள்ளப்பட்ட சொற்களைப் பிறமொழிச் சொற்களென ஒதுக்காது கைக்கொள்ள வேண்டுமெனக் கூறுகிறார். புதுச் சொல்லாக்கத்துக்கு அடிப்படையாக அமைவன பற்றி அவர் விரிவாகக் கூறியுள்ளார். கலைச் சொற்களை ஆக்கும்போது எவ்வெவற்றைக் கடைப்பிடிக்கவேண்டுமென சுவாமி கூறியவற்றைப் பின்வருமாறு நிரைப்படுத்தலாம்:

1. ஓரோவிடத்து ஆட்சிப்பட்ட வடமொழிப் பதங்களைத தமிழில் வழங்குதல் குற்றமாகாது.
2. பிங்கலந்தை, திவாகரம், சூடாமணி நிகண்டு என்னும் நிகண்டுகளிலே வந்த பதங்களை எடுத்தாள்வது பொருத்தமுடையதாகும்.
3. சிவஞானபோதம், சிவஞானசித்தயார் முதலிய உண்மை நூல்களில் வழங்கிய வடமொழிப் பதங்களை ஆன்றோர் வழக்குகளாகக் கொள்ளலாம்.
4. சித்தர் நூல், வைத்திய நூல், சோதிட நூல் என்னும் இவைதம்முள்ளும் தலையாயயினாரியற்றிய நூலில் வரும் மொழிகள் தமிழில் வழங்குவதற்குரியவேயாம்.
5. கலைச்சொல்லாக்கத்திற்கென வடமொழி, ஆங்கிலமொழி, தமிழ்மொழியாகிய மும்மொழியினும் பொருட்பாகுபாடு செய்யும் ஒரு மும்மொழி நிகண்டினை வகுத்தமைத்தல் பெரும் பயன்றருவ தாகும்.
6. இலக்கண நூலாசிரியர் ஆராய்ந்தமைத்த விதிகளுக்கு இயைவாகச் சொற்களை யாக்கிக் கொள்ளுதல் முறையாகும்.
7. உயிருள்ள மொழியானது பிறமொழித் தொடர்பு கொண்டு தனக்குரிய சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும்.
8. இவ்வாறு கலைச்சொற்களை ஆக்கிக்கொள்ளும்போது வினையெஞ்சு கிளவி, பெயரெஞ்சு கிளவி, தொகைமொழி, தொடர்மொழி என்றின்னவற்றிற்கு இலக்கண நூலாசிரியர் கூறிய வரம்பினைக் கடைப்பிடிப்பது எவ்வாற்றானும் இன்றியமையாததேயாம்.

சுவாமியினுடைய சிந்தனைப்போக்கு மரபு தழுவியதாகவும் நவீன போக்குகளை உள்வாங்கியதாகவும் அமைந்தது. துறவியாக அமைந்தபோதம் நடைமுறை உலகியற் செயற்பாடுகளையும் தேவைகளையும் நன்குணர்ந்து பணிகளை மேற்கொண்டார். அவர் அமைத்த சிவானந்த வித்தியாலயந்தான் என்போன்றவர்க்கு இந்த உலகிலே எவ்வாறு எளிமையான வாழ்வினையும் உயர்ந்த எண்ணங்களையும் கொண்டதாக வாழலாம் என வழிகாட்டியது.


சுவாமி விபுலாநந்தரின் மணிமொழிகள் சில.....

பேசுவதிலும் பார்க்கப் பேசாதிருத்தல் நன்று. எழுதுவதிலும் பார்க்க எழுதாமறையின் உண்மையினை இதயத்திலெண்ணி அதனிடையே ஈடுபட்டிருத்தல் நன்று. பாடுவதிலும் பார்க்கப் பகவானுடைய அருட்குணங்களை நெஞ்சில் நினைந்து உளமுருகிக் கண்ணீருங் கம்பலையுமாக இருத்தல் நன்று. ஆண்டவனுடைய வடிவத்தினை ஓவியத்திலெழுதுவதிலும் பார்க்க உள்ளமாகிய கிழியி னிடத்து அவனது திருவுருவத்தினை எழுதுதல் நன்று. (உள்ளமாகியகிழி - உள்ளத்திரைச்சீலை).

கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும் அறியும் பலவாறாகிய உலகவிம்பமனைத்தும் ஒண்டொடி மாதரிடத்தேயுள்ளன. ஆயினும் அவர்பாற் பெறும் இன்பம் துன்பத்தோடு கூடிய சிற்றின்பமாகும். இறைவனிடத்துப் பெறுமின்பமோ எல்லையிகந்த பேரின்பம். அன்பருள்ளத்து நினைந்த உருவமெதுவோ அவ்வுருவத்தோடு எம்மிறைவன் வெளிப்படுவான். அமைதியும், உலகக்குழப்பமுமற்ற தனியிடம் வேண்டுமானால், ஒருவன் தன் உள்ளத்திலே அதைக் காண வேண்டும்.

பேராசிரியர் விபுலாநந்த அடிகளாரின் கவிதை ஆளுமை

பேராசிரியர். சு.பசுபதி,
தகைசார் வாழ்நாள் பேராசிரியர்,
ரொறன்ரோ பல்கலைக் கழகம், ரொறன்ரோ



1. முன்னுரை

சுவாமி விபுலாநந்தரின் பன்முகங்களைப் உருவாக்கியதில் அவருடைய மரபுசார்ந்த தமிழிலக்கியக் கல்வி, ஆங்கிலம், வடமொழி, அறிவியல், கணிதம், இசை இவற்றில் ஆழ்ந்த புலமை, ராமகிருஷ்ண மடத் தொடர்பு ஆகியவை முக்கியமானவை. அதனால், அவருடைய கவிதைகளை நாம் படிக்கும்போதும் அடிகளாரின் இந்த ஆளுமையை மனத்தில் நன்கு இருத்தியே அனுபவிக்க வேண்டும் என்பது நன்கு விளங்குகிறது.

2. கவிநயம்

" உள்ளத் துள்ளது கவிதை — இன்பம்
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் — உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை" என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
" அலகில் சோதி யான — ஈசன்
அருளி னாலே அமையும்
உலகில் எந்தப் பொருளும் — கவிக்கு
உரிய பொருளாம் ஐயா" என்றும் சொல்கிறார். இந்த எண்ணங்களின் எதிரொலி போல, அடிகளாரின் கவிதைகள் இறைவன், ஆன்மிகம், வாழ்த்து, குரு வணக்கம், இரங்கல், மொழிபெயர்ப்பு என்று பலதளங்களில் இயங்குகின்றன. அவற்றுள் மூன்று கவிதைகளை சற்றே விரிவாய் ஆராய்ந்து, அவற்றின் சுவைகளை அனுபவிப்போம்.

உணர்ச்சி, கற்பனை, உவமை, யாப்பமைதி போன்றவை மரபுக் கவிதைச் சிறப்புக்கு இன்றியமையாதவை. இவை அனைத்தும் ஒருங்கே உள்ள அடிகளாரின் ஒரு கவிதை " கங்கையில் விடுத்த ஓலை" . நண்பர் ஒருவரின் பிரிவை ஆற்ற எழுந்த இந்தக் கவிதை உணர்ச்சியில் பொங்குகிறது. வெண்மதியுடன் பேசுதல், கங்கையிடம் நண்பருக்கு ஓரோலை அனுப்புதல் என்ற கற்பனையால் கவிதை மேலும் சிறக்கிறது. " கரும்பிருக்க இரும்பை அயிலுகின்ற மூடர்", " ஈமத்தீப் போற்சிவக்கப் பகலோன்" போன்ற உவமைகள் சுவையைக் கூட்டுகின்றன.

தன் கருத்தைச் சொல்லத் தற்காலத்தில் அதிகம் பாடப்படாத ஒரு பாவடிவத்தைப் பயன்படுத்தி இருக்கிறார் அடிகளார். கலிப்பாவில் தரவின்றித் தாழிசை போன்ற மற்ற உறுப்புகள் இருக்கும் இந்தப் பாடலைத் 'தாழிசை ஒருபோகு' என்று அழைக்கலாம். இது கொச்சக ஒருபோகில் ஒரு வகை. இப்பாடலில் 29 எண்சீர் ஈரடித் தாழிசைகள், ஒரு பொருள் மேல் வந்த நான்கடித் தாழிசைகள் மூன்று, தனிச்சொல், ஆசிரியச் சுரிதகம் உள்ளன. ஓர் ஈரடித் தாழிசையைச் சான்றாய்ப் பார்ப்போம்.

பொங்கியெழும் துயர்க்கனலைப் போக்குவதற்கும் மாயப்
பொய்யுலகில் உண்மையினைப் புலங்கொளற்குங் கருதிக்
கங்கையெனும் தெய்வநதிக் கரைப்புறத்தை அடைந்து
கல்லென்று சொல்லிவிழும் நீர்த்தரங்கம் கண்டேன்.

காய், காய், காய், மா என்ற சீர் வாய்பாட்டில் உள்ள இத் தாழிசையில் எதுகை, மோனை போன்ற தொடை-களை அழகுறக் கையாண்டிருக்கிறார் அடிகளார். எண்சீர் விருத்தத்தில் பாதி போல் தென்படும் இத்தகைய தாழிசை-களை 'மனோன்மணீயம்' , தக்கயாகப் பரணி' போன்ற பல நூல்களில் பார்க்கலாம். காட்டாக,

வாழியநின் மலரடிகள் மௌனதவ முனிவ
மனமிரங்கி அருள்புரிந்தோர் வார்த்தையெனக் கீயிற்
பாழடவி யிற்சுழன்று பாதைவிடுத் தலையும்
பாவியொரு வினையளித்த பலனுறுவை பெரிதே.
(மனோன்மணீயம்)

அடிகளாரின் பிரபலமான 'யாழ்நூலில்' உள்ள இறைவணக்கப் பாடல்கள் அவருடைய இசையாய்வின் ஆழத்தை மட்டுமன்றி, தமிழ் மரபில் அவருக்கிருந்த ஆர்வத்தையும் காட்டுகின்றன. 'ஸ,ரி,க,ம,ப,த,நி' என்ற ஏழு சுரங்களின் பெயர்களாக அடிகளார் இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை என்று கொள்கிறார். இந்தச் சுரங்களுக்கு உரியனவாக வடமொழி நூல்களான நாரதசிக்ஷை, சங்கீத ரத்னாகரம் கூறும் விலங்குகள், பறவைகளின் ஒலிகளைக் கருத்தில் வைத்து, ஏழு பாடல்களையும் அந்த ஏழு பெயர்களில் தொடங்கி அற்புதமாய் பலவகை விருத்தங்களில் அடிகளார் அமைத்துள்ளார். மேலும், உழையென்னும் இசைநரம்பின் ஓசை யானை யின் ஒலி என்பதை அடிப்படையாய் வைத்து, முதல் பாடலில் 'ஆனைமுகத்தானை' வணங்குகிறார்.

"உழையிசை இபமென உருவுகொள் பரனை" என்று தொடங்கி (கருவிளம், கருவிளம், கருவிளம், மா) என்ற அரையடிச் சீர் வாய்பாட்டில் பாடப்பட்ட எண்சீர் விருத்தம் இணைக்குறில் கொடுக்கும் முடுகியல் ஓசையால் கம்பீரமாய் நடைபோடுகிறது. (பிள்ளையாரைக் குறிப்பிடும் "பிடியத னுருவுமை" என்று தொடங்கும், முடுகியல் பயிலும் தேவாரமும் நமக்கு நினைவுக்கு வருகிறது.) மேலும் , இந்தப் பாடல் ' உ' என்று தொடங்குவதில் தமிழ் மரபு ஓங்கி நிற்கிறது.

மந்திரச் சொல்லான ஓங்காரம், அகரம், உகரம், மகரம் என்ற மூன்று எழுத்துகளின் சேர்க்கை என்பர் அறிஞர்கள். 'அ' என்பது 'ஆக்கலையும், 'உ' காத்தலையும், 'ம' ஒடுக்குதலையும் குறிக்கும். தற்காலத்தில் படைப்பு எழுத்தாகிய அகரத்தையும், சம்மார எழுத்தாகிய மகரத்தையும் விட, ரட்சிக்கும் எழுத்தாகிய 'உ'கரம் தான் நமக்கு உகந்தது என்பதால், பல தமிழ்ப் புலவர்கள் 'உ'கரத்தை முதலில் வைத்து தங்கள் நூல்களைத் தொடங்கி உள்ளனர். எடுத்துக் காட்டுகள்: "உலகம் உவப்ப" (நக்கீரர் – திருமுருகாற்றுப் படை), " உலகெலாம் உணர்ந்து" (சேக்கிழார் – பெரிய புராணம்) , " உலகம் யாவையும்" (கம்பர் – இராமகாதை) . 'உ'கரத்திற்கும் பிள்ளையாருக்குமே ஒரு தொடர்பு உள்ளது. எழுத்தாளர்கள் பலரும் காகிதத்தில் முதலில் ஒரு 'பிள்ளையார் சுழி' போட்டுவிட்டு எழுதத் தொடங்குதல் இன்றும் வழக்கமாய் உள்ளது. உருவத்தில் இந்தப் பிள்ளையார் சுழி 'உ'கரம் போலவே இருக்கும். அதனால், ஓங்காரத்தின் நடு எழுத்தான 'உ'கரமே இந்தப் பிள்ளையார் சுழியாய் மாறியிருக்கிறது என்று ஒரு கருத்து உள்ளது. அடிகளாரின் முதல் பாடலும் மிகப் பொருத்தமாய், 'உ'கரத்தில் தொடங்கி, ஓங்காரச் சொரூபனான மூத்த பிள்ளையாருக்கு வணக்கம் தெரிவிக்கிறது.

இதைப் போலவே 'இளி'யோசை மயிலின் ஓசை என்பதால் இளி எனத் தொடங்கும் அடுத்த பாடல் மயிலேறும் முருகனுக்கு வணக்கம் தெரிவிக்கிறது. மற்ற ஐந்து பாடல்களும் இப்படியே மிகப் பொருத்தமாய் மற்ற தெய்வங்களை வணங்குகின்றன. ஏழு பாடல்களும் முறையே எண்சீர் விருத்தம், எழுசீர் விருத்தம், அறுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம், எண்சீர் விருத்தம், கலிவிருத்தம், எழுசீர் விருத்தம் என்ற வகைகளில் அமைந்திருக்கின்றன.கடைசிப் பாடலாக, யாவரும் அறிந்த அடிகளாரின் ஒரு சந்தப் பாடலை எடுத்துக் கொள்வோம்.

"நீல வானிலே நிலவு வீசவே
மாலை வேளையே மலைவு தீருவோம்
சால நாடியே சலதி நீருளே
பாலை பாடியே பலரொ டாடுவோம்".

ஈழத்து மட்டக்களப்பு நாட்டில் உள்ள, நீரிலிருந்து வரும் ஓசையைப் "பாடும் மீனிசை" என்றழைக்கும் மரபு உண்டு. இதைப் பற்றி அடிகளாரின் கற்பனை மிகுந்த "நீரர மகளிர்" என்ற கவிதை யில் வரும் ஒரு பகுதி இந்தக் கலிவிருத்தம்.

இதன் கரந்துறை பாடலாய் (பாட்டுக்குள் பாட்டு)

" நிலவு வீசவே
மலைவு தீருவோம்
சலதி நீருளே
பலரொ டாடுவோம்" என்றும் ஒரு வஞ்சித் துறையைப் பெறலாம்.

யாழ்நூலின் ஒரு பகுதியான ' தேவார இயலில்' அடிகளார் சந்தக் குழிப்புகளை அடிப்படையாய் வைத்து , தேவாரங்களை வகைப்படுத்தியதை நாம் அறிவோம். அவற்றில் உள்ள 'தான தன்னனா' என்ற சந்தத்தில், உள்ள தேவாரம் இது:

"காண உள்குவீர்
வேணு நற்புரத்
தாணு வின்கழல்
பேணி உய்ம்மினே" இதை மேலே உள்ள கரந்துறை பாடலுடன் ஒப்பிடலாம்.

தான, 'தன்ன' 'தனன' என்பவை ஒரே சந்த மாத்திரை அளவே. அதனால், தான தானனா தனன தானனா என்ற சந்தக் குழிப்பில் பாடப்பட்டதே , " நீல வானிலே " என்று தொடங்கும் அடிகளாரின் பாடல். மேலும், இந்தச் சந்தத்தில் உள்ள

"உகலி யாழ்கட லோங்கு பாருளீர்
அகலி யாவினை யல்லல் போயறும்
இகலி யார்புர மெய்த வன்னுறை
புகலி யாம்நகர் போற்றி வாழ்மினே.

என்ற தேவாரமும் நினைத்துப் போற்றற்குரியது. இப்படித் தேவாரத்தில் உள்ள சந்தப் பாடல் மரபை அடிகளாரின் எளிய, அழகு மிகுந்த , இசைப் பாடல் நமக்கு நினைவூட்டுகிறது.

3. நிறைவுரை

சுவாமி விபுலாநந்தரின் கவிதைகள் சிலவற்றைக் கூர்ந்து பார்க்கையிலே, நாம் அதிசயிக்கும் வகையில் பற்பல தமிழ் இலக்கிய, இலக்கண மரபுகள் புலப்படுகின்றன. அதனால், அவருடைய எல்லாக் கவிதைகளையும் கால வரிசைப்படி அமைத்து, நல்ல உரையுடனும், கவிதைகள் எழுதப்பட்ட பின்புலங்கள், வரலாறு பற்றிய அடிக்குறிப்புகளுடனும் ஒரு நூல் வெளியிடப் படுவது அவசியமாகிறது.

நவீன இலக்கிய வளர்ச்சிக்கு சுவாமி விபுலாநந்தரது பங்களிப்பு

ஓய்வுபெற்ற பேராசிரியர் செ. யோகராசா
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நவீன இலக்கியம் என்று கருதப்படுவது நாவல், சிறுகதை கட்டுரை, விமர்சனம், வசன கவிதை, புதுக்கவிதை முதலியனவும் நவீன சூழலுக்கேற்ப புதிய இயல்புகள் பெற்றுக்கொண்ட நவீன கவிதை, நவீன நாடகம் முதலியனவுமாம். தமிழ்ச் சூழலில் இத்தகைய புதிய வடிவங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து, வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வடிவங்கள் அறிமுகமாகின்றன. அன்றைய சூழலில் இவற்றை முற்றுமுழுதாக ஏற்பவருமிருந்தனர் முற்றுமுழுதாக நிராகரிப்பவருமிருந்தனர் பலவற்றை ஏற்று சிலவற்றை மறுதலிப்பவரு மிருந்தனர். சுவாமி விபுலாநந்தர் இறுதியாக கூறப்பட்ட வழியில் சென்றவராவர்.

நவீன கவிதையைப் பொறுத்தவரையில் அதன் மீதான ஈடுபாடு சுவாமி விபுலாநந்தரைப் பொறுத்தளவில் முதன் முதலாக வெளிப்பட்டது நவீன கவிதை முன்னோடியான பாரதியாரது மேதா விலாசத்தை ஏற்றுக்கொண்ட நிலையிலாகும். நவீனத்தின் (Modernity) ஒன்று திரண்டவடிவமே பாரதியார். அவரைப் 'புரிதல்' என்பது நவீனத் தைப் புரிந்துகொண்டதற்குச் சமமானது என்பர். இத்தகைய சூழலில் பாரதியாரை சரியாகப் புரிந்துகொண்ட முன்னோடிகள் இருவருளொருவர் ஈழத்துவரான சுவாமி விபுலாநந்தராகின்றார். அவ்விதத்தில் அன்னார் தனித்தும் இணைந்துமெழுதிய இருகட்டுரைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை, நவீன கவிதை தொடர்பான பாரதியாரின் பன்முக ஆற்றலையும் முதன் முதலாக இனங்காண்பவை.

அதுமட்டுமன்று, செயற்பாட்டு ரீதியில் 'பாரதியார் புகழ் பரப்பிய முன்னோடிகளுள் முக்கியமானவராகவும் சுவாமி விபுலாநந்தர் காணப்படுகின்றார். தமிழ் நாட்டிலே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'பாரதியார் கழகம்' நிறுவுகின்றார். ஈழத்திலே யாழ்ப்பாணம், கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு கல்முனை, கொழும்பு எனப் பல இடங்களிலும் சொற்பொழிவாற்றுகின்றார். ஈழத்துப் பாடநூல்களிலும் பாரதியார் கவிதைகள் இடம்பெறச் செய்கின்றார்.

நவீன கவிதையின் வரவு நீண்ட காலமாகத் தமிழ்நாட்டுப் பண்டித வர்க்கத்தினர் பலரது எதிர்ப்புக் குள்ளாயிற்று (ஈழத்திலும் இத்தகைய நிலை காணப்பட்டது. விரிவஞ்சி இதுபற்றிக் கூறப்படவில்லை) இத்தகைய ஆரோக்கியமற்ற சூழலை சுவாமி விபுலாநந்தர் புரிந்துகொண்டதன் விளைவே அவரெழுதிய ஆங்கிலவாணி என்ற கட்டுரை. "ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டினை ஒருவாறு நிகர்ப்ப, ஆரியமும் தமிழும் வல்ல பண்டிதமணியாருக்கு ஆங்கில மொழிக் கவிநயத்தினை ஒரு சிறிது காட்டுதல் எழுந்த" அக்கட்டுரையில் முக்கியமான – புகழ்பூத்த – மேலைத்தேயக கவிஞர்களான சாசர், ஸ்பென்சர் ஷேக்ஸ்பியர், மில்ரன், வால்ரர் ஸ்கொட், வேட்ஸ்வேத், பைரன், ஷெல்லி, ரெனிசன், கீட்ஸ், றொபேட பிறெளனிக் ஆகியோரது சிறப்பான சில கவிதைகள் குறிப்பிட்ட கவிஞர்களது வாழ்க்கைப் பின்புலத்தோடு அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. "கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளில் அப்பொருள் பற்றி இதுபோன்ற சிறப்புமிக்க அறிமுகக் கட்டுரை வேறெவராலும் எழுதப்படவில்லை" என்று பேராசிரியர் கைலாசபதி (1969ல்) குறிப்பிட்டிருப்பது இவ்வேளை நினைவிற்கு வருகின்றது. எனினும் சுவாமி விபுலாநந்தரது கவிதைகளில் கணிசமானவை உள்ளடக்க ரீதியில் மரபு வழிப்பட்டனவே. உள்ளடக்க ரீதியில் பாரதியாரின் நவீன கவிதையூடாக வெளிப்பட்ட விடயங்கள் பலவும் (உ-ம் : தேசியம்) சுவாமி விபுலாநந்தரது கட்டுரைகளிலேயே இடம்பெற்றுள்ளன.

ஆயினும் அறிந்தோ அறியாமலோ வசன கவிதை முன்னோடியாக பாரதியார் விளங்குவதுபோன்று ஈழத்து வசன கவிதை முன்னோடியாக சுவாமி விபுலாநந்தர் திகழ்வது பலருமறியாதொன்று. 'ஆகாசவாணி'யிலுள்ள மொழி பெயர்ப்புக் கவிதைகளுள் சில வசன கவிதையாகவே விளங்குகின்றன. உதாரணமாக, தெனிசனின் கையறு நிலைச் செய்யுளைப் பற்றிய மொழிபெயர்ப்பானது பின்வருமாறு ஆரம்பமாகின்றது:

"ஆண்டவனது திருமகனே! அருந்திறலுடையாய்! ஆழியா அன்பின் நிலைக்களமோ! நினது திருமுகத்தை நேரிற் கண்டிலமெனினும் உள்ளத்துணர்ச்சியே (நம்பிக்கையே) துணையாக நின்னை நம்பி நின்னருளில் கலந்து நிற்கின்றோம்."

நவீன நாடகத்தோற்றம் ஈழத்திலே முப்பதுகளளவிலே உருவானபோது அம்முயற்சியை வாழ்த்தி வரவேற்றார், சுவாமி விபுலாநந்தர். நவீன நாடக முன்னோடியான பேராசிரியர் க.கணபதிப்பிள்ளைக்கு பின்வருமாறு மடல் எழுதுகின்றார்:

"நானாடகமும் காதலி ஆற்றுப்படையும் கிடைத்தன. முற்றும் படித்து மகிழ்வுற்றேன். பொருளோ பொருள் எனப் பெயரிய மற்றொரு நாடகம் அண்மையில் அரங்கேறியதாக ஈழகேசரியில் படித்தேன். மட்டக்களப்பு வழக்கு மொழியினையும் ஓரிரண்டு நாடகங்களில் படம் பிடித்து வைப்பது நன்று..."

சுவாமி விபுலாநந்தர் தாமே நாடக முயற்சிகள் சிலவற்றிலீடுபட்டுமுள்ளார் இவற்றின் உள்ளடக்கம் புறநானூறு முதலான சங்க இலக்கியங்களிடம் பெறும் அரசர்களது வாழ்க்கைச் சம்பவங்கள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டது. உதாரணமாக, மலையமான் சோழிய வேனாதி திருக்கண்ணன்' இத்தகைய முயற்சியேயாகும்.

நாவல் இலக்கியம் தமிழ்ச் சூழலில் தோற்றம் பெற்று வளர்ந்த காலத்தில் அதன் நோக்கம் காரணமாக (சிற்றின்ப நாட்டம் முதலான ஒழுக்கக்கேடுகள் உருவாக வழிவகுத்தல்) பெரியோர்கள் பலராலும் ஏற்கப்படவில்லை. சுவாமி விபுலாநந்தரும் அவ்வாறே செயற்பட்டார். ஆனால் பிற்காலத்தில் சிறுகதை, நாவல் முதலானவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவற்றின் போக்கிலே மாற்றம் ஏற்பட வேண்டுமென்று வற்புறுத்துகின்றமை குறிப்பிடத்க்கது. நாற்பதுகளளவிலே மறுமலாச்சி எழுத்தாளர் சங்கக் கூட்டமொன்றிலே அவர் பின்வருமாறு வற்புறுத்தியிருப்பது இதற்குச் சான்றாகின்றது.

"நீங்கள் உங்கள் மனோதர்மத்தின்படி நன்றாக எழுதுங்கள். புதியன புதியனவாக எழுதித் தமிழை வளருங்கள். ஆனால் மற்றவர்களைக் கண்டிக்கத் துணியாதீர்கள். சொந்த மண்மணம் வீசும் சிறு கதைகளையும் நாவல்களையும் அதிகமாக எழுதுங்கள். எழுத்தில் எப்போதும் சொற்செட்டும் இலக்கணமும் கருத்து ஆழமும் இருக்க வேண்டியது பிரதானம்".

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்த ஈழத்துப் புலவர்கள் பலர் சமகாலப் பிரச்சினைகள் பலவற்றை பழந்தமிழ்ப் பிரபந்தங்களூடாக வெளிப்படுத்த முனைந்தனர். (உ-ம் : தி.த.சரவணமுத்துபிள்ளையின் தந்தை விடுதூது – பொருந்தாமணம் பற்றியது) இருபதாம் நூற்றாண்டிலும் இம்முயற்சி தொடர்ந்தது. பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆற்றுப்படை வடிவத்தில் யாழ்ப்பாணப் பண்பாட்டு வழக்காறுகளைப் பதிவு செய்தார். (அதுவே காதலி ஆற்றுப்படை). இத்தகைய முயற்சிகளை சுவாமி விபுலாநந்தர் வரவேற்றார். (பார்க்க : பேராசிரியர் கணபதிப்பிள்ளைக்கு எழுதியதாக இக்கட்டுரையில் ஏலவே தரப்பட்டுள்ள மடல்)

நாவல் சிறுகதை போன்றே 'கட்டுரை' யும் நவீன இலக்கிய வடிவங்களுள் ஒன்றேயாகும். ஏனோ தெரிய வில்லை, இது பற்றி ஆய்வாளர்கள் பலரும் கவனத்திற்கெடுப்பதில்லை. அது எவ்வாறாயினும் ஈழத்தில் முதன் முதலாக கட்டுரைகள் அதிகமெழுதியவரென்ற விதத்தில் சுவாமி விபுலாநந்தர் மிக முக்கியமானவர் என்பதே கவனத்திற்குரியது. அதுவும் அவ்வகைக் கட்டுரைகள் தமிழ்மொழி, தமிழ் இலக்கண பழந்தமிழ் இலக்கியம், இசை, கல்வி, அறிவியல், சமயம் வாசிப்பு, நவீன இலக்கியம், உடல் நலவியல் முதலான பல்துறைகள் சார்ந்தனவாக விருப்பது அவற்றின் சிறப்பியல்பு. சுவாமி விபுலாநந்தரது சமகால அறிஞர்களெவரும் அவ்வாறு பல்துறை சார்ந்த கட்டுரைகளை எழுதியவரல்லர் என்பதே கவனத்திற்குரியது.

விமர்சனமும் நவீனகால இலக்கிய முயற்சியேயாகும். புனைகதைகள் உருவானபோது அவற்றை விமர்சிக்க எழுந்த இவ்வடிவம் பின்னர் முற்பட்ட இலக்கியங்கள் உட்பட சமூகத்துடன் தொடர்புபட்ட பல்வேறு ஆக்க இலக்கிய முயற்சிகளையும் விமர்சிப்பதாகப் பரிமாணம் பெற்றது. இவ்விதத்தில் சுவாமி விபுலாநந்தர் பார்வையானது இரசனைமுறை விமர்சனம், ஒப்பியல் விமரிசனம் வரலாற்றுமுறை விமர்சனம் முதலான பல்துறை சார்ந்தும் படரலாயிற்று. இறுதியாகக் குறிப்பிட்ட விமர்சன முறை தவிர ஏனைய அனைத்தையும் கோட்பாட்டு ரீதி யாக மட்டுமன்றி செயன்முறை ரீதியாகவும் அவர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்கூறியவாறான சுவாமி விபுலாநந்தரது நவீன இலக்கியம் சார் எழுத்தாண்மை காரணமாகவே சென்ற நூற்றாண்டின் நாற்பதுகளின் இறுதியில் உருவான இலங்கை எழுத்தாளர் சங்கம் அதன் தலைமை பதவியை (செயலாளர்கள்:மார்ட்டின் விக்கிரமசிங்க, கே.கணேஸ்) அடிகளாருக்கு அளித்துத் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது எனலாம்!

"நம்பிக்கையும் செயலும்" பற்றிய சுவாமி விபுலாநந்தரின் ஆக்கத்திலிருந்து....

நம்பிக்கையினாலே செய்கை உண்டாகிறது. நான்கு வீதிகள் சந்திக்கின்ற ஓரிடத்தே நின்று கொண்டு வடக்கு நோக்கிப் போகவா, கிழக்கு நோக்கிப் போகவா, தெற்கு நோக்கிப் போகவா, மேற்கு நோக்கிப் போகவா என்று தன்னுள்ளே ஐயப்பாடடைபவன் ஒருவழியும் போக மாட்டான். ஐயம் செயலுக்குச் சத்துரு.

நமது அறிவு வளருகின்ற நிலையில் இருக்கின்றது. எல்லாப் பொருட்களையும் பற்றிய நிச்சய புத்தி நமக்கில்லை. ஆதலினால் ஐயப்பட வேண்டியதும் அவசியந்தான். ஐயத்தினாற்றான் ஆராய்ச்சி பிறக்கின்றது. ஆராய்ச்சியிலிருந்து துணிவு ஏற்படும். துணிவு என்பது நம்பிக்கை. இந்த நம்பிக்கையினாலே தான் செயல் ஆகிய கருமம் விளைகின்றது.

ஐயத்திலே தொடங்கலாம், ஆனாற் செய்கையிலே முடிவு பெற வேண்டும். செய்கையிலிருந்தே நன்மை தீமைகள் விளைகின்றன. சிந்தை இன்றெனிற் செய்வினையில்லை. ஆயினும், நன்னோக் கங்கள் நம்மளவிலே ஒருவனை நல்லவனாக்க மாட்டா.

பெருமையும், சிறுமையும் செய்கையினால் விளைகின்றன. "செயற்கரிய செய்வார் பெரியர்" எனக் கூறிய இன்றமிழ்ப் புலவர் "பெருமைக்கு மேனைச் சிறுமைக்குத் தத்தம் கருமமே கட்டளைக்கல்" என்றார். கருமமே உயர்வு தாழ்வுக்குக் காரணமானது.

பேராசிரியர் விபுலாநந்த அடிகளாரின் பன்முக ஆளுமை

றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர்
மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை



இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள காரைதீவில் பிறந்த மயில்வாகனம் என்னும் இயற் பெயரையுடைய சுவாமி விபுலாநந்தர் தமிழ்கூறு நல்லுலகம் போற்றும் பேரறிஞரும் மேனாட்டறிஞர்களாலும் மதிக்கப்படும் சிறந்த புலமைத்துவம் மிக்கவருமாவார். இத்தகைய பெரும் புகழை சுவாமி விபுலாநந்தர் பெறுவதற்கு பன்முக ஆளுமையடையவராக அவர் இருந்தமையே காரணம் என்பது மிகையான கூற்று அல்ல.

கல்வியில் விஞ்ஞானத் துறையில் தேர்ச்சியுடையவராக அவர் விளங்கினாலும் கலை, இலக்கியம், நாடகம், மொழி ஆராய்ச்சி, மொழிபெயர்ப்பு, பன்மொழிப் புலமை, மதப்பணி எனப் பல்துறை நோக்கி தன் ஆளுமையை அவர் விருத்தி செய்து கொண்டார். கவிதைகளை இயற்றியதன் மூலம் இலக்கியப் படைப்பாளியாகவும் அவர் மிளிர்ந்தார்.

தனது பதினேழாவது வயதில் புனித மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராகத் தனது பணியினை ஆரம்பித்த மயில்வாகனனார், பின்னாளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் அதிபராகவும் கடமையாற்றினார். 1922இல் சென்னை மயிலாப்பூரின் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்து துறவற வாழ்க்கைக்குத் தன்னை அர்ப்பணித்து 1924இல் 'சுவாமி விபுலாநந்தர்' என்னும் நாமம் பெற்று துறவியானார். 1925இல் இலங்கைக்கு மீண்டு பாடசாலைகளை நிறுவுவதில் முன்னின்று உழைத்தார். ஆசிரியராகவும், அதிபராகவும் கல்வித்துறையில் தன் பங்களிப்பை வழங்கிய அடிகள், பாடசாலைகளை நிறுவுவதிலும் முன்னின்றுழைத்தார்.

சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவப்படுவதற்கு அடிகளாரால் முன்வைக்கப்பட்ட கருத்துகள் அடங்கிய விளக்கம் மூலகாரணமாய் அமைந்தது. 1931இல் அப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப்பேராசிரியராகவும் பொறுப்பேற்று 1933 வரை அப்பணியினை ஆற்றினார். 1943இல் இலங்கைப் பல்கலைக்கழக முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் அவர் நியமிக்கப்பட்டார். ஒப்படைக்கப்பட்ட பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதில் அவருக்கிருந்த அக்கறையும், துணிவும், உறுதியும், நேர்மையும் பேரறிஞர் பலராலும் பாராட்டப்பட்டன.

தமிழ், ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம் ஆகியவற்றுடன் சமஸ்கிருத மொழியிலும் புலமை மிக்கவராக இவர் இருந்தார். மொழி, நாடகம், இசை முதலான ஆய்வுகளுக்கு சமஸ்கிருத மொழியறிவு அவருக்குப் பயன்பட்டது. ஆங்கிலத்தில் அவர் எழுதிய கட்டுரைகளும் ஆங்கில நாடக மற்றும் ஆங்கில இலக்கியங்களை தமிழில் மொழி-பெயர்த்து வெளியிட்ட ஆக்கங்களும் தமிழ் மரபில் புதிய கருத்துருவாக்கங்களை அறிமுகம் செய்தன. பன்மொழி அறிவை ஒப்பீட்டு ஆய்விற்கு அவர் பயன்படுத்தியமை பலருக்கும் வழிகாட்டியாக இருந்தது.

இசைத்தமிழ் ஆய்வில் சுமார் பத்தாண்டுகள் ஆராய்ச்சி செய்து பழந்தமிழின் இசையை யாழ் நூல் மூலம் வெளிக்கொணர்ந்தார். இசை ஆராய்ச்சிக்கு கணித அறிவு இன்றியமையாததாகும். யாழ் நூல் இசையாராய்ச்சியில் சிறந்து விளங்குவதற்கு கணிதம், சோதிடம், பௌதிகம் இவற்றுடன் கர்நாடக இசை ஆகியவற்றில் புலமை பெற்றவராக விபுலாநந்த அடிகள் இருந்தமை மிக முக்கியமான காரணியாகும். இந்நூலின் மூலம் வழக்கொழிந்திருந்த பழந்தமிழ் இசை மரபிற்கு இவர் புத்துயிர் அளித்தார்.

கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப்பிள்ளையார் இரட்டை மணிமாலை, மண்டூர் பதிகம், ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று, தேவி வணக்கம் முதலான சமயம் சார்ந்த பல கவிதைகளையும் குரு வணக்கம், விவேகானந்த பஞ்சகம், குருசரண தோத்திரம், ஆறுமுகநாவலர் முதலிய வாழ்த்துப் பாக்களையும், கங்கையில் விடுத்த ஓலை, மகாலிங்கசிவத்தின் மலர்நிகர் மாட்சி முதலான இரங்கற் பாக்களையும் சுவாமி விபுலாநந்தர் இயற்றியுள்ளார். அவரது கவிதைகளில் 'ஈசனுவக்கும் இன் மலர் மூன்று' மிகவும் பிரசித்தி பெற்றதும் பலராலும் விரும்பப்படுவதுமான கவிதையாகும். அதேபோல அவரது 'நீரர மகளிர்' கவிதையும் நயம் மிக்க கவிதை யாகும்.

கவிதையில் 'கங்கையில் விடுத்த ஓலை' என்னும் நெடும்பாடல் அடிகளின் கற்பனைச் சிறப்பினையும் நட்பின் மேன்மையையும் ஒருசேர உணர்த்துவன. வாழ்க்கையின் நிலையாமை பற்றிய கருத்துக்களையும் அடிகள் இதில் இணைத்துள்ளார். கற்பனைச் சிறப்பிற்கு உதாரணமாக பின்வரும் பாடலை எடுத்துக் காட்டலாம்.

"மேற்றிசைவான் ஈமத்தீ போற்சிவக்கப் பகலோன்
மெலிந்துமறைந் திடல்கண்டேன் நலிந்தவருள் ளம்போற்
காற்றுயிர்த்துப் பனித்திவலை தூற்றுதலைக் கண்டேன்
காரிருள் கணமிரிய வானவெளிப் பரப்பில்"

'தேவி வணக்கம்' என்னும் பாடல் பகுதியிலிருந்து சமயப் பொருண்மையில் அமைந்த பாடலுக்கான பின்வரும் உதாரணம் எடுத்தாளப்படுகின்றது.

"வீயாத பெருவலிமை வைணவியே பிரபஞ்ச வித்து மாகித்
தாயாகித் தாரணியைத் தோற்றுவித்த தனிமுதலே தவத்தர் வாழ்வே
மாயாரூ பத்துடனே மருளளிக்கும் வனப்புடையாய் மயக்கந் தீர்த்துத்
தீயாத பெருமுத்தித் தடங்கரையிற் செலுத்துகின்ற செல்வத் தாயே"

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றியபோது இலக்கிய இலக்கணங்களைக் கற்றறிந்த பண்டித மரபினரால் கண்டிக்கப்பட்டதும் ஏற்றுக்கொள்ளப்படாததுமான பாரதியின் பாடல்களை சமூக அங்கீகாரம் பெறும் வகையில் கல்வியினூடாக இணைத்தவர் விபுலாநந்த அடிகள் ஆவார். அங்கு இவர் 'பாரதியார் கழகம்' ஆரம்பித்திருந்தார். இலங்கையில் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளை அவர் நிருவாகித்தபோது முதலாம் வகுப்பு தொடக்கம் எட்டாம் வகுப்பு வரையிலான பாடத்திட்டத்தில் பாரதியின் பாடல்களைத் தேர்ந்தெடுத்து வழங்கினாரென அறிய முடிகின்றது.

பாரதியின் கவித்துவத்தை நயந்து அவர் எழுதிய கட்டுரைகளும் பேசிய பேச்சுக்களும் அநேகம். பாரதியின் புகழையும் அவனது கவிதைகளின் முக்கியத்துவத்தையும் அறியச் செய்ததிலும் அந்தப் 'பாட்டுப் புலவனை'ச் சரியாக இனங்கண்டதிலும் அடிகளின் நுண்ணறிவும் தீர்க்கமான சிந்தனையும் குறிப்பிடற்பாலன.

'பாரதியார் கவிநயம்' என்னும் கட்டுரையில் பாரதியின் கவித்திறனை நயந்துரைக்கும் அடிகளார் கட்டுரையின் இறுதியில் வருமாறு உரைத்துள்ளார்.

"ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்தபின்
வாராது போல வந்த மாமணியைத் தோற்போமோ?"

என்று பாரதியார் சுதந்திரத்தைப் பற்றிப் பாடுகிறார். அவர் நமக்கு அளித்த சுதந்திரம் ஒன்று உண்டு. அது நமது மொழியை நாமனைவரும் வழங்குவதற்கும் பெற்ற சுதந்திரம். ....ஆயிர வருடத்திற்கு ஒருமுறை தமிழ் என்னும் கற்பக விருட்சத்தில் அரும்பி மலருகின்ற புஷ்பத்தைப் போன்ற: இக்கவிவாணர், சிறுகுழந்தைகள் முதற் பெரிய பண்டிதர்களீறாக அனைவரும் படித்து இன்புறுதற்குரிய அழகிய தமிழ்ப்பாடல்களைப் படித்தின்புறுஞ் சுதந்திரத்தை அவர்களுக்குக் கொடுத்துள்ளார். இளங்கோவடிகள், கம்பர் என்னும் மலர்களைத் தந்த தெய்வத்தரு "ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்" வாராது வந்த செல்வத்தைப் போல பாரதியாரென்னும் மலரையளித்திருக்கிறது. இம்மலரை நாம் பிறர் சொற் கேட்டுத் தோற்றுவிடுவோமோ?

பாரதியை வெற்றியாளனாக்கியதில் அடிகளுக்கு கணிசமான பங்களிப்பு இருந்துள்ளமையை இச் சான்றுகள் நிறுவுகின்றன.

கலைச்சொல்லாக்க முயற்சியில் விபுலாநந்த அடிகளின் பங்களிப்பு கணிசமானதாகும். கணிதம், வரலாறு, பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், உடல்நலவியல், புவியியல், விவசாயவியல் ஆகிய ஒன்பது துறைகளில் கலைச்சொற்களை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட அறிஞர்கள் அடங்கிய குழுக்களில் இரசாயனவியல் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட இவர், அனைத்துக் குழுக்களுக்கமான பொதுத் தலைவராகவும் நியமிக்கப்பட்டமை இவரது சிறந்த தலைமைத்துவ மற்றும் பல்துறை அறிவுத்திறன் மிக்க ஆளுமைக்கு ஆதாரமாக அமைவதாகும். 1934 தொடக்கம் 1938 வரை கலைச்சொல்லாக்க முயற்சியில் இவ்வொன்பது குழுக்களும் ஈடுபட்டன. 1938இல் பதினாயிரம் சொற்களைக் கொண்ட 'கலைச்சொற்கள்' என்னும் நூல் வெளியிடப்பட்டது.

தமிழ்மொழியின் தனித்துவமும் ஒலியமைப்பும் பாதிப்புறாத வகையில் இக்கலைச்சொல்லாக்க முயற்சியில் அடிகள் கவனம் செலுத்தியமையும், சுருக்கக் குறியீடுகளைப் பயன்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கவை. கலைச்சொல்லாக்கம் தொடர்பாக தமிழகத்திலும் ஈழத்திலும் வெவ்வேறுபட்ட அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டு வரும் பிற்கால சூழலில், எண்பது ஆண்டுகளுக்கு முன்னரேயே தீர்க்கமான சிந்தனையுடன் அடிகள் செயற்பட்டமையும் குழுக்களை வழிநடத்தியமையும் அவரது ஆளுமையை வெளிப்படுத்தும் சான்றாயமைவனவன. தாய்நாட்டிற்காகத் தம் உயிரையும் அர்ப்பணம் செய்ய அவர் தயாராயிருந்தார். முதலாம் உலகப் போர்க்காலத்தில் ஆயுதம் ஏந்தவும் தயாராக இருந்த அடிகள், சாரணர் பயிற்சியும் பெற்றிருந்த ஒருவராகத் திகழ்ந்தார். அஞ்சாமை, துணிவு, வீரம் ஆகியன அவரது குணவியல்புகளில் குறிப்பிடத்தக்கவை.

திறனாய்வாளராகவும் அவர் விளங்கினார். அவரது கட்டுரைகளில் அதனைக் கண்டு தெளியலாம். உதாரணமாக: பிளேட்டோவின் 'VANQUET' ஐ முன்மாதிரியாகக் கொண்டு 'பாவலர் விருந்து' என்னும் உரையாடற் பாங்கான இலக்கியத்தினை அடிகள் படைத்தார். கிரேக்க நாட்டறிஞர்களுடன் ஒத்த ஒன்பது சங்கப்புலவர்களை எடுத்தாண்டு அன்பு பற்றி இவர்களது கருத்துகளை உரையாடற் பாங்கில் இவர் அமைத்துள்ளார். பிளேட்டோ இலக்கியத்தையும் புறநானூற்றையும் இணைத்து எழுதப்பட்ட இவ்வாக்கம், திறனாய்வில் புதுமை முயற்சியாகவும் கருதப்படுகின்றது.

மதங்க சூளாமணி என்பது ஷேக்ஸ்பியரைக் குறிப்பதற்கு அடிகள் பயன்படுத்திய சொல்லாகும். மதங்கர் என்பது கூத்தர் எனப் பொருள்படும். அவர்களுள் சிரோரத்தினமாக அதாவது சூளாமணியாக விளங்குபவர் ஷேக்ஸ்பியர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கிரேக்க - தமிழ் - ஆங்கில நாடக மரபுகளில் ஆழ்ந்த அறிவும் ஈடுபாடும் கொண்டிருந்த இலவர், நாடக இலக்கியத்தில் மேனாட்டு மரபுகளையும் அறிமுகம் செய்தார். தொல்காப்பியர் கூறும் ஒன்பது சுவைகளை ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் கண்டறியக் கூடும் எனக் குறிப்பிடுவார்.

தமிழியல் ஆராய்ச்சி நெறிகளில் ஒப்பியல் நோக்கினை அறிமுகம் செய்த வகையில் இத் துறை முன்னோடியாக அடிகள் கருதப்படுகின்றார். அவரது ஒப்பியல் நோக்கினைப் பற்றிக் கூறும்போது, தமிழ் இலக்கியங்களை ஆங்கில இலக்கியங்களுக்கு நிகராகக் காட்டுவதிலும் ஆங்கில எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்களின் சிறப்பைப் பாராட்டுவதிலும் அவர் நடுநிலை தவறாது செயற்பட்டமையைச் சுட்டிக்காட்டி ஒப்பியல் நெறியில் நடுநிலைமையுடன் செயற்பட்டவரென அடிகளை க.கைலாசபதி அவர்கள் பாராட்டுவார்.

மேற்றிசைச் செல்வம், நாகரிக வரலாறு, எகிப்திய நாகரிகம், யவனபுரத்துக் கலைச்செல்வம், பூஞ்சோலைக் காவலன், மதங்க சூளாமணி ஆகிய கட்டுரைகள் அடிகளாரின் ஒப்பியல் ஆய்விற்குக் சான்றுகளாயமைபவை.

பதிப்பித்தல் துறையிலும் அடிகள் ஈடுபட்டமைக்கு நவநீத கிருஷ்ணபாரதியாரின் 'உலகியல் விளக்கம்' என்னும் நூல் சான்றாகின்றது. இந்நூலினை அடிகள் பதிப்பித்ததுடன் இந்நூலுக்கு தமிழில் பதிகம், கடவுள் வாழ்த்து என்பவற்றையும் ஆங்கிலத்தில் அருமையான விமர்சனமும் எழுதினார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றியபோது ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை தாபிப்பதற்கு தி.சதாசிவ ஐயருக்கு உறுதுணையாக இருந்ததுடன் அச்சங்கத்தில் அங்கம் வகித்து அதனூடாக பிரவேச, பால பண்டித பரீட்சைகளை நடத்துவதற்குப் பேருதவி புரிந்தார்.

விபுலாநந்தரின் ஆக்கங்களை நான்கு தொகுதிகளாக மட்டக்களப்பு, சுவாமி விபுலாநந்த நூற்றாண்டு விழாச்சபை வெளியிட்டுள்ளது. இத் தொகுதிகளை வ.சிவசுப்பிரமணியம், சா.இ. கமலநாதன் ஆகியோர் பதிப்பித்துள்ளார்கள். இத்தொகுதிகள் அடிகளின் பன்முக ஆளுமையினை வெளிக்காட்டும் ஆவணங்களாக விளங்குகின்றன.

அடிகள் மொழிபெயர்ப்பிலும் ஈடுபட்டார். ஆழ்வார் பாடல்களையும் திருவிளையாடற் புராணத்தின் சில பகுதிகளையும் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அதேபோல பூஞ்சோலைக்காவலன், ஆங்கிலவாணி, மதங்கசூளாமணி முதலான சிலவற்றை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்துள்ளார். தமிழில் அமைந்துள்ள மொழிபெயர்ப்புகள் எளிமையும் தெளிவும் மிக்கவை. அத்துடன் தமிழ்ப் பண்பாட்டினையும் மரபையும் பேணும் வகையிலமைந்தவை.

மில்டனின் Paradise Lost என்னும் உலகப் புகழ் பெற்ற ஆங்கில இதிகாசக் காப்பியத்தின் 'சுவர்க்க நீக்கம்' ஐந்தாம் பிரிவிலிலுள்ள பகுதியை 'அவ்வை கண்ட கனவு' என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். மனித குலத்தின் முதல் மனிதனாக விவிலியத்தில் குறிப்பிடப்படும் ஆதாம் என்பவன் 'அத்தன்' எனவும், ஏவாள் 'அவ்வை' எனவும் இவரது ஆக்கத்தில் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

1922இல் மயிலாப்பூர் ஆசிரமத்தில் இருந்தபோது அங்கிருந்து வெளிவந்த 'வேதாந்த கேசரி' என்னும் ஆங்கில இதழுக்கும், 'இராமகிருஷ்ண விஜயம்' என்னும் தமிழ் இதழுக்கும் ஆசிரியராக இருந்தார். அத்துடன் கொழும்பிலிருந்து வெளிவந்த 'விவேகானந்தன்' என்னும் இதழின் ஆசிரியராகவும் 1926 காலப்பகுதியில் பணிபுரிந்தார். 'பிரபுத்த பாரதம்' என்னும் இராமகிருஷ்ண மிஷன் இதழின் ஆசிரியராக 1939 - 1941 வரை பணி யாற்றினார். தமிழின் பெருமை, சிறப்பு, இந்து சமய மேன்மை, இலக்கிய - நாடகக் கட்டுரைகள் என பல்வேறு அம்சங்களைத் தாங்கிய கட்டுரைகள் இவற்றில் ஏராளமாக வெளிவந்தன. கருத்துக்களையும், ஆராய்ச்சிகளையும், ஆராய்ச்சி முடிபுகளையும் பலருக்கும் வெளிப்படுத்த இப் பத்திரிகாசிரியர் பதவி அவருக்கு உறுதுணை புரிந்தது.

உரைநடையைப் பொறுத்தவரை பெரும்பாலும் செந்தமிழ் நடையினையே அவர் பயன்படுத்தினார். சில விடங்களில் இவ்வுரைநடை ஓசை நயம் பெற்றும் உணர்ச்சிப் பாங்காக அமைந்தும் கவிதையின் சாயலில் வெளிப்பட்டிருப்பதையும் காணலாம். மிக நீண்ட வாக்கியங்களைப் பயன்படுத்திய அடிகள் சிறிய வாக்கியங் களையும் தனது கட்டுரைகளிற் பயன்படுத்தினார். 'நம்பிக்கையும் செயலும்' என்னும் தலைப்பிலிருந்து எடுத்துக் காட்டப்படும் பின்வரும் உதாரணம் சிறிய வாக்கியங்களிலமைந்ததாகும்.

"எல்லா நற்குணங்களுக்கும் நம்பிக்கையே ஆதாரம். எல்லா நற்செயல்களுக்கும் நம்பிக்கையே உறைவி டம். நம்பிக்கையிலிருந்தே 'ஓம்' என்னும் மொழி பிறக்கிறது. 'ஓம்' என்பது தன்னம்பிக்கையின் மந்திரம். "செய்வோம்" என நின்று விதித்தவற்றைச் செய்விக்கும் ஆற்றல் இம்மந்திரத்திற்கு உண்டு."

ஒரு விடயம் பற்றி எழுத முனையும் அடிகள், அவ்விடயத்தை மிக நேர்த்தியாக அறிமுகம் செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். 'ஆங்கில வாணி' என்னும் கட்டுரை பின்வருமாறு தொடங்குகின்றது.

"திருமலிந்தோங்கிய நிலவுலகத்தின் வடமேற்குக் கோடியிலே பவளம் பொலிந்து விளங்கும் ஆங்கில நாட்டின் கலைச்செல்வத்தை ஆராயப் புகுமுன், அந்நாட்டு மக்களது வரன்முறையை ஒரு சிறிது அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். நாற்றிசையிலும் கடலினாற் சூழப்பட்ட பிரித்தானியா என்னுந் தீவின் வடபாலிலே ஒரு பகுதி ஸ்கொட்லாந்து எனப்படும். மேற்றிசையில் ஒரு பகுதி, உவேல்சு எனப்படும். இவ்விரு பகுதியும் நீங்கலாக எஞ்சிநின்ற பெரும்பாகம் இங்கிலாந்து (அங்கிளத்தரை) எனப்படும். 'அங்கிளர்' என்னும் மொழி திரிந்து ஆங்கிளர், ஆங்கிலர், இங்கிலீசு எனவாயிற்று." என அடிகள் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறித்த பகுதி அடிகளின் மொழியாற்றலையும் சொல்லாராய்ச்சியையும் கூட வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆங்கிலத்திலம் ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார். இவற்றில் திருக்குறள் பற்றி எழுதிய *'The Book of Tamil Land'*, தொண்டரடிப் பொடியாழ்வார் பற்றி எழுதப்பட்ட *'Dust at the Devotee Feet'* மற்றும் *'The Origin and Growth of Tamil Literature'*, *'The Golden Legends of Ancient Madura'*, *' Silent Sources of Life and Strength'* ஆகியன குறிப்பிடத்தக்கன.

சிறந்த பேச்சாளராகவும் அவர் திகழ்ந்தார். 1934இல் புனித மிக்கேல் கல்லூரியில் பாரதி பற்றிய சொற்பொழி வில் கண்ணன் பாட்டில் இடம்பெறும் 'திக்குத் தெரியாத காட்டில்' என்னும் பாடலைத் தன் குரலில் பாடியதுடன் அதற்கான சிறந்த விளக்கத்தினையும் சபையோரைக் கவரும் வகையில் ஆற்றினாரென்பதை வே.பஞ்சாட்சரம் கூறியதாக வ.சிவசுப்பிரமணியம் தனது 'விபுலானந்த தரிசனம்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய அடிகளார் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் தனது இவ்வுலக வாழ்வை நீத்தார். அதுபோலவே பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்தவராகவும் அமைந்தார்.

பழந்தமிழ் இலக்கியத்தில் பற்றுக்கொண்டிருந்த அதேவேளை, நவீனத்தை நோக்கிய பயணத்திலும் பங்குகொண்டார். குறிப்பிட்ட முன்னர் பாரதி பற்றிய முன்னிறுத்தலுடன் இன்னுமோர் உதாரணத்தையும் இங்கு குறிப்பிடலாம்.

புத்தளம், கற்பிட்டியைச் சேர்ந்த சைமன் காசிச்செட்டியின் தமிழ் புளூராக் (Tamil Plutarch) என்னும் தமிழ்ப்புலவர் வரலாறு கூறும் நூல் (1859இல் வெளிவந்த இந்நூல், ஆங்கிலத்தில் எழுதப்பட்டது) 1946இல் இரண்டாவது பதிப்பாக வெளிவந்தபோது அதற்கு ஆங்கிலத்தில் அடிகள் முன்னுரை வழங்கியிருந்தார். (குறிப்புரையினை தெ.பொ.மீ வழங்கியிருந்தார்) தமிழ்ப்புலவர் வரலாறு கூற எழுந்த முதலாவது நூல் என்ற பெருமைக்குரியது இந்நூலாகும். எனவே புதிய முயற்சிகளுக்கு ஊக்கம் அளிக்கும் மனப்பக்குவமும் அவருக்கு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தொகுத்து நோக்குமிடத்து விபுலாநந்த அடிகளாரின் பன்முக ஆளுமை தெள்ளிதின் உணரப்படும். எவ்வெத் துறையாக இருந்தாலும் அவ்வத் துறையில் மிகுந்த ஈடுபாட்டுடனும், உள்ளார்ந்த கரிசனையுடனும், சமூக நோக்குடனும், எதிர்காலத்தை மனதில் கொண்ட தீர்க்கதரிசனத்துடனும், தெளிவான சிந்தனையுடனும் அவர் செயற்பட்டமையே பல்துறை சார்ந்த அவரது வெற்றிகளுக்குப் பின்புலமாக இருந்தன என்பதும் அவையே தமிழ் உலகின் தவப்பயனாக அவரை நிலைநிறுத்தி உலகம் பயனுற வழி வகுக்கவும் காரணிகளாக அமைந்தனவென்பதும் மறுக்க முடியாதவை.

உசாத்துணை நூல்கள்:

- சுவாமி விபுலாநந்தர்: 'சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்': தொகுதி- 1& 2: 1995,
  தொகுப்பாசிரியர்கள்: வ.சிவசுப்பிரமணியம், சா.இ.கமலநாதன்
  வெளியீடு: சுவாமிவிபுலாநந்தர் நூற்றாண்டுவிழாச்சபை, மட்டக்களப்பு.

- சுவாமி விபுலாநந்தர்: 'சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்': தொகுதி- 3: 1997,
  தொகுப்பாசிரியர்கள்: வ.சிவசுப்பிரமணியம், சா.இ.கமலநாதன்
  வெளியீடு: கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு
  வடக்கு – கிழக்கு மாகாணம், திருகோணமலை.

- சுவாமி விபுலாநந்தர்: 'சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்': தொகுதி- 4: 1999,
  தொகுப்பாசிரியர்கள்: வ.சிவசுப்பிரமணியம், சா.இ.கமலநாதன்
  வெளியீடு: சுவாமிவிபுலாநந்தர் நூற்றாண்டுவிழாச்சபை, மட்டக்களப்பு.

- செபரத்தினம்.க, 2002, 'ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்', மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

- சிவசுப்பிரமணியம்.வ, 1993, 'விபுலாநந்த தரிசனம்' வெளியீடு: சுவாமிவிபுலாநந்தர்
  நூற்றாண்டுவிழாச்சபை, மட்டக்களப்பு.

- சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு நினைவு மலர்
  தொகுப்பாசிரியர்: சா.இ. கமலநாதன்,
  வெளியீடு: சுவாமிவிபுலாநந்தர் நூற்றாண்டுவிழாச்சபை, மட்டக்களப்பு.

- பூலோகசிங்கம்.பொ. 2002, 'தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞர்கள் பெருமுயற்சிகள்'
  வெளியீடு: குமரன் புத்தக இல்லம், சென்னை – கொழும்பு

விபுலாநந்த அடிகளாரும் மெய்ப்பாடும்

முனைவர் செல்வம். ஸ்ரீதாஸ்
விரிவுரையாளர், நிர்வாகப் பொறுப்பாளர்,
அண்ணாமலைக் கனடா வளாகம், ரொறன்ரோ, கனடா



சுவாமி விபுலாநந்தர் ஒரு விஞ்ஞானக் கலைமானி, சிறந்த கலைஞர், தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையின் முதலாவது தலைவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழியல் துறையின் அமைவுக்குக் காலாக அமைந்தவரும் அடிகளாரே. சிறந்த பேச்சாளர். கரந்தைத் தமிழ்ச்சங்கம், மதுரைத் தமிழ்ச்சங்கம், கலைச்சொல் ஆராய்ச்சிக் கழகம் முதலிய தமிழ் வளர்த்த பெரும் சங்கங்களால் நடாத்தப்பட்ட விழாக்களில் பல தலைமை உரைகளை ஆற்றியுள்ளார். இவ்வுரைகள் யாவும் அரிய ஆராய்ச்சிக் கண்ணோடு நிகழ்த்தப்பட்டவையாகும். பிற்காலத்தில் இவ்வுரைகள் கட்டுரைகளாகத் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டன. இவரது, இலக்கியக் கட்டுரைகள் என்னும் தொகுப்பு நூல் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்புத் தேர்வுக்குரிய தமிழ்ப் பாடநூல்களில் ஒன்றாக 1973 ஆம் ஆண்டு இணைத்துக் கொள்ளப்பட்டது. இவர் கவிதை, இலக்கணம், இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம், இன்னும் இவை போன்ற பல துறைகளிலும் கட்டுரைகள் தமிழில் மட்டுமல்லாது ஆங்கிலத்திலும் எழுதித் தமிழின் உயர்வை உலகிற்கு எடுத்துக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடிகளாரது "இலக்கியச் சுவை" பற்றிய நோக்கே இக் கட்டுரையின் கருவாகும். "இலக்கியம் கற்றலும் இலக்கியச் சுவையில் ஈடுபடுதலும்" என்னும் பொருளில் கல்முனையில் விபுலாநந்த அடிகளார் ஆற்றிய சொற்பொழி விலிருந்து இக் கட்டுரை தொடங்குகிறது. "இலக்கியச் சுவை" என்றால் என்ன? அடிகளார், "மெய்ப்பாடுகள்" பற்றித் தொல்காப்பியம் மெய்பாட்டியல் கூறும் நூற்பாவைத் தன் உரைக்கு அடியாகக் கொண்டு, தமிழ் இலக்கியத்தில் உதாரணம் காட்டி விளக்கிச் செல்வதாக அமைந்திருக்கிறது அவரது பேச்சு.

"நகையே அழுகை இழிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப" — தொல். மெய்ப்பாட்டியல்

மெய்ப்பாடு என்றால் என்ன என்று சிறிது பார்க்கலாம். மெய்ப்பாடு என்பது மெய்யின் கண் படுதல், அதாவது உடம்பில், வெளிப்படுவது, தோன்றுவது என்னும் பொருள்படும். **உள்ளத்தில் தோன்றும் உணர்வுகள் அவ்வுள்ளத்தில் தோன்றியவாறே மற்றவர்களுக்குப் புலனாகுமாறு, புற "உடற்குறியீடுகள்" வழியாக வெளிப்படுதல். இவ்வாறு புற உடற்குறியீடுகள் மெய்ப்பாடுகள் ஆகின்றன.**

"உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல்
மெய்ப்பாடு என்ப மெய் உணர்ந்தோரே" — என்பது செயிற்றியம்.

பொருளதிகாரம், செய்யுள் இயற்றும் புலவனுக்குச் செய்யுள் இயற்றுவதற்குரிய வரண்முறைகளை விபரித்துக் கூறும் பகுதியாகும். தொல்காப்பியத்தில், அகத்திணையியல், புறத்திணையியல், கற்பியல், களவியல், பொருளியல் ஆகிய பகுதிகள் அகத்திணை, புறத்திணை ஆகிய இருதிணைப் பாடல்களையும் பாடும் புலவன் கடைப்பிடிக்கவேண்டிய மரபுகள், விதிகள், விலக்குகள், எல்லைகள் முதலியவற்றை விளக்கிக் கூறுகின்றன. செய்யுளியல் அப்பொருள் பாடப்படவேண்டிய பாவகை பற்றிக் கூறுகின்றது.

மெய்ப்பாட்டியலும் உவமையிலும் பாடல் பொருளுடன் நெருங்கிய தொடர்புடையவையாகப் பாடலுக்கு அழகு சேர்க்கும் வகையில் அமைந்திருக்கின்றன. பாடல் மாந்தர் எவ்வெவ் உணர்ச்சிகளை எவ்வெவ்வாறு வெளிப்படுத்தவேண்டும் என்னும் இலக்கணத்தைக் கூறுபவை இவை. எந்த உணர்ச்சியை எவ்வாறு வெளிப்படுத்தவேண்டும் என்னும் அடிப்படை அறிவு அற்றநிலையில் கதை மாந்தர்களின் உணர்வுகளைப் படைப்பாளி தெளிவாக வெளிக் கொண்டுவரமுடியாது. படைப்பாளிக்கு மட்டுமல்ல படிப்பவனுக்கும் இவ் அடிப்படை அறிவு தேவைப்படுகிறது.

"உய்த்துணர்வு இன்றித் தலைவரும் பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடு ஆகும்." — தொல். செய்யுளியல் 506.

பாடலில், புலவன் புலப்படுத்த எண்ணும் உணர்வுகளைப் படிப்பவன் ஆராய்ந்து அறியவேண்டிய தேவையைத் தவிர்த்து, தானே வெளிப்பட்டுத் தோன்றுவதற்கு உரிய சொற்களை அமைத்து, கதை மாந்தர் உடலில் (மெய்) தோன்றும் வேறுபாடுகளைக் கற்பவன் இலகுவாகப் புரிந்து கொள்ளும்படி அமைப்பது மெய்ப்பாடு ஆகும்.

மெய்ப்பாடு தோன்றுவதற்குக் காரணமாக அமையும் பொருள் "**சுவைப்பொருள்**" எனப்படும். சுவைப் பொருட்கள் ஐம்புலன்கள் வாயிலாக உணரப்படுகின்றன. கூத்தில் கதை மாந்தராக வேடம் தரிக்கும் கூத்தாடிகள் தமது நடிப்பாலும் உரையாலும் வெளிக்கொணரும் உணர்வுகளே சுவை என்னும் நாடகத் தமிழின் உறுப்பாகும். இவ் உணர்வுகளே மெய்ப்பாடுகள் ஆகும். இவ் உணர்வுகள் காண்போரின் அறிவோடு இணைந்து அவர்களையும் அவ் உணர்வை நுகர வைக்கிறது. **இயற்றமிழில், செய்யுளில் அமைக்கப்படும் உணர்வுகள், ஒலிவடிவில் செவி வாயிலாகவும் வரிவடிவில் கண்கள் வாயிலாகவும் சுவைஞனின் உள்ளத்தில் உணர்வை ஏற்படுத்துவதால் அது மெய்ப்பாடாயிற்று.** இதனைத் தொல்காப்பியர்,

"கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங்கு உரைத்தே" — (மெய். 27) என்கிறார்.

இவ்வாறு உணரப்படுவது "**பொறியுணர்வு**" எனப்படும். ஐம்புலன்களாலும் உணரப்பட்ட பொறி யுணர்வு மனத்தைச் சென்றடைந்து நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய எண்வகை மெய்ப்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. இது "**மனக்குறிப்பு**" எனப்படும். மனத்தில் தோன்றிய குறிப்பு புற உடற் குறியீடாகி வெளிப்படுகிறது. இதனைச் "**சத்துவம் அல்லது விறல்**" என்பர்.

தொல்காப்பியர் காலத்தில் தமிழில் இசை நாடக நூல்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்து காலத்தால் அழிந்திருக்க வேண்டும். முத்தமிழும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து ஒன்றை ஒன்று சார்ந்தே வளர்ந்திருக்கின்றன. சுவை முத்தமிழுக்கும் பொதுவானது, நாடகத் தமிழில் நாம் கண்ணால் காண்பதால் அதன் பதிவு சிறிது ஆழமாகவே அமைந்து விடுகிறது.

"இலக்கியம் கற்றலும் இலக்கியச் சுவையில் ஈடுபடுதலும்" என்னும் பொருளில் விபுலாநந்த அடிகளார் என்ன கூறினார் என்பது பற்றிச் சிறிது காணுவோம்.

"ஏனைய கலைத் துறைகள் உள்ளத்தின் ஒவ்வொரு திறத்தினைப் பற்றி நிற்கச் செய்யுள் மாத்திரம் உள்ளம் முழுவதையும் பற்றி நிற்கும், ஆதலினாலே மதிப்பிடற்கரியதொரு நிறைவினையும் மலர்ச்சியையும் உள்ளத்திற்கு அளிக்கும். இந் நலத்தினை நல்லியற் புலவர் செய்யுளில் வைத்துக் காட்டுதல் மேற் கொள்வாம். பலப்பல இலக்கிய நூலினுட் புகுதற்குப் போது காணாதாதலினாலே, வில்லிபாரதம் ஒன்றினையே எடுத்துக் கொள்வாம்". *

"இலக்கியம் கற்றலும் இலக்கியச் சுவையில் ஈடுபடுதலும்" – இலக்கியக் கட்டுரைகள் (தெரிவு செய்யப்பட்டவை), உயர்திரு விபுலாநந்த அடிகள், கல்வி வெளியீட்டுத் திணைக்களம். பக். 2.

அடிகளார், இலக்கியச் சுவையை ஆராய்வதற்கு எடுத்துக் கொண்ட இலக்கியம் "வில்லிபாரதம்" ஆகும்.

பாட்டுடைத் தலைவன்:

மகாபாரதத்தின் காப்பியத்தலைவன் யார் என்பதில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அர்ச்சுனன், தருமன், துரியோதனன், கர்ணன் என்று அவரவர் வகுத்துக் கொண்ட வரைவிலக்கணங்களுக்கு ஏற்ப தலைவனும் வேறுபடுகிறான்.

இலக்கியத் தலைவன் ஒருவனது இலக்கணங்கள் யாவை என்று ஆய்வது இக் கட்டுரையின் தேவைக்கு இன்றியமையாததாகிறது. "தன்னிகரில்லாத் தலைவன்" பற்றிய இலக்கணம் முதல் முதலாகத் தண்டியலங்காரம் என்னும் சோழர் கால இலக்கண நூலில் தான் கூறப்படுகிறது. அப்படியானால் சோழர் காலத்திற்கு முன்னைய இலக்கியங்கள் தலைமக்களைக் கொண்டிருக்கவில்லையா? தலைமக்களாகப் பாடப்பட்டவர்கள் எந்த அடிப்படையில் பாட்டுடைத் தலைவர்களாக ஆக்கப்பட்டார்கள்? அரச உருவாக்க காலத்தில் தலைமைத்துவம் வெகுவாக வேண்டப்பட்டது. புலவர்களால் பாடப்படுவதை மன்னர்கள் பெரிதும் விரும்பி வரவேற்றார்கள்.

தமிழரின் ஆதி இலக்கியமாக நாம் அறியும் சங்க இலக்கியங்களில் புறப்பாடல்கள் பெருநிலப் பரப்பை ஆண்ட மன்னர்களையோ, குறுநில மன்னர்களையோ, புலவர்களை ஆதரித்த வள்ளல்களையோ பாடியவை யாகவே அமைந்துள்ளன. இப் பாடல்கள் பாட்டுடைத் தலைவனது கொடை, வீரம், வெற்றி, பரம்பரை, நீதி முதலிய தலையாய குணங்களைப் போற்றிப் பாடுபவையாக அமைந்திருக்கின்றன. இவை பெரும்பாலும் சிற்றடிகளைக் கொண்ட சிறுபாடல்களாக அல்லது நீண்ட அடிகளைக் கொண்ட நெடும்பாடல்களாக அமைந்திருந்த காரணத்தால் நீண்ட கதை சொல்வதற்கோ அல்லது மூவருக்கு அதிகமான கதாபாத்திரங்களைக் கொண்டனவாக அமைவதற்கோ வாய்ப்பில்லாமல் போயிற்று. இவை தவிரவும் அகப்பாடல்களின் "சுட்டி ஒருவர் பெயர் கூறப் படாத" தன்மை காரணமாகக் கதை மாந்தர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டது. தொல்காப்பியர் இலக்கணத்தை ஒட்டிப் பாடப்பட்ட **சங்க இலக்கியங்கள் உயர்குடிப் பிறந்த தலைவன் தலைவியரைப் பாடுவனவாகவே அமைந்திருந்தன** என்பது தான் உண்மை. **தொல்காப்பியர் காட்டும் தலைவனே சங்ககாலப் பாட்டுடைத் தலைவன் ஆகிறான்.**

- **மதுரைக்காஞ்சியின் பாட்டுடைத்தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.**
- **சோழன் கரிகாற்பெருவளத்தான் பொருநராற்றுப்படைக்கும் பட்டினப்பாலைக்கும் தலைவனாவான்.**
- **ஓய்மானாட்டு நல்லியக்கோடன் சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன்.**

சங்கப் புறப்பாடல் இலக்கியங்கள் பெரும்பாலும் மன்னர்களின் புற வாழ்க்கையையே பேசுகின்றன. அக் காலத்தில் தன்னிகரில்லாத் தலைவன் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது. புலவர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப இருப்பதையே மன்னர்களும் விரும்பி மேற்கொண்டார்கள்.

சங்கமருவிய காலத்தில் எழுந்த சிலப்பதிகாரத்தின் நாயகன் கோவலன். சங்கமருவியகால வாழ்வியலை எடுத்துக் காட்டுவதாகச் சிலப்பதிகார நாயகன் அமைக்கப்பட்டான். சோழர் காலத்தில் எழுந்த **"தண்டியலங்காரம்" என்னும் இலக்கண நூலில் கூறப்பட்ட இலக்கணத்தை அதற்கு முற்பட்ட காலத்தில் எழுந்த இலக்கியத்தில் இணைத்துப் பார்ப்பது என்றும் பொருந்தாது.** பல்லவர் காலத்தில் இறைவன் பாட்டுடைத் தலைவன் ஆகிறான். சைவத் திருமுறைகளில் பாட்டுடைத் தலைவன் சிவபெருமான். அவ்வாறே, நாலாயிரத்திவ்யப் பிரபந்த நூல்களின் பாட்டுடைத்தலைவன் திருமால்.

"தன்னிகரில்லாத் தலைமை உடையோன் எனின், அவனுக்கு அழகு, இளமை, புகழ், ஆண்மை, ஆக்கம், ஊக்கம், அருள், பிரதாபம், கொடை, குலம் முதலிய குணங்கள் இருக்கவேண்டும் என்பர் சாகித்தியதர்ப்பணத்தின் நூலாசிரியர்" என்கிறார் தண்டியாசிரியர்.

தண்டியலங்காரம் சோழர் காலத்தில் எழுதப்பட்டது. சோழர் காலத்தில் இறைவனுடன் மன்னரும் பாட்டுடைத் தலைவர்களாகப் பாடப்படுகின்றனர். கம்பராமாயணத்தில், இராமனாக அவதாரம் செய்த திருமால் பாட்டுடைத்தலைவன் ஆகிறார். வடமொழியில் வியாசர் எழுதிய மகாபாரதத்தைச் 4351 பாடல்களில் சுருக்கித் தமிழில் எழுதியுள்ளார் வில்லிபுத்தாழ்வார். இக் காப்பியத்தின் பகுதிகள் சிலவற்றையே தம் உரைக்குப் பொருளாக்கியிருக்கிறார் விபுலாநந்த அடிகளார்.

அருச்சுனன் தலைவனாக ஆக்கப்பட்டிருக்கிறான். கதையின் நோக்கமும் போக்கும் பல வேளைகளிலும் அவனுக்குச் சாதகமாக, அவனைத் தன்னிகரில்லாத் தலைவனாகக் காட்டி நிற்கிறது. அரச பரம்பரையில் பிறந்து, தேரோட்டி மகனாக வளர்ந்தவன் கர்ணன். வீரத்தாலும் பண்பினாலும் அர்ச்சுனனுக்குச் சமமானவன். இதிகாசத்தில் ஒவ்வொரு பாத்திரமும் அவற்றின் போக்கும் முன்னமே தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகக் காணப்படுகிறது. கர்ணன், ஒரு மாவீரனாக, கொடை வள்ளலாக, இரக்க சிந்தை கொண்டவனாகப் படைக்கப்பட்ட போதும் இதிகாசத்தின் போக்கில் திருப்பு முனைகள் தோறும் அவன் தோல்வியையும் தாங்கொணா மனவேதனையையுமே அனுபவிப்பதை நாம் காண்கிறோம். சிறந்த வீரனான போதிலும், அவனது பிறப்பின் இரகசியம் அவனைத் தன்னிகரில்லாத் தலைவனாவதற்குத் தடையாக அமைந்தது. பல தருணங்களில் கர்ணனின் கதாபாத்திரம் வலிந்து கெட்டவன் என்னும் பார்வையைக் கொடுக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அவனது சமூகநிலையால் அவன் பெருமையும் புகழும் ஒடுக்கப்பட்டன, மறைக்கப்பட்டன, மறுக்கப்பட்டது. ஆனாலும், அவன் பெருமையை முற்றாக மறைக்க முடியவில்லை. அடிகளார் இக் கருவையே தனது உரைக்குப் பொருளாகக் கொண்டார்.

கர்ணனைக் காப்பியத் தலைவனாகக் கொள்ளக்கூடியதாக அமைந்த பகுதிகள் சிலவற்றை எடுத்துக் காட்டாகக் கொண்டார் அடிகளார். திரௌபதையின் சுயம்வரத்திற்குப் பல நாட்டு மன்னர்களும் வந்திருந்தார்கள், வந்திருந்த மன்னர்களைச் செவிலித்தாயார் திரௌபதைக்கு ஒவ்வொருவராக அறியத் தருகிறார். அப்பொழுது கர்ணனைப் பற்றி,

" ..... பேருலகில்,
உண்மைக்கு இவனே வலிக்கு இவனே உறவுக்கு இவனே உரைக்கு இவனே
திண்மைக்கு இவனே நெறிக்கு இவனே தேசுக்கு இவனே சிலைக்கு இவனே
உண்மைக்கு இவனே கன்னன் என்னும் மன்னன் கண்டாய் மற்றிவனே"

என்று கர்ணனின் வாய்மை, வலிமை, நட்பு, புகழ், திண்மை, நன்னெறி, ஒளி, வில்லாண்மை, வள்ளல் தன்மை முதலாய குணங்கள் அத்தனையையும் ஒரே பாடலில் கூறிச் செல்கிறார் வில்லிபுத்தாரார். கர்ணன், விதியால் வஞ்சிக்கப்பட்டான், தேரோட்டி மகனாக்கப்பட்டான், அவமானப்பட்டான், தாய் குந்திதேவியால் வஞ்சிக்கப்பட்டான், அர்ச்சுனனுக்கும் கர்ணனுக்கும் கடும் போர் நடந்து கொண்டிருந்த போது தேர்ப்பாகனால் கைவிடப்பட்டான், படைக் கலங்கள் அற்றநிலையில் போர் விதிமுறைகளுக்கு மாறாகப் பார்த்தனால் தாக்கப்பட்டான்,

உடம்பு முழுமையும் அம்பு தைக்கப் பெற்று மரணத்தறுவாயில் இருந்த நிலையில் அவன் செய்த புண்ணியம் அனைத்தையும் இரந்து நிற்கிறான் அந்தணன் வடிவில் வந்த கண்ணன்.

"என்று கொண்டந்த அந்தணன் உரைப்ப இருசெவிக்கு அமுது எனக் கேட்டு
வென்றி கொள் விசயவெங் கணையால் மெய்தளர்ந்து இரதமேல் விழுவோன்
நன்றுஎன நகைத்துத் தரத்தகு பொருள் நீ நவில்க என நான்மறை யவனும்
ஒன்றிய படிநின் புண்ணியம் அனைத்தும் உதவுக என்றலும் உள மகிழ்ந்தான்."

"குருக்சேத்திரப் போர்க்களத்திலே போர் தொடங்கிய பதினேழாம் நாளன்று நடந்த இத் தெய்வக் காட்சியை அகக் கண்ணால் நோக்குவோமாக. பொழுது மேற்றிசையிலே இரண்டு விற்கிடை உயரத்திலே நிற்கிறது. சூரியனது பொன் போன்ற கிரணங்கள் புதல்வனது ஆகத்தினை மெல்லெனத் தழுவி நிற்கின்றன. அருச்சுனனது ஆயிரம் அம்புகள் துளைத்த துளைகளினின்றும் பாய்கின்ற செங்குருதி, சூரிய குமாரனது உடலத்திலே ஆயிரம் கிரணங்கள் போலத் திகழுகின்றன. இரு பெரு வீரர்களது ரதத்தில் பூட்டிய குதிரைகளும் செயலற்று நின்றன. கண்ணபிரான் விசயனைச் "செருவொழிதி" எனக் கையமர்த்திக் கன்னனை நோக்கி வருகிறான். வேதியன் வடிவமாக வந்த கண்ணபிரான் இரத்தலும் கன்னன் இதயத்திற் பாய்ந்து கிடந்த அம்பினை வாங்கி அங்குப் பாய்ந்த செந்நீரே நீராகத் தான் புரிந்த புண்ணியம் அனைத்தினையும் தானம் செய்கிறான். பெற்ற கண்ணபிரானாகிய வேதியன் "வேண்டிய வரங்கேள்" என்கின்றான்".

கண்டவர் கேட்டவர் யாவர்க்கும் உடல் சிலிர்க்கிறது. இதுவே கலைஞனுக்கும் சுவைஞனுக்கும் ஏற்பட்ட மெய்ப்பாடு. போர்க்களக் காட்சியை மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் அடிகளார். ஆசிரியனின் வெற்றிக்கு இதை விட வேறு சான்று வேண்டுமா?

தன்னிகரில்லாத் தலைவன் ஒருவனுக்குக் கூறக்கூடிய குணாதிசயங்களுடன் ஒப்பிடுமிடத்து கர்ணனும் தன்னிகரில்லாத் தலைவனே. பல பாத்திரங்கள், ஒரே காப்பியத்தில் உயர்ந்தோராகக் காட்டப்பட்டாலும் அவர்களுள்ளும் ஒருவன் மேலானவனாக இருக்கத்தான் செய்வான் அல்லது ஒருவனை மேலானவனாக ஆசிரியர் காட்டுவதற்கான முயற்சிகளைச் செய்திருப்பார் என்பது காப்பியங்கள் காட்டும் உண்மை.

இதே வில்லிபாரதத்தில் வரும் எனக்குப் பிடித்தமான சுவையானதொரு கதைப் பகுதியை இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். பாண்டவர்கள், பதினான்கு ஆண்டுகள் காட்டிலும் ஓராண்டு மறைந்தும் வாழ்ந்திருந்து பின் தமக்கு உரித்தான அரசுரிமையை நாடி வந்தார்கள். துரியோதனன் அவர்களுக்கு உரிய பாகத்தைக் கொடுப்பதாக இல்லை. தருமனோ, "குரவரையும் கிளைஞரையும் குலத்து உரிய துணைவரையும் கொன்று, போர் வென்று, அரவ நெடுங் கடல் ஆடை அவனி எலாம் தனி ஆளும் அரசு" வேண்டேன், "சந்து செய்தருள்" என்று கண்ணனை வேண்டி நின்றான். மேலும், **"நாடு ஒன்றும் நல்கான் ஆகில ஐந்து ஊர் வேண்டு, அவை இல் எனில், ஐந்து இலம் வேண்டு, அவை மறுத்தால் அடு போர் வேண்டு" என்று மேலும் இரந்து நின்றான்**.

வீமனோ பொங்கி எழுந்தான், போர் வேண்டி நின்றான். விசயனோ, "தூது பயன் தராது" என்றான். நகுலனுக்கும் அதுவே கருத்து. ஆழ்ந்த ஞானியான சகாதேவனோ,

"சிந்தித்தபடி நீயும் சென்றால் என், ஒழிந்தால் என், செறிந்த நூறு
மைந்தர்க்குள் முதல்வன் நிலம் வழங்காமல் இருந்தால் என், வழங்கினால் என்
கொந்துற்ற குழல் இவளும் முடித்தால் என், விரித்தால் என், **குறித்த செய்கை
நீர் செய்ய எண்ணியவை இறுதியில் முடியும் வகை அடியேனுக்குத் தெரியும்**"

(வில்லிபாரதம், கிருஷ்ணன் தூது பா.31) — தொடர்ந்து

"திருவுளத்துக் கருத்து எதுவோ, அது எனக்கும் கருத்து! **என்றான் தெய்வம் அன்னான்".**

கண்ணன், சகாதேவனைத் தனியாக அழைத்துச் சென்று **"பாரதப் போர் பயிலா வண்ணம், உய்வண்ணம் சொல்லுக நீ உபாயம்" என்று வினயமாகச கேட்டான். சகாதேவனின் பதில் மகாபாரதத்தின் நோக்கத்தை அந் நோக்கத்தின் கருத்தாவானவனிடமே முன்வைப்பதாக அமைகிறது.**

"நீ பாரத அமரில் யாவரையும் நீறாக்கி
பூ பாரம் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா!
கோபாலா! போர் ஏறே! கோவிந்தா! **நீ அன்றி,**
மா பாரதம் அகற்ற, மற்று ஆர்கொல் வல்லாரே!" — கிருஷ்ணன் தூது 34

எய்தவனிடமே அம்பு திரும்பியது. பதினைந்து ஆண்டுகள் கானில் வாழ்ந்து இயற்கையோடு போராடி உயிருடன் மீண்ட பாண்டவர்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருக்கக் கூடியது அரசுரிமை. அதனை அடைவதிலுள்ள இடையூறுகள், மனக் கசப்புக்கள், உயிர்ச்சேதம் ஏராளம். பாண்டுவின் மைந்தர்கள் ஒவ்வொருவரது சிந்தனையும் ஒவ்வொரு விதமாக இருந்தது. "போரில் உற்றார் உறவினரைக் கொன்று கிட்டும் அரசுரிமை தேவையா" என்பது தர்மனின் வாதம். ஐந்து வீடாவது கிடைத்தால் போதும் என்பது தருமன் நிலைப்பாடு. தமையனுக்குக் கட்டுப்பட்டு அடங்கிப் போனதால் உலகு உள்ளளவும் அழியாத அவமானத்தைப் பெற்ற பீமன் கோபத்தைக் கக்குகிறான். நகுலனதும் அர்ச்சுனனதும் நோக்கமும் அதுவே. பாரதப்போரின் சிற்பியிடமே பாரதப்போர் பற்றிப் பேசும் ஞானமே வடிவான சகாதேவன். இப்படியாக, ஒரே அரங்கில், பல்வேறுபட்ட உணர்ச்சிகள் கொண்ட கதாமாந்தர்களின் அனுபவத்தை நாமும் அனுபவிக்கிறோம்.

"பார் ஆளக் கன்னன், இகல் பார்த்தனை முன்
கொன்று, அணங்கின்
கார் ஆர்குழல் களைந்து, **காலில் தளை பூட்டி**
நேராகக் கைப் பிடித்து, நின்னையும் யான் கட்டுவனேல்
வாராமல் காக்கலாம் மா பாரதம் என்றான்" சகாதேவன். — வில்லிபாரதம், கிருஷ்ணன்தூது 33.

ஒவ்வொரு பாத்திரமும் உணர்ச்சி வேறுபாடுகளுடன் நம் கண்முன் வந்து செல்கிறார்கள். இலக்கிய ஆர்வலர்கள் படித்துப் படித்துச் சுவைப்பதற்குத் தமிழ் இலக்கியத்தில் இவை போன்ற பல பகுதிகள் உள. 'நீ கூறியபடி எல்லாவற்றையும் முடித்தாலும் என்னைக் கட்ட உன்னால் முடியுமா' என்று கேட்கிறான் கண்ணன். 'உன் வடிவு காட்டில் இயலும்' என்கிறான் சகாதேவன்.

"மாயவனும் அன்பன் மனம் அறிவான், 'கட்டுக' என்று,
ஆய வடிவு பதினாறாயிரம் கொண்டான்,
தூயவனும் மூலம் ஆம் தோற்றம் உணர்ந்து, **எவ் உலகும்**
தாய அடி இணைகள் தன் கருத்தினால் பிணித்தான்" - வில்லிபாரதம், கிருஷ்ணன்தூது 35.

இறையடியார்க்கு மட்டுமே எளியனான இறைவனும் அன்பன் கண்குளிரப் பதினாறாயிரம் வடிவு கொண்டான். மூவுலகையும் அளந்த திருவடிகளைச் சகாதேவன் தன் அன்பினால் கட்டினான். நெஞ்சால் தன்னைக் கட்டிய சகாதேவனின் அன்புப் பிடியில் கட்டுண்ட மாதவனும்

"அன்பால் இன்று என்னை அறிந்தே பிணித்தமை நன்று,
என் பாதம் தன்னை இனி விடுக! என்று உரைப்ப,
'வன் பாரதப் போரில் வந்து அடைந்தேம் ஐவரையும்
நின் பார்வையால் காக்க வேண்டும் நெடுமாலே!" - வில்லிபாரதம், கிருஷ்ணன்தூது 39.

என்று பாண்டவர்க்காய் வரமும் பெற்றான். இப் பாடற் பகுதி படிப்பவர் மனத்திற்கும் கண்ணுக்கும் இனிய விருந்தாக அமைந்திருக்கிறது என்றால் மிகையாகாது. இலக்கியத்தைப் படிப்பதற்கும் சுவைப்பதற்கும் அதில் ஆழ்ந்த ஈடுபாடும் ஆர்வமும் வேண்டும். இலக்கியம் புரியவில்லை, கடினம் என்றால் என்றுமே கடினம் தான். அதை விட முக்கியம் இலக்கியத்தை மக்கள் மயமாக்கவேண்டும் என்னும் எண்ணமுடைய கட்டுரையாளர்கள், அவற்றை மக்கள் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் ஆர்வமூட்டும் வகையில் இலகுவாக்கித் தரவேண்டும்.

சுவாமி விபுலாநந்தர்: ஒரு வியத்தகு ஆளுமை

பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்
பேராசிரியர், தமிழ்த்துறை,
கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.



ஈழநாடுகண்ட தமிழ்ப்புலமையாளர்களுள் தலையானவர் சுவாமி விபுலாநந்தர். இவருடைய ஆளுமை என்பது ஓர் அபூர்வக் கலவையாக உள்ளது. தன்னுடைய மேதாவிலாசத்தினால் ஈழநாட்டில் மட்டு மல்லாது தமிழ்கூறும் நல்லுலகெங்கும் நன்கு அறியப் பட்டவராக அடிகளார் விளங்கினார். அடிப்படையில் ஓர் விஞ்ஞானப்பட்டதாரியான அடிகளார் தமிழியலின் பல் வேறு துறைகளிலும் தனது கணிப்பு மிக்க ஆராய்ச்சிக-ளால் தடம்பதித்தார். பழந்தமிழ் இலக்கியங்களில் அடிக-ளாருக்கிருந்த பரிச்சயத்தின் காரணமாக கணிப்பு மிக்க ஆராய்ச்சிகளை அடிகளாரால் நிகழ்த்தமுடிந்தது. 'மறை வாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசாமல்' தக்க சான்றுகளுடன் தமிழர்களது பண்பாட்டைக் கட்டியெழுப்ப அடிகளார் பாடுபட்டார் என்றால் அது மிகையான கூற்றல்ல. இக்கட்டுரையானது அடிகளாரது பன்முக ஆளுமையினைப் பலநிலையில் எடுத்துப்பேசுவதாக அமைகின்றது.

அடிகளாரது புலமைச்சிரத்தை ஈடுபாடென்பது பரந்துபட்டதொன்றாக உள்ளது. இசைத்தமிழ், இயற்ற மிழ், நாடகத்தமிழ், கவிதைப் படைப்பாக்க முயற்சி, கலைச்சொல்லாக்கம், மொழி பெயர்ப்பு, மொழியியல், ஒப்பியல் இலக்கியம், கல்வித்துறை, உரைநடை முதலான பல்வேறு புலங்களிலும் அடிகளார் கவனத் தைச் செலுத்தியுள்ளார். அவை குறித்து இவ்விடத்தில் சற்று விரிவாக நோக்குதல் பொருத்தமானதாகும்.

இசைத்தமிழ் குறித்த ஆராய்ச்சிகள்

விபுலாநந்த அடிகளாரின் பிரதானமான ஆராய்ச்சிப் புலமாக அமைவது 'இசைத்தமிழே' எனலாம். பண்டைத்தமிழர் பண்பாட்டில் வழக்கிலிருந்த பல்வேறு வகையான யாழ்கள் குறித்த செய்திகளையும் பண்டைத்தமிழ் இலக்கியங்களிலிருந்தும் அவற்றுக்கான உரைகளிலிருந்தும் திரட்டிய அடிகளார், அவற்றினூடே 'யாழ்' என்ற இசைக்கருவியினை மீட்டுத்தந்த பெருமைக் குரியவராகின்றார். இதனூடே பண்டைய தமிழ்இசை யின் பண்புகளையும் ஆராய்ச்சி உலகுக்கு அடிகளார் அடையாளப்படுத்தினார். 'தமிழ்இசை' குறித்த விரிவான ஆராய்ச்சிகளுக்கான களமாக 'யாழ்நூல்' குறித்த ஆராய்ச்சி அமைந்தது.

இசைத்தமிழில் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சியினை அடிகளார் நிகழ்த்தியிருந்தாலும் ஆய்வுலகில் அது போதிய கவனம் பெறவில்லை என்பது ஆராய்ச்சி யாளர்களது கணிப்பாக உள்ளது. தமிழ், விஞ்ஞானம், கணிதம், இசை ஆகியவற்றின் கலவையாக அமையும் அடிகளாரது ஆராய்ச்சி நடையினைப் புரிந்து கொள் வதற்கு பல்பரிமாண ஆளுமை வேண்டப்படுவதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுதல் தகும். அடிகளாரது 'யாழ் நூல்' குறித்த செய்திகள் பரவலாக்கம் பெறாமைக்கு இதுவும் ஒரு காரணியாகவிருக்கலாம். ஆயினும் தமிழிசை குறித்த ஆராய்ச்சியாளர்கள் இந்நூலை எளிதில் புறந்தள்ளிவிட முடியாது. தேவார காலத்துக்கு முந்தைய பண்ணிசை மரபுகளை அடையாளப்படுத்திய-துடன் அது தமிழ்ப் பண்பாட்டில் பெற்றிருந்த சமயச்சார் பற்ற தன்மையினையும் தக்க சான்றுகளுடன் அடிகளார் வெளிப்படுத்தினார். தமிழிசை குறித்த கண்டுபிடிப்புக் களில் அடிகளாரது முயற்சிகள் முக்கியமானவையாகவும் முன்னோடியானவையாகவும் உள்ளன.

இயற்றமிழ் குறித்த ஆராய்ச்சிகள்

இயற்றமிழ் குறித்த அடிகளாரது ஆய்வுநிலை எழுத்துக்கள் கவனிப்புக்குரியனவாகும். பணியின் நிமித்தம் தமிழ்நாட்டில் தங்கியிருந்த காலப்பகுதியில் மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடாக வெளிவந்த 'செந் தமிழ்' மற்றும் 'தமிழ்ப்பொழில்' முதலான இலக்கியச் சஞ்சிகைகளில் இலக்கியம், மொழி, சமயம், வரலாறு, தமிழர்பண்பாடு முதலியன குறித்து அடிகளார் பல்வேறு கட்டுரைகளைத் தொடர்ச்சியாக எழுதி வந்தார்.

'தமிழ் ஆராய்ச்சி' யானது தமிழியல் ஆராய்ச்சி யாக நிலைமாறிய சூழலில், அடிகளாரது எழுத்துக்கள் அதிக கவனம் கோருபவையாக அமைந்தன. ஈழ நாட்டுத் தமிழ்ப்புலமை குறித்த ஒரு படிமத்தினைத் தமிழ கத்தவர் மத்தியில் ஏற்படுத்தியதில் அடிகளாருக்கும் பெரும்பங்குண்டு.

அடிகளாரது கட்டுரைகள் பலவும் பின்னாளில் அவரது மாணாக்கர் பரம்பரையினரால் 'விபுலாநந்த ஆய்வு', 'விபுலாநந்த செல்வம்', 'விபுலாநந்த உள்ளம்', 'விபுலாநந்த வெள்ளம்', 'விபுலாநந்தத்தேன்', 'விபுலா நந்த இலக்கியக் கட்டுரைகள்' முதலான தலைப்புக்களில் வெளிவந்தன.

'இலக்கியம்' தொடர்பான கட்டுரைகளில் மரபு-வழித் தமிழறிஞர் பார்வையிலிருந்து சற்று விடுபட்டு சங்க இலக்கியமரபில் இடம்பெறும் அகத்திணை, புறத்திணை, அகம் முதலியன தொடர்பாகப் புதிய சிந்தனைத் தடங்களை அடிகளார் கிளறிவிட்டார். அடிக-ளாரது இயற்றமிழ் வல்லமைக்கான மிகச்சிறந்த கட்டுரைகளாக 'ஐயமும் அழகும்', 'வண்ணமும் வடிவமும்', 'நிலவும் பொழிலும்', 'மலையும் கடலும்', 'கவியும் சால்பும்', 'நாடும் நகரமும்' முதலான கட்டுரை-களைப் பேராசிரியர். இ. பாலசுந்தரம் அவர்கள் அடை யாளப் படுத்துகின்றார். இதற்காக அடிகளார் தொல் காப்பியம் மற்றும் அதன் உரையாசிரியர்களைத் துணைக் கழைக்கவில்லை. புதியதொரு நோக்கில் அவற்றுக்கு விளக்கம் தரமுயன்றமை கருதத்தக்க தாகும். தமிழாராய்ச்சியாளர்களுக்கு இப்புதிய சிந்தனைகள் உவப்பானவையாகவும் அவர்களையும் அவ்வாறு சிந்திக்கத் தூண்டு வனவாகவும் அமைந்தன.

கவிதைப்படைப்பாக்க முயற்சி

நவீன தமிழ்க்கவிதை தமிழ்க்கவிதைச் சூழலுக்குள் உள்வாங்கப்பட்ட காலப்பகுதியில் வாழ்ந்தவ ரான அடிகளார், தொன்மை மறவாத் தூயதமிழ்க் கோட்பாட்டிலிருந்து படைத்தளித்த கவிதைகள் மிகவும் கவனிப்புக்குரியனவாக உள்ளன. அடிகளாரது பிற எழுத்துக்களுடன் ஒப்பிடுகின்றபோது அவரது கவிதைப் படைப்பாக்க முயற்சிகள் குறைவானவையாகும். ஆயினும் அடிகளாரது கவிதைகளில் சொற்செறிவு, கனிவு, மென்மை, நெகிழ்வு, இசைவு, தன்னுணர்ச்சி முதலிய அம்சங்களை எம்மால் இனங்காண முடிகின்றது.

'கஞ்சாக்கவிஞர்' எனத் தமிழகத்தவர்களால் இகழ்ந்தொதுக்கப்பட்ட மகாகவி சுப்பிரமணிய பாரதி யாரைச் சரியாக இனங்கண்டு அறிமுகம் செய்த பெருமை அடிகளாருக்குரியதாகும். சுப்பிரமணிய பாரதி யின் கவிதைகளால் அடிகளார் பெரிதும் கவரப்பட்டிருந் தார் என அறியமுடிகின்றதது. பாரதியின் கவிதைக் கொள்கை, இலக்கியக்கொள்கையிலே அடிகளாருக்கு உடன்பாடு இருந்தது. துறவியான அடிகளாருக்கு கவிதை எழுதும் இன்பத்தையும், இயற்கையை இரசிக்கும் தன்மையினையும் துறக்க முடியவில்லை. அவ்வப்போது அடிகளார் கவிதைகளை எழுதினார்.

"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

முதலான அடிகளாரது கவிதைகள் பலவற்றை ஆராய்ச்சி நோக்கில் பலரும் அடிக்கடி கையாள்வ தனைப் பார்க்க முடிகின்றது. அடிகளாரது கவிதைகள் சில 'விபுலாநந்த கவிமலர்' என்ற தொகுதியாக வெளி வந்துள்ளது. 'ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று', 'கங்கையில் விடுத்த ஓலை', 'நீரரமகளிர்' முதலான கவி தைகள், அடிகளாரது கவிபுனையும் ஆற்றலுக்கான பதச்சோறுகள் ஆகும். காலத்துக்கேற்ற கனிவும், கணிப்பும், எளிமையினையும் உள்வாங்குவதில் அடிக-ளார் பின்னிற்கவில்லை என்பதனை அவரது கவிதை கள் காட்டிநிற்கின்றன. அடிகளாருடன் சமகாலத்தில் கவிதைபடைத்தவர்களிடத்து இப்பண்புகளைக் காண்பது அபூர்வமாகும்.

கலைச்சொல்லாக்க முயற்சி

மொழிபெயர்ப்பின்வழி தமிழ்மொழி பிற மொழி களுடன் ஊடாடித் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழிலே உள்ள பெருமைமிகு விடயங் களை பிற நாட்டார் அறிந்துகொள்வதற்கும் 'கலைச் சொல்லாக்கம்' அவசியம் என்பதனை அடிகளார் உணர்ந்திருந்தார்.

கலைச்சொல்லாக்கம் குறித்த அடிகளாரது கொள்கை நிலைப்பாட்டினை 'விஞ்ஞானதீபம்' என்ற தலைப்பிலான கட்டுரை ஒன்றிலே விரிவாக காண முடிகிறது.

உளவியல், அறிவியல், ஆட்சியியல், கணிதம், சட்டம் முதலான பல்துறை நூல்களிலுள்ள கலைச்சொற் களுக்கு ஒத்த சொற்களைத் தமிழில் ஆக்கும் போது சொற்சுருக்கம், விளக்கம், தமிழ்வடிவம் முதலான விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்படல் வேண்டும் என்பது அடிகளாரது கருத்தாக உள்ளது. அடிகளார் ஆசிரியராக இருந்த 'பிரபுத்தபாரதி' என்ற ஆங்கிலப் பத்திரிகையினைக் களமாகக் கொண்டு கலைச்சொல்லாக்க முயற்சிகளை அடிகளார் பெரிதும் முன்னெடுத்து வந்தார். தமிழியல்சார் ஆய்வுகளை உலகுதழுவியநோக்கில் நடத்திடல் வேண்டும் என்ற அடிகளாரது பெருவிருப்பின் வெளிப்பாடாகவே அறிஞர் பெருமக்கள் அடிகளாரது கலைச்சொல்லாக்க முயற்சி-களைப் பார்க்கின்றனர்.

மொழிபெயர்ப்பும் திறனாய்வும்

பன்மொழிப்பயிற்சியுடைய அடிகளார் அதனூடே ஆங்கிலம் முதலான மொழிகளிலுள்ள நல்ல படைப்புக் களைத் தமிழுக்கு மொழி பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டார். தாம் செய்த ஆங்கில இலக்கியம் குறித்த மொழிபெயர்ப்புக்களுக்கு 'ஆங்கிலவாணி' எனத் தலைப் பிட்டார். சேக்ஸ்பியர், மில்ரன், கிறீஸ், ஷெல்லி, ஸ்கொற்ரெனிசன், ப்றௌனிங் முதலான கவிஞர் களுடைய கவிதைகள் சிலவற்றை மொழி பெயர்த்து நீண்டதொரு கட்டுரையாக அடிகளார் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆங்கில இலக்கியச் செல்வத்தை தமிழருக்கு வழங்குவதில் அடிகளார் முன்னோடியாக விளங்கினார் என அறிஞர் குறிப்பிடுவர்.

மேலைத்தேய இலக்கியங்களில் சிறந்தவற்றை தனது மொழிபெயர்ப்புக்கள் மற்றும் திறனாய்வுக் கட்டுரைக-ளினூடே அறிமுகப்படுத்தித் தமிழ்த்திறனாய்வுத் துறை யின் புதிய செல்நெறிக்கு அடிகளார் வழி சமைத்துக் கொடுத்தார்.

மொழியியல் சிந்தனை

1950களில் தமிழ்நாட்டுக் கல்விச்சூழலுக்குள் பெருமளவில் கால்பதித்த மொழியியல்புலம் குறித்த சிந்தனை அடிகளாரிடத்து ஆரம்பம் முதலே இருந்து வந்துள்ளது. தமிழ், ஆங்கிலம், கிரேக்கம், வடமொழி முதலான மொழிகளில் போதிய 'தாடனம்' பெற்றிருந்த அடிகளார் மொழியியல் நோக்கிலும் தமிழை ஆராயத் தலைப்பட்டார். மட்டக்களப்புத்தமிழ், யாழ்ப்பாணத்துத் தமிழ், தமிழகத்துத்தமிழ் ஆகியவற்றில் அடிகளாருக்கு இருந்த பரிச்சயம் இதற்கு வாய்ப்பாக அமைந்தது.

'தமிழ்மொழி ஒலியியல்' (The Phonetics of Tamil Language) என்ற கட்டுரையிலே உயிர்த் தமிழாகிய பேச்சுத்தமிழுக்கும், புத்தகத்தமிழுக்குமுள்ள வேறுபாடு களை அடிகளார் எடுத்துக்கூறினார். அடிகளாரது பிறி தொரு கட்டுரையான 'சோழமண்டலத்தமிழும் ஈழ மண்டலத்தமிழும்' என்ற கட்டுரையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டப்படத்தக்க மொழியியல்சார்ந்த பிறிதொரு படைப்பாகும். இக்கட்டுரை ஈழநாட்டு மொழிவழக்கு களை குறிப்பாக மட்டக்களப்பு மொழிவழக்குகளை ஆராய்வதற்கான புலமைநிலையிலான நிர்ப்பந்தத் தினை அறிஞர்களுக்கு ஏற்படுத்தியதெனலாம். தமிழ் மொழியின் ஒலியியல், பேச்சுவழக்கியல் தொடர்பாக அடிகளார் அடையாளப்படுத்திய விடயங்கள் பின்வந்த மொழியியல் ஆய்வாளருக்கு வழிகாட்டிகளாகவும் முன்னோடிகளாகவும் விளங்கின. அறிவியல் பட்டதாரி யான அடிகளார் தமிழ்மொழியினையும் அக்கண் கொண்டே நோக்கியமையால் இவ்விடயங்கள் சாத்திய மாகின எனலாம்.

ஒப்பியல் சிந்தனை

தமிழ் மற்றும் ஆங்கில இலக்கியங்களில் நிறைந்த பரிச்சயமுடைய அடிகளார் மேற்படி இரண்டு மொழிகளிலுள்ள இலக்கியங்களை ஒப்பீட்டு அடிப்படை யில் ஆராய்ந்தார். மேலைப்புலங்களில் பெரிதும் பயன் பாட்டிலிருந்த ஒப்பிலக்கியப் பார்வையினைத் தமிழுக்கு உரியமுறையில் கொண்டுவரவேண்டும் என்பதில் அடிகளார் குறியாக இருந்தார். ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் பற்றி ஆராய முனைந்து 'மதங்கசூளாமணி' என்ற அருமையான நூலொன்றினைப் படைத்தார். அடிகளாரது 'யாழ்' நூலுக்கு நிகரான புலமைநிலை முக்கியத்துவமுடையதாக அறிஞர்களால் இந்நூல் பார்க்கப்படுவது கருதத்தக்கதாகும். பின்னாளில் இந்நூல் நாடகத்துறை சார்ந்தவர்களுக்குப் பெரிதும் பயன்படுவ தாயிற்று.

விபுலாநந்த அடிகளார் எழுதிய மேற்றிசைச் செல்வம், நாகரிகவரலாறு, எகிப்திய நாகரிகம், யவன புரத்துக் கலைச்செல்வம், ஆங்கிலவாணி, பூஞ் சோலைக்காவலன் முதலான தலைப்புக்களில் வெளி வந்த ஆக்கங்கள் அவரது ஒப்பியலக்கியச் சிந்தனைக-ளின் வெளிப்பாடுகளாக உள்ளன.

அடிகளார், தமிழ் மற்றும் பிறமொழி இலக்கியங் களில் தான் நல்ல விடயங்கள் என்று கண்டவற்றை பல்வேறு தலைப்புக்களிலான கட்டுரைகளினூடே தமிழுக்கு அறிமுகப்படுத்தினார். போராசிரியர். க. கைலாசபதி, அடிகளாரைத் தமிழின் ஒப்பிலக்கியத் துறை முன்னோடி எனக் குறிப்பிடுகிறார். ஒப்பிலக்கிய நோக்கில் பாரதியின் கவிதைகளில் பொதிந்துள்ள கவித்துவம், கருத்துவளம், முற்போக்குச் சிந்தனை முதலான பண்புகளை அவதானித்துப் தமிழகத் தவர்க்கே அறிமுகம் செய்த பெருமையும் அடிகளாருக்கே உண்டு என்பதையும் இவ்விடத்தில் சுட்டுதல் பொருத்தமானதாகும்.

கல்விச் சிந்தனை

தமிழர்களது கல்விஅபிவிருத்தி தொடர்பில் தீர்க்கதரிசனமான சிந்தனைகள் பலவற்றையும் அடிக-ளார் கொண்டிருந்தாரெனலாம். கல்விதொடர்பான அவருடைய எழுத்துக்கள் மற்றும் அது சார்ந்த பணிக-ளில் இதனை அவதானிக்க முடிகிறது. பாடசாலை மட்டத்தில் ஆங்கில, விஞ்ஞானபாட ஆசிரியராகத் தொடங்கிய இப்பணி, பின்னாளில் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக அவரை வேண்டி விரும்பி அமர்த்தும் நிலையில் இருந்தது.

பாடசாலைகளை நிர்வகித்தல், மொழி மற்றும் சமயம் சார்ந்த நிறுவனங்களைத் தாபித்தல், நிர்வகித்தல் என்பன இவ்விடத்தில் முதன்மை பெறுகின்றன. யாழ்ப்பாணத்தில் அடிகளார் நிறுவிய 'ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கம்' இது தொடர்பில் விசேட கவனம் பெறுகின்றது. இன்றுவரை இயங்குகின்ற இச்சங்கத்தின் பணிகள் காலத்தினால் முக்கியத்துவம் பெறுவன. இச்சங்கத்தின்மூலம் பிரவேசபண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் என மூன்று பிரிவுகளில் தமிழ்ப் புலமை யாளர்கள் உருவாக்கப்பட்டனர். ஈழநாட்டில் தமிழ்ப் புலமை தழைத்தோங்கியதில் இச்சங்கத்துக்கு மிகப்பெரிய பங்குண்டு. தமிழ்நாட்டுக்கென ஒரு பல்கலைக்கழகம் வேண்டும், அது எங்கு அமைதல் வேண்டும், அது என்னென்ன விடயங்களிலெல்லாம் கவனம் செலுத்த வேண்டும் என்பன குறித்த தெளிவான சிந்தனைப் போக்கு அடிகளாரிடத்து இருந்தது. பல்கலைக்கழகமானது தேசிய அபிலாசைகளையும், பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும் என்ற அடிகளாரது நிலைப்பாடு அவரது பரந்துபட்ட சிந்தனையின் வெளிப்பாடாகக் காணப்பட்டது.

'நிலையில்லாத பொருள்களிடையே வாழுகின்ற நமக்கு என்றும் அழிவுபடாத ஆழ்ந்த உண்மைகளை எடுத்துரைக்கும் கல்வி சிறப்புடைய பொருள் என்பதில் ஐயமில்லை' என்ற விபுலாநந்த அடிகளாரது கூற்று அவர் கல்விக்குக் கொடுத்த முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது. கல்வியின் பன்முகச் செயற்பாடுகளான சமயக்கல்வி, விஞ்ஞானக்கல்வி, அழகியற்கல்வி, உடற்கல்வி முதலான அனைத்தையும் வலியுறுத்தும் அடிகளார், அவை அவரவருடைய பண்பாட்டுச்சூழலிலே வழங்கப் படவேண்டும் என்பதில் உறுதியாகவிருந்தார்.

கல்வியினுடைய நோக்கம் பலவாறானாதாகக் காணப்பட்டபோதும் அடிகளாரது நிலைப்பாடு அது ஆன்மீகநெறிப்பட்டதாக அமையவேண்டும் என்பதா கவே இருந்தது. ஆன்மீகப்பண்பாடு, ஒழுக்கம் முதலா னவற்றை கல்வியின்வழி நிலைநிறுத்தலாம் என்பது அடிகளாரது நிலைப்பாடாக இருந்தது. சமயக்கல்வியைப் புறந்தள்ளிய கல்விமுறைமையால் எந்தப்பயனும் இல்லை. அன்பை வளர்க்க, அறத்தைப் பெருக்க, பண்பை உயர்த்த, பரந்த சமய அறிவை உருவாக்க, சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் சகிப்புத்தன்மை யினை உருவாக்கச் சமயக்கல்வி துணைநிற்கும் என அடிகளார் நம்பினார்.

முடிவுரை

சுவாமி விபுலாநந்தரது ஆளுமையானது பல்பரிமாணமுடையதாகக் காணப்படுகிறது. பல்வேறு அறிவுத்துறைகளின் சங்கமமாக அமைகின்ற அவரு-டைய எழுத்துக்களில் அவருடைய தூரநோக்கினைத் தெளிவாக இனங்கண்டுகொள்ள முடிகின்றது.

இயற்றமிழ், இசைத்தமிழ், மொழிபெயர்ப்பு, கலைச் சொல்லாக்கம், ஒப்பிலக்கியம், நாடகம், கல்விச்சிந்தனைகள் என நீண்டுசெல்லும் பல்துறை சார்ந்த தளங்களில் அடிகளார் தமது புலமைச் சிரத்தை யினைச் செலுத்தியுள்ளார். தமிழாய்வுத்தடத்தில் பின்னாளில் முக்கியத்துவம் பெறுகின்ற துறைகளான மொழிபெயர்ப்பு, ஒப்பிலக்கியம், மேலைத்தேயத் திற னாய்வு, கலைச்சொல்லாக்கம் முதலானவற்றில் அடிக-ளார் எடுத்த முன்முயற்சிகள் ஆய்வாளர் பலருக்கும் ஆதர்சமாக விளங்குபவை. மரபுவழியான தமிழாய்வுச் சூழலை அடிகளார் தன்னுடைய விஞ்ஞான ரீதியான ஆய்வுகளினூடே தடம்மாற்றினார் என்றால் அது மிகை யான கூற்றல்ல. அடிகளார் காலத்து தமிழறிஞர் பலரும் 'மறைவாக தமக்குள்ளே பழங்கதைகள் பேசிக்' காலத்தைக்கழிக்க அடிகளார், தமிழர் பண்பாடின் பெருமைகளை, தமிழின் இலக்கியச் செழுமையினைத் தக்க சான்றுகளுடன் தமக்கேயுரிய இலக்கிய நோக் குடன் பலரும் அறியும் வகை செய்தமை இவ்விடத்தில் விதந்து குறிப்பிடத்தக்கதாகும்.

துணைநூல்கள்:

1. சிவத்தம்பி. கா., 'விபுலாநந்தர் ஆய்வியல் பற்றிய ஒரு பிரச்சினை மையம்', விபுலாநந்த அடிகளார் நூற்றாண்டுவிழா சிறப்பு வெளியீடு, தமிழ்மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1992, பக். 57 – 59.
2. 'அன்பின் ஐந்திணையுரை', பொருணூற்சிறப்பு' முதலான அடிகளாரது கட்டுரைகள் இவ்விடத்தில் தனி யான கவனம் பெறுபவை.
3. பாலசுந்தரம். இ., 'விபுலாநந்த அடிகளாரின் ஆய்வுப்புலங்கள்', விபுலாநந்த அடிகளார் நூற்றாண்டு விழா சிறப்பு வெளியீடு, தமிழ்மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1992, ப.22.
4. அருள்செல்வநாயகம் ,(பதிப்பாசிரியர்), விபுலா நந்தக்கவிமலர், ப. 3.
5. பாலசுந்தரம். இ., மு. கு. கட்டுரை ப. 22.
6. பத்மநாதன். சோ., 'அடிகளாரைக்கவர்ந்த ஆங்கில இரங்கற்பா', விபுலாநந்த அடிகளார் நூற்றாண்டுவிழா சிறப்பு வெளியீடு, தமிழ்மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1992, ப.36.
7. கைலாசபதி. க., 'முத்தமிழ் முனிவரின் ஒப்பியல் நோக்கு', அடிகளார்படிவமலர், காரைதீவு, 1969, ப. 36.

சுவாமி விபுலாநந்தரின் மணிமொழிகள்

உண்மை நாகரிகம் என்பது உயர் வாழ்க்கையையே குறிக்கும், உயிர் வாழ்வென்பது உடலெடுத்தோர் அனைவருள்ளும் இருந்து அவனை ஆட்டுவிக்கும் சக்தி, பரம சக்தியின் அம்சமே என்பதையே வற்புறுத்தும். இப்படி வற்புறுத்துவதினால் மானிடர்க்குள், ஆத்மஞானம் பரவ அதன் பயனாக சமத்துவம், சாந்தம், சகோதரத்துவம், பரோபகாரம் முதலிய நற்குணங்கள் பொலிந்து நிற்கும் இவ்வுலகம்.

வாழ்க்கையின் உண்மைப் பொருளையும், உயிர் பெற்று வாழும் மாந்தர் பின்பற்ற வேண்டிய நெறி யையும், உபதேசத்தாலும் உயரிய வாழ்க்கையாலும் உதாரணங்காட்ப் பிறப்பர் பெரியோர். இவருடைய குணப்பெருக்கை அறிந்து, அதனை மதித்து. தம்மாலான வரையில் அப்பெரியோரின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற முயலுவது நல்லோர் தன்மை.

நோயில்லாத உள்ளத்தில் எது நேர்ந்தாலும் சீரணித்துப்போக வேண்டும். கவலைகள் உண்டானால், அவன் உள்ளம் ஆரோக்கியமற்ற உள்ளமாகும்.

பவனத்தை நாம் தள்ளும்போது அது மிக உறைத்து எதிர்க்கிறது. மனமும் அடக்கப்படுந்தோறும் ஆண்மை கொண்டெழுகின்றது.

நானறிந்த சுவாமி விபுலாநந்தர்

சட்டத்தரணி சாம் தில்லையா
ரொறன்ரோ, கனடா



கிழக்கு மாகாணத்தின் தலை நகரம் மட்டக்களப்பு. இந்த நகரத்துக்கு மேற்காக 48 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஒரு சிறு நகரம் காரைதீவு, இது ஒரு வெறும் 'காரைதீவு' ஆகாது, அது தமிழ் அறிஞர்களைப் பெற்றுத்தந்து தமிழ் மக்களுக்கும் தமிழுக்கும் பெருமையூட்டிக் கொண்டிருக்கும் சிறு நகரம். தென் இந்தியாவின் அண்ணாமலைப் பல்கலைகழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராக இருந்த, நாம் அறிந்த அருட்திரு சுவாமி விபுலா நந்தாவும் இன்று நாம் காணும் அதே சர்வகலாசாலையின் கனடா வளாகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணி யாற்றும் திரு. இளையதம்பி பாலசுந்தரம் அவர்களும் வேறு எங்கும் பிறக்கவில்லை; அந்தக் காரைதீவில்தான் பிறந்தார்கள்.

ஈழத்து மக்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்த மேற்கு நாட்டவர்களின் அதிகாரத்துக்கு உட்பட்டுத் தமது சொந்தப் பாரம்பரியங்களை, நம்பிக்கைகளைக் கைவிட்டு, வந்தவர்களின் வழியைப் பின்பற்றியிருந்த காலம்; தமக்கென்று ஒரு நம்பிக்கையான வழிகாட்டியை வேண்டி நின்ற காலம். மக்களின் தேவை அறிந்து அவர்களை வழிப்படுத்தி, நெறிப்படுத்துவதற்காக இறை அருள் செய்தது போன்று 1892ம் வருடம் மார்ச் 27ம் நாள் பிறந்தார் அருட் திரு. விபுலாநந்த அடிகளார். பாடசாலையில் பயிலும் காலம் தொடக்கமே இவரிடம் ஒரு பெரும் தலைவனுக்கு இருக்கக் கூடிய குணாதிசயங்கள் காணப்பட்டதை பலர் அன்றே அவதானித்திருந்தனர். அப்போது அவருக்கு 'மயில்வாகனம்' என்று பெயர், மட்டக்களப்பு நகரிலுள்ள புனித மைக்கல் கல்லூரியில் கல்வி பயின்ற பொழுது அவருக்குக் கணித பாடத்தைக் கற்பித்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய 'பொனெல்' என்பவராவர். கணித பாடம் கற்பிப்பதில் மிகவும் திறமைசாலியான வணக்கத்துக்குரிய 'பொனெல்' அவர்கள், மயில்வாகனம் கணித பாடத்தில் காட்டிய திறமையையும், அவருடைய ஒழுங்கையும், பணிவையும் அவதானித்து விட்டு மயில்வாகனத்துக்கு மிகப் பெரிய எதிர்காலம் ஒன்று இருப்பதாகக் கூறியிருந்தார். பதினாறாவது வயதில் கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் முதன்மையாகச் சித்தியடைந்தவர் மயில்வாகனம். கணிதபாடத்தில் மாத்திரமல்ல பௌதிக வியலிலும் திறமைசாலியாக அவர் விளங்கியவர்.

சுவாமிகள் இலக்கியம், சமயம், தத்துவஞானம், மதஞானம், அறிவியல், இசை முதலிய பல்வேறு துறைக-ளிலும் ஞானம் பெற்றிருந்தார். எனினும் அவருடைய பிரதான நோக்கம் தனது மக்களுக்கும், தான் சார்ந்த மொழிக்கும் தொண்டு செய்வது என்பதாகவே இருந்தது. அந்த எண்ணத்தை நிறைவு செய்யும் பொருட்டு 1922ம் வருடம் தான் கொண்டிருந்த ஆசிரியர் பதவியைத் துறந்து, சென்னைக்குச் சென்று மயிலாப்பூர் மடத்தில் தீட்சை பெற்று 1924ம் வருடம் சுவாமி சிவானந்தரினால் 'சுவாமி விபுலாநந்தர்' என்ற துறவிப் பெயரைப் பெற்றுக் கொண்டார்.

பல்வேறு துறைகளில் பாண்டித்தியப் பெற்றிருந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் அவர்கள் பல்வேறு மொழிகளிலும் திறமை பெற்றிருந்தார். தமிழ், ஆங்கிலம், வடமொழி, இலத்தீன், யவனம், வங்கம், சிங்களம், அரபி என்பன அவர் அறிந்திருந்த மொழிகளாகும். இத்தனை மொழிகளையும் கற்றறிந்திருந்த சுவாமிகள் திறமையான பேச்சாளரும் கூட. தமிழர் வரலாறு, தமிழ் இலக்கியங்கள், தமிழ் இசை, இசைக்கருவிகள், வேதாந்தம் தழுவிய தத்துவ ஞானம் என்பன அவரின் பேச்சுக்களில் பிரதான பங்கைப் பெற்றிருந்த விடங்களாகக் காணப்பட்டன. தமிழர்கள் தமது சொந்த நம்பிக்கையைக் கைவிட்டு, பிறநாட்டவரின் நம்பிக்கையைப் பின்பற்றியிருந்த நாட்கள் அவை.

அது பற்றிச் சுவாமிகள் விளக்கம் தரும் பொழுது, 'புதிய மதம் ஒன்றைப் பின்பற்ற முயற்சிப்பது புதிய மொழி ஒன்றைக் கற்றுக் கொள்வதற்குச் சமமானது. எமது தாய் மொழியின் அமைப்பு முறையையும் அதன் இலக்கணத்தையும் அதிக சிரமங்கள் இன்றியே நாம் அறிந்து கொள்கின்றோம், ஆயின் அந்நிய மொழி ஒன்றைக் கற்றுக் கொள்வதாயின் மிகுந்த சிரமப்பட்டு அதன் அமைப்பு விதிகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதோடு அதன் பயன்பாட்டையும் பூரணமாகப் புரிந்து கொள்ளவும் வேண்டும்' என்கின்றார். தத்துவஞானத்துக்கு உட்படாத மதம் வெறும் மூட நம்பிக்கையாக மாறி விடும், அதைப் போன்று மதம் இல்லாத தத்துவஞானம் அஞ்ஞானமாகும் என்கின்றார் அடிகளார். சிறுவர்களையும் யாதுமே அறியாத மக்களையும் மதம் மாற்றுவதை நியாயப்படுத்த முடியாது. காரண காரியத்தின் அடிப்படையில் தமது நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ள அவர்களால் முடியாது என்பது சுவாமிகளின் கருத்தாகும். (*Ancient Thoughts for Modern Man – Swami Vipulananda*)

மனிதர்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டுபவை மதங்கள். தேவைகள் ஏற்படும் பொழுது மதம் உதவ வேண்டும். தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு முடியாத மதங்கள் பிரயோசனமற்றவை. அத்தகைய மதங்கள் தெரிவு செய்யப்பட்ட ஒருசிலரின் கோட்பாடாக மாத்திரமே இருக்கும். இந்து மதமானது மிகவும் பரந்து பட்ட ஒன்று. அதன் சடங்குகள், புராணக் கதைகள், அதன் தத்துவஞானம் என்பன மனிதத் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் அளவுக்கு வளர்ச்சியடைந்ததன் காரணமாக அது எவருக்கு, எங்கே, எப்பொழுது, என்ன தேவை ஏற்படுகினறதோ அந்தத் தேவையைப் பூரணமாகப் பூர்த்தி செய்யும் ஆற்றலை அது பெற்று நிற்கின்றது என்பது சுவாமிகளின் இந்து மதம் பற்றிய விளக்கமாகும்.

இந்து மதத்தைப் பொறுத்தவரையில் அதன் போதனைகள் மிகவும் விரிவானவை. அவை இந்துக்களின் வாழ்க்கையின் சகல அம்சங்களையும் தொட்டு நிற்கின்றது. அவர்கள் நீராடும் பொழுது மத ரீதியாகவே நீராடுவர், உண்ணும் பொழுதும் மத ரீதியாகவே உண்பர், உறங்கும் பொழுதும் மத ரீதியாகவே உறங்குவர், திருமணம் செய்யும் பொழுதும் மத ரீதியாகவே மணந்து கொள்வர், குழந்தைகளை வளரக்கும் பொழுது அவ்வாறே செய்வார்கள். இந்து மன்னர்கள் சண்டையிடும் பொழுதுகூட மத ரீதியாகவே சண்டையிட்டனர், மக்களை ஆளும் பொழுதும் அவ்வாறே, நீதி செலுத்தும் பொழுதும் அவ்வாறே செய்தனர். வேலை செய்யும் பொழுதும் அவ்வாறே செய்தனர். வியாபாரம் செய்யும் பொழுதும் அவ்வாறே, மதரீதியாகவே செய்தனர். நிலையான தர்மத்தைக் கொண்டது இந்து மதம் என்றுகூடச் சொல்லிக் கொள்வார்கள்.

மனிதர்களுடைய ஒழுக்கத்தின் பெறுமதி விலை மதிக்க முடியாத ஒரு சொத்து. சிறந்த வாழ்கை முறை, இனிமையான நடத்தை, தூய்மையான சட்டங்கள், நியாயத்தையும் உண்மையையும் மதிக்கும் பான்மை, பரந்த இருதயம், வளங்கும் கரங்கள் என்பனவும் ஏனைய மனித நேயம் கொண்ட வாழ்கையையும் உள்ளடக்கியது இந்து மதம். இந்த அரும் பெரும் குணங்கள் அத்தனையையும் உள்ளடக்கிய சொல் வட மொழியிலிருந்து பெறப்படும் 'தர்மம்' என்பதாகும். இந்தச் சொல் ஆங்கிலத்தில் பல்வேறாக மொழி பெயர்க்கப்படுகின்றது. 'சட்டம்', 'நெறிமுறை', 'மதம்', 'நேர்மை', 'ஒழுக்கம்' என்பன அவற்றுள் சில. இவற்றுள் எந்த ஒரு சொல்லும் 'தர்மம்' என்னும் சொல்லின் கருத்துக்கு அண்மையில் கூட வரமுடியாது. இந்தச் சொல்லின் உண்மையை விளக்குவதற்காகவே இறைவன் கிருஷ்ணராக அவதாரம் எடுத்து அருச்சுனனுக்குத் தேரோட்டியாக இருந்து மகாபாரதத்தில் 'கீதை' மூலம் விளக்கம் தருகின்றார்.

'கீதை' இமயமலை ஆச்சிரமத்திலிருந்து எழுதப்பட்ட ஒன்றல்ல. அது குருசேஷ்திரப் போர் ஆரம்பிக்கக் படுவதற்று முன்னர் போர் களத்தில் வைத்துக் கிருஷ்ண பகவான் அருச்சுனனுக்கு தர்மம் என்பது என்ன என்பதைப் போதித்தது. சஷ்திரியருக்கு போர் ஒன்றைச் செய்வதைத் தவிர மேலான தர்மம் வேறு எதுவும் கிடையாது. ஆனால் செய்கின்ற போர் நீதியானதாக இருக்க வேண்டும்.

மேற்கு நாட்டவர்களால் 'வீரம்' என்று அழைக்கப்படுவது இந்தியாவில் சஷ்திரியர்களுக்குத் 'தரமம்' ஆகும். சரித்திரம் கண்ட காலம் தொடக்கம் யுத்தங்கள் நடை பெற்றிருக்கின்றன. கடவுள் 'ரைரான்' களோடு சண்டையிட்டிருக்கின்றார். 'லுகிபர்' சொர்க்கத்தின் அரசனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான், ஸ்ரீஇராமன் அசுரர் குலத்து இராவணனுடன் யுத்தம் செய்து அவனை அழித்தார், பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையில் நடைபெற்ற பாரத யுத்தத்தில் அனேக சஷ்திரியக் குடும்பங்கள் அழித்து ஒழிக்கப்பட்டன. இவை அனைத்தும் நீதிக்கும் அநீதிக்கும் இடையில் நடைபெற்ற யுத்தங்கள், அநீதியை அழித்து நீதியை நிலைநாட்டுவதற்காக, நீதியின் பால் நின்று செய்யப்பட்ட போர்கள். அது தர்மம் ஆகும். இவ்வாறு தர்மத்தைப் பற்றி அருமையான விளக்கம் ஒன்றை அடிகளார் மேற்கண்ட தனது நூலில் தந்துள்ளார்.

சுவாமிகள் வேதாந்த சைவத்தைத் தழுவியிருந்தாலும் ஏனைய மதங்களையும் அவர் வெகுவாக ஆதரித்துவந்தார். அவர் எழுதிய ஆறு பிரபல்யம் பெற்ற ஆக்கங்களுள் பல சித்தாந்தம் சார்ந்தவை. 'நடராஜ வசனம்', 'தில்லைத் திரு நடனம்', இறைவன் மாதொரு பாகனாய் அமைந்துள்ள நுட்பத்தினை விளக்கும் 'உமாமகேஸ்வரன்' என்பன போன்ற வசன நூல்கள் முழுக்க முழுக்கச் சிந்தாந்தம் சார்ந்த நூல்கள். சைவ சமயம் மாத்திரமன்றி ஏனைய மதங்களையும் அவர் ஆதரிக்கத் தவறியதில்லை, அவர் பிறந்த நகருக்கு இரு மருங்கிலும் உள்ளவை இஸ்லாமியர்கள் வாழும் இடங்கள். கிழக்கு இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழர்களும் இஸ்லாமியரும் அந்யோன்யமாகவே வாழ்ந்து வருகின்றனர். இஸ்லாமியர்கள் தமிழையே தமது தாய் மொழியாகக் கொண்டிருக்கும் காரணத்தாலும் இரு இனத்தவர்களும் வாழும் இடங்கள் ஒன்றுக்கு அண்மையில் மற்றொன்று கலந்து இருக்கின்ற காரணத்தாலும் கிழக்கிலங்கைத் தமிழ் மக்கள் இஸ்லாமியர்களோடு சகோதரர்கள் போன்ற நட்புணர்வுடனேயே பழகிக் கொள்வார்கள். இதன் அடிப்படையில் இஸ்லாமியர்களைப் பற்றியும் அவர்களின் மதம் பற்றியும் சுவாமிகள் நன்கு அறிந்திருந்தாரகள்.

பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்த அடிகளார் 'இலங்கை முஸ்லிம் மக்களின் பேச்சு வழக்கிலுள்ள 'றஹ்மத்து', 'பறக்கத்து', 'மௌத்து', 'அலாதி', 'ஹயாத்து' போன்ற சொற்களை எல்லாம் திரட்டிச் சேர்க்க வேண்டும் என்று ஆசை கொண்டிருந்தார்கள் என ஜனாப் ஏ. எம். ஏ அஸீஸ் அவர்கள் கூறியுள்ளார்கள். சுவாமிகள் பற்றி மேலும் தனது கருத்தைக் கூறும் பொழுது, 'சுவாமிகள் சமூக சேவையின் முக்கியத்தைப் பற்றி அடிக்கடி எடுத்துக் கூறுவார்கள். மட்டக்களப்புச் சிவானந்த வித்தியாலயத்தைப் பற்றியும் சுவாமிகள் பல விஷயங்களைச் சொல்லுவார்கள். கிழக்கு மாகாணத்து இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவாகிய கலாச்சாரத்தைப் பற்றியும் எடுத்து விளக்குவார்கள். நவ யுகத்தின் போக்கிலும் முயற்சி மிகுதியிலும் நம்முடைய பழம் செல்வங்களை யாம் மறந்துவிடுதலாகாது. நாட்டுப் பாடல்களை எல்லாம் மக்கள் மறந்து விடுமுன் அவற்றைத் தொகுத்து வெளியிடுதல் வேண்டும்' என்றும் கூறுவார்கள்.

'கிழக்கு மாகாணத்தில் புதிதாக நிறுவப்பட்ட பள்ளிக் கூடங்களில் சுவாமிகளுக்குத் தனிப் பிரீதி. பொது மக்களின் முன்னேற்றத்தில் மிகுதியான விருப்பம். "வெறும் வயிற்றோடு உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றி வாழும் மக்களுக்குக் கலாச்சாரம் எதற்கு? நாட்டைத் திருத்திப் பயிரிட்டு வயிறு குளிர மக்கள் உண்ணுதல் வேண்டும்" என்பார்கள். இப்படியான உரைகள் சுவாமிகளின் தூய உள்ளத்திலிருந்து இயல்பாக எழும் உணர்ச்சியின் பாற்பட்டவை. இந்த வாசகங்களையெல்லாம் மிகுதியாகக் கேட்பதற்கச் சந்தர்ப்பங்கள் பல ஏற்படுவன வாயின் அதைப் பெரும் பாக்கியமாகவே நான் கருதுவேன்' எனத் தொடரும் அஸீஸ் அவர்கள், கண்டியில் சுவாமிகள் 'வரகவி பாரதியார்' என்னும் பொருளில் நிகழ்த்திய பிரசங்கம் இன்னும் எனது நினைவிலுள்ளது. கண்டியில் அவர் தங்கியிருந்த பொழுது அவருடைய தூய்மையையும், ஒழுக்கத்தையும், கடவுள் பக்தியையும் ஒருவாறு கண்டேன். சமூக ஊழல்கள் பற்றி அவர் கொண்டிருந்த கொள்கைகளை அறிந்தேன். ஏழை எளியவர்கள் மீது கொண்டிருந்த இரக்கத்தையும் சமய சமரச நோக்கினையும் கூடக் கண்டேன். இஸ்லாம் மதத்துக்கு அவர் காட்டிய பெரும் மதிப்பினையும் கண்டேன்.

இவற்றுடன், வற்றாத ஊற்றுப் பெருக்குப் போன்ற அவருடைய சங்க நூல் அறிவினையும், ஆராய்ச்சி மாண்பினையும் கண்டேன்' என்கின்றார் அஸீஸ் அவர்கள். இலங்கை வாழ் இஸ்லாமியர்களுக்குத் தர்ம நிதியம் ஒன்றை ஆரப்பிப்பதற்கு வேண்டிய ஆலோசனைகளைச் சுவாமிகள் அஸீஸிக்கு வழாங்கியிருந்தார்கள்.

மொழிப்பற்றும், தேசப் பற்றும், தெய்வீகப் பற்றும் கொண்டிருந்த அடிகளார் மகாகவி பாரதியிடம் மிகுந்த ஈடுபாடுடையவராக இருந்தார். பாரதியின் பாடல்கள் மனித நேயத்துக்கு வழிகாட்டுவன, பாடல்கள் தரும் கருத்துக் கள் இந்திய நாட்டின் மறுமலர்ச்சிக்கு ஒளியூட்டுவன எனத் தனது கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார் அடிகளார். 'தமிழிலே எளிய நடையில் பாட்டுக்களை இயற்றியவர்களுள்ளே பாரதி தலைசிறந்தவர் என்பதை அல்ல, தேசிய உணர்ச்சியும், தேசாபிமானமும் பொங்கும்படி கவிகளை எளிமைசார இயற்றியவர் பாரதி என்பதையே நாம் நினைவு கொள்ள வேண்டும் என்பதையே வற்புறுத்திக் கூறினார். பாரதியார் சிற்சில சொற்களை எடுத்து உப-யோகித்த செம்மையை வடிவாக எடுத்துக் காட்டினார்கள். ஒவ்வொன்றுக்கும் பற்பல உதாரணங்களை எடுத்துக் காட்டிக் கவிஞன் உள்ளம் இது என விளக்கினார்கள்' என்கிறார் அஸீஸ் அவர்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1937ஆம் வருடம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவுக்கு வருகை தந்திருந்த சேர் ஜோச் பெட்றிக் அவருக்கு எதிராக இந்தியக் கொடி உயர்தித் தனது நாட்டுப் பற்றை வெளியுணர்த்தினார் அடிகளார். இந்தியா அன்று பிரித்தானி யரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

இவ்வாறு ஆசிரியராக, விரிவுரையாளராக, விமர்சகராக, பத்திரியையாளராக, மொழி பெயர்ப்பாளராக, ஆய்வாளராக தனது வாழ் நாள் முழுவதையும் தமிழுக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் செலவிட்டவர் அடிகளார் ஆவார். இறுதியாக இலங்கையின் இராமகிருஷ்ண மிஷன் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சமயம், இமய மலைச் சாரலில் மாயாவதி ஆச்சிரமத்தில் மிஷன் நடத்தி வந்த 'பிரபுத்த பாரதம்' என்னும் சஞ்சிகைக்கு ஆசிரியராக அடிகளாரை நியமித்தது. 1936ம் வருடம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆதரவிலே பழந் தமிழரின் இசை, ஓவியம், கலையறிவு என்னும் பொருள் பற்றி அடிகளார் பேச நேர்ந்த பொழுது இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளாக வழக்கற்று மறைந்து போன பழந் தமிழரின் இசைக் கருவியாகிய யாழின் இயல்பினைச் சங்க இலக்கிய நூற் சான்று கொண்டு, ஓவிய ஒருவில் முதன் முதல் வெளிப்படுத்தியவர் அடிகளார் அவர்கள். அடிகளாரது இசை ஆய்வு பற்றிய சொற்பொழிவுகளை நேரிற் கேட்டு மகிழ்ந்த பெரும் பேராசிரியர் உ. வே. சுாமிநாதையர் முதலிய தழிழறிஞர் பலரும் இவ் வரிய ஆராய்ச்சிப் பொருளை நூல் படிவில் விரைந்து வெளியிடுமாறு அடிகளாரை அடிக்கடி வேண்டிக் கொண்டிருந்தனர். அதற்கான வாய்ப்பு அடிகளாருக்கு இங்கேதான் கிடைத்தது. 'நரம்பின் மறை' எனத் தொல்காப்பியரும், 'இசையொடு சிவணிய யாழின் நூல்' எனக் கொங்குவேளிரும் குறிப்பிட்ட அந்த 'யாழ்' பற்றிய ஆய்வுப் பணி தொடங்கியது. தனக்கே உரிய பெரும் புலமையாலும், பேராற்றல் மிக்க ஆய்வுத் திறத்தாலும், பெற்றிருந்த இசை நுணுக்கத்தாலும் ஏறத்தாழ பதின் நான்கு ஆண்டு இடைவிடா ஆய்வின் பின்னர் மறந்து போனவையும், மறைந்து போனவையுமான பண்டையோர் வளர்த்த இசை நலங்களையெல்லாம் கேட்டு மகிழு தற்குரிய இசைத்தமிழ் முதல் நூலாக 'யாழ்' நூலை உருவாக்கித் தமிழுலகுக்குத் தந்தார் சுவாமி விபுலாநந்தர். 'யாழ்' நூல் அரங்கேற்றம் 1947ம் வருடம் ஆனி மாதம் 6ம் நாள் நடந்தேறி முடிந்தது. அயராத உழைப்பினால் தளர்ந்து போயிருந்த அடிகளார் நாடு திரும்பிய பின்னர் சிறிது காலம் நோய் வாய்பட்டிருந்து 1947ம் வருடம் ஆடித்திங்கள் 19ம் நாள் இறையடி சேர்ந்தனர். கல்லடி சிவாநந்த வித்தியாலயத்துக்கு அருகில் தூங்குகிறது அடிக-ளாரின் பூதவுடல். 'இறப்பு என்பது எதிர்பாராத நிகழ்வு ஒன்று ஆகாது. நீண்ட கால உழைப்புக்குப் பின்னர் மீண்டும் எமது பணிகளைத் தொடங்குவதற்கு முன்னராக எடுத்துக் கொள்ளப்படுகின்ற ஒரு ஓய்வுகாலம் அது. நாம் மூச்சை உள்ளே இழுத்து மீண்டுமு வெளியே விடுவதும், பகலுக்குப் பின்னர் தொடரும் இரவும், கோடைகாலத்தைத் தொடரும் குளிர் காலமும் இதே நிலையைத்தான் எமக்கு உணர்த்துகின்றன. செயலும் செயலின்மையும் அவற்றை வழி நடாத்தும் சட்டத்துக்கு அமைவாகத் தத்தமது சொந்தத் தர்மத்தைக் கொண்டுள்ளன. அவற்றுக்கே உரிமை யான தர்மத்துக்கு அமைவாக அவை இரண்டையும் நாம் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்கின்றோம்' என்றார் சுவாமி விபுலாநந்தர்.

சுவாமி விபுலாநந்தரின் திறனாய்வு நோக்கு

(தமிழின் இலக்கியத் திறனாய்வியல் வரலாற்றில்
சுவாமி விபுலாநந்தரின் இயங்குநிலை பற்றிய ஒரு வரலாற்றுக் குறிப்பு)

பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியன்
ரொறொன்ரோ, கனடா



தோற்றுவாய்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறுகொண்ட தமிழரின் பண்பாட்டு விழுமியங்கள் நவீன காலகட்டத் தேவைகளுக்கு ஏற்றவகையில் மாற்றமடையத் தொடங்கிய காலகட்டம் 19ஆம் நூற்றாண்டு ஆகும். அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவாகத்தொடங்கிய இவ்வாறான நவீன சார்பான மாற்றங்களுக்கான கருத்தியல் அடிப்படைகளை முன்மொழிந்ததோடு அமையாமல் அவைதொடர்பில் தீவிரமாகச் செயற்பட்டுநின்ற சிந்தனையாளர் பலருள் முக்கியமான ஒருவராகவும் திகழ்ந்தவர், சுவாமி விபுலாநந்தர் அவர்கள்.(1892-1947) தமிழகத்தின் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் முதலாவது தமிழ்ப் பேராசிரியர் ஆகவும் இராமகிருஷ்ண மிஷன் என்ற ஆன்மிக நிறுவனம் சார்ந்த இதழ்களின் ஆசிரியராகவும் திகழ்ந்தவரான அவர், தமிழின் பல்வேறு ஆய்வுத் துறைகளை - குறிப்பாக, இயல், இசை மற்றம் நாடகம் ஆகிய முப்பெருந்துறைகள்சார் சிந்தனைகளை - நவீன காலத் தேவைகளுக்கு ஏற்ப வளர்த்தெடுப்பதிலே அயரா ஊக்கத்துடன் சிந்தித்துச் செயற்பட்டு வந்தவருமாவார்.

அவ்வகையில் அவர் இயற்றமிழ் சார்ந்து செயற்பட்டுநின்ற துறைகளில் முக்கியமானவொன்று இலக்கியத்திறனாய்வு ஆகும். இலக்கியத் திறனாய்வு என்பது இலக்கிய ஆக்கங்களைத் தகுதிகண்டு பேணிக்கொள்ளும் நோக்கிலான ஒரு ஆய்வுமுறைமையாகும். மொழிசார்ந்த ஆக்கங்களாக உருவாகின்ற வற்றுள் 'இலக்கியம்' என்பதான தகைமைக்குரியவற்றை அடையாளங்காணல், அவற்றைத்தரநிலைகளில் மதிப்பிடுதல், அவ்வகை மதிப்பீடுகளுக்கான காரணிகளை விளக்கியுரைத்தல் முதலான செயற்பாடுகளை மையப்படுத்தியதாக இந்த ஆய்வுமுறைமை அமையும். ஆங்கிலத்தில் *Literary Criticism* எனவழங்கும் தொடரின் நேரடித் தமிழாக்கமாகவே இலக்கியத் திறனாய்வு என்ற இத்தொடரை நாம் வழங்கிவருகி றோம்.தமிழில் இது ஒரு ஆய்வுத்துறையாக உருவாகத் தொடங்கிய காலகட்டமான 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவரான சுவாமி விபுலாநந்தர் அவர்கள், தமது எழுத்துகள் மற்றும் உரைகள் ஊடாக இத்துறையின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பும் செய்துவந்துள்ளார். இத்தொடர்பிலான அவருடைய சிந்தனைகள் மற்றும் செயற் பாடுகள ஆகியவற்றை அடையாளங்காட்டும் காட்டுவதுடன் அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பான ஆய்வுக் குறிப்புகளை முன்வைக்கும் முயற்சியாக இச்சிறு கட்டுரை அமைகிறது.

இம்முயற்சியில் முதற்கண், இலக்கியத் திறனாய்வு என்ற ஆய்வுமுறைமையானது 20ஆம் நூற்றாண்டில் தனியானதொரு ஆய்வுத்துறையாக உருவான சூழல், அதிலே விபுலாநந்தர் இயங்கிநின்ற முறைமை ஆகியன தொடர்பான பொதுவான வரலாற்றுக் குறிப்புகளை முன்வைப்பது அவசியமாகிறது.

1. தமிழில் இலக்கியத் திறனாய்வியலின் உருவாக்கச் சூழலும் அதில் சுவாமி விபுலாநந்தர் இயங்கிநின்ற நிலையும் - பொதுவான வரலாற்றுக்குறிப்பு

இலக்கிய ஆக்கங்களைத் தகுதிகண்டு பேணிக்கொள்ளும் நோக்கிலான சிந்தனைகளும் செயன்முறை களும் தமிழிலே பண்டைக்காலம் முதலே நிலவி வந்துள்ளன என்பது இங்கு நமது கவனத்துக்குரிய செய்தியாகும். பேணப்பட்டனவாக எமக்கு இன்று கிடைக்கும் பண்டைத் தமிழிலக்கியங்கள் - சங்க இலக்கியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருமுறை – திவ்யப்பிரபந்தப் பாடற்பரப்பு, முத்தொள்ளாயிரம், நந்திக்கலம்பகம், மற்றும் சீவகசிந்தாமணி, கலிங்கத்துப்பரணி, பெரியபுராணம், கம்பரா மாயணம், குற்றாலக்குறவஞ்சி முதலியவற்றை உட்பட 19ஆம் நூற்றாண்டுவரை எழுந்த இலக்கிய ஆக்கங்கள் - தமிழர்மத்தியில் பண்டுதொட்டு நிலவிவந்துள்ள திறனாய்வு நோக்கிலான தகுதிகாணும் சிந்தனைகளின் பெறு பேறுகளே என்பது வெளிப்படை.

மேலும், மேற்சுட்டியவாறான தகுதிகாணும் நோக்கிற்கும் பின்புலமாகப் பண்டைத் தமிழ்ச் சூழலிலே நிலவிவந்துள்ள திறனாய்வுநிலைசார் செயன்முறைகள் என்றவகையிலே அரங்கேற்றம் (தகுதியானவற்றைச் சமூக வெளியில் அறிமுகஞ்செய்து கௌரவித்தல்) பாயிரம் (அவற்றுக்கு முன்னுரை மற்றும் அணிந்துரை என்பவற்றை வழங்கிக் கௌரவித்தல்)தொகுத்துப் பேணும் முறைமை மற்றும் உரைவிளக்கம் தரும்முறைமை முதலியன பற்றிய பல தகவல்களை தமிழிலக்கிய-இலக்கண வரலாறுகள் நமக்குத் தந்துள்ளன.

மேற்சுட்டியவாறாக தமிழ்ச் சூழலிலே பண்டைக்காலம் முதலே இலக்கியத் தகுதிகாண் நிலையிலான சிந்தனைகளும் செயன்முறைகளும் நிலவிவந்துள்ளனவெனினும் அவை, கி.பி. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையான காலப்பகுதியிலே இலக்கியத் திறனாய்வு என்ற பெயர்தாங்கிய ஒரு தனிநிலை ஆய்வு முறைமையாக உருவாக்கம் பெற்றிருக்கவில்லை என்பதே இங்கு நாம் கவனத்துட் கொள்ளவேண்டிய வரலாற்றுச் செய்தியாகும். அவை சார்ந்த செய்திகள் பலவும் இலக்கண மரபுக்குள்ளேயே – அதாவது 'இலக்கியத்தின் இலக்கணம்' என்ற வகையில் - பொருளிலக்கணம் என்றே அடையாளப்படுத்தப்பட்டு வந்துளன. இதற்கு, தமிழின் தொல்லிலக் கணமான தொல்காப்பியத்தின் பொருளதிகாரப் பகுதியே தக்கதொரு சான்றாகும். அதனைத் தொடர்ந்து இலக்கியத்தின் இலக்கணம் கூறும்வகையில் அகப்பொருள்-புறப்பொருள் இலக்கணங்கள் மற்றும் அணியியல், யாப்பியல், பாட்டியல் ஆகியவகைகளில் பல நூல்கள் தமிழில் எழுந்துள்ளன.

இவ்வாறு பொருளிலக்கணமாக நிலவிவந்த சிந்தனைமுறைமையானது திறனாய்வு என்ற புதியதொரு ஆய்வுமுறைமையாக வடிவங்கொள்வதற்கான சூழ்நிலை 19ஆம் நூற்றாண்டிறுதியில் உருவாகியது. மேலை இலக்கியத்தொடர்பால் தமிழுலகுக்கு அறிமுகமான ஆய்வுமுறைமை, இது. ஆங்கிலம் முதலிய மேலைமொழிகளில் தனியொரு துறையாக வளர்ச்சியெய்தியிருந்த Literary Criticism என்ற இலக்கிய ஆய்வுமுறைமை யானது அம்மொழிசார் கல்வியூடாக அக்காலப்பகுதியில் தமிழில் அடிபதித்தது. இவ்வாறு வந்த புதிய பார்வைகளையும் அணுகுமுறைகளையும் தமிழிலக்கியவாதிகள் படிப்படியாக உள்வாங்கத் தொடங்கினர். 19ஆம் நூற்றாண்டிறுதி யிலே தமிழகத்தில் வெளிவந்த இதழ்கள் சிலவற்றில் வெளிவந்த மதிப்புரைகள் மற்றும் சில இலக்கியக் கட்டுரைகள் ஆகியவற்றிலே மேற்படி துறைசார் பார்வைகள் அணுகுமுறைகள் என்பன புலப்படத்தொடங்கின. இவற்றின் தொடர்நிலையாகவே இருபதாம்நூற்றாண்டின் முற்பகுதியில் Literary Criticism என்ற தனிநிலை ஆய்வுத்துறை தமிழில் உருவாக்கம் பெறத்தொடங்கியது என்பது வரலாறு.

மேற்கண்டவாறு கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்ச் சூழலில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட Literary Criticism என்ற ஆய்வு முறைமையானது தொடக்கமுதல் 1940களின் இறுதிவரையான காலப்பகுதியிலே தமிழிலே இலக்கிய விமர்சனம் என்ற பெயரிலேயே வழங்கப்பட்டுவந்தது. விமர்சனம் என்பது வடசொல் என்பதால் அதற்குப்பதிலாகத் திறனாய்வு என்ற தமிழ்ச்சொல் 1940களில் உருவாக்கப்பட்டது. இதனை ஆக்கியளித்தவர் தமிழறிஞர் அ.ச. ஞானசம்பந்தன்(1916-2002) அவர்களாவர். அவர் 1948ஆம் ஆண்டிலே சிலப்பதிகார ரசனை என்ற நூலுக்கு எழுதிய அணிந்துரையிலே இலக்கியத் திறனாய்வு என்ற தொடரை உருவாக்கிக் கையாண்டுள்ளார். அதனைத் தொடர்ந்து, தமது இலக்கியக்கலை (1953) என்ற நூலிலும் இத்தொடரை அவர் பயன்படுத்தினார்.1. இதனைத் தொடர்ந்து தமிழ் உலகில் இலக்கியத் திறனாய்வு என்ற தொடரானது பெருவழக்குப்பெற்று நிலைத்துவிட்டது.

இவ்விடத்தில் தமிழ்ப் பாரம்பரியத்தில் நிலவிவந்ததான பொருளிலக்கண முறைமைக்கும் மேலை இலக்கியத்தொடர்பால் தமிழில் அறிமுகமான Literary Criticism என்ற ஆய்வுமுறைமைக்கும் இடையிலான முக்கிய வேறுபாடொன்றை இங்கு சுட்டுவது அவசியமாகிறது. பொருளிலக்கண முறைமைசார் இலக்கிய நோக்கிலே 'மரபு பேணல்' என்ற அம்சம் முக்கிய கவனத்தைப்பெற்றிருந்தது. 'இலக்கிய உருவாக்கம் தொடர்பாக ஏற்கெனவே பேணப்பட்டுவந்த உள்ளடக்க அம்சங்கள் மற்றும் உணர்த்துமுறைசார் உத்திகள் முதலியன எந்த அளவுக்குப் பேணப்பட்டுள்ளன? ' என்பதை முன்னிறுத்தும் சிந்தனையே இங்கு மரபு பேணல் என்பதால் உணர்த்தப்படுகிறது. இவ்வகையில் இப்பார்வையானது இலக்கிய ஆக்கமொன்றை 'மரபின் குழந்தை' யாகவும் 'மொழிசார் புலமைத் திறனின் வெளிப்பாடு' ஆகவும் கருதி மதிப்பிடுவதாகும்.

புதுவரவான Literary Criticism சார் பார்வையானது மேற்படி மரபு பேணல் என்ற அம்சத்துக்கு நேரெதி ரானது. அது, 'இலக்கிய ஆக்கமொன்றை அதைப்படைத்தவனின் 'படைப்பாளுமை'யின் வெளிப்பாடு' ஆகவும் 'ஆத்மாவின் குரல்' ஆகவும் தரிசிக்கமுற்படுவதாகும். அவ்வகையில் அப்படைப்பை அது ஒரு 'புத்தாக்கமாக'க் கருதுவது. 'அப்படைப்புக்கு அடிப்படையான அம்சங்களை மரபிலே தேடாமல் அப்படைப்புக்குள்ளேயே கண்டறிய வும் முற்படும் ஆய்வுமுறைமை, அது.

அடிப்படையான இந்த வேறுபாட்டம்சம் தவிர மேற்படி Literary Criticism என்ற ஆய்வுமுறை கொண்டிருந்த இன்னொரு சிறப்பம்சத்தையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். அவ்வம்சம், ஒப்பியல்நோக்கு ஆகும். குறித்த ஒரு மொழிசார் படைப்பை மதிப்பிடும் முயற்சியிலே அம்மொழிசார் ஏனைய படைப்புக்களுடன் ஒப்பிடுதல் மற்றும் பிறமொழிகள சார்ந்த அவ்வகை ஆக்கங்களுடன் ஒப்பிடுதல் என்பனவாக பரிமாணங்களில் விரிவுபெறும் செயன்முறை, இது. பிறமொழியாக்கங்களுடன் மேற்கொள்ளப்படும் ஒப்பியற்செயற்பாட்டிலே குறித்த ஒரு மொழிசார் படைப்பானது மொழிகடந்ததும் உலகுதழுவியதுமான கவனத்தைப் பெறும் வாய்ப்பை எய்துகிறது.

இவ்வாறான சிறப்புகள்கொண்ட Literary Criticism என்ற ஆய்வுமுறைமையை தமிழில் அறிமுகம் செய்து நின்ற முன்னோடிகள் என்ற வகையில இங்கு இருவரைச் சுட்டலாம். ஒருவர், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியப் பணிபுரிந்தவரான திருமணம் செல்வக்கேசவராய முதலியார்(1864-1921) அவர்கள். இன்னொருவர் தமிழ்ச்சிறுகதை முதல்வர்களிலொருவரும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவருமான வ.வே.சு.ஐயர் என வழங்கப்படும் வரகனேரி வேங்கடசுப்பிரமணிய ஐயர்(1881-1925) ஆவார். இலக்கிய ஆக்கம் தொடர்பான இவர்களுடைய சிந்தனைகளிலும் திறனாய்வுச் செயற்பாடுகளிலும் மேற்சுட்டிய Literary Criticism என்ற ஆய்வுமுறைமை சார்ந்த பார்வைகளும் அணுகுமுறைகளும் தெளிவாகவே பதிவாகியுள்ளன.

செல்வக்கேசவராய முதலியாரின் எழுத்துகளில் குறிப்பாக, 'வசனம்' , 'செய்யுள்' ஆகிய கட்டுரைகளிலும் கம்பநாடர் (1909) என்ற நூலாக்கத்திலும் வ.வே,சு.ஐயர் எழுதிய 'கம்பராமாயண ரசனை' (1924-25) என்ற கட்டுரைத் தொடரிலும் மேற்படி பார்வைகள் மற்றும் அணுகுமுறைகள் ஆகியவற்றை நோக்கியுணரமுடியம்.

'செய்யுள்'என்ற தலைப்பிலமைந்த கட்டுரையிலே கவிதையின் உருவாக்கம் தொடர்பாக செல்வக் கேச-வராய முதலியாரின் முன்வைத்துள்ள சிந்தனைகளில் அது படைப்பாளியின் படைப்பாளுமை சார்ந்ததென்ற கருத்து தெளிவாகவே பதிவாகியுள்ளது. அதிலே அவர் கவிதையின் உருவாக்கத்தை 'குழந்தையொன்று கருவாகி உருவாகும் நிலை' யுடன் ஒப்பிட்டு விளக்கம் தருகிறார். இவரும் வ.வேசு ஐயரும் ஒப்பியல் நோக்குடன் இலக்கியங்களை அணுகியவர்களுங்கூட. கம்பனைப்பற்றிய இவர்களது பார்வைகளில் இதனைத் தெளிவாக இனங்காணலாம். குறிப்பாக வ.வே.சு. ஐயரின் 'கம்பராமாயண ரசனை' என்ற கட்டுரைத்தொடர் இவ்வகைப் பார்வைக்குச் சிறந்த சான்றாக அமைந்துளது. இதிலே கம்பகாவியமானது வடமொழியின் வான்மீகி ராமாயணத் துடனும் ஐரோப்பிய மகாகவிகளான ஹோமர் மில்டன் முதலியவர்களின் ஆக்கங்களுடனும் ஒப்புநோக்கப் பட்டுள்ளது. வ.வே.சு ஐயரின் இத்திறனாய்வு முயற்சியானது ஐரோப்பிய மரபு சார்ந்ததான *Architectonics* என்ற அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டதாகும். இதனை அவரே தமது அவ்வாக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

செல்வக்கேசவராயருடைய எழுத்துகள் பலவும் 1897-1921 காலப்பகுதியில் அச்சேறின என அறிகிறோம். வ.வே,சு.ஐயரின் மேற்படி ஆக்கமானது ஏற்கெனவே அவரால் 1921இல் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட "*Study of Kamban*" என்ற கட்டுரைத்தொடரின் தமிழாக்கமாகும். அவரே அதனைத்தமிழாக்கியுள்ளார். இத்தமிழாக்கம் அவருடைய பாலபாரதி என்ற இதழில் 1924-25 காலப்பகுதியில் அச்சேறியதாகும். அவ்வகையில், மேலைத்தேயப் புதுவரவான *Literary Criticism* என்ற ஆய்வுமுறைமையானது 19ஆம் நூற்றாண்டிறுதியில் தமிழ்ச் சூழலில் கால் பதிக்கத்தொடங்கியது என்பதும் 20 ஆம் நூற்றண்டின் முதல் 25ஆண்டுக்காலப்பகுதியில் தன்னை உரியவாறு அடையாளப்படுத்திக்கொண்டதென்பதும் வரலாற்றுநிலையில் தெளிவாகிறது

மேற்படி செல்வக்கேசவராயர் மற்றும் வ.வே.சு.ஐயர் ஆகிய முன்னோடிகளின் செயற்பாடுகளின் தொடர்ச்சியாக சமகாலப் படைப்பிலக்கியவாதிகள் மத்தியிலும் உயர்கல்விச் சூழலிலும் மேற்படி மேலைப்புலம் சார்ந்த திறனாய்வியல் சிந்தனைகள் எடுத்துப் பேசப்படத் தொடங்கின. குறிப்பாக, நவீன இலக்கிய வகைகளான நாவல் சிறுகதை மற்றும் பாரதி தொடக்கிவைத்த புதிய கவிதைமரபு ஆகியவற்றை மையப்படுத்தி மேற்படி திறனாய்வியல்சார் சிந்தனைகள் பரவலான செல்வாக்குப்பெறத் தொடங்கின. உயர்கல்வித்துறைகள் சார்ந்த கல்வியாளர்கள் சிலர் இத்துறையில் கவனம் செலுத்தத் தொடங்கினர். இதன் தொடர்ச்சியாக சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1941ஆம் ஆண்டு பி. ஓ. எல். ஆனர்சு என்ற பட்டப்படிப்புக்கான பாடங்களிலொன்றாக இலக்கியத்திறனாய்வு என்பது இடம்பெறத் தொடங்கியது. பேராசிரியர்கள் மு. வரதராசனார், அ.ச.ஞானசம்பந்தன் ஆகியோர் இவற்றைக் கற்பிக்கத் தொடங்கினர். அக்காலப்பகுதிவரை ஆங்கில மொழியில் வெளிவந்திருந்த திறனாய்வு நூல்களின் பொருட்பரப்பை ஒட்டி இவர்களது பாடத்திட்டப்பரப்பும் கற்பித்தல் அணுகுமுறைகளும் அமைந்திருந்தன.

சுவாமி விபுலாநந்தரின் காலகட்டத்திலே தமிழில் இலக்கியத் திறனாய்வியலானது ஒரு ஆய்வுத்துறையாக உருவாக்கம் பெற்றிருந்தநிலை, இதுதான். மேலே நாம் நோக்கியவாறான செல்வக்கேசவராயர் மற்றும் வ.வே.சு ஐயர் ஆகியோர் தொடக்கிவைத்த இலக்கியத் திறனாய்வு முறைமையை ஏறத்தாழ அவர்களது சமகாலத்திலிருந்தே முன்னெடுத்த கல்வியாளர்கள் சிலரின் வரிசையில் ஒருவராகவே சுவாமி விபுலாநந்தரை நாம் தரிசிக்கிறோம்.

முத்தமிழறிஞராகவும் ஆங்கிலப் புலமை பெற்றவராகவும் திகழ்ந்தவரான விபுலாநந்த அடிகளார் இவற்றுடன் தமிழகம் உட்பட்ட இந்தியகச் சூழலின் 'கலை-பண்பாட்டுமரபுகள்' தொடர்பானசிந்தனைகளிலமீதும் தனிக்கவனம் செலுத்திநின்றவர். அத்துடனமையாது அனைத்துலக நிலையிலான 'கலை- பண்பாட்டுமரபுகள்' மீதும் அவர் பார்வையைச் செலுத்திநின்றுள்ளார். தமது அயராத தொடர்வாசிப்பின் மூலம் அவை பற்றிய ஆய்வறிவை அவர் வளர்த்துவந்துள்ளார். 'ஆங்கிலவாணி' 'மேற்றிசைச் செல்வம்', 'நாகரிக வரலாறு', 'எகிப்திய நாகரிகம்', 'யவனபுரத்துக் கலைச்செல்வம்' முதலியனவாக அவர் எழுதியுள்ள கட்டுரைகள் அவருடைய மேற்படி உலகளாவிய நிலையிலான பரந்துபட்ட அறிவுத்தேட்டத்தின் பெறுபேறுகளாகும். இவ்வாறான பார்வைகளின் ஊடாக திறனாய்வியல் சார்ந்த முக்கிய அம்சங்களிலொன்றான 'ஒப்பியல் அணுகுமுறை'யையும் அவர் வளர்த்துக்கொண்டிருந்தார்.

இவ்வாறான புலமைத் தகுதிகள் கொண்டிருந்த இவர் சமகாலத் தமிழ்த் திறனாய்வியலின் ஒரு முக்கிய பங்களிப்பாளராகவும் திகழ்ந்தவர் என்பதனை உணர்த்தும் வகையிலமைந்த முக்கிய எழுத்தாக்கம், 'தமிழுக்குப் புதுநெறிகாட்டிய புலவன்' எனப்போற்றப்பட்டுவரும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரைப்பற்றி அவர் எழுதிய கட்டுரைத்தொடர் ஆகும். கொழும்பிலிருந்து வெளிவந்ததும் அவர் ஆசிரியராகப் பணிபுரிந்ததுமான விவேகானந்தன் என்ற சஞ்சிகையின் 1926ஆம் ஆண்டில் ஆவணி, புரட்டாசி ஐப்பசி மாதங்களின் இதழ்களில் அவர் இக்கட்டுரைத் தொடரை எழுதியுள்ளார். பாரதியார் பாடல்களை முழு நிலையில் தரிசித்து அவற்றின் இலக்கியத் தகுதிப்பாட்டைத் தமிழுலகுக்கு அடையாளங்காட்டிய முதலாவது எழுத்தாக்கம் இது என்பது இங்கு நமது கவனத்துக்குரிய முக்கிய செய்தியாகும்.2.

இவ்வாறு வரலாற்று முக்கியத்துவமுடைய ஒரு படைப்பாளியைத் திறனாய்வு நிலையில் அடையாளங் காட்டிய விபுலாநந்தர், அத்துடனமையாது, 'இலக்கியம் மற்றும் கலைசார் அழகியல் தொடர்பான தமது கொள்கைகளை அவ்வப்போது தமது எழுத்துகளில் வெளிப்படுத்தியும் வந்துள்ளார். 'இலக்கியச் சுவை', 'ஐயமும் அழகும், 'வண்ணமும் வடிவும்', 'கவியும் சால்பும் ' முதலான தலைப்புகளிலமைந்த கட்டுரைகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. 3.மேற்படி இருவகை எழுத்துகள் தொடர்பான சில ஆய்வுக்குறிப்புகள் வருமாறு:

2. பாரதி பற்றிய விபுலாநந்தருடைய பார்வையும் அதன் வரலாற்று முக்கியத்துவமும்.

சுவாமி விபுலாநந்தர் அவர்கள் விவேகானந்தன் என்ற இதழில் 1926ஆம் ஆண்டில் ஆவணி, புரட்டாசி ஐப்பசி இதழ்களில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களைப்பற்றி எழுதிய தொடர்கட்டுரையானது அப்பாடல்களை அவற்றின் உள்ளடக்க அம்சங்களின் அடிப்படையில் அணுகிய முயற்சியாகும். இவ்வகையில் பாரதமாதா, கண்ணன், பராசக்தி, பாரதவீரன், பாரத மக்கள், குமரவேள் என அறுவகை உட்பிரிவுகளைக் கொண்டதாக அது அமைந்துளது. இதிலே அவர் பண்டைத் தமிழிலக்கிய மரபுடன் - குறிப்பாகச் சங்க இலக்கியங்களுடன் - பாரதிபாடல்களைத் தொடர்புறுத்தி நோக்கமுற்பட்டுள்ளார். செல்வக்கேசவராயர் மற்றும் வ.வே.சு. ஐயர் ஆகியோர் மேற்கொண்டதான ஒப்பியல் அணுகுமுறையுடன் அமைந்ததுமாகும். இவ்வாறான ஒப்பீட்டுக்கு அடிப்படையாக அமைந்த தமது உணர்வுநிலையை 1926 ஆவணி இதழில் இடம்பெற்றுள்ள ஆசிரியர் உள்ளக்கிடக்கை என்ற தலைப்பில் அவர் எழுதிய குறிப்பிலே தெளிவாகவே பதிவுசெய்துள்ளார்.

தமது மேற்படி ஒப்பீட்டு நோக்கிற்கான நோக்கத்தை அவர்,

> "இரண்டுகோடி தமிழ்மக்களுக்கும் புத்துயிரையும் புதிய ஆற்றலையும் தந்து உலகத்திலுள்ள ஏனைய மக்கட்டொகுதியினரோடு ஒப்புறவிருத்தி உயர்வினையளிக்கும் நீர்மையவாகிய சங்கச்செய்யுள்கள் தொன்மையவாதலின் கற்றோர்க்கன்றி மற்றோர்க்கும் பயன்படாவாயின. சங்கச் செய்யுள்களுள்ளே செறிந்துகிடக்கும் காதலின்பத்தையும் வீரமேம்பாட்டையும் யாவருமெளிதிலுணர்ந்துகொள்ளற் பொருட்டு இலகுவான நடையிலமைந்த இன்னிசைத்தமிழ்ப் பாடல்களாற் சொல்லவல்ல கவிவாணர் தமிழ் நாட்டுக்குப் பேருபகாரிகளாவர்.இத்தகைய கவிவாணருள் முதலில்வைத்தெண்ணப்படும் தகைமை சான்றவர் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார். தமிழ்நாடு செய்த தவப்பயனாயுதித்த பாரதியார் தமது இன்னிசைப்பாடல்களால் தமிழ்நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் அளத்தற்கரிய பேருபகாரத்தைச் செய்திருக்கிறார். இவரது பாடற்றொகையாகிய கருவூலத்திட் புகுந்து கருமணிகள் சிலவற்றினை. எடுத்துக் காட்டுதற்கெண்ணியேயாம்."4. எனத் தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளார்.

விபுலாநந்தரது இக் கூற்றிலே அவருடைய திறனாய்வியல் நோக்குநிலைசார்ந்த இரு விடயங்கள் நமது கவனத்துக்குரியன. 'இலக்கிய ஆக்கமானது சமூகப் பயன்பாடு கொண்டதாகவும் பண்பாட்டின் சாரமாகவும் திகழவேண்டும் என்பதும், அவ்வகையில் அவ்வாக்கமானது, கல்வியாளர் மட்டுமன்றிச் சராசரி மாந்தரும் எளிதில் புரிந்துகொள்ளத்தக்க நடையில் அமைதல் வேண்டும் என்பதுமே அவ்விரு விடயங்கள். பாரதியாரின் பாடல்களில் மேற்படி இரு அம்சங்களையும் அவர் நிறைவாகவே தரிசித்துள்ளார் என்பதையே மேற்படி ஆசிரியர் உள்ளக்கிடக்கை என்ற தலைப்பிலமைந்த குறிப்பு உணர்த்திநிற்கின்றது.

பாரதி பாடல்களைப்பற்றிய விபுலாநந்தருடைய மேற்படி கட்டுரைத்தொடரின் வரலாற்று முக்கியத்துவம் என்ற வகையில் இங்கு குறிப்பிடப்படவேண்டிய செய்தி, அதுவே அப்பாடல்களை முழுநிலையில் நோக்கிய முதலாவது திறனாய்வு முயற்சி என்பதாகும். பாரதி இயற்கை எய்தியதை அடுத்து ஐந்தாண்டுக்காலப்பகுதியில் இவை எழுதப்பட்டுள்ளன. விபுலாநந்தர் பாரதியைவிடப் பத்தாண்டு இளையவர். ஈழத்தில் வாழ்ந்தவர். பாரதியை நேரடியாகத் தரிசிக்கும் வாய்ப்பைப் பெறாதவர். பாரதியார் பாடல்களைப் படித்துச்சுவைத்த அநுபவங்களினூடாகவே மேற்படி கட்டுரைத்தொடரை அவர் எழுதியுள்ளார்.

விபுலாநந்தருடைய மேற்படி கட்டுரைத் தொடருக்கு முன்பே பாரதி பற்றிய திறனாய்வுப்பார்வைகள் எழுத்தில் பதிவு பெறத் தொடங்கி விட்டன என்பதை இங்கு குறிப்பிடுவது வரலாற்று நோக்கில் அவசியமாகிறது. பாரதி வாழ்ந்த காலப்பகுதியிலேயே- அதாவது 1921க்கு முன்பே- நாம் மேலே நோக்கிய வ.வே.சு ஐயரும் ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் என்பாரும் பாரதிபாடல்களைத் திறனாய்வு நோக்கில் அணுகியுள்ளனர். வ.வே.சு ஐயரவர்கள் அக்காலப் பகுதியில் தமழகத்தில் வெளிவந்த சுதேசமித்திரன் இதழின் 1914 ஆம் ஆண்டு அனுபந்தத்திலே, "தமிழ்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையிலே,"நமக்குத் தெரிந்த மட்டில் நவீன எண்ணங்களை உட்கொண்டு ஒரு கவிதான் நாட்டில் உலவுகிறார்" எனப் பாரதியைக் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார். ஏ.வி. சுப்பிரமணிய ஐயரவர்கள் NEW INDIA என்ற ஆங்கிலப்பத்திரிகையின் இதழின் 1919ஆம் ஆண்டின் இதழொன்றிலே "National Songs of Subramaniya Bharathi" என்ற தலைப்பிலான கட்டுரையொன்றை எழுதியுள்ளார்.

இவையே பாரதி தனது சமகாலத்தில் திறனாய்வு நோக்கில் அணுகப்பட்டமை தொடர்பாக அறியப்படும் முக்கிய சான்றுகளாகும். இவ்வாக்கங்கள் பாரதியின் கவித்துவ ஆளுமையின் சில கூறுகளை - நவீனச் சார்பு மற்றும் தேசியம் உணர்வு ஆகியவற்றை மட்டும் கருத்துட்கொண்டனவேயன்றி அவரது பாடற்பரப்பை முழுநிலையில் தரிசிக்க முற்பட்டவையல்ல.

இவ்வாறான பின்புலத்தைக் கருத்துட்கொண்டு நோக்கும்போதுதான் பாரதிபாடல்களை முழுநிலையில் தரிசிக்க முற்பட்டவரான விபுலாநந்தரின் விவேகானந்தன் இதழ்க் கட்டுரைத்தொடரின் வரலாற்று முக்கியத்துவத்தை நாம் உணர்ந்துகொள்ளமுடியும்.

விபுலாநந்தரின் இம்முயற்சிக்குப் பின்னரே பாரதியின் ஆளுமைதொடர்பான முழுநிலையான பார்வைகள் தமிழகத்திலே மேற்கொள்ளப்படத்தொடங்கின. குறிப்பாக, 1930களின் பிற்பகுதியில் மணிக்கொடிக்குழு சார்ந்தோரான கு.ப.ரா (கு.ப.ராஜகோபாலன்) மற்றும் பெ. கோ. சுந்தரராஜன் ஆகியோர் 'பாரதியின் இலக்கியபீடம்' தொடர்பாக முன்வைத்த சிந்தனைகளிலேயே — இவ்வகைச் செயற்பாடுகளை நாம் தரிசிக்கிறோம் என்பதையும் இங்கு சுட்டுவது வரலாற்று நோக்கில் அவசியமாகிறது.

மேலே நோக்கியவாறு பாரதிபாடல்களை முழுநிலையில் நோக்கிய முதலாவது திறனாய்வாளரான விபுலாநந்தரே பின்னர் தாம் பேராசிரியப் பணி புரிந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில 1932ஆம் ஆண்டில் பாரதி கழகம் (Bharati Study Circle) என்ற பெயரில் ஒரு 'ஆய்வு வட்ட'த்தைத் தொடக்கிவைத்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய செய்தியாகும். தமிழிலே — குறிப்பாக நவீன தமிழிலக்கியச் சூழலிலே - ஒரு குறித்த படைப்பாளி தொடர்பான திறனாய்வுச் சிந்தனைகளுக்குக் களமமைத்த முதலாவது 'ஆய்வியக்கச் செயற்பாடு' இதுவாகவே இருக்கக்கூடும்.

3. விபுலாநந்தரின் அழகியல் நோக்கு - ஒரு தொகுநிலைக் குறிப்பு

'இலக்கியச் சுவை', 'ஐயமும் அழகும், 'வண்ணமும் வடிவும்' 'கவியும் சால்பும்' முதலியன தலைப்புகளில் விபுலாநந்தர் எழுதிய கட்டுரைகள் அவருடைய, இலக்கியம் மற்றும் கலைகள்சார்ந்த அழகியல் தொடர்பான கொள்கைகளை எமக்கு இனங்காட்டி நிற்பன என்பது முன்னரே சுட்டப்பட்டது. இவற்றுள் இலக்கியச் சுவை என்ற கட்டுரையானது இலக்கியத்தை உணர்ந்து சுவைத்தல் தொடர்பான விளக்கவுரையாக அமைந்தது. சுவாமி விபுலாநந்தரவர்கள் ,1939ஆம் ஆண்டிலே கல்முனை நகரில் நடைபெற்ற ஆசிரியர் விடுமுறைக்கழக நிகழ்வில் தலைமை வகித்து நிகழ்த்திய சொற்பொழிவின் எழுத்துநிலைப் பதிவாக அமைந்துள்ள இவ்வாக்கம் இலக்கிய ஆக்கமொன்றின் உள்ளடக்கம் உணர்த்து முறை உருவம் ஆகியவற்றுக்கிடையிலான இயைபை நாடகச் சுவைபட எடுத்துரைப்பது. இந்த எடுத்துரைப்புக்கு தமிழ்ப் பேரிலக்கியப் பரப்பிலே குறிப்பாக வில்லிபாரதத்தின் நாடகப்பாங்கான கட்டங்களின் பாடல்கள் பல எடுதாளப்பட்டுள்ளன. அப்பாடல்கள் உணர்த்தவிழைந்த அநுபவ நிலைகளுக்கும் அவற்றின் ஓசைகளுக்குமுள்ள இயைபுகள் அவை காட்சிப்படுத்தும் உணர்வம்சங்கள் என்பன அவரால் பொருத்திக்காட்டப்பட்டுள்ளன.

ஐயமும் அழகும் என்பது தமிழின் அகப்பொருள்மரபுசார் இலக்கியப்பகுதிகளை வாசகர் கவனத்துக்கு இட்டு வருவது. வண்ணமும் வடிவும் என்ற கட்டுரையிலே முக்கியமாக சிற்பக்கலை மற்றும் ஓவியக்கலை முதலின சார்ந்த அவருடைய பார்வைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. கவியும் சார்பும் என்ற கட்டுரையானது சமகாலப் புலவரான வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் என்பாரின் பாடல்களை மையப்படுத்திய ஒரு நயப்புரையாகும்.

இந்நான்கு கட்டுரைகளுக்குமான பொதுப்பண்பு இவை, 'அழகுணர்வு சார்ந்த எடுத்துரைப்புகள்' என்ப தாகும். இவ்வகை எடுத்துரைப்பானது திறனாய்வு மொழியிலே வகையிலே ரசனை முறை எனப்படும்.

மேற்படி இவ்வழகுணர்வு எடுத்துரைக்கும் முயற்சியில் தமிழரின் மரபான அழகியல் கருத்தாக்கங்களையும் 'உண்மை', 'செம்மை', 'அழகு' (சத்யம், சிவம், சுந்தரம்) என்பனவாகப் பேசப்படும் இந்தியக் கலைக் கோட்பாடுகளையும் கிரேக்கம் முதலான மேலைத்தேய மொழிகளில் இடம்பெற்றுள்ள அழகியல்சார் சிந்தனை-களையும் அவர் அருகருகே வைத்து பொருத்திக் காட்டியுள்ளார். அவ்வகையில் ஒப்பியல் அணுகுமுறை யையும் இவற்றிலே தரிசிக்கலாம்.

இவ்வாறாக இவர் புலப்படுத்தியுள்ள திறனாய்வியல்சார் பார்வை அணுகுமுறை என்பவற்றின் சிறப்பியல்புகளை நாம் உரியவாறு தெரிந்து தெளிவதற்கு சமகாலத் தமிழ்ச் சூழலில் இவ்வகைப் பார்வை மற்றும் அணுகுமுறை என்பவற்றைக் கையாண்டுள்ள பிற திறனாய்வாளர்களுடன் இவரை ஒப்புநோக்குவது அவசிய மாகும். அவ்வாறான முயற்சியானது ஒரு தனிநிலை ஆய்வாக விரியக்கூடிய பொருட்பரப்புடையது என்பதால் இங்கு தவிர்க்கப்படுகிறது.

நிறைவாக...

முத்தமிழ் வித்தகரான சுவாமி விபுலாநந்தரை ஒரு திறனாய்வாளராகவும் அடையாளங்காட்டும் நோக்கில் உருவான இக்கட்டுரையிலே அத் தொடர்பிலான முக்கிய தரவுகள் மேலே முன்வைக்கப்பட்டன. அவற்றினூடாக முன்வைக்கப்பட்ட முக்கிய செய்தி. அவர், 'பாரதிபாடல் பற்றிய முழுநிலைப் பார்வையின் முதல்வர்' என்பது. அடுத்துக் கவனத்துக்கு இட்டுவரப்பட்ட செய்தி , திறனாய்வாளர் என்ற ரசனைமுறை மற்றும் ஒப்பியல் அணுகுமுறை ஆகியவற்றை அவர் புலப்படுத்தி நின்றுள்ளார் என்பதாகும்.

இங்கு பதிவாகியுள்ள தரவுகளையும் எமது கவனத்துக்கு வராதிருக்கக்கூடிய வேறு தரவுகளையும் உள்ளடக்கி மேலும் விரிவான தளத்தில் ஆய்வுகளை நிகழ்த்திய பின்னரே சுவாமி விபுலாநந்தர் அவர்களுடைய 'திறனாய்வியல் ஆளுமை' தொடர்பான நிறைவான மதிப்பீடுகளை முன்வைப்பது சாத்தியமாகும்.அவ்வகையிலான விரிநிலை ஆய்வுக்கான ஒரு தோற்றுவாயாகவே இவ்வாய்வுக்குறிப்பு கொள்ளப்படல்வேண்டும் என்ற குறிப்பை முன்வைத்து இக்கட்டுரையை இப்பொழுது நிறைவுசெய்கிறேன்.

அடிக்குறிப்புகள்:

1. தகவல்: டாக்டர் க. பஞ்சாங்கம் தமிழில் இலக்கியத் திறனாய்வு வரலாறு-2007-ப.87.)
2. சுவாமி விபுலாநந்தர் விவேகானந்தன் இதழில் எழுதிய மேற்படி கட்டுரைத்தொடர் தொடர்பான தகவலையும் அதன் முக்கியத்துவத்தையும் அறியத்தந்தவர் தமிழக ஆய்வாளர் பெ.சு. மணி அவர்கள். இவை தொடர்பில் அவர் என்னுடன் விரிவாகவே உரையாடியுள்ளார். இத்தகவல்களை உள்ளடக்கிய அவரது நூல்: சுவாமி விபுலாநந்தர். (மணிவாசகர் பதிப்பகம்.சென்னை.1992. பக் 67-76). 1993இல் நான் எழுதிய 'ஈழத்தில் பாரதியார் நூல்கள் பற்றிய ஆய்வுகள்' என்ற கட்டுரையிலே மேற்படி தகவல்களை நான் பயன்படுத்திக் கொண்டேன்.(பார்க்க: கலாநிதி நா.சுப்பிரமணியனின் ஆய்வுகள் பார்வைகள் பதிவுகள் - தொகுதி 2 , 2. பதி: கௌசல்யா சுப்பிரமணியன் சவுத்விஷன் வெளியீடு. சென்னை. 2005. பக் 270-85)எனது அக்கட்டுரையில் இடம் பெற்ற முக்கிய குறிப்புகள் சார்ந்தே இக்கருத்துகள் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன.
3. இக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ள நூல்: விபுலாநந்த இலக்கியம் . பதி: அருள்செல்வநாயகம். திருவருள்வெளியீடு. கொழும்பு. 2008. இக்கட்டுரைகளின் ஒளிப்பட நகல்களை எனக்களித்த நண்பர் திரு. கணபதிப்பிள்ளை குமரகுரு அவர்களுக்கு நன்றி.
4. பார்க்க : மணி,பெ.சு. மேற்குறித்த நூல். பக் 73

மட்டக்களப்பின் பண்டைய தமிழ்க் கல்விமுறை

இராமகிருஷ்ணமிஷன் வருகைக்கு முன்னர் உள்ள நிலைமையை மையப்படுத்திய பார்வை

பேராசிரியர். மா. செல்வராஜா
கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு, இலங்கை



1.0 அறிமுகம்

ஒவ்வொரு சமூகமும் தனக்கெனவொரு தனித்தன்மையான வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டிருப்பது போலவே சிறப்பான கல்விப்பாரம்பரியத்தையும் கொண்டுள்ளது. இங்கு மட்டக்களப்பு எனும்போது மன்னம்பிட்டியிலிருந்து பாணமை கதிர்காமம் வரையான பிரதேசத்தைப் பொதுவாக உள்ளடக்கும். இதனை ஆய்வாளர்களான வி.சி.கந்தையா(1960), மற்றும் கவிக்கோ வெல்லவூர்க் கோபால் (2005) முதலியோர் தமது நூல்களில் விபரித்திருப்பதைக் காணலாம். அந்த புவியியல் வரையறை கொண்டு எமது ஆய்விற்கான கால வரையறையைப் பின்வருமாறு வகுத்துக் கொள்ளலாம்.

அ. ஆதிகாலம் ஆ. கலிங்கநாட்டுக் குடியேற்றம் ஏற்பட்ட காலம்.
இ. சோழர்காலம் ஈ. மாகோன் வருகைக் காலம்
உ. ஐரோப்பியர் காலம்

2.0 ஆதிகாலம்

வரலாற்றாய்வாளர்களால் பெருங்கற்காலம் எனக்குறிப்பிடப்படும் கி.மு.3000 ஆண்டு வரையான காலத்தில் மட்டக்களப்பில் நாகரிகமடைந்த மக்கள் வாழ்ந்துள்ளமை தெரிகின்றது. வாகரை, கதிரவெளி, காயான்கேணி முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழிகளைக் கொண்டு இதனை ஆதாரப்படுத்த முடியுமென கவிக்கோ வெல்லவூர்க்கோபால் குறிப்பிடுகின்றார் (கவிக்கோ வெல்லவூர்க்கோபால் 2016) மண்முனை மேற்குப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண்சிற்பத்தை ஆதாரங்காட்டி கி.மு.500 க்குரிய காலத்தில் இப்பகுதியில் தமிழ் மொழிப்பாரம்பரியம் நிலவியதை பேராசிரியர் சி. பத்மநாதன் வெளிப்படுத்தியுள்ளார் (மேற்படி) இதனை வெல்லாவெளிக் குடவரைக் கல்வெட்டும் உறுதி செய்கின்றது. கி.மு. 236-214 காலப்பகுதியில் மட்டக்களப்பில் ஏற்பட்ட கூத்திகனுடைய ஆட்சி என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது குருகுலக்கல்விமுறை யும், பொதுமக்களிடம் காணப்பட்ட வைத்தியம், சோதிடம், போன்ற கல்வியும் காணப்பட்டிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.

குருகுல அடிப்படையிலான கல்வியானது அரசர் மற்றும் பிரபுக்கள், அந்தணர்களது பிள்ளைகளுக்குக் குருவின் வீட்டில் வைத்து வழங்கும் கல்வியாகக் கொள்ளலாம். குறிப்பிட்ட காலம் இப்பிள்ளைகள் குருவின் வீட்டில் வாசம் செய்ய வேண்டும். குருவின் பணிகளை வீட்டில் நிறைவேற்ற வேண்டும். இக்கல்வி முறையில் மிகவும் சிறிய தொகையினரே கல்வியளிக்கப்பட்டனர். சமூகத்தில் பெரும்பாலானவர்களுக்கு கல்வியளிக்கும் வாய்ப்புக்களிருக்க வில்லை என்பதே உண்மையாகும். அறநெறியின் பாற்பட்டு வாழ்க்கை நடாத்தும் அறிவுரை-களைப் பொதுமக்களில் அனுபவம் வாய்ந்தவர்கள் இளம் சந்ததியினருக்கு வழங்கியிருப்பர் என்று எண்ணத்தோன்றுகின்றது. இதுவும் ஒருவகையில் ஒரு முறைசாராக் கல்வியென்றே கொள்ளத்தக்கது.

3.0 கலிங்க நாட்டிலிருந்து ஏற்பட்ட குடியேற்றங்கள் காலம்

இதுவரை கிடைத்திருக்கும் ஆதாரங்களினடிப்படையில் சுமார் 2300 ஆண்டுகால மட்டக்களப்பின் வரலாற்றினை நோக்கும் போது இங்கு குடியேறிய மக்கள் காலத்திற்குக்காலம் பண்டைய கலிங்கமான ஒரிசா, வங்கத்தின் தென்கிழக்கு, ஆந்திராவின் கிழக்குப்பகுதிபோன்ற பிரதேசங்களிலிருந்து வந்துள்ளனர். இதற்கான காரணங்களாகக் கடற்பயணம், குடியேற்றம் மற்றும் போர் நடவடிக்கைகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். (வெல்லவூர்க் கோபால் 2005) பின்னர் சேரநாடு, சோழநாடு, பாண்டி நாடுகளிலிருந்தும் மக்கள் இங்கு வருகை தந்து இங்கு ஏற்கனவேயுள்ளவர்களுடன் இணைந்து கொள்வதைக் காணலாம்.

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குக் குடிபெயரும் மக்கள் தாம் பாதுகாத்துவந்த கல்விச் செல்வங்களையும், பழக்கவழக்கங்கள், கலாசாரப் பண்புகளையும் கொண்டு செல்வது வழமை. அந்தவகையில் கலிங்கம் மற்றும் பண்டைத் தமிழகம் முதலிய பகுதியிலிருந்து இங்கு குடியேறிய திராவிட மக்கள் தம்முடன் கல்விச் செல்வத்தையும் கொண்டுவந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் வைத்தியம், மிருகவைத்தியம், சோதிடம், முதலியவற்றையும் தம்முடன் கொண்டுவந்து தம்வாழ்க்கையில் பிரயோகித்திருப்பர் என்பது உறுதி யாகின்றது. இந்த வகையிலும் முன்னர் குறிப்பிட்டது போன்று குருகுலமுறை சார்ந்த ஒரு முறையும் பொது மக்கள் சார்ந்த ஒரு கல்விமுறையும் வழக்கத்திற்கு வந்திருக்கும் எனலாம். குருகுலம் சார்ந்த கல்வியை அறநெறிக் கல்வியாகவும், பொது மக்கள் சார்ந்த கல்வியை வைத்தியம் முதலான மற்றும் பல்வேறு கைத்தொழில்சார்ந்த கல்வியாகவும் இருந்திருக்கக்கூடும் எனக் கருதலாம். இத்தகைய பொதுமக்கள் கல்வி பரம்பரை பரம்பரையாகவே பேணப்பட்டுவந்திருக்கும் என்பதை அண்மைக்காலக் கிராமங்களில் பின்பற்றப்பட்டு வந்துள்ள நிலையிலிருந்து ஊகிக்கலாம். மக்கள் தமது கல்விச் செல்வத்தைப் பேணுவதில் அக்கறைகொண்டும், அதேவேளை தம்மக்களன்றி வேறு விசுவாசம் மிக்க பிள்ளைகளுக்கும் இக்கல்வியினைப் போதித்திருப்பர் என்றும் கொள்ளலாம்.

4.0 சோழர் காலம்

கி.பி 10ம் நூற்றாண்டில் தஞ்சாவூரை இருக்கையாக்கி சோழ அரசு எழுச்சி பெறத்தொடங்கியது. இந்நிலையில் இலங்கை, பாண்டியருக்கு உதவ வேண்டிய நிலையிலிருந்தது. இந்த நிலையில் சோழரின் கடல் ஆதிக்கத்திற்கு ஈடுகொடுக்க இலங்கை அரசு கலிங்கத்தை நம்ப வேண்டியிருந்தது எனினும் இது முடியாததாயிற்று. கி.பி. 10ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அனுராதபுரம் உட்பட இலங்கையின் வடகிழக்குப்பாகம் சோழரின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. இக்காலத்தில் கலிங்கனான தர்மசிங்கன் மட்டக்களப்பின் சிற்றரசனாக இருந்ததை வரலாறு சான்றுபகர்கின்றது. அதன்பின் குமாரசிங்கன், கதிர்சுதன், மதிசுதன், நாதன், தினசிங்கன் என கலிங்கரின் வாரிசு கள் சோழரின் மேலாதிக்கத்தை ஏற்று மட்டக்களப்பில் ஆட்சி புரிந்தனர். இதன்பின் பொலநறுவையைச் சோழர்கள் முக்கிய இருக்கையாக்கி அதற்கு ஜனநாத மங்கலம் எனப் பெயர் சூட்டிமும்முடிச் சோழமண்டலம் எனச் சோழ ராச்சியம் விளங்கியது.

சோழராட்சி மட்டக்களப்பு கல்வி, கலாசாரம், பண்பாடு என்பன செழிப்புற்ற காலமாகக் கொள்ளப்படத்தக்கது. கூத்துக்கள் தோற்றம் பெறல், ஆலயங்கள் சிற்பவேலைகளால் பொலிவுறல், வாணிபத்துறைமுக வளர்ச்சி, போன்றவற்றைக் குறிப்பிடலாம். கோயில்கள் இராமாயணம், மகாபாரதம், பக்தி இலக்கியங்கள் போன்றவற்றை வளர்க்குமிடங்களாக விளங்கத் தொடங்கின. பாரம்பரியக் கல்வி முறையில் சோழர்காலக் கோயில்களின் கல்விப் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கதாகும்.

சோழர்காலத்தில் தமிழ்க் குடியேற்றங்கள் பெருமளவில் ஏற்பட்டதால் அக்காலத்தில் வருகை தந்த மக்கள் தம்முடன் அரிய கலைச் செல்வங்களைக் கொணர்ந்தனர். அக்காலத்தில் பல்வேறு சமூகப் பிரிவினரும் வருகை தந்தனர். முன்னர் குறிப்பிட்டது போன்ற வைத்தியம், சோதிடம், இலக்கியங்கள், பல்வேறு கைத்தொழில்கள் என்பனவற்றையும் தம்முடன் கொண்டு வந்து வளர்க்கத் தொடங்கினர். மக்களுக்குக் கல்வியளிக்கவேண்டிய தேவை உணரப்பட்டதால் திண்ணைப் பள்ளிகள் பெருமளவில் உருவாக்கப்பட்டுச் செயற்படத் தொடங்கின. வீட்டுத் திண்ணையில் ஆரம்பிக்கப்பட்ட இம்முறை பின்னர் இடம் போதாதநிலையில் வளவில் உள்ள மரநிழல், இதற்காக அமைக்கப்பட்ட கொட்டில்கள் என்பனவற்றில் நடாத்தப்பட்டன. ஆசிரியர்களுக்குக் கிராம மக்கள் அவசியமான பொருளுதவிகளை வழங்கினர். ஆடை, அரிசி முதலிய உணவுப் பொருட்கள், எண்ணை, விறகு எல்லாவற்றையும் கிராமமக்கள் வழங்கினர். இது தமிழகத்தின் செல்வாக்கால் முன்னரிலும் பார்க்கப் பரந்தளவில் இடம் பெற்றுவந்ததாகக் கொள்ளலாம். சோழர்காலத்தில் அந்தணர் செல்வாக்கும் ஏற்பட்டதால் அவர்களது கல்விக்கான பங்களிப்பும் குறிப்பிடக்கூடிய இடம்பெற்றது. இக்காலத்தில் அரச ஊக்குவிப்பு, பொதுமக்கள் ஊக்குவிப்பு, விஷேட, பாரம்பரியக் கல்வியை ஊக்குவித்த பொதுமக்கள் என்ற வகையில் பொதுக் கல்வி, விஷேடகல்வி என்பன மேலோங்கிய காலமாக இதனைக் கொள்ளமுடியும்.

5.0 மாகோன் காலம்

மட்டக்களப்பில் அடுத்து ஏற்பட்ட முக்கியமான குடியேற்றங்கள் கலிங்கமாகோனது காலத்தில் ஏற்பட்டதாகும். கி.பி.1215 தொடக்கம் கி.பி.1255 வரையான இக்காலம் மட்டக்களப்பின் மிக உக்கிரமான எழுச்சிக்காலமென்று வெல்லுவூர்க் கோபால் குறிப்பிடுகின்றார். (வெல்லவூர்க் கோபால் 2005) இக்காலம் இந்தியாவிலிருந்து இங்கு மக்கள் குடியேறுவதற்குத் தடைகளில்லாத காலமாகக் கருதப்படுகின்றது. இதனால் படைவீரர்களுடன் இடப்பெயர்வு காரணமாகவும் பெருந்தொகையான மக்கள் இங்கு குடிபெயர்ந்தனர்.

மாகோன்காலத்தில் சேர, சோழ, பாண்டியநாடுகளிலிந்து இடம்பெயர்ந்த மக்கள் மட்டக்களப்பிற்கு அப்பால் வடமேற்குப் பிரதேசங்களிலும் பெருமளவு குடியமர்ந்தனர். தாம் குடிபெயர்ந்த இடங்களில் தம்முடன் கொண்டு வந்த கலை, கலாசாரம், கல்வி, பண்பாடுகளைப் பேணும் வகையில் தமது வாழ்க்கையை அமைத்தனர். கி.பி 1540 அளவில் மட்டக்களப்பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற எதிர்மன்னசிங்கன் காலத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகளுள் கல்விச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இக்கல்விச்சாலைகள் பெரும்பாலும் குருகுல மற்றும் திண்ணைப்பள்ளி சார்ந்ததாகவே இருந்திருக்கும் எனக்கருதலாம்.

திண்ணைப்பள்ளிக் கூடங்களில், திவாகரம், உரிச்சொல், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், முதுரை, நன்னெறி, திருக்குறள் என்பன கற்பிக்கப்பட்டன. கல்வியின் நோக்கங்களாக உலக வாழ்க்கை, வீடு பேறு என்பன அமைந்தன. கற்கும் முறையாக மனப்பாடம் செய்யும் முறை இருந்தது. இன்றைய இரண்டாம் நிலை எனக்கொள்ளத்தக்கதாக இதிகாசம், புராணம், தொல்காப்பியம், வீரசோழியம் என்பன கற்பிக்கப்பட்டிருக்கலாம் என்பது திமிலைத்துமிலனின் கருத்து. பிள்ளைகளுக்கு ஒழுக்கப் பயிற்சி முக்கிய அம்சமாகக் காணப்பட்டது.

கல்வி ஆரம்பிக்கப்பட்ட பொழுது அரிசியின் மேல் அகரம் எழுதிக்காட்டப்பட்டது. பிள்ளைகளுக்கு மணலில் எழுத்துப் பயிற்சி வழங்கப்பட்டது. மேலும் ஏட்டில் எழுதும் பயிற்சியும் வழங்கப்பட்டது. ஆசிரியர் ஓலையில் எழுதிய தின்மேல் மொட்டை எழுத்தாணியால் எழுத மாணவர் வேண்டப்பட்டனர். மாணவன் ஏடு எழுதப்பழகிய பின் ஆசிரியர் சொல்லச் சொல்ல எழுதினான்.

20ம் நூற்றாண்டுவரை இது தொடர்ந்ததென்பது திமிலைத்துமிலனின் கருத்தாகும். கிராமிய இலக்கிய வடிவங்களான அம்மானைகள், பள்ளுகள், வசந்தன்பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள், கல்வெட்டுப்பாடல்கள் யாவும் அக்காலப் பெரியவர்களால் மனப்பாடம் செய்யப்பட்டிருந்தன.

6.0 ஐரோப்பியர் காலம்

ஐரோப்பியர் காலக்கல்வியை போர்த்துக்கீசர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம் என மூன்றாகப் பிரித்து நோக்கலாம்.

6.1 போர்த்துக்கீசர் காலம்

கி.பி.1622ல் மட்டக்களப்பு போர்த்துக்கீசர் வசம் வந்தது. ஆயினும் அதற்கு முன்பிருந்தே போர்த்துக்கல் நாட்டின் கிறிஸ்தவப் பாதிரிமார் மட்டக்களப்பில் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். வர்த்தக ரீதியாக ஏற்பட்ட இத்தொடர்பு 1530 அளவில் கிறிஸ்தவ சமயப் போதனைபால் சென்றிருக்கின்றது. பின்னர் அது நாடு பிடிக்கும் அவாவாக மாறியுள்ளது. இக்காலத்தில் ஆலய அழிப்புக்கள், போடிமார் கொலை, மற்றும் சிறைப்பிடிப்பு என்பன அதிகமாக இடம்பெற்றன. இதனால் பாரம்பரியமாக இருந்து வந்த கல்விமுறை களுக்கும் பாதிப்பு ஏற்பட்டதாகக் கொள்ளலாம்.

இவர்களது வரிமுறை பாரிய பாதிப்பை ஏற்படுத்தியதாகத் தெரிகின்றது. தலைவரி, தென்னைவரி, ஆயவரி, மீன்பிடிவரி, அதிகாரிவரி (Stamp duty)என்பனவற்றைக் குறிப்பிடலாம். (கவிக்கோ வெல்லவூர்க் கோபால் - 2016).

இவ்வரிகள் போர்த்துக்கீசருக்குப் பின்பும் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலும் தொடர்ந்தன.
போர்த்துக்கீசரின் அக்கறையெல்லாம் மட்டக்களப்பின் வளங்களைச் சுரண்டுவதாகவே அமைந்திருந்தது. எனினும் றோமன் கத்தோலிக்க மதத்தைத் தழுவியவர்களுக்கு எழுத்து, வாசிப்பு, எண்கணிதம், போன்ற பாடங்களில் கல்வியளிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு கல்வியைப் பெற்றவர்களைப் போர்த்துக்கீசர் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர்.

6.2 ஒல்லாந்தர் காலம்

ஒரு குறுகிய காலத்துள் போர்த்துக்கீசர் ஒல்லாந்தரிடம் தங்கள் அதிகாரத்தை இழந்தனர். கி.பி.1637ல் மட்டக்களப்பு ஒல்லாந்தர் ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டது. இவர்களது காலத்திலும் மட்டக்களப்புப் போடி மாரின் எதிர்ப்பு இவர்களுக்குத் தொடர்ந்தது. போடிமாரின் செயற்பாடுகளால் ஒல்லாந்தக்கம்பனி பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டது. ஒல்லாந்தரோடு ஆரம்பத்தில் இடம் பெற்ற மோதல்களிலும் போடிகள் உயிரி ழந்தனர். பலர் சிறைப்பிடிக்கப்பட்டனர் இவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. கண்டியரசுடன் ஏற்பட்ட சமரசத்துடன் சில போடிகளை ஒல்லாந்தர் தமக்குதவியாக வைத்துக் கொண்டனர். இதனால் 1700க்குப் பின்னர் ஒல்லாந்தர் மட்டக்களப்பில் முறைப்படுத்தப்பட்ட ஆட்சியை ஏற்படுத்தினர்.

இக்காலத்தில்தான் மட்டக்களப்பை வடபாகம், தென்பாகம் எனப்பிரித்து வடபகுதி அறுமக்குட்டிப்போடிக்கும், தென்பகுதி கந்தப்போடிக்கும் 1766ல் தலைமைப்போடி நியமனம் வழங்கப்பட்டது. இவர்கள் மதம் மாறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

றோமன் கத்தோலிக்கரான ஒல்லாந்தர் உள்நாட்டவர்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றுதல், தமது மதத்தைத் தழுவியவர்களுக்கு ஆரம்பக்கல்வி வழங்குதல், மதம்பரப்ப ஆசிரியர்களைப் பயிற்றல், நிருவாகத்திற்கு உதவக்கூடிய மத்தியவகுப்பார்களை உருவாக்குதல் என்பனவற்றில் நாட்டம் கொண்டிருந்தனர். இருப்பினும் போர்த்துக்கீசர் காலத்தைவிட மேம்பட்டகாலமாகவே இக்காலத்தைக் கொள்ளமுடியும். ஐரோப்பியப்பாங்கான கல்விமுறையின் ஆரம்பமாக ஒல்லாந்தர் காலத்தைக் கொள்ளலாம். அநாதைப்பிள்ளைகளுக்காக யாழ்ப்பாணத்தைப் போன்று மட்டக்களப்பில் ஆமன்கோணர் என்ற இலவசப் பாடசாலையை ஒல்லாந்தர் ஆரம்பித்தனர். இது மட்டக்களப்புப் பிரதேசம் முழுவதுக்கும் உரித்தான பாடசாலையாக விளங்கியது. இந்த வகையில் ஒல்லாந்தர் உணவு, உறையுள், உடை என்பன கொடுத்து ஏழை அநாதைச் சிறுவர்களைப் பராமரித்தமை கல்வி வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் ஒரு நல்ல அம்சமாகக் கொள்ளமுடியும்.

6.3 ஆங்கிலேயர் காலம்

ஒல்லாந்தர் ஆட்சியைத் தொடர்ந்து 1796ல் கிழக்கிந்தியக் கம்பனி என்றபெயரில் ஆங்கிலேயர் இலங்கையில் கால்பதித்தனர். மட்டக்களப்பில் 1802ல் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்டனர். ஆனால் வழக்கம் போல் போடிமாரின் எதிர்ப்பு இருந்து கொண்டேயிருந்தது. 1803ல் கண்டி மீது ஆங்கிலேயர் படையெடுத்தபோது போடிமார் கண்டிமன்னனுக்கு ஆதரவு வழங்கினர். புளியந்தீவு தவிர மற்றப்பகுதிகளை ஆங்கிலேயரால் முழுக்கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர முடியவில்லை. ஒரு வெள்ளைக்காரத்தளபதி தலைமையில் இரண்டு மாதக் கடினமுயற்சியின் பின் போடிமாரின் கிளர்ச்சி அடக்கப்பட்டது. போடிமார் சிலருக்கு மரணதண்டனையும் வழங்கப்பட்டுச் சொத்துக்களும் பறிமுதலாகின.

மட்டக்களப்பு ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் வந்தபோது சேர்.பிரெடரிக்நோத் கி.பி.1800 முதல் இலங்கையின் தேசாதிபதியாகப் பதவி வகித்தார். இலங்கை ஐந்து மாகாணங்களாக்கப்பட்டது. மட்டக்களப்பு கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்றது. 1833ல் சட்ட நிரூபணசபையில் தமிழர் பிரதிநிதியாக ஒருவரே இடம்பெற்றார். 1906ல் இரு தமிழர்களுக்கு வாய்ப்புக்கிட்டியது. 1900—1930 இடைப்பட்ட காலத்தில் மட்டக்களப்பு பல நன்மைகளைப் பெற்றது. தமிழ்மொழி பேசுவோர் 95% மாகக் காணப்பட்டனர்.

இக்காலத்தில் நிருவாகம், கல்வி, சுகாதாரம், விவசாயம் எனப்பலதுறைகளிலும் தமிழர்கள் உயர்பதவி களைப் பெற்றனர். எனினும், மட்டக்களப்பு சுதேசிகளுக்கு இவ்வாய்ப்புக்கள் கிடைத்ததாகத் தெரியவில்லை. 1924 மட்டக்களப்பு புகையிரதசேவை பூர்த்தியாகியது. மட்டக்களப்பில் 38 அரசபாடசாலைகளும் 101 மிசனரிப் பாடசாலைகளும் இயங்கின. மட்டக்களப்பு மாவட்டக்கல்விக்குழு அரசாங்க அதிபர் தலைமையில் செயற்பட ஆரம்பித்தது. இக்காலத்தில் விபுலாநந்த அடிகளும் குழு உறுப்பினராகச் செயற்பட்டார். நீதிமன்ற நிருவாகமும் மேம்பாடுற்றது. 1948 பெப்ரவரி 4ம் திகதியில் நாடு சுதந்திரமடைந்ததற்கு முன்னரான சுமார் 300 ஆண்டுகளில் பலமாற்றங்களை மட்டக்களப்புப் பெற வாய்ப்பு ஏற்பட்டது. நாட்டின் நிருவாகக் கட்டமைப்பு சீராக்கப்படுவதை இவர்களது ஆட்சியில் காணலாம்.

கல்வித்துறை இவர்களது காலத்தில் அளப்பரிய சேவையை வழங்கத் தொடங்கியது. ஐரோப்பிய மிசனரிகள் ஊடாக உருவாக்கப்பட்ட மெதடிஸ்த மத்திய பாடசாலை, வின்சன்ற் பாடசாலை, புனித மிக்கேல் பாடசாலை, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி போன்றவை உள்ளிட்ட சுமார் 110 கல்வி நிறுவனங்கள் இப்பிரதேசத்தில் பெரும்பணியாற்றி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கவிக்கோவெல்லவூர்க் கோபால் 2016) ஆங்கிலேயர் பேராதிக்க அடிப்படையில் செயற்பட்டாலும் அவர்கள் ஏற்படுத்திய கல்விச்சாலைகள் மட்டக்களப்பின் கல்வி உயர்வுக்கு ஆற்றிய பங்களிப்பு விதந்து பேசப்படும் ஒன்றாக அமைந்துவிட்டது.

ஒல்லாந்த, ஆங்கிலேய ஆட்சிக் காலத்தினூடே மட்டக்களப்பின் பாரம்பரியக் கல்வியான திண்ணைப்பள்ளி முறை வெல்லாவெளி, மகிழடித்தீவு, தீர்வைத்துறை (ஆரைப்பற்றை) சம்மான்துறை, மண்டூர், கன்னன் குடா போன்ற பல கிராமங்களில் இருந்து செயற்பட்டு வந்துள்ளதை வெல்லவூர் கோபால், திமிலைத் துமிலன் போன்றோர் குறிப்பிடுவர்.

7.0 முடிவுரை

மேற்குறிப்பிட்ட பார்வைகளினூடாக மட்டக்களப்புத்தேசம் ஒரு நீண்ட கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டு வளர்ந்து வந்திருப்பதைக் காணலாம். குருகுலம் மற்றும் பொதுமக்கள் பாரம்பரியத்தைக் கொண்டு பரவலாக ஜன நாயகப்படுத்தப்படாத கல்வியாக வளர்ச்சி பெற்றுவந்த கல்விமுறையானது படிப்படியாக மாற்றமுற்று ஐரோப்பியர் காலத்தில் மேலைத்தேசப்பாங்கினுள் புகுந்துள்ளமையைக் காணலாம். போடிமுறை அழிப்பு, சொத்துக்கள் பறிப்பு முதலான துன்பங்களை அனுபவித்த மட்டக்களப்புத் தேசம் ஆங்கிலேயர் காலச் சீர்திருத்தங்களால் பொதுக்கல்வி, தொழிற்கல்வி, உயர்கல்வி என்பனவற்றில் உயர்ந்து இன்று மேலும் பலஅம்சங்களில் வளர்ச்சி காணவேண்டிய ஒரு கல்விப் பயணத்தை மேற்கொண்டுள்ளது. இருப்பினும் கடந்தகாலத்தில் ஏற்பட்ட முப்பதாண்டு யுத்தம், சூறாவளி, சுனாமி போன்ற மனித, மற்றும் இயற்கைக் காரணிகளால் பல சவால்களையும் எதிர்கொண்டு செல்லவேண்டிய நிலையிலேயே கல்வி வளர்ச்சி காணப்படுகின்றது. கல்வி வளர்ச்சி என்பது ஒரு முடிவடையாத பயணம். பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய ஆய்வுகளை மேற்கொண்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்தும், மீள்திட்டமிட்டும் அமுல் படுத்தியும் செல்லவேண்டிய மீண்டெழும் கருமத்தொடராக விளங்குகின்றது. கல்வியின் முழுமையான வளர்ச்சியை நோக்கி அரசாங்கப் பொறிமுறைகள், கல்வி நிருவாக அமைப்புக்கள், சமூக சிந்தனை யாளர்கள், பெற்றோர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது முழுமை நோக்கிய பயணத்திற்கு இன்றியமையாததாகும்.

உசாத்துணைகள்

1. வெல்லவூர்க்கோபால் (2005) மட்டக்களப்புவரலாறு ஒரு அறிமுகம், மனுவேதா வெளியீடு, ஆதவன் அச்சகம், மட்டக்களப்பு.

2. கவிக்கோவெல்லவூர்க்கோபால் (2016) மட்டக்களப்புத்தேசம். வரலாறும் வழக்காறும் மனுவேதா வெளியீடு, சேமமடுப்பதிப்பகம், கொழும்பு – 11.

3. கவிக்கோ வெல்லவூர்க்கோபால் (2012) வெல்லாவெளி வரலாறும் பண்பாடும், வெல்லாவெளி கலைமகள் மகாவித்தியாலய பழைய மாணவர் மன்றவெளியீடு, ஆதவன் அச்சகம், மட்டக்களப்பு.

4. திமித்துமிலன் (2010) ஈழத்துக்கல்வி மரபில் எண்ணெய்ச் சிந்து இராஜம் பிரசுரம், திமிலைத்தீவு சண் அச்சகம், இருதயபுரம், மட்டக்களப்பு.

5. கந்தையா வி.சீ. (1964) மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், குரும்பசிட்டி, யாழ்ப்பாணம்.

6. நடராசா F.X.C (1998)மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை, கத்தோலிக்க அச்சகம் மட்டக்களப்பு.

7. கமலநாதன் சா.இ, கமலா கமலநாதன் (2005) மட்டக்களப்பு : பூர்வ சரித்திரம், குமரன் புத்தக இல்லம் கொழும்பு – சென்னை.

8. தம்பு கனகசபை, ஈழத்தமிழரின் வரலாறும் வாழ்வியலும், காயத்திரி பப்ளிக்கேசன், தெஹிவளை, இலங்கை.

9. நாவற்குடா இளையதம்பி தங்கராசா (2015) நான் என் அம்மாவின்பிள்ளை பாகம் 1
A FAST PRINT, 2703 EGLINTON AVE.EAST, CANADA.

10. சித்திரலேகா மௌனகுரு (2004),வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக மொழித்துறை கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

சுவாமி விபுலாநந்தரின் மணிமொழிகள்

மனிதன் ஒவ்வொருவனிடத்தும் தன்னம்பிக்கை வேண்டும். தான் இதைச் செய்து முடிக்கும் திடனுண்டு எனத் தன்னைத்தானே நம்புதல் வேண்டும். இதை விடுத்து அரும்பெரும் ரிஸிகள் காட்டிய வழிகள் கடுமையானவை. அவற்றைக் கடைப்பிடித்தல் என்னால் முடியாதது எனத் தன்னை நம்பானா யின் அவன் ஒருபோதும் கடவுளையடைய முடியாது. இத்தன்னம்பிக்கையால் ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்களையும் அறுத்தல் வேண்டும். இவைகளே நம்மை மேனிலைப்படுத்திக் கடவுளைக் கிட்டுதற்குரிய வழிகளாகும்.

எந்தக் காரியத்திலும் வெற்றி பெறுவதற்கு ஏகாக்கிரசித்தமாக அந்தக் காரியத்திற் சிரத்தை வைக்க வேண்டும். மனம் ஒருவழிப்படுமாயின் செய்து முடிக்கக் கூடாத காரியம் ஒன்றில்லை. நெப்போலியன் போனபார்ட் என்னும் சிறந்த சேனாதிபதி தம்முடைய மனத்தில் ஒவ்வொரு கருமத்துக்கும் ஒவ்வொரு அறையுண்டென்றும், ஒரு அறையைத் திறந்து வைக்கும் போது மற்ற அறை களனைத்தையும் பூட்டி வைக்கும் வல்லபம் தமக்குண்டென்றும், எல்லா அறைகளையும் பூட்டிவிட்டுத்தாம் உடனே செயலற்று நித்திரை போய்விடக் கூடுமென்றும் சொல்லியிருக்கிறார். நெப்போலியன் முற்பிறப்பில் ஒரு யோகியாக இருந்திருக்க வேண்டும். (ஏகாக்கிரசிந்தை - ஒருவழிப்பட்ட மனம்)

பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின் முற்போக்குச் சிந்தனைகள்

எஸ்.கே. குமரகுரு. M.A
ரொறன்ரோ, கனடா



முன்னுரை

பேராசிரியர் விபுலாநந்தர், இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து, துறவறத்தை மேற்கொண்ட முதல் இலங்கையர் என்ற பெருமைக்குரியவர். அவர் துறவியாகிய பின் மிஷனின் பிரதிநிதியாக, இலங்கையிலுள்ள மிஷன் பாடசாலைகளை நிர்வகிப்பதற்காகவும், இந்துசமயக் கருத்துக்களைப் பரப்புவதற்காகவும் 1924ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இலங்கை வந்து தமது பணிகளைத் தொடங்குகிறார். குறிப்பாக திருகோணமலையில் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளை நிர்வகிக்கும் முகாமையாளர் பதவியைப் பொறுப்பேற்று பணியாற்றும் வேளையில், புதிய பாடசாலைகளை அமைத்தல், முக்கிய பிரமுகர்களைச் சந்தித்தல், மாநாடுகளில் கலந்துகொள்ளல், பொதுக்கூட்டங்களில் உரையாற்றுதல் போன்ற பல பணிகளில் ஈடுபட்டமை, சுவாமி விபுலா நந்தர் தமிழர் சமுதாயத்தில் மாபெரும் மேதையாகவும், கற்றோர் மத்தியில் பேரறிஞராகவும் திகழ்ந்தார் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

சுவாமியின் குண இயல்புகளை நோக்கும்வேளை அவர் கருணையுள்ளம் மிக்கவராகவும், மனிதத்தை மனதார நேசித்தவராகவும், சேவையுள்ளம் நிறைந்தவராகவும் காணப்படுகின்றார். மேலும் இன மத சாதி பேதங்களுக்கு அப்பால், தீண்டாமைக்கும், சாதிக்கொடுமைக்கும் எதிராக பணியாற்றி சாதாரண மக்களின் வாழ்க்கையை வளமாக்கிய பெருமைக்குரியவராகவும் விளங்குகிறார்.

இருபதாம் நூற்றாண்டில் இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் வாழ்ந்த மக்களிடையே குறிப்பாக, இறுக்கமான சமூகக் கட்டுப்பாடுகளுடனும், ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியில் ஆங்கிலக் கல்வியும், அரச உத்தியோகத்தையும் புருஷ இலச்சணமாகக் கொண்டு வாழ்ந்த தமிழர் மத்தியில், இந்துமதத் துறவியாகிய சுவாமி விபுலாநந்தரிடத்தே முற்போக்குச் சிந்தனைகள் எவ்வாறு ஏற்பட்டன என்பதை தெரிந்து கொள்ள, அவரைத் தூண்டிய சூழ்நிலைத் தாக்கங்களை அறிவதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

சுவாமி விபுலாநந்தரின் பிறந்த சூழலும், இளமைக்கால வாழ்க்கையும், மட்டக்களப்பு தந்த மாணவர், ஆசிரியர் மன எழுச்சியும், யாழ்ப்பாணம் தந்த கௌரவம் மிக்க பாடசாலை அதிபர் அனுபவமும், துறவுப் பயிற்சியின் போது பெற்ற வேதாந்தக் கல்வியும், (அதாவது அனைத்து ஆத்மாவையும் சமமாகக் காணுகின்ற தத்துவாந்தக் கல்வி)1, மகாத்மா காந்தி, சுவாமி சர்வாநந்தர், யோகர் சுவாமிகள் ஆகியோரின் தரிசனங்களும் வீரத்துறவி விவேகானந்தர், பாரதியார், கால்மாஷ், ஈ.வே. ராமசாமி (பெரியார்) ஆகியோரின் சிந்தனைகளும் சுவாமிகளிடம் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியதெனலாம்.

இந்த சூழ்நிலாயிலே சுவாமி விபுலாநந்தர் தமிழ், தாய்மொழிக் கல்வி, இன, மத, மொழி சமத்துவம், சாதி-பேத ஒழிப்பு, பெண்கல்வி, தேசிய விடுதலை, பொருளாதார விடுதலை போன்ற முற்போக்கான பணிகளில் ஈடுபடுகின்றார். அவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மகாகவி பாரதியாரைப் போற்றியவர் :

தமிழ் மொழிக்கு புத்தெழுச்சி, புதிய நடை, புதியபோக்கு என்பனவற்றை உண்டுபண்ணிய பாரதியை, கவிஞனாக ஏற்றுக்கொண்ட பெருமை பண்டிதரான சுவாமியையே சாரும். விபுலாநந்த அடிகள் தான் செல்லுமிட மெல்லாம் பாரதியையும், அவர் கவிதைகளையும் மக்களிடம் எடுத்துரைத்தார். யாழ்ப்பாணத்தில் பொதுமேடை களில் பாரதியைப்பற்றிப் பேசிய முதற் கல்விமான் சுவாமிகளேயாவார். 1925 ஏப்ரல் 28ல் கீரிமலையில் நடைபெற்ற யாழ்ப்பாணம் இளைஞர் (மாணவர்) காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமைவகித்து " தேசிய இலக்கிய மறுமலர்ச்சி" என்னும் தலைப்பில் உரையாற்றும் போது பாரதியையும் அவரது பாடல்களையும் எடுத்துரைத்தார்.2

1925ம் ஆண்டு சுவாமிகள் திருகோணமலை இந்துக்கல்லூரியின் நிருவாகத்தைப் பொறுப்பேற்று நிர்வகிக்கும் வேளை, வகுப்பு ஒன்று முதல் எட்டு வரையுள்ள வகுப்புக்களுக்கான பாடத்திட்டத்தில் பாரதி பாடல்களைச் சேர்த்துக்கொண்டார். மேலும் 1930 களில் இலங்கைப் பாடசாலைகளின் பாடத்திட்டத்திலும் பாரதியார் பாடல்களைச் சேர்த்துக்கொண்டார்.

1925ல் கொழும்பு விவேகானந்த சபையால் ஆரம்பிக்கப்பட்ட"விவேகானந்தன்" சஞ்சிகையின் முதல் ஆசிரி யராக சுவாமியவர்கள் பதவிவகித்தபோது, 1926 ஆவணி இதழில் ஆசிரியர் உள்ளக்கிடக்கை என்ற கட்டுரை வெளிவந்தது. அதில் இந்துமதத்துக்கு வரைவிலக்கணம் கூறுவதற்கு சுவாமியவர்கள் பாரதியாரின் பின்வரும் பாடல்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.3

(1) மண்ணுலகின் மீதினிலே எக்காலும் அமரரைப்போல்
மடிவில்லாமல்
திண்ணமுற வாழ்ந்திடலாம் இதற்குரிய உபாயமிங்கு
செப்பக் கேளீர்
நண்ணியெலாப் பொருளினிலும் உட்பொருளாச் செய்கை
யெலாம் நடத்தும் வீறாய்த்
திண்ணியநல் லறிவொளியாய்த் திகழுமொரு பரம்
பொருளை அகத்திற் சேர்த்து

(2) செய்கையெலாம் அதன்செய்கை நினைவெல்லாம் அத
னினைவு தெய்வமே யாம் .....

(3) எப்போது மானந்தச் சுடர்நிலையில் வாழ்ந்துயிர்கட்
கினிது செய்வோர் .....

சுவாமிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும்போது அங்கு, 1932ம் ஆண்டு பாரதியார் கழகத்தை தோற்றுவித்தார். அடிகளின் தலைமையிலே மாணவர்கள் மாதம் இருமுறை பாரதியார் பற்றி உரையாற்றுவதுண்டு. மேலும் அதே ஆண்டில் அடிகள் தலைமையில் நடைபெற்ற சிறப்புக்கூட்டத்தில் திரு. எஸ்.சத்தியமூர்த்தி அவர்களைக்கொண்டு பாரதியாரின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார். அத்துடன் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாதாந்த இதழில் எழுதிய கட்டுரையில் ஒன்றில் தேசியக்கவி பாரதியார் காட்டிய சமரச வழியினை நாம் பின்பற்ற வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.4

மேலும் "பாரதி அன்பர்" என்ற கட்டுரையில், சுவாமி பற்றி பெ, சு மணி பின்வருமாறு எழுதுகின்றார். "அடிகள் தேச அன்பர் மட்டுமல்ல பாரதி அன்பரும்கூட, பாரதியென்றால் அடிகளுக்கு ஒரு புத்துணர்ச்சி பூத்துவிடும், அவரே தமிழன், வீரத்தமிழன், தேசியக் கவிஞன், தமிழகத்தைத் தட்டியெழுப்பிய வீரன், என்றெல்லாம் பாரதியார் பற்றி வீரமுழக்கம் செய்வார் .5

சாதிக் கொடுமைக்கு எதிராகப் போராடியவர் :

தமிழ்ச் சமூகத்தில் புரையோடிப்போயிருந்த தீண்டாமை, பெண்ணடிமை, பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்றவற்றை இல்லாதொழிப்பதற்காகப் பாடுபட்டார். போதனைகளைக் குறைத்து சாதனைகளைச் செய்தவர். மானிடத்தின் உயர்வுக்காக உழைத்த சான்றோனாக சுவாமி விளங்குகின்றார். 1917 முதல் 1920 வரை யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் வேதி நூல் (இரசாயனவியல்)ஆசிரியராகப் பணியாற்றும் போது அருகிலுள்ள மீனவ சமூகத்தினரின் மேம்பாட்டுக்காகவும் பாடுபட்டவர்.

சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்.....என்ற மகா கவியின் வரிகளுக்கு செயல் வடிவம் கொடுத்தவர்.

மேலும், இராமகிருஷ்ணமடத்தின் துறவியாகிய பின் வெறும் துறவறநிலையில் மட்டும் ஈடுபாட்டைக்காட்டாது, சாதிக்கொடுமைக்கெதிராக தொடர்ந்தும் குரல்கொடுத்தார். இதற்குச் சான்றாக 1927ல் கீரிமலையில் நடைபெற்ற நான்காவது இளைஞர் காங்கிரஸ் மாநாட்டி உரையாற்றும் போது தமிழர்களிடையே புரையோடிப் போயிருக்கும் சாதிக்கொடுமை ஒழிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டத்தைக் கூறலாம்.6

சிதம்பரம் திருவேட்களத்தில்:

இயல்பாகவே இரக்க சுபாவம் மிக்க சுவாமியவர்கள் சிதம்பரம் திருவேட்களத்தில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஆற்றிய முற்போக்கான சமூகப்பணி இன்றுவரை விதந்து பேசப்படுகின்றன. அடிகள் 1931ம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதற் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றும் வேளை, திருவேட்களகத்தில் சேரிகளில் வாழ்ந்த மகளின் நிலைகண்டு மனம்நொந்து அம்மக்களின் துயர்துடைப்பதற்காக தீண்டாமை இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டார்.

சேரிச்சிறார்களுக்காக பாடசாலை தொடங்கியமை, முதியோர்களுக்கான இரவுப்பாடசாலை, சேரிப்புறச் சிறார்களைத் தமது இல்லம் அழைத்து உணவு வழங்கித் தாமும் உண்டமை, தமது மாணவர்களுடன் சேரிகளுக்குச் சென்று அம் மக்களுக்கு தொண்டு புரிந்தமை என்பன சுவாமியின் முற்போக்கான சிந்தனை-களையும், அவரது துணிவு மிக்க செயற்பாடுகளையும் எடுத்துக் காட்டுகின்றன.7

மேலும், சுவாமி திருவேட்களத்தில் ஆற்றிய சேவைகளை உறுதிப்படுத்துவதாக ஆதித்திராவிட மக்களின் சார்பாக வழங்கப்பட்ட பிரிவுபசார வாழ்த்து மடல் அமைகின்றது. சிதம்பரம் ஜில்லாபோர்டு மெம்பர் திருமிகு. அமிர்தாம்பாள் தனது வாழ்த்துப் பத்திரத்தில் பின்வருமாறு கூறுகின்றார். "தம் நலம் பேணும் பார்ப்பனர்களால் சண்டார்களென்று அழைக்கப்படும் எங்களை அழைத்து தங்கள் வீட்டிலுடனிருத்தி விருந்துண்ட காட்சியும், உவகையும் எங்கள் கண்ணையும் மனதையும் விட்டகலுமோ!

மேலும் எங்கள் முன்னேற்றத்துக்காக தங்களால் தொடங்கப்பட்ட இரவுப்பள்ளி மூலம் நாம் பயன் பெற்றதையும், இங்கு வாழ்ந்த இரண்டு ஆண்டுகளில் பல சேரிகளுக்கும் சென்று பள்ளிகள் ஏற்படுத்தியதையும், ஏழைகளான எங்களுக்கு இரங்கியதையும் எவ்வாறு மறப்போம் என்று தமது பாராட்டுப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.8 இந்த வாழ்த்துப் பத்திரத்தின் நகல் ஒன்றை இம்மலரின் ஓர் இதழாகச் சேர்த்ததன் மூலம், இம்மலரானது வள்ளலடியிணைக்கு வாய்த்த நறுமணம் வீசும் மலராகப் புதுப்பொலிவுற்றது என்றால் அதில் எமக்கெளும் நெகிழ்ச்சியானது, அன்று அந்த அமிர்தாம்பாள் கொண்ட நெகிழ்ச்சியை மிக நெருங்கி ஒத்ததாகவே யிருக்கும்.

யாழ்ப்பாணம் மறுமலர்ச்சி சங்க உறுப்பினர்களுடனான சந்திப்பு :

1942ஆம் ஆண்டு, சுவாமி யாழ்ப்பாணம் சென்றிருந்த வேளை திரு. அ. செ முருகானந்தம் அவர்களின் ஏற்பாட்டில் மறுமலர்ச்சி சங்க உறுப்பினர்கள் மத்தியில் தமிழின் மறுமலர்ச்சி பற்றி உரையாற்றினார். முப்பதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டனர். அவ்வேளை அவர்கள் மத்தியில் அமர்ந்து கொண்டு, இளம் எழுத்தாளர் களாகிய நீங்கள் மனச்சாட்சிப்படி எழுதுங்கள், புதியன புதியனவாக எழுதித் தமிழை வளருங்கள், சொந்த மண் மணம் வீசும் சிறுகதைகளையம், நாவல்களையும் எழுதுங்கள், எழுத்தில் எப்போதும் சொற்கட்டும், இலக்கணமும், கருத்தாளமும் இருக்கவேண்டியது பிரதானம் என்று கூறினார்.9

1943 ஆண்டு மீண்டும் மறுமலர்ச்சி சங்க உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும் வேளை, "நமது வாழ்வை உள்ளபடி சித்தரிக்கும் உயர்ந்த கதைகள் எழுதப்பட வேண்டிய தேவைபற்றிப் பேசினார். மேலும் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணம் பேச்சு வழக்கைக் கையாண்டு நாடகங்கள் எழுதியதைப பாராட்டிப் பேசினார். அதேபோன்று மட்டக்களப்பு வழக்கு மொழியையும் பதிவுசெய்து வைப்பது நல்லது என்ற கருத்தையும் முன்வைத்தார்.10

இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்க உறுப்பினர்களைச் சந்தித்தமை

1935ஆம்ஆண்டு இலண்டனில் இந்திய எழுத்தாளர் சங்கத்தின் உருவாக்கத்துக்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. முல்க்ராஜ் ஆனந், செய்யத் சஜாத் ஸகீர், ஜோதிராமய கோஷ் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்களின் முயற்சியால் 1936ல், இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மாநாடு லக்னோவில் நடைபெற்றது. மேற்படி சங்கத்தின் நடவடிக்கை இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாண இளைஞர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனால் 1946ல் பாரதி என்ற சஞ்சிகை தொடங்கப்பட்டது. இதன் ஆசிரியர்களாக இலங்கை முற்போக்கு அணியைச் சேர்ந்த கே.ராமநாதன் கே.கணேஷ் ஆகியோர் கடமையாற்றினர்.

1946ல் இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு.முல்க்ராஜ் ஆனந் இலங்கை வந்தபோது அவரைப் பல எழுத்தாளர்களும், கல்விமான்களும் சந்தித்தனர். அவ் வேளை சுவாமி விபுலாநந்தர் நெருப்புக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கையில், தமது உடல் நலத்தையும் பொருட்படுத்தாது சென்றிருந்தார்.

இது சுவாமிகளிடம் காணப்பட்ட முற்போக்குச் சிந்தனைகளையே எடுத்துக் காட்டுகின்றது. அச் சந்திப்பைத் தொடர்ந்து சுவாமி விபுலாநந்தரைத் தலைவராகவும், மாட்டின் விக்கிரமசிங்க, பொன். கந்தையா ஆகியோரை உப தலைவராகவும்,எதிரிவீர சரத்சந்திர, கே.கணேஷ் ஆகியோரை இணைச்செயலாளராகவும் கொண்ட **இலங்கை எழுத்தாளர் சங்கம்** உருவாக்கப்பட்டது.11

பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தினருடனான தொடர்பு :

இந்துமத துறவியான விபுலாநந்த அடிகள், பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தினருடன் தொடரபு கொண்டிருந்ததை அறியமுடிகின்றது. சுவாமியின் சில கட்டுரைகள் சுயமரியாதை ஏடான "விடுதலை" யில் பிரசுர மாகியது இங்கு நினைவுகொள்ளத் தக்கது. மேலும், தீவிர சுயமரியாதை வாதியான பாவேந்தர் பாரதிதாசன் சுவாமியின் யாழ்நூல் பற்றி எழுதிய பத்து வெண்பாக்கள் அடிகளின் மறைவுக்குப் பின் 01-11-1948இல் தமிழ் நிலம் சஞ்சிகையில் வெளிவந்த்து 12

தீவிர தேசியப்பற்றாளர் :

விபுலாநந்த அடிகளை ஒரு தீவிர தேசியப்பற்றாளர் என்று கூறின் மிகையாகாது. ஏனெனில் 1933ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின்போது தனது விடுதியின் முன்புறத்தில் இந்திய தேசியக்கொடியைப் பறக்கவிட்டு பல்கலைக்கழக நிருவாகத்தையே திக்குமுக்காடவைத்தவர். அதாவது பட்டமளிப்பு விழாவிற்கு சென்னை மாகாண ஆளுநர் மாட்சிமை தங்கிய சேர் ஜோஜ் பிரட்ரிக் ஸ்ரான்லி அவர்கள் பிரதம அதிதி யாக கலந்துகொள்ளும் நிகழ்வையொட்டி அண்ணாமலை நகரம் பல வர்ணக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலமாக காட்சியளித்தது. சக பேராசிரியர்கள் தத்தமது விடுதிகளில் பிரித்தானிய அரசின் யூனியன் "யக்" கொடியை பறக்கவிட்டிருந்த வேளை, சுவாமியின் விடுதியில் மட்டும் இந்திய தேசியக்கொடி கம்பீரமாகப் பறந்துகொண்டிருந்தது. இதனையறிந்த பொலிஸார் அடிகளின் வீட்டைச் சோதனையிட்டு, பல வினாக்களைத் தொடுத்த போதும் அடிகள் அஞ்சவில்லை. இந் நிகழ்வானது அடிகளின் துணிவையும், புரட்சிகரச் சிந்தனையும், தேசியப்பற்றையும் எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.13

அடிகளின் முற்போக்கான கல்விக்கொள்கைகள்:

தாய்மொழிக் கல்வி, இன மத வேறுபாடற்ற அனைவருக்குமான கல்வி, பெண்கல்வி போன்ற சுவாமி விபுலாநந்தரின் சமதர்ம சிந்தனை உள்ளிட்ட முற்போக்கான கல்விச்சிந்தனைகள் மகாத்மா காந்தியடிகளின் ஆதாரக் கல்விமுறையை ஒத்ததாகக் காணப்படுகின்றன. இதனை முதன் முதல் இலங்கையில் பரீட்சித்துப் பார்த்த பெருமை அடிகளையே சாரும்.14 அதாவது சுவாமிகள் தான் ஸ்தாபித்த சிவாநந்த வித்தியாலயத்தில் முதன் முதலில் மாணவர்களைப் பதிவு செய்தவேளை, முதலாவதாக இந்து மாணவனையும், இரண்டாவதாக முஸ்லிம் மாணவனையும் பதிவு செய்திருப்பதைக் காணமுடிகின்றது.

அத்துடன் கல்வித்துறையில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும் மொழிகளையும் கற்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து, சிவானந்த வித்தியாலயத்தில் 1932 ஆண்டு சிங்கள ஆசிரியர் ஒருவரைப் பணிக்கமர்த்தி அனைத்து மாணவர்களும் சிங்களம் மொழி கற்பதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார். 15

மேலும் பெண்கள் கல்வி கற்பதற்காக காரைதீவில் சாரதா வித்தியாலயத்தையும், ஆணைப்பந்தி பெண்கள் பாடசாலையையும் அமைத்துக்கொடுத்தார். சுவாமியின் சிந்தனையின் செயற்பாடாக சிவாநந்த வித்தியாலயத்தில் 1975 ஆம் ஆண்டு முதன் முதலாக மாணவிகள் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர் வகுப்பில் கல்வி கற்பதற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இதன் பயனாலேயே எனது மனைவியும் பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பை மேற்கொள்ள முடிந்த்தது.

அத்துடன் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (1943 – 1947) தமிழ்ப் பேராசிரியராக பதவி வகித்த போது சிங்கள விரிவுரையாளர்களுக்கும், சிங்கள மாணவர்களுக்கும் தமிழ் மொழியையும், தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழியையும் கற்பித்து இன ஐக்கியத்தைப் பேணியவர் சுவாமி விபுலாநந்தராவார். இந்த நடைமுறை தொடர்ந்திருந்தால் இலங்கையில் ஏற்பட்ட இன முரண்பாடும் அதனால் ஏற்பட்ட பேரழிவுகளும் தவிர்க்கப் பட்டிருக்கும்.

முடிவுரை :

இந்து மதத்துறவி எனும் வரையறைக்குள் வாழாது இன மத மொழி சாதி வேறுபாடுகளைக் கடந்து, ஈழம் முதல் இமயம் வரை தமிழ் மொழியினது மேம்பாட்டுக்காவும், தமிழ்ச் சமூகத்தினது உயர்வுக்காகவும் அயராது உழைத்தவர் விபுலாநந்த அடிகள். அவர் இலங்கைக்குத் திரும்பி வந்தவேளை ஒருவகையான அச்ச உணர்வுடன் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் வாழ்ந்த வந்த இந்துக்களைக் கண்டு கலங்கினார். இந் நிலையை நீக்குவதற்காக அடிகள் தமது முழுச்சத்தியையும் செலவழித்ததை அறியக்கிடக்கிறது. மேலும் பொதுப்பணியின்போது பேச்சு, எழுத்து, செயல் மூன்றையும் தாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்டவர் அவ்வேளைகளில் அவர் வெளிப்படுத்திய முற்போக்குக் கருத்துக்களையே இக்கட்டுரை விளக்கியுள்ளது.

உசாத்துணைகள்.

1 மௌனகுரு.சி.கலாநிதி. சுவாமி விபுலாநந்தர் காலமும் கருத்தும்.

2.5 மணி, பெ. சு சுவாமி விபுலாநந்தர் நோக்கில் பாரதியார் – சுவாமி விபுலாநந்தர் பன்முகப்பார்வை. தொகுப்பு பேராசிரியர் செ.யோகராசா.

3 சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள் – தொகுதி – 2 பக்கம் - 52

4,7,13 ஆலாலசுந்தரம் செட்டியார்.பூ தமிழ்ப் பேராசிரியர் விபுலாநந்தர் ஈழமணி

6 ரூபராணி ஜோசப், வாழ்வாங்கு வாழ்ந்த விபுலாநந்த அடிகள். விபுலம் பக் 111

8. அமிர்தாம்பாள்,திரு மிகு ஆதித் திராவிடர் சார்பான வாழ்த்து மடல்.

9 முருகானந்தம் அ.செ அறிவாளி, ஈழமணி பக்கம் 78

10,11, தில்லைநாதன் சி. பேராசிரியர். பிரேம்ஜீ கட்டுரைகள்.

12.சிவசுப்பிரமணியம் வ. பகுத்தறிவாதி ஒருவரின் விபுலாநந்த தரிசனம்- விபுலம்.

14, சண்முகதாஸ் அ. பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின் கல்வி நோக்கு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு நினைவு மலர்- மட்டக்களப்பு பக் 216

15, சுவாமி நடராஜாநந்தா, சுவாமி விபுலாநந்த அடிகளாரின் தேசியக் கல்வி முறை அடிகளார் படிவ மலர்.பக்கம் 29

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் இயல், இசை, நாடகம் மற்றும் சமூகப்பணிகள்

கலாநிதி, உஷாந்தி நேசகாந்தன்,
சிரேஷ்ட விரிவுரையாளர் (நடனம்),
சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு, இலங்கை



முகவுரை

மனித முன்னேற்றத்திலும் நாகரீக வளர்ச்சியிலும் கலைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. இது வாழ்க்கை சார்ந்த அறிவையும் உணர்வையும் தரவல்லன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை நுண்கலைகள் ஆகும். இதற்கு தனிப்பட்ட மொழியில்லை என்றாலும் கூட அந்தந்த மொழி சார்ந்தோர்களால் படைக்கப்படும் போது தனித்ததொரு அடையாளத்தைப் பெற்றுக் கொள்கின்றது. அந்த வகையில் இக்கலையில் காணப்படும் இடைவெளியினை நிரப்பி அதனை மேலும் பொலிவு பெறச்செய்யும் நோக்குடன் பல்வேறு கலைஞர்களாலும் கல்விமான்களாலும் பல கலைசார் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இவ்வரிசையிலே முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்நதரின் பணிகள் குறிப்பிடத்தக்கன.

தமிழ்ப்பணி

மதுரைத் தமிழ் பண்டிதரான சுவாமி விபுலாநந்தர் தமிழுக்கு உரமூட்டியவராவார். இவர் தமது கருத்துக்களை பல தலைப்புக்களின் கீழ் கட்டுரையாகத் தொகுத்துள்ளார்.

அவையாவன,

1. உலக புராணம்
2. ஆங்கில வாணி
3. மேற்றிசைச் செல்வம்
4. சோழ மண்டலத்தமிழும் ஈழமண்டலத்தமிழும்
5. அன்பின் ஐந்திணையுரை
6. வாக்கியம்(1942)
7. சங்கீத பாரிஜாதம்(1942)
8. நட்டபாடைப் பண்ணின் எட்டுக் கட்டளைகள்(1942)
9. பாரிஜாத வீணை(1944)
10. நீரர மகளீர் இன்னிசைப்பாடல்
11. பண்ணும் திறனும் குழலும் யாழும்
12. எண்ணும் இசையும்
13. பாலைத் திரிவு
14. சுருதி வீணை
15. இயலிசை நாடகம்
16. தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப் பெருக்கு வடநாட்டிற் பரவிய முறை
17. பொருள் நூற் சிறப்பு என்பவையாகும்.

இவற்றுடன் பிறமொழிகளிலுள்ள சிறந்த கவிதைகளைத் தமிழிலே மொழிபெயர்த்துத் தந்துள்ளார். அவற்றிலே சேக்ஸ்பியர், மில்டன், வேர்ட்ஸ்வர்த், கீட்ஸ், ஷெல்லி, டெனிசன் ஆகியோரது படைப்புக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். அடிகளாரின் படைப்புகளில் ஒப்பியல் போக்கு மிகுந்து காணப்படுவதை அவதானிக்க முடியும். இதற்குக் காரணம் இவரது பன் மொழித்திறனும், பல்துறையறிவும் எனலாம்.

1921ஆம் ஆண்டு தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட ஆரிய, திராவிட பாஷா விருத்திச் சங்கத்தில் இணைந்து செயலாற்றினார். இவர் இச் சங்கத்தினூடாக பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் என்ற மூன்று தரத் தேர்வுகளையும் ஏற்படுத்தினார். மேற்படி தேர்வுகளுக்கு முதல்வராகவும் முதன்மையான உறுப்பினராகவும் விளங்கினார். அன்று ஆரம்பித்து வைத்த இப் பணியின் மூலம் இச்சங்கம் இன்றுவரை எத்தனையோ பண்டிதர்களை ஈழநாட்டிற்கு அளித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வாறு தமிழ்ப்பணியில் ஈடுபட்டிருந்த மயில்வாகனனாரின் வாழ்வில் திருப்பு முனைகளாக 1916ம் ஆண்டு கொழும்பிலும், 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலும் இராமகிருஷ்ண நிறுவனத்தைச் சேர்ந்த சுவாமி சர்வானந்தாவுடனான சந்திப்புக்கள் அமைந்து, 1922ம் ஆண்டு இவரை துறவின்பால் ஈர்த்தது. துறவு பூண்டு தமிழ்த்தாய்க்கும் , தமிழர் சமயத்திற்கும் தொண்டு புரியும் நோக்குடன் சென்னை இராமகிருஷ்ண மடத்திற்குச் சென்று பணியில் ஈடுபட்டதால் மடத்திலே துறவிக்குரிய வழிமுறைகளைக் கடைப்பிடித்த இவருக்கு மடத்தினரால் 'பிரபோத சைதன்யர்' எனும் பிரம்மச்சரிய நாமம் வழங்கப்பட்டது.

1924ம் ஆண்டு சித்திரைத் திங்கள் பௌர்ணமி நாளன்று சுவாமி சிவானந்தா அவர்களால் ஞானோப தேசம் அளிக்கப்பட்டு "சுவாமி விபுலாநந்தர்" எனும் துறவறப் பெயரும் வழங்கப்பெற்றார்.

இயலிசைப்பணி

இசை, நடனம் ஆகியவற்றிற்கு இவர் ஆற்றிய பல பணிகளைக் கூறலாம். இயல்பாகவே கலைகள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட அடிகளார், இசை, நடனம், நாடகம் ஆகியனவும் மாணவர்களுடைய ஆளுமையினை யும் கற்பனைத்திறனையும் ஏற்படுத்தக் கூடியன எனக் கூறுகின்றார். இக் கலைகளைக் குலத்தொழிலாகக் கொண்டுள்ளவர்கள் மட்டும் கற்காமல் ஏனைய பெண்களும் இக்கலைகளை இயன்றவரை கற்க வேண்டும் எனவும் அடிகளார் வலியுறுத்துகின்றார். சாஸ்திரீயக் கலைகளில் மட்டுமன்றி பிற கலை வடிவங்களிலும் இவரது ஈடுபாடு மிகுந்து காணப்பட்டது. மட்டக்களப்பின் பாடுமீன்களின் இசையில் மூழ்கிய அடிகளார் இவை பற்றிச் சிறந்த கவிதைகளை எழுதியுள்ளார். உதாரணமாக அடிகளார் தமது யாழ் நூலிலே கூறுவதை அவதானிக்கலாம்.

"மாசகன்ற மணி விசும்பில்
வயங்கு நிறை மதியம்
மலர்க்கிரண ஒளிபரப்ப
வளருமிள வேனில்....."

என நீரர மகளிர் பற்றி அடிகளார் கூறுகின்றார். இந்நீரர மகளிரின் பாடலே தனது யாழ்நூலின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தது எனக் கூறுகின்றார். ஆயிரம் ஆண்டுகளாக மறைந்து கிடந்த கலையினைத் தமிழ் மக்கள் மீண்டும் பெறுவதற்கு அடிகளாரின் ஆராய்ச்சி இசை நூலான யாழ் நூல் உதவி புரிந்தது எனலாம். எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களை உருவாக்கிய வேங்கடமுகி அவர்கள் கையாண்ட வீணைக் கருவியினையே யாழ் எனக் கூறி வந்தனர்.

ஆனால் யாழ் நூலானது ஆயிரம் நரம்பு யாழின் கணக்கினை கண்டறிந்து அவ்யாழினை மீண்டும் அமைப்பதற்குரிய குறிப்புக்களைத் திறம்பட எடுத்துரைக்கின்றது. அடிகளாரின் பழந்தமிழரின் இசையான பண், யாழ், குழல் முதலியவற்றின் ஆய்வுகளினூடாகத் தோன்றியதே இந்த யாழ்நூல்.அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக இருந்த சமயம் அந்நாளில் இசைக்கல்லூரியின் ஆசிரியராக இருந்த கலாநிதி க.பொன்னையாப்பிள்ளை அவர்களிடம் கர்நாடக சங்கீதத்தின் அமைப்பினை கேட்டறிந்தார். இது இவரது இசை ஆராய்ச்சிக்கு உதவியாக அமைந்தது.

அடிகளாருக்கு இசையில் இருந்த ஆர்வம் மேலும் பெருகிற்று. பழந்தமிழர் கையாண்ட யாழ்களைப் பற்றி ஆய்வு செய்வதற்கு எண்ணம் கொண்டார். தமது ஆய்வுக்குப் பேராசிரியர் பதவி தடையாக இருக்குமென எண்ணி 1933ம் ஆண்டு இப் பேராசிரியர் பணியினைக் கைவிட்டு வட நாடு இமயமலைச்சாரலில் உள்ள "மாயவதி" என்னும் ஆச்சிரமத்தில் தங்கி இசைத்தமிழ் ஆய்வினை மேற்கொண்டார். யாழைப் பற்றிய மேலும் விரிவான செய்திகள் தென்னகத்தில் கிடைக்கும் என்று கருதி மீண்டும் தமிழகத்திற்கு திரும்பினார். இவ்வாய்வினை எழுது வதற்கு அடிகளார் சங்க நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, தொல்காப்பியம், சைவத்திருமுறைகள், பெருங்கதை, சீவகசிந்தாமணி முதலிய தமிழ் நூல்களையும், நாட்டியசாஸ்திரம், சங்கீரத்னாகரம், சங்கீத மகரந்தம், சங்கீத பாரிஜாதம், சதுர்தண்டி பிரகாசிகா முதலிய வடமொழி நூல்களையும் குடுமியா மலைக்கல்வெட்டு முதலிய தொல்லியல் சின்னங்களையும் வரலாற்று ரீதியிலும், ஒப்பியல் ரீதியிலும், விஞ்ஞான ரீதியிலும் ஆராய்ந்து பழந்தமிழர் மத்தியில் வழக்கற்றுப் போன ஆறு வகை யாழ்களின் அமைப்புக்களை மீண்டும் உருவாக்கினார். பழந்தமிழர் மத்தியில் வழக்கிலிருந்த இசைக்கருவிகளில் சிறந்தது, யாழ் என்று அடிகளார் கருதுகின்றார். நெடுங்காலமாக மங்கிக்கிடந்த தமிழிசைக்கும் யாழுக்கும் புத்துயிர் அளித்தார்.

அடிகளாரின் 14 ஆண்டுகள் இடைவிடாத முயற்சியின் பயனாக யாழ்நூல் தோற்றம் பெற்றது. இசைத்தமிழ் நூலாகிய யாழ் நூல் கரந்தைத் தமிழ்ச்சங்கத்து ஆதரவில் திருக்கொள்ளம்புத்தூர் திருக்கோவில் முன்றலில் பல அறிஞர்கள், பேராசிரியர்கள் முன்னிலையில் 1947 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 5, 6ஆம் திகிகளில் அரங்கேறியது. யாழ்நூல் பாயிரவியல், யாழுறுப்பியல் என ஏழு இயல்களைக்கொண்டதாகும். பல வகையான யாழ்களின் விளக்கப்படங்களுடன் முடிவில் ஆயிரம் நரம்புகள் கொண்ட யாழ் பற்றிய ஆங்கில கட்டுரையும் இடம்பெறுகின்றன. யாழ்நூலின் பண்ணியல், தேவாரவியல் ஆகிய இரு அத்தியாயங்களிலும் பண்ணிசை பற்றியே கூறப்படுகின்றது. பண்ணிற்கும் பின் எழுந்த இராகங்களுக்கும் இடையே உள்ள தொடர்புகளை அவர் எடுத்துக்காட்டியுள்ளார். பண்ணிலிருந்து தான் கர்நாடக இசைக்குரிய இராகங்கள் பெரிதும் உருவாகியுள்ளன. எடுத்துக்காட்டாக,

பண் தக்கேசியும் இராகம் காம்போதியும்
பண் நட்டபாடையும் இராகம் நாட்டைக்குறிஞ்சியும்
பண் பழம்பஞ்சுரமும் இராகம் சங்கராபரணமும்
பண் வியாழக்குறிஞ்சியும் இராகம் சௌராஷ்டிரமும்
ஒன்றே எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

103 பண்களிலே இராப்பண்கள், பகல்பண்கள், பொதுப்பண்கள் எவையென்பதும் கூறப்பட்டுள்ளன. அவற்றுக்கான யாழ், வீணை முதலிய இசைக்கருவிகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அடிகளார் பல இசை நூல்களை நன்கு கற்றுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இந்திய இசைக்கும் பொதுவான ஷட்ஜம்(ஸ), ரிஷபம்(ரி), காந்தாரம்(க), மத்திமம்(ம), பஞ்சமம்(ப), தைவதம்(த), நிஷாதம்(நி), எனும் ஸப்தஸ்வரங்களே தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் ஏழிசையாகக் கூறப்படுவனவாகும்.

இவை முறையே மயில், ரிஷபம், ஆடு, கிரௌஞ்சகம், குயில், குதிரை, யானை, முதலியனவற்றின் ஒலிகளை அடிப்படையாகக் கொண்டவை.

அடிகளாரின் கற்பனையில் ஏழு நீரர மகளிர் ஆடல் பாடல்களிலே திளைப்போராகக் காட்டப்படுகின்றனர். இப்பாடல்களில் இவர்கள் ஸப்தஸ்வரங்களின் வடிவங்களாகவே விளங்குகின்றனர் இவ்வாறு ஆடிப்பாடி வரும் அழகுக் கன்னிகள் புலவனுக்கு இசை நுணுக்கங்களை உணர்த்துகின்றனர். கீர்த்தனம், வர்ணம் போன்ற இசை உருப்படிகளை இயற்றும் ஆற்றல் அடிகளாரிடம் இருந்தும் அவற்றினை இயற்றியதாகத் தெரியவில்லை. ஆனாலும் தெய்வங்கள், பெரியோர், இயற்கை பற்றிய பாடல்களை இயற்றியுள்ளார். எடுத்துக்காட்டாக, "ஈசனுக்கும் இம்மலர் மூன்று" எனும் தலைப்பிலே,

"வெள்ளை நிற மல்லிகையே வேறெந்த மாமலரோ...." என்பதைக் குறிப்பிடலாம்.

இசைத்துறையில் மட்டுமன்றி நடனத்துறையிலும் இவரின் கவனம் இருந்தது, பரத நாட்டியக்கலை மறுமலர்ச்சியுற்ற காலத்தில் வாழ்ந்தவர் அடிகளார். தமிழரின் சாஸ்திரீய நடனமாகிய பரதநாட்டியம் பற்றிச் சிந்தித்தவர் "பரதசாஸ்திரம்" எனும் தலைப்பில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கச் சஞ்சிகையான "கலாநிதி யில்" எழுதிய கட்டுரை குறிப்பிடத்தக்கது.இக்கட்டுரையில் நாடக மகளிர் பற்றிக் குறிப்பிடுகையில் தமிழிலும் வடமொழியிலும் உள்ள நடனம் நாடகம் பற்றிய நூல்களின் முக்கியத்துவம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

உவகை, நகை, அழுகை முதலிய ஒன்பது சுவைகளையும் சாத்வீக, ஆங்கிக, வாச்சிக, ஆஹார்ய ஆகிய நான்கு வகை அபிநயங்கள் பற்றியும் அவற்றினை புலப்படுத்தும் இருவகைக் கூத்துக்கள் பத்து வகை நாடகங்கள் பற்றியும் விளக்கியுள்ளார். இவை நடனத்திற்கும் இன்றியமையாத கூறுகளாகும். 1942 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற இயற்றமிழ் மகாநாட்டுத் தலைமைப் பேருரையிலே இசைத்தமிழ் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இதிலே பண், இராகம், தாளம் மூன்றும் அடங்கிய பிண்டமே பரதம் என விளக்கியுள்ளார். நடனத்தின் தெய்வமாகக் கருதப்படும் நடராஜப் பெருமானுடைய திருவுருவம் கூறும் தத்துவம் பற்றிய "நடராஜவடிவம்" என்ற சிறு நூலையும் அடிகளார் எழுதியுள்ளார். இந்நாட்களிலே வட நாட்டிலும் தென்னாட்டிலும் பரதநாட்டியத்தினை விருத்தி செய்யும் முயற்சி நடந்து வருகின்றது. இமயமலைச்சாரலில் அல்மோரா நகரிலே உலகப்பிரசித்தி பெற்ற உதய்சங்கர் என்பவர் ஒரு கலாநிலையத்தை ஏற்படுத்தி அங்கு பல மாணவர்களுக்கு நாட்டியக்கலையை அறிவுறுத்தி வருகின்றார். தெற்கே பிரம்ம ஞான சங்கத்துத் தலைவராகிய கலாநிதி ஜோர்ஜ் அருண்டேல் அவர்களின் பாரியாராகிய ருக்மணி-தேவியார் பரத நாட்டியத்தினைத் தகுதியுடைய மாணவருக்குப் பயிற்று வருகின்றார். வடமொழியிலும் தென் மொழியிலும் உள்ள நாட்டியக்கலை அபிநயக்கலை நூல்களிலே கண்ட மரபுகளை இவ்விரு நிலையங்களும் கையாண்டு வருகின்றன என்று கூறிய அடிகளார் பல நிலையங்களின் மூலம் இக்கலைகள் வளர்க்கப்பட வேண்டும் என்ற சீரிய கருத்தைக் கொண்டிருந்தமையைக் காணமுடிகின்றது.

நாடகப்பணி

விபுலானந்த அடிகள் நாடகக் கலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் கூறத்தவறவில்லை. "நாடகங்களை நடிப்பது மாணவரிடத்தே கற்பனை ஆற்றலை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையைக் கொடுக்கின்றது." எனக் கூறும் விபுலானந்த அடிகள் மாணவருக்கு நாடகக்கலை அவசியமான-தென்பதைக் காட்டுகின்றார். "இன்பநூல் எண்ணெண் கலையாக விரிவுற்று நின்றது. இன்ப விழைவுடையோருக்கு அவ்வின்பத்தினை நல்குதலை தமது தொழிலாகக் கொண்ட நாடகமகளிர் அவ் இன்பத்துறையில் பலவற்றையும் கற்றுவல்லராதற்குரியவர்" என விபுலானந்த அடிகள் நாடகமகளிர் அதனைத் துறைபோகக் கற்றிருத்தல் வேண்டுமெனக் கருதியுள்ளார்.

அத்துடன் "இசைத் தமிழ் நாடகத் தமிழின் இயல்பை இதுவரையும் பிறநாட்டார் அறிந்தாரில்லை. இவற்றை வளர்த்து உலகிற்குப் பயன்படச் செய்யும் கடமை தமிழ்நாட்டுச் சர்வகலாசாலைக்கு உரியது" என விபுலானந்த அடிகள் அழகி யற் கலைகளைப் பல்கலைக்கழகங்களிலும் இடம்பெறச் செய்து அவற்றை அயல் நாட்டாரும், ஏனை-யோரும் அறியத்தக்க வகையில் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமெனும் உள்ளக்கிடக்கையையும் வெளிப்படுத்தி உள்ளதை உணரலாம். ஞானயோகம், கர்மயோகம், விவேகானந்த ஞானதீபம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, ஆங்கிலக் கட்டுரை, சொற்பொலிவு ஆகியவற்றை அடிகளார் மொழிபெயர்த்தார்.

தமிழில் நாடக இலக்கண நூல்களும், இலக்கியமும் பெருக வேண்டும் என்ற நன்நோக்கில் எழுதப்பட்டதே இவரது 'மதங்க சூளாமணி' எனும் நாடகத் தமிழ் நூலாகும். இதனை 1926ம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டபோது தமிழிலே நாடகத் தமிழ் நூல் ஒன்று இல்லை என்றிருந்த குறை தீர்க்கப்பட்டது. நாடக உலகில் இமயமலைபோல் வீற்றிருக்கும் சேக்ஸ்பியருக்கு இட்ட சிறப்புப் பெயர்தான் மதங்க சூளாமணி. மதங்கர் என்பதற்கு 'கூத்தர்' என்றும், சேக்ஸ்பியரைச் சூளாமணி என்றும் அடிகளார் சிறப்பிக்கின்றார். இவர் அமைத்த நாடக நூல்கள் தமிழறிஞர் வகுத்து வைத்த சந்தியும் சுவையும் செவ்வனே அமைந்துள்ளமையால் இவற்றை ஆராய்வதன் மூலம் நாடகத் தமிழ் ஆராய்ச்சிக்கு இன்றியமையாதது என அடிகளாரின் உள்ளத்தில் புலப்பட்டதனாலும் தமிழில் வழக்கிலிருந்த இசை நுணுக்கம், அறிவனாரின் பஞ்சமரபு, ஆதிவாயிலார் இயற்றிய பரதசேனாபதீயம் என்பன அடியார்க்கு முன்னார் காலத்திலிருந்து இறந்து போயிருந்தன. அவற்றால் உணரப்படும் இலக்கண மரபுக்கு இலக்கியமாகிய நாடகங்கள் இறந்தொழிந்து போயினமையே அடிகளாரை மதங்க சூளாமணியை எழுதவைத்தது. இந்நூலில் நாடக மரபுகள், அமைப்புமுறை, அரங்கமைப்பு முறை என்பவற்றை அடிகளார் மிக நுட்பமாக வகுத்தளித்துள்ளார்.

சமூகப்பணி

அடிகளார் பல துறைகளிலும் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றிய ஒரு மகான் ஆவார். இவ்வாறாக பல துறைகளிலும் பணியை மேற்கொண்ட அடிகளார் சமூகப் பணி செய்வதிலும் ஈடுபட்டார். அவர் வாழ்ந்த காலத்தில் படிப்பறிவில்லாது பாரம்பரியப் பெருமையைப் புரிந்து கொள்ளாது பிழைப்பதும், உண்பதும் மட்டுமே கடமை என்று இருந்த ஒரு மக்கள் சமுதாயத்தைத் தட்டியெழுப்பி அவர்களுடைய தூக்கத்தைக் கலைத்து வீறு கொண்ட சமுதாயமாக மாற்றினார். பல்லாண்டு காலமாக அரசியல் உரிமை இழந்து அடிமை வாழ்வு வாழ்ந்து வந்த காரணத்தினாலே தேசப்பற்று, சமயப்பற்று, மொழிப்பற்று என்பன முற்றாக மறைந்து விட்ட பெருங்குறையை நிவர்த்தி செய்ய மாணவரிடையே தேசிய உணர்ச்சியைத் தூண்டுவித்தார்.

முடிவுரை

இத் தொடர்பில் விபுலானந்த அடிகளார் ஆற்றிய பணிகளை கல்விப்பணி, கலாச்சாரப்பணி, சமயப்பணி, இலக்கியப்பணி என்று வெவ்வேறாகப்பிரித்துக் கூறினாலும் இவை ஒன்று சேர்த்து அவரின் பாரிய சமுதாயப்பணி யின் அம்சங்களாகவே இவை அமைகின்றன. அடிகளாரின் பாரிய ஆராய்ச்சியான யாழ் நூலின் அரங்கேற்றம் நிகழ்ந்து சில மாதங்களில் 1947.07.19 அன்று அடிகளார் காலமானார். அடிகளார் மறைந்தாலும் அவரின் பணிகள் மறையவில்லை. இவர் ஆற்றிய பன்முகப்பட்ட பணிகளில் எதை எடுத்துக்கொண்டாலும் ஏதோ ஒரு வகையில் அவை தமிழ் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதாகவே அமைந்தன. இந்த் உண்மைகளை அறிவதற்கு கல்லடி உப்போடை இராமகிருஷ்ண சங்கம், சிவானந்த வித்தியாலயம், சாரதா மகளிர் இல்லம், விபுலா னந்த மணிமண்டபம், சுவாமி விபுலானந்த இசை நடனக்கல்லூரி (சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவகம்) என்பன இதற்குச் சான்றாக அமைகின்றன.

வையத்தலைமைகொள்

முனைவர் க.சின்னப்பா, (பணிநிறைவு)
மதுரைத் தமிழ்ச் சங்க செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. இந்தியா



தமிழுக்குத் தொண்டு செய்த புரட்சிக் கவிஞன் பாரதியின் பெயரைத் தமிழகத் தமிழ் மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு வைத்து மகிழ்வதைப்போல் இலங்கை தமிழ் மக்கள் சுவாமி விபுலாநந்தரின் நினைவாகத் தங்கள் குழந்தைகளுக்கு விபுலாநந்தன் எனப் பெயர் வைத்து மகிழ்கின்றனர். இலங்கையில் இன்றும் பல கல்வி நிறுவனங்கள் விபுலாநந்தரின் பெயரால் இயங்குகின்றன. தமிழர்கள் வாழும் பல தெருக்களுக்கு விபுலாநந்தர் வீதி என வைத்து மகிழ்கின்றனர் என்பதை கனடாவில் வாழும் பிரபல உதயம் பத்திரிகை ஆசிரியர் திரு.லோகேந்திரலிங்கம் அவர்கள் குறிப்பிடக் கேட்டிருக்கிறேன். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இசைத் தமிழுக்குத் தொண்டாற்றியோர்களில் முதன்மையானவர் தமிழ்க் கடல் என்றும், முத்தமிழ் வித்தகர் என்றும் போற்றப்பெற்றவர் சுவாமி விபுலாநந்தர். இன்றும் இலங்கையில் 200க்கும் மேற்பட்ட சிலைகள் விபுலா நந்தருக்கு இருக்கின்றன என்று மதுரை ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி கமலாத்மானந்தர் பெருமை-யோடு குறிப்பிடுவார்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு காரைதீவில் 1892ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் நாளில் தோன்றியவர் சுவாமி விபுலாநந்தர். இவருக்கு முன் தோன்றி தமிழுக்கும், சைவத்திற்கும் பெரும் தொண்டாற்றி இவருக்கு முன் மறைந்தவர் யாழ்பாணம் ஆறுமுகநாவலர். சுவாமி விபுலாநந்தர் அருட்பிரகாச வள்ளலாரைப்போல் 55ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து இந்தியத்திருநாடு சுதந்திரம் அடைவதற்கு ஒரு மாதம் முன்பாகவே 1947 கூலை மாதம் 19ஆம் நாள் தமிழுக்கும், சைவத்திற்கும், தமிழ் இசைக்கும் பெரும் தொண்டாற்றி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுலகில் தெய்வமானார்.

தன்னுடைய 24ஆம் வயதில் 1916ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் நடத்திய பண்டிதத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்று வெற்றிபெற்ற முதல் இலங்கைத்தமிழர் சுவாமி விபுலாநந்தர் ஆவார். அப்போது பிர வேசம், பாலபண்டிதம், பண்டிதம் ஆகிய வகுப்புக்களை தொலைதூரக் கல்வியாக மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் பெருமையோடு நடத்திவந்தது. 1901ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இச்சங்கத்தைப் பின்பற்றி 1908ஆம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச்சங்கமும், 1911ஆம் ஆண்டு மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியும் நிறுவப்பட்டன. மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் நடத்திய செந்தமிழ் மாத இதழிலும், கரந்தைத் தமிழ்ச்சங்கம் நடத்திய தமிழ்ப்பொழில் என்ற மாத இதழிலும், தமிழ் மொழி, வரலாறு மற்றும் பண்பாடு, கலை இலக்கியம் சார்ந்த கட்டுரைகளை சுவாமி விபுலாநந்தர் அவர்கள் எழுதிவந்தார். அவற்றை மட்டும் தொகுத்து வெளியிட்டாலே பல நல்ல நூல்கள் தமிழ் மொழிக்கு கிடைக்கும். மதுரைத் தமிழ்ச்சங்க நூற்றாண்டு விழாவிற்காக செந்தமிழ் இதழில் வெளிவந்த சுவாமி விபுலாநந்தர் அவர்களின் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடும் பணியில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் தொகுக்க முயன்றதை நான் செந்தமிழ்க் கல்லூரி முதல்வராக இருந்த காலத்தில் நன்கு அறிவேன். இந்த முற்றுப் பெறா முயற்சியை முடித்து வைத்த பெருமை அடிகள் உதித்த மண்ணான மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் இயற்றிய நாடகத்தமிழ் நூலாகிய மதங்க சூளாமணியை மதுரைத் தமிழ்ச்சங்கமும், இசைத்தமிழ் நூலாகிய யாழ் நூலை கரந்தைத் தமிழ்ச்சங்கமும் வெளியிட்டு பெருமைப்படுத்தின. மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற முத்தமிழ் மாநாட்டில் தலைமை தாங்கிய பெருமை அடிகளாருக்கு உண்டு. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் (1943-1947) பணியாற்றுவதற்கு முன், தமிழக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1931 முதல் 1933வரை தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றிய பெருமை உடையவர். சுவாமிகள் தமிழ் மொழி மட்டுமன்றி சிங்களம், ஆங்கிலம், சமஸ்கிருதம், பெங்காலி, அரபு, லத்தின், கிரேக்கம் ஆகிய மொழிகளிலும் புலமைபெற்றவராக வாழ்ந்திருக்கிறார். நீண்ட கால ஆராய்ச்சியின் விளைவாக “யாழ்நூல்” என்னும் இசை நூலை தமிழுக்குப் படைத்துள்ளார்.

1922ஆம் ஆண்டு சென்னை, மயிலாப்பூரிலுள்ள இராமகிருஷ்ண மடத்தில் தன்னை இணைத்துக்கொண்ட போதுதான் விபுலாநந்தர் ஆனார். அதற்குமுன் பண்டிதர் மயில்வாகனனாகத்தான் அறியப்பட்டார். சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு விழா 1992ஆம் ஆண்டு இலங்கை மட்டக்களப்பு சபையினர் சிறப்பாக நடத்தியபொழுது அவரைத் தமிழ் அறிஞராக, தமிழ்ச் சிந்தனையாளராக மட்டுமல்லாது அவரை இராமகிருஷ்ண மடத்துத் துறவியாக, ஆன்மீக வாதியாகச் சித்தரித்து பெருமைப்படுத்தினர்.

சுவாமி விபுலாநந்தரின் நினைவாகத் தமிழ் மொழித் தினவிழாவை இலங்கை அரசு கொண்டாடி வருதல் குறிப்பிடத்தக்கது. உலகெங்கும் வாழும் தமிழ்மொழி பேசும் தாயக மக்கள் அவரது பணியை நினைவு கூரும் வகையில் முயன்றுகொண்டிருக்கிறார்கள். தமிழுக்கு ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும். அதற்கு மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் தலைமையாக இருக்க வேண்டும், அதற்குத் தலைவராக திருவுடை மன்னர் இராஜ இராஜேஸ்வர சேதுபதியாக இருக்க வேண்டும் என 1926ஆண்டு மே மாதம் கொழும்பில் இருந்து வெளிவந்த விவேகானந்தன் இதழில் (அட்சய வருடம், வைகாசி மாதம், தொகுதி 1, பகுதி 7, கொழும்பு – விவேகானந்தன்) அதன் ஆசிரியராக இருந்து தலையங்கம் எழுதினார். 1926ஆம் ஆண்டு மதுரை நகரில் அமைந்த நான்காம் தமிழ்ச்சங்க வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தில் இலங்கையில் இருந்து வந்து கலந்துகொண்டு சிறப்பித்தமையை 1927ஆம் ஆண்டு வெளிவந்த விவேகானந்தன் இதழில் குறிப்பிடுகிறார் (விவேகானந்தன், கொழும்பு தொகுதி 2, பகுதி 4 பிரபல வருடம், சித்திரை மாதம்)

1942ஆம் ஆண்டு முத்தமிழ் மாநாடு மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தில் கூட்டப்பெற்றது. அதனை அப்போதிருந்த மாட்சிமை தங்கிய சண்முக ராஜேஸ்வர நாகநாதசேதுபதி மன்னர் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். இயற்றமிழ் மாநாட்டுத் தலைவராக சுவாமி விபுலாநந்தரை மன்னர் அவர்கள் அழைத்துப் பெருமைப்படுத்தியிருக்கிறார். அம்மாநாட்டு தலைமைப் பேருரையின்போது மாட்சிமை தங்கிய மன்னர் சண்முக ராஜேஸ்வர நாகநாதசேதுபதி அவர்களே எனத் தொடங்கி "வையைப் பேரியாறு வளஞ்சுரந்தூட்டப் பொய்யா வானம் புதுப் பெயல் பொழியத் - தென்னர் குலத்தோர் செவ்விதிற் புரந்த இச்செழும்பதியானது தொண்டு தொட்டு தமிழ்ப் புலவரும், சேது பதிகள் போன்ற புரவலர்களும் ஒருங்குகூடி உரையாடி தாம் இன்புறுவது உலகம் இன்புறுவது கண்டு காமுறுதற்கு இசைந்த இடமாகலின் கூடல் என்றும் சிறப்பு பெயர் எய்தி நின்றது. இத்தகைய கூடலம்பதியில் - இம் மங்கல நாளிலே நான்காம் தமிழ்ச்சங்கத் தலைவர் சேதுபதி மன்னர் அவர்களின் முன்னிலையில் ஒருங்கு கூடியிருக்கும் நம் அனைவருக்கும் தமிழணங்கின் பேரருள் உளதாகுக எனத் தொடங்கி, தமிழ் மொழியின் தொன்மையையும், சிறப்பையும் பற்றி நீண்ட உரையாற்றி, மகாகவி பாரதியைப்போற்றி நிறைவு செய்திருக்கிறார். தமிழ் மொழி மீதான உணர்ச்சியை அறிவுப்பூர்வமாகச் சொல்ல இவரைவிட்டால் இனியார்? என நாவலர் சோமசுந்தர பாரதியார் பாராட்டி மகிழ்ந்திருக்கிறார். மதுரைத் தமிழ்ச்சங்கத்திலும், கரந்தைத் தமிழ்ச்சங்கத்திலும், சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பழந்தமிழிசை மரபின் சார்பாக அவர் விரிவுரைத்ததையும், எழுதி வந்ததையும், நூலாக்க வேண்டும் என்ற ஏக்கத்தை அப்போதைய கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் "தமிழ்ப்பொழில்" மூலம் போக்கியதை நன்றியோடு பாராட்டுகிறார். அவருடைய 125ஆவது பிறந்தநாள் ஆண்டு 2017ஆம் ஆண்டாகும். தமிழ் மொழியையும், தமிழர் மானத்தையும் மரபையும் போற்றித் தான் என்ற அகந்தை இல்லா ஆத்ம ஞானியாக வாழ்ந்து மறைந்தவரின் பிறப்பையும், இருப்பையும் போற்றும் ஆண்டாக கொண்டாடி மகிழ வேண்டியது தமிழர்தம் கடமையாகும். அவர் நிறைவாகச் சொன்னது, "அதிகப் பிரசங்கி கருமம் முடிக்க மாட்டான்: தோல்வி வந்தபோது சோர்வு அடைபவன் கருமம் முடிக்க மாட்டான்: வெற்றியினால் நிலை கலங்கினோன் கருமம் முடிக்க மாட்டான்: காமம், வெகுளி, மயக்கத்தினால் அறிவுற்று நிலை கலங்கினோன் கருமம் முடிக்க மாட்டான்: ஆரம்பித்ததை இடையில் விட்டயர்கின்ற சோம்பேறி கருமம் முடிக்க மாட்டான், இறைவனுடைய திருவடியை சிந்தையில் வைத்து, சிரத்தை மீதூர்ந்த உள்ளத்தனாய் இன்ப துன்பங்களினால் அயர்வுறாது, காமம், வெளி, மயக்கத்தை நீக்கி, சாந்தம், பொறுமை, தயை என்னும் நற்குணங்களை பூண்டுநிற்போன் ஆத்ம சக்தி நிறைவினாலே செயற்கரியதைச் செய்து முடிப்பான் என்பது என் ஆராய்ச்சியில் கண்ட முடிவாகும்" என்று அவர் சொன்னதைப் போற்றுவோம், தமிழர் தம் மானம் காப்போம்.

பண்டைத் தமிழரின் இசைக்கருவிகள் பற்றிய பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின் கருத்துக்கள்

விமலா பாலசுந்தரம், (M.A., Sheffield University)
(முன்னாள் நூலகர், யாழ்.பல்கலைக்கழகம், இலங்கை)
ரொறன்ரோ, கனடா



சுவாமி விபுலாநந்தர் அவர்கள், பண்டைத் தமிழர் வாழ்வில் இசைக்கருவிகள் பெற்றிருந்த சிறப்பும், அவை தொடர்பான விழுமியங்களும் தமிழர் பண்பாட்டுக்கு எவ்வாறு பெருமை அளித்தன என்பன பற்றி ஆராய்ந்துள்ளார். மனிதனின் படிமுறை நாகரிக வளர்ச்சிக்கு அமைவாகவும், தாம் வாழ்ந்த இடங்களில் கிடைக்கக் கூடிய பொருட்களுக்கு ஏற்பவும் இசைக்கருவிகளை மக்கள் செய்துகொண்டனர். அவ்வாறு அவர்கள் ஆக்கிக் கொண்ட இசைக்கருவிகள் தோற்கருவிகள், நரம்புக்கருவிகள், துளைக்கருவி, கஞ்சக்கருவிகளென நால்வகைப்படும். இவற்றில் யாழ், வீணை, வயலின் முதலான நரம்புக்கருவிகள் மிகவும் நுட்பம் வாய்ந்தவை. பாணர், பொருநர், பாடினியர், வயிரியர், கூத்தர், கோடியர் முதலான இசைக் குலத்தவர் இந்த இசைக்கருவிகளைத் தம் வாழ்வாதாரமாகப் பயன்படுத்தலாயினர். அவர்களுக்கு மன்னரும் வள்ளல்களும் விருந்தளித்துப் பரிசில்களும் வழங்கி ஆதரித்து வந்துள்ளனர்.

இசைக்கருவிகள் உலகப் பண்பாடுகள் அனைத்திற்கும் பொதுவானவையாகவும், பொதுப்பண்புகளைக் கொண்டனவாகவும் அமைந்துள்ளன. பூர்வீககாலம், இடைக்காலம், நவீனகாலம் ஆகிய நாகரிக காலங்களின் படிமுறை வளர்ச்சியின் அடிப்படையில் இசைக்கருவிகளின் வளர்ச்சிநிலையும் விரிவாக இசை ஆய்வாளர்களால் ஆராயப்பட்டுள்ளது. மனித நாகரிகத்தின் தொடக்க காலத்தில் நாடோடி வாழ்க்கை முறையிலும், பின்னர் கிராமியப் பண்பாட்டுக் காலத்திலும் பண்பாட்டு வளர்ச்சியின் பல்வேறு வகையான நாட்டுப்புறப் பாடல்களுடன் இணைந்தனவாகப் பல்வேறு இசைக்கருவிகளும் தோற்றம் பெறலாயின. பாமர மக்களால் ஆக்கம் பெற்று, பரம்பரை பரம்பரையாகப் பல்லாண்டு காலமாக வழங்கி வந்த இசைக்கருவிகள் வாய்மொழிப் பாடல்களுடன் இணைந்து, நாட்டுப்புற மக்களின் இன்பம், துன்பம், தொழில்முறைகள், நம்பிக்கைகள், வாழ்க்கை நடைமுறைகள் என்பவற்றின் பின்னணியில் வழங்கிவந்துள்ளன. காலஓட்டத்தில் நாட்டுப்புற இசைக்கருவிகளும் சாஸ்திரிய இசைக்கருவிகளும் இணைந்து வளர்ந்துள்ளமையை உலக இசை வரலாற்றில் மட்டுமன்றி, தமிழிசை வரலாற்றிலும் அறிந்துகொள்ளலாம்.

பழந்தமிழர் இசைக்கருவிகள் பற்றிய தகவல்களை சங்க இலக்கியங்கள் மற்றும் சிலப்பதிகாரம் முதலான ஆதாரங்களின் உதவியுடன் சுவாமிகள் ஆராய்ந்து அம்மக்கள் வாழ்வில் பயன்படுத்திய பல்வகை இசைக்கருவிகள் பற்றி எழுதியுள்ளார். சிலப்பதிகாரத்திலே அரங்கேற்றுகாதை, கானல்வரி, வேட்டுவவரி, குன்றக்குரவை, ஆய்ச்சியர்குரவை, துன்பமாலை என்ற பாடற் பகுதிகளில் பல்வேறு வகைப்பட்ட இசைக்கருவிகளின் இயல்புகள், அவற்றின் பயன்பாடுகள் என்பன விரிவாகக் கூறப்படுகின்றன. தமிழகத்தில் பண்டை நாளில் வளர்ச்சிபெற்றிருந்த இசைக்கருவிகள் பற்றி அடியார்க்குநல்லார் தனது இலக்கிய உரையிலே மேற்கோளாகத் தரும் “பேரிகை படகம் இடக்கை உடுக்கை....” என்ற பாடலில் முப்பதுக்கும் மேற்பட்ட இசைக்கருவிகள் வழங்கின எனக் கூறப்படுகிறது. இத்தகைய இசைக் கருவிகள் சிலப்பதிகார காலம்வரை வழக்கிலிருந்தமை பற்றியும் சுவாமி விபுலாநந்தர் ஆராய்ந்து நிறுவலானார்.

மிகப்பழங்காலத்தில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து வந்த தோலிசைக் கருவிகள் மக்களின் அன்றாட வாழ்க்கையிலும், வீரப்புறநிலை வாழ்க்கையிலும் பல்வேறு சூழல்களில் பயன்பட்டுவந்துள்ளன. இசை வளர்ச்சியின் பயனாகப் பாடல்களுக்குப் பல்லியங்களாகப் பயன்படும் வகையில் வெவ்வேறுவடிவங்களிலும் இசைக்கருவிகள் தோற்றம் பெறலாயின. அவற்றின் பண்டைய பயன்பாடு பற்றியும், இசைப்பாணர்கள் அவற்றை ஒலித்துச் சென்றனர் என்றும் தொல்காப்பியம் புறத்திணையியலிற் காணலாம். முல்லை நிலத்தில் ஏறுகோட்பறையும், குறிஞ்சியில் முருகியம், தொண்டகப்பறை என இரண்டும் வழங்கின. மருதத்தில் மணமுழவு, நெல்லரிகிணை என்ற பறைகள் பயன்பட்டன. நெய்தல் நில மக்கள் மீன்கோட் பறையைப் பயன்படுத்தினர். பாலை நிலத்தவர் சூறைகோட் பறையையும் நிரைகோட் பறையையும் தமது தொழில் அடிப்படையிலும் பொழுது போக்கிற்காகவும் பயன்படுத்தினர் என்பதைச் சுவாமிகள் விளக்கியுள்ளார்.

பண்டைக் காலத்துத் தோலிசைக் கருவிகளான **பறை, முழவு, முரசம், பதலை, தொண்டகம், ஆகுளி, தடாரி** முதலானவை பற்றிய பல்வேறு தரவுகளைச் சங்க இலக்கியங்கள் கொண்டுள்ளன. இவற்றுள் மிக முக்கியமாகக் கருதப்பட்ட **பறைக் கருவிகளைப்** பெரும்பறை, சிறுபறை என வகைப்படுத்தி யிருந்தனர். பெரும் பறையை முரசம் என்றனர். போர்க் காலங்களிற் போர் முரசு பல்வேறு விடயங்களை அறிவிக்கும் கருவியாக விளங்கிற்று. போர் முரசு வைப்பதற்கு முரசுகட்டில் அமைக்கப்பட்டு, அம்முரசு அரச மரியாதையுடன் பேணப்பட்டது. போர் முரசு மூவேந்தரிடமே இருந்ததாக அறியப்படுகிறது. சிறுபறைகள் மக்களின் விழாக்களில் வாசிக்கப்பட்டன. வெறியாட்டு நடனத்தில் ஆடும் வேலன், வள்ளி ஆகியோருக்கு உருக்கொடுக்கவும் பறை பயன்பட்டுள்ளது.

பண்டைக்கால மக்கள் விழாக் காலங்களில் **முழவு** என்னும் இசைக்கருவியைப் பெரிதும் பயன்படுத்தினர். "குரல்புணர் நல்யாழ் முழவோடு ஒன்றி:' என மதுரைக்காஞ்சி குரலிசையோடு யாழும் முழவும் பக்கவாத்தியங்களாக வாசிக்கப்பட்டமையைக் குறிப்பிடுகின்றது. இன்று வழக்கிலுள்ள தவில், மத்தளம், பறை என்பன வாரினால் இழுத்து வரிந்து கட்டப்பட்டிருப்பது போன்று சங்ககால முழவு இசைக்கருவியும் வாரினால் வரிந்து கட்டப்பட்டிருந்தமையை 'மலைபடுகடாம்' விரிவாகக் கூறுகின்றது. அந்த முழவு என்ற இசைக்கருவி பலாப்பழம் போன்று நீண்டு காணப்பட்டது எனப் புறநானூறு (செய். 236) வருணிக்கிறது.

தினைப்புனத்தில் விலங்குகள் புகுந்து அழிவு ஏற்படுத்தாமல் தடுப்பதற்குப் **பதலை** என்ற தோலிசைக்கருவி பயன்பட்டது. அத்துடன் குறிஞ்சி நிலத்துப் பெண்களும் ஆடவரும் தமது களியாட்டங்களில் பதலை வாசித்து களி-மகிழ்வெய்தினர் என்பன பற்றிய செய்திகள் குறுந்தொகை, நற்றிணை முதலியவற்றில் விரிவாகக் கூறப்படு கின்றன. பாணர்களும் இந்த இசைக்கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். அவர்கள் பதலையை வாசிக்கும் விதம் பற்றிக் குறுந்தொகையும் (செய்.:59), அதனை மெல்லென ஒலிக்க வேண்டுமெனப் புறநானுறும் (செய்.152) குறிப்பிடுகின்றன. குறிஞ்சிநில மக்கள் **தொண்டகப்** பறையையும் பயன்படுத்தியுள்ளனர்.

ஆகுளி பெரும்பறையுடன் இசைவாக வாசிக்கப்படுவதாகும். **எல்லரி** "சல் சல்" என ஒலிக்கும் தன்மை வாய்ந்ததாகும். இவ்வாறாகப் பண்டைத் தமிழரின் இசைக்கருவிகள் பெரிதும் வளர்ச்சியும், பயன்பாடும் கொண்டிருந்தமை சங்க இலக்கியம் வழியாக அறியப்படுமாற்றைச் சுவாமிகள் விளக்கமாகத் தம் ஆய்வுகளில் வெளிப்படுத்தியுள்ளார். தமிழர் மத்தியில் வழங்கிய பல்வகைப் பறைகளின் பெயர்களை முனைவர் இராச கலைவாணி தமிழ் இலக்கியங்களிலிருந்தும் நிகண்டுகள் வழியாகவும் ஆராய்ந்து அகரவரிசையில் வருமாறு பட்டியலிடுதல் நோக்கத் தக்கதாகும்:

"அடக்கம், ஆகுளி, ஆறெறிப்பறை, இடைச்சுருங்குபறை, இழுகுபறை, இயமரம், இரணபேரி, உடுக்கை, எக்கம், எல்லரி, ஏறுகோட்பறை, கஞ்சிரா, கடுவாய்ப்பறை, கண்டிகை, கம்பலி, கரடிப்பறை, கல்லவரம், களக்கொட்டு, கிடுகு, கிடுமூடி, கிணைப்பறை, குடப்பறை, கும்மட்டம், குரவைப்பறை, கோட்பறை, சல்லரி, சல்லிகை, சாக்கொட்டு, சாப்பறை, சிறுபறை, சூசிகம், தக்கை, தகுணிச்சம், தட்டை, தண்ணுமை, தப்பட்டை, தப்பை, தம்பட்டம், தமுக்கு, தலைப்பறை, தலைவிரிபறை, தவண்டை, திண்டிமம், திமிக்கி, திமிலை, துடி, நாவாய்ப்பறை, நிசாளம், நிரைகோட்பறை, பகுவாய்ப்பறை, படகம், படலை, பதலை, பன்றிப்பறை, பாகம், பாடகம், பாண்டிகம், பெருங்கோடனை, மகாதுந்துமி, மத்தரி, மரக்காற்பறை, மீன்கோட்பறை, முருகியம், முறவம், மொந்தை என்பனவாகும் (இரா கலைவாணி, 2014:186).

தொழிற்களங்களிற் பணிபுரிவோர் தம் களைப்பை மறந்து தொழிற்படுவதற்கு வாய்ப்பாகத் தொழிற்களப் பாடல்கள் நன்கு பயன்பட்டன. தொழில் புரிவோர் தாம் செய்யும் வேலைக்குப் பக்கபலமாகவும் ஊக்கம் அளிப்பதற்காகவும் பாட்டுக்காரரையும் மத்தளகாரரையும் அமர்த்துவது வழக்கம். அதுபோன்றே பண்டை நாளிற் **பொருநர்** என்ற இசைப்பாணர் போர்க்களம், ஏர்க்களம், கூத்தாட்டு அவைக்களம் முதலான பல தளங்களிலிருந்து, பாட்டிசைத்துப் பாடினர். அவர்களுக்குப் பல்லியமாக பல இசைவாத்தியக் கலைஞர்களும் இசைவாசித்துள்ளனர்.

போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த வீரனின் மனைவி துடியனின் உதவியுடன் விளரிப்பண் பாடி, உடலருகே நரிகள் நெருங்காதவாறு அவற்றை ஓட்டுவதைப் புறநானூறு (செய்.291:14) குறிப்பிடுகிறது. வீரயுகமாகிய சங்க காலத்திற், பகை நாட்டின்மீது வீரர் படைஎடுத்துச் செல்லும்போது ஆடலும் பாடலும் இணைந்த 'முன்தேர்க் குரவை', 'பின்தேர்க் குரவை' என்பன நிகழ்த்தப்பட்டன. அத்தகு ஆடலும் பாடலும் போர் வீரவெறியூட்டுவனவாக அமைந்தன. போரில் வெற்றிபெற்று மீளும்போது படைவீரர், போர்க்கள இசைக்கருவிக-ளுடன் வெற்றிச் சங்கம் முழங்க, ஆடிப்பாடிய செய்திகளும் சங்கச் செய்யுள்களில் பெரிதும் இடம்பெற்றுள்ளன.

அடுத்ததாக, **நரம்புக்கருவிகளின்** முக்கியத்துவம் பற்றி நோக்கலாம். இவற்றில் யாழ் மிகப் பழமையான-தாகும். சிந்துவெளிப் புதைபொருட் சான்றுகளில் யாழும் குழலும் பொறிக்கப் பட்டிருந்தன. மெசப்பத்தேமியா நாகரிகத் தளத்தின் 'ஊர்' என்ற நகரத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் யாழ்க்கருவிகளின் அடையாளங்கள் கிடைத்துள்ளமை யாழின் பழமையை அறிந்துகொள்ளத் துணையாகின்றன எனச் சுவாமிகள் தம் கட்டுரையிற் குறிப்பிடுவர்.

தொல்காப்பியம் அகத்திணைச் செய்யுள்களின் கருப்பொருள்களில் யாழையும் குறிப்பிட்டுள்ளார். பண்டைக் காலத்து யாழிசை இலக்கண நூல்களை **'நரம்பின் மறைய'** எனவும், யாழ் வாசிப்போரை **யாழோர்** எனவும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. வழக்கொழிந்துபோன வில்யாழ், சகோடயாழ், செங்கோட்டு யாழ், மகர யாழ், பேரி யாழ் எனப் பல்வகை யாழ்களைச் சுவாமி விபுலாநந்தர் இனங்கண்டு, அவை பற்றி ஆராய்ந்து யாழ் நூலில் அவற்றின் வடிவம், இலக்கணம், உறுப்புகள் என்பனபற்றிய விரிவான விளக்கமுந் தந்துள்ளார். சீறியாழ் சிறி தாகையால் பாணர்கள் அதனை எப்போதும் தம்முடன் வைத்திருந்தனர். அதனால் அது 'கைவழி' என்ற பெயர் பெறுவதாயிற்றென புறநானூறு (149:3) கூறுகிறது. ஐவகை நிலங்களுக்கும் தனித்தனியாகக், குறிஞ்சியாழ், முல்லையாழ், மருதயாழ், நெய்தல்யாழ், பாலையாழ் என்பன வழக்குப் பெற்றிருந்தன. இசைக்கருவிகளில் யாழ் தலைமையானதாகவும், தெய்வத்தன்மை கொண்டதாகவும் கருதப்பட்டது. மேலை நாடுகளிலும் யாழ் போன்ற 'Harp' என்ற இசைக்கருவி மிகவும் பழமையானதாக வழங்கிவந்துள்ளமை பற்றியும் சுவாமிகள் தம் ஆய்வில் விளக்கியுள்ளார்.

சங்க காலத்தின் தொடக்கத்தில் **வில்யாழ்** வழக்கில் இருந்தது. பண்பாட்டு வளர்ச்சியின் பயனாக சகோட யாழ், செங்கோட்டியாழ் என வளர்ந்து, ஆயிரம் நரம்புகள் கொண்ட பேரியாழ் வளர்ச்சி அடைந்தமை, அவை மக்கள் வாழ்க்கையில் பல்வேறு சமூக, சமயச் சடங்குகளில் பயன்பட்டு வந்ததுள்ளமை என்பன பற்றி விரிவாக சுவாமியின் யாழ் நூல் விளக்குகிறது.

யாழ் வகைகளிற் **பேரியாழ்** என்பது மிகவும் நுட்பம் வாய்ந்ததாகும். 'சிலப்பதிகார காலத்துக் கல்லோவியம் ஒன்று எழில் மிக்க நரம்புகளுள்ள யாழின் உருவத்தைக் கொண்டுள்ளது. அவ்வோவியத்தின் நிழற்படத்தைக் கண்ணுற்ற ஈழநாட்டுப் பேரறிஞர் ஆனந்தக்குமாரசுவாமி பழைமையான இக்கருவி சிலப்பதிகார காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் தமிழ் நாட்டில் வழங்கிற்று எனவும், மிகப் பழைமையான இசைமரபொன்று தமிழகத்திலேயிருந்து இறந்ததென்றும் உலகிலுள்ள பேரறிஞர்க்கு வெளியிட்டார்' எனச் சுவாமி விபுலாநந்தர் (விபுலம் 2003, பக்கம் 37) குறிப்பிடுவர். பண்டைத் தமிழரின் யாழிசைக்கருவிகள் பற்றி ஆராய்ந்த சுவாமி விபுலாநந்தர், முதலில் யாழ் உறுப்புகளின் பெயர்களைச் சங்கத் தமிழ் இலக்கிய ஆய்வில் அறிந்துகொண்டார். அவர்கண்ட யாழ் உறுப்புக்களாவன: பத்தல், போர்வை, திவவு, ஆணி, வறுவாய், மருப்பு, கோடு, கவை, கடை, யாப்பு, பச்சை, உந்தி, கோல், புரிநரம்பு, நரம்புத்தொடையல், வணர் என்பனவாகும் (யாழ்நூல் பார்க்க). சுவாமிகள் பழந்தமிழர் இசைக்கருவிகளை ஆராய்ந்து, அவற்றை மீள்உருவாக்கம் செய்வதில் வெற்றியும் கண்டறிந்த ஆய்வின் வெளிப்பாடே யாழ் நூலாகும்.

.....

1. சுவாமி விபுலாநந்தர், யாழ் நூல் என்னும் இசைத் தமிழ் நூல் மூன்றாம் பதிப்பு, யாதுமாகி பதிப்பகம், திருநெல்வேலி. 2003
2. சுவாமி விபுலாநந்தர், 'பண்டைத் தமிழிசை ஆராய்ச்சி (சொற்பொழிவுகள்.) சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள், தொகுதி 2, மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை, 1995
3. இ. பாலசுந்தரம், "விபுலாநந்த அடிகளாரின் யாழ் நூலும் இசைத் தமிழ் ஆய்வும்", தமிழறிஞர் விபுலாநந்தர் வாழ்வும் பணிகளும், நூற்றாண்டு நினைவுக் கட்டுரைத் தொகுப்பு, இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 1992.
4. இராச கலைவாணி, தொல்காப்பியத்தில் இசை- தொன்மையும் தொடர்ச்சியும், ஏழிசைப் பதிப்பகம்,



அன்பின் வழியது உயிர் நிலை.

அறிவியல் கல்வியில் பேராசிரியரின் வெளிப்பாடுகள்



அகணி சுரேஸ்
B.Sc Eng.(Srilanka), MSc in Computing(UK)
ரொறன்ரோ, கனடா

கிழக்கிலங்கை, தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்கிய ஒப்புயர்வற்ற தமிழ்த்துறவி விபுலாநந்த அடிகளாரது சிந்தனைகள் ஆழமானவையாகவும், பரந்தவையாகவம், யதார்த்த பூர்வமானவையாகவும், புரட்சிகரமானவை யாகவும் உள்ளன என்று தமிழறிஞர்கள் கூறியுள்ளார்கள். அடிகளார் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இலங்கையின் முதல்தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழ்நாட்டின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உலகின் முதற்தமிழ்ப் பேராசிரியராகவும் கடமையாற்றித் தனது கடமையைச் செவ்வனேயாற்றியிருந்தார் எனக் கூறப்படுகின்றது. அறிவியல் கல்வியில் பேராசிரியரின் வெளிப்பாடுகள் பற்றிச் சிந்திப்பதற்கு முன்னதாக அவரின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து சில விடயங்களைச் சுருக்கமாக மீட்டுக் கொள்வது பொருத்தமானதாக அமையும் என்று கருதுகின்றேன்.

கிழக்கிலங்கையில், காரேறு மூதூர் என அழைக்கப்படும் காரைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அடிகளார் 1892ஆம் ஆண்டு சாமித்தம்பியர், கண்ணம்மை தம்பதிகளின் அருமைப் புதல்வனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் மயில்வாகனன். விஞ்ஞான தீபத்தில் இவரின் அறிவியல் ஆக்கங்களையும் பண்டிதர் மயில்வாகனன் என்ற பெயரில் எழுதியிருப்பதைக் காணமுடிகின்றது. ஆரம்பக் கல்வியை காரைதீவில் ஆரம்பித்து, பின் கல்முனை மெதடிஸ்த கல்லூரியில் கற்றார். தனது பன்னிரண்டாம் வயதிலேயே செய்யுள் இயற்றும் திறனைப் பெற்றுக் கொண்டார். இவரது முதல் ஆசிரியர் குஞ்சுத்தம்பி. ஆசிரியர் வைத்தியலிங்க தேசிகரிடம் தமிழ் மொழியும், வடமொழியும் கற்றார். புனித மைக்கல் கல்லூரியில் அதிபராக இருந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வண பொனெல் அவர்களிடம் கணித பாடம் கற்றார். இந்தக் கல்லூரியில் இருந்தவாறு கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் பதினாறாவது வயதில் முதன்மையாகத் தேறியதோடு இக்கல்லூரியிலேயே ஆசிரியராகப் பதவி பெற்றார். 1912ஆம் ஆண்டு கொழும்பு வந்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இரண்டு வருடம் பயிற்சி பெற்றுத் திரும்பவும் பயிற்றப்பட்ட ஆசிரிய ராகப் புனித மைக்கல் இரண்டு வருடங்கள் கற்பித்தார். இவர் தனது மொழித்திறமை, இலக்கியத்திறமை என்பவற்றோடு விஞ்ஞானத் துறையிலும் திறமை காட்டினார். 1915 ஆம் ஆண்டு கொழும்பு அரசின் பொறியியல் கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்று 1916ஆம் ஆண்டு விஞ்ஞானத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றார். கொழும்பு அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியிலும் இரசாயன உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றினார். ஆங்கிலப் பள்ளியில் விஞ்ஞான அறிவைப் பெற்றிருந்த விபுலாநந்த அடிகளார் புனித சம்பத்தரிசியார் கல்லூரியிலும் ஆசிரி யராகப் பணிபுரிந்து, 1920ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தலைமை ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அங்கு விஞ்ஞான ஆய்வு கூடத்தையும் நிறுவினார். 1917ஆம் ஆண்டில் லண்டன் பல்கலைக்கழக பிஎஸ்சி தேர்வில் சிறப்புச் சித்தி பெற்றார். தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நல்ல புலமை கொண்டிருந்த இவர் இலத்தீன், வங்கம், சிங்களம், அரபு ஆகிய மொழிகளையும் அறிந்திருந்தார். 1922ஆம் ஆண்டில் ராமகிருஷ்ண மிசனில் சேர்ந்து துறவியானார். திருக்கோணமலை கோணேஸ்வரர் இந்துக் கல்லூரியில் 1925ஆம் ஆண்டிலிருந்து முகாமையாளராகவும், பின் 1928 இல் அதிபராகவும் பணிபுரிந்தார். மட்டக்களப்பில் ஆங்கில அறிவியலைப் போதிப்பதற்காகவே 1925ஆம் ஆண்டு சிவானந்த வித்தியாலயத்தை நிறுவினார். அடிக-ளார் மதுரை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பண்டிதர் பட்டம் பெற்றார்.

1931 ஆம் ஆண்டு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பேராசிரியர் பதவி ஏற்றார். யாழ்நூல் அரங்கேறிய பின்பு 1947ஆம் ஆண்டு சுகயீனம் காரணமாக கொழும்பில் சிகிச்சை பெற்று வந்தார். 1947ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 19ஆம் நாள் சனிக்கிழமை இரவு அமரத்துவம் அடைந்தார். மொத்தம் 55 வருடங்கள் மட்டும் இந்தப் பூமியில் வாழ்ந்தாலும் எக்காலமும் அவர் புகழ் நிலைக்கும் விதமாகப் பற்பல பணிகளைப் புரிந்த பெருமகனாக வாழ்ந்துள்ளார் என்பதை அவர் பற்றிய சான்றுகள் பறைசாற்றுகின்றன. மேற்குறிப்பிட்ட அடிகளாரின் வாழ்க்கைச் சுருக்கத்தைப் பார்க்கும் பொழுது அவர் எத்தகைய அறிவியல் பின்புலத்தையும், பன்மொழித் திறனையும், ஆன்மீக நாட்டத்தையும் கொண்டவராக வாழ்ந்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

அறிவியல் கல்வி தமிழில் போதிக்கப்பட வேண்டும் என்பதில் மிக்க ஆர்வம் கொண்டவராக இருந்தார். அறிவியல் கலைச்சொல்லாக்கத் துறையில் ஈடுபாடு கொண்டு உழைத்தார். தாய்மொழி மூலம் அறிவியல் கல்வியைக் கற்பதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றித் தற்கால ஆய்வுகள் எடுத்துக் கூறுகின்றன. இந்த உண்மையைப் பேராசிரியர் அவர் காலத்திலேயே கூறியிருப்பதை நாங்கள் கவனிக்க வேண்டும். 1943ஆம் ஆண்டு எழுதிய கட்டுரை ஒன்றில் "பழமையும், புதுமையும், துவைதமும், அத்வைதமும், பௌதிக விஞ்ஞானமும் மெஞ்ஞானக் காட்சியும், மேற்றிசையறிவும், கீழ்த்திசைச் சமயமும், மனமொடுங்கிய தியானநிலையும், மன பதைக்குத் தொண்டு புரிதலும் சமரசப்பட வேண்டிய காலம் இது" என்று குறிப்பிட்டதன் மூலம் நல்ல விடயங்களை இணைத்து சமரசம் காணுதலில் நாட்டம் கொண்டவராக இருந்திருக்கிறார் என்பதை அறிய முடிகின்றது. அறிவியல் கல்வியை முற்றிலும் மாறுபட்ட விடயமாக மாணவர்கள் பார்க்காது மொழிக்கல்வி, அறம் சார்ந்த கல்வியுடன் இணைத்துக் கற்க வேண்டும் என்பதை அவரின் மிகவும் முக்கியமான வெளிப்பாடாக நான் கருதுகின்றேன்.

இவரால் யாழ்நூலில் குறிக்கப்படும் தகவல்கள் மூலம் அகழ்வாராய்வு பற்றிய இவரது அறிவு நன்கு புலப்படுகின்றது. யாழ்நூலில் கணித அறிவு புதைந்திருக்கின்றது. இந்நூலில் இசையைக் கணித முறையில் விளக்க முனைந்துள்ளார். யாழ் நூலில் அடிகளாரின் தமிழ்ப்புலமை, ஆங்கிலப் புலமை, சங்கீதப் புலமை, கூடவே விஞ்ஞானப் புலமை, கணிதப் புலமையும் புலப்படுகின்றது. பௌதீக இயலுக்கு ஏற்ப யாழின் நரம்பின் அமைப்புக்கள் ஆராயப்பட்டு ஒலிகள் அளக்கப்படுகின்றன. இசை நரம்புகளின் சிற்றெல்லை, பேரெல்லை என விஞ்ஞான விளக்கத்தைக் கொடுத்துள்ளார். ஒழிபியலில் கணிதத்துக்கும், இசைக்கும் உள்ள தொடர்பை விளக்கி இசைக் கணிதம் என்ற துறையை அறிமுகம் செய்துள்ளார். இத்துறை மூலம் இசையாராச்சிக்கு இன்றியமையாத கணக்கு முறைகளை கணிதம் மூலம் விளக்கலாம். பேராசிரியர் மேற்கிந்திய அறிவியலை கீழைத்தேய கலைஞானத்துடன் சேர்ந்து உள, உடற்பயிற்சி அடிப்படையில் புதியதொரு கல்வி முறையைப் பரப்புவதில் ஆர்வம் கொண்டிருந்தார். 1938ஆம் ஆண்டில் சென்னைப்பல்கலைக் கழகம் வெளியிட்ட கலைச்சொல் அகராதியின் வேதிநூல் பகுதி அடிகளாரால் ஆக்கப்பட்டது என அறிய முடிகின்றது. இவரது எழுத்தாற்றல் அவரின் 22ஆம் வயதி-லேயே நன்கு வெளிப்படத் தொடங்கி விட்டது.

"அறிவியலினால் போதிக்கும் முறையானது அவதானிப்பினதும், பரிசோதனையினதும் அனுபவரீதியாகப் பெறப்பட்டுள்ள முறையேயாகும். பூதநூலிலே நிறுவப்படும் உண்மைகளெல்லாம் முறைப்படி அளந்து அறிதற்கு இயைந்தனவாதலின் அறிவு எனப்படுவது அளந்து துணிதல் என்று மேனாட்டு அறிவியல் புலவர் கூறுவர்" என்று கூறியுள்ளார் பேராசிரியர் விபுலாநந்தர். மேலும் அறிவியல் கல்விக்கு வேண்டிய கூர்ந்த நுன்மதியும் நுணுகி நோக்கும் கண்ணும் பற்றி "கண்ணினதும், செவியினதும் நுண்ணிதினுணரும் மாந்தர்க்கு அவையிரண்டும் சிறந்த அளவுகோலாக அமைந்தன.

கூர்ந்த நுண்மதியும் நுணுகி நோக்கும் கண்ணும் உடையவராய்ப் பயிற்சி பெற்ற கைகளை உடையவராய் புற-வுலகத்திலே அமைந்த பல்வேறு பொருட்களையும் ஆராய்ந்தறியப் புகுவோர் தமது ஆராய்ச்சிக்கு வேண்டிய தகுதி யான கருவிகளைத் தேடிக் கொள்ளுதல் வேண்டும்" என்றவாறு அறிவியல் ஆய்வாளர்களுக்கும், அறிவியல் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அறிவுரை கூறுகின்றார் பேராசிரியர் விபுலாநந்தர் அவர்கள். "உயிர் அனைத்தும் ஒன்றினோடொன்று தொடர்புடையன. பிற உயிர்களைக் காப்பதே தன்னுயிரைக் காப்பதற்குச் சிறந்த உபாயமாகும். அதனால் உயிரைப் பாதுகாக்கும் மார்க்கத்தால் இவையனைத்தும் பொதுவில் அமைந்து நின்றன. இவற்றையெல்லாம் முறையாக அறிந்து உணர்த்துதலே உயிர்நூற்பொதுவியல்பியாகும்" என்று கூறி அறிவியல் கல்வியின் பயன் அறத்தையும் செய்வதைப் போதித்துள்ளார் சுவாமி விபுலாநந்தர்.

அறிவியற் கல்வியை வேதாந்தக் கல்வியின் அடிப்படையில் புகட்டினால் கல்விப் போதனையில் கூடியளவு பயன் கிடைக்கும் என்பதும், நிலைபேற்றினது ஒருமைத்தன்மைக் கோட்பாடுகளின் அடிப்படையில் பௌதீகம், உயிரியல் பாடப் போதனைகள் அமைதல் வேண்டும் என்பதும் அவர் விருப்பமாக இருந்தது. "மின்காந்த அலைக-ளாகவும், ஒளியாகவும், வெப்பமாகவும், இயந்திரவியல் இயக்கங்களாகவும் ஒரே சக்தியே அமைந்துள்ளது என்பதும், ஒரே எலெக்ரோன்களும், புரோட்டன்களும் இரசாயன மூலங்களின் ஆச்சரியப்படத்தக்க பல்வேறு மூலங்களை ஆக்க உதவுகிறது என்பதும் மேலே குறிப்பிட்ட எலெக்ரோன்ஸ், புரோட்டன்ஸ் என்பவற்றை அறியும் தன்மை ஆகியன ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதுமான உண்மை நிலைபேற்றினூடாக உண்மைத் தன்மையை எடுத்துக் காட்டுகின்றன. அத்துடன் இயற்கையின் அடிப்படையில் அமைந்துள்ள கட்டங்களுக்கும், இயல்புகளுக்கும் சான்று பகிர்கின்றன" போன்ற அடிகளாரின் விளக்கங்கள் அறிவியல் கல்விக்கும் சமய உண்மைகளுக்கும் இடையே பாலம் அமைப்பதாக உள்ளது.

பேராசிரியரின் "விஞ்ஞான தீபம்" நூலில் உள்ள கட்டுரைகள் மூலமாக அறிவியற் கல்வியின் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பைச் செய்துள்ளார் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. விஞ்ஞான தீபத்தில் மொழிபெயர்ப்பு முறை பற்றி ஒரு கட்டுரையைப் பேராசிரியர் எழுதியுள்ளார். இந்தக் கட்டுரையில் அவர் "ஒரு மொழியிலுள்ள நூலினை மற்றொரு மொழியிற் பெயர்த்து எழுதுமிடத்து முதனூற்பொருள், நடை, இயைபு முதலியவற்றை மாறுபடவிடாது மொழிபெயர்ப்பு நூலினுள்ளுக் காட்டுதல் வேண்டும்" என்று கூறியுள்ளார். இந்தக் கட்டுரையில் இயற்பியல், வேதியியல், துறைகள் சார்ந்து பல கலைச்சொற்களை அவர் அறிமுகம் செய்தும் உள்ளார். விஞ்ஞான தீபத்தில் "விஞ்ஞான ஒளி (*light of science*)" என்ற கட்டுரையில் அடிகளார் இந்தக் கட்டுரையைத் தொல்காப்பியம் கொண்டுள்ள அறிவியல் விடயங்களுடன் ஆரம்பித்துள்ளார். ஏனைய கட்டுரையாளர்கள் போல இந்தக் கட்டுரை யில் விஞ்ஞானக் கருத்தை மட்டும் பேசிக்கொண்டு கட்டுரையை நகர்த்திச் செல்லாது அவ்வப்போது விடயங்களை மெஞ்ஞானக் கருத்துக்களையும், மொழிசார்ந்த விடயங்களையும் சேர்த்து ஆய்ந்து கொள்ளும் பாணியைக் கைக்கொண் டுள்ளார். இவ்வாறான அணுகுமுறையைக் கொண்ட கட்டுரைகளைக் காண்பது அரிது என்றே எனக்குத் தோன்றுகின்றது.

விஞ்ஞான தீபத்தில் அடிகளார் உற்பத்தி விளக்கம் என்ற தலைப்பின்கீழ் சூரியன் உற்பத்தி, சந்திரன் உற்பத்தி, ஐம்பூதங்கள் போன்றவை பற்றிய வானவியல் அறிவியல் கருத்துக்களை வெளிக்கொண்டு வந்துள்ளார். "பூமி செந்தீச்சுடரிய பிழம்பாகச் சுழன்று கொண்டிருந்த காலத்தில் அதனினின்றொரு பாகம் பிரிந்து பூமியைச் சுற்றிச் செல்லுகிற உபக்கிரகமாகிய சந்திரனாயிற்று. சிற்றளவினதாகிய சந்திரன் அறக்குளிந்து விட்டமையால் நீர், வளி, தீ இவையாவும் அங்கு நிலனாய்விட்டன." என்று சந்திரன் உற்பத்தி பற்றிய வானியல் விளக்கம் கொடுத்துள்ளார்.

சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி என வானியல் கோள்களையும், நட்சத்திரங்களையும் அறிமுகம் செய்து அவற்றின் தொழிற்பாட்டு நுட்பங்களையும் விளக்கும் கட்டுரையாகவும் அடிகளாரின் கட்டுரை இருந்தது. ஐம்பூதங்களில் முதலில் வானமே தோன்றியதென்றும் அடுத்து காற்றும் பின்னர் தீயும், நான்காவதாக நீரும் தோன்றி ஈற்றில் உயிர்கள் தோன்றுவதற்காக நிலம் தோன்றியதென்றும் விபரித்துள்ளார். ஒவ்வொரு பூதங்களும் தோன்றுவதற்கிடையில் பல ஊழிகள் (காலங்கள்) சென்றதாக அடிகளார் கூறியுள்ளார். உயிர்த்தோற்றத்திலும் ஓரறிவு உயிர்கள், மூவறிவு உயிர்கள் எனப் படிப்படியாகவே தோற்றங்கள் நடந்தன என விளக்குகின்றார். ஒரு காலத்தில் சூரியனும் கிரகங்களும், உப கிரகங்களும் ஒன்று சேர்ந்து தீப்பிழம்பாகவே இருந்தன என்றும் குறிப்பிட்டுள்ளார்.


தற்கால வானியல் கட்டுரைகளில் காணக்கூடிய பல விபரங்களை அடிகளார் அன்றே விளக்கமாகக் கூறியிருப்பது எனக்கு ஆச்சரியத்தை அளிக்கின்றது. மேலும் வேறு கிரகங்களிலும் மக்கள் வசிக்கக் கூடுமென வானநூல்வல்லார்கள் ஊகித்து அறிந்தார்கள் என்றும் செவ்வாய் உலகத்தில் வசிப்பதற்கு முயற்சிகளை இவ்வுலகத்தோர் மேற்கொள்கின்றார்கள் என்றெல்லாம் அடிகளார் எழுதி யிருப்பதைப் பார்க்கும் பொழுது நாங்கள் தற்காலத்தில் புதியவை போன்று அறிந்து கொள்ளும் விடயங்களையும் சுவாமி விபுலாநந்தர் அவரின் காலத்தில் விரிவாகக் கூறியிருப்பதை வைத்துக் கொண்டே பேராசிரியரின் விஞ்ஞானப் பங்களிப்பையும், திறனையும் ஊகித்து அறிந்து கொள்ளலாம்.

அடிகளாரின் கட்டுரைகளில் விளக்கங்கள் தரும்பொழுது தொல்காப்பியம், பரிபாடல் போன்றவற்றில் உள்ளவற்றை எடுத்து விளக்குவதை உற்றுக் கவனித்தால் பண்டைத் தமிழரின் வானியல் அறிவுப் புலமையையும் விளங்கிக் கொள்ளலாம். விஞ்ஞான தீபத்தில் *space and time, concept of infinitude, principle of relativity, fourth dimension, Einstein theory* போன்ற தலைப்புக்களில் அடிகளார் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளும் விஞ்ஞான தீபம் நூலில் இடம் பெற்றுள்ளன. அடிகளாரின் முழுமையான நூல் எனக்குக் கிடைக்காத நிலையில் அந்த நூலில் பதிவாகியுள்ள சில கட்டுரைகளை மட்டுமே வாசிக்க முடிந்தது. அவற்றைப் படித்ததும் முழுமையான விஞ்ஞான தீபம் நூலை வாசிக்க வேண்டும், அவற்றில் கூறப்பட்டுள்ள விடயங்களை மேலும் விரிவாக ஆய்வு செய்ய வேண்டும் என்ற எண்ணமே மனதில் தோன்றுகின்றது. அறிவியல் கல்வியில் பேராசிரியரின் வெளிப்பாடுகள் உன்னதமானவை. இவற்றைப் பல்வேறு கோணங்களில் நாங்கள் ஆய்வு செய்ய வேண்டும். மேன்மை தங்கிய பேராசிரியர் அடிகளார் சுவாமி விபுலாநந்தர் அவர்களைப் பற்றிய இந்தச் சிறப்பு மலரை உருவாக்கும் சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம், கனடா நிறுவனத்தினரைப் பாராட்டுவதோடு, இம்மலரில் எனது கட்டுரையும் இடம்பெறத் தந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி நிறைவு செய்கின்றேன்.

வாழ்க விபுலாநந்த அடிகளார் புகழ்.



சுவாமி விபுலாநந்த அடிகளாரின் மொழிபெயர்ப்புத் திறன்



என்.கே.மகாலிங்கம்
ரொறன்ரோ, கனடா

அடிகளார் பன்மொழிப் புலமையாளர். அவர் ஷேக்ஸ்பியரின் ஒன்பது நாடகங்களிலுள்ள சில பகுதிகளை மொழிபெயர்த்திருக்கிறார். அவற்றை விட, சுவாமி விவேகாநந்தர் கவிஞர் தாகூர், வரலாற்றாசிரியர் கதிரேசன் செட்டியார் ஆகியோரின் எழுத்துக்களையும் மொழிபெயர்த்திருக்கிறார். சங்கப் பாடல்கள், பக்திப் பாடல்கள், சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்கள், நவநீத கிருஷ்ண பாரதியாரின் பாடல்கள் சிலவற்றையும் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழியாக்கம் செய்திருக்கிறார். அவற்றை எல்லாம் இக்கட்டுரை விரிவஞ்சி இங்கே எடுத்துக் கொள்ளவில்லை. அவர் மொழியாக்கம் செய்த ஷேக்ஸ்பியரின் நாடகங்ளிலுள்ள சில பகுதிகளில் ஒரு சில பகுதி-களை மட்டும் இங்கே எடுத்து மிகச் சுருக்கமாகப் பார்க்கலாம் என்று நினைக்கிறேன்.

அவருடைய கவிதை உள்ளம் விழைந்தது, ஷேக்ஸ்பியரின் நாடகங்களை சிலவற்றை முழுவதாக மொழியாக்கம் செய்ய வேண்டும் என்று. ஆனால் அந்த எண்ணம் ஓய்வில்லாமையால் நிறைவேறாமல் போயி ருக்கிறது. அதனால் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் உள்ள சில பகுதிகளை மட்டும் மொழியாக்கம் செய்திருக்கிறார். முழுவதையுமே செய்ய நினைத்திருந்தார் என்று மதங்க சூளாமணி முன்னுரையில், 'ஆங்கம் முயற்சிக்கு வேண்டிய ஓய்வு ஏற்படாமையினால் இந்நூல் இவ்வுருவத்தில் முடிவு நேரிட்டது' என்றும் 'மேனாளில் ஓய்வு ஏற்படுமாயின் வழுக்களைந்து புதுக்கி, விரிவுறவெழுதி யுலகுக்களித்தல் என் கடனாகும்,' என்கிறார்.

அத்துடன் 'இந்நூல் இள மாணவரும் எளிதினுணர்ந்து கொள்ளத்தக்க நடையில் முடிய வேண்டுமென்றும் நண்பர் பலர் கூறிய ஊக்கவுரைகள் என்னுள்ளத்தில் பதிந்து கிடக்கின்றன. காலம் வாய்ப்பின் இயன்றவை புரியப் பின்னில்லேன்,' என்கிறார் அடியார்.

அப்படியானால் அவர் நண்பர்கள் இந்நூல் கடினமாக நடையில் எழுதப் பெற்றிருக்கின்றதென அவருக்குக் கூறியுள்ளார்கள். அவரும் அதை உணர்ந்து 'இயன்றவை புரிய பின்னில்லேன்' என்று கூறுவதும் அவர் குறிப்பிட்ட அந்த ஓய்வு கிடைத்திருப்பின் அந்த மாற்றங்களுடன் எழுதியிருப்பார் என்றும் கருத முடிகிறது.

செகசிற்பியார் என்று ஷேக்ஸ்பியரின் பெயருடன் ஒத்திசையக் கூடிய சொல்லாலும், மதங்க சூளாமணி - கூத்தர்களில் முடிமணி- (bard-கவிஞர், பாணர், கூத்தர்) என்ற புகழ் மொழியாலும் ஷேக்ஸ்பியரை உச்சியில் வைத்துக் கொண்டாடி உள்ளார் அடிகளார்.

அடிகளார் ஷேக்ஸ்பியாரின் நாடக தலைப்புக்களுக்கும், பாத்திரங்களின் பெயர்களுக்கும் நேர்ப் பொருள் கண்டுள்ளார். உதாரணமாக, ஆங்கில பெயர்ச் சொல்லான மக்பெத்துக்கு மகபதி என்றும், வெனிஸ் என்ற இடப்பெயருக்கு வணிகதேயம் என்றும், றோமியோ யூலியற் காதல் இணையருக்கு அவர்களின் காதல் காரணமாக இரம்மியமான-அழகான, சுசீலை-நல்லொழுக்கமுள்ளவள் என்றும், கிங் லியரை ஆகுலம்-மனக்கலக்கம், துன்பம் காரணமாக- அவருக்கு ஆகுலராஜன் என்று பெயரளித்துள்ளார். அதைப் போலவே நாடக பாத்திரங்களுக்கும் பல பெயர்களை அளித்துள்ளார்.

அதாவது தமிழ்ப் பாத்திரங்கள் பங்குபற்றும் தமிழ் நாடகமாக ஆக்கியுள்ளார். அப்படியாக மொழிபெயர்ப்புச் செய்வது சரியா? அவசியமா? என்பது ஒருபுறம் இருக்க, அவற்றை வாசிப்பவர்கள் அவை தமிழ் நாடகங்களா என்ற மயக்கத்துக்கும் ஆளாவர். அத்துடன் அவற்றின் வரலாற்று, அரசியல் சூழல்கள், காட்சிகள், பாத்திரங்களின் செயற்பாடுகள் போன்றவை செயற்கையாக இருக்கும் என்பதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். மொழி-பெயர்ப்புக்கள் மொழிபெயர்க்கப் பட்டவையாகத் தெரிய வேண்டும் என்ற மொழிபெயர்ப்புக் கோட்பாடு ஒன்றும் இக்காலத்தில் உண்டு. அதற்கு கொடுக்கப்படும் காரணமும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதே. ஒரு நாடகமோ இலக்கியமோ ஒரு மொழி பேசும் மக்கள் கலாசாரத்தின் வெளிப்பாடு. அதை இன்னொரு மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்யும்போது அதை இன்னொரு கலாசாரக் குழந்தையாக எப்படி மாற்ற முடியும்? அது செயற்கையான பண்புகளைக் கொண்ட நம்ப முடியாத கதையாக மாறிப் போகும் என்பர்.

அடிகளார் சில நாடகங்கள் சீயம், அங்கம், மணலி, மணிபல்லவம், உறையூர் போன்ற இடங்களில் நிகழ்வதாக எழுதியிருக்கிறார். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை ஏன் ஐரோப்பாவில் அல்லது இங்கிலாந்தில் நிகழ்ந்ததாக எழுதியிருக்கக் கூடாது என்ற கேள்வியும் எழாமல் இல்லை. அத்துடன், சில பாத்திரங்களின் பெயர்கள் சோழன் கிள்ளிவளவன், மலையன், மணிபுரத்தரசன், மதனன், குணமாலை, கனகமாலை, மாணிக்கமாலை போன்ற பெயர்களாக உள்ளன. அவை மொழியாக்க நாடகங்கள் என்ற உணர்வை இல்லாமல் செய்கின்றன. சிலவேளை செயற்கையாகவும் பழைமைத்தனமானதாகவும் இருக்கின்றன.

அடிகளார் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் தோய்ந்தவர். தனக்குப் பிடித்த ஒரு சில பகுதிகளையே மொழியாக்கம் செய்துள்ளார். அதனால் அந்த முழு நாடகங்களில் தெரிய வரும் பண்பாட்டுக் குறைபாடுகள் அதிகம் வெளியே தெரியவில்லை. அத்துடன், அவர் மொழியாக்கம் செய்த பகுதிகள் உண்மையிலே அந்த அந்த நாடகங்களிலுள்ள உயிரான பகுதிகள். அவற்றை அப்படியே வெளிக் கொணர்ந்தது அவரின் திறன். உதாரணமாக,

‘பேரிரவில் நடந்த தெல்லாம் பீழையினை விளைக்கப்
பேதலிக்கும் உளச் சிறியேன் பேசுகின்ற மொழிகள்
ஆருயிர்க்குத் தலைவன் இன் அருட் செவியில் வீழ்க
அகத்திடை இன்று இருந்திடுக அவை புகுதல் ஒழிக’

என்று கல்பேணியா முதல் நாள் இரவு துர்க்கனவு கண்டு சீசரை மறித்தபோது அவர் புன்னகை புரிந்து,

‘அஞ்சினார்க்குச் சத மரணம் அஞ்சாத நெஞ்சத்து
ஆடவனுக்கு ஒரு மரணம் அவனி மிசைப் பிறந்தோர்
துஞ்சுவர் என்று அறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்கும்
துன் மதி மூடரைக் கண்டால் புன்னகை செய்பவன் யான்’

இன்னலும் யானும் பிறந்த ஒரு தினத்தில் அறிவாய்
இளஞ் சிங்கக் குருளைகள் யாம் யான் மூத்தோன் எனது
பின்வருவது இன்னல் எனப் பகை மன்னர் அறிவார்
பேதுறல் பெண் அணங்கே யான் போய் வருதல் வேண்டும்’

என்ற அடிகளாரின் கவிதை மொழியாக்கம், எங்களை வீரத்துடன் நிமிர்ந்து நிற்கச் செய்கிறது. எங்கள் நெஞ்சிலும் வீரத்தைக் கொண்டு வருகிறது. தத்துவார்த்த கருத்துடன் சேர்ந்த அந்தக் கூற்று சேக்ஸ்பியருக்கு மட்டும் அல்ல, அடிகளாருக்கும் சொந்தமானது போலவே இருக்கிறது. இதுவே சிறந்த மொழிபெயர்ப்பாளனது வெற்றி. இங்கே அடிகளாருக்கே அது சொந்தமானதும் அதேவேளை சொந்தமில்லாததும். அது கவிதை.

'தாழ்ந்து மென் மொழி உரைத்திடேல் தரணியில் பணிந்து
வீழ்ந்து நைபவர் பொய்யுரைக்கு இரங்கிய வீணர்
சூழ்ந்து செய்தன துடைத்து பின் சோர்வினை அடைவார்
ஆழ்ந்து செய்வன செய்யும் யானவர் நெறி அணையேன்'

என்ற மொழியாக்கமும் உணர்ந்து இரசிக்கத் தக்கதே.

'கவிச்சுவை நிறைந்த பாகங்களை இயன்றவரை செய்யுள் உருவமாக மொழிபெயர்த்து தரவே' முயன்றுள்ளார். 'வேண்டிய இடத்து ஷேக்ஸ்பியர் வழங்கிய ஊர்ப்பெயர், மக்கட்பெயர், தெய்வப் பெயர் என்பனவற்றை தமிழ் மரபுக்கியைய வேற்றுமைப்படுத்தி வழங்க' வும் நினைத்துள்ளார்.

விபுலாநந்தரின் உரைநடை மொழி மிகவும் மரபார்ந்தது. செய்யுள்களையும் சந்தி பிரிக்காமல் எழுதியுள்ளார். அத்துடன் பல சொற்கள் பழம் பெரும் சொற்கள். சில தற்போதய வழக்கில் இல்லாதவை. கருத்துச் செறிந்தவை. சேக்ஸ்பியரின் சொற்களும் பழமையானவே. சேக்ஸ்பியரின் சொற்களுக்கு அவரை இன்று கற்கும் மாணவர்கள் அவர்கள் ஆங்கிலேயர்களாக இருந்தாலும் பொருள் தேடித்தான் கண்டு பிடிக்கிறார்கள். சேக்ஸ்பியரின் மொழி பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அதைப் போலவே அடிகளாரின் மொழியும் சொற்களஞ்சியமும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் முதல் பகுதிக்குரியவை அல்லது அதற்கு முந்திய பழந் தமிழ்ச் சொற்கள். அத்துடன் அவர் பண்டிதர். இலக்கண சுத்தம் பேணுதல் அவர்களின் மரபணுவில் உள்ள ஒன்று. சந்தத்துக்கான சந்திகளை நீக்கி பொருள் கொண்டால் தான் அடிகளாரின் மொழியாக்கத்தை முழுவதாகச் சுவைக்கலாம் என்பது என் எண்ணம். அதனால் தான் இங்கே அப்படிச் செய்து பார்த்திருக்கிறேன். அடிகளார் என்னை மன்னிக்க வேண்டும். அடிகளாரின் மொழியாக்கம் சில இடங்களில் சிறப்பான சந்தங்களிலும் மொழியிலும் அற்புதமான நாடக பாணியிலும் கவிதையாகி நிமிர்ந்தும் நிற்கிறது. அத்தகைய இடங்களை இலக்கிய மாணவர்கள் அனைவரும் இரசிக்கவே செய்வர். உதாரணமாக,

'இன்னலும் யானும் பிறந்தது ஒரு தினத்தில் அறிவாய்
இளஞ் சிங்கக் குருளைகள் யாம், யான் மூத்தோன் எனது
பின்வருவது இன்னல் எனப் பகை மன்னர் அறிவார்.
பேதுறல் பெண் அணங்கே யான் போய் வருதல் வேண்டும்' என்பது அதில் ஒன்று.

இத்தகைய மொழி பெயர்ப்பை நல்லதொரு கவிஞனால் தான் செய்ய முடியும். எம் மொழி மரபுக்கு உகந்தது போல மொழிபெயர்த்துள்ளார். மொழியும் மரபும் மட்டும் செய்யுளாக இல்லாமல் கவிதையாகி உள்ளது. அதுவே அவரின் சிறப்பு.

ஷேக்ஸ்பியரில் நாடகங்கள் பலவற்றைப் பலரும் எடுத்துக் காட்டுவர். அதில் ஒன்று As You Like It என்ற நாடகத்தில் வரும் பகுதி. அது பட்டினத்தடிகளாரின் 'ஒரு மடமாதும் ஒருவனுமாகி' என்ற பாடல் கருத்துடன் ஒத்துப் போகக் கூடிய ஒன்று. அதை அடிகளார் முழுவதாக மொழிபெயர்த்துள்ளார்.

All the world's a stage,
And all the men and women merely players;
என்ற இருவரிகளையும் அவர்,

'நானிலம் யாவுமோர் நாடக மேடையே
ஆண் பெண் அனைவரும் அதில் நடிப்பவர் தாம்' என்று

The sixth age shifts
Into the lean and slippered pantaloon,
With spectacles on nose and pouch on side;
His youthful hose, well saved, a world too wide
For his shrunk shank;
Turning again toward childish treble, pipes
And whistles in his sound. Last scene of all,
That ends this strange eventful history,
Is second childishness and mere oblivion,
Sans teeth, sans eyes, sans taste, sans everything.

என்ற இறுதி இரு சரணங்களை மேல்வருமாறு மொழியாக்கம் செய்திருக்கிறார். அவரின் மொழியாக்கத்தையும் ஷேக்ஸ்பியரின் பாடல்களையும் அருகருகே வைத்து வாசித்தால் அடிகளாரின் திறன் துலங்குவது தெரியும்.

'முதுமையுற உடல் தளர்ந்து முகம் சுருங்கி உருக்குலைந்து மூப்பின் தோற்றம்
இதுவெனக் கண்டு உளம் மெலிய இணை விழியில் படிக்கக்கண் இயைந்து நிற்ப
கதும் எனவே இருமல் வர காறள் அளர்ந்து தள்ளாடி கருத்து மாறி
குதலை மொழி சிறுவர் உரை குலவுகின்ற கிழப் பருவம் கூறின் ஆறே
பண் இயைய மென் மொழி சேர் பாலர் ஒக்கும் கிழப் பருவம் பயின்ற பின்னர்
கண்ணினைகள் நோக்கு ஒழிய பல் ஒழிய சுவை ஒழிய கருத்து நீங்க
உண்ணும் உணவு ஒழித்து அனைத்து மொழிந்து மறைந்து உயிர் வாழ்க்கை
ஒருவும் தோற்றம்
எண்ணும் இந்த நாடகத்தின் இறுதி என யாம் எடுத்து இயம்புவாமே'

மூலமொழியில் சொல்லப்பட்ட ஒன்றை இலக்கு மொழியிலும் படைப்பாக்குகிறார். மொழியாக்கம் சொல்லுக்குச் சொல் செய்ய வேண்டியதில்லை என்று சிலர் சொல்லலாம். அதில் உண்மையில்லாமல் இல்லை. ஆனால் சொல்லுக்குச் சொல் செய்ய முடியும் என்றால் ஏன் செய்யக் கூடாது? உயர்ந்த உன்னதமான ஒரு மொழி-பெயர்ப்பாளனால் அதைச் செய்ய இயலுமாக இருந்தால் செய்யட்டுமே. அது சிறந்தது தானே. அதில் என்ன நட்டம்? எம் மொழிக்கு இலாபம் தானே?

அடிகளாருக்கு கவிதை எழுதும் திறன் இயல்பாகவே இருந்துள்ளது. அவரின் சொந்தக் கவிதையான 'வெள்ளை நிற மல்லிகையோ? வேறெந்த மாமலரோ? வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ? வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல! உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது? என்ற கவிதை அதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

அடிகளாரின் மொழிபெயர்ப்புக் கோட்பாட்டை என்னால் சில இடங்களில் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. உதாரணமாக, Love Labour's Lost என்பதை காதல் கைமிக்க காவலன், King Lear என்பதை ஆகுலராஜன் கதை என்றும் Romeo and Juliet என்பதை இரமியன் சுசீலை சரிதை என்றும் The Tempest ஐ பெரும் புயல் சரிதை, Macbeth ஐ மகபதி சரிதை என்றும் Merchant of Venice ஐ வணிக தேய வர்த்தகன் சரிதை, The Winter's Tale ஐ கூதிர்க் காதை, Twelfth Night or What You Will ஐ கருதியது எய்திய காதலர் சரிதை என்றும் தலைப்புக் கொடுத்திருக்கிறார். அந்தளவுக்குப் போய் மரபார்ந்த பெயர்களைக் கொடுக்க வேண்டுமா? இருந்தும் இதுவும் ஒரு மொழிபெயர்ப்பாளரின் சுதந்திரம். ஆனால் வாசகரை இடர்ப்பட வைக்கக் கூடாது. பிற கலாசாரத்தை அறிதலும் அனுபவித்தலும் இலக்கிய மாணவரின் உரிமை. அதற்கு இடையூறாக மொழிபெயர்ப்பாளர் இருக்கக் கூடாது என்பது என் தாழ்மையான கருத்து.

மொழியாக்கம் மூலத்தையே விஞ்சி நிற்கிறது என்று சிலரின் மொழியாக்கங்களை வாசித்து சிலர் சொல்வார்கள். அது கொஞ்சம் மிகையான கூற்றுத்தான். ஏனென்றால், இரண்டு வெவ்வேறான மொழிகளுக்கு வெவ்வேறான உணர்திறன்கள்- sensibilities - உள்ளன. ஒவ்வொரு மொழியில் உள்ள சொல்லுக்கும் பின்னால் அதன் ஆழமான பண்பாடு இருக்கிறது. அதன் வெளிப்பாடே அந்தச் சொற்கள். மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலான பண்பாடு எங்களின் மொழியிலும் அதன் சொற்களிலும் ஊறிச் செறிந்திருக்கும். அதுவே எங்கள் பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படும். எம் மொழி எம்முடைய தனிச் சொத்து. அவன் மொழி அவன் சொத்து. இரண்டையும் நேர் நேர் பண்டமாற்றுச் செய்ய முடியாது.

தமிழ்ப் புலமையும் இலக்கிய உள்ளமும் கொண்ட அடிகளார் சேக்ஸ்பியரை மொழிபெயர்க்கவும் செய்தார். அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆங்கிலம் கற்று ஷேக்ஸ்பியரைக் கற்ற அவர், அப்படிச் செய்யாமல் விட்டிருந்தால் தான் ஆச்சரியப்பட்டிருப்பேன். என் ஆதங்கம் அவர் எண்ணியது போல சேக்ஸ்பியரின் நாடகங்களை முழுவதாகச் செய்ய இறைவன் அவரைப் பணிக்கவில்லை என்பதே. அவரை இறைவன் படைத்தது இறைப்பணி யாக சமூகப் பணி செய்வதற்காகவே எனக் கருதி அமையலாம்.

அடிகளாரின் மொழியாக்கம் பலவிடங்களில் பல உச்சங்களைத் தொட்டிருக்கின்றது. சேக்ஸ்பியர்கூட எல்லா இடங்களிலும் கவித்துவமான வரிகளை எழுதி விடவில்லை. பல இடங்களில் நாடக மொழியிலிருந்து விலகி தனித் தனிக் கவிதைகள் போல சிறந்து நிற்கும் இடங்கள் வருகின்றன. அதுவே சேக்ஸ்பியர் தலைசிறந்த கவிஞனாக அவரைக் காட்டி நின்றவை. அப்படியே அடிகளாரும் திகழ்கிறார்.

சுவாமி விபுலாநந்தர் சிந்தனைத் துளிகள் சில.....

பொறாமையினாலும், பிரிவினையினாலும் ஒருபோதும் இன்பம் ஏற்படாது. நாட்டிலுள்ள நாமனைவரும் ஒன்றுகலந்து வாழ்வோமாயின் பெறுவலியும், உறுதியும் படைத்துப் பிறர்மதிக்க வாழ்வோம். பிரிவினை செய்துகொள்வோமாயின் பிறரால் இகழ்ந்து ஒதுக்கப்படுவோம்.

ஒருவன் தான் செய்த குற்றத்திற்காக வருந்துகிறானென்று வைத்துக்கொள்வோம்.
அவன் எப்பொழுது தான் செய்தது குற்றமென்றுணர்ந்தானோ, எப்பொழுது இனி அக்குற்றத்தைச் செய்வதில்லையென உறுதிகொண்டானோ, அப்பொழுதே அக்குற்றத்தைத் தன்னிலிருந்து வெட்டி எறிந்தவனாகிறான்.

பன்முகப் பரிமாணங்களில் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர்

அருள்சகோதரி முனைவர் மார்கரெட் பாஸ்டின்
தமிழ்நாடு, இந்தியா



"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ?
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

நாளும் இறைவனுக்கு மலர்களைச் சூட்டி வழிபடுகின்றோம். மணம் மிகுந்தவை, அழகானவை, பல வண்ணம் கொண்டு நிகழ்பவை என்று இப்படி எத்தனை மலர்கள் இருந்தபோதும் இறைவன் விரும்புவது நமது இதயத் தாமரையைத்தான் என்பதை விபுலாநந்த அடிகளார் நன்கு உணர்ந்திருந்ததால்தான் இத்தகைய ஒரு பாடலைத் தாமே இயற்றியளித்திருக்கின்றார். இராமகிருஷ்ண மிசன் மட்டக்களப்புக்கிளை நிர்வாகம் துறவிகள் அவரின் திருவுடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறையின் மீது இப்பாடல் வரிகளையே பொறித்திருக்கின்றது.

பன்மொழிப் புலமை

1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் நாள் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காரைதீவில் திருவாளர் சாமித்தம்பியாருக்கும் திருமதி கண்ணம்மைக்கும் மகவாகத் தோன்றினார். இவரின் இயற்பெயர் மயில்வாகனன் என்பதாகும். 10 வயதுவரை தமிழ்ப் பாடசாலையில் கல்வி கற்ற இவர், வடமொழியையும் ஆங்கிலத்தையும் வீட்டிலேயே கற்றார். 12 வயதிற்குள் பலரும் வியக்கும் வண்ணம் யாப்பிலக்கணம் கற்றுத் தேர்ந்து செய்யுட்களை இயற்றினார். சிறுவயதிலேயே மொழிப் புலமையில் விபுலாநந்தர் சிறந்து விளங்கியமைக்கு இது சான்றாகின்றது. தமிழ்மொழி மட்டுமல்லாது இலத்தின், கிரேக்கம், ஆங்கிலம், அரபு, சமஸ்கிருதம், சிங்களம், பாலி, பெங்காலி ஆகிய பல மொழிகளை அறிந்த பன்மொழி வித்தகராகத் திகழ்ந்தார். 1901இல் தான் கல்முனையில் உள்ள மெதடிஸ்ட் மிஷன்லீஸ் பாடசாலையில் கல்வி பயிலத் தொடங்கினார். பின்னர் கொழும்பில் உள்ள அரசினர் ஆசிரியர் கல்லூரியில் பயிற்சி பெற்றுத் தேர்ந்தார். 1916இல் மதுரை தமிழச் சங்கப் பண்டிதர் பரீட்சையில் தேர்ச்சியடைந்து இலங்கையின் முதல் பண்டிதர் என்ற பெருமையைப் பெற்றார்.

ஆன்மீகப்பணி:

1922இல் மயில்வாகனாரின் மிக உற்ற நண்பர் திரு. திருவிளங்கம் அவர்கள் மறைந்த நிகழ்ச்சியானது அவரின் வாழ்க்கையில் துறவற நோக்கை ஏற்படுத்தியது. துறவியாக வேண்டும் என்னும் நோக்குடன் சென்னை இராமகிருஷ்ண மடத்தை அணுகி அதன் நெறி முறைகளை மேற்கொண்டார். அச்சயமம் **'பிரபோத சைதன்யர்'** என்ற பிரம்மசாரியப் பெயர் அம்மடத்தினரால் அவருக்கு வழங்கப்பட்டது. 1924இல் சுவாமி சிவானந்தரிடம் ஞானோபதேசமும் சிவதீட்சையும் பெற்று, சுவாமி விபுலாநந்தர் என்ற திருப்பெயரையும் பெற்றார். விபுலாநந்தரின் துறவு வாழ்க்கை மற்ற பணிகளுக்குத் தடையாக இல்லாமல் அவற்றைத் திறம்பட ஆற்றுவதற்கு உறுதுணையாகவே இருந்தது. கல்வி கற்பித்தலோடு சைவ சமயக் கருத்துக்களையும் மனித நேயத்தையும் உடன் போதித்து வந்தார்.

இந்து இராம கிருஷ்ண மடத்துத்துறவி என்ற போதும், சர்வசமய நோக்குடைய சுவாமி விபுலாநந்தர் மற்ற சமயங்களைச் சார்ந்த மக்களை மதிக்கவும், அவர்களிடையே ஒரு கலாச்சார ஒற்றுமையை உருவாக்குதலிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், புத்தம் தழுவியர்கள் என அனைவரையும் அன்புடன் நேசித்து நல் ஒற்றுமையுடன் வாழ வழிவகுத்தார். இலங்கையைச் சேர்ந்த ஏ.எம். நஹியா அவர்கள் '**முஸ்லீம் நேசம் விபுலாநந்தர்**' என்னும் தலைப்பில் ஓர் கட்டுரையை அளித்திருப்பது இதற்கொரு நற்சான்றாகும்.

1. இயல்தமிழ் :

'உலக புராணம்', 'சோழமண்டலத் தமிழும் ஈழமண்டலத் தமிழும்', 'அன்பின் ஐந்திணையுரை', 'இயலிசை நாடகம்', 'தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப் பெருக்கு வட நாட்டில் பரவிய முறை','பொருள் நூற்சிறப்பு' போன்ற பல அரிய படைப்புகளை எழுதியளித்ததுடன், பிற மொழிகளிலுள்ள சிறந்த கவிதைகளைத் தமிழிலே மொழி பெயர்த்தும் தந்துள்ளார். அவற்றில் ஷேக்ஸ்பியர், மில்டன், வேர்ட்ஸ்வர்த் கீட்ஸ், ஷெல்லி, டென்னிசன் ஆகியோரின் படைப்புகள் குறிப்பிடத்தக்கவை ஆகும். இவருடைய படைப்புகளில் ஒப்பியல் போக்கு அதிகம் காணப்படுவதற்குக் காரணம் இவரது பன்மொழி அறிவும் பல்துறை அறிவும் எனலாம். ஒப்புமைப் படுத்திக்காண்பதில் பயிற்சி பெறாமலே ஓர் தனிப் புலமை விபுலாநந்தரிடம் மேலோங்கி நின்றது.

2. நாடக இலக்கணம்:

விபுலாநந்த அடிகளார் இயற்றிய '**மதங்க சூளாமணி**' என்னும் நாடகத் தமிழ்நூல் 1926இல் மதுரைத் தமிழச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டது. நாடகத்தைப் பற்றிய சரியான புரிதலை தரக்கூடிய நூலாக அந்நூல் அமைந்துள்ளது. பழந்தழிழ் நாடக இலக்கண நூல்களை இழந்துவிட்ட நிலையில் பன்மொழி வித்தகரான அடிகளார், சமஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் உள்ள நாடக இலக்கணங்களை ஒப்பு நோக்கி இந்நூலைப் படைத்தளித்துள்ளது நாடகத்தமிழுக்கு ஆற்றியுள்ள அரும்பெரும் தொண்டாகும். அக்காலக் கட்டத்தில் அதற்கு இணையான நூல் இல்லை என்னுமளவுக்கு இந்நூலின் தரம் உயர்ந்திருந்தது. விபுலாநந்தரின் சமகாலத்தவரான பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை மக்கள் மத்தியில் அரங்க வழி அறிமுகம் செய்து வந்தார். தமிழ் நாடகத்திற்கு ஓர் இலக்கண நூல் இல்லையே என்ற நிலையை மாற்றியமைத்த பெருமை விபுலாநந்த அடிகளாரையே சாரும்.

3. இசைப்புலமை :

1934களிலிருந்து தமிழ் இசை பற்றிய கட்டுரைகளை விபுலாநந்தர் எழுதத் தொடங்கினார். இதன் முழு வெளிப்பாடுதான் 1947இல் வெளியான '**யாழ்நூல் என்னும் இசைத்தமிழ்**' நூலாகும். தமிழ் நாட்டில் 1941ஆம் ஆண்டு தான் தமிழிசை இயக்கம் தொடங்கியது.

இதன் வெளிப்பாடாக 1943இல் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் தமிழிசைச் சங்கம் நிறுவப்பட்டது. 1947 ஜூன் 5ஆம், 6ஆம் நாள் தஞ்சை மாவட்டத்தை சேர்ந்த திருக்கொள்ளம்புதூர் என்னும் ஊரில் இசை உலகமே புகழும் வண்ணம் யாழ் நூல் அரங்கேறியது. இந்நூல் அடிகளாரின் 14 ஆண்டுக்கால ஆராய்ச்சியின் விளைவாக எழுந்ததாகும். திருப்பாம்புரம் டி.என்.சாமிநாதப்பிள்ளை, கரந்தை கவியரசு வேங்கடாசலப்பிள்ளை, அவிநாசிலிங்கம் செட்டியார், பேராசிரியர் ரா.பி.சேதுபிள்ளை ஆகியோர் பாராட்டுரை வழங்க யாழ்நூல் வெளியிடப்பட்டது. அந்நூல் வெளியீட்டு விழாவில்தான் பண்ணாராய்ச்சி வித்தகர் ப.சுந்தரேசனார் சுவாமி விபுலா நந்தரைச் சந்தித்து அவருடைய மாணாக்கர் ஆனார். பாலைத்திரிபியல் வரை அடிகளாரிடம் நேரே பாடம் கேட்டுத் தெளிந்த மாணவர் சுந்தரேசனார் மட்டுமேயாவார்.

இசைக் கருவிகளிலேயே யாழ் என்ற நரம்பிசைக் கருவிதான் பல ஆய்வாளர்களைக் கவர்ந்துள்ளது. இதற்குக் காரணம் உலகின் எப்பகுதியிலும் இக்கருவி காணப்படுவதோடு மட்டுமல்லாது இசை நிகழ்வுகளில் இக்கருவி ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதும் ஒரு முக்கியக்காரணம் ஆகும். அத்துடன் மிகப் பழமையான இசைக்கருவியும் இதுவேயாகும். இதன் பழமையான தோற்றம், சுமேரியர் காலத்து அலங்காரப் பொருட்களில் காணக் கிடைக்கின்றது. இதன் காலம் கி.மு. 3000 எனலாம்.எகிப்தியர் பயன்படுத்திய ஹார்ப் என்னும் நரம்பிசைக் கருவி சுமார் கி.மு. 2600இல் பிரமிடுகள் எழுந்த காலத்தில் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இதே காலக்கட்டத்தில் நிகழ்ந்த சிந்து நதி தீர அகழ்வாராய்ச்சியுள் ஹார்ப் இருந்ததற்கான சான்று எதுவும் இல்லை என்று கூறியுள்ளபோதும் சாக்ஸ் என்ற ஆய்வாளர் சிந்து சமவெளி நாகரீகத்தில் இப்படிப்பட்டதொரு கருவி இருந்ததற்கான சான்றுகள் Ideographic Script எனப்படும் எழுத்துக்களில் காணக்கிடைக்கின்றது என்று உறுதிப்படுத்துகின்றார்.

கி.பி. 2ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 8ஆம் நூற்றாண்டு வரையில் யாழ் குறித்த ஏராளமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஆப்கானிஸ்தான், மதுரா, சாஞ்சி, பார்ஹீட், புத்தகயா, அஜந்தா, எல்லோரா போன்ற இடங்களின் கல்வெட்டுகளில் இந்த நரம்பிசைக் கருவியைக் காண முடிகின்றது. சுடுமண் சிற்பங்களிலும், குப்தர்கால நாணயங்களிலும் யாழுருவம் பொறிக்கபட்டுள்ளது. பொதுவாக யாழ் இரண்டு வடிவமைப்புகளுடன் காணப்படுகின்றது. ஒன்று வில்வடிவிலான யாழ்(Arched). மற்றொன்று சட்டம் போன்றது (Angled). இந்திய யாழ், வில்லை ஒத்த வடிவமுடையது. சுமேரியா மற்றும் எகிப்திய யாழ்களும் இதை ஒத்தனவே காலத்தால் முந்தியதும் இக்கருவியேயாகும். தமிழ்நாட்டின் தென் பகுதிகளில் உள்ள சிற்பங்களில் இந்த யாழ்க்கருவியின் உருவம் காணப்படவில்லை. மாறாக யாழ் பற்றிய அனைத்துச் செய்திகளும் சங்க நூல்களில் ஆங்காங்கே விளக்கம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்நூலின் சிறப்பியல்புகள்

விபுலாநந்த அடிகளின் இசைப்பணிகளுள் இன்றளவும் பலராலும் போற்றப்பட்டு பல ஆய்வறிஞர்களுக்கு வழிகாட்டியாய், பற்றுக்கோடாய் திகழக்கூடிய யாழ்நூலில் பல அரிய செய்திகள் காணக் கிடைக்கின்றன. யாழ் பற்றிய தமது ஆய்வை 1936ஆம் ஆண்டிலேயே தொடங்கிவிட்டதாக அடிகளாரே குறிப்பிட்டுள்ளார். இசையின் மீது இவருக்கிருந்த ஆர்வத்தில், தாம் ஆராயந்தறிந்த யாழ் வடிவங்களை தாமே உருவாக்கி அளித்த பெருமையும் இவருக்கு உண்டு. யாழுறுப்பியலுள் வில்யாழ், பேரியாழ், மகரயாழ், சீறியாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் ஆகிய யாழ்களைப் பற்றியும் அவற்றின் உருவ அமைப்பு, அதன் பகுதிகள் ஆகியவற்றை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற சங்கநூல் மேற்கோள்களோடு விளக்கிச் சொல்லுகின்றார்.

பழந்தமிழ் நூல்களில் பல்வேறு யாழ்ப்பெயர்கள் காணப்படுகின்றன. கடைச் சங்க நூலான **கல்லாடம்** என்ற இசைத்தமிழ் நூல், நாரதப் பேரியாழ், தும்புருயாழ், கீசக யாழ், மருத்துவ யாழ் என்னும் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளது. **பஞ்சமரபு** என்னும் நூல் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் போன்ற யாழ்ப் பெயர்களை குறிப்பிட்டு இன்னும் உளவே பிற என்றும் உறுதி செய்கின்றது. பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப் படையுள் **வில்யாழ்** பற்றிய குறிப்பும், மற்ற நூல்களில் **சீறியாழ்** பற்றிய குறிப்பும் காணக்கிடைக்கின்றன எனக்கூறி இதனை கற்பனை நயத்துடன் விபுலாநந்தர் இவ்வாறு கூறுகின்றார்.

இத்தகைய சிறப்புமிக்க யாழ்க்கருவியானது, சரித்திர கால எல்லைக்கு எட்டாத காலத்திலே, வில்யாழ் எனப் பெயரிய குழவியாய் உதித்து, மழலைச் சொற்பேசி, இடையர் இடைச்சியரை மகிழ்வித்துச் சீறியாழ் என்னும் பேதைப்பருவச் சிறுமியாகிப் பாணனொடும் பாடினியொடும் நாடெங்கும் திரிந்து ஏழைகளும் இதயம் களிப்பெய்த இன்சொல் கூறிப் பின்பு பேரியாழ் என்னும் பெயரொடு பெதும்மைப் பருவம் எய்திப் பெரும்பாணரொடு சென்று, குறுநில மன்னரும், முடிமன்னரும், தமிழ்ப்புலவரும், கொடை வள்ளல்களும் கேட்டு வியப்பெய்தும் வண்ணம் நயம்பட உரை பகர்ந்து, அதன்பின் மங்கைப் பருவம் எய்தி அப்பருவத்திற்கு ஏற்ப, புதிய ஆடையும் அணிகலனும் பூண்டு நாடக அரங்கத்திலே திறமைகாட்டி, மடந்தைப் பருவம் வந்து எய்தலும் திருநீலக்கண்ட பாணரொடும் மதங்க சூளாமணி யாரோடும் அம்மையப்பர் உறைகின்ற திருக்கோயில்கள் பலவற்றை வலம் வந்து தெய்வ இசையினாலே அன்பர் உள்ளத்தினை உருக்கி, முத்தமிழ் விரகராற் பாராட்டப்பட்டு, அரிவைப் பருவம் வந்து எய்துதலும், அரசிளங் குமரி களுக்கு இன்னுயிர் பாங்கியாகி, அவர்க்கேற்ற தலைவரை அவர்பாற் சேர்த்தி சீரும் சிறப்பும் எய்தி நின்ற யாழ் என்னும் மென்மொழி நங்கை இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயினள் என்று தமது ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றார்.

"சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின்
வகை தெரிவான்கட்டே உலகு"

இந்த ஐந்தினுள் ஒளியும் ஓசையும் சிறப்புடையன. காரணம் உற்றுணர்ச்சி மரம் செடி கொடிகளுக்கும் உண்டு. சுவையும் நாற்றமும் சிற்றுயிர்களுக்கும் அமைந்திருப்பன. இதனை அடுத்து ஒளி உணர்ச்சி தோன்றி அதன்பின் சிறப்புடைய உயிர்களுக்கே ஓசை உணர்ச்சி தோன்றுகின்றது. ஆகவேதான் ஒளியும் ஓசையும் சிறப்புடையன என்பதை யாழ்நூலின் இசை நரம்பியலுள் உணர்த்துகின்றார் அடிகளார்.

மனிதன் ஓசையின் வழியாகத்தான் எழுத்தறிவும், இசையறிவும், மற்ற பிற அறிவும் பெற்று சிறப்புடைய வன் ஆகின்றான். ஒளி மற்றும் ஓசைகளின் இலக்கணங்களையும் அவை தம்மைச் செயல்படுத்தும் முறை-களையும் பூதநூல் தெளிவாகக் கூறும் எனக்கூறி ஒலி உண்டாகும் விதம், ஊடகங்களின் வழி ஒலி பரவும் முறை, ஒலி அளவு. ஒலி அழுத்தம், ஒலித்தன்மை போன்றவற்றை விளக்கியுள்ளார். யாழ்நூலில் இந்த இயலினுள் பல ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொற்களை கையாண்டிருப்பது போற்றுதற்கு உரியது. உதாரணம் Tuning Fork என்பதை இசைக்கோல் என்றும், Point என்பதை இட்டிடை என்றும், Overtones என்பதை வழி ஸ்வரங்கள் என்றும் தமிழ்ப்படுத்தியுள்ளார். இவை போன்ற 21 ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ப்பெயர்கள் யாழ்நூலில் தரப்பட்டுள்ளன.

பாலை என்பதற்கான பொருள் விளக்கத்தை விபுலாநந்தர் மிகத் தெளிவாக வரையறுக்கின்றார். இக்காலத்து வழக்குச் சொற்களால் கூறின், குறித்த ஓர் இராகத்திற்கு ஆரோகணத்திலும் அவரோகணத்திலும் இன்ன ஸ்வரங்கள் வருவன என நிச்சயித்து நிறுத்துவது பாலை நிலை என்கின்றார். அவ்வாறு நிச்சயித்த ஸ்வரங்களிலே, கிரகம், அம்சம், நியாசம், பகுத்துவம், அல்பத்துவம், மந்தோச்சமம் அறிந்து இசைப்புலவன் வைத்த தாளத்திற்கு இயைய இராகத்தை ஆலாபனை செய்தல் பண்ணு நிலையாகும் என்பதனை பண்ணியலுள் விவரிக்கின்றார். தமிழர் தம் அடிப்படைப் **பாலையாகிய பாலையாழுக்கு இணையான** இன்றைய இராகம் **அரிகாம்போதி என்பதனை** சிலப்பதிகார வழி நின்று நிலை நிறுத்தியவர் அடிகளாரேயாவார். நாற்பெரும் பண்கள் தொடங்கி 103-பண்கள் வரையிலான விளக்கம் யாழ்நூலில் இடம் பெற்றுள்ளது.

பல்லவ மன்னனாகிய மகேந்திரவர்மன் காலத்தில் எழுதப்பட்ட குழுமியான் மலைக் கல்வெட்டைப் பற்றிய ஓர் ஆய்வறிக்கையையும் அடிகள் வழங்கியுள்ளார்.

இக்கல்வெட்டுக் குறித்த முதல் ஆராய்ச்சியாளர் விபுலாநந்த அடிகளே என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இவரைத் தொடர்ந்து திரு.ஹரிஹரன், கௌரி குப்புசாமி, லண்டனைச் சார்ந்த திரு.ரிச்சர்ட் விட்டஸ் போன்றோர், இவர் வழியில் நின்று விரிவான ஆய்வை மேற்கொண்டுள்ளதும் இவண் குறிப்பிடத்தக்கது.

அந்தக் காலக் கட்டத்திலேயே அடிகளார் தேவாரப் பாடல்களின் பெரும் பகுதிக்கு யாப்பமைதியைப் பிரித்துக் காட்டியுள்ளார். அதுவரை யாரும் செய்யாத ஒரு சிறப்பான தனி முயற்சியை அடிகள் செய்துள்ளது இசை உலகிற்கு ஆற்றிய ஓர் அரிய தொண்டு எனலாம். பண்ணாராய்ச்சிக் கூட்டத்திலும் இதற்காக அறிஞர் பலரின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். அடிகளார் தரும் விளக்கத்தின்படி கட்டளை என்பது யாப்பே எனவறிகின்றோம். **300-ஆண்டுகளாக வழக்கற்றுப்போன வேங்கடமகி கையாண்ட** வீணைக் கருவியை மீண்டும் உருவகப்படுத்திக் காட்டியுள்ளது யாழ்நூல். ஆயிர நரம்பு யாழின் கணக்கினைக் கண்டறிந்து அந்த யாழினை மீண்டும் அமைப்பதற்கு வேண்டிய குறிப்புக்களையும் தந்துள்ளது.

அடிகளார் தமது 'உலகப்புராணம்' என்னும் கட்டுரையுள்,"தமிழரது நாகரீகம்" மிக மிகப் பழமை வாய்ந்தது. உலக சரித்திரத்திலே தமிழரே முதன் முதல் நாகரீக வாழ்க்கை எய்திய சாதியினர் என்பதற்கும், கடல் கடந்து சென்று நமது நாகரீகத்தைப் பலப்பல நாடுகளிலும் பரப்பினர் என்பதற்கும், வாணிகத் துறையிலும், கணிதநூல், வானநூல் முதலிய நூற்துறைகளிலும் வல்லுநராக இருந்தனர் என்பதற்கும் பல சான்றுகள் கிடைத்துள்ளன. இவற்றைச் சுருக்கமாக ஆராய்ந்து கூறுதலே உலக புராணம் என்னும் இப்பொருளுரையின் நோக்கம் என்று தமது கருத்தைக் குறிப்பிட்டுப் பழந்தமிழருடைய நாகரீக வளர்ச்சி குறித்த பல அறிஞர் தம் கருத்துக்களை ஒன்றிணைத்துத் தருகின்றார். அவ்விடத்து, தமிழ்நாட்டில் கடற்கோள் ஏற்படுமுன்னர் இருந்த குமரி முனைக்கும், பஃறுளி ஆற்றுக்கும் இடையில் 14,000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களே கடல்கோளின் பின் கடல் கடந்து சென்று மத்திய தரைக்கடல் நாகரிகங்களாகத் தோற்றுவித்திருக்கலாம் என்பதும், உரோமரும், யவனரும் வருமுன்னர் மத்திய தரைக்கடல் நாடுகளில் வாழ்ந்த பழங்குடியினர் ஏற்கனவே அங்கு சென்ற நம் தமிழ்க் குலத்தினரே என்பதும் விபுலாநந்தர் தரும் விளக்கம் ஆகும். இதனடிப்படையில், பூமிப்பந்தின் பாதி நாடுகளில் தமிழர் தம் நாகரீகமும் கலைகளும் பரவி வளர்ந்து வந்துள்ளதை ஆராய்ச்சிகள் வழி அறிகின்றோம். எனின் கடற்கோளோ, நெருப்போ எதுவும் தமிழர் தம் நாகரீகத்தை அழித்துவிட இயலாது எனும் செய்தி மனதிற்கு ஒரு புதியத் தெம்பை அளிப்பதாக உள்ளது. முடிவாக யாழ்நூல் என்னும் இசைத்தமிழ் நூல் பல துறைகளில் சென்று வழக்கொழிந்துபோன இசை நூல் இலக்கணத்தை திரட்டி திறம்பட வகுத்துரைத்துள்ளது எனலாம்.


கலைப்பணி:

பாரதியாரின் பாடல்களை ஆய்வு செய்த முதல் ஆய்வாளர் விபுலாநந்தரே. இசை பற்றிய கட்டுரைகள் எழுதிய தோடல்லாமல் இசை சொற்பொழிவுகளையும் நிகழத்தியுள்ளார். வங்கியம், சங்கீத பாரிஜாதம், நட்டப்பாடைப்பண்ணின் எட்டுக்கட்டளைகள், பாரிஜாத வீணை, நீரர மகளிரின் இன்னிசைப்பாடல், பண்ணும் திறனும், குழலும் யாழும், எண்ணும் இசையும் ஆகிய கட்டுரைகள் இசைத் தொடர்புடையன. இயல் இசை நாடகம் குறித்த இவரின் பரந்த அறிவைக் கண்ட இலங்கையைச் சார்ந்த கைலாசபதி அவர்கள் '**முத்தமிழ் முனிவர்**' விபுலாநந்தர் என்று அடிகளாரைப் போற்றுகின்றார்கள்.

சமுதாயப்பணி

கல்வி ஒரு மனிதனை சரியான வகையில் உருவாக்கும் என நன்கறிந்த காரணத்தினாலேயே ஏழை எளிய மக்கள் தங்கி படித்துப் பயன்பெறும் பள்ளிகளைத் தொடங்கி நடத்தி வந்தார் அடிகளார். ஒடுக்கப்பட்ட மக்களிடத்தும் மிகவும் அக்கறை கொண்டிருந்ததை சிதம்பரம் அண்ணாமலை பல்லைக்கழகத்தில் அவர் பணிபுரிந்த காலத்தில் நடந்த சம்பவங்களால் அறிய முடிகின்றது. சிதம்பரத்தை அடுத்திருந்த சேரிகளுக்குச் சென்று அங்கிருந்த குழந்தைகள் கல்வியறிவில் மேன்மை பெறும் வண்ணம் இரவுப் பள்ளிகளை அமைத்துக் கொடுத்தார். 1933ஆம் ஆண்டில் சிதம்பரம் தாலுகாவை சேர்ந்த திரு. வேட்களம் ஆதிதிராவிட மக்களின் சார்பாக வழங்கப்பட்ட பிரிவுரைச் சாசனத்தில் "**சண்டாளர்கள்**" என்று அழைக்கப்படும் எங்களை அழைத்துத் தங்கள் வீட்டில் உடனிருத்தி விருந்துண்ட காட்சியும், உவகையும் எங்கள் கண்களையும் மனதையும் விட்டு அகலுமோ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அடிகளாரின் மனிதாபிமானச் செயலுக்கு ஒரு முக்கியச் சான்று எனலாம். தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் கல்வியறிவை வழங்கினால் அது அவர்களின் கல்விக் கண்களைத் திறப்பதோடல்லாமல் வாழ்வின் தரத்தையும் உயர்த்தும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார் அடிக-ளார்.

விபுலாநந்தரை நன்கறிந்த, சிவானந்த வித்தியாலத்தில் நீண்ட காலம் அதிபராகப் பணியாற்றிய க.கணபதிபிள்ளை அவர்கள் அடிகளாரைப் பற்றி குறிப்பிடுகையில் "**இனக்காழ்ப்போ சமயக்காழ்ப்போ இவரிடம் சிறிதளவு கூட இருந்தது இல்லை**" என்பர். பலதுறை வித்தகராக, பன்மொழிப் புலமையாளராக, சமூகச் சீர்த்திருத்த ஆர்வலரான விபுலாநந்தர் நாடு சுதந்திரப் பேராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் தமிழ் மொழி மற்றும் தமிழர் தம் கலாச்சாரத்தில் அக்கறைக்காட்டி அதற்கென்றே தமது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட நல்லுள்ளம் கொண்டவராகத் திகழ்கின்றார். தமிழர் தம் தனித்தன்மைக்கு உரமூட்டிய இவரிடம் மொழிகாழ்ப்போ, இனக்காழ்ப்போ, சமயக்காழ்ப்போ எதுவுமே இல்லை என்பது இன்றைய இசை ஆய்வாளர்களுக்கும் இளைய சமுதாயத்தினருக்கும் முன்னுதாரணமாக அமைகின்றது. தமிழ் வளர்ச்சிக்கு, குறிப்பாக இசைத்தமிழுக்கு அவர் ஆற்றிய பணிகள் என்றென்றும் நினைந்து போற்றத்தக்கவை.





பல்துறைப் பேரறிஞர் சுவாமி விபுலாநந்தர் அவர்களும் அவரது தமிழ் ஆராய்ச்சியும்



கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை
B.ED Mathematics(1st class Hons); M.A; M.Sc.; Ed.D;Ph.D.
மட்டக்களப்பு, இலங்கை

கிழக்கு மாகாணத்தில் உள்ள காரைதீவில் 1892ஆம் ஆண்டு பிறந்து மயில்வாகனம் என்னும் பெயரில் ஆசிரியராகப் பணியாயாற்றி, இராமக்கிருஷ்ண சங்க துறவியான சுவாமி விபுலா நந்தர், . மதுரைத் தமிழ்ச் சங்க தமிழ்ப் பண்டிதர். லண்டன் பல்கலைக்கழகத்து விஞ்ஞானப்பட்டதாரி. இவற்றுக்கு மேலாக சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளில் விற்பன்னர். மேலும் சிங்களம், மலையாளம், அரேபிய மொழிகளையும் அறிந்திருந்தவர். இவ்வகையாகப் பல்துறைகளிலோ அல்லது ஒரு துறையிலோ அபூர்வ பாண்டித்தியம் பெற்றவர்களை "ஜீனியஸ்" (genius) என்று ஆங்கிலத்தில் குறிப்பிடு வதுண்டு. தமிழில் 'மேதை" என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது.

"There is no scientifically precise definition of genius, and indeed the question of whether the notion itself has any real meaning has long been a subject of debate. The term is used in various ways: to refer to a particular aspect of an individual, or the individual in their entirety; to a scholar in many subjects"

தத்துவஞானி பேட்றன் றசலின் (Bertrand Russell) கருத்துப்படி 'ஒரு தனிமனிதன் அபூர்வ பண்புகளையும் திறமைகளையும் பெற்று தான் இயங்கும் சமூகத்துக்கு பெறுமதி மிக்கவனாயின் அவன் மேதை' (genius).

(In the philosophy of Bertrand Russell, genius entails that an individual possesses unique qualities and talents that make the genius especially valuable to the society in which he or she operates).

மேதைத்தன்மையை லீவிஸ் ரேர்மன் (Lewis Terman) லேற்ரா ஹொலிங்உவேத் (Leta Hollingworth) என்னும் உளவியலாளர்கள் 'ஜீனியஸ்ஸை' நுண்மதி ஈவுடன் இணைக்கிறார்கள். அதாவது ரேர்மன் என்பவர் நு.ஈ., 140உக்கு மேல் அமைபவர் "ஜீனியஸ்" என்றும் ஹொலிங்உவேத் என்பவர் நு.ஈ., 180உக்கு மேல் அமைபவர் "ஜீனியஸ்" என்றும் கருதுகிறார்கள். எவ்வாறிருப்பினும் சுவாமி விபுலாநந்தர் அபூர்வ பல்துறை அறிவு பெற்றவர். செயல்களை தூர நோக்கோடு நோக்கியவர். இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளில் சரளமாகப் பேசவும், வாசிக்கவும், எழுதவும் திறமை பெற்றிருந்தவர். எடின்பறா (Edinburgh) பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் இருந்து இரண்டோ அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளில் திறமை பெற்றவர்கள் கூடிய மூளை விருத்தியும் நுண்ணறிவு விருத்தியும் அடைகிறார்கள் என்று தெரியவருகிறது.

"Researchers from the University of Edinburgh found people who spoke two or more languages had significantly better cognitive skills later in life".

"The findings indicate that those who spoke two or more languages had significantly better cognitive abilities compared to what would have been expected from their baseline test".

இவ்வாறான பின்னணியில், மிகத்திறமை பெற்ற சுவாமி விபுலாநந்தர் பண்டைய தமிழ் இலக்கியங்களில் எடுத்துரைக்கப்பெற்ற ஆழ்ந்த கருத்துக்களை, உண்மைகளை சமஸ்கிருதம், ஆங்கிலம், லத்தீன், கிரேகம் ஆகிய மொழிகள் கூறும் கருத்துக்களோடும் மேற்கே வளந்துள்ள விஞ்ஞானத்தோடும், கணிதத்தோடும் இணைத்து ஒப்பிட்டு ஆய்வு செய்ய முற்பட்டார். இவரது ஆய்வு முறை, தற்கால, விஞ்ஞான அடிப்படையில் அமைந்துள்ள ஆய்வு முறைக்கு ஏற்ப பல துறைகளில் பெற்ற அறிவின் பின்னியில் அமைந்திருந்தமையால் ஈடு இணையற்ற ஆய்வு முறையாகவும் உரிய சான்றுகளோடு பெறப்பட்ட முடிபாகவும் அமைந்துள்ளது.

பண்டைய தமிழ் நூல்களில் பழமை வாய்ந்தது தொல்காப்பியம். இதில் அமைந்துள்ள நாடகம் தொடர்பான கூற்றுக்கள் இவரைக் கவர்ந்தன. இவற்றோடு தண்டியலங்காரம், சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு முதலிய நூல்களில் கூறப்பெற்ற நாடகம் தொடர்பான கூற்றுக்களையும் சமஸ்கிருதத்திலும். ஆங்கிலத்திலும், கிரேக்க மொழியிலும் உள்ள கருத்துக்க்ளையும் ஆராய்ந்து மதங்கசூளாமணி என்னும் நூலை 1926ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்த நூலில் இவ்வாறு கூறுகிறார்.

"திருமலி யுலகினிற் புலவராற் பாடுதற்கமைந்த இருவகை வழக்கினை ஆராயப் புகுந்த இவ்வாராய்ச்சியி னை உறுப்பியல் எடுத்துக்காட்டியல், ஒழிபியல் என மூன்று இயல்களாக எடுத்துக் கொள்ளலாம்". இவ்வாறு ஆரம்பித்த அடிகளார் தமிழில் ஒன்பது சுவைகள் உண்டு என்றும் இவை வீரம், அச்சம், விழிப்பு, அற்புதம், இன்பம், அவலம், நகை, நடுநிலை, உருத்திரம் ஆகியவை யென்றும் குறிப்பிடுகிறார். இவற்றில் இன்பம், நகை, வியப்பு ஆகியன அகத்திணை சார்ந்தன என்றும் இவற்றை மேனாட்டார் "கொமெடி" (comedy) என்று அழைப்பதாகவும் குறிப்பிடுகிறார். இதற்குச் சான்றாக சேக்ஷ்பியரின் நாடகங்களை மொழிபெயர்த்தும் காட்டியுள்ளார். புறத்திணை யைச் சேர்ந்த வீரம் அச்சம், அற்புதம், அவலம், உருத்திரம் ஆகிய ஐந்து சுவைகளை விளங்கவைக்கும் நாடகங்களை "றஜடி" (tragedy) என்று மேனாட்டார் அழைப்பதாகவும் அதற்குச் சான்றாக றோமியோவும் ஜூலியற்றும் என்னும் சேக்ஷ்பியரின் நாடகத்தையும் தமிழில் மொழி பெயர்த்து வழங்கியுள்ளார். பண்டைய தமிழர் மத்தியில் பதினொரு ஆடல்கள் இருந்தனவென்றும் இவற்றின் இலக்கணம் சிலப்பதிகாரத்தில் கடலாடு காதையில் காணப்படுகிறது என்றும் கடலாடு காதை "மாயோன் பாணியும் வருணப் பூதர் நால்வகைப் பாணியும்" என்று செல்கிறது என்றும் தனது ஆய்வில் எடுத்தாண்டுள்ளார்.

நாடகத்தமிழ் ஆய்வை மதங்க சூளாமணி என்னும் நூலாக வெளியிட்டபின் இசைத்தமிழ் தொடர்பான ஆய்வில் நாட்டம் கொண்டார். இசைத்தமிழ் ஆராய்ச்சி பற்றிக் கூறும்போது "இசை எல்லா நாட்டிற்கும் பொதுவாதலின் மேனாட்டாரது இசைக்கிரமங்களைக்கூடப் பன்னிரு பாலையினுள்ளே காட்டலாம். மேனாட்டுப் பியானோ வாத்தியத்தை முறைப்படி இசை கூட்டினால் அதிலே பழந்தமிழ்ப் பண்களை வாசித்தல் கூடும்". தமிழர் மத்தியில் முழவு என்ற தோல் கருவியும் குழல் என்ற துளைக் கருவியும் யாழ் என்ற நரம்புக் கருவியும் இசைக்கப்பட்டன என்றும் இவை ஒருங்கிசைத்து இசைக்கப்படும்போது அது "ஆமந்திரிகை" என்று அழைக்கப் பட்டது என்றும் ஆய்வின் அடிப்படையில் எடுத்துக்காட்டியுள்ளார். "ஆமந்திரிகை" என்பது மேனாட்டார் கையாளும் ஒக்கெஸ்றாவைக் (Ochestra) குறிக்கும் என்றும் கூறியுள்ளார். மூன்று வகையான இசைக் கருவிகள் பற்றி ஆராய முற்பட்ட இவர் யாழ் பற்றிய ஆய்விலேயே முதலில் ஈடுபட்டார். இந்த ஆய்வு நூலுருப்பெற்று 1947ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் கரந்தைச் தமிழ் சங்கத்தில் ஆதரவில் அரங்கேற்றப்பெற்றது. விபுலாநந்தரின் யாழ் ஆராய்ச்சியில் கூறப்படும் ஆய்வு முடிபுகளை நோக்குவோம். மிகப் பழய காலத்திலே தோன்றிய யாழ் வில்யாழ் ஆகும். இது ஏழு நரம்புபளைக் கொண்டிருந்ததென பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. இதன்பின் இருபத்தொரு நரம்புகளைக் கொண்ட பேரியாழ் தோன்றியது. ஏழுநரம்புகள் ஒருதானமாதலால் பேரி யாழிலே மூன்று தானங்கள் உள்ளன. ஏழு சுரங்களின் கூட்டத்தை இக்காலத்தார் ஒரு ஸ்தாயி என்பர். மந்தரஸ்தாயி, மத்தியஸ்தாயி, தாரஸ்தாயி என இக்காலத்தில் வழங்குவனவற்றை பண்டைய தமிழர்கள் மெலிவுத்தானம், சமன்தானம், வலிவுத்தானம் என கையாண்டனர்.

பேரியாழின் ஒவ்வொருதானத்திலும் உள்ள நரம்புகளும் "க ம ப த நி ச ரி " என்னும் முறையாக நின்றன. பேரி யாழின் பின் சீறியாழ் தோன்றியது. இது செங்கோட்டு யாழ் எனவும் வழங்கியது. ஆசியமாலையின் கூற்றுப்படி இதற்கு ஒன்பது நரம்புகள் இருந்தன. வில்யாழும் பேரியாழும் சீறியாழும் சங்கத் தமிழ் நூல்களில் கூறப்படுவன. சிலப்பதிகார மணிமேகலை காலத்திலே அதாவது இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன் சகோடயாழ், மகரயாழ் என வேறு இரு யாழ்கள் இருந்ததாக அறிகிறோம். சிலப்பதிகார அரங்கேற்று காதையில் கூற்படுவது சகோடயாழ். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாண நாயனார் கையில் இருந்தது சகோட யாழ். சகோட யாழின் நரம்புகள் பதினான்கு. மகர யாழின் நரப்புகள் பத்தொன்பது அல்லது பதினேழு.

ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் களிகூருகின்ற இன்ப விளையாடலினுள்ளே உபயோகிக்கப்படு வதாதலின் மகரயாழ் கண்ணுக்கினிய அழகிய தோற்றத்தினை உடையதாய் இருந்தது. சிலப்பதிகார கானல்வரிப் பாடலிலே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

சித்திரப் படத்துட்புக்கு செழுங்கோட்டின் மலர்புனைந்து
மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்திப்
பத்தருங்கோடும் ஆணியும் நரம்பும் என்று
இத்திறத்துக் குற்ற நீங்கிய யாழ்.

அதாவது மகர யாழ் மணப்பெண் போல் அழகாய் அமைந்திருந்தது என்று அறியக்கிடக்கின்றது. உதயண காவியத்தினுள்ளே உதயணன் கையிலே கோடபதி என்னும் யாழ் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்த இசையின் உதவியினாலே உதயணன் யானையை வசப்படுத்தினான் என்றும் கூறப்படுகிறது. அதாவது பண்டைய தமிழ் மக்களின் இசைத்திறன் மனிதர்களை மட்டுமல்லாது மிருகங்களையும் உருகவைத்தது என்னும் உண்மையை இவரது ஆய்வு எடுத்துக்காட்டியுள்ளது. தற்கால விஞ்ஞானத்தில் பௌதிகவியலில் ஒலி பற்றிய பிரிவு உண்டு. நரம்புகள் எழுப்பும் ஓசை எவ்வாறு இழுவிசைக்கு ஏற்றவாறு வேறுபடுகின்றுது என்று கூறப்பெற்றுள்ளது. இந்த தற்கால விஞ்ஞான, கணித கருத்துக்களை பண்டைய தமிழ் இலக்கியங்களில் காணப்படுவதை எடுத்துக்காட்டிய விபுலாநந்தர் பண்டைய தமிழர் கண்ட ஆயிரம் நரம்புள்ள யாழ்க்கருவியையும் அமைத்து அதை இசை வல்லுநரால் இசைத்துக்காட்டவும் செய்தார்.

விபுலாநந்தரின் தமிழ் ஆய்வைத் தொகுத்து நேக்கினால், ஐயாயிரம் ஆண்டு தொடக்கம் இற்றை வரையிலான தமிழ் மக்களின் நாடகத்திறனையும் இசைத் திறனையும் தற்கால விஞ்ஞாத்திலும் கணிதத்திலும ஆங்கிலத்திலும் சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம் முதலிய மொழிகளிலும் உள்ள உயரிய உண்மைகையையும் இணைத்து ஏற்ற எடுத்துக் காட்டுகளோடு தொகுத்தளித்த ஒப்பரிய ஆய்வுதான் விபுலாநந்தரின் தமிழ் ஆய்வு என்பது புலப்படுகிறது. இந்த ஆய்வுகளுக்கு அடிப்படையாய் உறுதுணையாய் அமைந்துள்ளன அவரது ஆழ்ந்த பரந்த தமிழ் அறிவு, ஆங்கில அறிவு, விஞ்ஞான, கணித அறிவு பன்மொழி அறிவு என்று கூறலாம். இவ்வாறு பிரமிக்கத்தக்க பல்துறை அறிவுபெற்ற சுவாமி அவர்கள் சமூகத்தின் நலனுக்காகவும் பெருமைக்காகவும் வாழ்ந்து தமது ஆராய்ச்சிச் செல்வங்களை எமக்கு விட்டுச் சென்றுள்ளார்.

உசாத்துணை:

மதங்க சூளாமணி - சுவாமி விபுலாநந்தர் (1926) - மதுரைத் தமிழ்ச் சங்கம்
யாழ்நூல் - சுவாமி விபுலாநந்தர் (1947) - கரந்தை தமிழ்ச் சங்கம்
சுவாமி விபுலாந்தர் நூற்றாண்டு நினைவு மலர் (1992) - சா.இ.கமலநாதன் (தொகுப்பு ஆசிரியர்)
மட்டக்களப்பு சுவாமி விபுலாந்தர் நூற்றாண்டு நினைவு மலர் குழு.
B.B.C. News
WWW. Internet : Wikipedia free encyclopedia

சுவாமி விபுலாநந்தரின் சிவானந்த வித்தியாலயம் கட்டிக்காத்த இன ஐக்கியம்

ஏ.எம். நஹியா, கொழும்பு, இலங்கை
B.A.(Cey.), P.G.D.E. (University of Jaffna),
M.Phil.in Ed. (University of Jaffna), C.G.Mgt.(SLIDA)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மத்திய கல்லூரிகள், கொழும்பு வெஸ்லிக் கல்லூரி, கல்முனை லீஸ் ஹை ஸ்கூல், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா, கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயம், கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி என்பன 20ஆம் நூற்றாண்டில் இன ஐக்கியத்தின் களமாக விளங்கிய பாடசாலைகள். விபுலாநந்தரின் சிவானந்தாக் கல்லூரி இவற்றுள் முக்கியமானதாக வரலாற்றில் பதிவாகியிருக்கிறது. பல்லின மாணவரும், இன, மத, குல, பிரதேச, பொருளாதார பேதங்களற ஒன்றுகூடி, அருகமர்ந்து கற்று மேன்மையுற்றனர். விபுலாநந்தர் ஏற்படுத்தி வைத்த அவ்வருமந்த சூழல் பல கல்விமான்களை, அறிஞர்களை, சமூகத் தலைவர்களை முஸ்லிம் சமூகத்தில் ஏற்படுத்தி பலமான மத்தியதர வர்க்கம் ஒன்றையும் முஸ்லிம் சமூகத்தில் தோற்றுவித்தது. சகல இனங்களினதும் சமய, கலாசார வாடை அக்கல்லூரியில் வீசியது. அதன் விளைவை முஸ்லிம் சமூகம் இன்று அனுபவிக்கிறது.

பிரித்தானியர் காலத்தில் எற்பட்ட மதமாற்ற அலையிலிருந்து சுதேசிகளையும், அவர்தம் மதம், பண்பாடுகளையும் காப்பாற்றிய பெருமை இக்கல்லூரிக்குண்டு. கல்லடி உப்போடைப் பிரதேசமே சிவானந்த வித்தியாலயத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான இடம் என்ற முடிவுக்கு அடிகளார் வந்தமைக்கான காரணத்தை அறிவது அவரின் உள்ளத்தைப் புரிந்து கொள்வதற்கு ஈடாகும். அடிகளாரின் காரைதீவு மண்ணில் பிறந்து, அவர் தாபித்த சிவானந்த வித்தியாலயத்தில் நீண்ட காலம் அதிபராகப் பணிபுரிந்த கல்விமான் க.கணபதிப்பிள்ளை அவர்கள், தமது 'விபுலாநந்தர் வாழ்க்கை வரலாறு-அவரும் அவரின் சாதனைகளும்' (*Vipulananda - A Biography-The Man and His Achievements*) என்ற நூலின் ஓரிடத்தில்,

> "காத்தான்குடியிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் கல்லடி உப்போடையில் சிவானந்தாவை விபுலாநந்தர் தாபிக்கக் கருதியதன் நோக்கம் மட்டக்களப்பிலும், விந்தனைப்பற்றின் ஊவாக் கிராமங்களிலும் வாழ்ந்த முஸ்லிம்கள், தமிழர், சிங்களவர் என்ற மூவினங்களினதும் கல்வி, கலாசாரத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்கே" (கணபதிப்பிள்ளை, 1991:182)

என்றார். 'மேற்கு ஒரு மறுமதிப்பீடு' (*The West Re-appraised*) என்ற தனது நூலில் அஸீஸ்ீம் விபுலாநந்தரின் இந்த உணர்வின் வெளிப்பாட்டை,

> "முஸ்லிம் மாணவரின் ஆத்மீக வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு வண்ணார்பண்ணை வித்தியாலயத்திலும் மட்டக்களப்பு சிவானந்தாவிலும் மௌலவியினால் இஸ்லாம் கற்பிக்கப்பட்டது" (அஸீஸ், 1964:66)

என்று மிக்க மகிழ்ச்சியுடன் அனைவருக்கும் எடுத்துச் சொன்னார்.

கல்வி மூலம் பல்வேறு சமூகத்தினரிடையே இன ஐக்கியத்தையும் சகோதர வாஞ்சையையும் ஏற்படுத்தலாம் என்பதில் தளராத நம்பிக்கை வைத்திருந்த அடிகளார், அதை சிவானந்தாவில் பரீட்சித்துப்பார்த்து வெற்றியும் கண்டவர். 1932இல் தமிழ் பேசும் மாணவர்களுக்கு அங்கு சிங்களம் ஒரு பாடமாகப் போதிக்கப்பட்டது. பௌத்த கலாசாரத்தை இந்து மாணவர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கில் பௌத்தபிக்கு ஒருவரும் நியமிக்கப்பட்டார். சிவானந்தாவில் நிலவிய இந்த ஆரோக்கியமான சூழல் பற்றியும், பல் கலாசாரம் பற்றியும்,

"விபுலாநந்தர் ஒரு சிங்கள ஆசிரியரையும் பௌத்த பிக்குவையும் நியமித்து எல்லா மாணவருக்கும் பௌத்த கலாசாரத்தையும், நாகரிகத்தையும் அறிமுகம் செய்தார். பாடசாலை முகாமையாளர்களுள் அவர்தான் முதன்முதலில், 1930களில், கலாசார முறைமைகளை பாடசாலையில் அறிமுகப்படுத்தியவர். நான்கு கலாசாரங்கள் சிவானந்தாவில் நிலவின. பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறித்தவ கலாசாரங்களின் மகிழ்ச்சியான கலவையாக அது அமைந்திருந்தது. இந்நிலை பாரம்பரிய கலாசாரங்களின் இணைவுக்கும் வளர்ச்சிக்கும் உகந்த சூழலைத் தோற்றுவித்திருந்தது" (கணபதிப்பிள்ளை, 1991:182)
என்று கணபதிப்பிள்ளை அவர்கள் தனது 'விபுலாநந்தர்' (Vipulananda) என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

இன ஐக்கியத்தின் களமாக அடிகளாரின் காலத்தில் சிவானந்தாக் கல்லூரி விளங்கியது. மதங்கள் மரியாதைப்படுத்தப்பட்டன. சமய விழாக்கள் எந்த மதத்துக்குரியனவாயினும் சரி, பெரியளவிலோ, சிறியளவிலோ கொண்டாடப்பட்டன. சமய சம்பிரதாயங்கள் பேணப்பட்டன. ஒருமுறை இக்கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழாவை சகல இன மாணவரும், வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் இணைந்து கொண்டாடியமை குறித்துச் சொல்லப்பட வேண்டியதொரு நிகழ்வாகும். ஹட்டனைச் சேர்ந்த முத்தையாவும், தம்பிலுவில் ஒணியன் தர்மாவும், தென்மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த கோமஸ்ம், வட பிரதேசத்தைச் சேர்ந்த விநாயகரும், மூதூர் ஹனிபாவும் விழாக்குழுவில் இணைந்து செயற்பட்டு அவ்வருட பொங்கல் விழாவை இன ஒற்றுமையைக் காட்டும் விழாவாக, பிரதேச ஐக்கியத்துக்கு கட்டியம் கூறும் விழாவாக, செய்து முடித்தனர். நடந்து முடிந்த அப்பொங்கல் விழா பற்றி கணபதிப்பிள்ளை அவர்கள் கூறியதாவது,

"மூதூர் ஹனிபா, ஹட்டன் முத்தையா தம்பிலுவில் ஒணியன் தர்மா, தென்-மேற்குக்கரை கோமஸ், வட-பிரதேச விநாயகர் என்போர் பொங்கல் ஏற்பாட்டுக் குழுவினர். மற்றையோர் அனைவரும் அவர்களுக்கு உறுதுணையாகவிருந்தனர். ஆசிரியர்கள், அதிபர், முகாமையாளர், சுவாமிகள் எல்லோருமே தம் பதவிகளைப் பாராமல் பங்குகொண்டனர். சிலர் தேங்காய் துருவினர், சிலர் நெருப்பு மூட்டினர். சிலர் அரிசி கழுவினர். சர்க்கரை தூளாக்கப்பட்டது. பழங்கள் வெட்டிக் கழுவப்பட்டன. தம்பிலுவில், பழுகாமம், வீரமுனையிலிருந்து நெய்யும், பானையில் ஆடையுடன் தயிரும் வந்தது. பிபிலை, அம்பாறையிலிருந்து தேன் வந்தது. கைக்குத்து வெள்ளைச் சம்பா அரிசி சம்மாந்துறையிலிருந்து வந்தது. தாமரை, அல்லி, வாடா மல்லிகை, எக்சோரா மலர்களும் வந்தன. கமுகு, தென்னங்குருத்தும் பூவும் வண்டி நிறைய வந்து சேர்ந்தது. சர்க்கரை பேரீச்சம்பழம், கித்துள் பாணியும் வந்தது. பொருத்தமான நாட்டார் பாடலும் பாடப்பட்டது.

முள்ளிப் பூப்போல முப்பட்டுச்சால்வையும்,
மூலை சாய்ந்த கடகமுங் கொண்டு
தள்ளித் தள்ளியே சாய்ந்த நடைகளும்
சாடையும் பல கேலியும் பேசி,
கொட்டப் போனான் சூழல் ஊதப் போனான்
கோழிக் கூட்டுக்கு மண்வைக்கப் போனான்
வட்டுக்காய் போல முட்டை வயிறனை,
வாவடா, என்று கூப்பிடப் போனான்
காலத்தாலே பாலுங் கறந்து
கமுகம் பூப்போல் அரிசியுங்குற்றிக்
காலத்தாலே காய்ச்சிய பாற்கஞ்சி,
பள்ளிச்சி பள்ளன் எங்கடி போனான்?
கஞ்சி, காலாலே ஏற்றிப் போனான் காண் ஆண்டே...
பள்ளம் பார்த்துப் பயிரேற்றப் போனான், முள்ளிப்பூ...

இந்த எளிமையான நாட்டார் பாடல் அனைவரின் எண்ணத்தையும் இன, சமய, இயற்கை, கலாசார தொடர்புள்ள உண்மைக் கிராமிய நிகழ்வாக இந்நிகழ்வை ஆக்கிற்று. இது அர்த்தமற்றதா?...ஒற்றுமையுணர்வை சமூக இணக்கத்தை, சமூக முழுமையை இவ்வாறுதான் விபுலாநந்தர் தம் மாணவரின் மனங்களில் விதைத்தார். முஸ்லிம்கள், இந்துக்கள், பௌத்தர்கள், கிறித்தவர்கள் எல்லோரும் அவர்களே ஏற்பாடுசெய்த இந்த மகிழ்ச்சியான நிகழ்வில் ஒன்றிணைந்தனர்" (கணபதிப்பிள்ளை,1991:50-51) என்று கல்விமான் கணபதிப்பிள்ளை குறித்து வைத்திருக்கிறார். அன்றைய சிவாநந்தாக் கல்லூரியின் சமயச்சூழலை, சகல இன மாணாக்கரும் இணைந்து பிறமத விழாக்களில் பங்கு கொண்டு மகிழ்ந்ததை, சுவாமியின் வழிகாட்டலில் இன ஐக்கியம் அங்கு பொங்கி வழிந்ததை, கணபதிப்பிள்ளையின் இந்த எழுத்துக்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. முஸ்லிம், பௌத்த, கிறித்தவ மாணவர்களெல்லாம் இவ்விழாவிலே பங்கு கொண்டனர். பாடசாலை மட்டத்தில் ஏற்றிவைக்கப்பட்ட இந்த ஐக்கிய-தீபம் நாடெங்கும் பிரகாசிக்க வேண்டுமென அடிகளார் விரும்பினார். "மதபேதம், சாதி பேதம் ஆகிய போலிச் சமூகக் கட்டுப்பாடுகளுக்கு சிவாநந்தா இடங்கொடுத்ததில்லை. "யாதும் ஊரே யாவருங்கேளிர்" எனும் கோட்பாட்டைத் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ள சிவாநந்தா விபுலாநந்தரின் செல்லக் குழந்தையாகும்" (கணபதிப்பிள்ளை, 1992:89) என்கிறார் கணபதிப்பிள்ளை.

"தத்தம் சமயக் கொள்கைகளைப் பின்பற்ற பிள்ளைகளுக்கு எல்லாச் சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டன. கிறித்தவ பிள்ளை உண்மையான கிறித்தவனாவதற்கு போதிய வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன. அதேபோல முஸ்லிம், இந்து, பௌத்த பிள்ளைகளும் தத்தம் சமயங்களைப் பின்பற்ற போதிய சுதந்திரமும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. மகா சிவராத்திரி, கிறிஸ்மஸ், ஹஜ், நோன்பு, வெசாக் போன்ற முக்கிய சமய நிகழ்ச்சிகள் அதன் உண்மையான சடங்குகள் சம்பிரதாயங்களுடன் அனுஷ்டிக்கப்பட்டன. சமயங்களுக்கிடையிலான இணக்கப்பாடு பாடசாலை, விடுதி, இல்லம் ஆகிய இடங்களில் பின்பற்றப்பட்டன" (கணபதிப்பிள்ளை, 1991, பக். 49) என்று கூறி அன்றைய சிவானந்தாவின் அழகிய முன்மாதிரியை கணபதிப்பிள்ளை தனது நூலில் எழுதிவைத்திருப்பது எம் கவனத்தை ஈர்க்கிறது. விபுலாநந்தரின் பிறப்பிடமான காரைதீவில் பிறந்து, சிவானந்தாவில் கல்விகற்று, அதே கல்லூரியில் நீண்டகாலம் அதிபராகப் பணிசெய்த இந்த அறிஞர் பெருமகனின் கூற்றில் விபுலா நந்தரின் உணர்வைக் காண்கிறோம். அடிகளார் சிவானந்தாக் கல்லூரியிற் செயற்படுத்திக் காட்டிய தாராளக் கல்விக் கொள்கையின் வெற்றி இறுமாப்பைக் காண்கிறோம்.

"பாடசாலைக்கு அனுமதிக்கும் சம்பிரதாயங்கள் முடிவடைந்தவேளையில் என்னிடம், "அப்துல் மஜீத்! நீர் தொழுவதாயின் உமது 'கிப்லா'1 அது என்று கூறி கிப்லாவின் திசையையும் எனக்குச் சுட்டிக்காட்டினார் சுவாமி விபுலானந்தர். இது ஆண்டவனைத் தொழுவதற்கான சுதந்திரமும் சுவாமியிடமிருந்து நான் பெற்றுக்கொண்ட முதலாவது எதிர்பாராத செய்தியுமாகும்" என்பது விபுலாநந்த அடிகளாரின் அன்புக்குரிய மாணவர்களுள் ஒருவரான பஸீஸ் ஏ மஜீத் அவர்களின் கூற்று.

அடிகளாரின் தாராள மதக்கொள்கைக்கு இதுவும் நல்லதொரு உதாரணமாகும். இந்த பஸீல் ஏ மஜீத் சிவானந்தாக் கல்லூரியின் ஆரம்ப கால மாணவன். விடுதியிலும் தங்கியிருந்து சுவாமிகளிடம் கல்வி கற்ற இவர் மஜீது வன்னிமையின் மகன். முஸ்லிம்கள் தம் வணக்கத்தின் போது முன்னோக்கித் தொழும் 'கிப்லா' வையும் அது எடுத்தியம்பும் இஸ்லாமிய தத்துவத்தையும் நன்கு அறிந்து வைத்திருந்த விபுலாநந்தரின் மேற்கண்ட கூற்று, அப்துல் மஜீதிடம் அவர் சொன்ன வெறும் வார்த்தைகளல்ல. பெறுமதி மிக்க வார்த்தைகளாக அவை எமக்கு தெரி கின்றன. ஏனெனில், இக்கூற்றானது விபுலாநந்தரின் ஆத்மீகப் பெறுமானத்தை வெகுவாக அதிகரித்திருக்கிறது. அவரின் மனிதப் பண்பையும் பன்மடங்கு உயர்த்திவிட்டிருக்கிறது.

ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயங்களைப் பின்பற்ற வேண்டும், அதன்மூலம் சமயம் கடந்த அன்பை, வேற்றுமையில் ஒற்றுமையைக் காண வேண்டும், அதற்கு சிவானந்தவித்தியாலயம் களமமைத்துக் கொடுக்க வேண்டும் என்பது அடிகளாரின் ஆதங்கம். இந்த நோக்கில் தான் விபுலாநந்தர் தன்னுடைய பாடசாலையிலே கல்வி கற்றுகொண்டிருந்த இந்து, பௌத்த, கிறித்தவ, இஸ்லாமிய மாணவர்கள் அனைவரும் தத்தம் சமய அனுட்டானங்களை வழுவாது கடைப்பிடிக்க ஊக்கமும் ஒத்தாசையும் வழங்கினார்.

"உலகின் கூடிவாழ்தல் நெருங்கிவரும் எதிர்காலத்தில் இந்துக்கள் கிறித்தவர்கள் முஸ்லிம்கள் ஆகிய நாம் எல்லாரும் பிறரும் ஒன்றாக அமர்ந்து உண்பதும் கடவுளை வணங்குவதும் அவசியமாகின்றது.. கிறித்தவர்களின் அதே ஆர்வத்துடனும் பக்தி சிரத்தையுடனும் இராமகிருஷ்ணமிஷன் மடாலயங்கள் பலவற்றில் கிறிஸ்மஸ் தினத்தை அனுட்டிக்கிறோம். இலங்கையிலுள்ள இராமகிருஷ்ணமிஷன் விடுதிப் பாடசாலைகளில் முஸ்லிம், பௌத்த, இந்துப்பிள்ளைகள் ஒன்றாக அமர்ந்து உண்கிறார்கள். விரும்பினால் பிற சமய ஆராதனைகளிலும் கலந்து கொள்கிறார்கள். இதை எப்போதும் எந்தப் பெற்றோரும் எதிர்த்தது கிடையாது" (விபுலாநந்தர், 1992டீ:275) என்று எழுதி பஸீல் ஏ மஜீதின் கூற்றையும் கணபதிப்பிள்ளையின் கூற்றையும் ஊர்ஜிதம் செய்கிறார் விபுலாநந்தர். இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளில் விபுலாநந்தர் காலத்தில் நிலவிய இன ஐக்கியத்தின் வாடை அவரின் இந்த எழுத்துக்களில் கமழ்கிறது. அதை நாமும் நுகர்ந்து மகிழ்கிறோம்.

"கிழக்கு மாகாணத்தில் இந்துக்களுக்கு மட்டுமல்லாது ஏழை முஸ்லிம்களுக்கும் பாகுபாடற்ற கல்வி பயிலும் வாய்ப்பை சிவானந்தா, சாரதா வித்தியாலயங்கள் மூலம் அளித்த பெருமை அடிகளாரையே சாரும். கிழக்கு மாகாணத்தின் இன்றைய உயர்ச்சி நிலைக்குக் காரணம் அடிகளாரே" (அஸீஸ், 1965.07.22)

என்று மத்திய மாகாண சைவ மகாசபையின் ஏற்பாட்டில் கண்டி புஷ்பதான மகளிர் வித்தியாலயத்தில் 17.7.1965 இல் நடைபெற்ற விபுலாநந்த அடிகளார் நினைவுதின விழாவின் போது கலந்து கொண்டு உரையாற்றிய அஸீஸ் குறிப்பிட்டார். கிழக்கு மாகாண முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டுக்கு விபுலாநந்தரின் பங்களிப்பை அஸீஸின் இவ்வார்த்தைகள் தெளிவாகக் காட்டுகின்றன. கல்வியில் சகல இனத்தவருக்கும் சமவாய்ப்பு வழங்கி அவர்களை கைதூக்கிவிட்டவர் விபுலாநந்தர். கிழக்கிலங்கை முஸ்லிம்கள் அவரின் இக்கொள்கையினால் பெரிதும் பயன் பெற்றனர்.

"சிவானந்தா விடுதியின் விசேடத்துவமும் அதன் ஒப்பற்ற சிறப்புமாகவிருந்தது அதன் தாராண்மைத்துவமே. எல்லா சமயங்களையும் சார்ந்த மாணவர்களுக்கும் இங்கு இடமிருந்தது. அவர்களின் சமயத்தை அச்சமய சம்பிரதாய முறைப்படி அனுஷ்டிக்க அவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். பொது ஒன்றுகூடல், பொது ஆராதனை, உலக சமய அனுஷ்டானங்கள் நாளாந்த நிகழ்வுகளாயின. இந்துக்களல்லாத மாணவரின் சமய அனுஷ்டானங்களுக்கு நேரமும் இடமும் ஒதுக்கப்பட்டிருந்தன. அநேக முஸ்லிம் சகோதரர்கள் தம் சிவானந்தா விடுதிக்காலத்தையிட்டு இப்போது நன்றியும் திருப்தியும் தெரிவிக்கின்றார்கள்" (ஜீவானந்தா, 2001:31) என்று அன்றைய சிவானந்தாவின் சமயத்தாராண்மை பற்றி சுவாமி ஜீவனானந்தாஜீ கூறுவது கவனிக்கத்தக்கது,

"எங்களுக்குள் பேதமில்லை. இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள் அனைவரும் ஒன்றாகக் கூட்டுப்பிரார்த்தனை செய்வோம். "இறைவன் ஒருவனே, பக்தர்கள் பல்வேறு பெயர் சொல்லி அவனை அழைப்பர்". இதுதான் எங்களுடைய சமயம். எங்கள் சுவாமிகளும், சகோதரர்களும் இந்த விடயத்தில் மிகவும் விழிப்பாகவும் கவனமாகவும் இருந்தனர். கூட்டுப்பிரார்த்தனை முடிந்த பின்னர் வெவ்வேறு மதத்தவர்கள் அவரவர் மத முறையில் அதற்கான வழிபாடும் செய்ய வேண்டும் என்று ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. அனைத்துச் சமயப் பெருநாட்களையும் நாங்கள் கொண்டாடி மகிழ்ந்தோம்.

இவையனைத்தும் மாணவ இல்ல மாணவர்கட்கும், விடுதி மாணவர்கட்கும் பொது. அனைவரும் ஒன்றாகவே இந்த செயற்பாடுகளைச் செய்வோம்" (நடராஜா, 2001:87) என்று அக்கால சிவானந்தாவின் மாணவர் இல்ல மாணவனும் பிற்காலை கிழக்குப் பல்கலைக்கழகப் பதிவாளராக விளங்கியவருமான க.நடராசா, 'ஸ்ரீராமகிஷ்ணமிஷன் குருகுல வாழ்க்கை-சில நினைவுகள்' என்ற தனது கட்டுரையில் பதித்து வைத்திருப்பதும் அங்கு நிலவிய இன சௌஜன்ய சூழலை எமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறது.

"இராமகிருஷ்ணமிஷன் உயர் இலட்சியங்களுடன் செயற்பட்ட பெரிய பாடசாலைகளான மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், திருகோணமலை இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரி என்பன எல்லா இன மாணவர்களையும் அனுமதித்தன. இன, மத, பாகுபாடு காட்டப்படவில்லை. அநேக முஸ்லிம் மாணவர்கள் இப்பாடசாலைகளில் கற்றனர்" (தியாகராஜா, 2001:21) என்கிறார் முன்னாள் சிவானந்தாவின் அதிபர் தியாகராசா.

"பரஸ்பர நல்லெண்ணத்தை வளர்ப்பதிலே அடிகளால் வெற்றி பெற்றார். அடிகளாரின் சேவை புனித அப்பழுக்கில்லாத புனித சேவையாய்த் திகழ்ந்தமையால் எல்லா மதத்தினரும், இனத்தினரும் தம்முள்ளே பேத உணர்ச்சி நீங்கப் பெற்று ஒரு முகமாக வாழும் சுமுக நிலைமை நாட்டில் ஏற்படலாயிற்று. இதனால் அடிகளாரின் கல்வித் தொண்டு தமிழர், கிறித்தவர், முஸ்லிம், பௌத்தர் முதலிய எல்லோரையும் இணைத்து வைத்த ஒருமைப்பாட்டிற்கு ஒரு வித்தாக வேரூன்றியதை இந்த நாடு மறக்க முடியாது. இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் ஆகிய எல்லோரையும் கவர்ந்து நிற்கின்ற சிவானந்த வித்தியாலயம் அடிகளாரின் விசாலமான நோக்கத்தைப் பிரதிபலித்து விளங்கும் காட்சியானது வெளியுலகினைப் பெரிதும் கவர்ந்து நிற்பது குறிப்பிடத்தக்கதொரு செய்தியாகும்" (பெரியதம்பிப்பிள்ளை, 1999:110-111) என்று 'விபுலாநந்த அடிகளாரின் கல்வித் தொண்டு' என்ற கட்டுரையில் பெரியதம்பிப்பிள்ளை எழுதி வைத்திருப்பது முஸ்லிம்கள் உட்பட பல இனத்தவரும், மதத்தினரும், இந்நாடும் விபுலாநந்தரின் கல்விப் பணியினால் பெற்ற நன்மையைத் தெளிவாகச் சுட்டுகிறது. இவையெல்லாமே சிவானந்தாவில் கற்ற, கற்பித்த, அக்கல்லூரியுடனும் விபுலாநந்தருடனும் நெருங்கிய தொடர்புள்ளவர்களின் கூற்றுக்கள். அவர்களின் காலத்தில் அக்கல்லூரியில் நிலவிய, இன சௌஜன்யத்தை, சமய தாராண்மையை, புரிந்துணர்வை எமக்குப் புடம் போட்டுக் காட்டுகின்றன.

அன்பு எனும் நீருட்டப் பெற்று வளர்க்கப்படாத குழந்தை பூரண வளர்ச்சியடையமாட்டாதென்பது விபுலாநந்தரின் கல்விக் கொள்கையின் அடிநாதமாக விருந்தது. கல்விச்சாலையும் அன்பு கனிந்து விளங்கும் இல்லமாக இருக்க வேண்டும். கல்வி வளர்ச்சியுறுவதற்கு இத்தகைய பண்பட்டதளம் இன்றியமையாதது என்று கருதியே தனது கல்விக்கழகத்தை அவர் ஓரில்லமாக்கிக் கொண்டார். அதை அன்பு நிரம்பிய இல்லமாக அமைத்தார். அது மட்டுமன்றி அழகுக்கலையே கல்வி என்னும் எண்ணத்தில் ஊறியிருந்தவர் விபுலாநந்தர். பிள்ளையின் முன் அழகான காட்சி, அழகான எண்ணங்கள், அழகான முன்மாதிரிக் குணமுடைய மனிதர்கள் இருத்தல் வேண்டும் என்று விரும்பினார். அந்த உணர்வில் எழுந்த அன்புப் பிணைப்பில் தான் அடிகளார் காலத்தில் சிவானந்தாக் கல்லூரியிலே கற்ற இந்து மாணவர்களும் முஸ்லிம் மாணவர்களும் ஏனைய சமய மாணவர்களும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருந்தனர். அந்தப் பாசப் பிணைப்பு விபுலாநந்தரின் எண்ணத்துக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும். இந்து, முஸ்லிம், கிறித்தவ, பௌத்த மாணவர்களெல்லாம் ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகள் போல் ஒன்றிணைந்து கல்விகற்கும் சூழல் சிவானந்தாக் கல்லூரியில் ஏற்படுத்தப்பட்டது.

"ஆதரவற்றோர் இல்லம் நிச்சயமாக வேண்டும். பெண்களையும் விட்டுவிடக் கூடாது. ஆனால் பெண்களின் இல்ல மேற்பார்வைக்கு ஒரு பெண் தேவையாக இருக்கும். வயதான ஒரு விதவையை இதில் ஈடுபடுத்து. அவர் குழந்தை இல்லாதவராக இருக்க வேண்டும். சிறுவர், சிறுமிகளுக்கு தனித்தனி இடங்கள் இருக்க வேண்டும். முகம்மதியச் சிறுவர்களையும் நீ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அவர்களின் மதத்தில் கை வைக்காதே. அவர்களது உணவு வசதிக்காக தனி ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் நீதி வழியில் நிற்பவர்களாக மனித நேயம் மிக்கவர்களாக, பிறர் நலம் நாடுபவர்களாக, வாழ்வதற்குக் கற்பிக்க வேண்டும். இதுவே மதம். சிக்கலான தத்துவ விடயங்களை எல்லாம் இப்போதைக்குப் பரணில் கட்டி வைத்துவிடு. இந்து, முகம்மதியர், கிறிஸ்தவர் என்று எல்லாமதத்தினரையும் ஏற்றுக் கொள். அவர்களுடைய உணவு முதலியவற்றிற்குத் தனியாக ஏற்பாடுசெய். மதத்தில் அனைவருக்கும் பொருத்தமான விடயங்களைக் கற்பிக்க வேண்டும்" (விவேகானந்தர், 1998:441-442)

என்பது விவேகானந்தர் 10-10-1897ல் அகண்டானந்தாவுக்கு எழுதிய கடிதத்தின் வாசகங்கள். விபுலாநந்தரின் கல்விச்சிந்தனையுடன் ஒப்பு நோக்கிப் பார்க்கக் கூடியதாக விவேகானந்தரின் இக்கூற்று அமைந்திருக்கிறது. விபுலாநந்தரின் கல்வி செயற்பாடும் இதுவாகவே அமைந்திருந்தது. "பிறருடைய கொள்கையை வெறுத்து ஒதுக்காத பண்புடைமை அக்கொள்கைகளை ஏற்றுக் கொள்ளுகின்ற பொது நோக்கு என்னும் இரண்டினையும் உலகுக்குக் கற்பித்த சமயத்துக்கு நான் உரியவனெனப் பெருமை பாராட்டுகிறேன்." என்று 1893 செப்டம்பர் 11 ஆம் திகதி அமெரிக்க சிக்காகோ நகரில் நடைபெற்ற அனைத்துலக சமய ஆராய்ச்சிப் பெருங்கழகத்தில் கர்ஜனை செய்த சுவாமி விவேகானந்தரின் கல்விக் கொள்கை நிச்சயம் சுவாமி விபுலாநந்தரின் மீது தாக்கத்தை ஏற்படுத்தித்தானிருக்கும்.

சமயமாற்றப்பீதியில் கிறித்தவப் பாடசாலைகளை நாடாதிருந்த தமிழ்ப்பிரதேச முஸ்லிம்களுக்கு அன்புக்கரம் நீட்டி அரவணைத்துக் கல்வியூட்டிய பெருமை விபுலாநந்தருக்குரியது. அவரின் முகாமையிலியங்கிய பாடசாலைக-ளில் இன மத வேறுபாடு காட்டப்படவில்லை. சிவானந்தாக் கல்லூரி விடுதியில் முஸ்லிம் மாணவருக்கெனத் தொழுகை அறை இருந்தது. அதற்கான நேர ஒதுக்கீடும் செய்யப்பட்டிருந்தது. ரமழான் மாதத்தில் விடுதி மாணவர்கள் நோன்பு நோற்கவும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன. மாமிசம் சாப்பிடுபவர்களுக்கு தனியான விடுதி அறை ஒதுக்கப்பட்டிருந்தது. முஸ்லிம் சமய விழாக்கள் இஸ்லாமிய சம்பிரதாயங்களுடன் கொண்டாடப்பட்டன. எல்லாச் சமய விழாக்களிலும் எல்லோரும் பங்குகொள்ளும் ஆரோக்கியமான சூழல் அங்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது. சமயப் புரிந்துணர்வுடன் மாணவர்கள் கல்லூரியிலும் விடுதியிலும் இருந்தனர். மௌலவி ஆசிரியர் முஸ்லிம் மாணவர்களுக்கு இஸ்லாம் கற்பித்தார். இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளில் முஸ்லிம் மாணவர்கள் தம் சமய கலாசார பின்னணியில் கல்விகற்றுக்கொண்டிருந்த அருமந்தசூழல் விபுலாநந்தரினால் சிவாநந்தாக் கல்லூரியில் ஏற்படுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த நல்ல சூழலிற் கல்வி கற்ற பலர் அரசியல் தலைவர்களாக, அரசாங்க உயர் அதிகாரிகளாக, கல்விமான்களாகவெல்லாம் உயர்நிலையடைந்து தம் சமூக மேம்பாட்டுக்கு விபுலாநந்தர் வழிநின்று முயற்சிகள் செய்ததை வரலாறு பதிவுசெய்திருக்கிறது. அந்தவகையில், முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டில் விபுலாநந்தரின் முகாமையிலியங்கிய இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளின் பங்கும் பணியும் முக்கியமானது.

உசாத்துணை :

1. அஸீஸ் எ.எம்.எ. (1965.07.22), தினகரன்.
2. கணபதிப்பிள்ளை க. (1992), விபுலாநந்தர் நூற்றாண்டு நினைவுமலர் (1892-1992), தொகுப்பு : வித்துவான் சா.இ.கமலநாதன், சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை, மட்டக்களப்பு.
3. சுவாமி விவேகானந்தர் கடிதங்கள் (1998), ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை.
4. பஸீல் ஏ. மஜீத், தனிப்பட்ட குறிப்பு.
5. பெரியதம்பிப்பிள்ளை ஏ. (1999), புலவர்மணி கட்டுரைகள், கல்வி-பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம், திருகோணமலை
6. Azees A.M.A (1964) Vaidyeshwara vidyalaya, The West Re-appraised, Saman Publishers Ltd. Maharagama.
7. Jivananda (2001), Ramakrishna Mission Students' Home, Batticaloa, Platinum Jubilee commemoration Volume (1926-2001), Ramakrishna Mission, Ramakrishnapuram, Batticaloa.
8. Kanapathippillai K. (1991), Vipulananda-A Biography –The Man and his achievements, office of the state Ministry for Hindu Religious and cultural affairs, Colombo.
9. Nadarajah K. (2001), Platinum Jubilee Commemoration Volume (1926-2001), Ramakrishna Mission Students' Home, Batticaloa, Ramakrishna Mission, Batticaloa.
10. Thiyagarajah K. (2001), Sri Ramakrishna Mission in Ceylon, Platinum Jubilee Commemoration Volume of Ramakrishna Mission Students' Home, Batticaloa (1926-2001), Ramakrishna Mission, Batticaloa.
11. Vipulananda (1992B), Ancient Thoughts for Modern Man, Sri Rmakarishna Math, Mylapore, Madras.

சுவாமி விபுலாநந்தரின் மணித்துணிகள்....

இடைவிடாது நற்காரியங்களைச் செய்வதில் ஆசையை வளர்க்க வேண்டும். இப்படிப்பட்ட ஆசையை நிறைவேற்றுவதற்குச் செய்யப்படும் முயற்சியே உண்மையான சன்மார்க்கமாகும்.

உடம்பின்கண்ணே அமைந்திருக்கும் பலவகை உறுப்புக்கள் வேறு தொழிலைச்செய்து ஒன்றிற்கொன்று உதவியாயிருத்தல் போலச் சனசமூகத்திலும் வேறுவேறுமக்கள் வேறுவேறு தொழிலைச் செய்வாரெனினும் அத்தொழில் வேறுபாட்டினாற் பெரியரெனவும், சிறியரெனவும் படார்.

சுவாமி விபுலாநந்த அடிகளாரும் கிழக்கிலங்கையில் பெண்களுக்கான கல்வியும்

திருமதி. பரஞ்சோதி பாக்கியராஜா B.Sc

புளோரிடா, அமெரிக்கா

இளைப்பாறிய ஆசிரியை, அதிபர், மட்/ஆனைப்பந்தி இராமகிருஷ்ணமிஷன் பெண்கள் பாடசாலை



தோற்றுவாய்

19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இந்து மத மறுமலர்ச்சியின் பயனாக மாபெரும் மகான் ஸ்ரீஇராமகிருஷ்ணரும், அவரது உன்னத சீடராக சுவாமி விவேகானந்தரும் உலகிற்குக் கிடைத்தனர். இருவரும் பெண்கள் பற்றி மிகவும் சீரிய நோக்கைக் கொண்டிருந்தனர். சமூகத்தில் பெண்கள் சிறந்த நிலைக்கு உயர்த்தப்பட வேண்டுமென்பதில் ஆர்வம் காட்டினர்.

வேத காலத்தில் பெண்கள், சமஸ்கிருதக் கல்வி கற்கக் கூடாதெனும் தடை விதிக்கப்பட்டது. பின்னர் இச்சம்பிரதாயம் பெண்கள் எந்தக் கல்வியும் கற்பதற்குத் தடை போட்டது. **"ஏட்டையும் பெண்கள் தொடுவது பாவம்"** என்று பெண்களை வீட்டுக்குள்ளே பூட்டி வைத்த காலமது. இந்த நிலமை சங்க காலத்தில் மாற்றமடைந்ததைக் காண முடிகின்றது. ஔவையார், காரைக்காலம்மையார் போன்ற பெண்புலவர்கள் உறுதிப்படுத்துகின்றனர். காரைக்காலம்மையார் பக்திப் பாடல்கள் பல பாடியுள்ளார். இதற்குப் பிற்பட்ட காலத்திற்றான், பெண்களுக்குக் கல்வி கற்கும் வாய்ப்பு சில சுயநலவாதிகளால் மறுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையை மாற்றும் நோக்கிற் சில சீர்திருத்தவாத இயக்கங்கள் தோன்றின. தனிப்பட்ட சீர்திருத்தவாதிக-ளாக ஸ்ரீ இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி போன்றவர்கள் செயற்பட்டனர். அன்னி பெசன்ட் அம்மையார், சகோதரி நிவேதிதா அம்மையார் ஆகியோரும் பெண் கல்வியை ஊக்குவிக்க உழைத்தனர்.

பாரத நாட்டுப் பெண்கள், தாய்மை உணர்வு, சேவை மனப்பான்மை, அன்பு, கருணை, பணிவு என்பனவற்றில் வேறெங்கும் காண முடியாத அளவு சிறந்து விளங்குகின்றனர் என்பதை நயந்து சுவாமி விவே கானந்தர் மேலை நாடுகளில் ஆற்றிய தமதுரைகளிற் குறிப்பிட்டுள்ளார். அன்னாருடைய கருத்தின்படி, உலகம் சிறப்படைவதற்குப் பெண்குலம் சிறப்படைய வேண்டுமென்பதாகும். பறவை பறப்பதற்கு இரு சிறகுகள் தேவை. அவ்வாறே உலகம் சிறப்படைவதற்கு ஆண், பெண் ஆகிய இருபாலாரின் பங்களிப்பும் இன்றியமையாததாகும். எனவே பெண்களுக்கு முறையான கல்வி வழங்கப்படுமாயின், நாட்டுக்குப் பயனுள்ளோர் சமூகமாக உருவாகுவார்கள் என்பது சுவாமி விவேகானந்தரின் ஆணித்தரமான நம்பிக்கை. பெண்களுக்குக் கல்வி வழங்கும் நோக்கில், கிராமங்கள் தோறும், பாடசாலைகள் அமைக்கும் முயற்சியில் ஆர்வங் காட்டினார். இதையே மகாகவி பாரதியாரும் ஏழைகளின் அறியாமையைப் போக்க வீதிதோறும் இரண்டொரு பள்ளி நகரமெங்கும் பலபல பள்ளி எனப் பள்ளிக்கூடங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

சீர்திருத்தவாதிகளின் முயற்சி பெண்கள் கல்வியறிவுள்ளவர்களாக மாறப் பயனுள்ளதாகவிருந்தது. இவ்வாறு கல்வி கற்ற பெண்கள், ஞானம், நல்லறம், வீரம், சுதந்திரம் எனும் நற்குணங்களையே அணிகலன்களாகக் கொண்டிருப்பர். உயர்ந்த பண்பொழுக்கமும், நல்லறிவும் கொண்ட பெண்களாற் சமூகத்திற்கு அறிவும், ஆற்றலும், நல்லொழுக்கமும் கொண்டவோர் எதிர்காலச் சந்ததியை, ஈன்றுதர முடியும் என்பதை நிரூபித்துள்ளது. மேலும், சீர்திருத்தவாதிகளின் முயற்சியினாற் பெண்கள், கல்வி கற்று இன்று பலதுறைகளிலும் முன்னேறியுள்ளனர். 1975ஆம் ஆண்டினினை "மகளிர் ஆண்டாக" ஐக்கிய நாடுகள் சபை பிரகடனஞ் செய்தமை பெண்களின் முக்கியத்துவத்தை, உலகம் உணர்ந்து கொண்டமைக்குச் சான்றாகும். பெண்மையின் சிறப்பு "தாய்மை". நாம் உயர்வாகக் கருதுபவைகளையும் "தாய்" எனும் அடைமொழியினாற் சிறப்பிக்கிறோம்.

பேசும் மொழி "தாய்மொழி" பிறந்த நாடு தாய்நாடு, வாழும் நிலம் பூமித்தாய, சூழவுள்ள நிலமும் நீரும் மலையும் "இயற்கை அன்னை", பால்தரும் பசு "கோமாதா" வழிபடும் தெய்வத்தை "அம்மையே அப்பா" என முதலிற் தாயை விழித்தும், தாய்மைக்குப் பெருமை சேர்க்கிறோம்.

பல்லாண்டு காலமாக அன்னியராட்சியின் கீழ் அடிமைப்பட்டிருக்கும் மக்கள், மொழிப் பற்று, சமயப்பற்று, நாட்டுப்பற்று என்பவற்றை இழந்து. அறியாமை எனும் இருளில் மூழ்கியிருந்தனர். இந்த அவல நிலையை மாற்ற, 1897இல் சுவாமி விவேகானந்தரால் இராமகிருஸ்ண மிஷன் நிறுவப்பட்டது. ஏழ்மை, கல்வி அறிவின்மை என்பவற்றை இல்லாதொழிப்பதே இராமகிருஷ்ண சங்கத்தின் முக்கிய நோக்கங்களிலொன்றாகும். இதற்காகக் கல்விக் கூடங்கள் நிறுவப்பட்டன. பிரதானமாக பெண்கள் பாடசாலைகளையமைப்பதில் ஆர்வம் காட்டப்பட்டது. இச்சேவைக்கு முக்கிய கருவியாகத் தியாக சிந்தனையுடன் செயற்பட்டவர் உயர்திரு. விபுலாநந்த அடிகளாவார். சுவாமி அவர்கள் பல்கலை, பன்மொழி வித்தகர். அவர் விரும்பியிருந்தால், தமது திறமைகளுக்கேற்ற பெரும் பதவி வகிக்கும் ஓர் சீமானாக உயர்ந்திருக்க முடியும். ஆனால் அந்த உத்தம சீலர் ஏழைகளின் சேவைக்காகத் தம்மை அர்ப்பணிப்பதையே விரும்பினார். ஒரு முறை உரையாற்றும் போது பின்வருமாறு அவரே கூறியுள்ளார், "இறைவன் தன்னிடம் எதுவேண்டுமென்று கேட்டால், தனக்கு மட்டும் பயன்படும் எதையும் கேட்கமாட்டேன். ஆனால் மக்களுக்குச் சேவை செய்யும் வரம் வேண்டுமெனக் கேட்பேன். ஏனெனில் அதனாற் பலர் பயன் பெற முடியுமாம்". இத்தகைய பெருமனது கொண்ட விபுலாநந்த அடிகள் இலங்கையில் இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பில் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்துவதற்காக இலங்கைக்கு அனுப்பப்படுகின்றார்.

விபுலாநந்த அடிகள் இலங்கையில் இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பில் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு முகாமையாளராக நியமிக்கப்படுகின்றார். 1924ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் திருகோணமலைக்கு வருகை தரும் சுவாமிகள் 1925ஆம் ஆண்டின் முற்பகுதியில் மட்டக்களப்பில் தமது பணிகளைத் தொடங்குகின்றார். அவ்வேளை மட்டக்களப்புப் பிரதேசத்தில் விவேகானந்த சபை கல்வி, கலாசாரப்பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. அக்கால கட்டத்தில் மேற்படி சபையால் நிர்வகிக்கப்பட்ட ஆனைப்பந்தி, காரைதீவு, ஆரையம்பதி, கல்லடி உப்போடை, மண்டூர் ஆகிய கிராமங்களில் இயங்கிய ஐந்து சைவப்பாடசாலைகள் சுவாமி விபுலாநந்தரிடம் கையளிக்கப்பட்டன.

மட்டக்களப்பு பிரதேசத்திற்கு வருகை தரும் இராமகிருஷ்ண மிசன் துறவிகள் தங்கியிருந்து பணியாற்றுவதற்கு உரிய இடமாக ஆனைப்பந்தி விநாயகர் ஆலயத்தின் வலது புறமே இருந்த சைவப் பாடசாலை விளங்கியது. இது புளியந்தீவைச் சேர்ந்த சைவப் பெரியார்களால் 1902ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. "ஆனைப்பந்தி பாடசாலை என அழைக்கப்படும் இச்சைவப் பாடசாலை, புது நாகரிகத்திற்கு இடம் கொடுத்து வளர்ந்து வரும் நகரின் மத்தியில் உள்ளதே ஆயினும், அரை மண் சுவரும், ஓலைக் கூரையும் கொண்டு இன்னமும் தன் பழமையைக் காட்டி நிற்பது இப்பாடசாலை ஆகும். (1949) இதிலே அமைந்திருந்த சிறிய அறையொன்றில் தான் மட்டக்களப்பில் இராமகிருஷ்ண சாம்ராச்சியம் உருப்பெறுவதற்கு காலாக இருந்த பண்டையப் பெரும் கோட்டை எனலாம். இராம கிருஷ்ண சங்கதுறவிகள் மட்டக்களப்புக்கு வந்து தங்கும் ஆச்சிரமமாக அப்போதிருந்ததும் இதுவே. சிவாநந்த வித்தியாலயம் அமைக்கப்படும் வரை விபுலாநந்த சுவாமிகள் இங்கிருந்தே தமிழ்ப் பணியும். சைவப்பணியும் புரிந்தார்".

மேலும் புளியந்தீவில் வாழ்ந்த சிறந்த சைவப் பெரியாரும், அடிகளுடன் ஊர்கள் தோறும் சென்று சைவப் பிரசங்கங்கள் செய்து சைவ நன்மக்களைத் தட்டி எழுப்புவதில் சலியாது உழைத்தவருமான திரு. கா. அருணாசலத் தேசிகர் அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்தார் என்று பாலபண்டிதை ஸ்ரீமதி. கங்கேஸ்வரி கந்தையா குறிப்பிடுகின்றார்.

மக்கள் சேவையை தமது தலையாய பணியாகக் கருதிய அடிகள் கல்வி வளர்ச்சியானது ஆண்களுக்குச் சமமாக பெண்களிடமும் ஏற்பட வேண்டுமென விரும்பினார் என்பதை அவரது செயற்பாடுகள் காட்டுகின்றன. " பாடசாலை வேளைகளில் சுவாமியும் வகுப்புக்களுக்கு வருவதுண்டு. அப்போது சைவ மதத்தின் பண்பாட்டையும், அது நம் நாட்டில், வருங்காலத்தே சிறப்புற்று ஓங்க பெண் மக்களுடைய சேவை பெரிதும் வேண்டப்படுகிறது என்பதையும், அடிகள் எங்களுக்குப் போதிப்பார்" என்று திருமதி. கங்கேஸ்வரி கந்தையா குறிப்பிடுகின்றார்.

மேலும் பெண்கள் நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற சுவாமி விபுலாநந்தரின் எண்ணக் கிடக்கையை திருமதி. கங்கேஸ்வரி கந்தையா ஆசிரியக் கலாசாலை படிப்பை முடித்த போது சுவாமி அவர்கள் அவருக்கு எழுதிய பின்வரும் கடிதம் மூலம் அறிய வருகின்றது. "ஆசிரிய வகுப்புச் சோதனை சித்தியடைந்த செய்தி அறிந்து மகிழ்வுறுகின்றேன். சைவசமயப் பெண்கள் ஆசிரியராக வருவதோடமையாது, மேலும் மேலும் கல்வியில் அபிவிருத்தி எய்தி, நல்லிசைப் புலவர்களாக விளங்க வேண்டும் என்பது எனது பிரார்த்தனை. நாமகளது அனுக்கிரகம் உனக்கு உண்டாகுக" என்று குறிப்பிட்டுள்ளார்.

இக்கால கட்டத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழ்ந்த, சைவ சமயத்தைச் சேர்ந்த ஏழைப் பெண்மாணாக்கள் நகரத்திலுள்ள பெண்கள் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்பது முடியாத காரியமாக இருந்தது. இவற்றைக் கண்ணாரக் கண்ட அடிகள், 1925ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ஆம் திகதி பெண்மாணவர்கள் கல்வி கற்பதற்கு வசதியாக காரைதீவில் சாராதா வித்தியாலயத்தை அமைத்தார். அதைத் தொடர்ந்து, மட்டக்களப்பு நகரில் சைவப் பெண்மாணவர்கள் கல்வி கற்பதற்கு வசதியாக இடவசதியும், கலை வசதியும் கொண்ட தனியான பாடசாலை ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று சுவாமிகள் விரும்பினார். இவ்விருப்பம் 1936ஆம் ஆண்டு நிறை வேறியது.

அதாவது ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயத்திற்கு இடது புறமாக இருந்த விவேகானந்த மண்டபத்தில் பெண்களுக்கான பாடசாலை தொடங்கப்பட்டது. சைவப் பெரியார்களின் நன்கொடையால் தொடங்கப்பட்ட இப்பாடசாலை ஆனைப்பந்தி இராமகிருஷ்ண மிஷன் மகளிர் வித்தியாலயம் என அழைக்கப்பெற்றது. குருதேவர் இராமகிருஷ்ணரின் நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பெற்ற இக்கல்வி நிலையத்தின் மூலம் மட்டக்களப்பு பிரதேசத்தின் பெண்கள் கல்விக்கு பெரும்பணி செய்ய அடிகளால் முடிந்தது என்று திருமதி. கங்கேஸ்வரி கந்தையா குறிப்பிட்டுள்ளார். இன்று இப்பாடசாலை பெரு விருட்சமாக வளர்ந்துள்ளது. இப் பாடசாலையில் ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக (1971வரை) அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி. கமலபூஷணி திருநாவுக்கரசு அவர்களின் சேவை பாராட்டற்குரியது. பாடசாலையின் ஆரம்பகால வளர்ச்சிக்கு அன்னாரின் சேவை ஊன்றுகோலாக அமைந்தது.

இராமகிருஷ்ணமிசன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி கற்று முதன் முதல் ஆசிரியராகப் பணியாற்றி, திருமதி. திருநாவுக்கரசு அவர்கள் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து அதிபராகவும், பல ஆண்டுகள் இங்கு பணியாற்றியவள் என்று கூறுவதில் பெருமையடைகின்றேன்.

சுவாமி விபுலாநந்தரவர்கள், தமது முகாமைத்துவத்தின் கீழிருந்த பாடசாலைகளிற் பின்பற்றிய கல்விக் கொள்கைகள் மிகவும் முற்போக்கானவை. இன்றைய கல்வியாளர்கள் கூறும் பல கொள்கைகளை 1941ஆம் ஆண்டளவிற் கூறியதுடன் தமது பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தியுமுள்ளார். மாணவர்கட்கு வழங்கப்படும் கல்வி பூரண அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டிருத்தலவசியம்.

இதற்காக வழமையான பாடங்களுடன் சமயம், அழகியற்கல்வி, தொழிற்கல்வி, உடற்கல்வி என்பனவும் கட்டாய பாடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டன. அடிகளார் முன் வைத்த பாடவிதானம், 1972இல் கல்வி புனரமைப்புச் செய்யப்பட்ட போது அகில இலங்கையிலும் அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் இப்பாடவிதானமாக அடிகளாரால் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டது என்பதையறிந்தவர் யாருமிலர்.

தாய்மொழி மூலம் கல்வி கற்பிப்பதாகும். அதே வேளை பன்மொழிக் கற்றலையும் அடிகளார் ஊக்குவித்துள்ளார். பிறமொழி இயங்களிலுள்ள சிறப்புக்களை உணர்த்த அடிகளார், அவற்றைத் தமிழ் மக்களும் அறிந்து சுவைக்க வேண்டுமென மொழிபெயர்ப்புகள் செய்துள்ளார். "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள், தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" எனும் பாரதியின் வாக்கை மெய்ப்படுத்தியுள்ளார்.

மேலும், பெண்கள் கல்வி கற்பதற்கு வசதியாக பாடசாலைகள் அமைக்கப்படல் வேண்டும். ஆண்கள் பாடசாலைகளிலும் உயர் கல்வி கற்பதற்கு வசதிசெய்யப்பட வேண்டும் என்ற அடிகளாரின் நோக்கத்திற்கமைய மட்/ சிவானந்த வித்தியாலயத்தில் 1975ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கு பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மேலும் கல்லடியில் அமைக்கப் பெற்றுள்ள விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் மூலம் பெண்கள் சங்கீதம், நடனம் போன்ற அழகியற் கலைகளையும் கற்பதற்கு வசதி ஏற்பட்டுள்ளது.

அடிகளாரால் உருவாக்கப்பட்ட பாடசாலைகள் பெண்களை அறிவுள்ளவர்களாக வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன்படக் கூடியவர்களாக உருவாக்குவதற்காகச் சிறப்பாகச் செயற்பட்டன. கல்வி கற்ற பெண்களினால் குடும்பப் பொறுப்புகளைச் சிறப்பாக நிறைவேற்ற முடியும். அதனால் "மாதர் தங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சி பெறச் செய்து வாழ்வோம்" எனத் தலைநிமிர்ந்து சொல்வார்கள். "ஆணுக்கு நிகராகக் கல்வி கற்றதினால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்கவும்" அவர்களாற் பாடுபட முடியும். சட்டங்கள் செய்யவும், நாட்டு நிர்வாகத்திற் பங்கு கொள்ளவும், கல்வி, ஞானம் பெற்று விட்டாலும் பெண்களுக்கே உரித்தான நியாயமான கடமைகளிற் தமது பங்களிப்பை வழங்குவார்கள்.

தரமான கல்வி வழங்கும் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாதிருந்த ஏழைப் பெண்களும் பாடசாலை சென்று கல்வி கற்று, நற்பிரஜைகளாக வாழ வாய்ப்பளித்த அடிகளது சமூகப் பணி காலத்தாலழியாது என்று கூறின் மிகையாகாது.

உசாத்துணை நூல்கள்:

(1) விபுலம்
(2) சிறப்பு மலர் உலக இந்து மகாநாடு - இலங்கை
(3) விபுலாநந்த வெள்ளிவிழா மலர் 1949 - இராமகிருஷ்ணமிசன் வித்தியாலயம், அக்கரைப்பற்று
(திருமதி. கங்கேஸ்வரி கந்தையா, பாலபண்டிதை)

சுவாமி விபுலாநந்த அடிகளின் கல்விப் பணியும். தமிழ்ப்பணியும்



சட்டத்தரணி, பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா, அவுஸ்திரேலியா

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளைப்பற்றி எத்தனை பக்கங்கள் எழுதினாலும் எடுத்தியம்பி, முடித்திட இயலாது. அத்தனை சிறப்போடு மொழியியல் விஞ்ஞானியாக, அறிவியல் மேதையாக, ஆத்மீக முனிவராக, ஆற்றல்மிகு பேராசிரியராக, இயற்றமிழ் வல்லுனராக, இசைத்தமிழ் ஆராய்சியாளராக, நாடகத்தமிழ் நல்லாசிரியராக, கல்வி வள்ளலாக நமது தாயக நிலங்களிலே நற்பணிபுரிந்தவர் அடிகளார் அவர்கள்.

தமிழுக்காக, தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ் இனத்திற்காக, தமிழ் இனத்தின் கல்வி மலர்ச்சிக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்தவர் சுவாமி விபுலாநந்தர் அவர்கள். உலகத்திலேயே முதல் தமிழ்ப் பேராசிரியரானவர் சுவாமி அவர்களே ஆவார். அந்த நிலையிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பதவி வகித்திருந்த சுவாமி அவர்கள் தமது பதவிக்கு ஆபத்து வரும் என்று தெரிந்தும்கூட, அடிமட்டத் தமிழ் மக்களுக்கு கல்வியறிவூட்டுவதில் அயராது உழைத்தார். மக்கள் எல்லோரையும் சமமாக மதித்தார். கல்வி எல்லோருக்கும் பொதுவானது என்று நினைத்தார். தீண்டத்தகாதவர் என்று தீயவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களுக்கும் கல்வி கிடைப்பதற்கு வழி சமைத்தார். சேரிகளில் வாழ்கின்ற மக்களுக்கும் சீரிய கல்வி சென்று சேரவேண்டும் என்பதற்காகப் பாரிய முயற்சிகளை அவர் எடுத்தார்.

தமிழ்நாட்டு மக்களிடையே கல்விமறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக தன்னிகரற்ற பணிகளை ஆற்றிய சுவாமி அவர்கள், இலங்கையிலும் ஏழைத் தமிழ் மாணவர்களுக்கு எழுத்தறிவித்த இறைவனாவார். லண்டன் விஞ்ஞானப் பட்டதாரியான சுவாமி அவர்கள் இலங்கையின் முதலாவது தமிழ்ப்பண்டிதர் என்ற பெருமைக்குரியவர். கொழும்பு அரசினர் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் புனித பத்தரிசியார் கல்லூரியிலும் பௌதிகவியல் ஆசிரியராகப் பணி புரிந்த அடிகளார், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராக மட்டற்ற பணியாற்றியவர். இன்று கொழும்பு மாநகரிலே சிறந்து விளங்குகின்ற விவேகானந்தா வித்தியாலயம், மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், காரை தீவு சாரதா வித்தியாலயம் ஆகியவற்றை ஆரம்பித்தவர் சுவாமியவர்களே.

அவை மட்டுமா? யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம், விவேகானந்தா வித்தியாலயம், திருகோணமலை இந்துக்கல்லூரி ஆகியவற்றைப் பொறுப்பேற்று நடாத்தியதுடன் வண்ணார் பண்ணையில் அநாதைச்சிறுவர் இல்லத்தினை அப்போதே ஆரம்பித்து வைத்தவர் விபுலாநந்த அடிகளே. இலங்கை மக்களுக்கு மும்மொழிக் கொள்கையே உகந்தது என்பதை அப்போதே துணிந்து கூறியதுடன், மட்டக்களப்பு சிவானந்தாவித்தியாலயத்தில் அதனைச் செயற்படுத்தியும் காட்டிய தீர்க்கதரிசனம் மிக்க தமிழ் மறவர் சுவாமி விபுலாநந்த அடிகள்.

எவ்வித வேறுபாடுமின்றி எல்லா மக்களுக்கும் கல்வி கிடைக்கவேண்டும் என்பதற்காக யாழ்ப் பாணத்திலும், மட்டக்களப்பிலும் சுவாமி அவர்கள் ஆற்றிய பணிக்கு நிகராகப் பணிபுரிந்தோர் அவரதுகாலத்திற்கு முன்னர் என்றாலும் சரி, அவருக்குப் பின்னர் இன்றுவரை என்றாலும் சரி யாருமே பிறந்ததுமில்லை, உயர்ந்தவராய்த் திகழ்ந்ததுமில்லை, பணியிலே சிறந்ததுமில்லை. தமிழர்களுக்குக் கல்வி ஊட்டுவதிலே தளராத அவரது முயற்சியினால் ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் எண்ணற்ற தமிழ் அறிஞர்கள் தோன்றினார்கள். பேராசிரியர்களாக, பண்டிதமணிகளாக, புலவர்மணிகளாக, தமிழ் வித்துவான்களாக, வாழையடி வாழையாக உருவாகினார்கள். அதனால் சுவாமியவர்கள் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் மொழி வளர்ச்சியினதும், தமிழ்க்கல்வி உயர்ச்சியினதும் கருவாகினார்கள்.

1927ஆம் ஆண்டு, மகாத்மா காந்தி அவர்கள் இலங்கைக்கு வருகை தந்தபோது யாழ்ப்பாண வாலிபர் சங்கத்தின் தலைவராக அவரை வரவேற்றவர் விபுலாநந்த அடிகள் என்பதை அறியும்போது, தேசிய அளவிலே அடிகளார் அவர்கள் எத்தனை பெருமைக்குரியவராக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார் என்பதை எண்ணி வியந்து நிற்கின்றோம். சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறைக்கான பாடத்திட்டத்தினைத் தயாரித்தவர் சுவாமி விபுலாநந்தர் அவர்களே. அதன்மூலம் சீரியவழியில் தமிழ் ஆராய்ச்சிக்கல்வி தொடர்வதற்கும், தமிழ் ஆராய்ச்சிக் கலை வளர்வதற்கும், தமிழ்மொழியின் நிலை உயர்வதற்கும் அடிகளார் காலாக அமைந்தார்.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தால் அமைக்கப்பட்ட கலைச் சொல்லாக்கப் பேரவையின் தலைமைப் பொறுப்பை ஏற்று அறிவியல் தமிழை உலகுக்கு அறிமுகம் செய்துவைத்தவர் அடிகளார் அவர்களே. கணிதம், வரலாறு, பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், இராசாயனவியல், உடல்நலவியல், புவியியல், விவசாயவியல் ஆகிய ஒன்பது துறைகளில் கலைச்சொற்களை ஆக்குதற்காக ஒன்பது அறிஞர் குழுக்கள் அமைக்கப்பட்டன. அந்த ஒன்பது குழுக்களுக்கும் பொதுத் தலைவராகவும், இரசாயனவியல் குழுவின் தலைவராகவும் விபுலாநந்த அடிகள் நியமிக்கப்பட்டார்.

அடிகளாரின் தலைமையிலான அந்த அறிஞர் குழுக்களின் அரும்பணியினால் பத்தாயிரம் தமிழ்க்கலைச் சொற்களைக் கொண்ட கலைச்சொல் அகராதி 1938 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. உலகின் அறிவியல் மலர்ச்சிக்குத் தகுந்தவகையில் தமிழ் மொழியின் வளர்ச்சி அமைந்திட இந்த அகராதி பெரும் பங்காற்றிக் கொண்டி ருக்கின்றது.

சுவாமி அவர்கள், இந்தியாவில் இராமகிருஸ்ண மடத்தால் வெளியிடப்பட்ட வேதாந்த கேசரி என்னும் ஆங்கிலப் பத்திரிகைக்கும், இராமகிருஸ்ண விஜயம் என்னும் தமிழ்ப் பத்திரிகைக்கும் ஆசிரியராகப் பணியாற்றினார். அவரால் அவ்விதழ்களில் எழுதப்பட்ட கட்டுரைகளும், ஆசிரியர் தலையங்கங்களும் சமய உண்மைகளை விளக்குவனவாக மட்டுமன்றித் தமிழ் மொழி, தமிழ்ப்பண்பாடு என்பவற்றைப் பற்றிய கல்வியைப் பொதுமக்களுக்கு ஊட்டுவனவாகவும், பரப்புரை செய்வனவாகவும் அமைந்திருந்தன.

தமிழ் இலக்கியம் பாரதிக்கு முன்னால் பாரதிக்குப்பின்னால் என்று இன்றைக்கு வரையறை செய்யப்படுகின்றது. அந்த அளவுக்குத் தமிழ் இலக்கியத்திலே தாக்கத்தை ஏற்படுத்தியவர் மகாகவி பாரதியார். பாரதி யாரைப்பற்றி ஆயிரக்கணக்கான நூல்கள் வந்துவிட்டன. இலட்சக்கணக்கான கட்டுரைகள் எழுதப்பட்டுவிட்டன. பாரதியைத் தெரியாத தமிழர்கள் பட்டிகளில், தொட்டிகளில்கூட இல்லை என்கின்ற அளவுக்கு அவரது பாடல்கள் படித்தவர்களையும், பாமரர்களையும் எட்டியிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் சுவாமி விபுலாநந்த அடிகளே.

பாரதியாரின் முற்போக்குக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத பண்டிதர்கள் பலர் பாரதியை அவமதித்தார்கள். அவரின் பாடல்களை வெறுத்தார்கள். அவற்றை இலக்கியமென்று ஏற்க மறுத்தார்கள். மக்களுக்குத் தெரியவராதபடி மறைத்தார்கள். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாரதியின் பாடல்களைப் புறக்கணித்தார்கள். படித்தவர்கள், விபுலாநந்தரின் அறிவை மதித்தவர்கள், அவருக்குப் பதவி அளித்தவர்கள் ஆகி யோரில் பலர், பாரதியை வெளி உலகிற்கு மறைத்தார்கள். அவரின் பெருமையைக் குழிதோண்டிப் புதைத்தார்கள். இத்தனைபேருக்கும் எதிராக பாரதியை மகாகவியாக படித்த மக்களிடையே உலவவிட்டவர் விபுலாநந்த அடிகள் என்றால் அவரது அஞ்சா நெஞ்சத்தை என்னென்பது?

விபுலாநந்தர் தோன்றாதிருந்திருந்தால், தமிழ் நாட்டில் கால் ஊன்றாதிருந்திருந்தால், மகாகவி பாரதியாரை உலகம் காணாதிருந்திருக்கலாம். பாரதியின் தமிழ் வீணாக மடிந்திருக்கலாம். சங்ககாலத்திற்கு முன்னர் தோன்றிய எண்ணற்ற இலக்கியங்களை ஆற்று நீரிலே எறிந்து அழித்ததைப்போல, தீயிலே போட்டு எரித்ததைப்போல சாதிவெறிபிடித்த மேதாவிகள் பாரதியின் பாடல்களையும் அழித்திருப்பார்கள். சுவாமி விபுலாநந்தர் அவர்கள் பல்கலைக்கழக மட்டத்திற்குப் பாரதியைக் கொண்டுசென்றதால் பாரதியை யாராலும் அழிக்க முடியவில்லை.

விபுலானந்த அடிகளின் தமிழ்ப் பணிகளிலே இமயமென உயர்ந்து நிற்பவற்றிலே அவர் பாரதியாரின் பாடல்களுக்கு அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தமையும் ஒன்றாகும். சங்க இலக்கியங்களுக்கு நிகராக எண்ணப்படுகின்ற, "கங்கையில் விடுத்த ஓலை" என்னும் அடிகளாரின் கவிதை மலரும், மற்றைய இனிமையான கவிதைகளும், எண்ணற்ற கட்டுரைகளும், இயற்றமிழுக்கு அவர் ஆற்றிய பணியினை இயம்பிக் கொண்டிருக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டில் இசைத்தமிழுக்குச் சூட்டப்பட்ட மகுடமெனத் திகழ்கின்ற "யாழ்நூல்" விபுலாநந்த அடிகளாரின் இசைத் தமிழ்ப் பணியினை இசைத்துக் கொண்டிருக்கின்றது. வழக்கொழிந்து போன பண்டைத்தமிழ் இசைநூல் இலக்கணத்தை யாழ்நூல் வகுத்துரைக்கின்றது. நூற்றுமூன்று வகையான பண்களைப் பகுத்துரைக்கின்றது. மறைந்துகிடந்த தமிழிசை மரபுகளை எடுத்துரைக்கின்றது.

1947 ஆம் ஆண்டு ஜூன்மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் இந்தியாவில், கரந்தைத் தமிழ்ச்சங்கத்தினால் யாழ்நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது. யாழ்நூல் அரங்கேற்றம் நடைபெற்றதன் பின்னர் நாற்பத்து ஐந்து நாட்களே அடிகளார் இவ்வுலகில் வாழ்ந்தார்கள். பதினான்கு ஆண்டுகள் அடிகளார் அவர்கள் அயராது செய்த ஆராய்ச்சியின் பலனாக தமிழ் இசையின் தொன்மையைத் தமிழ் உலகம் அறிந்துகொண்டது. தமிழ் இசையின் அருமையைத் தமிழிசை உலகம் புரிந்துகொண்டது. தமிழ் இசையின் பெருமையை எல்லா உலகமும் தெரிந்துகொண்டது. அவருக்குப்பின்னர் தமிழ் இசைபற்றி ஆராய்கின்ற அறிஞர்களுக்கு யாழ்நூலே ஆதாரமாய் அமைந்தது.

மதங்க சூளாமணி நாடகத்தமிழுக்கு அடிகளார் வழங்கிய நல்லதொரு நூலாகும். சேக்ஸ்பியருக்கு அடிகளார் வைத்த பெயரே மதங்க சூளாமணி என்பதாகும். சேக்ஸ்பியரின் பன்னிரண்டு நாடகங்களைத் தெரிந்தெடுத்து அவற்றின் சிறப்புக்களை இந்நூலில் அடிகளார் ஆராய்ந்துள்ளார். அந்த ஆங்கில நாடகங்களில் உள்ள சுவைமிகுந்த உரையாடல் பகுதிகளை சுவைகுன்றாமல் செய்யுள் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

நாடக இலக்கணங்கள் பற்றி நயம்பட எடுத்துரைத்துள்ளார். கூத்துக்களின் வகைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். பண்டைத்தமிழ் மக்களின் வாழ்வியலோடு கூத்துக்கள் கொண்டிருந்த தொடர்பு பற்றிக் கூறியுள்ளார். தமிழ்நூல்கள் தருகின்ற தகவல்களையும், இசைநாடக இயல்புகளையும் கருத்துரை செய்துள்ளார்.

இவ்வாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராக, இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராக, சென்னைப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளின் பங்காளராக, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் கௌரவத்திற்குரியவராக, மதுரைத் தமிழ்ச்சங்கத்தினால் பெரிதும் மதிக்கப்பட்ட அறிஞராக அடிகளார் அவர்கள் தமிழுக்கு ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன. அடிகளார் அவர்கள் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்ப் பாடசாலைகளை அமைத்தார். வறிய மாணவர்களது கல்வி மேம்பாட்டுக்காக உழைத்தார். அதன்மூலம் தமிழையும் வளர்த்தார், தமிழ் மக்களின் கல்வியையும் வளர்த்தார்.


ஈழமுதற்பனி இமயம்வரைக் கொடி கட்டுமிசைத்தமிழன்
இந்திய வாணியை ஆங்கிலபீடத் தேற்றிய புதுமையினோன்
தோழமை கொள்வட மொழிமயமாகிய தொன்மையிசைத்தமிழைத்
தூயதனித்தமிழ் வடிவிற் தோற்றிய தந்தையெனுந் துணையான்"

என்று அடிகளார் புகழ் பாடுகிறார் அவரின் மாணவர்களில் ஒருவரான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். முத்தமிழையும் வளர்த்தவர், முழுத் தமிழ் இனத்திற்காகவும் உழைத்தவர் சுவாமி விபுலாநந்த அடிகளார் அவர்கள். அவருக்கு நிகராக அவருக்கு முன்னரும் சரி, அவருக்குப் பின்னரும் சரி இதுவரை யாரும் யாரும் இலங்கையில் தோன்றியவர் இல்லை என்றால் அதற்கு நியாயமான எதிர்வாதம் இருக்கமுடியாது. தேனாக இனிக்கின்ற நமது செந்தமிழின் சிறப்பை வானுயரப் பரப்புதற்கு வாராத வந்து - நமது மத்தியிலே உதித்த அந்த மாமணியின் புகழை, அவர் விட்டுச்சென்றுள்ள அறிவொளிவீசும் படைப்புக்களை எட்டுத்திக்கும் பரவச்செய்வோம்! எல்லோரும் பயன்பெறச் செய்வோம்!!

வாழ்க தமிழ். வாழ்க விபுலாநந்த அடிகளின் புகழ்!

சுவாமி விபுலாநந்தர் வணங்கிய பிள்ளையார் சிலை

சுவாமி விபுலாநந்தர் சிறுவயது முதல் சிறிய பிள்ளையார் சிலை ஒன்றை மணி ஒலித்துப் பூஜித்து வந்தார். இந்த சிலையையும் அத்துடன் சிறு மணி ஒன்றையும் தனது சிஷ்யர்களுள் ஒருவரான அருணாசலம் தேசிகர் அவர்களின் மகள் செல்வி கண்மணி அருணாசலம் அவர்களுக்கு சுவாமிகள் பரிசாகக் கொடுத்திருந்தார். செல்வி கண்மணி அருணாசலம் அவர்கள் அதை தனது உறவினர்
திருமதி ரஞ்சினி ரூபாஹரன் அவர்களிடம் கொடுக்க அது இன்றும் தேசிகரின் அயலவரும் உறவினருமான திருமதி செல்லம் பாக்கியராஜா அவர்களின் இல்லத்தில் பூஜிக்கப்படுகின்றது. இந்தச் சிலையை சுவாமிகள் விளையாடிய பிள்ளையார் சிலை என்கின்றனர் திருமதி பாக்கியராஜா குடும்பத்தினர்.



புகைப்படம்: புருஷோத்தமன் கந்தையா

சுவாமி விபுலாநந்தர் யாழ்நூலில் வெளிப்படுத்தும் பண்டைத்தமிழரின் இசைமரபுகள் பற்றிய தரவுகளும் உண்மைகளும் ஓர் ஆய்வு



லோகா ரவிச்சந்திரன் M.A

ரொறன்ரோ, கனடா

சுவாமி விபுலாநந்தரின் யாழ்நூலில் ஆராயப்பட்டுள்ள பண்டைத் தமிழரின் இசைமரபுகள், இசைப்பாணர்கள், இசைக்கருவிகள் பற்றிய தரவுகளையும், அவை தரும் உண்மைகளையும் இக்கட்டுரை சுருக்கமாக ஆராய்கின்றது. இசையினை ஏழ்வகையின் அடிப்படை எனக் கண்டவன் தமிழன். இசைப்பு இசை யாகும். (தொல்-சொல், உரி நூற்பா 12) இசைப்போரையும், கேட்போரையும் உணர்வினால் இசைவிப்பது இசையாகும். தொல்காப்பியர் குறிப்பிடும் கருப்பொருள்களில் இசையோடு தொடர்புடைய மூன்றினுள் ஒன்று யாழ். பண்டை நாளில் இசை வளர்த்த பாணர் மரபினர் யாழ்க் கருவியை எப்போதும் இசைத்தே பாடல்களைப் பாடிய-தாகச் சங்க இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன.

பண்டைத்தமிழர் பண்பாட்டில் சிறப்புற்று விளங்கிய இசைத்தமிழின் மாண்புகள் நன்கு ஆராயப்படாதிருந்த ஒரு நிலையில், பல ஆண்டுகள் அரிதின் முயன்று யாழ்நூலைப் படைத்துப் பழந்தமிழிசை வடிவத்திற்கு விளக்கம் தந்த பெருமை அடிகளையே சாரும். பழந்தமிழ் இலக்கியங்களில் ஆர்வம் கொண்டிருந்த சுவாமிகள் இசைத்துறை யில் தனக்கு ஈடுபாடு ஏற்றபட்டமை பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

ஈழ நாட்டின் குணபாலிலே என் முன்னோர்க்கு உறைவிடமாகிய காரேறுதீவிலே பழமையான கண்ணகி யார் கோவில் ஒன்றுள்ளது. அதன் வழியாகவும் சிலப்பதிகாரத்தின் மீதுள்ள ஆர்வம் பெருகிற்று" என்கிறார். அங்கே வழக்கிலுள்ள நாட்டார் இசைப்பாடல்களும், உடுக்குச்சிந்து, காவியம் முதலான வழிபாட்டுப் பாடல்களும், மட்டக்களப்பு வாவியிலே அடிகளார் கேட்டு மகிழ்ந்த நீரர மகளிர் இசைத்தொனிகளும் அடிகளாரை இசைத்தமிழ் ஆய்வில் ஈடுபடச் செய்தன.

அத்துடன் இலங்கை வேந்தன் இராவணன் திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆகியோரின் இசை வரலா-றுகளும் சுவாமி விபுலாநந்தரைப் பழந்தமிழ் இசைக்கருவிகள் பற்றி ஆராய உணர்வூட்டியிருக்கலாம். மேலும் அண்ணாமலை, சென்னைப் பல்கலைக்கழக அறிஞர்கள், மற்றும் தமிழகத்தில் வாழ்ந்த இசை ஆர்வலர் தொடர்பும், அவர்களது வேண்டுதல்களும் யாழ்நூல் தோற்றம் பெறுவதற்குத் துணையாக அமைந்தன.

யாழ்நூல் ஆராய்ச்சியின் மூலம் பழந்தமிழிசை மரபுகளையும், நுட்பங்களையும் அறியமுடிகின்றது. இதன் வாயிலாக பண்டைய இசைக்கருவிகளான யாழ்வகைகளை இனம் காணல், அவற்றின் வடிவமைப்பையும் செயல்திறனையும் அறிதல், தமிழிசை இலக்கணங்களை வகுத்து அறிதல், இசைக்கணிதப் பயன்பாடுகளை அறிதல், தேவாரப் பண்களின் விளக்கங்களை அறிந்து அவற்றைப் பயிலுதல், தமிழிசை வரலாற்றை அறிதல், தமிழ்ப் பண்கள் வடமொழியில் இராகங்களாக மாற்றம் பெற்றமையை அறிதல் முதலான பயன்களை அறிய முடிகின்றது.

சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், இடைக்கால இலக்கியங்கள். வடமொழிநூல்கள், கல்வெட்டுக்கள் முதலானவற்றைத் துணைகொண்டு தமது இசை ஆய்வைச் சுவாமிகள் மேற்கொண்டுள்ளார். கணிதம், பௌதிகம், சோதிடம், கர்நாடக இசை முதலான பல்வேறு துறைகளில் அடிகளார் பெற்றிருந்த அறிவுப்புலமை, தமிழிசை ஆய்வு முழுமை பெற்றுச் சிறந்த இசைத்தமிழ் ஆய்வு நூலாக யாழ்நூல் வெளிவருவதற்குப் பின்னணிக-ளாயிற்று. இசைத்துறை ஆய்வில் ஈடுபட்டு வந்த அடிகளாருக்கு டாக்டர். உ.வே. சாமிநாதஜயர், திரு. வி. கல்யாணசுந்தரனார் முதலியோருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அதுமட்டுமன்றி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக இருந்த காலத்தில் (1931 - 1933) பழந்தமிழ் யாழ் இசைக்கருவிகள் பற்றிய ஆய்வில் தீவிரமாக ஈடுபட்டார். அப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறையின் மேற்பார்வையாளராகவும் அடிகளார் செயற்பட்டார். அங்கே கடமையாற்றிய சங்கீத கலாநிதி க. பொன்னையா பிள்ளையிடம் கர்நாடக இசைமுறையினையும் கற்றுக் கொண்டார். இசைத்துறை ஆராய்ச்சியில் முழுமையாக ஈடுபட விளைந்த அடிகளாருக்குப் பேராசிரியர் பதவி இடைஞ்சலாக இருந்தமையால் அப்பதவியினை 1933 இல் துறந்தார். பல்வேறு இசைத்துறை அறிஞர்களோடு உரையாடி வேண்டிய செய்திகளைப் பெற்றார். தமது ஆராய்ச்சியின் பயனாகக் கண்டறிந்த செய்திகளைப் பேருரைகளாகவும், ஆராய்ச்சிக் கட்டுரைகளாகவும் வெளிக்கொணர்ந்தார்.

அவ்வகையில் வெளியிடப்பட்டனவற்றில் பண்ணும், திறனும், குழலும், யாழும் என்னும் இசையும் பாலைத்திரிபு, சுருதிவீணை, சங்கீதமகரந்தம், இசைக்கிரமம், எண்ணல் அளவை முதலிய ஆய்வுக் கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. இசைத்தமிழ் பற்றி சென்னை, திருச்சி வானொலிகளிலும் சிறப்புரை வழங்கியுள்ளார். 1942இல் மதுரையில் நிகழ்த்திய பேரூரை ஒன்றில் 11 வடமொழிப் பரதமும், சங்கீத ரத்னாகரமும் சிறந்த முறையிலே மொழி-பெயர்க்கப்படுமாயின் அம்மொழிபெயர்ப்புகள் தமிழிசையின் மறுமலர்ச்சிக்கு உதவும் என்பது என் கருத்து" என சுவாமி விபுலாநந்தர் குறிப்பிட்டமை நோக்கத்தக்கது.

சுவாமிகள் பழந்தமிழரின் இசைக்கருவிகள் பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியச் சான்று கொண்டு ஆராய்ந்துணர்ந்து, பழந்தமிழர் யாழிசைக் கருவிகளை ஓவியமாக வரைந்து முதன்முதலில் யாழின் உருவத்தையும் வெளிப்படுத்தினார். இவ்வாறாக அடிகளார் பத்தாண்டுகள் அரிதின் முயன்று தமிழிசை வரலாறு, பண்ணிசை மரபு முதலானவற்றைப் பற்றி விரிவாக ஆராய்ந்து யாழ் நூலை எழுதி நிறைவு செய்தார். ஆயிரம் ஆண்டுகளாக வழக்கற்று மறைந்த யாழ்க்கருவிகள், தமிழிசை நுணுக்கங்கள் என்பவற்றின் சிறப்புகளை எல்லாம் தம் நுண்ணுர்வினால், ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ள இசைநூற் களஞ்சியமே யாழ்நூல்.

சுவாமிகளின் யாழ்நூல் ஆராய்ச்சியும், யாழ்நூல் ஆக்கமும் 1947இல் முழுமை பெற்றன. "ஐயிரண்டு ஆண்டுகளாக நேரம் கிடைக்கும் போதெல்லாம் முயன்று குருவருளினாலும், தமிழ்த் தெய்வத்தின் கடைக்கண் நோக்கினாலும், இவ்வாராய்ச்சி நூலினை ஒருவாறு எழுதி முடித்தேன் என சுவபாமிகள் குறிப்பிடுவர். கரந்தைத் தமிழ் சங்கம் செந்தமிழ்ப் பேரன்பர் கோனூர் ஜமீன்தார் நச்சாத்துப்பட்டி பெ. ராம. ராம. சித. சிதம்பரம் செட்டியார் அவர்களின் நிதியுதவியுடன் அச்சேற்றி, 5, 6 ஜூன் 1947 இல் திருக்கொள்ளம் புத்தூர் கோவிலில் அரங்கேற்று விழாவையும் சிறப்பாக நடத்தியது.

சுவாமி விபுலாநந்தரின் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்ட முளரியாழ், சுருதி வீணை, பாரிசாதவீணை, சதுர்தண்டி வீணை ஆகிய இசைக்கருவிகள் ஊர்வலமாக மண்டபத்திற்கு எடுத்து வரப்பட்டன. அந்த விழாவிலே வீணை வித்தகர் சிவானந்தம் பிள்ளை அவர்கள் சுவாமிகள் உருவாக்கிய வீணைகளை இசைத்து அவற்றுக்கு உயிரூட்டினார். இப்பின்னணி யாவும் யாழ் நூலின் அருமை பெருமைகளை அறிந்து கொள்ளத் துணை செய்வன.

சுவாமிகள் தமது கணிதப் புலமையை இசைத்தமிழ் ஆய்வுக்குப் பயன்படுத்தினார். "இசைக் கணிதம் பற்றியும், வானசாஸ்திரம், சோதி டநூல்கள் என்பவற்றில் எண்கள் கையாளப்படும் முறைமை பற்றியும் சுவாமிகள் யாழ் நூலிலே விளக்கியுள்ளார். 22 சுருதிகள் அவற்றின் அலகுகள், அளவை பிறக்கும் முறைமை என்பன விரிவாக இசையுறுப்பியலில் விளக்கப்பட்டுள்ளன.

இவ்வரிய நூல் பழந்தமிழ் இசை இலக்கணத்தைக் கூறுவதோடு 103 என்னூற் தொகையினவாகிய பண்களின் உருவத்தை வெளிப்படுத்தி, அவை தம்மை இசைப்பதற்கு வேண்டிய அலகு நிலைகளைக் குறிப்பிட்டு, வழக்கொழிந்து பல்லாண்டு மறைந்து கிடந்த பழந்தமிழிசை மரபிற்குப் புத்துயிர் அளிப்பதாயிற்று. மேலும், பண்டையோர் கொண்ட 22 அலகுகள் (சுருதிகள்) எவையெனக் காட்டியதோடு 23 ஆவதாக நின்ற பிரமாண சுருதியென்னும் விதியிசையின் அளவினையும், அது அளவிற் சிறியதாயினும் எண்ணிக்கைக்கு ஈரலகு பெறும் என்னும் பேருண்மையினையும் யாழ் நூல் நன்கு விளக்குகின்றது. சுவாமிகள் இசை நூல்களின் வரன்முறைபற்றிக் கூறும்போது, தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்த இசைநூல்கள் அழிந்தன என்றும், தொல்காப்பியர் அந்நூல்களின் வழிச் சில நூற்பாக்களை அமைத்துள்ளார் என்றும் யாழ்நூலின் ஒழியியலில் குறிப்பிடுவர். தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திலே மாத்திரையளவு பற்றிக் கூறுகின்ற நூற்பாக்கள் அனைத்தும் இசைநூற் பொருளினைத் தழுவியவையாகும். அகத்திணைச் சூத்திரத்தில் யாழின் பகுதி கூறும்போது ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு யாழ் குறிப்பிடப்படுகின்றது. அங்கு யாழ் என்றது அவ்வவ் நிலத்திற்குரிய பண்களாகும். தொல்காப்பியர் நான்கு நிலங்களுக்கும் முறையே குறிஞ்சியாழ், முல்லையாழ், மருதயாழ், நெய்தல்யாழ் என நான்கு பெரும் பண்ணிசைகளைக் குறிப்பிட்டார். அவற்றிற்கு 21 இசைத்திறன்கள் இருந்தமையைச் சுவாமி விபுலாநந்தர் தமது யாழ்நூலில் (பக்கம் 374 -375) தெளிவாக விளக்கியுள்ளார்.

இசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு முதலிய இசை இலக்கண நூல்கள் தொல்காப்பியர் காலத்தில் பலராலும் பயிலப்பெற்றன. சிகண்டி முனிவரால் இயற்றப்பட்டு கால வெள்ளத்தால் அழிந்து போன "இசை நுணுக்கம்" என்ற நூலில் இருந்து, அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையிற் பயன்படுத்திய சில நூற்பாக்கள் யாழ்நூலின் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளன. குடுமியா மலையில், பல்லவ மன்னனாகிய மகேந்திரவர்மன் காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டின் பொருள், ஜயந்திரிபுற இந்நூலினூடாக விளக்கப்பட்டுள்ளது. அதிற் குறிக்கப்பட்ட இசையினை இசைத்தற்குரிய முளரியாழ் என்னும் கருவியின் அமைப்பும் விளக்கப்பட்டுள்ளது. பண்டைத் தமிழகத்தில் யாழ் இசைக்கருவி பல்வேறு வடிவங்களில் வளர்ச்சி பெற்று பயன்பாடு மிக்கனவாக விளங்கின என்பதை யாழ்நூல் நிறுவுகிறது. வட இந்தியாவில் பண்பாட்டுக்குரியதே வீணை என்பது சுவாமி விபுலாநந்தரின் கொள்கை.

பண்டைத்தமிழ் மக்களிடையே வழக்கிலிருந்த வில்யாழ், சீறியாழ், சகோடயாழ், செங்கோட்டு யாழ், மகரயாழ் என்பவற்றின் தோற்றம், அமைப்புமுறை, பயன்பாடு, யாழ் வாசிப்போர் வரன்முறை முதலான விடயங்கள் யாழ் நூலிலே நுட்பமாக அமையப்பட்டுள்ளன. மலைபடுகடாத்தில் கூறப்படும் முண்டக யாழினை அடிகளார் முளிரியாழ் எனப் பெயரிட்டு அஃது ஒன்பது நரம்புகளைக் கொண்டிருந்தமை பற்றியும், முளரியாழில் எவ்வாறு இசைகூட்டுதல் வேண்டும் என்பது பற்றியும் ஆராய்ந்து எழுதியுள்ளார்.நரம்புக்கருவிகளில் குழலும் யாழும் பெருகிய வழக்குடையன. வில்யாழ், பேரியாழ், சீறியாழ் (செங்கோட்டி யாழ்) சகோடயாழ் எனப் பல்வேறு யாழ் வகைகள் பண்டு வழக்கிலிருந்தன. இத்தகைய யாழ்கள் இன்று வழக்கொழிந்து விட்டன. சங்க இலக்கியங்களில் யாழின் தோற்றம், இசையமைதி, இசைக்கும் முறைமை ஆகியன உரைக்கப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் யாழாசிரியரின் இலக்கணம் கூறப்படுவதோடு, யாழ் இசைக்கும் நுட்பமும் விளக்கப்படுகின்றது. பெரும்பாணாற்றுப்படையைத் துணைகொண்டு சுவாமிகள் வில்யாழ் பற்றிய விளக்கங்களை யாழுறுப்பியலில் தருகின்றார்.

முல்லை நிலத்து மக்கள் வில்யாழைப் பயன்படுத்திய விதம், வில்யாழின் அமைப்பு, அதன் உறுப்புகள், நரம்புகள் கூட்டும் முறை, முறுக்காணி. ஒற்றுறுப்பு முதலியன அமைக்கும் முறை, இசை கூட்டும் முறை, முறுக்காணி, ஏற்றுறுப்பு முதலியன அமைக்கும் முறை, இசை கூட்டும் முறை என்பன பற்றிய விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளன.

பண்டைத்தமிழ் மக்களிடையே வழங்கிய யாழ் வகைகளுள் பேரியாழ் சிறப்பானது என்பதைச் சங்க இலக்கியம் கூறுகின்றது. இதனை 27 நரம்புகளையுடைய பேரியாழ் என்றும், பெருங்கலம் என்றும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் குறிப்பிடுவர். இவ்வாறாக யாழ் வகைகளின் படிமுறை வளர்ச்சியைக் கண்டறிந்த சுவாமி விபுலாநந்தர் அவற்றின் வளர்ச்சி நிலையைக் காலந்தோறும் வளர்த்து, கன்னிப்பருவம் எய்திய ஒரு பெண்ணாக உருவகித்துக் கூறுதல் சுவை பயப்பதாகும். யாழ் குழந்தையாக இருந்து, ஆச்சியரை மகிழ்வித்து, பின்னர் பேதைச் சிறுமியாகி, பாணர், பாடினியரோடு நாடெங்கும் நடந்தது. பின்னர் பேரியாழ் என்னும் பெயரில் பெதும்மையாகி பெரும் பாணரொடு சென்று ஆடவும், அணியும் பூண்டது. பின்னர் மங்கையாகி, அரங்கில் திறமை காட்டிற்று. பின்பு மடந்தையாகித் திருநீலகண்டப் பெரும்பாலானரோடும் பின்னர் மதங்கசூளாமணியாரோடும் கோயில்களை வலம் வந்தது. பின்னர் அரிவையாகி அரசிளங்குமரியர்க்கு இன்னுயிர்த் தோழியாயிற்று என்பர்.

அடுத்து பாயிரவியலிலே ஏழுவகைப்பட்ட இசைநரம்புகள் பற்றியும், அவற்றின் ஓசை வேறுபாடுகள் பற்றியும் விளக்கியுள்ளார். நால்வகைப் பண்ணிசைகளுள் பாலையாழ் (பாலைப்பண்) என்பது ஒன்றாகும். இதுபற்றி பாலைத்திரிலியல் என்ற பகுதியில் விரிவாக ஆராய்கின்றார். இசைநரம்பியல், மாலைத்திரிபியல், பண்ணியல் முதலிய பகுதிகளில் எண்களை கருவியாகக் கொண்டு இசை நுட்பங்கள் ஆராயப்படுகின்றன. யாழ்நூல் ஆய்வில் பயன்படுத்திய இசைக்கணிதம பற்றிய விரிவான விளக்கம் ஒழியியலிலே தரப்படுகின்றது. எண் கணிதம் இசைத்துறை மாணவர்களுக்குப் பயன்படுமாறு விளக்கப்பட்டுள்ளமையின் நுட்பம் போற்றுக்குரியது. இசை நரம்பியலிலே கிளையிற் பிறக்கும் இசை நிலைகள, நட்பிற் பிறக்கும் இசைநிலைகள் என 22 இசைநிலைகள் விளக்கப்பட்டுள்ளன. இவற்றின் அலகு நிலைகள், அசைவெண்விகிதங்கள் என்பன வரன்முறை யாக இசைநரம்பியல் 4ஆம் பிரிவில் ஆராயப்பட்டுள்ளன. மேற்காட்டிய 22 நிலைகளின் அசைவெண் விகிதங்கள் ஒவ்வொன்றும் ஒழிபியலிலே இசைக்கணித முறையில் விளக்கப்பட்டுள்ளமை இசைத்தமிழ் ஆசிரியர்களின் கவனத்திற்குரியவையாகும்.

தமிழிசை மரபிலே பண்ணுநிலை, பாலைநிலை என்பன இடம்பெறுகின்றன. பாலைநிலை என்பது, குறித்த ஓர் இராகத்திற்கு ஆரோகணத்திலும், அவரோகணத்திலும் இன்ன ஸ்வரங்கள் வருவன என நிச்சயித்து நிறுத்துவதாகும். இவ்வாறு நிச்சயிக்கப்பட்ட ஸ்வரங்களிலே முதல், கிழமை, முடிபு, நிறை, கறை, மெலிவு என்பவற்றை அறிந்து, இசைப்புலவன் இராகத்தை ஆலாபனை செய்தலைப் பண்ணுரிமை என யாழ்நூல் விளக்கம் கூறுகின்றது. பரிபாடலின் இரைமரபையும் பொருள் மரபையும் ஆராய்ந்து அதிலே தேவகாணி இசைமரபைக் கண்டார். பின்னர் தேவாரங்களிற் பயின்று வரும் பண்களை விளக்கி. அவை தென்னிந்திய, வட இந்திய இசைகளில் எவ்வெவ் இராகங்களின் பெயர்களால் அழைக்கப்படுகின்றன என்பதையும் விளக்கியுள்ளார். இத்தகைய பண்கள் பற்றிய விளக்கங்களை தேவாரவியல் ஆராய்கின்றது. மேலும் வடமொழி இசைநூல்களாகிய சங்கீத பாரிஜாதம. சங்கீதரத்னாகரம் ஆகியவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடுகள், தென்னாட்டிற்கும், வடநாட்டிற்கும் இடையேயுள்ள இசை இலக்கண வேறுபாடுகள் என்பனவற்றையும் யாழ்நூல் குறிப்பிடுகின்றது. மேற்குறிப்பிட்ட வாறு யாழ்நூலிலே தொல்காப்பியம் முதல், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், சோழர்காலக் கல்வெட்டுக்கள் வரையிலான தரவுகள், வழியாகச் சுவாமி விபுலாநந்தர் பெற்ற ஆய்வுண்மைகள் பதிவாகத் தரப்பட்டுள்ளதோடு அவை பற்றி மேலும் ஆராய்வதற்குத் தூண்டுதலாகவும் அமைதல் நோக்கத்தக்கது.

சுவாமி விபுலாநந்தர் சமூக நோக்கு

திருமதி. ரஞ்சிதமலர் கருணாநிதி
(Masters in Education & Masters in Tamil)
உதவிக்கல்விப் பணிப்பாளர்
மட்டக்களப்பு மேற்கு வலையம், இலங்கை

"தோன்றிப் புகழோடு தோன்றுக என்ற கூற்றுக்கிணங்க கிழக்கின் ஒளியாகத் தோன்றி என்றென்றும் புகழோடு எம் மத்தியில் வந்தவரே விபுலாநந்தர். தமிழ் குலத்தவர் பசியும் பிணியும் நீக்கி பொருட்செல்வம் பெற்று சிறப்புடன் வாழவேண்டும் என்று கருதுவதும் நம் தமிழ் குலம் என உளப்பாட்டுத்தன்மை பன்மையிட் கூறுவதும் ஏனைய சமூகங்களை விட தமிழ்ச் சமூகத்தையும் துறக்காத விபுலாநந்தரின் உளபோக்கையும் எடுத்து காட்டுவது எம்மை அவரை போற்ற தூண்டுகின்றது.

1942 இவர் மதுரையில் நடை பெற்ற இயற்றமிழ் மகாநாட்டில் தலைமை தாங்கி பேருரை நிகழ்த்தியபோது "இரண்டரை கோடி என்னும் எண்ணினராகிய நம் தமிழ் குலத்தினர் அனைவரும் பசியும் பிணியும் நீங்கி பொருட் செல்வமும் செவிச் செல்வமும் அருட் செல்வமும் ஏற்ற பெற்றியெய்தப் பெற்று மண்ணக மாந்தர்க்கு அணியெனச் சிறந்து வாழ்வார்களாக" என்று கூறினார். இதன் மூலம் தமிழ் மொழி மீதும் தமிழ்ச் சமூகத்தின் மீதும் துறவு கோலம் பூண்டிருந்த போதும் அடிகளாரைப் தமிழ் பற்றி கொண்டிருந்தது. இதனால் அடிகளார் தமிழைப் துறக்க முடியாத துறவியானார்.

தனது தாயகமான மட்டக்களப்பினை முன்னேற்ற வேண்டுமென்ற சிந்தனையில் ஈடுபாடுடையவராய் இருந்தவர் விபுலாநந்த அடிகளாவார். அவர் பிறந்த மட்டக்களப்பு மண்ணில் நீர்வளமும் நிலவளமும் உண்டு. நீரும் நிலனும், நிலம் பொறியும் நெற்கட்டும் அங்கு உண்டு. இவை அனைத்தும் ஒரு நாட்டில் பெறப்படுமாயின் அந்த நாட்டுக்கு வேறு என்ன தேவை? மக்கள் வேண்டும் புகழ் பெற்றுள்ள மக்கள் வாழ்தற்கான உள இணைப்புக்கள் வேண்டும். குடியிருப்பதற்கு முறையாக அமைக்கபட்டுள்ள குடியிருப்புகள், கிராம புரங்கள் தேவை. அவற்றில் வசித்துது வரும் மக்களுக்கு பேரும் புகழும், புத்திசாலி தனமும், தெள்ளிய எண்ணமும், சலியாத உழைப்பும், பெருக்கிக் கொண்டே போய்கொண்டிருக்கும். பொருள் நிறைவும் வேண்டும். மக்கள் ஒருவரோடொ ருவர் நல்லிணக்கங் கொண்டு வாழப் பழகி கொண்டவர்களாகவும் இருத்தல் அத்தியாவசியம்: அதுவே சமூகப் பிணைப்பு: சமூக உறவு.

மக்களின் உளப்பாங்கு வளர்ச்சியுடன் கிராம வளர்ச்சி இணைக்கப்பட்டதாயிருத்தல் நலம். அவ்வாறு அமைந்திருந்தால் மேலும் மேலும் சமூக விருத்திக்கு இடமுண்டு. வாழ்க்கையின் சிகரத்தினையே அடைந்து விடலாம். எண்ணங்கள், சிந்தனைகள், உளவாக்கங்கள், நலம் பெற அமையப்பெறின் வாழ்க்கையின் முதற்படிக்கும், இறுதிப்படிக்கும் உறுதியான இணைப்பு அமைக்கபடும். அவ்வுறவே கல்வியின் முழுமையான நோக்கமாகும்.

எந்த அமைப்புக்கும் இணைப்புக்கும் காலப் பொருத்தமும் இடப்பொருத்தமும் இருத்தல் வேண்டும். கல்வியோ பொருளாதாரமோ நாடாண்மையோ கால இடப் பொருத்தமில்லாது நடைபெற இயலாது. முற்றாத சிந்தனையில்லாத எவ்வாக்கமும், எத்தனமும், சிந்தி எய்துதல் அசாத்தியம். எனவே, விபுலாநந்த அடிகளாரின் கல்வி ஒழுங்கில் அவர் சிந்தனையில் கொண்ட அம்சங்களாவன: ஊக்கங்கொள்ளுதல், எண்ணித்துணித்தல், கருமம் மேற் கொள்ளல் என்பனவாகும்.

இப்பூவுலகில் ஜெனித்த நாள் முதல் ஒரு குழந்தையானது கற்கத் தொடங்கி விடுகிறது. பல்வேறு இணக்கங்களை கொண்டுள்ள குழந்தை, கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து பெறவல்ல உலக விவகாரங்களத்தளைத்தையும் உற்றுணர்ந்து தொள்ளிய புலமையினைப் பெற்று விட எத்தனங்கள் பலவற்றினைச் செய்கிறது. அதன் உலகியலறிவு, முதல் ஐந்தாவது பராயத்துக்குள் தானே பெருக்கெடுத்து விடுகின்றது என்று "பிஜாயே" கூறுகின்றார்.

"கற்கை நன்றே! கற்கை நன்றே! பிச்சை புகினும் கற்கை நன்றே!" என்றும் அதிவீரராமனின் முதுமொழி உறுதி பெறுகின்றது. நீ எந்த நிலையில் இருந்தாலும் கற்பதை கை நழுவ விட்டு விடாதே! அதை உனது வாழ்க்கையின் விரதமாகக் கொள்வாயாக! அத்துடன் உணவையும் தேவையான அளவில் சுருக்கிக் கொள்வாயாக! அதுவே உனது விரதமாகும். வாழ்க்கையின் உறுதிப்பாடு அது. "அன்னம் பகு குர்வீத தத் விரதம்" இரு செல்வங்கள் மனிதனுக்கு இன்றியமையாதனவையாம். கல்விச் செல்வம் ஒன்று, உணவுச் செல்வம் மற்றது. பசியால் எக்கிப்போன வயிற்றில் படிப்பு ஏறுமா?

நாம் நமது வாழ்க்கைத் திட்டத்தினை திட்டவட்டமாக அமைத்துக் கொள்ள கடமைப்படுள்ளோம். அவ்விடயத்தில் நாம் எத்துணை முயற்சிதான் எடுத்தாலும் நமது நாற்பதாவது பராயம் வரை அரைப்பகுதி வாழ்க்கைத் திட்டவட்டத்தினைதான் நாம் அமைத்துக் கொள்ள முடியும். இது பிளேட்டோவின் சிந்தனையாகும். இதனையும் அடிகளாரும் இளமையில் கல் என்று கூறி நாற்பதாவது பராயம் வரை கல், படித்துக் கொள், சிந்தனை செய், தெளிவான எண்ணங்களை ஆக்கிக் கொள். ஊக்கம் கொண்டு உழை. நல்லிணங்களை நலமுற உணர்ந்து கொள். தகாத முடிவுகளைக் கட்டி எழுப்பி விடாதே என்று கூறினார்.

இத்தகைய விபுலாநந்தர் இன்னும் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இதனையே "புத்தகாசிரிய னாய் புகழ் பெறு யாழ் நூலாக்கி பத்திரிகையாசிரியராயும் பல்கலைக் கழகம் தன்னில் வித்தகாசிரியனாகவும் விளங்கிய விபுலாநந்தர் செந்திலன் அமரனாகி நித்தியம் வாழ்கின்றானே" ஒருவரின் சமூக நோக்கே அவரின் ஏனைய சிந்தனைகளுக்கான வாயிலாக அமைகின்றது. ஒருவரின் தத்துவ நோக்கைக்கூட சமூக நோக்கே நிருணயித்து விடுகின்றது.

ஏற்றத் தாழ்வுகள் மிக்க பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கின்றது. ஆசியாவில் சாதிகளாகவும் ஐரோப்பாவில் வர்க்கங்களாகவும் உலகப் பரப்பில் இனங்களாகவும் சமூகம் பிளவுண்டு கிடக்கிறது. இதனால் சமமின்மை மனிதனிடம் நிலவுகிறது. இப்பிரிவுகள் பற்றிச் சாதகமான அல்லது பாதகமான நோக்கு மனிதர் ஒவ்வொருவரிடமும் உண்டு. அந்நோக்கு ஒவ்வொருத்தரினதும் அறிவு அனுபவம், தத்துவநோக்கிற்கமைய உருவாகின்றது. விபுலாநந்தரின் இளமைக்கால வாழ்க்கையும் மட்டக்களப்புச் சூழலும் இராமகிருஷ்ண மடத்தொடர்பும் வேதாந்த ஞானமும் அவருக்கு சமூக பிரிவினைகளுக்கு எதிரான நோக்கையே கொடுத்தன.

"மனிதன் உடலமைப்பில் ஒரே மாதிரியாக இருந்தாலும், குண வித்தியாசத்தினால் பல்வகைப்படுவான்" என்ற விபுலாநந்தரின் கூற்றில் மனிதனை வித்தியாசப்படுத்துவது குலமல்ல குணம் என்ற தொனி தெரிக்கிறது. உடலமைப்பில் அனைவரும் ஒன்றுதான் என்ற இவர் கூற்றில் மனிதர் அனைவரும் பார்வையில் ஒன்றுதான்: சமம்தான் என்ற பொருளும் தொனிக்கின்றதல்லவா?

மனிதர்கள் இரண்டு விதமாக வகுக்கப்படுவர். ஒரு விதம் பகவானிடத்தில் மனதைச் செலுத்தும் பக்தர்கள். மற்றொரு விதம் பொன் மீதும், பெண் மீதும் ஆசை வைத்திருக்கும் மானிடப் பக்தர்கள். மனிதனை இரண்டே இரண்டு சாதியாக பிரிக்கும் இவர் நோக்கில் ஒளவையாரின் இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர் என்ற தொனியின் சாயல் விழுகிறது. பக்தி உடையோர், பக்தி இல்லாதோர் என்ற இரண்டு சாதிகளாகப் பிரிக்கலாமே தவிர வேறு சாதிகளாகப் பிரிக்க முடியாது என்பது அவர் கொள்கை. "பிறப்பால் சாதியில்லை குணத்தால் தான் சாதி" என்ற பாரதி கூற்று இங்கு பிரதிபலிப்பதுபோல் உள்ளது.

சுவாமி விபுலாநந்தர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பேராசிரியராகக் கடமை புரிந்த காலத்தில் திருவேட்களத்தில் ஒதுக்கப்பட்ட ஆதித்திராவிடர்கள் வாழுகின்ற சேரிகளுக்குச் சென்று பாலர்கள் படிக்க பள்ளிகள் ஏற்படுத்தினார். வளந்தோர் படிக்க இரவுப்பள்ளிகள் ஏற்படுத்தினார். இதனால் கல்வி அறிவு பெற வாய்ப்பில்லாது ஒதுக்கப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வியறிவு கிடைக்க வழிகாட்டினார். அவருக்கு சிதம்பரம் தாலுகா வேட்களம் ஆதித் திராவிடர்களின் சார்பாக அளிக்கப்பட்ட பிரிவுரை வாழ்த்தில்.

"தம் நலம் வேணும் பார்ப்பனர்களால் சண்டாளர்கள் என்றழைக்கப்படும் எங்களை அழைத்துத் தங்கள் வீட்டினுடனிருத்தி விருந்துண்ட காட்சியும் உவகையும் எங்கள் கண்களையும் மனதையும் விட்டு அகலுமோ? எங்கள் முன்னேற்றத்திற்கெனத் தங்களால் தொடங்கப்பட்ட இரவுப்பள்ளி என்றும் வளர்ந்து ஓங்குவதற்குரிய வழி-யொன்று தாங்கள் தேடுவதோடு, ஈழத்தீவில் தங்களால் நடாத்தப்படும் பள்ளிகளில் எங்கள் குல மாணவர் பலரை சேர்த்துக் கொள்ளும் படியும் வேண்டுகின்றோம்" என்று வரும் ஆதி திராவிடர்களின் உளக் குறிப்புக்கள் விபுலாநந்தர் மனதையும் சேவையையும் எமக்கு உணர்த்துவன. விபுலாநந்தரின் சமத்துவ சிந்தனை வாய்த்த இக்கல்வித் தொண்டு மிகவும் மேலானது.

சமூக நோக்குப் பற்றி அவர் நோக்கு மென்மேலும் பரந்து விரிவதை நோக்கலாம். பிரிவுகள் இல்லாத இன பேதங்கள் இல்லாத ஒரு மனித குலத்தையே விபுலாநந்தர் கனவு கண்டார் என்பதை அவர் எழுத்துகள் காட்டுகின்றன. இத்தகைய ஒரு சமூக நோக்கை அவருக்களித்ததில் வேதாந்த ஞானம் முக்கிய பங்கு வகித்திருக்கலாம். தமிழ் மக்களின் எதிர்கால எழுச்சிமீது நம்பிக்கையும் ஆர்வமும் கொண்ட அடிகளால் தமிழ்ச் சமூகம் தமக்குள் ஏற்றத் தாழ்வு அற்ற ஒரு சமூகமாக உருவாக வேண்டும் என்றே விரும்பி இருப்பார் என்பதில் ஐயமில்லை.

சமூகநோக்கைக் கருத்தாகக் கொண்ட சுவாமி விபுலாநந்தர் நகர்ப்புறங்களில் கல்விச் சேவையை வழங்கியதோடு கிராமப் புறங்களிலும் கல்விப்பணியைப் பரவச்செய்தார். அதனை மட்டக்களப்பு பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் பல்வேறு இடங்களிலும் பாடசாலைகளை நிறுவினார். இதில் மட்டக்களப்பு மேற்கு சுவாமி விபுலா நந்தரினால் நிறுவப்பட்ட பாடசாலைகள்:

மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண வித்தியாலயம்
மட்/ஈச்சந்தீவு இராமகிருஷ்ண வித்தியாலயம்

இந்த இரு பாடசாலைகளும் அன்றைய தினம் கிராமப்புற மக்களின் கல்வி நலன் கருதி சுவாமி விபுலாநந்தரினால் உருவாக்கம் பெற்றன. அப்பாடசாலைகள் இதுவரையிலும் பல ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்று உயர் பதவிகள் வகித்து வருவது நோக்கத்தக்கது. இப்பாடசாலைகளும் இன்றுவரை தரம் உயர்த்தப்பட்டு வருவதும் சிறப்புக்குரியதாகும். இவ்வாறு கிராமப்புறமக்களின் கல்வி நயன்கருதி சுவாமி விபுலாநந்தர் செயற்பட்டமை அவருடைய சமூக நல நோக்கேயாகும்.

சுவாமி விபுலாநந்தரின் மெய்யியல் நோக்கு

Mrs. S..Kesavan, M.A, (Dist) PGDE, Ph.D.Scholar
Head, Department of Hindu Civilization,
கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு, இலங்கை



அடிகளாரின் ஆளுமை

ஈழத்தின் கிழக்கிலங்கையின் காரைதீவு என்ற சிற்றூரிலே 1892 ஆம் ஆண்டு பிறந்த மயில்வாகனம் எனப்படும் சுவாமி விபுலானந்தர், தமிழ் கூறும் நல்லுலகத்திற்குப் பொதுவாக "தமிழறிஞர் விபுலாநந்தராகவே" அறியப்படுகின்றார். ஆனால் அவரது பன்முகப்படுத்தப்பட்ட பணிகளும் அவரது மனுக்குல நேசிப்பும் ஆழமானவை. அவர் பல்துறை சார்ந்த பேரறிஞர். ஆசிரியராக, பண்டிதராக, விஞ்ஞானப் பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைப் பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக, மொழி-பெயர்ப்பாளராக, விளங்கினார். விபுலானந்தர், சமூகத்துறவியாக வாழ்ந்து செய்த தொண்டுகளும், தமிழிற்காற்றிய சேவைகளும் அவரை என்றும் நிலைக்கச் செய்வன.

1916 ஆம் ஆண்டு விஞ்ஞானக் கலையில் டிப்ளோமா பெற்றார். மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சையில் தேர்ச்சி, யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் உயர்தரக் கலாசாலையில் விஞ்ஞான ஆசிரியப்பணி, லண்டன் பல்கலைக் கழக பி.எஸ்.ஸி பட்டதாரி என வளர்ந்து கொண்டு சென்ற அவரது திறமை வெளிப்பாடுகள் 1931 ஆம் ஆண்டில் தமிழ் நாடு சென்று, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் நியமனம் பெற்ற போது உச்சங்கண்டது.1 தொடர்ந்து இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் அடிகளாரே நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளின் பழக்கம், துறவுள்ளம் படைத்த மயில்வாகனத்தை விபுலா நந்த அடிகளாக்கியது. 1922 இல் சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்து, காவி பூண்டு இராமகிருஷ்ண மடத்துத் தலைவர் சுவாமி சிவானந்தரிடம் பிரம்மாச்சாரி அபிஷேகம் பெற்று "பிரபோத சைதன்யர்" என்னும் தீட்சா நாமமும் பெற்றார்.

இவ்வகையிலமைந்த விபுலானந்தரின் ஆளுமையை உருவாக்கிய முக்கிய ஐந்து பின்னணியைக் குறிப்பிடலாம். அவையாவன மரபுவழிக்கல்வி, ஆங்கிலக்கல்வி, விஞ்ஞான கணித அறிவு, வடமொழி அறிவு, இராமகிஷ்ண மரபுத்தொடர்பு, பன்மொழி அறிவு என்பனவாகும்.2

அடிகளாரின் மெய்யியல்

இராமகிருஸ்ண பரமஹம்சரைப் போற்றுபவராக தனது துறவு வாழ்வை அமைத்துக் கொண்டதனால் அடிகளார் வேதாந்த நிலைப்பாட்டை பூரணமாக ஏற்றுக்கொண்டவரென அடையாளப் படுத்தலாம். இருப்பினும் பிற்காலத்தில் தமிழரின் இலக்கிய, சிந்தனை பாரம்பரியத்தினூடாக வந்த சைவ சித்தாந்தத்தைப் புறம் தள்ளாதிருந்தமையும் அவரது தனித்தன்மையாகும். பிரிவுகள் இல்லாத, சாதி பேதங்கள் இல்லாத, வருண பேதங்கள் இல்லாத, இன பேதங்கள் இல்லாத ஒரு மனித குலத்தையே விபுலானந்தர் கனவு கண்டார். இத்தகைய ஒரு சமூக நோக்கை அவருக்கு அளித்ததில் வேதாந்த ஞானம் முக்கிய பங்கு வகித்தது.

அவர் எவ்வாறு வேதாந்தத்தை நோக்குகிறார் என்பதனை "பிரபுத்த பாரத வேதாந்த கேசரி" கட்டுரைத் தொகுதியான "Ancient Thoughts for Modern Man"என்னும் நூலின் மூலம் அறியலாம்.அடக்கமைவுச் சமூகத்தில் (Hierarchical Society) நடைமுறையிற் கிடைக்காத ஓர் ஆன்மீக ஜனநாயகத்தை வேதாந்தம் கருத்தளவில் ஒப்புக் கொள்கின்றது.4 சமூகச் சமத்துவத்தை வேண்டிநின்ற விபுலாநந்தருக்கு இந்த கொள்கை ஏற்புடையதாக அமைந்ததில் ஆச்சரியமில்லை.

ஆன்மா என்பது பிரம்மமே எனும் கொள்கை

பிரம்மம் மனிதனிலே உண்டு என்பதனால் சகல மக்களும் தெய்வங்களாகின்றனர். அல்லது தெய்வங்களாகின்ற வாய்ப்பினைப் பெறுகின்றனர். ஆற்றலைத் தம்முள்ளே கொண்டவர்களாகின்றனர். இது சகல ஜீவராசிகளுக்கும் பொருந்தும். இது ஒரு ஆன்மீக ஜனநாயகத்திற்கான அடித்தளம். இதில் ஜனநாயகத்தின் அடிப்படைகளைக் காண முடிகின்றது என்கிறார் அடிகளார்.

"AdvaitVedanta, upholding the divinity of man , provides for the relational basis for democracy with its principles of universal tolerance , rises above sects and creeds. It looks upon man as one with the power of harmonize social differences. If India is to remain within the empire. it will be on a basis of equality. Nazi and Fasist ideas of racial superiority will have to go and will go"5

மூலப்பொருள் ஒன்றே

அடிகளார் வேதாந்த நெறியில் நன்கு கலந்தவர் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அவரின் வேதாந்த நெறிப்பார்வை சங்கராச்சாரியாரை மட்டுமோ அல்லது ஏனைய வேதாந்திகளில் ஒருவரை மட்டுமோ தழுவியது என்று கூறமுடியாது. வேதாந்திகள் அனைவரினதும் தாக்கத்தினை அடிகளாரிடத்துக் காணமுடியும். மூலப்பொருள் பற்றிய சிந்தனையில் அவர் அத்வைதிகளைப் போல "முலப்பொருள் ஒன்றே" எனக் கூறுகின்றார். அறியாமை, ஒடுங்கிய சிந்தனை, ஐயப்பாடு, தன்னல எண்ணம் என்னும் இவற்றையெல்லாம் அடித்துக்கொண்டு போய்விடுகி றது.

அப்பொழுது இஸ்டதேவதை இருதயமாகிய பீடத்திலே பிரகாசிக்கும், காதலிக்கப்படும் கடவுள் ஒருவரைவிட ஏனைய பொருட்கள் எல்லாம் மதிப்பற்றுப்போய்விடுகின்றபடியால், உலகப்பொருட்கள் அனைத்தினையும் திறத்தல் எளிதாய்விடுகின்றது. கடவுளே நித்தியப்பொருள், நிலையானபொருள், வேறுபாடற்ற பொருள் மற்றவையனைத்தும் தோன்றி மறைவன. ஆண்டவன் சுயஞ்சோதியாகிய சித்துப்பொருள் மற்றவையனைத்தும் அழிந்து போவன என்கிறார் அடிகளார்.6

தலையணையின் உறையின் நிறம் வேறு எனினும் உள்ளிருக்கும் பஞ்சுஒன்றே. அவ்வாறே ஆன்மாக்கள் பலவாறு தோன்றினாலும் உள்ளுறைதெய்வம் ஒன்றே. இதனை,

"தலையணைஉறைக் கொப்பாகச்
சாற்றலாமனிதன் தன்னை
நிலவியகருமைசெம்மை
நிறத்தினவெனினுமுள்ளே
இலகுபஞ் சொன்றே அன்பன்
எழிலிலானழகன் றூர்த்தன்
உலகினிற் பலரென் றாலு
முள்ளுறைதெய்வம் மொன்றே"7

”தூயதாகநிலைத்திருக்குந்
தொன்மைப் பொருள் ஒன்றதுபிரமம்
மேயவதுவேவாய்மொழியால்
விளம்பவொண்ணாத் தகைமைமத்தே”8
எனும் அடிகளில் வெளிப்படுத்துகின்றார் அடிகளார்.

இறையிலக்கணம்

அடிகளார் இறைவன் பற்றிய சிந்தனையில் குணங்குறிகளற்ற நிற்பிரபஞ்ச நிலையினையே இறைவனுக்கு கற்பிப்பார். இராமானுஜர், மத்துவர் ஆகிய வேதாந்திகள் முக்கியப்படுத்தும் சற்பிரபஞ்ச நிலைக்கு அவர் அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை. அந்த வகையில் சங்கராச்சாரியாரின் கருத்திலே அடிகளார் ஒத்து நிற்கின்றார் எனக் கூறலாம்.

”சேயினை மூவர்க்கு மெட்டாத தேவைத் திருக்கதிரை
நாயக மாணிக்க மென்றேத்து வேனொரு நாடுமுண்டோ
மாயிரு ஞாலமும் யாவு நிறைந்த மறைமுதற்கே”9

”முதலாகி யாவு முறையே யளித்த
பதியாகி நின்ற பரனைத் - துதிசேர்
திருக்கதிரை மாணிக்கச் செஞ்சுடரைக் கண்டால்
அருக்கர்பிறர் நிற்ப தரிது”10

இறைவன் எங்கும் நிறைந்தவர்

இறைவன் சர்வவியாபகமுடையவர். உயிர்களுக்குயிராய் நிறைந்திருப்பவர். உலகில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் கண்காணிப்பவர், உலகில் உள்ள நல்லவர்கள், கெட்டவர்களென அனைவரையும் காண்பவர் என இறையாற்றல் பற்றி கருத்துரைக்கிறார் அடிகளார்.

”மன்னுயிருக் குயிராக விறைவனிருந் திடுமரபை
வழுத்தக் கேண்மோ
பொன்னுடைய புரவலர்தம் மனையினிடைத் திரைமறைவிற்
பொருந்து கின்ற
மின்னனையார் புறந்தோற்றார் யாவரையுந் தாங்காண்பார்
மேவு மீசன்
அன்னதுபோ லெவ்விடத்து மெவ்வெவர்த மகத்திடையு
மமர்ந்து நிற்கும்”11

சுத்த பரம்பிரம்மானது நிர்க்குணமானது, மாய சக்தியிலிருந்து வேறுபட்டது, எல்லாவற்றிற்கும் அடிப்படை யானதென அடிகளார் குணங்குறிகளற்ற இறைவனுக்கு முக்கியத்துவம் அளிப்பதைக் காணலாம். இதனை,

"சுத்தபரப் பிரமமெனச் சொல்லியநிர்க் குணநிறைவே
தோற்ற மாய
சத்தியினின் வேறிலையாற் பரம்பொருளே தொழிலின்றித்
தனியாய் நிற்பின்
சுத்தபரப் பிரம்மமதாம் தொழின்மேவிப் படைத்தளித்துத்
துடைக்கு மென்னச்
சித்தமிசை நினைக்குங்காற் சத்தியெனும் பெயரோடு
திகழா நிற்கும்"12

எனும் அடிகளில் காணலாம். இதனை சிறப்பானதொரு எடுத்துக்காட்டின மூலம் அடிகளார் நிறுவுகின்றார். நீர் என்பது உருவம் இல்லாத ஒரு இயற்கை. உருவம் இல்லாத இந்த நீரே உறைந்து பனிக்கட்டியாகி உருவத்தை பெறுகின்றது. எனவே உருவமில்லாத தன்மையே அடிப்படையானது என சங்கராச்சாரியாரின் கருத்துக்களுடன் ஒன்றிப் போகுன்றார் அடிகளார்.

இதனை,
"உருவமில்லா னாவானு முருவமுள்ள னாவானு
மொருவ னேயாம்
உருவமில்லா நீரருவ முறைநீரைப் போற்றிகழ்வ
துருவ மாகும்
உருவமில்லா நீர்தானே யுறையினுறை நீராகி
யுருவ மாகும்
உருவமில்லா நீராகு முறைநீரு முருகியக்கா
லுருவம் போமே"13
எனும் அடிகளில் வெளிப்படுத்துகின்றார் அடிகளார்.

ஆன்மாக்கள் இறைவனின் விம்பங்கள்

அத்வைதத்தின் விம்பபிரதி விம்ப வாதத்தினை கொண்டு ஆன்மாக்கள் வெறும் தோற்றப் பொருட்களை உண்மையென நம்புகின்றன எனுங் கருத்தினை அடிகளார் முன்வைக்கின்றார். நீர் நிலைகளில் கதிரவனின் தோற்றம் தெரியும் போது அறியாமையினால் அவை யாவும் உண்மைக் கதிரவனே என நம்புகின்றாம். ஆனால் உண்மையில் இருப்பது ஒரே கதிரவனே மற்றவையாவும் பொய்த் தோற்றமே என்கிறார். இதனை,

"கரங்கனீரிலே கதிரவன் மதியுருக்
காட்டினுந் தெளிவாகப்
புலங்கொளற் கரிதாகிய தன்மைபோற்
பந்தியினா னென்றும்
இலங்குமிப் பொருளென தென்றுமியம்பிடும்
எண்ணமாகிய மாயை
விலங்கு சூழ்ந்திடிலிறையருட் பிரபையாம்
விளக்கமுங் குறைவாமே"14

எனும் அடிகளில் வெளிப்படுத்துகின்றார் அடிகளார். இதுபோல் எவ்விடத்திலும், எல்லோரிடத்திலும் இறைவனைக் கண்டேன் எனப்பாடும் அடிகளார் காணும் காட்சியெல்லாம் இறைவனின் வடிவங்களே எனும் அத்வைதத்தை பேசுகின்றார். இதனை,

”நெரித்த திரைக்கடலில் நின்முகங் கண்டேன்
நீலவிசும்பினிடை நின்முகங் கண்டேன்
திரித்த நுரையினிடை நின்முகங் கண்டேன்
சின்னக்குமிழிகளில் நின்முகங் கண்டேன்”15

எனும் அடிகளில் வெளிப்படுத்துகின்றார் அடிகளார்.

ஆன்மாக்கள் அறியாமைக்குட்பட்டவை

ஆத்மாக்கள் அறியாமையினால் மயங்கிக் கிடக்கின்றன. அறியாமையே அவற்றின் வீடுபேற்றுக்கு தடை யாக இருப்பது. இந்த அறியாமையை இறைவன் போக்குவான் என்கின்ற விபுலாநந்தரின் வேதாந்த நோக்கு சிறப்புக்குரியது.

”நாயகனேத மியனன்றனக்குநல்லறிவைத்தருமாசான்-
ஞாலமேலன்னைதந்தைநீயேநாதனேய முதமந்திரனே”16

அறியாமையை ஏற்படுத்துவது மாயை

ஆன்மாக்களின் இறுதி இலக்கினை அடைய முடியாமலும் அந்த இலக்கு என்ன என்பதை அறிய விடாமலும் தடுப்பது மாயை என்பதை அடிகளார் குறிப்பிடுகின்றார். வேதாந்த மெய்யியல் கூறும் இந்தச் சிந்தனை சைவசித்தாந்த மெய்யியலிலிருந்து வேறுபட்டது.

”வாரி கடக்க வகையறி யாது மயங்குகின்றேன்
ஆரிருள் மாயை யகற்றிப் புணையொன் றளித்தருள்வாய்”17

அறியாமையை அகற்றுதல்

மாயையின் தன்மையை வேதாந்திகள் பல உவமைகள் மூலம் நன்கு தெளிவுபடுத்துவர். அடிகளாரும் பல உதாரணங்கள் மூலம் மாயை பற்றிய கருத்துக்களை முன்வைக்கின்றார். குளத்து நீரின் மேல் பாசி படிந்திருப்பது போல்தான் ஆன்மாவை மாயை பற்றியிருக்கின்றது. குளத்திலிருந்து பாசியினை அகற்றினாலும் அது மீண்டும் படர்ந்து விடுவதைப் போல் ஆன்மாக்களை விட்டு மாயையை நீங்கச் செய்வது கடினம். இருப்பினும் சிறந்த தர்ம விசாரங்களைச் செய்வதன் மூலம் ஆன்மாக்களிடமிருந்து இந்த அறியாமை எனும் மாயையை நீக்கி விடலாம் என்கிறார் அடிகளார்.

”மைந்த மாயையின் றன்மையை யுணர்தியோ?
மன்னுநீர் குளத்தின்மேல்
வந்த பாசியை யகற்றினா லகன்றிடு
மறுகணத் தொன்றாகும்
இந்த நீர்மையே சாதுசங் கத்தினால்
இயன்றநல் விசாரத்தாற்
சிந்தை தூய்மையாங் கணத்தினி லவாவிருட்
டிரைமறைத் திடுமன்றே”18

ஆன்மாக்களின் அறியாமையை நீக்குபவர் இறைவன்

ஆன்மாக்களுக்கு ஏற்படும் அறியாமையை நீக்கி அந்த ஆன்மாக்கள் "தன்னையறிதல்" எனும் முத்தி நிலைக்கு இட்டுச் செல்பவர் இறைவன் என அடிகளார் உரைக்கின்றார். ஆன்மாக்களின் அறியாமையை நீங்க ஆன்மாக்கள் "ஞானத்தினை" கைக்கொள்ள வேண்டுமென்பது சங்கராச்சாரியாரின் கருத்து. ஆனால் அடிகளார் இறைவன் அறியாமையை நீங்குவான் என்கிறார். இத்தகைய கருத்தை வலியுறுத்துபவர் மற்றுமொரு வேதாந்தியாகிய இராமானுஜர். இக்கருத்தில் இராமானுஜரை ஒத்து நிற்கின்றார் சங்கரர். இதனை,

"மாயையை நீக்கி யருள்வானை யானந்த வல்லிதந்த"19

எனும் அடியில் காணலாம்.

உலகம் ஒரு மாயைத் தோற்றம்

வேதாந்த மரபில் இவ்வுலகு ஒரு மாயைத் தோற்றம் எனும் கருத்து முக்கியம் பெறுகின்றது. குறிப்பாக சங்கராச்சாரியாரின் அத்வைதம் இந்த உலகம் மாயைத் தோற்றமென்கின்றது. ஆத்மாவின் அறியாமையே இவ்வுலகை உள்ள பொருளாக உணர வைக்கின்றது. உண்மையில் இப்பிரபஞ்சம் கானல் நீர் போன்றது.

"மாயமா மிந்த வுலகினிலுதித்தேன் மயங்கினேன்மாதர் மண்பொன்னால்-
மலத்தினாற் பிணிப்புண்டுழன்று நின்பாதமலரினை நினைந்திலேன்" 20

அஞ்ஞானத்தினால் தான் அல்லாதவற்றை தான் என்றும், தனது அல்லாதவற்றை தனது என்றும் எண்ணுவதினாலே துன்பம் வந்தெய்துகின்றது. அச்சங்களுள் மிக்கது மரணபயம் என்ப. இவ்வுலகத்தையும் புலன்களுக்கு இன்பம் பயக்கும் போகவஸ்துக்களையும் சுற்றமித்திரையும் மனைவி மக்களையும் உடலையும் தனது என்றெண்ணியிருந்த மானிடன் மரணம் வந்தெய்துமெல்லையில் இவற்றை எல்லாம் துறக்க நேரிடுகின்றதே யென்றெண்ணித் துன்புறுகின்றான். பொய்ப்பொருளாகிய இவையெல்லாம் சதமல்ல என்பதை முன்னமேயறிந்த ஞானி உடலை விட வேண்டிய நேரத்திற் பஞ்சபூதக்கட்டையாகிய பாரந்தொலைகின்றதே என்றெண்ணி ஆனந்தமுறுவானேயன்றிச் சிறிதேனுந் துன்புறமாட்டான் என்கிறார் அடிகளார்.

முத்திக்குரிய வழிகள் ஞானமும் பக்தியும்

ஞானம்

முயற்சியில்லாமல் ஆன்மாக்கள் இருக்கும் போது அவற்றிற்கு முத்திப்பேறு ஒருபோதும் கிட்டாது. அவை கடினப்பட்டு தம்மை உணர வேண்டும். வலையில் அகப்பட்ட மீன்களில் சில மீன்கள் கடினப்பட்டு முயற்சி செய்து தப்பி விடுகின்றன. அது போல் அறியாமை எனும் வலையில் சிக்கியுள்ள ஆன்மாக்கள் ஞானம் எனும் முயற்சியை மேற்கொண்டு இறையாதல் எனும் தன்மையை பெறல் வேண்டுமென அடிகளார் உரைக்கின்றார். இதனை,

"வலைப்படுமீனுட் சில்ல வலையினைக் கிழித்துச்செல்வ
உலைத்தங்கு மிங்குமோடி யொருசில முயன் றுநிற்ப
நிலைப்படக் கிடப்பசில்ல நீத்தவர் முமுசீ த்வத்தோர்
மலத்தினாற் பிணிப்புண்டோர்கள் வகையுமிவ் வகையதாமே"21
"விவேக வைராக்கிய மின்றேல்
வீண்கல் வியினாற் பயனில்லை
விவேக நித்தியா னித்தியத்தின்
விதத்தை யுணர்ந்து நிச்சயித்தல்

விவேக மாகு முடலுயிரின்
வேறென் றுணரு மறிவதுவும்
விவேகத் தாலே பற்றறுத்தல்
விளம்பின் வைராக் கியமாமே"22
ஆகிய பாடல்களில் காணலாம்.

பக்தி

முத்திக்குரிய வழியாக பக்தியை போதித்தவர் இராமானுஜர். இடைக்கால இந்தியாவின் மறுமலர்ச்சி (Religious revival in medieval India) என்ற தமது கட்டுரையிலே பக்தி அம்சத்தை மிக முக்கியப்படுத்தி கூறுகின்றார். அதனுடைய தமிழ் வடிவம் தான் "தென்நாட்டில் ஊற்றெடுத்த அன்புப்பெருக்கு வடநாட்டில் பரவிய வன்முறை" தமிழ்நாட்டில் வாழ்ந்த சகல சமூக மட்டங்களிலும் உள்ளவர்களையும் உள்ளடக்கிய இயக்கம் பக்தி இயக்கம், வடஇந்திய மரபையும் தென்னிந்திய மரபையும் இணைக்கின்ற இயக்கம், அது தமிழ்நாட்டிலுள்ள பொழுதல்ல - அதுமேலே வடக்குநோக்கிப் போகின்ற பொழுது, மகாராஷ்டிரத்துக்குப் போகிற பொழுது - சைதன்யரிடத்துப் போகிற பொழுது, அந்த முழு வரலாற்றையும் சீக்கிய கிரந்தத்தின் முடிவுவரை கபிர்வரை ஏற்படும் பக்தி நிலை ஒருமைப்பாட்டை இந்தக்கட்டுரையிலே எடுத்துக்கூறுகின்றனர்.

தமிழ்நாட்டில் தொடங்கி இந்தியா முழுவதையும் ஆகர்ஷத்துக்கு கொண்ட பக்தி இயக்கம் பற்றிய அக்கட்டுரையில் வரும் குறிப்புக்கள் மிக முக்கியமானவை. பக்தி இயக்கம் பற்றி அடிகளாரது பார்வை விசிட்டாத்வைத வேதாந்தத்தில் முக்கியம் பெறுகின்ற பக்தி எனும் எண்ணக்கருவை அடியொற்றி பிறந்தவை யாகும். ஆத்மா முத்தியடைவதற்கு பக்தி முக்கிய சாதனமாக இருக்கும் என்பதனை அடிகளார் ஏற்றுக் கொள்கின்றார்.

முத்தி

ஞானம், பக்தி ஆகிய சாதனங்களால் சீவான்மாவாகிய உயிர்கள் மாயை எனும் திரை விலக்கும் போது இறைவனைக் காண்கின்றது என அடிகளார் கூறுகின்றார். இதனை,

"சீவான்மா
பன்னு மாயையாந் திரையிடைகது விடிற்
பரமனைக் காணாதாம்
முன்னர் நின்றவத்திரை யகன்றிட்டபின்
முதல்வனைக்காண் கும்மே"23
எனும் அடிகளில் வெளிப்படுத்துகின்றார் அடிகளார்.

தன்னை உணர்தலே வேதாந்தம் கூறும் முத்தி

விபுலாநந்தடிகளை ஒரு வேதாந்தியென பலர் அடையாளங்காட்டுவதற்கு, அவரது மிக முக்கியமான மெய்யியற் சிந்தனை யாதெனில் "தன்னையறிதல்" எனும் கருத்தியலாகும். ஆன்மாக்கள் தன்னனையுணராமல் இருப்பது அதன் அறியாமையின் வெளிப்பாடு. ஆன்மாக்கள் தன்னை உணரும் போது "அகம் பிரம்மாம்ஸி" எனும் அடிப்படை உண்மையினை புரிந்து கொள்ளும். அதாவது ஆன்மாவும் பிரம்மமும் ஒன்றே எனும் உடன்பாட்டுக்கு வந்துவிடும். இந்நிலையிலே ஆன்மாக்கள் முத்தியினை பெறும் என்கிறது வேதாந்தம். இதனை அடிகளார்,

"உன்னை நீ யுணர்வா யுணர்ந்திடி லிறையை
யுணர்வா யுன்னுள்யா னென்ன
மன்னிய தெதுவோ கால்கர முதிர

மாம்சமோ மற்றவ யவமோ
என்னநன் றாகச் சிந்தனைசெய் வாயேல்
யானெனப் படுவதொன் றில்லாத்
தன்மையு முணர்வாய் வெறுமையாய் முடியுஞ்"24
என எடுத்துக் காட்டுகின்றார்.

நிறைவாக, சமூக ஒழுங்கமைப்பில் வேதாந்தத்தின் பங்கு

வேதாந்தம் சுட்டும் இலக்கியபூர்வமான "மனிதனின் தெய்வம்", "தெய்வத்தில் மனிதன்" என்ற கொள்கை அவரை வசீகரித்திருந்தது. வேதாந்தத்தின் படி ஆதர்ச சமூகமென்பது வரவிருக்கும் ஒரு சுவர்ண யுகமுமல்ல, தேவதைகளின் ஆட்சியுமல்ல, அது உண்மையில் சமயப் பொறுதியுணர்வு அயலவர்களுக்கு தர்மம் செய்தல், மிருகங்களை கூட அன்பாக நடத்தல் என்பன முதன்மை பெறும் சமூகமாக கணப் பொழுது சிரத்தைகள் நிரந்தரமான உண்மைக்கு கட்டுப்படுத்தப்பட்டனவாகவும், மனிதன் புறவயப்பாட்டில் ஈடுபடாதது தன்னை தன் அகத்துடன் மேலும் மேலும் இணைத்துக் கொள்பவனாகவும், முழுச் சமூக ஒழுங்கமைப்பும் இயல்பான உந்துதலுடன் கடவுளை நோக்கிச் செல்வதாக அமையும். ஒரு சமூகமாகவே அமையும் என்று கூறுகின்றார்.

The ideal society according to the Vedanta is not a millennium on earth nor a reign of angels, where there will be nothing but a thorough equality men and peace and joy - the vadanta indulges in on such chimeras - but one where religious toleration, neighbourly charity, and kind ness even to animals form the leading features, where the feeling concerns of life are subordinated to the eternal where man strives not to externalise himself more and more, and where the whole social organism moves as it were with, a sure instinct towards God. This fairly comprehensive statement made by the Prabudda Bharata at the outset of its carrer, holds good today. We make ourselves, bold to say that it will hold good for all time to come.

திருவேட்களத்திலே தீண்டாதாரிடத்து அவர் போக முடிந்தமை, சேரிக்குழந்தைகளை குளிப்பாட்டியமை, அந்த குழந்தைகளுக்கு இனிப்புப்பண்டங்கள் கொடுத்தமை, குருநகரிலுள்ள மீனவரிடத்தே சென்று வேலை செய்தமை போன்றவற்றிற்கு அடிகளாரின் இந்த வேதாந்த நோக்கே காரணமாக இருந்தது. 26 இவற்றுக்கு மேலாக சிவானந்த வித்தியாலயத்தை அவர் அமைத்த முறைமை அதை அவர் கருக்கொண்ட முறைமை இந்த மனித சமத்துவ உணர்வு, இன சமத்துவ உணர்வு எவ்வாறு தொழிற்பட்டது என்பதை எடுத்துக் காட்டுவதாகும். இருப்பின் ஒருமை, மனிதனில் தெய்வீகம், தெய்வத்தின் ஒற்றுமை, மதங்களின் இணைவு ஆகியனவே வேதாந்தத்தின் நான்கு பிரதான அம்சங்கள் எனக் கூறும் விபுலானந்தர் அவற்றை தன் வாழ்விலும் ஒழுகி வந்தார்.

அடிக்குறிப்புகள்

1. தமிழவேள்- (தொகுப்பு), (1992), விபுலாநந்தம், கொழும்புத் தமிழ்ச் சங்கம், ப.19
2. செல்வநாயகம், அருள், விபுலாநந்த அமுதம், வெளியீட்டாளர் கலா நிலையம், ப.12
3. செல்வநாயகம், அருள்- (தொகுப்பு), (1963), விபுலாநந்த செல்வம், கலைமகள் வெளியீடு, ப.15
4. *Vethantha kesari*
5. *Vethantha kesari*
6. செல்வநாயகம், அருள்- (தொகுப்பு), (1963), மே.கூ.நூ., ப.23
7. சிவசுப்பிரமணியம், வ., கமலநாதன், சா.இ., (1999), சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள், தொகுதி - 4, (கவிதைகள்), மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை, ப.66
8. மேலது, ப.79 9. மேலது, ப.6 10. மேலது, ப.7 11. மேலது, ப.35 12. மேலது, ப.11 13. மேலது, ப.38
14. மேலது, ப.27 15. மேலது, ப.82 16. மேலது, ப.1 17. மேலது, ப.1

பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின் வாழ்க்கை வரலாறு

தொகுப்பு - S.K. குமரகுரு, M.A
ரொறன்ரோ, கனடா

பிறப்பு : 1892 மார்ச் மாதம் 27ம் திகதி (கர வருடம் பங்குனி 16ம் திகதி பிறந்தார்).

பெயர்: மயில்வாகனம்

பிறவிப் பெயர்: தம்பிப்பிள்ளை

பிறந்த இடம்: கிழக்கிலங்கையிலுள்ள (அம்பாறை மாவட்டம்) காரைதீவு

தந்தையர்: சாமித்தம்பி (விதானையார்) சின்னத்தம்பி

தாயார்: கண்ணம்மை இராசகோபாலபிள்ளை

குறிப்பு: விபுலாநந்த அடிகள் பிறந்த 1892ம் ஆண்டிலே, அவரது வாழ்க்கையில் முக்கிய இடம் வகித்த முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம், டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களால் பதிப்பித்து வெளியிடப்பட்டது.

1897-1900 : காரைதீவு மெ.மி.த.க பாடசாலையில் ஆரம்பக்கல்வி

1901 : தந்தையுடன் கதிர்காம யாத்திரை

1901-1903 : கல்முனை மெதடிஸ்த லீஸ் ஆங்கிலப் பாடசாலையில், ஆங்கில மொழியில் இடைநிலைக்கல்வி.

1904-1905 : மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் உயர் இடைநிலைக்கல்வி.

1906-1908 : மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் உயர் இடைநிலைக்கல்வி.

1906 : டிசம்பரில் கேம்பிரிட்ஸ் ஜூனியர் பரீட்சையிற் சித்தி

1908 : டிசம்பரில் கேம்பிரிட்ஸ் சீனியர் பரீட்சையிற் சித்தி

1909-1910 : மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் மாணவ ஆசிரியர்

1911 : தாயார் கண்ணம்மையார் இறந்ததைத் தொடர்ந்து சொந்தக் கிராமத்துக்குச் சென்று, அயற் கிராமமான கல்முனை கத்தோலிக்க ஆங்கிலப் பாடசாலையில் சில காலம் ஆசிரியராகப் பணியாற்றல்.

1911-1912 : கொழும்பு, அரசினர் கல்லூரியில் ஆங்கில ஆசிரியர் பயிற்சி

1913-1914 : மீண்டும் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்

1915-1916 :	கொழும்பு, அரசினர் பொறியற் கல்லூரியிற் விஞ்ஞானம் கற்று விஞ்ஞான டிப்ளோமா பட்டம் பெறல்.
1916 :	மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டித பரீட்சையில் சித்தியடைந்து, இலங்கையின் முதலாவது தமிழ்ப் பண்டிதராதல்.
1916 :	இலங்கைக்கு வருகை தந்திருந்த, மைலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி சர்வானந்தரைக் கொழும்பில் சந்தித்தல்
1917 :	கொழும்பு, அரசினர் பொறியியற் கல்லூரியில் வேதி நூல் ஆசிரியர்
1917- 1920 :	யாழ்./ புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் வேதி நூல் ஆசிரியர்
1917 :	தாம் தங்கியிருந்த யாழ். ஆனைப்பந்தி இல்லத்தில் விவேகானந்த சபையை ஆரம்பித்தல். இதற்கு திருவாளர்கள் செ.மயில்வாகனம், கலைப்புலவர் நவரத்தினம், தி.முத்துக்குமாரு, வை.சி.சி.குமாரசாமி ஆகியோர் உதவி புரிந்தனர்.
1917 :	டிசம்பரில் - வண்ணார்பண்ணையில் யாழ் இந்து வாலிபர் சங்கம் நடாத்திய தேவாரத் தெரிவு நிகழ்ச்சியில் பண்டிதமணி சு. நவநீதகிருஷ்ண பாரதியாரைச் சந்தித்தல்.
1917 :	யாழ்ப்பாணத்தில், சுவாமி சர்வானந்தரை இரண்டாவது தடவையாகச் சந்தித்தல்
1918 :	திருகோணமலையில் இந்து இளைஞர் சங்கம் நடாத்திய இந்து மாநாட்டில் உரையாற்றினார்.
1920 :	இலண்டன் கேம்பிரிட்ஸ் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்.சி (B.Sc) பட்டம் பெறல்
1920-1922 :	யாழ் - மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர். (இக்காலத்தில் யோகர் சுவாமிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்)
1921 :	ஆரிய திராவிட பாஷாபிருத்திச் சங்கம், யாழ்ப்பாணத்தில் வித்தியாபகுதித் தலைவராக இருந்த எவான்ஸ் துரை அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கத்தின் காரியதரியாகக் கடமையாற்றிய திரு. தி. சதாசிவஜயருடன் இணைந்து தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிக் கல்வி வளர்ச்சிக்கு உதவினார்.
1922 :	பண்டிதமணி சு. நவநீதகிருஷ்ண பாரதியாரால் ஆக்கப்பட்ட உலகியல் விளக்கத்தை, வித்துவான் ச.பூபாலபிள்ளை அவர்களின் உரையுடன் பதிப்பித்து வெளியிடல்.
1922 ஜூலை 19ல் :	இமயமலைச் சாரலுக்குச் செல்லல்
1922 - 1924 ஏப்ரல் :	சென்னை மயிலாப்பூர் இராமக்கிருஷ்ண மடத்தில் துறவுப் பயிற்சி.
1922- 1923 :	பிரபோதசைதன்நியர் என்ற பெயர் வழங்கப்பட்டது.
1924 ஏப்ரல் :	சித்திரா பெர்ணமியில் ஞானோபதேசம் பெற்று சுவாமி விபுலாநந்தர் ஆனார். துறவுக் காலத்தில் பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள். (1) இராமக்கிருஷ்ண விஷயம் - தமிழ் (2) வேதாந்த கேசரி - ஆங்கிலம்

1924 : மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 23வது விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுதல்

1924-1927 : இலங்கையில் இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பில் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்துதல், புதிய பாடசாலைகளை அமைத்தல், சமயப்பிரசாரம் செய்தல், விழாக்கள், மாநாடுகள் முதலியவற்றில் கலந்து கொள்ளல்.

1924 மார்கழி : சுவாமி சர்வானந்தருடன் திருகோணமலைக்கு வந்து, இந்துக் கல்லூரியில் தங்கியிருந்து பணிகளை ஆரம்பித்தல்.

1925 தை : மட்டக்களப்புக்கு வந்து ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலையில் தங்கியிருந்து பணியாற்றுதல்.

1925 மார்ச் : காலி, கண்டி, நாவலப்பிட்டி, மாத்தளை, தொப்பித்தோட்டம், பதுளை ஆகிய இடங்களுக்கு அழைப்பின் பெயரில் சென்று சொற்பொழிவாற்றினார்.

1925 ஏப்ரல் : மட்டக்களப்பில் ஆங்கிலப் பாடசாலை அமைப்பது பற்றியாராய கல்லடி உப்போடையில் மகாசபை கூட்டினார்.
யாழ்ப்பாணம் மாணவர் மகா நாட்டிற்கு தலைமை வகித்தார்.
சைவ மாணவர் சங்கத்தில் விரிவுரையாற்றினார்.

1925 யூன் : காரைதீவு, ஆனைப்பந்தி, மண்டூர், ஆரைப்பற்றை ஆகிய நான்கு கிராமங்களில் இருந்த சைவப்பாடசாலைகளைப் பொறுப்பேற்றார். இவை முன்பு விவேகாநந்த சபையின் ஆதரவில் நடைபெற்று வந்தன.

1925 யூன் 8 : மதுரைத் தமிழ்ச்சங்கத்தார், டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களுக்கு பொற்கிழி வழங்கிப் பாராட்ட எடுத்த விழாவிற்கு ஈழ நாட்டு அறிஞர்களின் சார்பாக பங்கேற்றார்.

1925 யூன் 9 : மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விரிவரை நிகழ்த்தினார்.

1925 ஆகஸ்டு : கொழும்பு, கண்டி, நாவலப்பிட்டி, அனுராதபுரம் ஆகிய இடங்களில் சமயப் பிரச்சாரம்.

1925 அக்டோபர் 28 : காரைதீவில் சாரதா வித்தியாலயத்துக்கு அடிக்கல் நாட்டினார். (இவ் வித்தியாலயம் பெண்கள் படிப்பதற்காக, சுவாமியின் மாமாவாகிய இராமநாதபிள்ளை அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. அவர் தமது காணிமுழுவதையும் இவ் வித்தியாலயத்துக்கு வழங்கினார்).

1925 நவம்பர் 6 : கல்லடி உப்போடை சிவாநந்த வித்தியாலயத்துக்கு (ஆங்கிலப் பாடசாலைக்கு) அடிக்கல் நாட்டினார். (இவ் வித்தியாலயத்தை அமைப்பதற்குத் தேவையான காணி, பணம் ஆகியவற்றை கல்லடி உப்போடையில் வாழ்ந்த பிரபல தனவந்தர்களான கதிர்காமத்தம்பி உடையார், சபாபதிப்பிள்ளை உடையார் ஆகியோரின் சந்ததியினர் வழங்கினர்.)

1925 நவம்பர் 30 : திருகோணமலை இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையின் (இன்றைய இந்துக் கல்லூரி) புதுக்கட்டிடத்துக்கு அத்திவாரக்கல் நாட்டினார்.

1926 பெப்ரவரி 15: யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம், விவேகாநந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

1926 மார்ச் 24: விவேகாநந்தா சபையின் வேண்டுகோளின்படி கொழும்பு நகரில் (கொட்டாஞ்சேனை) விவேகாநந்த வித்தியாலயத்தைத் தொடக்கி வைத்தார்.
இம் மாதத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு பிரதேங்களின் கல்வி சம்பந்தமாக ஆராயும் சபையின் அங்கத்தவராக இலங்கை கல்வியமைச்சு அதிகாரிகளால் நியமிக்கப்பட்டார்.

1926 ஏப்ரல் 7 : கல்கத்தா வேலூரில் உள்ள இராமகிருஷ்ண தலைமை மடத்தில் நடைபெற்ற மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகப் கலந்து கொண்டார்.

1926 ஜூன் : மதங்க சூளாமணி - மதுரைத் தமிழ்ச் சங்க ஏடான செந்தமிழில் 1924ஆம், 1925ஆம் ஆண்டுகளில் எழுதி வந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டு, மதங்கசூளாமணி என்னும் பெயரில் தமிழ்ச் சங்கத்தின் 51ஆவது செந்தமிழ்ப் பிரசரமாக வெளியிடப்பட்டது.

1926 ஜூன் : வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் சார்பாக, அனாதைச் சிறுவர்களைப் பராமரிப்பதற்காக வெள்ளிக்கிழமை மடத்தில் மாணவர் இல்லம் ஏற்படுத்தினார்.

1926-1927 : கொழும்பிலிருந்து வெளிவந்த விவேகாநந்தன் என்னும் இதழின் ஆசிரியராகப் பணியாற்றல்.

1927-ஏப்ரல் 19 : தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றினை நிறுவுதல்பற்றி விசாரனை நடத்தி அறிக்கை சமர்ப்பித்திட மதுரைச் சேதுபதி அரசர் தலைமையில், அரசினால் நியமிக்கப்பட்ட குழுவின் முன்னர், சென்னைப் பல்கலைக்கழகத்தின் கருத்தினை எடுத்துக் கூறுவதற்காக அழைக்கப்பட்டு இலங்கையில் இருந்து செல்லல். (மேற்படி விசாரணைக்குழு விதப்புரைக்கமைய, சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1929 ஜீலையில் நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கது)

1927 ஆகஸ்டு 27 : கண்டி சைவமகா சபை ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்தார்.

1927 ஒக்டோபர் : யாழ்ப்பாணத்திற்கு ஓர் பல்கலைக்கழகம் வேண்டுமென்று "விவேகாநந்தன்" என்ற பத்திரிகையில் ஆசிரியரின் "உள்ளக்கிடக்கை" என்ற பகுதியில் எழுதினார்.

1927 நவம்பர் 26 : யாழ்ப்பாணம் மாணவர் காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

1927 நவம்பர் 27 : இலங்கைக்கு விஜயம் செய்த காந்தி அடிகளை மாணவர் காங்கிரஸ் மாநாட்டுத் தலைவர் என்னும் முறையில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் வரவேற்றார்.

1928 - 1930 : திருகோணமலை இந்து ஆண்கள் ஆங்கில கலாசாலையின் அதிபர்.

1929 ஏப்ரல் 15 : மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலயத்தை திறந்து வைத்தார். இக்கட்டத்திலே மாணவர் இல்லத்தையும் அமைத்தார். 1929 ஏப்ரல் 22இல் கிழக்கு மாகாண அரசாங்க அதிபர் *Mr. Harison Jones* அவர்களால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

1929 டிசம்பர் : 1929 டிசம்பர் மாதம் வண்ணார்பண்ணை மடத்திலிருந்து கல்வி கற்ற 07 மாணவர்களையும் அழைத்து வந்து சிவானந்த வித்தியாலயத்தில் சேர்த்தார்.

1930 - 1931 : திருகோணமலை ஆங்கில கலாசாலையின் அதிபர் பதவியை மற்றொருவரிடம் கையளித்துவிட்டு, இராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளின் முகாமையாளர் பதவியுடன், சிவாநந்தா வித்தியாலய அதிபர் பதவியையும் ஏற்று நடாத்தல்.
இதே ஆண்டு யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிருத்திச் சங்கத்தினர் அடிகளை பண்டித பரீட்சகராக நியமித்தல்

1931 ஜனவரி : ராஜா சேர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அண்ணாமலைப் பல்கலைக்கழக முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பதவியேற்று, அதன் மூலம் பெற்ற ஊதியமனைத்தையும் சிவானந்த வித்தியாலயத்துக்கு வழங்கினார்.

1931 - 1933 : அண்ணாமலைப் பல்கலைக்கழக முதற் தமிழ்ப் பேராசிரியர். இக்காலத்தில் அப் பல்கலைக் கழகத்தில் விரிவரையாளராக இருந்த சங்கீத கலாநிதி க.பொன்னையா பிள்ளையிடம் கர்நாடக சங்கீதத்தை அறிந்து கொண்டு இசைத் தமிழ் ஆராய்ச்சியைத் தொடங்கினார்.

1934 : கரந்தைச் தமிழ்ச் சங்கத்து 22ம் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

1934 : மட்/ சிவாநந்த வித்தியாலயத்தில் புலவர் வகுப்பு நடத்தினார். இதில் மகாவித்துவான் F.X.C நடராசா, பண்டிதர், வீ.சி.கந்தையா, அருணாசல தேசிகர், சுவாமி நடராஜாநந்தா ஆகியோருட்பட நாற்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து சுவாமி விபுலாநந்தரிடம் யாப்பிலக்கணம் பயின்றனர்.
இதே காலப்பகுதியில் சமஸ்கிருத வகுப்பும் நடாத்தினார்.

1935 டிசம்பர் 29-31 : திருவண்ணாமலையில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகா சமாசத்தின் 30ம் ஆண்டு நிறைவு விழாவிற்குத் (சைவ சமய மாநாடு) தலைமை தாங்கினார்.

1935 : சென்னைப் பல்கலைக்கழகம் தமிழாராய்ச்சிக்குழுவில் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

1936 பெப்ரவரி 22 : சென்னைப் பல்கலைக்கழகத்தில் "யாழ்ப்பாணன்" என்னும் சொற்பொழிவொன்றினைச் செய்தார்.

1936 பெப்ரவரி 24 : சென்னைப் பல்கலைக்கழகத்தில் "தமிழிசை" என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவு ஒன்றினைச் செய்தார்.

1936 பெப்ரவரி 25 : சென்னைப் பல்கலைக்கழகத்தில் சிலப்பதிகார அரங்கேற்று காதை என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவொன்றினைச் செய்தார்.

1936 பெப்ரவரி 27 : சென்னைப் பல்கலைக்கழகத்தில் "ஏழாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் இருந்த தமிழிசை" என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவொன்றினைச் செய்தார்.

1936 பெப்ரவரி 28 : சென்னைப் பல்கலைக்கழகத்தில் "பழந் தமிழகத்தின் சிற்பாசிரியர்கள்" என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவொன்றினைச் செய்தார்.

1936 பெப்ரவரி 29 : சென்னைப் பல்கலைக்கழகத்தில் "பரிசன வேதி" என்னும் பொருள் பற்றிய சொற்பொழி வொன்றினைச் செய்தார்.

1936 : சொல்லாக்கக் குழுவின் பொதுத் தலைவராகக் கடமையாற்றிக் கொண்டு கணிதம், பூதநூல், வேதிநூல், மரநூல், விலங்கு நூல், உயிரியலும் நலவியலும், பூகோளம், வரலாறு, வேளாண்மை என்னும் ஒன்பது உப குழுக்களில் வேதிநூல் குழுவுக்குத் தலைமை தாங்கினார்.

1935 டிசம்பர்30 : சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற கலைச் சொல்லாக்க மாநாட்டிற்கு தலைமை தாங்கி ஒன்பது கலைகளையும் சேர்ந்த 14000 சொற்கள் ஏற்கப்பட்டு நூலாக வெளியிட வேண்டுமெனும் தீர்மானம் நிறைவேற உதவுதல்.

1937 : திருக்கைலாய யாத்திரை மேற்கொள்ளல்.

1938 : சுவாமிகள் தலைமையில் உருவாக்கப்பட்ட கலைச் சொற்கள் என்னும் அகராதி நூல் சென்னைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டது.

1939 : கல்முனையில் நடைபெற்ற ஆசிரியர் விடுமுறைக் கழகத்தின் நிகழ்வில் தலைமை ஏற்று இலக்கியம் பற்றி உரையாற்றினார்.

1939 - 1941 : இமயமலைச் சாரலிலுள்ள மாயாவதி ஆச்சிரமத்தில் "பிரபுத்த பாரத" என்னும் ஆங்கில மாதாந்தப் பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றினார்.

1942 - "கங்கையில் விடுத்த ஓலை" என்ற கவிதைகளை சித்திரபானு ஆண்டு தைத்திங்களில் கங்கைக்கரையிலுள்ள வேலூர் மடத்திலிருந்து எழுதி விடுத்தார்.

1942 ஆகஸ்ட் : மதுரையில் நடைபெற்ற முத்தமிழ் மாநாட்டில் இயற்றழிழ் பகுதிக்குத் தலைமை தாங்கினார்.

1943 - 1947 : இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர்.

1944 - இலங்கை நுவரேலியா மாவட்டத்தில் றெசல்லையிலுள்ள சிதம்பரம் செட்டியாரின் வூட்ஸ்ரொக் (WOODSTOCK) தோட்டத்தில் சுவாமி நடராஜாநந்தாவுடன் இருந்து யாழ் நூலை எழுதி முடித்தார்.

1946 : இலங்கை எழுத்தாளர் சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த முல்க்ராஜ் ஆனந் அவர்கள் இலங்கை வந்த போது பல எழுத்தாளர்கள், அறிஞர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலே இலங்கை எழுத்தாளர் சங்கம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

1947 ஜூன் 5-6 : பதினான்கு ஆண்டுகளாக மேற்கொண்ட ஆராயச்சியின் பயனாக எழுதப்பட்ட இசைத் தமிழ் நூலாகிய யாழ் நூலின் அரங்கேற்றம்,
கரந்தைச் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், திருக்கொள்ளம் புத்தூர்த் திருக்கோவிலில், ஆளுடைய பிள்ளையார் முன்னிலையில் சிறப்பாக நடை பெற்றது.

1947- ஜூலை 19 : தமிழ் உலகின் உதயசூரியன் அஸ்தமனம் அடைந்தது.

விபுலாநந்த அடிகளாரின் அரிய கையெழுத்துப் படிகள், மடல்கள் உணர்த்தும் செய்திகள்



முனைவர் மு.இளங்கோவன்
பட்டமேற்படிப்பு மையம், புதுச்சேரி அரசு, இந்தியா

இலங்கை நாடு ஈன்றெடுத்து வழங்கிய தமிழ்ச்சான்றோர்களுள் குறிப்பிடத்தக்கவர் விபுலாநந்த அடிகளார் ஆவார். அடிகளாரின் தமிழ் இலக்கியப் பணிகளும், சமயப் பணிகளும் பல திறத்தனவாக உள்ளன. படைப்பாசிரிய ராகவும், மொழிபெயர்ப்பாளராகவும், இதழாசிரியராகவும், சொற்பொழிவாளராகவும், கல்வியாளராகவும். சமயத் துறவியாகவும் விளங்கும் விபுலாநந்த அடிகளாரின் வாழ்க்கை குறித்து, நூல்கள், மலர்கள், தொகுப்புகள், ஆவணப்படங்கள் எனப் பல வெளிவந்திருப்பினும் அடிகளாரின் அரிய கையெழுத்துகள், மடல்கள் இன்னும் அறிஞர் உலகத்தால் வெளிப்படுத்தப்படாமல் உள்ளன.

விபுலாநந்த அடிகளார் செயல்திறம் மிக்க ஆளுமை உடையவராக விளங்கிய காரணத்தால் அலுவலகம் சார்ந்தும், ஆய்வு சார்ந்தும், உறவு சார்ந்தும், நட்பு சார்ந்தும் பல நூறு மடல்கள் எழுதியிருக்க வாய்ப்பு உண்டு. பல ஊர்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றும் வாய்ப்பினைப் பெற்றவர். ஆதலால் அந்த அந்த நிறுவனங்களின் விருந்தினர் வருகை ஏட்டில் தம் எண்ணங்களைப் பதிந்துவைக்கும் வாய்ப்பும் அடிகளாருக்கு வாய்த்துள்ளது. எனவே இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்பொழுது அடிகளாரின் பன்முக ஆற்றலும், செயல்பாடுகளும் வெளியுலகிற்குத் தெரிய வாய்ப்பு உண்டு. பார்வைக்குக் கிடைத்த சற்றொப்ப இருபதுக்கும் மேற்பட்ட மடல்கள், கை-யெழுத்துக் குறிப்புகளைக் கொண்டு அடிகளாரின் மடல் இலக்கியச் செய்திகளை இந்தக் கட்டுரை எடுத்துரைக்க முனைகின்றது.

விபுலாநந்த அடிகளார் மடல்கள் அறிமுகம்:

விபுலாநந்தரின் மடல்கள் என்பவை அஞ்சல் அட்டைகள், உறைகளில் உள்தாள் இணைத்து எழுதப் பட்டனவாக உள்ளன. கையெழுத்திலும், தட்டச்சிலும் சில மடல்கள் உள்ளன. முதலில் கையால் எழுதிப் பின்னர் தட்டச்சிட்டு அனுப்பும் முறையையும் விபுலாநந்தரின் மடல்கள் காட்டுகின்றன. எழுதும் நாள், இடம் குறிப்பிடுவது இவர் வழக்கம். இராமகிருஷ்ண மடத்திலிருந்து எழுதிய மடல்களில், அச்சிட்ட மடல்தாள்களில் அடிகளார் எழுதி யுள்ளார். அஞ்சல் அட்டையில் ஒரு பக்கம் மட்டும் அமைந்தனவாகவும், இரண்டு பக்கங்களும் எழுதப்பட்டன வாகவும் மடல்கள் உள்ளன. பெயர்சுட்டியும், உறவு விளித்தும் அடிகளார் மடலினைத் தொடங்குவது வழக்கம். ஆசி வழங்குவது இவரின் மடல் தொடக்கமாக இருக்கும். அடிகளாரின் மடல்களில் அவர் எந்த எந்த ஊர்களில் எந்த நாள்களில் இருந்துள்ளார், யார் யாரைச் சந்தித்துள்ளார், எங்குத் தங்கியுள்ளார் என்ற விவரங்கள் கிடைக்கின்றன.

விபுலாநந்த அடிகளார் தம் அன்பு மாணவர் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார், தம் அன்புச்சகோதரி, திருவாளர் சுந்தரம் பிள்ளை, உ.வே.சாமிநாதையர் மறைவுகேட்டு, அவர் மகனுக்கு எழுதி மடல், புதுக்கோட்டை சிதம்பரம் செட்டியார் என இவர்களுக்கு எழுதிய மடல்களையும் மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, கொப்பனாப்பட்டு கலைமகள் கல்லூரி ஆகியவற்றின் பார்வையாளர் சுவடியில் எழுதப்பட்ட குறிப்புகளையும் அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை உருவாகின்றது.

வெள்ளைவாரணத்திற்கு எழுதிய மடல்கள்:

பேராசிரியர் க. வெள்ளைவாரணன் அவர்கள் விபுலாநந்தரிடம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற மாணவராவார். பின்னாளில் யாழ்நூலினை விபுலாநந்தர் எழுதத் தொடங்கியபொழுது, அதன் உருவாக்கத்தில் பெரும்பங்கு வகித்தவர். வெள்ளைவாரணருக்குப் பல மடல்களை அடிகளார் எழுதியுள்ளார். பல ஊர்களிலிருந்தும் இவருக்கு மடல்கள் எழுதப்பட்டுள்ளன. தொடர்ந்து எழுதியுள்ள மடல்களின் துணைகொண்டு இருவருக்கும் இருந்த தொடர்பினை நன்கு உணரலாம். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வெள்ளை வாரணருக்குப் பணி கிடைப்பதற்கு விபுலாநந்தர் எழுதிய பரிந்துரைக் கடிதமும்(18.04.1943) இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். இந்தப் பரிந்துரைமடல் ஆங்கிலத்தில் உள்ளது. வெள்ளைவாரணன் தம் மாணவர் என்றும், அவர்தம் கல்வித்தகுதியை எடுத்துரைப்பதாகவும், அவரைப் பணியமர்த்த தாம் அழுத்தமாகப் பரிந்துரைப்பதாகவும் இந்த மடலில் விபுலாநந்த அடிகளார் குறிப்பிட்டுள்ளார். இந்த மடலின் வரிகள் சில எழுதி, அடிக்கப்பட்டுள்ளமையை இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே இந்த மடலைத் தட்டச்சிட்டு, உரியவர் களுக்கு அனுப்பியிருக்க வாய்ப்பு உள்ளது. எனவே இதனை மூல மடலாகக் கொள்ளுதல் வேண்டும். பரிந்துரைக் கடிதம் என்று குறிப்பிடுதல் பொருத்தமாக இருக்கும்.

வெள்ளைவாரணத்திற்கு 08.09.45 நாளிட்டுப் புதுக்கோட்டையிலிருந்து எழுதிய மடலில் தம் சென்னைப் பயணம் குறித்து அடிகளார் எழுதியுள்ளார். சென்னை சென்று திரும்பும்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வர விரும்புவதை அடிகளார் இந்த மடலில் தெரிவித்துள்ளார். அடிகளார் தொடர்வண்டியில் பயணம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தவர். தம் பயண ஒழுங்குகளை முன்கூட்டியே எழுதி, வருகையைத் தெரிவிப்பது அடிகளாரின் இயல்பாக இருந்துள்ளமையை இம்மடல் நமக்குக் காட்டுகின்றது.

29.08.1944 நாளிட்டு, கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மடத்திலிருந்து, வெள்ளை வாரணருக்கு, அண்ணாமலைப் பல்கலைக்கழக முகவரிக்கு எழுதிய மடலில், தமக்கு இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பணி மிகுதியாக அமைவதால் தக்க அன்புடையவர்களுக்கு மடல் எழுத முடியாமல் உள்ளதை நினைத்து வருந்தி எழுதியுள்ளார். தம் நண்பரின் மகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிப்பதைக் குறிப்பிடும் அடிகளார், அவருக்கு உதவ வேண்டுவதை, "எனது நண்பர் யாழ்ப்பாணம் திரு. இராமநாதன் அவர்களது புதல்வி செல்வி. ஜகதாம்பாள் அங்குள்ள இசைக்கல்லூரியிலே பயின்று வருவதாக அறிகிறேன். நோய் முதலிய துன்பம் நேரின் உதவிபுரிந்து சிறுமியுடைய நலத்தைக் குறித்து இடையிடையே எனக்கு அறிவிப்பீர்களாக" என்று எழுதுவதிலிருந்து அடிகளாரின் அன்புள்ளம் வெளிப்படுகின்றது.

31.03.1943 இல் விபுலாநந்த அடிகளார் பேளூர் மடத்திலிருந்து வெள்ளைவாரணருக்கு எழுதிய மடல் பல அரிய செய்திகளைத் தெரிவிக்கின்றன. பேளூரிலிருந்து எழுதிய மடலில், தாகூரின் சாந்திநிகேதன் செல்ல உள்ள குறிப்பும், பேளூரிலிருந்து சென்னை வர உள்ள செய்தியும் இந்த மடல் தாங்கியுள்ளது. கோவை இராமகிருஷ்ணா மிஷனிலிருந்து 27.04.42 ஆம் நாளிட்டு அடிகளார் வெள்ளைவாரணனாருக்கு ஒரு மடல் எழுதி யுள்ளார். இந்த மடலில் தாம் சென்னை செல்ல உள்ளதையும், அங்கிருந்து வேலூர் மாவட்டம் நாட்டறம்பள்ளி செல்ல உள்ளதையும் தெரிவித்துள்ளார். பின்னர் தஞ்சை வந்து, அங்கிருந்து சிதம்பரம் செல்வது கருத்து என்று குறிப்பிடும் அடிகளாரின் தொடர்ப்பயணங்களை இம் மடல் தெரிவிக்கின்றது. அடிகளார் நாட்டறம்பள்ளி சென்றமையை இம்மடல் குறிப்பதைக் கொண்டு, நாட்டறம்பள்ளிக்குச் சென்று மேலதிக விவரங்களைப் பெற முயன்றேன்.

ஆனால் அங்குள்ள இராமகிருஷ்ண திருமடத்தில் பழைய குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் சில விவரங்களை அங்குள்ள துறவியரிடம் பெற முடிந்தது. நாட்டறம்பள்ளியில் மிகப் பின் தங்கிய வகுப்பு மக்கள் புலவு உணவுக்காகவும் வேறு பல காரணங்களுக்காகவும் மதம் மாறிய சூழலில், இந்து மதத்தில் அவர்களைத் தங்க வைக்க இராமகிருஷ்ண மடத் துறவியர்கள் பல விழிப்புணர்வுச் செயல்களில் ஈடுபட்டதை அறிய முடிந்தது. அந்த வகையில் விபுலாநந்தரின் நாட்டறம்பள்ளிப் பயணம் இருந்திருக்கவேண்டும். மேலும் நாட்டறம்பள்ளியில் தங்கியிருந்த கேதாரேஸ்வராநந்த சுவாமிகளைச் சந்திப்பதை நோக்கமாகக் கொண்டும் விபுலாநந்த அடிகளார் நாட்டறம்பள்ளி சென்றுள்ளார்.

கோவை இராமகிருஷ்ணா மிஷனிருந்து 2.6.42 நாளிட்டு அடிகளார் வெள்ளைவாரணனாருக்கு எழுதிய மடலில் அவரின் பயணத்திட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கோவையிலிருந்து, 'திருப்பூர் போய், திருப்பராய்த்துறை சென்று, செட்டிநாட்டில் ஆவினிப்பட்டி, லக்ஷ்மிபுரம், புதுக்கோட்டை' போகவேண்டியுள்ளதைக் குறிப்பிட்டுள்ளார். இந்த மடலின் வழியாக விபுலாநந்தரின் சென்னை வானொலி நிலையப் பேச்சுத் தொடர்பான குறிப்பினை அறிய முடிகின்றது. திருச்சிராப்பள்ளியை அடுத்த திருப்பராய்த்துறை இராமகிருஷ்ண தபோவனத்துடன் அடிகளாருக்கு நல்ல தொடர்பு இருந்துள்ளதை இந்த மடல் நமக்கு உறுதிப்படுத்துகின்றது. தபோவனத்தை உருவாக்கிய சித்பவானந்தரும், விபுலாநந்தரும் நல்ல நட்புநிலையில் இருந்துள்ளனர். தபோவனம் தொடங்கப்பட்டபொழுது விபுலாநந்தர் தொடக்கவிழாவில் கலந்துகொண்டமையும் இங்குக் கவனத்தில்கொள்ள வேண்டும். அடிகளாரும், சித்பவானந்தரும் இணைந்து கயிலைக்குச் சென்றுவந்தவர்கள் என்பதையும் இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

24.11.42 நாளிட்டுப் பேளூரிலிருந்து அடிகளார் எழுதிய மடலில் யாழ்நூல் உருவாக்கம் குறித்த பல விவரங்கள் உள்ளன. சங்கீத இரத்தினாகரம் என்ற நூலினைப் படிக்க நினைத்தும் அப்பொழுது நடைபெற்ற உலகப்போர் காரணமாக நூல்கள் பாதுகாப்புக்காக வேறிடம் சென்றுவிட்டதை அடிகளார் குறிப்பிட்டுள்ளார். உலகப் போரின்பொழுது நூலகங்கள், அச்சுக்கூடங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளமையை இம்மடல் தெரிவிக்கின்றது. யாழ்நூல் படி எடுத்தல், கருவி நூல்களைத் திரட்டல், அச்சிடுதல், போன்ற பணிகளில் அடிகளார் தொடர்ந்து ஈடுபட்டுள்ளமையைப் பல மடல்கள் தெரிவிக்கின்றன.

விபுலாநந்தரின் உடல்நலிவுற்ற நேரத்து மடல்

அடிகளார் எழுதிக் கிடைத்துள்ள கடிதம் ஒன்று அவரின் உடல்நலிவுற்ற நிலையைத் தெரிவிக்கின்றது. ஒரு பக்கம் மட்டும் கிடைத்துள்ள கடிதத்தின் முதல் பகுதி கிடைக்கவில்லை. கிடைத்த பகுதியில் அவரின் உடல் நலிவும், நல் உணவு கிடைக்காமல் துன்பப்படுவதையும் தெரிவிக்கின்றது. இந்த மடலின் உள்ளடக்கச் செய்திளைப் பார்க்கும்பொழுது தம் சகோதரிக்கு அடிகளார் எழுதிய மடலாகத் தெரிகின்றது. அடிகளாருக்குப் பக்க வாத நோய், மற்றும் கடுங்காய்ச்சல் ஏற்பட்டு இருந்தமையைப் பிற சான்றுகளால் அறியமுடிகின்றது. எனவே இத்தகையை சூழலில் ஆறுதல் பேச்சையும், வாய்க்குச் சுவையான - சத்தான உணவையும் அடிகளார் விரும்பியுள்ளார். தனி வீடு எடுத்துத் தங்கி, உடல்நலத்தைப் பாதுகாக்க விபுலாநந்த அடிகளார் விரும்பியுள்ளதைப் படிக்க நேரும்பொழுது நம் கண்ணில் நீர்த்துளிகளைச் சிந்தவிடுவதாக இம்மடல் அமைகின்றது.

"…. கொழும்பிலே சத்துள்ள சாப்பாடு கிடையாது. அதிலும் ஆச்சிரமத்திலே சுத்தமான பசுவின் பால், தயிர், நெய் கிடைக்காது. இதற்காகவே தனிவீடு எடுத்திருப்போம் என்று நினைத்து அதற்காக வேண்டிய முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். வீடுகட்டப்படுகிறது. ஆவணி மாதம் வீடு ஆயத்தமானதும் நீ வந்து ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் இருந்து நல்ல சாப்பாடு தந்தால் தேகம் பழையபடி நல்ல நிலையை அடையும்.

இங்கு வரும்பொழுது பெலக் குறைவினால் பேனைபிடித்து எழுதுவதும் சிரமமாகவிருந்தது. வந்து பன்னிரண்டு நாட்கள் ஆகின்றன. நண்பர்கள் எழுதும் காகிதங்களுக்கு எல்லாம் என் கையினாலேயே மறுமொழி-யெழுதுகிறேன். நான் இவ்விடம் ஆறுதலுக்காக வந்திருக்கிறேன் என்பதை நினையாது தங்கள் கருமத்தைப் பேச வருவோர்களும், காகிதம் எழுதுவோர்களும் சிரமத்தையுண்டுபண்ணி டாக்டர் தருகிற மருந்தின் பிரயோசனத் தினைக் குறைவுபடுத்துகிறார்கள். மத்தியான உணவின் பின் சிறிதுநேரம் நித்திரை செய்ய வேண்டும். அண்ணா மலை சர்வகலாசாலை மாணவன் ஒருவன் வந்து இதுவரையும் பேசிக்கொண்டிருந்துவிட்டு இப்பொழுதுதான் போகிறான். இந்தக் கடிதம் இன்று எழுதாவிட்டால் உன்னுடைய மனமும் ஆறுதலடையாது. இந்த இரண்டு அலுவல்களினாலும் மத்தியான நித்திரை கெட்டுப்போய்விட்டது.

உணவுக்குறைவும் ஆறுதற்குறைவும்தான் எனக்குள்ள வருத்தம். இந்தியாவுக்குப் போனேன். அங்கும் ஆறுதல் கிடைக்கவில்லை. கச்சான் காற்று காலங்கழித்து, மட்டக்களப்புக்கு வந்தாலும் சட்டசபைக்கு போகவிரும்பும் நண்பர்களும் பிறரும் வந்து ஓயாத தொல்லை கொடுப்பார்கள். பெரிய மனுஷன் என்று பேர்வாங்கினால் இத்தகைய துன்பம் இருந்தே தீரும். நல்ல உணவும் ஆறுதலுந்தான் வேண்டியன. அதிலும் உணவுதான் பிர-தானம். ஆண்டவனுடைய கிருபையினால் ஆவணி மாதம் வீடு வசதிப்படும் .." " என்று தம் நிலையை மடலில் பதிவுசெய்துள்ளார்.

தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையரின் மறைவுகுறித்து எழுதிய மடல்

1942 ஆம் ஆண்டு தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் இயற்கை எய்திய செய்தியறிந்து, அவரின் மகன் கல்யாணசுந்தர ஐயர் அவர்களுக்கு விபுலாநந்தர் எழுதிய மடல் அரிய மடலாக நம் பார்வைக்குக் கிடைத்தது. வேலூர் மாவட்டம் நாட்டறம்பள்ளியில் விபுலாநந்த அடிகளார் தங்கியிருந்தபொழுது, திருக்கழுக்குன்றத்தில் இருந்த கல்யாணசுந்தர ஐயர் முகவரிக்கு எழுதியுள்ள மடலில், கொப்பனாப்பட்டுக்குத் தாம் சென்றிருந்தபொழுது, உவே.சாவின் மறைவுச் செய்தியை மெய்யப்ப செட்டியார் வழியாக அறிந்ததாகக் குறிப்பிடும் விபுலாநந்த அடிகளார் உ.வே.சாவுக்கும் தமக்குமான நட்பையும், உறவையும் கீழ்வருமாறு பதிவுசெய்துள்ளார்.

Sri Ramakrishna Math,
P.G. Nattarampalli,
(North Arcot)
3rd May 1892(?) (1942)

அன்புள்ள ஐயா,

சின்னாட்களுக்குமுன் புதுக்கோட்டை சமஸ்தானத்துக் கொப்பனாபட்டிக்குப் போயிருந்தபொழுது, ஐயா அவர்கள் திருக்கழுக்குன்றத்திலுறையுஞ் செய்தி செவிக்கெட்டியது. தமிழன்பராகிய திரு. மெய்யப்ப செட்டியாரவர்கள் ஐயா அவர்களது சுகத்தைக் குறித்துத் தங்களுக்கு எழுதியதாகவும் தாங்கள் விடையெழுதியதாகவுஞ் சொன்னார்கள். இது நிற்க.

ஏப்ரல் 20 ந் தேதியில் ஒருவாரவெல்லையில் ஐயா அவர்களது பிரிவு ஏற்படுமென்பதை அன்று என்னுள்ளம் உணர்ந்திருக்குமாயின் விரைந்து கழுக்குன்றிற்கு வந்திருப்பேன். இனி யாது செய்யலாம்? சங்கத் தமிழமிழ்தினை உலகிற்களித்த பெருந்தகையாரது பிரிவு அவ்வமிழ்தினைச் சுவைத்த தமிழன்பர் குழுவினை ஆறாத் துயரில் அமிழ்த்துகின்றது.

தமிழ் வளர்த்த மதுரை மாநகரிலே ஐயா அவர்களுக்குப் பொற்கிழியளித்த வைபவத்தைக் காணும்பொருட்டு, நண்பர் திரு. T.C. ஸ்ரீநிவாசையங்காரவர்களது அழைப்புப் பெற்று ஈழத்திலிருந்து வந்தேன். அன்றும் சங்க விழாக் கூட்டங்களிலும் ஐயா அவர்களது அன்புரை பெற்று அகமகிழ்வெய்தினேன். சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பாகிய கூட்டங்கள் சிலவற்றிலே உடனிருக்கும் பேறுபெற்றேன். ஆறாண்டுகளின் முன்னே சென்னைப் பல்கலைக்கழகத்து மண்டபத்திலே (senate House) யான் சில விரிவுரைகள் செய்தபோது, ஒருநாட் சமூகமாக விருந்து என்னைக் கௌரவித்தார்கள்.

இந்நினைவுகளெல்லாம் வாழுநாளெல்லை வரையும் நெஞ்சிற் பிரியாது கிடக்கும் நீர்மைய. முத்தமிழ் கற்றாரது பிரிவு பாலைச்சுரத்தினைப் போலக் கடத்தற்கரியது என ஔவைப் பிராட்டி கூறினாள். அவ்வுண்மையை இன்று உணருகின்றேன்.

வாணாளும், அறிவும், புகழும் நிறைவெய்தித் தங்களருமைத் தந்தையார் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தார்கள். ஆதலின், வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்பட்டார்கள்" என்று தம் அன்புடைமையை எழுதி, உ.வே.சாமிநாதையரின் தமிழ்ப்பணிகளை அடிகளார் நினைவுகூர்ந்துள்ளார்.

மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி

28.04.1932 நாளிட்டு, மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க்கல்லூரியின் விருந்தினர் பதிவேட்டில் அடிகளார் எழுதியுள்ள குறிப்பு அந்நாளைய மேலைச்சிவபுரிக் கல்லூரியின் சிறப்புகளையும் பெருமைகளையும் அறிந்துகொள்வதற்குப் பேருதவிபுரிகின்றன. கல்லூரியில் உள்ள நூலகச் சிறப்பு, கல்லூரியின் நோக்கம், கல்லூரியை உருவாக்கி நடத்தும் நகரத்தார் சமூக மக்களின் தமிழ் ஈடுபாடு, பண்டிதமணி கதிரேசனாரின் புலமைத் திறம் யாவற்றையும் நினைவுகூர்ந்து அடிகளார் பின்வருமாறு தம் கருத்தைப் பதிவுசெய்துள்ளார்.

...புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த மேலைச்சிவபுரியென்னும் நகரத்திலே சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் பொருட்டாகத் தன வணிக மக்களால் நிறுவப்பெற்றுச் செவ்வனே நடைபெற்று வருகின்ற சமரச சன்மார்க்க மெய்ந்நெறிக் கழகமாகிய சன்மார்க்க சபையின் இருபத்து மூன்றாவது ஆண்டு நிறைவு விழா ஆங்கிரஸ் ஸ்ரீ சித்திரை மீ 12,13 ஆம் தேதிகளில் நிறைவேறியது. இவ்விரு தினங்களிலும் ஆன்றவறிவின்மிக்க தமிழ்ப் புலவோர் பலர் அரிய பெரிய ஆராய்ச்சித் துறைகளிலே விரிவுரை நிகழ்த்தினார்கள். சபையைச் சேர்ந்த கணேசர் செந்தமிழ்க் கலாசாலை மாணவர் இன்னிசை கீதம்பாடிச் சபையை மகிழ்வித்தனர். மாணவருள்ளே சிறப்புறத் தேர்ச்சியெய்தினோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் நடந்தேறிய விழாக்கூட்டத்திற்குத் தலைமையாயிருந்து, உள நிறைந்த மகிழ்ச்சியோடு மாணவர், ஆசிரியர், தமிழ்ப் புலவர், நகரத்துப் பெருமக்கள் என்னும் நாற்பாலரோடும் அளவளாவி இச்சபை இயற்றி வருகின்ற நன்முயற்சியை ஒருவாறு அறிந்துகொண்டேன். தமிழ்க் கல்வி சாலச்சிறந்தது அதன் வழித்தாகிய நல்லொழுக்கம் அதனினுஞ் சிறந்தது, கற்கை நன்று, கற்றாரை வழிபடுதலதனினும் நன்று என்னும் உயரிய கொள்கைகள் இச்சபைக்கு உயிர்நிலையாவன எனக்கண்டு களிமகிழ்வெய்தினேன். இங்குள்ள நூற்களஞ்சியம் ஆராய்ந்தெடுத்த ஆயிரத்தின்மிக்க தொகையவாகிய தமிழ் நூல்களையும் சில ஆங்கில நூல்களையும் தன்னகத்துக் கொண்டது. மேல்வகுப்பு மாணவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பரிக்ஷைகளுக்கு ஆயத்தஞ் செய்யப்படுகிறார்கள். சபையின் அக்கிராசனராகிய திரு. வ. ப. சா. சாமிநாதச் செட்டியாரவர்கள் சபையையும் கலாசாலையையும் செம்மையாக நடத்தி வருகிறார்கள். ஆரியத்திலும் தமிழிலும் பெரும்புலமை வாய்ந்தவர்களாகிய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் பேருதவிபுரிந்து வருகிறார்கள். இச்சபை தமிழுக்கும் சைவத்துக்கும் செய்து வருகின்ற திருத்தொண்டு மேன்மேலும் வளர்ச்சியெய்துவதாக.

20.04.1942 இல் மீண்டும் ஒருமுறை மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரிக்குச் சென்றுள்ள அடிகளார், அக்காலத்தில் இருந்த தமிழ்க் கல்வியின் நிலையினைப் பதிவுசெய்துள்ளார். தமிழ்க்கல்லூரிகள் தரமான தமிழ் மாணவர்களை உருவாக்கிய திறத்தை அடிகளார் பாராட்டியுள்ளார். வித்துவான் உள்ளிட்ட தேர்வுகளை எழுதித் தமிழ்ப்புலமை பெற்ற அக்காலத் தமிழ் மாணவர்களின் சிறப்பினையும் விபுலாநந்த அடிகளார் பதிவுசெய்துள்ளார்.

"தமிழினைக் கற்றலுஞ் செய்யாது கற்று வல்லார் வழிச் சென்று கேட்டலுஞ் செய்யாது ஆன்றோர் கண்ட மரபினையறியாது தடுமாறுகின்ற போலிப் புலவர்களும் அவர் வழிச் செல்லும் நெறியறியா மக்களும் மலிந்த இக்காலத்திலே, உண்மைத் தமிழ்த்தொண்டிற்குரிய இந் நிலையமானது தமிழ்ப்புலவர்க்கு நிழலளிக்கின்றது. தமிழ் மாணவர்க்கு உண்டியும் உறையுளும் நல்கி, நல்லாசிரியர்பாற் செலுத்தி உயிர்க்குறுதி பயக்கும் உண்மைக் கல்வியை யளிக்கின்றது. சென்ற பத்தாண்டுகளின் முன்பு விழாத் தலைமை தாங்கிய காலத்து யான் கண்டு களித்த சீரினும் பார்க்க மிகுதியாகிய சிறப்பினை இப்பொழுது அடைந்திருக்கின்றதாகலின், ஆண்டவனுடைய பேரருளி னாலும், அறிவுடையாரது கூட்டுறவினாலும் இச்சபையானது நாடோறும் வளர்ச்சி யெய்தி வருகிறதென்பதை யான் அறிந்துகொண்டேன். சென்ற மூன்றாண்டுகளாக இங்கு உயர்தரக் கல்வி பயிலும் மாணவர்கள் சென்னைச் செழுங்கலை நியமத்துத் தமிழ்ப்புலவர்(வித்துவான்) தேர்தலுக்கு உரிய பாடங்களைப் பயின்று வருகின்றார்கள். தேர்தலுக்கு உரிய பாடங்களோடு மாத்திரம் அமையாது தமிழார்வமுள்ள மாணவர்கள் அறிவு விருத்தி கருதி நூலாராய்ந்து வருதலைக் காண்பது உள்ளத்திற்கு உவகை பயக்கின்றது" என்று வரைந்துள்ள பகுதிகள் படித்து உண்மை அறியத்தக்கன.

இராமகிருஷ்ண ஈடுபாடு

விபுலாநந்த அடிகளாருக்கு இராமகிருஷ்ணருடைய கொள்கைகளிலும், விவேகானந்தரின் கருத்துகளிலும் அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்துள்ளது. இருவரின் மீதும் தணியாத ஈடுபாடு இருந்துள்ளது என்பதைப் பல மடல்கள் தெரிவிக்கின்றன. இவர்களை மதித்தமைபோன்று, இவ்விருவரின் வழியில் வந்த நேரடி மாணவர்களையும் விபுலாநந்த அடிகளார் உயர்வாகப் போற்றியுள்ளார். இலங்கைக்கு விஞ்ஞானாந்த சுவாமிகள் என்னும் இராமகிருஷ்ணரின் நேரடி மாணவர் சென்றபொழுது, தம் பூர்வாசிரம குடும்பத்தினருக்கு எழுதி, அவரைக்கண்டு தரிசிக்க வேண்டுகின்றார். இவையாவும் இராமகிருஷ்ண இயக்கத்தின்மேல் விபுலாநந்தருக்கு இருந்த பற்றினைக் காட்டும் சான்றாக உள்ளது. இதனை விளக்கும் வகையில் விபுலாநந்தர் எழுதிய மடலில், "ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவருடைய நேர் சிஷ்யராகிய ஸ்ரீமத் விஞ்ஞானாந்த சுவாமிகள் புளியந்தீவுக்கு வருகி றார்கள். அவர்களைத் தரிசித்து ஆசீர்வாதம் பெறும்பொருட்டு நீயும் பிள்ளைகளும் 3ந் தேதி காலையிலே கல்லடியுப்போடைக்கு வரவேண்டும். வரும்போது நெய்ப்போத்தல் இரண்டும் நல்ல பச்சரிசி மூன்று படியும் தயிர்ப்பானை ஒன்றுங் கொண்டுவரவும். சாமான்கள் வாங்கவும், வந்து போகிற செலவிற்குமாக ஐந்து ரூபாக் காசு சிவ சிதம்பரத்திடம் அனுப்புகிறேன். நான் புளியந்தீவுக்கு 2ந் தேதி மத்தியானம் வர ஒழுங்குசெய்திருக்கிறேன்" என்று எழுதியுள்ளார்.

யாழ்நூல் உருவாக்கப்பணி

விபுலாந்த அடிகளார் தமிழ்ப்பணிகளுள் அவர் எழுதிய யாழ்நூல்பணி உலகம் அறிந்த ஒரு பணியாகும். அந்த யாழ்நூலை எழுதி முடிக்க அடிகளார் பல்வேறு இடர்ப்பாடுகளைச் சந்தித்துள்ளார். மாயாவதி ஆசிரமப் பணி யிலிருந்து விடுபடல்(1941), கொழும்புப் பல்கலைக்கழகப் பணியேற்றல்(1943 - 47), கடுங்காய்ச்சலில் வீழ்ந்தமை, முடக்குவாதம் வந்தமை என்று பணியும், பிணியும் விபுலாநந்த அடிகளாரை அக்காலத்தில் வாட்டியுள்ளன.

ஆயின் யாழ்நூலை அச்சிடுவதே தம் நோய்தீர்க்கும் மருந்து என்று நண்பர்களிடம் குறிப்பிடவும், புதுக்கோட்டையில் வாழ்ந்த தமிழ்வள்ளல் இராம. சிதம்பரம் செட்டியார் அவர்கள் விபுலாநந்தருக்கு வேண்டிய அனைத்து ஏந்துகளையும் செய்து தந்து ஆதரித்தார். 11,000 சதுர அடிகொண்ட தம் 'இராம நிலைய' வளமனையின் முன்பகுதியை அடிகளாரின் ஆராய்ச்சிக்கு ஒதுக்கித் தந்தும், பல்வேறு பணியாளர்கள், உதவியாளர்களை அமர்த்தியும், யாழ்க் கருவியை உருவாக்க உதவும் வகையில் ஓவியர்கள், மரத்தச்சர்கள், கொல்லாசாரியார்கள், இசைநுட்ப வல்லுநர்களைப் பணிக்கு அமர்த்தி யாழ்நூல் உருவாக உதவியுள்ளார்.

விபுலாநந்த அடிகளார் தங்கி ஓய்வெடுக்கவும் அமைதியாகத் தங்கியிருந்து ஆராய்ச்சி செய்யவும் இலங்கையில் றொசல்லா ஊரில் இருந்த தம் தேயிலைத் தோட்ட வளமனையை வழங்கியும் திரு. செட்டியார் அவர்கள் யாழ்நூல் ஆராய்ச்சிக்கு உதவியுள்ளார். தவத்திரு விபுலாநந்த அடிகளாரைவிட, அகவையில் குறைந்த திரு. சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கும் அடிகளாருக்கும் மிகச்சிறந்த நட்பும் உறவும் இருந்துள்ளமையை இருவரின் எழுத்துகளையும் ஊன்றிக் கற்கும்பொழுது உணரமுடிகின்றது. இராம. சிதம்பரம் செட்டியார் அவர்களுக்குச் சுவாமிகள் வரைந்த மடலில் யாழ்நூலை அச்சிட அடிகளார் வழங்கிய திட்டமும், யாழ்நூல் அச்சேறத் துணைநின்ற அ. கணபதிப்பிள்ளை அவர்களின் சிறப்பும் தெரியவருகின்றது.

9.5.45 நாளில் றொசல்லா ஊரின் உட்சோக் எஸ்டேட்டிலிருந்து எழுதிய மடலில்,

பிரிய நண்பர் திரு. பெ. ராம. ராம. சித அவர்களுக்கு
ஆண்டவன் அருளை முன்னிட்டு எழுதுவது.
.....
பேரன்புள்ள திரு. ழுழுஅ. க. அவர்கள் கடிதத்தையும் படித்தேன். அக்கடிதத்தில் ஒரு குறிப்பு எழுதி, இதனுள் வைத்திருக்கிறேன். அவர்களுக்கு அனுப்பிவிடலாம். அச்சுச் சட்டத்தின்படியும், நானூறு பக்கம் புத்தகத்தை ஓராண்டில் வெளியிட்டால் அதிகாரிகள் வினாவுவதற்கிடமுண்டு.

1944 ல் அச்சாகி முடிந்த முதல் ஐந்து இயல்களை(ப்) பாயிரவியல், யாழுறுப்பியல், இசை நரம்பியல், பாலை திரிபியல், பண்ணியல்களை இப்பொழுது வெளியிடலாம். படங்களை ஈற்றிற் சேர்ப்பது இப்பொழுது வெளிவரும் ஆங்கில ஆராய்ச்சி நூல்களின் மரபு பற்றி யாமும் ஈற்றிற் சேர்த்துக்கொள்ளுவோம். உள்ளுறையும் நூல் முற்றிலும் அச்சான பிறகு அச்சிடுதற்குரியது. இப்பொழுது நாம் அச்சிடவேண்டியது முகப்புத்தாள் மாத்திரமே (Title Page). இது திரு. அ. க. அவர்களுக்கு முன்னமே எழுதியிருக்கிறேன். வெளிக் கவருக்கு கையினால் செய்த தாள் தடிப்பானது. மதுரையிலும், விருதுநகரிலும் கிடைக்கும். வெண்சிவப்பு நிறத்தில் உபயோகிக்கலாம். முகப்பு(த்) தாளிலுள்ள விஷயத்தைச் சுருக்கி அச்சிடலாம்." என்று யாழ்நூல் அச்சிடுவதற்குரிய அமைப்பை இந்த மடலில் அடிகளார் எழுதியுள்ளார். தட்டச்சிட்டு வந்துள்ள இந்த மடலில் குறிப்பிட்டவாறு யாழ்நூலின் முதல் பதிப்பு வெளிவந்துள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய செய்தியாகும்.

கொப்பனாப்பட்டு கலைமகள் கல்லூரி

1939 ஆம் ஆண்டு, இமயமலைச் சாரலில் உள்ள மாயாவதி ஆசிரமத்திற்குச் செல்லும் வழியில், புதுக்கோட்டை மாவட்டம் கொப்பனாப்பட்டி என்னும் ஊரில் அமைந்திருந்த கலைமகள் கல்லூரிக்கு விபுலாநந்த அடிகளார் வந்துள்ளார். அக்கல்லூரியின் பார்வையாளர் குறிப்புச்சுவடியில் 25.08.1939 நாளிட்டு வரைந்துள்ள அடிகளாரின் கையெழுத்து உரை பல அரிய செய்திகளை நமக்குத் தெரிவிக்கின்றன.

கலைமகள் கல்லூரி, பெண்களின் கல்விநலனைக் கருத்தில்கொண்டு மெய்யப்ப செட்டியார் என்னும் தமிழ் வள்ளலால் உருவாக்கப்பட்டது. மெய்யப்ப செட்டியார் இலங்கைக்குச் சென்றபொழுது அங்குள்ள இராமநாதன் கல்லூரியைப் பார்த்துவிட்டு வந்து அதே அமைப்பிலும், நோக்கத்திலும் பெண்களின் கல்வி முன்னேற்றத்திற்கு இக்கல்லூரியை உருவாக்கினார். கல்லூரி நிர்வாகம் குறித்து, தாம் எழுதிய விருப்பமுறியில்(உயில்) தாம் எழுப்பியுள்ள இக்கல்லூரியில் தம் குடும்பம் சார்ந்தவர்களின் தலையீடு இருத்தல்கூடாது என்று எழுதியுள்ளதை நோக்கும்பொழுது இன்றைய போலிக் கல்வித்தந்தைகளின் நிலைமை நமக்குப் புலனாகும்.

"... கல்விச்சாலைகளும் கற்போரும் கற்பிப்போரும் உறைதற்குரிய விடுதிச் சாலைகளும், அட்டில், உணவுமண்டபம் பாற்பசுச்சாலையென்பனவும் பிறவும் கலைமகளாரது திருக்கோயிலைச் சூழச் செவ்வனே அமைந்துள்ளன. விசாலமான இடவசதியும், நன்னீர்வசதியும், காந்தவிளக்கு வசதியும் திறமுற அமைந்திருக்கின்ற இகல்லூரியானது கல்விவளர்ச்சிக்கு இன்றியமையாத இருபெருஞ் சாதனங்களாகிய தே(க ஆரோக்கியம்) மனவமைதியென்னும் இவற்றை நல்குதற்கு வே(ண்டிய) ஏற்பாடுகளோடு விளங்குகின்றது.

திருவருளையும் நல்லோரது ஆதரவினையும் கொண்டு இச்செழுங்கலை நியமத்தினையும் கல்லூரியையும், விடுதிச்சாலை முதலியவற்றையும் சிறப்புற அமைத்துத் தந்த நண்பர் திரு. மெய்யப்ப செட்டியாரவர்களை நீண்ட காலமாக அறிவேன். என்னுயிர்க்குயிராகிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவரும், சுவாமி விவேகாநந்தரும் பாரதநாடு புத்துயிர் பெற்றெழும்படியுதவிய அரிய மருந்தாகிய உபதேசமொழிகளைப் போற்றிப் படித்து அவற்றின் வழியொழுகுவதே வாழ்க்கையின் உயரிய நோக்கமாகும் என்னும் உண்மையைக் கடைப்பிடித்த நண்பரவர்கள் விவேகாநந்த சுவாமிகளருளிய சிகாகோ பிரசங்கங்கம் கர்மயோகம், இராஜயோகம் 'விவேகாந்த ஞானதீபம்' என்னும் நூலினை அச்சிட்டு வெளியிடுவதற்கு வேண்டிய பொருள் முழுவதையும் நான் கேளாமலே என்கையிற் றந்து, அப்பெருமுயற்சியிற் பங்குபற்றினார்கள். நண்பரவர்களது கண்காணிப்பிலே இக்கல்லூரியானது மேலும் மேலும் வளர்ச்சியெய்தித் தமிழ்நாட்டினுக்கோர் அணிகலமாகத் திகழுமென்பது எனது துணிபு. இக்கல்லூரியோடு தொடர்புடையோரனைவருக்கும் பேரருள் நல்கிப் பரிபாலிக்குமாறு உலக மாதாவாகிய உமா தேவியாரை மனமொழி மெய்களினாலே சிந்தித்துத் துதித்து வழிபடுகின்றேன்.

விபுலாநந்த அடிகளார் மாணவர்களுக்குக் கூறும் அறிவுரை

விபுலாநந்த அடிகளார் தம் உறவினர்களுக்கு எழுதிய தமிழ்ப்பாடங்கள் குறித்த அரிய குறிப்புச்சுவடியில் தம் கல்வியனுபவங்களைப் பதிவு செய்துள்ளார்.

"குருமகராஜை வழிபட்டுக்கொண்டு படிக்கத் தொடங்கவும். இந்தப் பாடக்குறிப்புகளைக் குறிப்புப் புத்தகத்திலே (*Exercise Book*) இருவரும் தனித்தனியாக எழுதிவைத்துக்கொண்டு எனக்குத் திருப்பி அனுப்பிவிடவும். நுணுகி ஆராய்ந்து படிக்கவேண்டும். பிரவேச பண்டித பரிக்ஷை மாத்திரமல்ல. உள்ளபடி தமிழறிவும் நல்லொழுக்கமும் வரும்படி இரவு பகலாகப் பாடங்களை ஆராய்ந்து படித்து மனத்திலே நிற்கும்படியாக நெட்டுருப் பண்ணிக்கொள்ள வேண்டும். பின்பு இந்தியாவில் வந்து படிப்பதற்கு இப்பொழுது படிக்கிற படிப்பு அஸ்திவாரமாக வேண்டும். தூரத்திலிருந்தாலும் உங்கள்மேல் என்னுடைய கண்கள் இருக்கின்றன. சோம்பல் சிறிதுங்கூடாது. புளியந்தீவுப்பட்டினம் போவதை அதிகமாக வைத்துக்கொள்ளக்கூடாது. சினிமாப்படம் முதலிய வேடிக்கைகளிலே மனஞ்சென்றால் படிப்பு வராது. நான் படிக்கிற காலத்திலே வேட்டி சட்டை கிழிந்திருப்பதைக்கூட நினைப்பதில்லைப் படிப்பே கவனமாக இருந்தேன். ஒருவரிடத்திலேனும்போய் எனக்கு உதவி செய்யுங்களென்று இரந்து நின்றதுமில்லை. கடவுட்பத்தியிலும் கல்வியிலும் மனஞ்செலுத்தினால் வேண்டிய சௌகரியங்கள் தாமாகவே வந்து கைகூடும்." என்று குறிப்பிட்டு எழுதும் விபுலாநந்த அடிகளார் தம் இளமைக்காலத்தில் படிப்புத் தொடர்பில் கிடைத்த இறை அனுபவங்களைத் தொடர்ந்து எழுதிச்சென்றுள்ளார்.

முடிவுரை:

விபுலாநந்தரின் வெளிவராத மடல்களில் அவர்தம் விருப்பங்கள் பல தெரியவருகின்றன. அவரின் நாட்கடமைகள், பயணத்திட்டங்கள், உறவினர்கள் நண்பர்கள், அவர் ஆற்றிய பணிகள் என்பன பதிவாகியுள்ளன. திட்டமிட்டுச் செய்யும் அடிகளாரின் ஆளுமையைப் புரிந்துகொள்வதற்கு இந்த மடல்கள் பேருதவிபுரிகின்றன. அக்காலத்தில் அமைந்திருந்த சமூக அமைப்பு, கல்விமுறை, தமிழ் வளர்ச்சி, ஆராய்ச்சித் திறம் யாவும் வெளிப்படுகின்றன. அக்காலத்தில் நடைபெற்ற இலக்கிய நிகழ்வுகள், சமூகத்தில் உயர்நிலையில் இருந்தவர்கள் ஆற்றிய பணிகள் யாவும் உலகுக்குக்குத் தெரியவருகின்றன. இலங்கையிலும், இந்தியாவின் பல பகுதிகளிலும் சிதறிக் கிடக்கும் விபுலாநந்தரின் அரிய கையெழுத்துப்படிகளை முழுமையாகத் தேடிப் பதிப்பிக்க வேண்டியது தமிழ் ஆராய்ச்சியாளர்களின் தலையாய கடமையாகும்.

விபுலாநந்த அடிகளார் தடம் தேடியபொழுது...

திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களின் அன்பு அழைப்பை ஏற்று 19.05.1942 இல் கோயம்புத்தூர் இராமகிருஷ்ண மிஷனில் நடைபெற்ற விழாவில் விருந்தினர் விடுதி ஒன்றினை விபுலாநந்த சுவாமிகள் திறந்துவைத்துள்ளார். கோவை மிஷனில் உள்ள விருந்தினர் விடுதிக் கல்வெட்டில், திருப்பூர் சு. சுப்பிரமணிய செட்டியார் பழனியம்மாள் விருந்தினர் விடுதி திரு. தி. சு. தண்டபாணி செட்டியார் அவர்களால் கட்டித் தரப்பட்டது. திரு. விபுலானந்த சுவாமிகளால் திறந்துவைக்கப்பட்டது. 19.5.42" என்று பதிக்கப்பட்டுள்ளது.



நன்றி: முனைவர் மு.இளங்கோவன்,
புதுச்சேரி, இந்தியா

சிலப்பதிகார மீட்டெடுப்பும் பண்டைத் தமிழர் இசை மரபின் மீட்டுருவாக்கமும்: சுவாமி விபுலாநந்தரின் 'யாழ்நூல்' உருவாக்கம் சார்ந்த புலமைத் தேடல்



கலாநிதி. வ. மகேஸ்வரன்.
தமிழ்ப் பேராசிரியர், துறைத் தலைவர்,
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக் கழகம், இலங்கை

முத்தமிழ் வித்தகர், முதல் தமிழ் பேராசியர் சுவாமி விபுலாநந்தரின் 125வது பிறந்த தினக் கொண்டாட்டங்கள் தமிழ் கூறு நல்லுலகங்களில் நடை பெற்று வருகின்ற சூழலில் அவரது யாழ் நூல் வெளி வருவதற்குப் பின்புலமாக அமைந்த காரணிகளில் அடிகளார் யாழ் நூலை மீட்டெடுக்க வேண்டியிருந்த பின்புலம் பற்றியும், அவரது மீட்டெடுப்பு முயற்சிகளுக்கு பண்டைத் தமிழ் இலக்கியங்கள் எவ்வாறு ஆதாரங்களாக அமைந்தன என்பது பற்றியுமே இக்கட்டுரை ஆராய்கின்றது.

தமிழ்ச் சூழலில் காலணிய ஆதிக்கம் என்பது அரசியல், பொருளியல் சார்ந்த தளங்களில் பல பாதகமான பின் விளைவுகளை ஏற்படுத்தின என்பதையும் மொழி, வரலாறு முதலான சூழலில் அந்த ஆதிக்கம் பல நன்மைகளை நமக்கு விட்டுச் சென்றுள்ளது என்பதையும் மறுப்பாரில்லை. அந்தவகையில் காலனிய காலத்தில் ஐரோப்பியரது இந்தியாவில் ஆய்வு முயற்சிகள் (Indology Reaserch) பெரும் நன்மைகளைத் தந்தன. ஒரு வகையில் தேங்கிக் கிடந்த இந்தியப் பண்பாட்டை அவை மீட்டுருவாக்கம் செய்தன என்றே குறிப்பிட வேண்டும்1. மாட்டிமர் வீலர், வில்லியம் ஜோன்ஸ், கேணல் மக்கன்ஸி, அலெக்சாண்டர் கன்னிங்காம், ஜோன்மார்ஷல், ஹீராஸ் பாதிரி யார், வீரமாமுனிவர், கார்டுவெல் முதலியோர் இந்தியாவில் ஆய்வில் நிகழ்த்திய சாதனைகள் அளப்பரியன. தேடல், ஆய்வு, பதிப்பு, வெளியீடு என அந்தக்களம் பரந்து வரிந்த பரப்பைக் கொண்டிருந்தது. பின்பு இவர்களின் மாணவர்கள், இவர்களால் பயிற்றப்பட்டவர்கள் இந்திய சுதேசிகள் தொடர்ந்தும் அப் பணிகளை முன்னெடுத்தனர். அதனால் இந்தியவியல் ஆய்வுகள் விரிந்தும் பரந்தும் நிகழ்தேறின.

பழைமையானவற்றை அறிவியல் கண்கொண்டு மீட்டெடுக்கும் அல்லது மீளக்கட்டமைக்கப்படும் முறை யியல் இந்த ஆய்வியலில் மையங் கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக சிந்துவெளி, ஹரப்பன் நாகரிகங்களின் மீள் எழுச்சி, மொழிக் குடும்பங்களைக் கட்டமைத்தல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் காலனிய காலம் தந்த நன்கொடையான அச்சுப் பொறியின் உபயோகமும் அதனுடன் இணைத்துப் பேசப்பட வேண்டியதாகும். ஒரு சில ரிடம் மட்டும் மறைவாக தேங்கிக் கிடந்த ஏட்டுப் பிரதிகள் அச்சு வாகனம் ஏறின. எழுதா எழுத்து என்ற அச்செழுத்து வெகுஜனப் பரவலாகியது. அதனை அடியொற்றிய அறிவு சார்ந்த ஆய்வுகளும் எழலாயின.

இத்தகைய ஒரு பின்னணியில்தான் தமிழ் ஆய்வுச் சூழலையும் நோக்க வேண்டியுள்ளது. காலனிய வரவான அச்சுப் பொறியை உபயோகிக்கச் சுதேசிகளுக்கும் அனுமதி கிடைத்த போது காலனியக் கல்விப்புலம் சாராதவர்களும் சார்ந்தவர்களும் அதனைச் சரியாகப் பயன்படுத்தினர். உ.வே.சா வையும், சி.வை.தா வையும் இதற்கான வகை மாதிரியாகக் கொள்ளலாம். அவர்கள் பண்டைய தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப் பதிப்பித்தனர். பதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு தருக்க ரீதியிலான ஆய்வுகளும் ஆய்வு நூல்களும் வெளி-வரத் தொடங்கின.

இத்தொடரோட்டத்தில் அடியார்க்கு நல்லாருடைய உரையுடன் கூடிய சிலப்பதிகார மீட்டெடுப்பும் அதன் பதிப்பும்(1892) முக்கிய சம்பவமாக அமைந்தது. சமண காலத்து இலக்கியம் என இருட்டடிப்புச் செய்யப்பட்ட ஒரு பனுவல் மீட்டெடுக்கப்பட்ட பின் அது பன்முக வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டது. அது வெறும் காப்பியம் என்ற தளத்தைத் தாண்டிப் பண்டைத் தமிழரின் பண்பாட்டின் அடையாளமாக அது கட்டமைக்கப்பட்டது. கண்ணகியும் அவள் கதையும் பேசபட்டதற்கு மேலாக தமிழரது ஆடல், பாடல், இசை, கட்டடம், இனக் குழும வரலாறு என அதன் பன்முகத் தன்மை வெளிக் கொணரப்பட்டது.

"19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இக்காப்பியத்தின் பதிப்பு மீண்டும் அறியப்பட்ட வரலாறு தமிழின் மறுமலர்ச்சிக்கான வரலாறாக அமைகின்றது. அரங்கேற்றுக்காதை போன்ற பகுதிகளை நாம் இழந்திருந்தோமானால் அது எவ்வளவு பெரிய இழப்பாக அமைந்திருக்கும். இம்மனநிலையோடு இக்காப்பியத்தைப் பதிப்பித்த உ.வே.சா மற்றும் வேங்கடசாமி நாட்டார் ஆகியோரின் பதிப்பு உரைகளை வாசிக்க வேண்டும். காப்பிய மரபு சுவடுகள் பதிக்கப்பட்ட வரலாறாக மட்டும் அமையாமல் தமிழ்மொழிமரபின் பல்வேறு வளங்களை மீண்டும் அறிந்த வரலாறாக அப்பகுதிகளை வாசிக்க முடியும்" என்று வி. அரசு குறிப்பிடுவது சிலப்பதிகார வாசிப்பின் பன்மைத் தன்மையைச் சுட்டி நிற்கின்றது எனலாம்2.

இவ்வாறான பன்முக வாசிப்புச் சூழல்தான் சுவாமி விபுலானந்தரையும் ஆட்கொண்டது. அவருக்கிருந்த இசை நாட்டமும் அறிவும் சிலப்பதிகார அரங்கேற்று காதையிலும் அதற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையிலும் மையங்கொள்ளச் செய்தது. அது தொடர்பான ஆழ்ந்த வாசிப்பைத் தூண்டியது.

> 'ஆயிரம் ஆண்டுகளாக மறைந்து கிடந்த அருங்கலை நிதியத்தின் பெருமையினையும் அதனைத் தேடிக் காணப்புகுந்த எனது சிறுமையினையும் ஒப்பவைத்து நோக்கும் சான்றோர் என்னை எள்ளி நகையாடுதல் இயல்பேயாம். வையமென்னையிகழவும் மாசெனக் கெய்தவும் இவ்வாராய்ச்சியினை யான் எழுதத் துணிந்தது, பொய்யில் காட்சிப் புலமையினோராகிய இளங்கோவடிகள் தமிழ்த் தெய்வத்தின் திருவடிகளுக்கு அணியாகப் புனைந்தளித்த தெய்வமாக்கவியாகிய சிலப்பதிகாரத்தின் மாட்சியினை என்னாலியன்றவரை உலகிற்குத் தெரிவிக்கும் பெருவிருப்பினாலேயாம்'

எனக் குறிப்பிடும் அடிகளார் தொடர்ந்து

> "இயற்றமிழ் நூல்களிலே பரந்து கிடக்கும் இசைநூன் முடிபுகளை என் போன்ற தமிழ் மாணவர்கள் ஓரளவிற்கு உணர்ந்து கொள்ள இவ்வாராய்ச்சி உதவுமாயின் எய்தும் பயனும் பெறுதற்குரிய பேறும் அதுவேயெனக் கொண்டு உளமகிழ்வுறுவேன்"

என்று தன் ஆய்வு நோக்கினை முன்மொழிகிறார்3.

இசைத்தமிழ் கூறுகளாக, இசையின் பிறப்பிடம் ஆளத்தி, பண்வகை, வட்டப்பாலை, பன்னிருபாலை பிறக்கும் முறை இசைப்பா, இசையளவு பா, தேவபாணி முதலான இசைப்பாக்களின் வகை, இசைக்கருவிகளான யாழ், குழல், தண்ணுமை முதலான கருவிகள் முதலியன தெளிவும் விளக்கமும் பெறுவதோடு ஆங்காங்கே சான்று விளக்க மேற்கோள்களையும் கொண்டு சிறக்கின்றன. இசையாசிரியரின் அமைதி, கவிஞனின் அமைதி, தண்ணுமையோன் அமைதி, யாழாசிரியன் அமைதி பற்றிய மூல நூல்களை அடியொற்றி விளக்கம் என்பன அடியார்க்கு நல்லார் உரையிலே தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான எண்ணத்திற்கு அவருக்கு உதவியாக அமைந்தது மீட்டுருவாக்க முறையியலாகும். (Reconstruction Methodology) இந்த முறையியலும் நமக்கு ஆங்கில வழி வந்ததுதான். அடிகளாருக்கு வாய்க்கப்பெற்ற பன்மொழி ஆற்றலும் அறிவியல் கல்வியும் இவ்வாறான நோக்கு நிலைக்குத் துணை செய்தன எனலாம். இவ்விடத்திலே அறிஞர் கால்டுவெல்லின் 'திராவிடமொழிக் குடும்பம்' என்ற கருத்தியலைச் சான்று காட்டுவது பொருத்தமானதாக அமையும். அவர், தென்னகத்தில் ஆங்காங்கே உதிரிகளாகக் காணப்பட்ட பல மொழிகளின் அடிப்படைத் தன்மைகளை ஆராய்ந்து மீட்டுருவாக்க முறையியலின் வழி கட்டமைக்கப்பட்டதே 'The Comparative Grammer of the Dravidian Languages' (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்) என்ற நூலாகும். இந்த ஆய்வு நூல் தமிழ் மொழி வரலாற்றிலும், திராவிட இனவரலாற்றிலும் பெரும் உதைப்புகளை நிகழ்த்தியமையைத் தமிழறிஞர் யாவரும் அறிவர். இத்தகையதொரு பின்னணியிலேதான் அடிகளாரும் யாழினை மீட்டுருவாக்கம் செய்தார். தமிழ்ச் சூழலில் நிலைபெற்ற பண்டைத் தமிழ் இலக்கியக் குறிப்புக்களின் வழி ஓசை, இசை, இசைவாணர், இசைக் கருவிகள் என்பவற்றை மீட்டுருவாக்கி தமிழிசையையும், சிலம்பையும் அவர் வாழவைத்தார்.

இந்த இடத்தில் அடிகளாருடைய தமிழ்த் தேசியத்தின் மீதான பற்றையும் அடையாளங் காண்பது அவசிய மானது. தமது பன்மொழி ஆற்றல் புலமைத்துவத்தின் வழி மேலைத்தேய அறிவியலை, பண்பாட்டை, இலக்கியத்தைப் பலவிடங்களில் அவர் விதந்தோதுகின்றார்4. எனினும் தமிழ்ப் பண்பாட்டையும் இலக்கியத்தையும் அவர் முதன்மைப் படுத்துகின்றார். இத்தகைய நோக்கு பாரதிக்கு இருந்துள்ளது. (பாரதியைப் பின்நாட்களில் அடிக-ளாரே முதன்மைப் படுத்தினார் என்பது இவ்விடத்தில் குறிப்பிட வேண்டியது.) தமிழ் உணர்வின் வரலாறும் விபுலானந்தரின் தமிழ் உணர்வும் என்றகட்டுரையில் அடிகளாரைதமிழ்த் தேசிய உணர்வாளராக மௌனகுரு அடையாளப்படுத்துகிறார்5. தமிழிசை இயக்கத்தின் செயற்பாடுகளில் அவரது தீவிர பங்களிப்பு அவரை அவ்வாறு கட்டமைக்கத் துண்டுகின்றது. தமிழிசை இயக்கம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வேர் கொண்டது. 1936 இல் அங்கு தமிழிசை மாநாடு நடைபெற்றது. இதனைத் தொடர்ந்த முத்தமிழ் மாநாடுகளிலும் சுவாமிகள் பேச்சாளராக அழைக்கப்பட்டார். கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'தமிழ்ப்பொழிலில்' அடிகளார் தமிழ் இசை பற்றிய கட்டுரைகள் பலவற்றை எழுதினார். அக்கட்டுரைகள் மீது அறிஞர் பலர் எதிர்வினையாற்றினர்6. (குறிப்பாகத் தேவநேயப்பாவாணர்) எனினும் அடிகளார் தமது இலக்கினைத் தவறவிடாது உழைத்ததன் விளைவே யாழ் நூலின் தோற்றம் எனலாம்.

இனி இந்த மீட்டுருவாக்க முயற்சிக்கு அடியாதாரங்களாக அமைந்த நமது தமிழ்ப் பனுவல்களைக் குறிப்பிடுவது அவசியமாகின்றது. அவற்றை

(அ) செவ்வியல் இலக்கியங்கள்

(ஆ) இடைக்கால இலக்கியங்கள

என வகைமை செய்யலாம்.

நமது தமிழ் இலக்கிய வரலாற்றின் அடிக்கட்டுமானங்களாக அமைந்தவை செவ்வியல் இலக்கியங்களாகிய சங்கத் தொகை நூல்களும் பாட்டு நூல்களும் ஆகும். அவற்றிலே காணப்பட்ட இசை பற்றிய செய்திகளை இரண்டு தளங்களில் விபரித்துள்ளார். அவற்றுள் ஒன்று அந்நூல்களில் ஓசை, இசை பற்றிய குறிப்புகளாகும். புறநானூறு, பரிபாடல், அகநானூறு ஆகியவற்றில் காணப்படுகின்ற இசை பற்றிய நுணுக்கமான செய்திகளை இதில் இனங்கண்டார். இரண்டாவதாக பாணர், விறலி வரன்முறையினூடாக இசைக் கலைஞர்களையும் அவர்கள் உப-யோகித்த இசைக் கருவிகளையும் கட்டமைத்தார்.

அந்தவகையில் புறநானூறு, நற்றிணை, அகநானூறு, பரிபாடல், கலித்தொகை, பதிற்றுப்பத்து ஆகிய தொகை நூல்களிலிருந்தும் ஆற்றுப்படை முதலிய பாட்டு நூல்களிலிருந்தும் உதாரணங்களைப் பெய்து எழுதுகிறார். குறிப்பாக சிறு, பெரும் பாணாற்றுப்படைகள் அவருடைய விபரிப்புக்குச் சிறப்பான சான்றுகளாக அமைந்தன. இசை மட்டுமன்று இசைக்கலைஞர்கள் வாழ்வியல் வழியாகத் தமிழர் இசையின் மூல வேர்களை அவற்றினூடாக வெளிக் கொணர்ந்தார். இதன் தொடர்ச்சியாகத்தான் 'யாழ்' என்ற பண்டைய இசைக்கருவியின் அமைப்பில் கவனம் செலுத்துகிறார். அதன் வழி தான் பேரியாழ், சீறியாழ், செங்கோட்டுயாழ், சகோடயாழ் என்ற பலவகையான 'யாழ்' கருவிகளை அவர் மீட்டுருவாக்கம் செய்கின்றார். இதற்கு அவரிடம் அடிப்படையில் இருந்த பௌதீகவியல் (பூத நூல்) அறிவும் கைகொடுத்தது. அதனால் 'யாழ்' என்ற நமது இசைக்கருவியை உருவாக்கம் செய்யமுடிந்தது. பொருநராற்றுப்படையில் காணப்பட்ட நுணுக்கமான செய்திகள் (4 – 20) யாழ் உறுப்புக்களான பத்தல், பச்சை, போர்வை, ஆணி, வறுவாய், மருப்பு, திவவு, நரம்பு முதலியவற்றை அறிய உதவின. ஆகவே சங்க இலக்கியங்களில் உதிரிகளாக ஆங்காங்கே சொல்லப்பட்ட செய்திகளையும் (தொகை நூல்களில்) பாட்டு நூல்களில் காணப்பட்ட இசைக் கலைஞர்கள் பற்றியதும் இசைக் கருவிகள் பற்றியதுமான செய்திகளையும் மிக நுணுக்கமாகப் பரிசீலனை செய்து அவற்றினை ஒன்றுகூட்டி அவற்றின் வழி 'யாழ்' என்ற நமது பண்டைத் தமிழ் இசைக்கருவியை மீட்டுருவாக்கம் செய்தார்.

சங்க இலக்கியச் சான்றுகளுடன் மட்டும் அவர் நின்றுவிடவில்லை. நமது இன்னோர் இலக்கிய வகைமையான தேவாரப் பாடல்கள் வழியான இசை நுணுக்க முறைகளையும் இசைவாணர்களையும் தமது ஆய்விற்குத் துணையாகச் சேர்த்துள்ளார். யாழ் என்ற கருவியை தேவாரகாலத்தில் யாழ்ப்பாணர்கள் இசைத்த (மீட்டிய) செய்தியை பெரியபுராண வழியும் குறிப்பாக ஞானசம்பந்தர் வரலாற்று வழியாகவும் அறிய முடிகிறது. திருநீலகண்ட யாழ்ப்பாணர் பற்றிய செய்திகள், மற்றும் யாழ் முறிப்பதிகம் தொடர்பான செய்திகள் மூலமாக இவற்றை அறிய முடிகின்றது. எனவே தேவார காலத்திலும் தொடர்ந்த பாணர் முறை காரணமாக யாழும் இசையும் நம்மிடையே நிலை பெற்றவற்றைத் 'தேவாரவியல்' என்ற பகுதியில் விவரித்துள்ளார். இசை பற்றிய நுணுக்கங்களை மூவர் தேவாரங்களிலிருந்தும் எடுத்துக்காட்டுக்கள் மூலம் விவரமாக ஆராய்ந்துள்ளார். அப்பருடைய தேவாரங்களைத்தான் இசை நுணுக்கங்களுக்கு முதலில் உதாரணம் செய்துள்ளார். பின்புதான் ஞானசம்பந்தர், சுந்தரர் தேவாரங்களினின்றும் எடுத்துக் காட்டுகளை அவர் குறிப்பிடுகின்றார். தேவாரவியல் எனும் பகுதி குறிப்பிடும் செய்தி யாதெனில் நமது வரலாற்றில் தொடர்ச்சியாக இசைமரபு, இசைக்கருவிகளின் பாவனை மரபு, நிலைத்துவந்துள்ளன என்பதை நிரூபணம் செய்வதாகும்.

தேவாரவியலில் மாத்திரம் அவர் நிலைகொள்ளவில்லை. அதற்கு அப்பாலும் நமது இசைமரபின் நீட்சியை பெருங்கதை, சீவகசிந்தாமணி மூலமான இலக்கியங்களின் வழியும் அடையாளப்படுத்தியுள்ளார். குறிப்பாகச் சீவக சிந்தாமணியில் யாழ் என்ற கருவி வீணை, மகரவீணை, யாழ் என்ற பெயர்களில் அறியப்படுகின்றது. பெருங்கதையிலும் வீணை, மகரவீணை, பேரியாழ் என்ற பெயர்களிலும் சுட்டப்படுகின்றது. இவை பற்றிய செய்திகளை அடிகளார் யாழுறுப்பியல் என்ற பகுதியில் சான்று காட்டியுள்ளார். குறிப்பாக 'மகரயாழ்' பற்றிய விவரிப்பில் இந்நூல்களிலுள்ள செய்திகளை விரிவாக விளக்கியுள்ளார். யாழே வீணையாகவும் மகரயாழாகப் புதுத்தோற்றங் கொண்டதனையும் இதனூடாக நிரூபிக்க முனைந்துள்ளார். அடிகளாருடைய ஆய்வுக்கு மூலச்சான்றுகளாக அமைந்தவை தமிழ் இலக்கியங்களாகும். சிலப்பதிகாரத்தினதும் அதற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையினதும் அருட்டுணர்வுதான் அவருக்குப் பண்டைத் தமிழர் பற்றியதும், யாழ்நூல் பற்றியதுமான ஆய்வினை நடத்துவதற்கான உந்துசக்தியாக அமைந்தது. எனவே அதன் வழி அவர் மூலங்களைக் கண்டறியும் முயற்சியில் சங்க இலக்கியங்களில் தேடல்களை நிகழ்த்தினர்.

அவை அவருக்கு தகவல் பெட்டகமாக அமைந்தன. அதன் வழி ஆய்வை அவர் முன்னெடுத்தார். இவ்விடத்தில் இந்த இசை பற்றியும், இசைக்கருவிகள் பற்றியதுமான செய்திகள் சங்க இலக்கியங்களில் பாணர் மரபிலிருந்தும் புலவர் மரபிலிருந்துமே கிடைத்தன என்பதை மனங்கொள்ளல் அவசியமானது. நமது சங்க இலக்கியங்களின் தோற்றுவாய் பாடல் மரபு அல்லது பாணர் மரபுதான். அதன் தொடர்சிதான் புலவர் மரபு. எனவே இந்த இரு மரபின் வழி புலப்பட்ட இசை பற்றிய செய்திகள் விளிம்புநிலை மக்களிடமிருந்து பெறப்பட்ட செய்திகளாகக் கட்டமைக்கமுடியும்.

கூத்தரும் பாணரும் பொருணரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி
பெற்ற பெருவளம் பெறார்க்கு அறீவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்

என்ற இலக்கண குறிப்பின் வழியும், இலக்கிய ஆதாரங்களின் வழியும் இந்த இசை மரபை அழியவிடாது பேணிக்காத்தவர்கள் கலைஞர்களாக அறியப்பட்ட பெற்றது கொண்டு சுற்றமருந்தி வாழ்ந்து மடிந்துபோன விளிம்புநிலைக் கலைஞர்களே. ஆகவே விளிம்புநிலைக் கலைஞர்களின் இசை மரபிலிருந்துதான் நமது இசை மரபு முகிழ்த்தது. இவற்றைச் சரியான முறையில் அடிகளார் பயன்படுத்தியுள்ளார்.

தேவார இசை மரபு என்பது பக்தி சார்ந்தது. எனினும் ஒருவகையான இயக்க வழியே நிலைத்தது. 'பக்தி இயக்கம்' என்ற நிறுவன மயமாக்கப்பட்ட கருத்தியலூடாகத்தான் தமிழ் இசைவளர்ந்தது. ஓரளவில் அது விளிம்பநிலைப்பட்ட கலைஞர்களின் கைகளிலிருந்தும் மிடற்றிலிருந்தும் மேல்நிலை பெற்று விட்ட சூழலைத்தான் இதன் வழி அறியமுடிகின்றது. அடிகளார் இந்தமரபையும் உள்வாங்கி நமது இசை மரபின் தொடர்ச்சியை உறுதி செய்துள்ளார்.

காப்பிய வழியான விபரிப்பில் அந்த இசைக் கருவிகளும் இசையும் அதிகாரம் சார்ந்த மேல்நிலையாக்கம் பெற்று விட்டதை அவதானிக்கலாம். யாழும் வீணையும் அரசவை அல்லது அந்தப்புர நிகழ்ச்சிகளில் மீட்டப்படும் கருவிகளாகி விட்டன. அவை மேட்டுக்குடி சார்ந்த அழகியல் பண்புள்ள இசை மரபாக மாறிவிட்டதை காப்பியங்களின் வழி அறியமுடிகின்றது. இவ்வாறாக மேல்நிலையாக்கம் பெற்றுவிட்டாலும் அந்த இசை மரபு நம்முடைய பண்பாட்டின் தொடர்வளர்ச்சிதான் என்பதை மனங்கொண்ட அடிகளார் அவற்றையும் இணைத்துக் கொள்கின்றார். இப்போது யாழ்நூல் உருவாக்கத்தில் பண்பாட்டு வேர்களின் மூலங்களான அடித்தள மக்களது இசைமரபு, கோயில் சார்ந்த நிறுவனமயப்பட்ட இயக்கம் வளர்தெடுத்த இசைமரபு, அதிகாரம் சார்ந்த மேல்நிலையாக்கம் பெற்ற இசை மரபு என மூன்றும் சேர்ந்ததுதான் நமது பாரம்பரியமான இசைமரபு என்பதைக் கட்டமைக்க அடிகளார் முயன்றுள்ளார். அவருக்குத் தமிழ் இலக்கியங்கள் சான்றாக அமைந்தன. அந்தப் புலமைத் தேடலின் பயன் நமக்குக் கிடைத்த பெரும் பயன் ' யாழ்நூல்'.

அடிக்குறிப்புக்கள்.

1. Rahavan .v. Indological studies in India motile banarsidas – Delhi: Patana : Varanasi.1964
2. வி. அரசு. சிலப்பதிகாரம் பன்முக வாசிப்பு – அணிந்துரை மாற்று, சென்னை, 2009.
3. சுவாமி விபுலானந்தர் யாழ்நூல், பாயிரவியல் ப.உஅ.
4. விபுலானந்தர் கட்டுரைகள், அரசகரும மொழித் திணைக்களம், கொழும்பு, இக்கட்டுரைத் தொகுப்பில் அவர் மேலைத்தேய இலக்கியங்களையும் அவற்றின் செல் நெறிகளையும் வியந்து எழுதியுள்ளார். மேலும் தகவல்களுக்குப் பார்க்க– க.கைலாசபதி– ஒப்பிலக்கியம். முத்தமிழ் முனிவரின் ஒப்பியல் நோக்கு.
5. பார்க்க. மகேஸ்வரன்,வ. தமிழியல் நோக்கில் யாழ்நூல் - கொழும்புத் தமிழ்ச் சங்கம், தட்டச்சுப் பிரதி.
6. இளங்குமரன். இரா. தமிழிசை இயக்கம், மணிவாசகர் பதிப்பகம். சென்னை.

விபுலாநந்த அடிகளார் தடம் தேடியபொழுது...

முனைவர் மு.இளங்கோவன்,
பட்டமேற்படிப்பு மையம், புதுச்சேரி, இந்தியா

விபுலாநந்த அடிகளார் தமிழகத்தில் பல ஊர்களுக்குச் சென்று, பல்வேறு நிகழ்வுகளில் பங்கு கொண்டுள்ளார். பல ஊர்களில் அவரின் சிறப்புரைகள் நடைபெற்றுள்ளன. பல நிறுவனங்களில் நற்பணிகளைத் தொடங்கி வைத்த பெருமையும் இவருக்கு உண்டு. ஆனால் முழுமையாக இவை யாவும் தொகுக்கப்படாமல் போனமை நம் போகூழ் என்றே குறிப்பிட வேண்டும்.

கோயம்புத்தூர் இராமகிருஷ்ண மிஷனுக்குப் பலமுறை விபுலாநந்த அடிகளார் வந்து சென்றுள்ளமையை அவர் எழுதிய கடிதக் குறிப்புகளில் அறிந்து, கோவைக்குச் சென்று மிஷன் சுவாமிகளுடன் உரையாடி விவரம் வேண்டினேன். மிஷனில் பழைய படங்கள் இருக்கும் என்று பலமுனைகளில் தேடியும் எந்த விவரமும் கிடைக்கவில்லை. விபுலாநந்த சுவாமிகள் கோவை மிஷனுக்குப் பலமுறை வந்துள்ளதை நான் தொடர்ந்து மிஷன் சுவாமிகளிடம் நினைவூட்டிய பிறகு விருந்தினர் விடுதியில் ஒரு கல்வெட்டில் விபுலாநந்த அடிகளார் பெயர் இருப்பதை சுவாமிகள் நினைவு கூர்ந்தார். அந்த இடத்துக்குச் சென்று பார்த்த பொழுது விபுலாநந்த அடிகளார் 1942 இல் விருந்தினர் விடுதியைத் திறந்து வைத்த ஒரு கல்வெட்டைக் கண்டு அளவிலா மகிழ்ச்சியுற்றேன்.

கோவை மிஷன் உருவாக அடிப்படைக் காரணமாக இருந்த திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களும், விபுலாநந்த அடிகளாரும் நல்ல நண்பர்களாக இருந்துள்ளனர். (பின்னாளில் திருக்கொள்ளம்பூதூரில் யாழ்நூல் அரங்கேறியபொழுது அந்த வரலாற்று முதன்மை வாய்ந்த நிகழ்ச்சியில் அவினாசிலிங்கம் செட்டியார் கலந்து கொண்டமையை இங்கு நினைத்துப் பார்த்தல் வேண்டும்.) திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களின் அன்பு அழைப்பை ஏற்று 19.05.1942 இல் கோயம்புத்தூர் இராமகிருஷ்ண மிஷனில் நடை பெற்ற விழாவில் விருந்தினர் விடுதி ஒன்றினை விபுலாநந்த சுவாமிகள் திறந்து வைத்துள்ளார். கோவை மிஷனில் உள்ள விருந்தினர் விடுதிக் கல்வெட்டில், "திருப்பூர் சு. சுப்பிரமணிய செட்டியார் பழனியம்மாள் விருந்தினர் விடுதி திரு. தி. சு. தண்டபாணி செட்டியார் அவர்களால் கட்டித் தரப்பட்டது. திரு. விபுலானந்த சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டது. 19.5.42" என்று பதிக்கப்பட்டுள்ளது. விபுலாநந்த அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை முழுமையாக அறிய இதுபோன்ற சான்றுகள் பெரிதும் உதவும்.






கங்கையில் விடுத்த ஓலை

விபுலாநந்தர், தன்னை வேட்களம் கண்ட நாள்முதல் அன்பெனும் கயிற்றால் பிணித்த நண்பரும், பேரறிஞரும், சுவாமிகள் அண்ணாமலையில் பேராசிரியரான போது கூடவே தமிழ் விரிவுரைத்த மூதறிஞருமான திருவாளர் கந்தசாமிப்பிள்ளை அவர்கள், மாரடைப்பில் விண்சேரக் கேட்டு ஆறாத்துயர் கொண்டார்.

அவ்வேளை கங்கைக்கரையோரம் அமைந்திருந்த வேலூர்மடத்தில் தங்கியிருந்த சுவாமியவர்கள், தன்துயர் தோய்ந்த இரங்கலில் தன்னுறுநட்பு நிலைபெறுமென்று உறுதிப்பாட்டெழுதி, ஓது விபுலாநந்தனுரையிவை என்று முத்திரையுமிட்ட ஓலைதனை விண்புகுந்து தன்நண்பனிடம் சேர்க்கவல்லாள் யாரெனக்கலங்கினார்.



இறுதியில் மூவுலகும் செல்லவல்ல, செஞ்சடையில் மட்டுமன்றி அவர்மடத்தருகும் உறையும், தேவர் புகழும் கங்கைத்தாயே வல்லாள் அவளே கதியென்று தெளிந்து அவளிடம் தனக்கோர் தூதுசெல்லெனக் கெஞ்சியிரந்து அவளது நுரை மென்கரங்கொடுத்தார்.

அன்று 1942ம் ஆண்டில் அவர் "கங்கையில் விடுத்த ஓலை" ஆனது, கங்கை தவழும் விண்ணிலும் மண்ணிலும் இன்றும் மங்கா மகப்புடன் மிதக்கின்றது, அதை எடுப்போர், படிப்போர் மனங்களில் பொங்கும் பரவசம் பொழிகின்றது.

கங்கையில் விடுத்த ஓலை

1. எழுத்தறிந்து கலைபயின்றோ னின்றமிழி னியனூல்
எத்தனையோ வத்தனையு மெண்ணியாழங் கண்டோன்
பழத்தமிழ்ப் புலமையினோர் பேரவையில் முந்தும்
பணிந்தமொழிப் பெரும்புலவன் கனிந்தகுண நலத்தான்;

2. சொல்வகையுஞ் சொற்றொகையுஞ் சொல்நடையு முணர்ந்தோன்
சொலல்வல்லான் சொற்சோராத் தூயநெறி யாளன்
பல்வகைய நூற்கடலுட் படிந்துண்மை மணிகள்
பலவெடுத்துத் திரட்டிவைத்த பண்டாரம் போல்வான்;

3. மொழித்திறத்தின் முட்டறுத்து முதனூலு முணர்ந்தோன்
மொழிவதற மொழியென்னும் மூதுதரையுந் தெளிந்தோன்
அழுக்கறுத்த தூயசிந்தை அந்தண்மை யடக்கம்
அணியிவைதா மெனக்கொண்டோ னறநெறியில் நின்றோன;

4. மெய்ப்பொருளே பொருளென்ன விளங்கவைத்து முன்னோர்
விரித்துரைத்த வகமேழும் புறமேழும் பயின்றோன்
மெய்ப்பொருளை நச்சுபவர் புறங்கடைநோக் காதோன்
போதுபுனை மாதர்நலந் தீதெனவிட் டகன்றோன்;

5. அவநெறியிற் செல்வோர்தாங் கரும்பிருக்க விரும்பை
அயிலுகின்ற மூடரென வறிந்துலகு துறந்து
தவநெறியிற் றலைப்பட்டோனவாவின்மை யென்னுந்
தனிச்செல்வந் திரட்டிவைத்த தாவில்புத ழாளன்;

6. அன்பாண்ட புலமையினோ ரெந்நாடும் நாடா
அடைந்துவத்தல் முறையெனினு மமலன சாண்ட
தென்பாண்டி நன்னாட்டிற் சோழவந்தா னூரைச்
சேர்ந்துதிகழ் சைவநெறித் திருமடத்தி லுறைந்தோன்;

7. கந்தசா மிப்பெயரோன் வேட்களத்தி லென்னைக்
கண்டநா ளன்பென்னுங் கயிறுகொண்டு பிணித்தான்;
அந்தநாண் முதலாக நட்புரிமை பூண்டோம்
அண்மையில்யான் வடநாடு நண்ணியதை யறிந்தே;

8. நம்மடிக ளுறைகின்ற தவப்பள்ளி யாது
நற்றவத்தோர் முவரியா தெனவினவித் தெரிந்து
செம்மையுறுஞ் செய்திபொதி யோலையொன்று விடுக்கச்
சிந்தைவைத்தா னெனவெனககே ரன்பனறி வித்தான்;

9. அகநெகுமன் பினிலூறு முரைபகரும் பொருட்டோ
ஆயந்தசில கலைமுடிபு தேர்ந்துணரும் பொருட்டோ
முகவரிபெற் றோலைவிட முயன்றனன்பே ரன்பன்
மூதறிஞ னெனவெண்ணி யாதரமுற் றிருந்தேன்;

10. ஓரிருநாள் கழியுமுன்னர் மார்படைப்பு நோயால்
ஊனுடலம் பாரில்விழ வானுலகு புகுந்தான்
ஆருயிர்நேர் நண்பனெனு மவலவுரை செவியில்
அனற்பிழம்பாய்ப் புகுந்துளத்தை யுருக்கிய தப்பொழுதில்;

11. பொங்கியெழுந் துயர்க்கனலைப் போக்குதற்கும் மாயப்
பொய்யுலகி னுண்மையினைப் புலங்கொளற்குங் கருதிக்
கங்கையெனுந் தெய்வநதிக் கரைப்புறத்தை யடைந்து
கல்லென்று சொல்லிவிழும் நீர்த்தங்கங் கண்டேன்;

12. மேற்றிசைவான் ஈமத்தீ போற்சிவக்கப் பகலோன்
மெலிந்துமறைந் திடல்கண்டேன் நலிந்தவருள் ளம்போற்
காற்றுயிர்த்துப் பனித்திவலை தூற்றுதலைக் கண்டேன்
காரிருளின் கண்மிரிய வானவெளிப் பரப்பில்;

13. ஐயிரண்டு நாள்வளர்ந்த வெண்மதியந் தோன்றி
அன்புசொரிந் திடல்கண்டேன் மன்பதையோர் வாழ்க்கைச்
செய்தியினைத் தேவரறி வாரெனவா லிபர்பால்
தேர்ந்திடுவ னெனமனத்தி லோர்ந்தொருபா லிருந்தேன்;

14. அக்கரையிற் காசிப்பூர்ச் சுடுகாட்டு நரிகள்
அழுகுரலி னொலிசெவியை யடைந்துநன் னீரின்
இக்கரையி லுதிர்சருகுங் குச்சிகளு மலையால்
எற்றுண்டு செயலொழிந்து கிடந்தனவெம் மருங்கும்;

15. நீர்த்திரையா லிழுப்புண்ட குச்சியொன்று கணமும்
நில்லாது மேலெழுந்துங் கீழ்விழுந்து மலைந்து
சீர்க்கரையி லெற்றுண்டு கிடந்தசெயல் நோக்கிச்
சிந்திக்கின் மானிடர்தம் வாழ்க்கையிது வென்றேன்;

16. இன்பவிளை யாட்டினிடை மேலெழுந்து குதிப்பார்
எமக்குநிக ராரென்பா ரிருகணத்தி னுளத்தில்
துன்பமுற மண்ணில்விழுந் திருகண்ணீர் சொரியச்
சோரந்தழுவார் மயக்கமெனுஞ் சுழல்காற்றி லலைவார்;

17. மரணமெனுந் தடங்கரையி லெற்றுண்டு கிடப்பார்
மறுபிறவித் திரைகவர வந்தியையுங் கருவி
கரணமுறு முடலெடுத்து மண்ணுலகி லுழல்வார்
காதலிப்பா ரெண்ணிறந்த வேதனையும் புகுவார்;

18. என்றினைய சிந்தைசெய்து நீலவிதா னத்தில்
எழின்முகத்தின் சுடர்பரப்பி யெழுமதியை நோக்கி
நன்றறிவார் கலைத்திறத்திற் கிலக்காய் மதியே!
நன்மதியே நாதர்சடை முடியுறையும் நலத்தோய்;

19. தாழ்வதுவும் மடிவதுவுந் தரணியில்வந் துதித்தோர்
தாவில்புகழ் நலம்பெருக்கித் தண்ணளிசேர்ந் தனராய்
வாழ்வதுவு மெத்திறத்தால் வந்தனகாண் என்றேன்.
வான்மதிய மெனைநோக்கி ஷமானிடவ கேட்டி;

20. மாய்தலெனும் பேருண்மை பிறத்தலெனு முண்மை
வந்துதித்தோர் தொல்லுலகில் வளர்தலெனு முண்மை
தேய்தலெனு முண்மையிவை யாருமுளங் கொள்ளச்
சென்றுதேய்ந் திறந்துதித்து நின்றுவளர் கின்றேன்;

21. இன்றுயில்போற் சாக்காடும் இனிதுதுயின் றதன்பின்
எழுவதுபோற் பிறப்புமெனு மியற்புலவ னுரையை
நன்றுணர்தி யெனக்கூறும் தண்மதியை நோக்கி
நரகமொடு சுவர்க்கமுந்தான் நண்ணுவதேன ;என்றேன்;

22. நற்கனவு சுவர்க்கமுளம் நலியவருங் கனவு
நரகமிவை நல்வினையின் தீவினையின் விளைவாய்
உற்றவென வறிதியெனு முரையையுளங் கொண்டேன்
உண்மைநண்பன் றனைநிந்து பின்னுமுரை பகர்வேன்;

23. வருந்தித்தாய் கற்றகல்வி மாய்ந்துமறைந் திடுமோ
மறுமையிலு முதவுமோ வான்மதியே: யென்றேன்
திருந்துகல்வி யெழுமையுமே மாப்புடைத்தென் றுரைத்த
செம்மொழியைத் தேர்தியென வெண்மதியம் விடுக்க;

24. மாணியென வாழ்க்கைமுற்று மிலக்கணநூல் பயின்றோன்
வானகத்து மறுப்பில்லா னெனுமுண்மை தெளிந்தேன்
பாணினிதொல் காப்பியன்சீர்ப் பதஞ்சலியா முலகு
படர்ந்ததனனென் நண்பனெனும் பான்மையினை யுணர்ந்தேன்;

25. தோற்றுவதும் மறைவதும் தொல்லியல்பென் றுணரத்
துயரகன்ற தெனினுமன்புத் தொடரகலா மையினால்
மாற்றமொன்று முரையாது வாண்புகுந்தாற் கோலை
வரைவலென அன்புபொதி வாசகங்க ளெழுதி;

26. அறிவற்றங் காக்குமெனு மறவுரையை யெழுதி
அறநெறியா லின்பமெய்து மமைதியையு மெழுதி
உறுநட்பு நிலைபெறுமென் றுறுதிப்பா டெழுதி
ஓதுவிபு லாநந்த னுரையிவையென் றெழுதி ;

27. செல்வமலி விண்ணாட்டிற் செழுங்கலைத்தெய் வம்வாழ்
திருநகரிற் றமிழ்வழங்குந் தெருவிலொரு மனையில்
அல்லலின்றி வாழ்கின்ற கந்தசா மிப்பே
ரறிஞனுக்கிவ் வோலையென வடையாளம் பொறித்தேன்;

28. வேலைநீர் வையத்தோ ரன்னத்தைக் கிளியை
மென்முகிலைத் தூதாக விடுத்தனர் யானெழுதும்
ஓலைகொண்டு விண்புகுந்து நண்பனிடஞ் சேர்க்கு
முதவியினைப் புரியவல்லார் யாவரெனக் கலங்கி;

29. தேவர்புகழ் கங்கையெனுஞ் செல்வநதி நங்கை
செஞ்சடைவர் னவனிடத்தா ளிங்குமுறை கின்றாள்
முவுலகுஞ் செலவல்லா ளெவ்வுயிரும் புரக்கும்
முதல்வியிவள் துணைபெறுவ னெனவியந்து துணிந்தே;

வேறு.

செம்பவளக் கொம்பினிடைச் சேர்ந்தமுத்து மாலையைப்போல்
எம்பெருமான் செஞ்சடையை யெய்திநின்ற வானதியே!
எம்பெருமான் செஞ்சடைவிட் டிங்குவந்து தண்ணளியால்
வெம்பரிதித் தீயகற்றும் மின்னே! நின்னைத்தொழுதேன்.

மாற்றுயர்ந்த பொன்மலைமேல் வைத்தவெள்ளிக் கோல்போல
ஏற்றியல்வோன் பொற்சடையை யெய்திநின்ற வானதியே!
ஏற்றியல்வோன் பொற்சடைவிட் டிங்குவந்து மக்கள்பசி
ஆற்ற வுணவளிக்கு மன்னாய்! நினைத்தொழுதேன்.

சுடர்கதிரைச் சூழ்ந்தொளிருந் தூவெண் முகில்போல்
இடர்களைவோன் நீள்சடையை யெய்திநின்ற வானதியே!
இடர்களைவோன் நீள்சடைவிட் டிங்குவந்து பூதலத்தோர்
தொடர்பிறவி வேர்களையுந் தூயோய்! நினைத்தொழுதேன்.

எனவாங்கு:

மும்முறை நினைந்து முறைமையின் வணங்க
அம்மென் சிலம்புநின் றரற்றுஞ் சீறடி
செம்மல ரென்னத் திகழ வம்மலர்ப்
பாசடை கடுக்கும் பட்டி னியன்ற
தூசு செறியிடை துவள மாசில்
வாண்மதி முகத்திற் புன்னகை தவழ
மகர மீன்மிசை யுவர்ந்து
காரிடைத் தோன்றிய மின்னுக் கொடிபோல்
நீரிடைத் தோன்றி மறைந்தனள் பாரிடைத்
தெண்டனிட் டவளடி வணங்கி யண்டர்
நாட்டிடை வைகும் நண்பன் கையில்
ஈங்கிது சோகவென் றிரும்புனல் நீரில்
ஓலையை யிடலு மேந்திய வானதி
வேலையை நோக்கி விரைந்துசென் றதுவே.

கங்கையில் இருந்து வேலூர் திருமடத்திலிருந்து எழுதியது.

விபுலாநந்தர் சித்திராபானு ஆண்டு தைத்திங்கள்

தங்க மாமுனியே! தாரகைச் சுடரே!

கவிஞர் புஹாரி
ரொறன்ரோ, கனடா

சுகந்தம் மொட்டுடைக்கும் சுகராகம் காற்றுடைக்கும்
வசந்தம் பனியுடைக்கும் வஞ்சிமுகம் துயருடைக்கும்
நீயுடைத்த நெருஞ்சிக்காடும் நெற்கள் கோத்தது
உன் தொண்டுடைத்தத் தமிழுலகம் அறிவாய்ப் பூத்தது

வானுடைக்கக் கையுயர்த்தி நாளும் நின்றவனே
உன் உயர் வெண்ணி உழைப்பெண்ணி உள்ளமுமெண்ணி
என் உட்குளத்துப் பொற்குமிழ்கள் வண்ணஞ்சிதற
சிலுசிலுத்துப் படபடத்து உடையக் கண்டேனே

தங்கமாமுனியே தாரகைச்சுடரே
மயில்வாகனனே மாதமிழ்க்கோனே
விண்ணுடைத் தமிழே விபுலாநந்தா

உன் முதன்மைப் பற்றென்ன
தமிழா இசையா
துறவா தொண்டா
கல்வியா காருண்யமா
அறிவியலா அறவழியா
பக்தியா பரிவா
பன்மொழியா உன்மொழியா

இன்னும் இவைபோல் எத்தனை எத்தனை
முத்துக்களைக் கோத்தெடுத்தாய் வித்தகா

என்றால்... ஒற்றைச் சொல்லில் நானுனை
அழைப்பதுதான் எப்படி
மா மகிழ்வே... விபுல் ஆனந்தா...

தமிழிசைக் கருவூலம் பேரறிவுப் பெட்டகம்
யாழ்நூல் யாத்தவனே

சங்க இலக்கியம் தொட்டு
சந்து பொந்துகளிலெலாம் கையிட்டு
தீரா உழைப்பில் திரட்டிய இசை நூலை
யார்தான் செய்வார் நீதான் கோமான்

குறிஞ்சி மலர்பூக்க ஆகும் பன்னிரு ஆண்டுகளை
தமிழிசை மணம்பூக்கத் தாயெனத் தந்தவனே

பேராசிரியப் பெரும்பணியையும்
துச்சமாய்த் தூக்கியெறிந்து
இசை ஆய்வில் இழைந்தாய்
என்றால் நீ இசைக்குத்தான் தாசனா
அப்படியொன்றும் உன் எல்லைக் கோட்டை
சின்னஞ்சிறு பம்பரக்கோடாய்
வரைந்துவிடவும் முடியுமா

கவிதை கட்டுரை கற்றல் கற்பித்தல்
ஆய்வுரை பேருரை மொழியாக்கம் சங்கத்தமிழ்
கலைச்சொல்லாக்கம் தலைத்தமிழ்ப் பேராசிரியன்
என்றுபல நிலாக்கலசக் கோபுரங்களின்
நாயகன் நீயல்லவா

தமிழ் ஒரு வானம்
சிறிதும் பெரிதுமாய்ப் பலகோடி நட்சத்திரங்கள்
ஒவ்வொரு நட்சத்திரத்தினாலும்
ஆனதே அந்தப் பேரொளி வானம்

உயிரொளி சிந்தி ஓயாது சுற்றி வந்த
பென்னம் பெருத்ததொரு நட்சத்திரம்
விபுலாநந்தத் தமிழனல்லவா

அறிந்ததோ ஆயிரம் பல்லாயிரம் ஆயினும்
உன்னை நீ மறந்ததோ உயிர்த் தமிழோடும்
தமிழர்தம் உயர்வோடும் மட்டுமே அல்லவா

மலைத்தேன் பெருங்கூடாய் நிலைத்தாய் தமிழோடு
தமிழ்த்தாய் மடிமலரில் அமிழ்தாய் வழிந்தாய்
உலகின் உயிர் அன்பெனக் கண்டாய்
உலகை வெல்ல தொண்டினையே கொண்டாய்

வேண்டும் இடங்களிலோ விருந்துபோல் வாய்முத்து
வேண்டாப் பொழுதெனில் மௌனத்தின் பூங்கொத்து
ஏந்திய உன் நுண்ணறிவோ ஆழிப் பெருஞ்சொத்து
கற்றோரும் கொள்ளாரோ உன்மீது தனிப்பித்து

சொல்லித்தரத் துடிக்கும் தவிப்பில்
உன்னிடம் இருந்தது ஜல்லிக்கட்டுக் காளையின் வேகமா

ஆரியம் திராவிடம் இடையே அன்பு நெய்தவனே
மனிதநேயமே உயிரின் நேயமென வாழ்ந்தவனே
அறமும் தர்மமும் உரமெனக் கொண்டவனே
எளிமையையே வலிமையாக்கி நின்றவனே
தொண்டுக்கே தொண்டு செய்தவனே
பொறாமை வெறுப்பு பொசுங்கச் செய்தவனே
நாடும் மொழியுமே கண்களெனக் கண்டவனே

பாவரசு பாரதிக்கே வீசுவொளி பாய்ச்சியவனே
அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை
அசைத்துப் பார்த்தவனே

இயந்திர மொழியின் இரும்புச் சொல்லுக்கும்
கரும்புத் தமிழேந்திய அருந்தமிழ்க் காவலனே

ஆழத்தமிழ் மதுரையில் கற்றுத்தேர்ந்த
ஈழத்தமிழ் முதற் பேராசானே

அகத்தியனோ இவன் கபிலனோ
அன்றி கரிகால் வளவன்தானோ என்று
பண்டிதர்களையும் திண்டாட வைத்த
சங்கத்தமிழ்ச் சிங்கமே

துறவு கொண்ட நீ துறக்காத ஓர் ஆசை
தமிழ்க்குலத்தார் உயர்வல்லவா
தூயதமிழ்த் தீபமேற்றி நாளும் பொழுதும்
தொழுதுநின்ற உண்மைத் தமிழா

உன்னை நினைத்து மேடைகள் இட்டு
வாழ்த்தி மகிழ்வதா பெரிது
உன்னை நினைத்து ஆயிரம் பல்லாயிரம்
கவிதைகள் பொழிவதா பெரிது

ஈழத்தவர் இன்று உலகத்தவர் ஆனார்
பாரின் கண்டறியா எல்லைக் கோட்டிலும்
பாதச் சுவடுகள் பதிக்கின்றார்

வையத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும்
ஒரு விபுலாநந்தனை... ஒரு நூறு விபுலாநந்தனை...
ஆயிரம் பல்லாயிரம் விபுலாநந்தனை...
ஈன்றெடுக்கப் போகின்றார்

அதுவொன்றே உனையெண்ணி உருகியேந்தும்
வாழ்த்தும் பாராட்டுமல்லவா
அதற்கேங்கும் உள்ளக் கமலமேயன்றி
ஆகப் பெரிதென்றுதான் உனக்கொன்று உண்டா

நிறைவுற்றது எம் நெஞ்சம்!

(பாவடிவம்: சந்தக் கலிவிருத்தம்)

ஆக்கம்: மாவிலி மைந்தன்

ரொறன்ரோ, கனடா

மீனின்னிசை பாடும்ஒலி
மீட்டும்குளிர் வாவி
வானின்வரை நீளும்கனி
வீழும்மலர்ச் சோலை
ஊனிற்கலந் தூறும்தமிழ்
ஊட்டும்சுவை கூட்டித்
தேனும்நிறைந் தோடும்நிலம்
தென்னீழமாம் அதனில், 1

கூவும்கடல் நெய்தல்லொடு
கூடும்நில மருதம்
காவும்மலி முல்லையிவை
கை கோர்த்துள காரை
தீவின்பெயர் புகழோங்கியே
தேசம்பல பரவி
மேவும்வகை பிறந்தார்விபு
லாநந்தரும் இனிதே! 2

அறிவாலுயர் இயல்கள்பல
அனைத்தும்அவ ருள்ளக்
குறியாகவே பயின்றார்பெரும்
குணக்குன்றென உயர்ந்தார்!
நெறியூட்டவும் வழிகாட்டவும்
நிலம்வாழவும் வழங்கும்
வறியாத்திரு வள்ளல்என
வரம்பெற்றனர் உவந்தே! 3

ஆசானென அதிபர்என
ஆக்கம்தரு பணியால்
தேசம்பெரும் பயனுற்றது
தாயுற்றனள் மகிழ்வே!
நேசம்தமிழ் மேலுற்றதில்
நீடுற்றது புலமை
பேசும்வகை சீர்பெற்றனர்
பேர்பெற்றது தமிழே! 4

தேடல்எனும் பசிகொண்டவர்
தேடிப்பயன் கண்டார்!
நாடத்தகும் நவிலச்சுவை
நாட்டும்பல நூல்கள்
கூடல்மகள் கன்னித்தமிழ்க்
கோதைஅவள் கையில்
சூடத்தகு மெனத்தந்தனர்
சுடர்விட்டவள் ஒளிர்ந்தாள்! 5

கலைவித்துவக் கரைகண்டவர்
கவினானமுத் தமிழில்!
தலைமைத்துவம் வரக்கொண்டவர்
தளராதநற் பணியில்!
தொலைநோக்கொடு ஒளிபெற்றபின்
துறவின்வழி சென்றார்
நிலைபெற்றதோர் புகழுற்றனர்
நிறைவுற்றதெம் நெஞ்சே! 6

வேதாந்த வித்தகர் விபுலாநந்தர்

அருட்கவி ஞானகணேசன்
ரொறன்ரோ, கனடா

கும்மி

ஈழக் கிழக்கிலே இன்காரை தீவிலே
ஈடிலாத் தம்பதிசா மித்தம்பி
வாழ்வினை வாழ்வாங்கு வாழ்ந்த பயனதாய்
வந்து பிறந்தாரெம் ஆனந்தரே! (விபுலாநந்தரே)

மகிழ்வொடு பெற்ற மகனுக்குப் பெற்றோர்
மயில்வா கனனெனப் பேருமிட்டார்.
அகில உலகிற்கும் ஆன்மிகம் போதித்தே
அன்பர்தம் சிந்தையில் ஆழ்ந்தனரே!

வாடி வதங்கிய வண்தமிழ் காத்திட
வள்ளல் விபுலனார் வந்தாரே
ஓடி உழைத்துமே ஏழை படித்திட
எத்தனை கல்லூரி கட்டுவித்தார்!

ஏழை எளியரை ஏணியாய் நின்றன்று
ஏற்றினா ரெங்களின் பண்டிதரே!
யாழிலே பல்கலைக் கூடத்தைக் கட்ட
நயந்து உரைத்தாரெம் ஞானியரே!

அதிபரா யாசானாய் ஆன்மிகம் போதித்தே
ஆற்றிய சேவைக ளாயிரமே
மதியுயர் ஆனந்தர் மண்ணில் அறியாமை
மற்றும் அடிமை யொழித்தாரே!

இந்திய மண்ணிலே இன்னாதி கற்றுமே
இன்பத் துறவறம் பூண்டாரே
சிந்திய சிந்தனை சீராக்கி மக்களைச்
சிந்திக்க வைத்தாரெம் ஆனந்தரே!

கண்ணம்மா பெற்ற கண்ணியன் அந்நாளில்
காட்டிய பாதையைப் பற்றிடுவோம்
வண்ணன் செயல்களை வாயாரப் பாடியே
வாழ்த்துவோ மானந்தர் வாழியவே!

சுவாமி விபுலாநந்தர் புகழ்போற்றிட வாரீர்!

த.சிவபாலு B.Ed.Hons, M.A
ரொறன்ரோ, கனடா

இன்பப் பணியென இறைபணி கொண்டோன்
இயைபுற இன்னிசை இயைபாய் வகுத்தோன்
அன்புறு அவையெலாம் அறிவுரை தந்தோன்
அரங்கமே அமைதியாய் போற்றிட வைத்தோன்
முன்புறு வினையால் முயல்தவம் முனைந்தோன்
முனைப்புற முத்தமிழ் மூழ்கியே நின்றோன்
வியனுறு வித்தகன் விபுலாநந்தன் புகழேற்றிட வாரீர்.
விற்பனன் வினைகளைத் தொடர்ந்திட வாரீர்! 01

தன்னெழில் தரணியில் இறையருள் போற்றி
தனியெழில தமிழின் அழகியல் போற்றி
பன்னெழில் பாரினில் பணிவெனப் போற்றி
பன்மதச் சமத்துவம் பாங்குறப் போற்றி
நன்நிலை நடுநிலை நற்றவ பேருரை போற்றி
மேன்நிலை பெற்றநற் சிவானந்தர் போற்றி
மன்னெழில் கொண்டவரர் மனிதம் போற்றி
யாழ்நூல் தந்த விபுலாந்தர் போற்றி! 02

விந்தியம் ஏகிவினை யெலாம் நாடி
விந்திய மலையின் தவநிலை நாடி
முந்திய பந்தமும் பாசமும் அறுத்து
முனைவுற தவவாழ்வினில் மூழ்கி
இந்திய தேசத்து இமாலயம் நாடி
இறையருள் ஏற்றிப் போற்றியே நின்று
வந்தவர் தமிழ்ப் பேராசானாய் ஆகி
வனப்புற வாழ்ந்த நற்றவர் போற்றி! 03

இசையெலாம் இலக்கியப் பனுவலில்
இயைபுறக் கண்டு யாழ்வகை இயற்றி
திசைதொறும் திரிந்து திரவிய ஏடுகள்தேடி
அசையுற யாழ்நூல் ஆக்கியே தந்து
வினையுறு ஒலியிசை விற்பனம் சொல்லி
விதம்விதம் வகுத்துநல் தமிழிசை
புனைந்து கிழக்கிலங்கை புகழ்சேர் எங்கோன்
புரவலன் கல்விக்கடலைப் போற்றிட வாரீர். 04

ஒல்காப் புகழ்தரு தொல்காப்பியன் வழியில்
ஒல்கா நிலைதர ஓங்கியே ஒலித்து
மல்கா மனநலம் மனிதநேயம் போற்றி
மனுநலம் கொண்ட நற்பணியாளன்
பல்கலை வித்தகன் அவனே எமக்கு
பல்காலும் நினைந்து உய்திடநன்று
நல்கலை நயத்துடன் நயமுற வைத்த
நற்பேராசானைப் போற்றிட வாரீர்! 05

ஆயகலைகள் அறுபத்து நான்கும்
ஏய உணர்விக்கும் எம்பெரும் சித்தன்
நேயகலைகள் நயமுறத் தந்து
நலிவுற்றோர் நலங்கள் நலனுறு நல்கி
பேதகம் அகற்றிப் போதகம் போற்றி
புனிதனாய் மிளிர்ந்தார் புவிதனில் என்றும்
தாயகம் போற்ற தரணியில் உயர்வை
தந்தநற் பேராசான் போற்றிட வாரீர்! 06

உலகம் உய்ய உள்ளக் கமலம் தந்தோன்
உவப்பாய் தன்னலம் தரணிக்குத் தந்தோன்
திலகமாய் தித்திக்க தீண்டாதார் பணிகள்
திருத்தமாய் திருவெனச் செய்தோன்
அலகிலா அன்பின் அடிமையாய் ஆனோன்
அன்புடன் ஏழைக்கு எழுத்தறி வித்தோன்
விலக்கவே முடியா சமபந்தி கண்ட எம்
விபுலாநந்தன் புகழ் போற்றிட வாரீர்! 07

சிவனவன் சிந்தை சிரத்தினில் கொண்டு
சிவாநந்த வித்தியா சாலையும் நிறுவி
அவனவன் சேய்களை அன்பொடு அணைத்து
அன்னம் அறுசுவை உணவும் நல்கி
இனத்தவன் இவனெனப் பேதம் காட்டா
இன்புறு நிலையினை என்றுமே பூண்டோன்
சித்தனவன் சிவாநன்த வித்தியா சாலையில்
சமாதி அடைந்தான் போற்றிட வாரீர் 08

பசியில் துடித்தோர் பதிகளை நாடி
புசித்திடப் பலதும் பாங்குடன் பகிர்ந்து
நிசியெலாம் மறந்து நித்திய ஆனந்தம்
நினைவுறு வெள்ளத்தில் ஆடிப்பாடி
கசிவுறக் கனிவுறு தேனாய் உள்ளக் கமலம்
கவினுறத் தந்தபெரும் கற்பகவிருட்ஷம்
புசித்திடத் தந்தநற் பேரறிவாளன் எங்கள்
சுவாமி விபுலாநந்தர் புகழ் பாடிடவாரீர்! 09

அண்ணாமலைச் செட்டியார் அமைத்த கல்விக்
கணிகலனான பல்கலைக் கழக முதல்
எண்ணாமலை எனவுயர்ந்த தமிழ்ப் பேராசான்
ஏற்புற முத்தமிழ் வித்தகனாய்ப் பணிகள்
கண்ணெனக் கருத்துறச் செய்தே நின்றோன்
கனிவுறு மொழியின் கடமையில் உயர்ந்தோன்
விண்ணவர் போற்றும் வினைமுதல் வித்தகன்
வினைதொடு விபுலாநந்தர் புகழ்பாடிட வாரீர்! 10

துறந்தும் துறவுமிலாப் புண்ணியனே நீ நீடு வாழீ!

வல்லிபுரம் கந்தையா புருஷோத்தமன்
ரொறன்ரோ, கனடா

விருந்தளித்தே மனம் மகிழும் மட்டு மயில்வாகன் அவன்
கர்ணனாய்த் அன்னைக்கவன் துறவினையும் தாரைவார்த்தான்
விபுலாநந்தன் நாமம் சூடி விண் போற்றும் விந்தை செய்தான்
மின்னலையும் பின் தள்ளி ஜெகம் எங்கும் தமிழ் வளர்த்தான்

அண்ணாமலை பார் கண்கொள்ளா மலையாய்க் காட்சி தந்தான்
யாழ் அகழும் தன் வேட்கையிலே சீதக்காதியெனப் பேரெடுத்தான்
பாரதியின் உயிர்த்துடிப்பை மாதா பாரதத்தில் ஏற்றிவைத்தான்
வேங்கையைப்போல் வேட்களத்தில் சாதிவெறி சங்காரம் செய்தான்

ஒரு துறைதான் தனதென்று ஒதுங்கி நில்லாத் துறவி அவன்
நாடிய துறவை மேவிய இசைத்தமிழ் மோகம் கொண்டான்
தேன் விளைந்த நகர் உதித்து தீன்இசைபொழி யாழ் நூற்றான்
வான் பொய்யா வளநகரில் தான் பொய்யாச் சைவம் மீட்டான்

இசைத்தமிழில் தாகம் தீர்த்தான் ஆழ் ஓடி அரும் முத்தெடுத்தான்
ராமகிருஷ்ணர் தத்துவத்தை மறச்சைவர் மன இருப்பிலிட்டான்
கல்லடியில் துகில் கொள்ளும் சொல்லடிப் பாண்டித்ய வித்தகன்
வள்ளலவன் ஜனனம் போற்றி ஐ வெள்ளி விழாக் கண்டீர் வாழீர் !

ஆங்கிலக் கல்விதரும் பதவிதனை உடையார் பெறக்கேட்டான்
இலாதோர் விட நெகிழ்ந்தான், அருள் கொண்டோர் வழி தந்தான்
ஆங்கிலமான சிவானந்த சாலைதனை ஆக்கிட்ட சிற்பியவன்
வள்ளலவன் எழுங்கீர்த்தி ஏழுலகும் வாழியவே ! வாழியவே !

மாதவ ஞானி முனிவிபுலாநந்தர்

(கட்டளைக் கலித்துறை)
காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தின்
(சுவாமியின் மாணவரின் மாணவர்)
மட்டக்களப்பு, இலங்கை

யாழ்நூ லளித்தவர் நல்லறி வாளர் நனிதுதிக்க
வாழ்ந்தவர் கல்வி வளர்ச்சியில் தன்னை வரித்தமகான்
ஈழத் திருநிலம் ஈன்றபே ராசான் இறைவழியில்
வாழ்ந்தார் சுவாமியோர் வண்டமிழ் ஞானி விளம்பிடிலே.

அபய மளித்தவர் அன்னை மொழிக்குய ராற்றலினால்
உபசரித் தேற்றதாம் அண்ணாம லைப்பல் கலைகழகம்
தபமவர் ஈழத் தமிழ்ப்பல் கலைப்பீடச் சீர்தலைமை
சுபமென ஏற்றதும் தாய்மெழிக் காற்றிய தொண்டெனவே.

இனமத மென்றிலை எல்லோர் தமக்கும் இயன்றவரை
மனமுவந் தேற்று வழாங்கினார் முத்தமிழ் வித்தகனார்
முனிவிபு லாநந்த மாதவ ஞானி மிகைத்திடவே
நனியவர் தொண்டினை நெஞ்சி லிருத்தி நினைவுறுமே.

மதுரைச் தமிழ்ச்ஙக மாண்பின் முதன்மைகொள் பண்டிதராம்
மதங்கசூ ளாமணி நூலினைத் தந்தவர் மூதறிஞர்
மதிநுகர் ஆங்கிலப் பேரறி வாற்றலால் ஷேக்ஸ்பியரின்
அதியுயர் நாடக ஆக்கந் தமிழ்பெற ஆக்கினாரே.

இராமக் கிருஷ்ண பரமஹம் சர்திரு நாமமுடன்
"இராமக் கிருஷ்ண மிஷ"னினைத் தோற்றி இன மதத் தைக்
கருவினில் நீக்கிக் கசடறச் செந்தமிழ் கற்றறிய
விரும்பியே ஆக்கம் விளைத்தவர் செந்தமிழ்க் காவலரே

பன்மொழி ஆற்றல் படைத்தவர் ஆங்கிலம் சிங்களமும்
கன்னற் றமிழுடன் லத்தீன் கிரேக்கம் சமஸ்கிருதம்
தன்வழி கற்றவை தேர்ந்தே புலமையில் தேர்ச்சிகொண்டு
பின்னோர் தமக்கும் பயிற்றுவித் தூன்றிய பாங்கினரே.

அனாதைகள் இல்லம் அறிவினைத் தேடிடப் பள்ளிகளும்
முனிவர் முயற்சியால் முற்றின நாட்டின் வடகிழக்கில்
பணியவை இன்றுந் தொடர்வன பல்வகை பாருவக்கும்
வினைத்திறன் மிக்கதாய் வாழ்வில் பலரும் பயனுறவே.

புத்துரு வாக்கம் புரிந்தவர் சைவ விழுமியங்கள்
இத்தரை யோங்க இலங்கைப் பதியில் தமிழினத்தோர்
நித்தமும் அன்னார் நினைவினில் மாறா திருப்பதுவாய்
சத்தியத் தூதுவர் சைவப் புலவர் சுவாமிகளே.

பன்மொழி கற்ற புலவர் இலக்கிய ஆய்வறிஞர்
பன்நூல் பதித்தார் படைத்தார் பலவும் புதுப்புதிதாய்
தன்னல மற்றநற் சேவை சுவாமிகள் செய்தவைகள்
மண்ணுலகுள்ள வரையவை நெஞ்சிற் புதைந் தவையே.

எழுபது ஆண்டுகள் எய்தின இன்றாம் இறைபதத்தைத்
தழுவிய காலம் சுவாமிகள் தம்பணி முற்றியதால்
அழிவிலை நாமம் அழிந்துடல் போயினும் அன்றைய போல்
நிழலென வாழ்கிறார் நல்லோர் மனங்களில் நாயகரே.

கல்வித் தீபம் வித்தகன் விபுலாநந்தன்.

பொறியியலாளர் கலாபூஷணம் சுப்பிரமணியம் சிவலிங்கம்
மட்டக்களப்பு - இலங்கை

வங்கக் கடலலைகள் பொங்கிக் கரையொதுங்க,
வண்ண வண்ணப் பூக்கள் மலர்ந்து இதழ் விரிக்க
மங்கிய ஒளியினிலே மாங்குயில்கள் கூவ,
மதுவுண்ட வண்டினங்கள் ரீங்காரம் பாட
செங்கதிரோன் ஒளிக்கதிர்கள் முந்தி வந்து முத்தமிடும்
செந்தமிழர் வாழும் தென் தமிழர் மாநிலத்தில்
சங்கத் தமிழ்ச் சந்தம், பாட வந்த வித்தகரே! தமிழர்
சங்கையை உயர்த்த வந்த தவஞானத் குருபரனே!

காரேறு மூதூர்க் காரைதீவுப் பழம் பதியில்
கண்ணகியாள் கோயில்கொண்டு கருணை மழை பொழியும்
சீரேறு குலமங்கை கண்ணம்மை கருவறையில்
சிங்கார வேலவனின் பெயர் சூட வந்தவரே!
பாரேறும் புகழ் மணக்கப் பாரதம் பெற்றெடுத்த
மாகாளி அருள் பெற்ற பரமஹம்சர் போல் ஞானத்
தேரேறி வந்துதித்த தென்னீழத் தலைமகனே! கல்வித்
தீபமாய் ஒளி தந்த வித்தக விபுலானந்தா!

ஈழத்தில் முதல் தேர்ந்த மதுரைத் தமிழ்ப் பண்டிதரே!
ஈழவேந்தன் இராவணன் போல் இசை வேந்தன் ஆனவரே!
ஞாலத்தில் முதன்மைத் தமிழ்ப் பேராசிரியப் பெருந்தகையே!
ஞானத்தில் முதிர்ந்த தவ மெய்ஞ்ஞானப் பண்டிதரே!
பழந்தமிழர் யாழ் வகையைச் சங்கத் தமிழ் நூல்களிலே
பல்லாண்டு காலம் பகல் இரவாய் ஆய்ந்தறிந்து
ஏழிசையில் யாழிசையை இன்னிசையாய்ப் பிழிந்தூற்றி
எம் தமிழர் படிப்பதற்கு யாழ்நூலைப் புனைந்தவரே!

“அன்னமிடும் சத்திரங்கள் ஆயிரம்தான் இருந்தாலும்
ஆலயம் பதினாயிரம் ஆண்டவர்க்குத் தந்தாலும்
அன்னவை யாவினிலும் புண்ணியங்கள் பல கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்த” லென்றகவி
மன்னனாம் பாரதியின் பரிவான வரிகளை — எம்
மண்ணிலே செயற்படுத்த பள்ளிகள் அமைத்தவரே!
எண்ணும் எழுத்தும் எம் கண்ணெனத் தகும்” என்னும்
எண்ணத்தை அனாதைக்கும் ஊட்டிய உத்தமரே!

மெய்ஞ்ஞானத்தில் விஞ்ஞானம் கண்ட தமிழத் துறவி — நீ
மேன்மை கொள் சைவநெறி கற்பித்த ஒரு பிறவி!
அஞ்ஞானம் மக்களிடை துடைத்திட்ட அருட் கருவி!
ஆண்டவனை என்றும் மறவாத உயர் சொரூபி
நெஞ்சிலே சுரக்கும் அன்பு ஏழைகள் மேல் பாயும்
என்றென்றும் வற்றாத அன்புக்கோர் அருவி — நீ
துஞ்சாது கண்விழித்து தமிழ் வளர்த்த பிறவி — மீண்டுமிங்கு
தூயவனே பிறப்பெடுப்பாய் தமிழர் நிலை கருதி!
இமயத்தில் தவம் செய்யும் சுயநல முனியுமல்ல!
இதயத்தால் இறைவனையே நாடிடு பவருமல்ல!

அபயமென ஓடிவரும் ஏழைகளை அணைக்கும்
அன்புசேர் தவமுனியே மேலோனென உரைத்த
தூயவனாம் வேதாந்தி விவேகானந்தன் கூற்றை
துணிவோடு ஏற்று தொண்டு செய்து தடம்பதித்து!
இமயத்தில் தமிழர் புகழ் ஏற்றி வைத்த ஏந்தலே — எங்கள்
இதயத்தால் என்றுமுனை பணிந்து நாம் வணங்கிடுவோம்!

முத்தமிழறிஞரை முதலில் போற்றி வணங்குவோம்..!

"தமிழருவி" அம்பலவன் புவனேந்திரன்
பொருளாளர், தமிழ் எழுத்தாளர் சங்கம்
ஜேர்மனி.

வண்ணத்து மலர்கள்தூவி வானதிர உமதுபெருமையைப்பாடி
வணக்கத்தை செலுத்துவதற்கு வாய்த்தபேறு என் பாக்கியமே
கிண்ணத்தில் முகந்த தேனாய் கிழக்கின் மண்ணில் இனிக்கின்ற
கீதத்தில் உங்கள் நாமம் எமைக்கிறங்கிடவே வைக்குதையா
எண்ணத்தில் எழுகின்ற எத்தனையோ வடிவங்களையெல்லாம்
எழுதிடப்பற்றுவைப்பதற்கெல்லாம் ஏதுவாய் ஆவானவர் நீங்களையா
மண்ணுக்கு மகிமைசேர்த்த மயில்வாகனன் உபாத்தியாயரை
மரிக்கின்ற நாள்வரையும் ஒன்றாய் மன்றாடித் துதித்திடுவோம்..!

திண்ணமாய் இவ்வுலகில் திலகமிட்ட உங்களின் திருநாமம்
தேசத்திற்கே பெருமைசேர்த்து தித்திப்பாய் திகழும் தமிழால்
அண்ணாமலைப் பல்கலைக்கழக அரியணையில் கோலோச்சி
ஆழ்ந்த அறிஞர்கள் வரிசையில் அலங்கரித்த பெருமை என்ன
வண்ணத்துப் பூச்சியாய் உங்கள் வாழ்வியல் மாற்றத்தினை
வரலாறாய் மாற்றிடவே வாய்த்தது இராமகிருஷ்ண ஆச்சிரமே
எண்ணிக்கையில்லாது இசைபயிலுகின்ற மாணாக்கர்களுக்காய்
எழுந்த கல்லடி-இசைக்கல்லூரி என்றும் உம்நாமம் போற்றுமே..!

அண்ணாந்து பார்த்து உலகு ஆச்சரியத்தால் புருவமுயர்த்தி
ஆராதித்து துதிக்கும்படி எம் அன்னைத் தமிழை ஆய்ந்துநின்றீர்
எண்ணும் எழுத்துமிரு கண்களென எழுத்தறிவைப் புகட்டிடும்
ஏற்றம்மிக்க ஆசானாய் எம்மண்ணில் பணியைத் தொடங்கினீரே
பண்ணுகின்ற பணிகளிலே பற்றுக்கொண்ட உங்கள் ஆழுமையால்
பாரிலெட்டு மொழிகளைக்கற்றுத் பைந்தழிழிசையை ஆய்ந்தீரே
விண்ணியிருந்து ஆசிவழங்கி வீசும் காற்றில் மூச்சாய் ஆகியெம்
வித்துவத்துக்கு உரமிட்ட உமை விளக்கேற்றி வணங்குகிறோமே..!

கண்ணெதிரே தோன்றிநின்று கற்பதற்கு வாய்ப்புகள் அற்றவர்க்காய்
கல்விக்கூடங்கள் பலவற்றை அமைப்பதில் கரிசனை காட்டினீரே
உண்பதற்கு நீர்மறுத்தும் உவர்நீரைப் பருகியே திருவேட்களத்தில்
ஒடுக்கப்பட்ட பாலர்களுக்கு ஒரு பள்ளியமைத்துக் கற்பித்தீர்களே

திண்ணமாய்த் தொடங்கும் பணிகளில் தெளிந்ததீர்க்கதரிசனத்தோடு
தேடுதல்களிலும் வாகைசூடித் திரவியங்களை எமக்களித்தீர்களே
எண்ணிக்கையில் எட்டுமொழிகளில் இசைவோடு தேர்ச்சிபெற்ற
ஈழத்தின் முதல்தமிழ்ப் பண்டிதரேஉம் எழுச்சியினை ஏற்றுகிறோமே.!

முகையவிந்திடாத மொட்டுக்களாக முழுநிலவின் திட்டுக்களாக
முறுவலிக்குக்கும் முத்தமிழாய் முப்பொழுதும் வாழும் தெய்வமே
தகைமையிலே உயரியதரமாக தனிமனிதருக்குள்ப் பூச்சரமாக
தமிழகத்தின் மொழியாய்வில் தன்னிகரற்று மிளிர்ந்ததையே
பகைமையில்லாப் பதமாக பனுவலுடன் பாசுரங்கள் படைத்து
பல்கலைக்கழகங்கள் பலவில் பாரதியின் தமிழை ஆய்தநின்
மிகையில்லாப் பேச்சோடும் மிதமிஞ்சிய மொழிஆற்றலோடும்
மென்மேலும் பணியாற்றி புவிமெச்சும் பாதத்தை பணிகின்றோமே.!

சபைநடுவே தனித்தன்மைகாட்டி சான்றோரில் அணிக்குள்நின்று
சாதனைகள் பலபடைத்து இச்சகத்தினில் தனியாய்உயர்ந்தீரே
இவையனைத்தும் இசைவாக இசைத்தமிழை இயல்பாகவும்
இலகுவாக்கிய இயற்றமிழை இனிமைசேர்த்து இணைத்தீர்களே
அவையனைத்தும் ஆய்ந்தபின்பு அம்புவியில் ஆன்மீகத்தின்
ஆழத்தினைத் தொட்டிடவே அன்பின்வடிவாய் துறவியாகினீரே
உவகையினால் இசைப்பாடல்களை உலகுக்குப் படைத்திட்ட
ஒப்பற்ற ஆசானே உமைஉயிர் உள்ளவரைக்கும் பூஜிப்போமே..!

தென்பட்ட இடமெல்லாம் எமக்குத்திகழுகின்ற ஒளிக்கீற்றாய்
தேசங்கள் பலகடந்துசென்று தீந்தமிழை ஆய்வு செய்தீர்களே
பண்பட்ட குருவாகப் பரமகம்சரில் ஆன்மீகப் பற்றுக்கொண்டு
பணிகளை இறக்கிவைத்துப் புதுப்பயணத்தினைத் தொடர்ந்தீரே
வெண்பட்டுப் பீதாம்பரத்தை விலக்கிவைத்த மயில்வாகனனார்
விரும்பியே காவியுடைதரித்துத் துறவி விபுலானந்தர் என்றானார்
கண்பட்டுப் போகாவண்ணம் காவியுடைதரித்த கருணைவடிவே
காலங்கள் கரைத்திடாத எம் கல்விக்கடலைநிதம் ஏற்றுவோமே..!

தொட்டனைத்தூறும் மணற்கேணியாய் தனைச்சுயமாய்த்தோண்டி
தொடக்கப்பள்ளியிலேயே ஆசானாய்த் தோன்றிப் பணிபுரிந்தீரே
சொட்டுகின்ற இசைசுரக்கும் சுந்தர யாழின்வகையைக்கரந்தையில்
சிதையாமல் தேடிச்சேர்த்துச் சீரோடு காட்சிப் படுத்தினீர்களே
வெட்டுகின்ற மின்னலாய்த் தமிழின் வியத்தகு பொக்கிஷமாய்
வெளியுலகு வியக்கும் யாழ்நூலையாக்கி விற்பன்னராகிநின்றீரே
பட்டறிவால் பாமரருக்குக் கற்றிட படிப்பறிவினை ஆளவிதைத்து
பண்பட்ட ஞானவிளக்காய் பரிணமித்த உமைப் பணிகின்றோமே..!

கட்டற்ற ஆங்கிலத்தில் கன்னித்தமிழின் சுவையைச்சேர்த்து
கனிவான பல படையல்களைக் கல்விநூல்களாய்ப் படைத்தீரே
கொட்டுகின்ற அருவியாகக் குவலயம் புருவமுயர்த்திடவே
கோமகன்போல் மொழியறிந்து குன்றாக உயர்ந்து நிமிந்தீரே
பட்டங்களாய்ப் பலபெற்று பல்துறைகள் துளாவியபேராசிரியராய்
பாடநூல்கள் பத்திரிகைகள் எனப் பற்பலதை படைத்த ஆசிரியரே
எட்டாக் கனியாயிருந்த இங்கிலாந்துக் கேம்பிறிட்ஜ் பட்டத்தைத்
தட்டிக்கொண்ட முதல்தமிழ்மகனின் தாழ்பணிந்து வணங்குகிறோம்

மட்டுப்படுத்தப்பட்டு மறைநூல்களைப் பயிற்றுவிக்கும் புனித
மைக்கேல் கல்லூரியில் மறுபடியும் கற்பிக்க ஆசானாயாகினீரே
மட்டுநகர் மண்ணுக்கும் மகிழுகின்ற சகல மாந்தர்களுக்கும்
மற்றவரைவாழ வைக்கும் மாபெரும்குணத்தால் புகழுருவானீர்கள்
சுட்டுகின்ற விழியாலே சுடரேற்றி இன்தழிழை துழாவியதுவாய்ச்
சுரம்பித்த மதங்கசூளாமணி செந்தமிழின் அரும்பெரும்பொக்கிஷமே
நட்டநடுநிசியில் நிலாவாய் நானிலத்துக்குப் ஞானப்பாலூற்றும்
நற்பணிசெய்த சுவாமிகளை நாமொன்றாய் ஆராதித்திடுவோமே..!

கட்டுப்பாடற்ற பூங்காற்றாய் நம்நாடு கடந்துசென்று
கல்வியையும் கலைகள்பலவும் கற்றுத்தேறி பட்டங்கள்பெற்றீரே
திட்டங்கள் பலவகுத்து தெரிந்து கற்ற எட்டுப் பிறமொழிகளுடன்
தீந்தமிழையும் இசைத்தமிழையும் தினவோடு ஒப்பிட்டாய்ந்துரைத்தீரே
வட்டத்துக்குள்ளே குறுக்கி வாழ்நாட்களையெலாம் அடக்கிடாமல்
வளம்சேர்க்கும் விஞ்ஞானப்பட்டத்தால் வரலாற்றைப் பதித்தீரே
சட்டங்களைத் தனகாக்கி சாதனைகளையெல்லாம் எமக்கதாக்கி
சிவானந்தாவை உருவாக்கிய சிற்பியை சிந்தையில் ஏற்றுவோமே..!

கல்வித்தீபம் வித்தகன் விபுலாநந்தன்

(கட்டளைக் கலித்துறை)

கவிஞர் இராஜி சண்முகநாதன் (கல்முனை நோ.இராசம்மா)
இலங்கை

கார் பொழிய கழனி வளம் கொழிக்க
கல்வியொடு முத்தமிழும் சீர் செழிக்க
ஊர்கூடித் தேரிழுக்க சைவம் தழைக்க
உத்தமனாம் வித்தகன் விபுலாநந்தன்
காரேறும் திருவூரில் பிறந்த செய்தி
கல்வியொளி நீடுபெறக் கடவுள்தந்த வரமன்றோ !

கல்வியொடு சைவமும் தமிழ்மணக்கும் கல்முனையில்
கலைபயில மயில்வாகனன் வந்தநாளில்
தெய்வமெனக் குருவாகக் குஞ்சுத்தம்பியவர்
செந்தமிழின் திறனைத் தேனாக வார்த்தார்
சீரடிகள் அடிக்கல்லாய் நட்டபோது
சிந்தையிலே வித்தகன் உயரக்கண்டார் !

செந்தமிழும் ஆங்கிலமும் வடமொழியும்
சீர்பெறவே ஆய்ந்தறிந்து புலமை பெற்று
இந்தியத்தின் எல்லையுயர் புகழ் பூத்த
எங்கள் வித்தகனாம் முத்தமிழ் விபுலாநந்தன்
சிந்தை நிறை பந்த மறத் துறவியாகி
சிறந்த நற்பணி செய்து காவியமானாரன்றோ !

பூரணை நிலவினிலே பொன்வாவி மீன்பாடும்
பொங்கி வரும் தேனோசை கேட்டின்புற்று
பாரறியப் பண்ணாய்ந்து யாழ் நூல் தந்து
பேரோடு கல்வியொழி பெருகச் செய்த
பெருமகனார் வித்தகன் விபுலாநந்தன்
பேரருளால் மீன் பாடும் தேன் நாடு
பெயர் நிலைத்து நீடு வாழுதன்றோ !

பல் மொழி கற்றாய்ந்து பேராசிரியனாகி
பிறந்த பொன்நாட்டின் பெருமைசேர் மகனாகி
சொல்லரிய திறமையினால் நூல்கள் பல ஆக்கி
சுடரெனப் புகழ்பூத்த வள்ளல் விபுலாநந்தன்
தொல்லுலகில் நீடுபுகழ் பெற்றென்றும்
தூயதமிழ் வித்தகனாய் வாழிய வாழியவே !
பொன்னிலங்கைத் தாயகத்தின் பட்டி தொட்டி
பொதுத் தொண்டு பெருகிடவே ஏழைகட்கு
தன் குருவின் பெயராலே கல்விக் கூடம்
தனி யொளி பெற்றிடவே இலங்கக் கண்டோம் !

மன்னனை வென்றோன் மாபெரும் அறிவொளியால்
மின்னிடும் கல்வித்தீபம் வித்தகன் விபுலாநந்தன
வாழிய வாழியவே !

வாழ்த்து

மூன்று தமிழ் ஆய்ந்தெடுத்து
முத்தமிழ் தந்தோன்: உயர்
சான்றுடை அறிவோர் முன
யாழ் நூலை ஏற்றி வைத்தோன்
தோன்று புகழோடு உலகிடை
தீபமாய் என்றும் ஒளிந்திடவே
அழகான தமிழாய்ந்து தொடுத்து
ஆண்டு மலர் ஆக்கித் தந்த
அறிவோர்க்குப் பெருவாழ்த்து !
இறைவனருள் பெறுமிவர் தொண்டு
என்றும் நிலைக்க வாழ்த்துவோம் வியந்து !!

விபுலாநந்தர் பாதையில்

சீலன்
தேற்றாத்தீவு - இலங்கை

இவர் பணி வெல்ல
எவர் உண்டு இன்னும் உலகில்

மட்டு மாநிலத்தின் சொத்தாய்
எட்டுத் திசையும் மலர்ந்த கொத்தாய்
முருகனின் அருளால் மயில்வா கனனாய்
முத்தமிழ் உருகி வித்தகனாய்

துறவில் கலந்து விபுலாநந்தனாய்
தமிழை உயர்த்தும் பேராசானாய்
மொழியில் தேர்ந்த விஞ்ஞானியாய்
அறிவில் தெளிந்த கலைஞராய்

இயல் தமிழ் நல்கம் வல்லுனராய்
இசைத் தமிழ் உயர ஆய்வாளனாய்
நாடகத் தமிழ் நல் ஆசானாய்
கல்வியைப் பொழியும் பண்டிதனாய்
எத்தனை எத்தனை அவதாரம் இவர்க்கே

வெள்ளையரின் பிடியில் சிக்கி
வேரறுந்த சமூகத்தில்
எல்லையில்லாக் கல்வியினை
ஏழைக்கும் கிடைக்கும் வண்ணம்
பள்ளிகள் நூறு கட்டி
படிப்பை உயரச் செய்தவர்

சாதிக் கொடுமை சொல்லி
சாவடித்த கல்விச் செல்வத்தினை
ஆதித் தமிழ் குடியின்
அற வழியில் வந்தெமக்கு
சாடித் தகர்த்து எறிந்து
சாதனை செய்த தமிழன்

பாலர் படிக்க பள்ளிகளும்
பயிந் தமிழோதத் திண்ணைகளும்
மூலை முடுக்குகள் எல்லாம் நிறுவி
மேலைத்தேய கல்வி தனையும்
மேதினியில் எல்லோரும் பெற
கல்வியில் சமத்துவத்தினை என்றே
கருத்தோடு எடுத்து வைத்தவர்.

வாழையடி வாழையாக தமிழ்
வாரிசுகள் எங்கும் ஓங்க
பண்தர்களும் புலவர்களும் பண்ணிசைக்கும்
பாவலரும் சமயக்காவலரும்
ஆசான்களும் அறிஞர்களும் அறமூட்டும்
ஆன்மீக வாதிகளையும் ஆக்குவித்தவர்

நூாங்கள் பல எழுதி
நுண்ணறிவைப் பரப்பியவர்
சொற்கள் லெட்சம் கொண்ட
சொற் களஞ்சியம் உருவாக்கியவர்
பத்திரிகை நல நடாத்தி
பாரினிலே கல்வி செய்தோன்.

பணிபுரிந்தார் புகழ் பாடு

மகிஷா தியாகராஜா
பிறம்ரன் - கனடா

கிழக்கிலங்கை கரைதனில் இலங்கிடும்
காரேறு மூதூராம் காரைத்தீவினில்
கார்கால மழையென தரணியில்
நலமுறு உழவர் மரபில் உதித்தனரே
உயர்திரு விபுலாநந்தரெனும் மாமுனியே

மயில் வாகனம் எனும் இளமை நாமம் கொண்டு
மாமுனி சிவானந்தரின் அருளால் துறவுணர்வு கொண்டு
ஒளி அருள் கண்ணகியின் கண்மணியாய்
கலைகளின் தேர்ச்சி பெற்று விளங்கும் ஞானக்கனியாய்
விபுலாநந்தரெனும் தரமிகு பெயர் அடைந்தனரே

வாணியின் மகனாய் வாதத்தில்
வான்சிறந்த ஞானியாய் போதத்தில்
உளம் தேர்ந்திட்ட உண்மை தந்தார் வேதத்தில்
உத்தம சீலர் அருளினார் யாழ் நூல் நாதத்தில்

ஈசன் உவக்கும் இன்மலர்கள் மூன்று எமக்களித்தாய்
மதங்க சூளாமணி எனும் பெயர்சூட்டி தமிழ் தாய்க்கு அணிசேர்த்தாய்
முத்தமிழ் பேராசிரியராகி மாணாக்கர் மனதில் பண்பு தமிழ்வளர்த்தாய்
வித்தகராகி மட்டுவாவி நீரர மகளிரின் இன்னிசை கீதம்தந்தாய்
மேலாகி உலகத் தமிழரின் தமிழ் இதயம் வென்றாய்

தங்கிவான் செல்வங்கள் தழைத்து மல்கும்
சமயத்தில் மேலான சைவம் ஓங்கும்
எங்குமே அமைதியுடன் இன்பம் சூழும்
என்றுமே செந்தமிழ் குருதி ஓடும்
தமிழ் மக்கள் மெய்தனில் தேன் போல்
தித்திக்கும் விபுலானந்ததமிழ் வாழ்க வளமுடன்!

முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றுப் படிநிலைகள் (ஒரு பார்வை)

திரு.எஸ். சபாரெத்தினம், இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர், தேத்தாத்தீவு, மட்டக்களப்பு

வங்கக் கடலோசை எங்கும் முழவொலிக்கும்
வகையாம் இயற்கைவளம் மலிந்தே விளங்குகின்ற
எங்கள்கிழக்கு மாகாண எழில்சேர் காரைதீவு
என்னும் கிராமத்து சாமித்தம்பி கண்ணம்மை
தங்கள்மடி தவழ்ந்தமகன் மயில்வாகனன் வளர்ந்து
தகைசால் விபுலானந்த அடிகளாய் ஆனதாலே
மங்காப் புகழ்சேர்த்தார் மதிப்புற்றார் கல்விமானாய்
மக்களுக்கும் நற்சேவை வழாங்கி மகானானாரே.

கல்வி கற்றார் ஆரம்பத்தில் கல்முனை மெதடிஸ்த
கல்லூரியில், அடுத்து மட்டக்களப்பு மைக்கலில்,
நல்லறிவுக் கேம்பிறிட்சுக் கல்லூரிச் சோதனையில்
நாடித்தேர்ந்த தகைமையோடு மைக்கல்ஆசிரியர்
சொல்லும் வகை பயிற்றப்பட்ட ஆசிரியர் பயிற்சியோடு
சேவைசெய்தார் மீண்டும்அதேமைக்கல் ஆசிரியராக,
வெல்லக் கற்றார் கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில்
விஞ்ஞான அறிவியல்பட்ட தாரியுமா யானாரே.

பண்டிதர்பட்டம் பெற்றார் மதுரைத் தமிழ்ச்சங்கத்து
பரீடசையில் முதல்இலங் கையராக வேதான்
திண்ணமுறப் பயின்றகொழும்பு தொழில்நுட்ப கல்லூரி
திறன்உதவி விரிவுரையாள ருமானார் நன்றே
பண்ணரிய இவராற்றல் பரவியதால் யாழ்ப்பாணப்
பண்புறு சம்பத்தரிசியார் விஞ்ஞான ஆசானானார்
இன்னும் லண்டன் பல்கலை விஞ்ஞானப் பட்டம்பெற்று
இசைந்து மானிப்பாய் இந்துவுக்கும் அதிபரானார்.

அன்னாரின் சேவையாற்றல் அறிந்துஇங் கிதமேயாக
அழைத்தனர் திருகோணமலை இந்துவின் சேவைக்கு
உன்னிப்பாய் முகாமைசெய்தே பின்னர்அங் கதிபராகி
உயர்வுக்காய் அடித்தளங்கள் இட்டும் வைத்தார்,
மன்னுபுகழ் தமிழ்வளர்ச்சி நாட்டம்மிகக் கொண்டவராய்
வகையாம் "யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷா-
என்னும்அபிவிருத்திச் சங்கம"அமைத்துத் தமிழை
எழிலாய்வளர்ச்சி யுறவழிகள் பலசெய்து வைத்தார்.

கற்றது, கடமையுற்றது. கலந்துறவாடி உற்றுக்
கவிந்ததெலாம் கிறிஸ்துவத்தின் பார்ப் பட்டாலும்
உற்றது அவர்நாட்டம் தமது இந்துத் துறவறத்தில்
உயிர்ப்பாய் ஈர்த்த அந்த எண்ணத்தாலே, அவர்
பொற்புறு மனத்துடன் புறப்பட்டுச்சென்னை சென்று
பொறுப்போடு இராமகிருஷ்ண மிஷனில் சேர்ந்தார்
பெற்றாரங்கே தீட்ஷை மயிலாப்பூர் மடத்தில் வைத்து
பெருமைக்குரிய சிவானந்தர் சுவாமி மூலம்

உறவுப்பெயராம் மயில்வாகனன் இயற்பெயர் மாற்றலாகி
உண்மைச் சந்நியாச "விபுலானந்த அடிகள்" ஆனார்
துறவுவாழ்வி லீடுபட்டுத்துய்த் தார்அறவாழ் விலவர்
தூயராகியும் முயற்சி தளராத விற்பன்னராகவே
திறனாய்வுக் கட்டுரைகள் தேர்ந்தெழுதி வெளியிட்டார்
சேர்ந்தவைகள் "மதங்கசூழாமணி"யினிலே வந்துறவே
அறநெறிச் சஞ்சிகைகளாம் "ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்"
அடுத்து, "வேதாந்தகேசரி"க்கும் ஆசிரியராயிருந்தார்.

அந்நாள் செட்டிநாட் டரசழைப்பின் பேரினிலே
அண்ணாமலைப் பல்கலையில் முதல் பதவியேற்ற
செந்தமிழ்ப் பேராசான்எனும் சிறப்பும் பெற்றார்.
செயலாற்றும் வேளையிலே இசையாய்விலீடுபட்டு
முந்தைத் தமிழிசையின் முறைமைகளைக் கற்றாய்ந்து
முயன்று "யாழ்நூலி"ன் ஆக்கத்திலீடு பட்டார்
அந்நாள் இலங்கைமீண்டு இராமகிருஷ்ண மிஷனாய
அருங்கல்விச் சேவைகளை ஆக்கமுறச் செய்தார்.

ஆங்கிலத்து இலக்கியவாதி ஷேக்ஸ்பியர் பால்
அளவிலாத ஈடுபாடு கொண்டவரின் ஆக்கங்கள்
தாங்கிய கட்டுரைகள் தாராளமாய்த் தந்துசென்றார்
தரமாம் அலெக்ஸ்சாண்டர்நாடகம் மொழிபெயர்த்தார்,
நாங்கள் இறைவனுக்காய் நயந்துவக்கும் மலரெதுவோ
நம்மிடத்து இறைவிருப்பு நமது"உள்ளக்கமலம்" என்றே
பாங்காய் எடுத்துரைத்தார் பக்குவமாய்ப் பக்தி சொன்னார்
பண்பினுயர் பரமஞானி பார்புகழுந் தமிழறிஞர்.

முத்தமிழின் வித்தகர் முனிவராக வாழ்ந்தவர்,
முழுதாய்த் தமிழுலகை மூச்சாகக் கொண்டவர்,
பத்திநெறிப் பற்றாளர் பாரிலிவர்போல் யாருமிலை
பாடும்மீன் இசையையும் பகுத்தாய்ந்து சொன்னவர்
இத்தரையில் இவர்போல எவருமில்லை யாமறிந்து
எனவெடுத்து ஓதுவமே இவர்புகழைப் பாடுவமே
சித்தமெய்ஞ் ஞானி சிவானந்தரின் சிஷ்யனவர்,
சிவானந்த வித்தியாலய தென்திசை உறங்குகிறார்.

சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம் - கனடா தோற்றமும் செயற்பாடுகளும்

பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி

இலங்கை, தமிழ்நாடு, மலேசியா முதலான பல நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்து வந்து கனடாவில் பல இலட்சம் தமிழர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் ஈழத்தமிழர்களின் எண்ணிக்கை சுமார் மூன்றரை இலட்திற்கும் மேற்பட்டதாகும். புலம்பெயர்ந்து வந்தோர் இந்நாட்டில் தம் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணிக்காப்பதில் முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். எதிர்காலச் சந்ததியரான இளைய தலைமுறையினருக்குத் தமிழர் பண்பாட்டு விழுமியங்கள், தமிழ்ச் சான்றோரின் அரியபணிகள் ஆகியனவற்றை அறிவுறுத்தி அவர்களை நெறிப்படுத்த வேண்டியது மூத்த பரம்பரையினரது சமூகப்பண்பாட்டுக் கடமையாகின்றது.

சுவாமிகள் பேராசிரியராக, பண்பாட்டு ஆய்வாளராக, இராமகிருஷ்ண மிசன் பாடசாலைகளின் முகாமையாளராக, கலைச் சொல்லாக்கக் குழுவின் தலைவராக, புலவராக, சொற்பொழிவாளராக, தேசியவாதியாக, இலக்கியவாதி யாக, சமூகசீர்திருத்தவாதியாக, முத்தமிழ் வித்தகராக, பாடசாலை நிறுவுனராக, பல்வேறு ஆளுமைகளுடன் செயற்பட்டு, தமிழகத்திலும், ஈழத்திலும், அரசாலும், அறிஞர்களாலும், சான்றோர்களாலும், பொதுமக்களாலும் இன, மதவேறு பாடின்றிப் போற்றிப் புகழப்படும் பேறுபெற்ற சான்றோர் ஆவார்.

அத்தகைய பெருமகனாரின் நினைவாக அவரது பணிகளை நினைவு கூர்ந்து, இளையோருக்குத் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களை எடுத்துரைப்பதற்கு ஒருமன்றம் அமைத்தல் காலத்தின் தேவையாயிற்று. சுவாமி விபுலாநந்தர் கல்வி மேம்பாட்டில் மிக்க ஆர்வங் கொண்டு பல்வேறு கல்விப் பணிகள், சமூகப் பணிகள், பண்பாட்டு ஆராய்ச்சி, யாழ்நூல் வெளியீடு ஆகியவற்றில் வாழ்நாள் முழுவதும் ஈடுபாடுகொண்டு சேவையாற்றிய மாபெருந் துறவி. அப்பெரியாரின் நினைவாக கனடாவில் 2002ஆண்டு "**சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம் - கனடா**" என்ற அமைப்பை அமைத்து, இளையதலை முறையினருக்கானபேச்சு, எழுத்து, பொதுஅறிவு, இசை, கணினி முதலான துறைகளில் அவர்களின் திறன்களை வளர்க்கும் குறிக்கோள்களுடன், ஒருகலைமன்றத்தை அமைப்பதற்காகப் பத்திரிகைகள் வாயிலாக அறிவித்து. கிழக்குயோர்க் நகரசபை மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. அக் கூட்டத்திற்துகு சுவாமிகளிடம் படித்தவர்கள், சுவாமிகள் பிறந்த காரைதீவைச் சேர்ந்தோர், இராமகிருஷ்ணசங்கப் பாடசாலைகளில் கல்வி கற்றோர், தமிழ் ஆர்வலர்கள், சுவாமியின் பன்முகப்பணிகளை அறிந்தோர் எனப் பலதிறத்தினரும் வருகைதந்தனர். அப்பொதுக் கூட்டத்தில் இம்மன்றத்தின் தலைவராகப் பேராசிரியர் இ. பால சுந்தரம் அவர்களையும், துணைத்தலைவராக வித்துவான் க. செபரெத்தினம் அவர்களையும், செயலாளராக திரு. அஜந்தா ஞானமுத்து அவர்களையும், பொருளாளராக திரு. கோ. துரைராஜசிங்கம் அவர்களையும் மற்றும் 11 செயற்குழு உறுப்பினர்களையும் கொண்ட மன்ற செயற்குழு உருவாக்கப்பட்டது.

இம்மன்றம் தமிழ்மொழி, பண்பாடு ஆகியனவற்றில் அடிப்படை அறிவை இளையோரிடையே வளர்க்கும் வகையில் தமிழ்மொழிப் போட்டிகளையும் கலைநிகழ்ச்சிகளையும் ஆண்டுதோறும் தொடர்ச்சியாக நடத்தி, இளையோருக்குச் சுவாமி விபுலாநந்தர் பற்றியசிந்தனையையூட்டி வருவதோடு, சுவாமிகள் பற்றிய ஒரு விழிப் புணர்வையும் சமூகத்தவரிடையே ஏற்படுத்தி வருகின்றது. அத்துடன் சுவாமியின் பெயரில் ஓர் அறக்கட்டளையை நிறுவி அதனூடாகச் சேரும் நிதியைக் கொண்டு கனடாவில் சுவாமி விபுலாநந்தர் பற்றிப் பல்கலைக்கழகத்தில் ஆய்வில் ஈடுபடுவோருக்குப் புலமைப்பரிசில் வழாங்குவது என்றசெயல் திட்டமும் இம் மன்றத்திடமுள்ளது.

சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம் ஆண்டுதோறும் எடுக்கும் செயற்பாடுகளில் சுவாமிகளின் சிந்தனைகள், அவரது ஆய்வுவெளிப்பாடுகள் என்பவற்றை சமகாலச் சந்ததியினருக்கு உணர்த்துவனவாக அமைதல் வேண்டும் எனவும், கல்வி வளர்ச்சியும் வரலாற்றுச் சிந்தனையும் மேற் கிளம்பும் இக்காலத்தில் சுவாமிகளின் தமிழர் பண்பாடு, வரலாறு முதலான சிந்தனைகளை இளையதலை முறையினர் உணரும் வகை செய்தல் வேண்டும் என்ற கோட்பாட்டுடனும் இம்மன்றம் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றது. இதுவரைகாலமும் இம்மன்றத்துடன் தம்மை இணைத்துக்கொண்டு முக்கிய செயற்பாட்டாளர்களின் பெயர்களைப் பதிவுசெய்யம் வயில் இவர்களின் பெயர்களும் அவர்கள் வகித்த பதவிகளும் கீழ்தரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்களும் மற்றும் கற்றறிந்தோரும் சுவாமிகள் காட்டிய ஆராய்ச்சித் துறை களில் ஈடுபட்டு புதியனவற்றைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்குரிய வழிவகைகளைப் பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ள இம்மன்றம் தூண்டுதலாக அமைய வேண்டும். அப்போதுதான் சுவாமிகளின் கனவுகள் நனவாகும். அவர் காட்டிவழியில் கல்வியும் ஆராய்ச்சித்துறைகளும் வளர்ச்சியடைய வேண்டும். அவற்றினூாடகத் தமிழினத்தின் பூர்வீக வரலாற்று உண்மைகள் வெளிப்படவாய்ப்புகள் உள்ளன.

2017வரையில் சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம் கனடா அமைப்பின் பேராளர், தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளை ஏற்று மன்றத்தை வழிநடத்தியோர் பெயர்கள் வருமாறு:

Year	Patron	President	Secretary	Treasurer
2002 - 2005	K.T. Selvarajakopal	Prof. E. Balasundaram	Ajantha Gnanamuthu	G. Thurairajasingam
2005 - 2007	K.T. Selvarajakopal Vidwan K Sebaratnam	Prof. E. Balasundaram	Kumarakuru Kanapathipillai	K. Kirubendra
2007 - 2008	Prof.E. Balasundaram K.T. Selvarajakopal	M. Nallaratnam	K. Erambamoorthy	K. Kirubendra
2008- 2009	Prof.E. Balasundaram K.T. Selvarajakopal	Ajantha Gnanamuthu	K. Erambamoorthy	K. Kirubendra
2009- 2010	Prof.E. Balasundaram K.T. Selvarajakopal	Vel. Velupillai	K. Erambamoorthy	Kumarakuru Kanapathipillai
2010- 2011	Prof.E. Balasundaram Vidwan K. Gnanaratnam	Kumarakuru Kanapathipillai	Ajantha Gnanamuthu	K. Thangavadivel
2011- 2012	Prof.E. Balasundaram Vidwan K. Gnanaratnam E.Thangarajah	Kumarakuru Kanapathipillai	S. Uthayakumaran	K. Thangavadivel
2012- 2013	Prof.E. Balasundaram Vidwan K. Gnanaratnam E.Thangarajah	T. Vasanthakumar	K. Erambamoorthy	N. Vijayaratnam
2013- 2015	Prof.E. Balasundaram Vidwan K. Gnanaratnam E.Thangaraja	Ajantha Gnanamuthu	K. Erambamoorthy	N. Vijayaratnam
2015- 2017	Prof.E. Balasundaram Vidwan K. Gnanaratnam E.Thangarajah	K. Erambamoorthy	Nithi Sivanandarajah	S. Uthayakumaran

Swami Vipulananda Arts Society - Canada
Committee Members 2002-2008

	2002 -2005	2005-2006	2006-2007	2007-2008
Patrons	K.T. Selvarajakopal	K.T. Selvarajakopal Vidwan K. Sebaratnam	K.T. Selvarajakopal Vidwan K. Sebaratnam	Prof.E.Balasundaram K.T. Selvarajakopal
President	Prof. E. Balasundaram	Prof. E. Balasundaram	Prof. E. Balasundaram	M. Nalaratnam
Vice President	Vidwan K. Sebaratnam	Vidwan K. Gnanaratnam	M. Nalaratnam	Vel. Vellupillai
Secretary	Ajantha Gnanamuthu	Kumarakuru Kanapathipillai	Kumarakuru Kanapathipillai	K. Erambamoorthy
Asst. Secretary	S.P. Kanaks	T. Vasanthakumar	Vanathy Rajakumar	Kumarakuru Kanapathipillai
Treasurer	G. Thurairajasingam	K. Kirubendra	K. Kirubendra	K. Kirubendra
Asst. Treasurer	T. Mahalingam	K. Saravanabavan	S. Elango	S.Sivasharma
Board of Directors				
1.	Rani Mahalingam	P. Subendra	P. Subendra	S. Lingasamy Sharma
2.	S. Uthayakumaran	M. Nalaratnam	T. Vasanthakumar	Sasikala Narendran
3.	K. Thangavadivel	Vanathy Rajakumar	Vidwan K. Gnanaratnam	K. Thangavadivel
4.	M. Nalaratnam	Vel. Vellupillai	Lingam Natarajah	T. Vasanthakumar
5.	T. Vasanthakumar	Vimala Balasundaram	Vimala Balasundaram	Vidwan K. Gnanaratnam
6.	P. Subendra	T. Uthayakaran	K. Thangavadivel	Komathy Coomarasamy
7.	Vimala Balasundaram	S. Sivamohan	Vel. Vellupillai	P. Subendra
8.	N. Nagarajah	S. Elango	Komathy Coomarasamy	Vimala Balasundaram
9.	Lingam Natarajah	E. Thangarajah		
Internal Auditor		S. Nagarajah	S. Nagarajah	S. Nagarajah

Swami Vipulananda Arts Society - Canada
Committee Members 2008-2012

Offices	2008-2009	2009-2010	2010-2011	2011-2012
Patron	Prof.E.Balasundaram K.T. Selvarajakopal	Prof.E. Balasundaram K.T. Selvarajakopal	Prof.E. Balasundaram Vidwan Gnaratnam	Prof.E. Balasundaram Vidwan Gnaratnam E.Thangaraja
President	Ajantha Gnanamuthu	Vel. Velupillai	Kumarakuru Kanapathipillai	Kumarakuru Kanapathipillai
Vice President	Vel. Vellupillai	Vanathy Rajakumar	Vanathy Rajakumar	T.Vasanthakumar
Secretary	K. Erambamoorthy	K. Erambamoorthy	Ajantha Gnanamuthu	S. Uthayakumaran
Asst. Secretary	A. Aravindan	K. Kirubendra	S. Uthayakumaran	K. Sathakaran
Treasurer	K. Kirubendra	Kumarakuru Kanapathipillai	Thanga Kopalasingam	K.Thangavadivel
Asst. Treasurer	Kumarakuru Kanapathipillai	P. Subendra	N. Vijayaratnam	N. Vijayaratnam
Board of Directors				
1.	E. Thangarajah	E. Thangarajah	Sakthi Gnanamuthu	Ajantha Gnanamuthu
2.	Komathy Coomarasamy	Komathy Coomarasamy	T. Vasanthakumar	Sivam Vinayakamoorthy
3.	T. Vasanthakumar	T. Vasanthakumar	V. Sivasekaram	V.Sivasekaram
4.	C. Thanaraj	T.Thangavadivel	P. Subendra	P. Subendra
5.	K. Thangavadivel	M. Rasaratnam	Komathy Coomarasamy	Komathy Coomarasamy
6.	P. Subendra	V. Sivasekaram	Vel. Vellupillai	Vel. Vellupillai
7.	M. Rasaratnam	N. Vijayaratnam	R. Sayipavitharan	Vimala Balasundaram
8.	V. Sivasekaram	Ajantha Gnanamuthu	K. Erambamoorthy	Thanakshana Kopalasingam
9.	N. Vijayaratnam	Vidwan K. Gnanaratnam	M. Rajaratnam	M. Rajaratnam
Internal Auditor	S. Nagarajah	S. Nagarajah	S. Nagarajah	S. Nagarajah

Swami Vipulananda Arts Society - Canada
Committee Members 2012-2017

Offices	2012-2013	2013-2014	2014-2015	2015-2016	2016-2017
Patron	Prof.E. Balasundaram Vidwan K. Gnaratnam E.Thangaraja	Prof.E. Balasundaram Vidwan K. Gnaratnam E.Thangaraja	Prof.E. Balasundaram Vidwan K. Gnaratnam E.Thangaraja	Prof.E. Balasundaram Vidwan K. Gnaratnam E.Thangaraja	Prof.E. Balasundaram Vidwan K. Gnaratnam E.Thangaraja
Pres	T.Vasantha kumar	Ajantha Gnanamuthu	Ajantha Gnanamuthu	K. Eramba moorthy	K. Eramba moorthy
Vice Pres	G. Thurairaja-singham	Kumarakuru Kanapathipillai	Kumarakuru Kanapathipillai	K.Thanga-vadivel	M.Rajaretnam
Sec	K. Erambamoorthy	K. Erambamoorthy	K. Erambamoorthy	Nithi Shiva-nandarajah	Nithi Shiva-nandarajah
Asst. Sec.	S. Uthayakumaran	K.Saravana-bavan	S.Nithyanantha rajah	E.Nivetitha	T.Vasantha-kumar
Treas.	N. Vijayaratnam	N. Vijayaratnam	N. Vijayaratnam	S. Uthaya-kumaran	S. Uthaya-kumaran
A. Treas.	K.Thangavadivel	S.Uthaya-kumaran	S.Uthaya-kumaran	Komathy Kumarakuru	K.Thanga-vadivel
Board Members					
1	Vimala Balasundaram	T.Vasantha kumar	T.Vasanthakum ar	T.Vasantha-kumar	Kumarakuru Kanapathi
2	P. Subendra	M.Rajaratnam	M.Rajaratnam	Kumarakuru Kanapathi	N. Vijayaratnam
3	M. Rajaratnam	V. Sivasekaram	V. Sivasekaram	Ajantha Gnanamuthu	K.Karunailing am
4	K.Pakiyarajah	S.Nithyanantha-rajah	K.Thangavadiv el	P. Subendra	V. Sivasekaram
5	V. Sivasekaram	Vimala Balasundaram	N.Nesarajah	V. Sivasekaram	T.Kamala-Chandran
6	Kumarakuru Kanapathipillai	P. Subendra	P.Suthesan	M. Rajaratnam	Mano Seevaretnam
7	E.Nivetitha	S.Navaneethan	K. Karunalingam	N. Vijayaratnam	Visu Kanapthipillai
8	Thanakshana Kopalasingamm	Shakthy Gnanamuthu	V. Karunalingam	Vimala Balasundaram	T.Kopala-krishnan
9	E. Thangarajah	Komathy Kumarakuru	E.Nivetitha	K.Karunai-lingam	
Internal Auditor	S. Nagarajah	S. Nagarajah	S. Nagarajah	Susila Rajaretnam	Susila Rajaretnam

SWAMI VIPULANANDA ARTS SOCIETY - CANADA ANNUAL COMPETITION FINAL RESULTS

2015

PAALAR PIRIVU (PRIMARY DIVISION)

DICTATION

1ST PLACE AMSAVI SIVAKUMAR
1ST PLACE AARVALAN THIVAHKARAN
1ST PLACE AKARSAN PAKIRATHAN
1ST PLACE SAAMANTHY NAVEENDRATHAS
2ND PLACE SURAIN SUGANTHAN
2ND PLACE SASMITHA RAJESWARAN
3RD PLACE AATHIKA VASANTHARASAN

GENERAL KNOWLEDGE

1ST PLACE AARVALAN THIVAHKARAN
2ND PLACE THANWANTHIRAN VAGEE – SWARAN
3RD PLACE SASMITHA RAJESWARAN
3RD PLACE LUXMI MENAKAN
3RD PLACE AGSHCHAIYAN PIRAPAGARAN

SPEECH

1ST PLACE THANWANTHIRAN VAGEE – SWARAN
1ST PLACE AARVALAN THIVAHKARAN
2ND PLACE AATHIRAI SHIYAMSUNTHAR

KEEL PIRIVU (LOWER DIVISION)

DICTATION

1ST PLACE KUKAVINUKAN THILLAI – NATHAN
2ND PLACE MATHUMAI NADARAJAH
3RD PLACE THEEBANA THAVARAJAH

THIRUKKURAL

1ST PLACE KUKAVINUKAN THILLAI – NATHAN
2ND PLACE VAISHNAVI SUGANTHAN
3RD PLACE MAHATHY SATHIYANTHIRA

SPEECH

1ST PLACE KUKAVAKEERAN THILLAI – NATHAN
2ND PLACE MATHUMAI NADARAJAH
3RD PLACE ANJALY JEYACANTHAN

NADU PIRIVU (MIDDLE DIVISION)

DICTATION

1ST PLACE MATHEKUMARAN JANAHAN
2ND PLACE BAVISHA THAVARAJAH
3RD PLACE ABINAYA BAVANANTHAN

THIRUKKRUAL

1ST PLACE ABINAYA BAVANANTHAN
2ND PLACE ASHWIN VASANTHARASAN
3RD PLACE ANITHA SHRISHANKAR

SPEECH

1ST PLACE LOKEESAN KANESHWARAN
2ND PLACE ASHVIKA AIYATHURAI
3RD PLACE THANNIYA RANJENDRAM

MEL PIRIVU (UPPER DIVISION)

DICTATION

1ST PLACE MYURIKA SITHAMPARA – NATHAN
1ST PLACE OVEYA SABESAN
2ND PLACE SARANQI NAVEENDRATHAS
2ND PLACE RAHAVY SUNDARAMAHESAN

(CONTINUED...)

2016

PAALAR PIRIVU (PRIMARY DIVISION)

DICTATION

1ST PLACE PREETHI SUTHAKARAN
2ND PLACE LUKKSANA AGUHAN
2ND PLACE KAAVIYA NITHAKARAN
3RD PLACE VAARANAN THAYANANTHA

GENERAL KNOWLEDGE

1ST PLACE ABURVAN MOHAN
2ND PLACE KAAVIYA NITHAKARAN
3RD PLACE AARVALAN THIVAHKARAN
3RD PLACE VAASAVAN THAYANANTHA

SPEECH

1ST PLACE PREETHI SUTHAKARAN
2ND PLACE KAAVIYA NITHAKARAN
3RD PLACE AARVALAN THIVAHKARAN
3RD PLACE ABURVAN MOHAN

KEEL PIRIVU (LOWER DIVISION)

DICTATION

1ST PLACE ARUVIY RAVEENDRAN
2ND PLACE LUCKSANA SIVAKUMAR
3RD PLACE SEHSHASAYI THURAY

THIRUKKURAL

1ST PLACE SEHSTY THURAY
2ND PLACE SURAIN SUGANTHAN
3RD PLACE SYAYANDAN KANESHALINGAM

SPEECH

1ST PLACE KUKAVINUKAN THILLAI – NATHAN
2ND PLACE SYAYANDAN KANESHALINGAM
2ND PLACE KUBERAKA KUMARESWARAN
3RD PLACE THANWANTHIRAN VAGEES – WARAN

NADU PIRIVU (MIDDLE DIVISION)

DICTATION

1ST PLACE TEEBANA THAVARAJAH
2ND PLACE KESHAVI MOGANATHAS
2ND PLACE ABINAYA BAWANANTHAN
3RD PLACE BAVISHA THAVARAJAH

THIRUKKURAL

1ST PLACE ABINAYA BAVANANTHAN
2ND PLACE KUKAVAKEERAN THILLAI – NATHAN
3RD PLACE BAVISHA THAVARAJAH

SPEECH

1ST PLACE KUKAVAKEERAN THILLAI – NATHAN
2ND PLACE ABINAYA BAVANANTHAN
3RD PLACE DULASI YOGESWARAN

MEL PIRIVU (UPPER DIVISION)

PRESENTATION

1ST PLACE NISHANTHI KANESHALINGAM

SONG

ELANILAI PIRIVU (PRIMARY DIVISION)

1ST PLACE DILAKSHA SUTHARJAN
2ND PLACE MYITA JERISTUS
3RD PLACE RITHIKA JERISTUS

VALARNILAI PIRIVU (LOWER DIVISION)

1ST PLACE SINMAYE SIVAKUMAR
2ND PLACE ABINAYA BAVANANTHAN
3RD PLACE UGHESH VAGEESAN

2017

PAALAR PIRIVU (PRIMARY DIVISION)

DICTATION

1ST PLACE VAASAVAN THAYANANTHA
2ND PLACE AMSAVI SIVAKUMAR
3RD PLACE KARISH MANORAJ

GENERAL KNOWLEDGE

SPEECH

1ST PLACE MAANASA SETHURAMAN
2ND PLACE AMSAVI SIVAKUMAR
3RD PLACE VAASAVAN THAYANANTHA

SPEECH

SONG

1ST PLACE VAARANAN WIJENDRA
2ND PLACE SANGALYA JAYANTHAN
3RD PLACE AMSAVI SIVAKUMAR

KEEL PIRIVU (LOWER DIVISION)

DICTATION

1ST PLACE GAMSAGINY SHANTHAKUMAR
2ND PLACE DILAKSHA SUTHARJAN
3RD PLACE AARTHIKA RAJAKUMAR
3RD PLACE KOWSHIGA MANORAJ
3RD PLACE ARUVIY RAVEENDRAN

SPEECH

1ST PLACE AARTHIKA RAJAKUMAR
2ND PLACE GAMSAGINY SHANTHAKUMAR
3RD PLACE AATHIRAI SHYAMSUNTHAR

SONG

1ST PLACE DILAKSHA SUTHARAJAN
2ND PLACE AARTHIKA RAJAKUMAR
3RD PLACE MAYA JERISTUS

NADU PIRIVU (MIDDLE DIVISION)

PRESENTATION

1ST PLACE LOKEESAN KANESHWARAN

SPEECH

1ST PLACE LOKEESAN KANESHWARAN

...2015 FINAL RESULTS CONTINUED

SPEECH

1ST PLACE MYURIKA SITHAMPARA – NATHAN

SONG

ELANILAI PIRIVU (PRIMARY DIVISION)

1ST PLACE SINMAYE SIVAKUMAR
2ND PLACE DILAKSHA SUTHARJAN
3RD PLACE SEHSTY THURAY

VALARNILAI PIRIVU (LOWER DIVISION)

1ST PLACE ABINAYA BAVANANTHAN
2ND PLACE RITHIKA JERISTUS
3RD PLACE ANANTHAN KUMARAHURU

PRESENTATION

1ST PLACE DWARAGA THURAY
2ND PLACE MYURIKA SITHAMPARA – NATHAN

Donners

Name	Name
2014	Dr. K .Sathyapalan
Dr.Narash Thavathasan	Mr Ravi Logan
Mr. S.Harichandran	2015
Mrs. Lxmy Ganamuthu	Mr. S.Nithiyanantharajah
Mr. Balachandran Muthiah	Mr Thanka Kopalasingam
Mrs.Dickee Xavier	Mr N. Vijayaratnam
Mr.T. Vijayasundaram	2016
Mr M.Amirthamshan	Ms. Kanera Uthayan
Mr M.Navamshan	2017
Mr.S. Thangarajah	Mr A. Karunanithy
Mrs. Gowri Ragu	Mrs. Gowri Ragu
Uthayam Super Market	Mr A. S.P .Kannex
Mr S.Ganapandithan	Mr. Sivam Vinayagamoorthy
Eastern Boys Inc	Mr . Val Purushothaman
Mr S.Mano	Mr . P.Subendra
Mr.Gobalakrishnan	Mr . M.Logarajah
Mr. Gunaratnam Nadarajah	Mrs. Philomina Krishnapillai
Ms Kuberaka Kumareswaran	Mr N. Vijayaratnam
Mr A. Eswaran	Mrs. Thavamani Namasiwayagam
Mr K Saravana	Mr. Kavi Nagarajah
Mr Silvester Cruis	Mr. Jegah Kanapathipillai
Mr S.P Kanags	Kanagaambikai Gold House
Mr K Puvanesan	Mr. Elaiyathamby Thawaprgasam
Dr Santhakumar	Mr. Subhesan Pathmanathan
Auto 2000. Motors	Mr. Muhundan Arumugam
Mr K.Saravana	Mr. R. Konesamoorthy
Mrs. Sakthi Ganamuthu	Mr. Visu Kanapathipillai
Mr K.Ramendiraraj	Mrs. Sivapakiam Thiyagarajah
Ms. Nithakaran Kaaviya	Mr Kannan Kamalanathan
Mr. Nithi Shivanandarajah	Mr Prince Manikam
Mr . Puvi Kanagalingam	Mr. Lingam Natarajah
Mr A. Aravindakumar	Mr. Sivam Velupillai
Mr Sivapalasingam	Mrs. Trisha P. Dharsan
GNM Emroidery & Printing	Dr. Pushpa Vanithambi
Mr Sivam Vellupillai	Mr. Mohan Samithambi
Dr . Jeeva Dentistry	Mr. R. Rajkumar
Mr N. Vijayaratnam	St/ Michael College Old Student Association - North America

நிகழ்ச்சி நிரல் - 2017

மங்கலவிளக்கேற்றல்
அமைதி வணக்கம்
விபுலாநந்தர் கீதம் - Miss. Sahana Sathaharan
தமிழ்த்தாய் வாழ்த்து - Miss. Jarsheni Ravichandran, Miss. Shailaya Sundareswaran
கனடிய தேசியகீதம் - Miss. Jarsheni Ravichandran, Miss. Shailaya Sundareswaran

வயலின் இசை - "ஸ்வராலயம் நுண்கலைக் கல்லூரி" ஆசிரியை திருமதி.மேகலாதேவி விஜயகுமாரின் மாணவிகள்:
Miss. Krithika Jenendran Mas. Jeevan Vijayakumar Miss. Arabi Raguragavan Miss. Pooja Murali
Mas. Varman Chandramohan Miss. Roshanthini Sivabaskaran Mas. Ruthesh Gnanaravi
Kanjira - Mr.Kanesathasan Mahadevan's Student Mas.SalobanVimalaruban
Miruthangam - Mr. Rathirooban Paramsothy's Student Miss.Krishaa Santhirathas

வரவேற்புரை - Mr.K.Kumarakuru (உப தலைவர்)
காப்பாளர் உரை - Dr. Balasundaram Elaiyathamby
தலைவர் உரை
பாடல் - சண் சிங்கர் புகழ் Mas. Supaveen Bavananthan
பேச்சு - பாலர் பிரிவு 1ம் இடம் - Miss. Maanasa Sethuraman

நடனம் - நாட்டிய கலாஷேத்திரா நுண்கலைக் கல்லூரி ஆசிரியை ஸ்ரீமத் தேனுஜா திருமாறன் அவர்களின் மாணவிகள்
Miss.Richa Prabakaran Miss.Athrija Dilipkumar Miss.Thiya Bavan Miss.Sinmahi Rajakumar
Miss.Advikaa Pratheepan Miss.Ashvitha Anuraj Miss.Jiya Ingale Miss.Subiksha Aravinth

பாடல் - ஸ்ரீமத் பராசக்தி விநாயகதேவராஜா, Dr.நித்தியஸ்ரீ மகாதேவனின் சகோதரி ஸ்ரீமத் காயத்ரி சுந்தரராமன் ஆகியோரின் மாணவி -
Miss. Vhyshnavi Sriranjan

Song - Mas. Pragathees Sivasegaram (Saxophone)

பேச்சு - கீழ் பிரிவு - 1ம் இடம் - Miss. Aarthika Rajakumar

கவிதா நிகழ்வு - கவிஞர் Buhari

நடனம் - கலைக்கோவில் நுண்கலைக் கல்லூரி ஆசிரியை ஸ்ரீமத் வனிதா குகேந்திரன் அவர்களின மாணவிகள்
Miss. Rithika Jeristus & Miss.Maya Jeristus

பாடல் - "ஸ்ருதிக்ஷா நுண்கலைக் கூடம்" ஆசிரியை ஸ்ரீமதி.காந்தினி கிஷோர் அவர்களின் மாணவி - Miss. Sinmaye Sivakumar

பேச்சு - நடுப்பிரிவு - 1ம் இடம் - Miss. Mathumai Nadarajah

குழு பாடல் -"இசைநாதாலயம் நுண்கலைக் கல்லூரி" ஆசிரியை திருமதி.தயாளினி ரவிச்சந்திரா அவர்களின் மாணவிகள் வழங்கும் "மீன்மகள் பாடுகிறாள்"
Miss.Megha Narendran Miss.Vaishnavi Shivakaran Mas. Mithun Narendran Miss.Nirushika Suthesan
Miss.Abira Bhavanathan Miss.Pranavi Shivakaran Miss.Preethi Suganthan Miss.Krishani
Miss.Sutharsini Ravichandra

பாடல் - Miss. Abinaya Bavananthan

பேச்சு - மேல் பிரிவு - 1ம் இடம் - Mas. Lokeesan Kaneshwaran

சிறப்பு விருந்தினர் அறிமுகம் - திரு.உதயகுமாரன் சிவபாதம்

சிறப்பு விருந்தினர் உரை - வித்துவான் க.ஞானரெட்ணம்

பாடல் - "ஆனந்தனே விபுலாநந்தனே" Miss. Tharani Shanthabavan

பிரதம விருந்தினர் அறிமுகம் - திரு.நித்தி சிவானந்தராஜா

பிரதம விருந்தினர் உரை - திரு.வல் புருஷோத்தமன் CPA,CA,CA-IFA,CFF

நடனம் - "கலைக்கோயில் நுண்கலைக்கல்லூரி" மாணவிகள்
Miss. Oviya Sugunakumar & Miss. Thaniya Sugunakumar

மலர் வெளியீடு : "முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர்"

பரிசளிப்பு
நன்றி நவிலல் : நித்தி சிவானந்தராஜா - செயலாளர்
நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு - குமரகுரு கணபதிப்பிள்ளை நித்தி சிவாநந்தராஜா
நிகழ்ச்சி தொகுப்பு - நித்தி சிவானந்தராஜா
அறிவிப்பாளர்கள் - செல்வன். அனந்தன் குமரகுரு செல்வி. மகீஷா தியாகராஜா

மன்ற செயலாளரின் நன்றி நவிலல்.....

கனடா சுவாமி விபுலாநந்தர் கலை மன்றத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழாவும், முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின் 125 ஆவது பிறந்தநாள் விழாவும் சிறப்புமிகு பெருவிழாவாக இன்று கொண்டாடப்படுகின்றது. தமிழ் கூறும் நல்லுலகம் வியந்து போற்றும் கல்வியாளரின் பெயரால் அமைக்கப்பெற்ற இம்மன்றம், கடந்த 15 ஆண்டுகளாக, இங்கு வாழும் தமிழ் பேசும் சிறுவர்களின் தமிழ் மொழி அறிவினை மேம்படுத்தவும், தமிழின் தொன்மையினையும் அதன் அருமை பெருமைகளையும் அவர்கள் கற்றுத் தெரிந்து கொள்ளவும் ஆண்டு தோறும் பேச்சு, சொல்வதெழுதுதல், பொது அறிவு, திருக்குறள், பாடல் போன்ற போட்டிகளை நடாத்தி, தனது உன்னத நோக்கத்தினை நிறைவேற்றி வருகின்றது.

வித்தகரின் பல பணிகளில் ஒன்றான கல்விப் பணியினை தமது முக்கிய பணியாகக் கொண்டு செயற்பட்டு வரும் எமது மன்றம், இன்றைய நன்நாளில் தனது செயற்பாடுகளுக்காகவும் உயரிய நோக்கத்தின் நிறைவேற்றத் திற்காகவும் பல வழிகளிலும் இயன்ற உதவிகளைச் செய்துவரும் அனைவருக்கும் தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றது.

குறிப்பாக வருடாவருடம் போட்டிகளுக்காக தமது குழந்தைகளைத் தயார்படுத்தும் பெற்றோர்கள், உற்சாகத்துடன் கலந்து கொள்ளும் சிறுவர்கள், போட்டிகளைத் திறம்பட நடாத்தித் தரும் நடுவர்கள், போட்டிகளை நடாத்த மண்டபங்களை ஒழுங்கு செய்துதரும் மாநகர சபை நிருவாகத்தினர், போட்டிகளில் வெற்றி பெற்றவர் களுக்கான பரிசு வழங்கும் வைபவத்திற்கு எமது அழைப்பை ஏற்று வருகை தந்து சிறப்பித்த, சிறப்பித்துக் கொண்டிருக்கும் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், பேச்சாளர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள், அபி-மானிகள், மன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆகியோருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியி னைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விசேடமாக, இன்றைய தினம் நடைபெறும் முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின் 125 ஆவது பிறந்தநாளையொட்டி வெளியிடப்படும் விழா சிறப்பு மலருக்காக எமது வேண்டுகோளுக்கிணங்க தமது அருமையான ஆக்கங்களை தந்துதவிய பேராசிரியர்கள், கல்விமான்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகி-யோருக்கும், வாழ்த்துச் செய்திகளை வழங்கிய Hon. Premier-Ontario, Hon. Mayor -Toronto, பணிப்பாளர், சுவாமி விபுலாநந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், பாடசாலை அதிபர்கள், மட்/இராமகிருஷ்ண மிசன் தலைவர் ஆகியோருக்கும், இந்த மண்டபத்தினை வழங்கிய பெரிய சிவன் கோயில் நிருவாகத்தினருக்கும், இராப்போசனம், சிற்றுண்டிகள், பானங்கள் வழங்கியோருக்கும், இன்றைய நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கிய ஆசிரியர்கள் மற்றும் பங்குகொண்டு சிறப்பித்த அனைத்துக் கலைஞர்களுக்கும், ஒலிபெருக்கியாளர், படப்பிடிப்பாளர், வானொலி, பத்திரிகை நிறுவனத்தினர், எமது வேண்டுகோளை ஏற்று எதுவித மறுப்புமின்றி நிதி வழங்கிய விளம்பரதாரர்கள், வர்த்தகப் பெருமக்கள், அனுசரணையாளர்கள், நன்கொடை யாளர்கள் ஆகியோருக்கும், விழா மலரினை அழகுற வடிவமைத்து, அச்சிட்டு தந்த Fine Print நிறுவனத்தாருக்கும், அத்துடன் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எனது இதயம் நிறைந்த நன்றியி னைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்மண் தந்த முத்தமிழ் பெருந்தகை !
தமிழுலகின் முதல்தமிழ் பேராசான் !!

விழா சிறப்புற நடைபெற எமது வேண்டுகோளை ஏற்று எதுவித மறுப்புமின்றி தமது பங்களிப்பினை, தங்களது நிறுவன விளம்பரம் மூலமும், பணமாகவும் தந்துதவியவர்களின் விபரம்:

1.	திரு.சுதேசன் பத்மநாதன்	Mortgage Alines – Real Estate
2.	திரு.வல் புருஷோத்தமன்	Forensic Accounting and litigation Support
3.	திரு.தவா இளையதம்பி	Century 21/Mathan Tax Service
4.	திரு.சிவம் வேலுப்பிள்ளை	Home life – Real Estate
5.	திரு.பிறின்ஸ் மாணிக்கம்	Wise Smart - Insurance Service Inc.
6.	திரு.லிங்கம் நடராஜா	Primarica Insurence
7.	திருமதி.பிரிஷா போல்	Prisha Law – Professional Corporation
8.	திரு.கவி நாகராஜா	Royal Lepage – Real Estate
9.	திரு.கோபாலபிள்ளை நடராஜா	Kanagambikai Gold House
10.	திரு.ஜெகா கணபதிப்பிள்ளை	Don Vally North Toyota
11.	திரு.எஸ்.ராஜ்குமார்	J.R.B. Universal Inc.
12.	திரு.மோகன் சாமித்தம்பி	Tower Glazing Systems
13.	Dr.புஷ்பா வன்னித்தம்பி	Dr.Pushpa.V & Associates Dentist
14.	திருமதி.மாலதி சிவசீலன்	Sruthilaya – Carnatic Music Academy
15.	திரு.கண்ணன் கமலநாதன்	SQM Janitorial Service

Special Thanks to

Mr.Yogarajah - VIP Video & Photo Studio

Mr.Suresh, Mr. Ramesh & Mr.Nanthi - Dinner

Mr. Visu Kanapathipillai, Mr. Mano Seevaratnam, Mr. N. Vijayaratnam, Mr. V. Sivasekaram

& Mr.M. Rajaratnam - Shorteats & Beverages


Mr.Visu Kanapathipillai - Stage Banner

நித்தி சிவானந்தராஜா
செயலாளர்
23.07.2017






அஜராத்மானந்தாஜீ



நடராஜானந்தஜீ



ஜீவானந்தஜீ

COMPETITION PICTURES - 2015















PRIZE GIVING PICTURES - 2015

















COMPETITION PICTURES - 2016


















PRIZE GIVING PICTURES - 2016
















COMPETITION PICTURES - 2017

















COMPETITION PICTURES - 2017



PRIMARY DIVISION



LOWER DIVISION



MIDDLE DIVISION



UPPER DIVISION

DON VALLEY NORTH TOYOTA

Canada's #1 Volume Toyota dealership since 1973

Weins Canada

TOYOTA

SCION





Jegah Kanapathipillai
Sales&Leasing Consultant

Call for Appointment

416-300-5758

Tel:- 905.475.0722 ext. 466
jegahk@dvntoyota.com

3300 Steeles Avenue East
Markham, Ontario L3R1G9
Steeles Avenue/Victoria Park/404
www.donvalleynorthtoyota.com

REALTORKAVI
Vision Leadership Results

ROYAL LEPAGE

WHY HIRE A
REALTOR?

- Know exactly what you're looking for
- Can price the value of a property according to the current real estate market
- Can tell you exactly what you need to repair/ renovate to increase the market value of your home
- Ensure you get the best value when buying and selling



I will put your best interests forward and find a home worth investing in while selling your home for the top dollar.

(416) 587-7120 | kavinagarajah@gmail.com | www.realtorkavi.com

DR.PUSHPA.V & ASSOCIATES DENTIST

Dr. புஸ்பா வன்னித்தம்பி பல்வைத்தியர்
இரண்டு கிளைகளிலும் சேவை



NEW PATIENTS WELCOME
OPEN 7 DAYS A WEEK
SATURDAY AND SUNDAY BY APPOINTMNET ONLY



PLEASE CALL

416 289 7187
1200 Markham Road, Suite #119
Scarborough, ON, M1H 3C3
(Markham & Ellesmere)

New Location
905 201 8900
7595, Markham Road, Suite #4
Markham, ON, L3S 0B6
(Markham & 14th Avenue)
(Opposite to Costco)

TOWER
GLAZING SYSTEMS

250 Bowes Road Concord, ON L4K 1J9 Canada
(905)-738-6416
www.towerglazing.com

Mohan Samithamby & Rohan Chelliah

வீடு, வியாபாரம் காணி வாங்கவும் விற்கவும் மற்றும் ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் அழையுங்கள்

Call Us For All of Your Real Estate Needs...

www.sivamhomes.com





Siva Velupillai
Real Estate Sales Rep.
Call : (416) 706-2323
pvsivam@gmail.com

Arthi Velupillai
Real Estate Sales Rep.
Call : (416) 807-6213
arthi.velupillai@gmail.com



HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/Future Realty Inc.
Brokerage Independently Owned and Operated

205-7 Eastvale Driv, Markham, Ontario L3S 4N8
Bus: (905) 201-9977 | Fax: (905) 201-9229

YOUR CANADIAN TAMIL LAW FIRM

உங்கள் கனேடிய தமிழ் சட்ட நிறுவனம்

PRISHA LAW
PROFESSIONAL CORPORATION

647.478.0144
647.478.0145

8130 SHEPPARD AVE EAST
SUITE 210, SCARBOROUGH
ON, M1B3W3

FREE INITIAL CONSULTATION WITH THE LAWYER
இலவச ஆரம்ப சட்ட ஆலோசனை

OUR LEGAL SERVICES:

- REAL ESTATE LAW
- SLIP & FALL CLAIMS
- IMMIGRATION LAW
- MOTOR VEHICLE ACCIDENT CLAIMS
- WILLS & POA



PRISHANTHY@PRISHALAW.CA
WWW.PRISHALAW.CA



கனடிய மண்ணில் ஆண்டுகள் கடந்தும் துளிர் விடும்
சமூக இலக்கிய காலாண்டு தமிழ் இதழ்





wiSe Smart
insurance services inc

Acquiring wealth takes diligent planning;
anything less may end up in ruin (Proverbs21:5).

LIFE | RRSP | RESP

wiSe Smart
insurance services inc

3300 Chokecherry Crescent
Mississauga, ON, L5L 1A9
Phone: 905 302 9473
Fax: 1 888 365 1986
prince@wisemartinsurance.com
www.wisemartinsurance.com

AUTO | HOME | COMMERCIAL

IBMG Canada
Insurance Brokers Marketing Group

3219A Yonge Street
Toronto, ON, M4A 2L3
Phone: 416 485 9840 ext 209
Fax: 416 485 8264
princemanickam@ibmg.ca
www.ibmg.ca



FOR ALL YOUR INSURANCE NEEDS...
AUTO | HOME | LIFE | BUSINESS INSURANCE & RRSP | RESP

Prince Manickam, B.Sc.

Honest, Trusted, Friendly
& Knowledgeable Advice

"To get you the best coverage
possible and save wisely"

Best Wishes

From



MALATHY SIVASEELAN

SRUTHILAYA

Carnatic Music Academy

Sydney, Australia



The Career Opportunity of a Lifetime!

Be your own BOSS. Own your own company.

This life-changing opportunity is yours for the taking if you are:

- Highly motivated; enthusiastic, personable and excited to be an active part of a dynamic team in a rapidly expanding economy.
- Results-oriented, energetic, resourceful, always willing to earn and have the drive to excel.
- Passionate about working, helping others and making a difference in other people's lives and excellent in networking.
- A natural communicator and a self-starter who has a strong desire to succeed while working in a fun, positive, supportive and professional environment.

Your potential and earning possibilities are only limited by your imagination and commitment to excellence.



This may be the turning point in your life.

To find out more, call:

Linkgan Nadarajah
Representative
Cell: 416.573.0985
Office: 416.495.1687

PRIMERICA



கனகாம்பிகை
தங்க நகைமாளிகை

சிங்கப்பூர் புதிய நகைகள் அனைத்தும் நகரில் வேறு எங்கும் பெறமுடியாத மலிவு விலையில் பெற குறித்த நேரத்தில் உங்கள் எண்ணங்களுக்கு ஏற்றவாறு நகைகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

- நவரத்தின மோதிரங்கள
- வைரக் கற்கள்(பவளம், முத்து)
- பரிசுப்பொருட்கள்
- மாணிக்கக் கற்கள்
- தாலிக்கொடி
- காது குத்தல்

22 கரட் அசல் தங்க ஆபரணாங்கள்

பழைய நகைகள் புதிய நகைகளாக மாற்றித் தரப்படும்

அரசு அங்கீகாரம் பெற்ற அடைவு நகை மாடம்

KANAGAMBIKAI GOLD HOUSE
3160 Eglinton Ave, East, Unit 3,
Scarborough, ON M1J 2H3
Tel : 416 269 7197

2613,Eglinton Ave, East,
Scarborough, On,M1K 2S2
Tel : 416 269 7198

கனகாம்பிகை தங்க நகைமாளிகை சகல ஓடர்களும் திருத்த வேலைகளும் விசேட விலைச் சலுகையில் செய்து கொடுக்கப்படும்.

Lucky Stones
Finest Quality 22K Gold & Diamond Jewellery

MORTGAGE LOAN

ALMOST ALL SERVICES AVAILABLE

J.R.B
UNIVERSAL INC.



Business Loan
Business (Visa MC)

Best Rate Mortgage in Town,
Bad Credit New Immigrants
bankruptcy, 0% Down Payment.
1st, 2nd & 3rd Mortgage upto 100%

Loans, Mortgages, Insurances, RESP
Real Estate, Credit Counseling
Accounting and Tax Services

R.R.Rajkumar
B.com (Hons) M.B.A
416-937-9081
647-289-6164

Mortgage Refinance எவரும் கனடாவில் வீடு வாங்க **J.R.B Universal Inc** உங்களுக்கு சிறப்பாக வழிகாட்டமுடியும்



Century 21

BROKERAGE*

416-992-7989


Thava Eliyathamby MBA

BROKER

1290 Finch Ave W, Toronto, ON M3J 3K3 Canada

Phone: 416-665-4756 | Bus: 416-290-1200 | Email: thavae@gmail.com

MATHAN TAX SERVICE



*Personal Tax *Business Tax

"I am Your Neighbour"

Please call Thava, MBA

416-992-7989

416-665-4756

Fax: 416-665-0764

E-mail: thavae@gmail.com

EFILE

1290 FINCH AVE. W. #23, NORTH YORK

(AT KEELE & FINCH)



1947யூன் 5ம், 6ம் திகதிகளில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோவிலில், ஆளுடைய பிள்ளையார் தெய்வத்திரு முன்னிலையில் "யாழ் நூல்" அரங்கேற்றம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.
"அரங்கேற்ற விழாவுக்கு வருகை தந்த தமிழ் நாட்டுப் புலவர்களும், புரவலர்களும், இசை வல்லுநர்களும், பிறரும் விபுலாநந்த அடிகளை மாலை சூட்டி, குடைப்பிடித்து அழைத்துச் செல்லுங் காட்சி"

"சான்றோனை ஈன்ற தமிழன்னை வாழ்க!"



"யாழ் நூல்" அரங்கேற்று விழாவில் சென்னை மாகாண கல்விமந்திரி திரு. தி. அவிநாசி லிங்கம் செட்டியார் ஒலிபெருக்கியின் முன்னின்று விரிவுரை நிகழ்த்துகிறார். யாழ்களும், வீணைகளும் மேசையை அலங்கரிக்கின்றன.

Fine Print: 416-264-1557